தமிழ்நாடு மாநில

ஆட்சி அறிக்கை

1982-83

தமிழ்நாடு மாநில ஆட்சி அறிக்கை 1982-83

©
தமிழ்நாடு அரசு
1984

தமிழ்நாடு அரசினருக்காக தமிழ்நாடு எழுதுபொருள்
அச்சுத்துறை இயக்குநரால் அச்சிடப்பட்டது.

110E-2—A

DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
MADRAS 8.

உள்ளடக்கம்

பக்கம்.

முன்னுரை IX

அத்தியாயம் 1—பொது.

1. 1982–83 ஆம் ஆண்டில் சீர் பெருமக்கள் வருகை 3
2. நிர்வாகம் 13
3. ஆளுநர் அவர்களின் சுற்றுப் பயணங்கள் 14
4. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 22
5. தமிழ்நாடு சட்டமன்ற மேலவை 26

அத்தியாயம் 2—வேளாண்மைத் துறை.

6. வேளாண்மை .. 33
7. கால்நடை வளர்ப்பு 42
8. பால்வள நிறுவனம் 49
9. விதைச் சான்றளிப்பு 57
10. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் 60
11. தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் .. 65

அத்தியாயம் 3—வணிக வரி மற்றும் அற நிலையத் துறை.

12. வணிக வரிகள் 71
13. இந்து சமய அற நிலையங்கள் 75
14. பதிவுத் துறை 79
15. எஸ்டேட் நிலவரி ஏற்பாடு 87
16. முத்திரைத் தாள்கள் (அஞ்சல் முத்திரைத் தாள் அல்லாதவை) 90
17. நில அளவை-நிலப் பதிவேடுகள் 93
18. தமிழ்நாடு விற்பனை வரி மேல் முறையீட்டு தீர்ப்பாயம் 96
19. வக்ப் 98

அத்தியாயம் 4—கூட்டுறவுத் துறை.

20. கூட்டுறவு 103

பக்கம்.

அத்தியாயம் 5—கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை.

21. தொல்பொருள் ஆய்வு	117
22. கல்லூரிக் கல்வி ..	118
23. அரசுத் தேர்வுகள் ..	128
24. அரசு அருங்காட்சியகங்கள்	129
25. சட்டக் கல்வி ..	134
26. தேசிய மாணவர் படை	135
27. பொது நூலகத் துறை	138
28. பள்ளிக் கல்வி	139
29. தமிழ் வளர்ச்சி	146
30. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்	149
31. தொழில் நுட்பக் கல்வி ..	152
32. கன்னிமாரா பொது நூலகம்..	157

அத்தியாயம் 6—நிதித் துறை.

33. கருவூலக் கணக்கு இயக்ககம்	161
34. மாநில நிதி	162
35. அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம்	166
36. உள்ளாட்சி நிதித் தணிக்கை	170
37. சிறு சேமிப்பு	172
38. அரசு வணிகத் திட்டங்கள் துறை	173
39. தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்	175

அத்தியாயம் 7—உணவுத் துறை.

40. நுகர் பொருள் வாணிபம் ..	179
41. தமிழ்நாடு கிடங்கு வசதிக் கழகம்	182

அத்தியாயம் 8—வன, மீன் வளத்துறை.

42. சின்கோனாத் துறை ..	187
43. மீனளம் ..	188
44. வனங்கள் ..	193
45. மரம் வளர்ப்பு விழா	201

பக்கம்.

அத்தியாயம் 9—மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத்துறை.

46. பிறப்பு மற்றும் இறப்பு 205
47. தொற்று நோய்த் தடுப்பு .. 208
48. சுற்றுப்புற சூழல் கட்டுப்பாடுத்துறை 211
49. இந்திய முறை மருத்துவ இயக்ககம் .. 212
50. கிங் நிறுவனம், கிண்டி 220
51. மருத்துவக் கல்வி 225
52. மருத்துவம் மற்றும் குடும்ப நலம் 232
53. மனநலம் 238
54. பிறப்பு இறப்புப் புள்ளி விவரம் 241

அத்தியாயம் 10—உள் துறை.

55. இடவசதிக் கட்டுப்பாடு 245
56. திரைப்படங்கள் 246
57. உரிமையியல் நீதி மன்றங்கள் 249
58. குடிமைப் பாதுகாப்பு 256
59. குற்றவியல் நீதி மன்றம் .. 256
60. தீயணைப்புத் துறை 257
61. குற்றத் தடயப் பொருள் அறிவியல் ஆய்வகம் 260
62. சென்னை மாநகரக் காவல் படை .. 264
63. சிறை.. 268
64. நன்னடத்தைப் பிரிவு 273
65. தமிழ்நாடு காவல் துறை .. 273
66. தமிழ்நாடு திரையரங்குக் கழகம் 279
67. ஒழுக்கக் கண்காணிப்பு நிறுவனங்கள் .. 280

அத்தியாயம் 11—வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித்துறை.

68. சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம் 289
69. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் .. 294
70. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 298
71. நகர்—நாட்டுப்புற அமைப்புத் திட்டம் 302

பக்கம்.

அத்தியாயம் 12—தொழில் துறை.

72. சர்க்கரை இயக்ககம் 309
73. கைத்தறியும், நூற்பாலைகளும் .. 312
74. தொழில்—வணிகம் 317
75. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் .. 323
76. பட்டுப் புழு வளர்ப்பு .. 325
77. மாநிலப் புவியியல் 327
78. தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் 333
79. தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் .. 337
80. தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சி நிறுவனம் 338
81. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் .. 339
82. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் 341
83. தமிழ்நாடு கனிம நிறுவனம் 346
84. தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட் 350
85. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) .. 352
86. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) 356
87. தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் .. 360
88. தமிழ்நாடு கரும்புப் பண்ணை நிறுவனம் லிமிடேட் 362
89. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் .. 363
90. தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம் 368

அத்தியாயம் 13—செய்தி, சுற்றுலா மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை.

91. செய்தி—மக்கள் தொடர்பு 373
92. சுற்றுலா 380

அத்தியாயம் 14—தொழிலாளர் நல வேலைவாய்ப்புத் துறை.

93. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை 385
94. தொழிலாளர் நலன் 393
95. விலைவாசி புள்ளி விவரம் .. 401

அத்தியாயம் 15—சட்டத்துறை.

96. சட்டம் இயற்றுதல் .. 411

பக்கம்.

அத்தியாயம் 16—பணியாளர் மற்றும் நிர்வாகம் சீர்திருத்தத்துறை.

97. சிவில் பணிப் பயிற்சி .. 471

98. தமிழ்நாடு சிவில் பணிகளின் கூட்டுக் குழு 474

99. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாவாணைக் குழு .. 475

100. ஒழுங்கு நடவடிக்கை—தீர்ப்பாயம் 481

101. ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறை 482

அத்தியாயம் 17—திட்டம் மற்றும் அபிவிருத்தித் துறை.

102. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை 489

103. மாநிலதிட்டக்குழு 492

அத்தியாயம் 18—மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை.

104. மதுவிலக்கும் ஆயத் தீர்வையும் 501

அத்தியாயம் 19—பொதுத் துறை.

105. கர்நாடக உதவித் தொகை. .. 509

106. மக்கட் தொகை கணக்கெடுப்பு அமைப்பு 509

107. முதலமைச்சரின் சிறப்பு அலுவலகம் 510

108. முறையீட்டுப் பிரிவு .. 511

109. முன்னாள் படைவீரர் நலத்துறை 513

110. தேர்தல்கள் 518

111. பிரதேச ராணுவம் 523

112. மொழி பெயர்ப்புத் துறை 527

அத்தியாயம் 20—பொதுப் பணித் துறை.

113 கொதி கலன்கள் 531

114. மின் ஆய்வுத் துறை .. 533

115. நில நீர் இயக்ககம் 536

116. பாசனம் 540

117. பொதுப் பணித் துறை (கட்டிடப் பிரிவு) 552

118. தமிழ்நாடு மின் வாரியம் ... 560

பக்கம்.

அத்தியாயம் 21—வருவாய்த் துறை.

119. வேளாண்மை வருமானவரி.. .. 567
120. நிலமற்ற ஏழைகளுக்கு நிலங்களை ஒப்படை செய்தல் 567
121. வறட்சி நிவாரணப் பணி 571
122. நிலச் சீர்திருத்தம் 574
123. நிலவரி வருவாய் 586
124. மனு நீதித் திட்டம் 587
125. பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்புவோர் மறு வாழ்வு .. 589
126. நகர்ப்புற நிலவரி 594

அத்தியாயம் 22—ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை.

127. பூமி தானமும், கிராம தானமும் 607
128. சென்னை மாநகராட்சி 609
129. மதுரை மாநகராட்சி 616
130. வனப் பஞ்சாயத்து .. 619
131. நகராட்சி நிர்வாகம் .. 620
132. நகராட்சித் தேர்தல் .. 625
133. ஊராட்சி வளர்ச்சி 625
134. தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியம் 630

அத்தியாயம் 23—சமூக நலத் துறை,

135. ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலன் 641
136. முதியோர் உதவித் தொகை .. 648
137. சமூக நலம் 652
138. பிற்பட்டோர் நலத்துறை 690

அத்தியாயம் 24—போக்கு வரத்துத் துறை.

139. நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறை ... 701
140. துறைமுகத் துறை 703
141. மோட்டார் வாகனங்களின் நிருவாகம் 706
142. மோட்டார் வாகன பராமரிப்பு நிறுவனம் 714
143. தேசிய நெடுஞ்சாலை 716
144. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 717
145. எழுது பொருள்—அச்சுத் துறை .. 718
146. போக்குவரத்துக் கழகங்கள். 725

முன்னுரை.

1982—83 ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு மாநில நிருவாகம் பற்றிய இவ்வறிக்கை, இவ்வரசின் துறைகள், இவ்வரசின் பொறுப்பின கீழ் வரும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகிய இவற்றின் குறிப்பிடத்தக்க பணிகளை விரிவாகப் புலப்படுத்துகிறது.

1982—83 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தின் பெரும்பான்மையான மாவட்டங்களில் தென்மேற்கு, வடகிழக்குப் பருவமழை பொய்த்துவிட்டது. எனவே, பாசனத்திற்கும், குடிநீருக்கும் பற்றாக்குறை ஏற்பட்டது. கடுமையான வறட்சிநிலை காரணமாக வேளாண்மை உற்பத்தி முந்தைய ஆண்டைக்காட்டிலும் மிகக் குறைவாக இருந்தது. இம்மாநிலத்தின் மிக முக்கியமான பயிராகிய நெல் பயிரிடப்பட்ட பரப்பு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 6.92 இலட்சம் எக்டேர் அல்லது 28.1 சதவீதம் குறைந்துவிட்டது. இதனால் நெல் உற்பத்தியும் குறைந்துவிட்டது. இந்த ஆண்டில் நெல் உற்பத்தி 23.0 இலட்சம் டன்னாகும். முந்தைய ஆண்டைக்காட்டிலும் உற்பத்தி 41.1 சதவீதம் குறைந்து விட்டது.

இந்த வறட்சி, அரசுக்கும், இம்மாநில மக்களுக்கும் பெரும் பொறுப்பினை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் துயரைத் தணிக்கும் பொருட்டு, நிருவாகப் பணியாளர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிமக்களுக்கு இடருதவி வழங்கும் பணியில் முழு மூச்சுடன் ஈடுபடுத்தப்பட்டனர். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கிராம, நகர்ப் பகுதிகளில் 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 24.22 கோடிச் செலவில், 9,688 துளைக் கிணறுகளை நிறுவியது. ஏரிப் படுகைகளில் புதிய கிணறுகள் தோண்டுதல்,

பொது குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தல், லாரிகள் மூலம் குடிநீர் கொண்டு செல்லுதல், கசிவு நீர்க்குட்டைகளை ஏற்படுத்தல், பாசன ஏரிகளைச் சீரமைத்தல். கிராம, நகர்ப் பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் துளைக் கிணறுகளை இறக்குதல், சென்னைப் பெருநகருக்குக் குடிநீர் வழங்கியது, தஞ்சாவூர் மாவட்டத்தில் வடிமுனைக்குழாய்க் கிணறுகளை இறக்கியது, தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்குக் கடன் அளித்தது முதலிய இடருதவிப் பணிகளுக்கு ரூ,9,017.25 இலட்சம் செலவிடப்பட்டது. இப்பணிகளை நிறைவேற்றியதால் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது மட்டுமல்லாமல், இதனால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுக்கு நிலையான அனுகூலங்களும் ஏற்பட்டன.

இவ்வாண்டில், இம்மாநிலத்தில் சட்டத்தைச் செயற்படுத்தல், ஒழுங்கு அமைதியை நிலைநாட்டுதல், குற்றத்தைத் தடுத்தல், கண்டுபிடித்தல் ஆகியவற்றிற்கு முறையான போதிய கவனம் செலுத்தப்பட்டது.

வருவாய்க் கணக்கின் கீழ் வருகிற மொத்தச் செலவு ரூ. 1,576 கோடியில், கல்விக்காக ஏற்பட்ட செலவு, "கல்வி மானியக் கோரிக்கை" என்ற தலைப்பின கீழ் 1982–83 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படி ரூ. 339 கோடியாகும்.

1982–83 ஆம் ஆண்டில் மேற்கொண்ட "முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்" மிகச் சிறந்த ஏற்றமிகு நல்வாழ்வுத் திட்டமாகும். இத்திட்டம், 1–7–1982-லிருந்து மாநிலக் கிராமப் பகுதிகள் அனைத்திலும் தொடங்கப்பட்டது. முதற்கண், கிராமப் பகுதியில் 2 வயது முதல் 9 வயது வரையுள்ள குழந்தைகளுக்குச்

சத்துணவு அளிக்கப்பட்டது. பினனர், இத்திட்டம் 15—9—1982 லிருந்து நகர்ப் பகுதிகளுக்கும் நீட்டிக்கப் பட்டது.2+முதல் 4+வயது வரையுள்ள சுமார் 23,30,000 குழந்தைகளுக்கு. அன்றாடம் 27,840 பாலர் பள்ளி களில் சத்துணவு வழங்கப்பகிறது. 5+முதல் 9+ வயது வரையுள்ள 39,19,000 குழந்தைகளுக்கு பள்ளிக் கல் வித்துறை 33,829 பள்ளி நிலையங்களில் நாள்தோறும் சத்துணவு வழங்கப்படுகிறது. இத்திட்டம் குறிப்பாக கிராமப் பகுதிகளில் உள்ள விதவைகள், ஆதரவற்றோர் வகையில் ஏறத்தாழ 1,80,400 பேருக்குக் கூடுதலாக வேலைவாய்ப்பு ஏற்படுத்தியுள்ளது.

பள்ளிகளில் சேருவோரின் எண்ணிக்கையும் கணிச மான அளவுக்கு உயர்ந்துள்ளது. 1982—83 ஆம் ஆண் டில் தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளில் 6 முதல் 11 வயது வரையும், 11 முதல் 14 வயது வரையும் உள்ள 3.11 இலட்சம் சிறார்கள் கூடுதலாகச் சேர்ந்துள்ளனர். இது அண்மையில் காணாத ஒரு குறிப்பிடத் தகுந்த சாதனை யாகும். ''முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தைச்'' செயற்படுத்தியதால்தான் இத்தகைய சாதனை ஏற் பட்டது. இம்மாநிலத்தில் உள்ள 37,531 பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 55,28,852; மாணவி களின் எண்ணிக்கை 41,88,500 ஆகும்.

இவ்வாண்டில், 11 மேல்நிலைப் பள்ளிகள், 92 உயர் நிலைப்பள்ளிகள், 9 இடைநிலைப் பள்ளிகள், 523 தொடக்கப் பள்ளிகள் ஆகியவை புதிதாகத் தொடங் கப்பட்டன.

''அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்'' பட்ட வகுப்புகள் மூடப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட இடையூறுகளைத் தவிர்க்கும் வகையில், 1982—83 ஆம்

ஆண்டில் சிதம்பரத்தில் அரசினர் கலைக் கல்லூரி ஒன்று புதிதாகத் தொடங்கப்பட்டது.

சேலத்தில் புதிதாக தொழில் கல்விக் கல்லூரி அதாவது ஸ்ரீசாரதா மகளிர் உடற்பயிற்சிக் கல்லூரி தொடங்கப்பட்டது.

1982–83 ஆம் ஆண்டில் அரசினர் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் இரண்டும், தனியார் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் ஏழும் தொடங்கப்பட்டன.

குடும்ப நலத்திட்டம் மனமுவந்து மேற்கொள்ளும் திட்டமாகத் தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டது. இத் திட்டத்தில் எந்நிலையிலும், கட்டாயமோ அதிகார முறையில் அச்சுறுத்தலோ இல்லை.

மத்திய அரசு 1982–83 ஆம் ஆண்டில், 2,92,000 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படவேண்டு மென இலக்கு நிர்ணயித்தது. 2,65,795 பேருக்கு இவ் வாண்டில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட் டது. இது 91 சதவீதமாகும்.

அரசு 10 மறுவாழ்வு இல்லங்களை நடத்தி வருகிறது. தொழுநோயுற்றவர்கள் பிச்சையெடுப்பதைத் தடுப்பதற்குப் பெருமளவில் செயற்படுகிற ஒரே மாநிலம் இம்மாநிலமாகும்.

1982 ஏப்ரலில் தூத்துக்குடி அனல் மின்நிலையத் தின் 3 ஆம் பிளவு (210 மெகாவாட்) செயற்படத் தொடங்கியதோடு, தமிழ்நாடு மாநில மின்னமைவுத் தொகுப்பின் (Grid) மொத்த நிறுவு திறன் 3,109 மெகாவாட் ஆகும்.

இவ்வாண்டில், சுமார் 3.35 இலட்சம் பயனீட்டாளர்களுக்குப் புதிதாக மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. இதனால், 1982–83 ஆம் ஆண்டில் மின் இணைப்பு கொடுக்கப்பட்ட மொத்த பயனீட்டாளர்களின் எண்ணிக்கை 51.10 இலட்சமாகும். 5.07 இலட்சம் குடிசைகளுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பும் இதில் அடங்கும். இவ்வாண்டில், 159 ஆதி திராவிடக் குடியிருப்புகளுக்கு மின்னொளி வழங்கப்பட்டது. இதனால், 31–3–1983 ஆம் நாள் நிலவரப்படி மின்னொளி வழங்கப்பட்ட குடியிருப்புகள் மொத்தம் 26,023 ஆகும். இவ்வாண்டில், 19,497 வேளாண்மை பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. 31–3–1983 ஆம் நாள் நிலவரப்படி மின் இணைப்பு கொடுக்கப்பட்ட மொத்த பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 9,65,017 ஆகும்.

தமிழ்நாடு மின்வாரியம், வேளாண் பயனீட்டாளர்களுக்கு மின் இணைப்பு கொடுத்ததிலும், கிராமங்களிலுள்ள குடிசைகளுக்கு மின்னொளி வழங்கியதிலும் செயற்பட்டதில் இந்நாட்டிலேயே முதல் இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டின் மின்னமைவுத் தொகுப்பின் நிறுவு திறன் 3,109 மொகாவாட் என்பது, தென் மாநிலங்களிலேயே அதிகமானதாகும். இம்மாநிலம், மகாராஷ்டிரா, உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

31–3–1983 ஆம் நாள் நிலவரப்படி உதவித் தொகை பெற அனுமதி வழ்ங்கப்பட்ட முதியோர், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவைகள், ஆதரவற்ற உழவுத் தொழிலாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கை 1,99,339 ஆகும். உண்மையில் உதவித்தொகை

பெறுவோரின் எண்ணிக்கை 1.97 இலட்சமாகும். முதியோர் உதவித் தொகை 1–4–1982-லிருந்து மாதமொன்றுக்கு ரூ. 35 ஆக உயர்த்தப்பட்டது. உதவித்தொகை அளிப்பதோடு, உதவித் தொகை பெறும் முதியோர் ஒவ்வொருவருக்கும் ஓராண்டில் இரு முறை—அதாவது சுதந்திர தினத்தன்றும், பொங்கல் விழாவின்போதும் ஒரு புடவை/வேட்டி அளிக்கப்படுகிறது. மேலும், உதவித் தொகை பெறுவோர் ஒவ்வொருவருக்கும், 1–11-1980-லிருந்து வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு 15-1-1983-லிருந்து முதியோர்களுக்கும் வழங்கப்படுகிறது. இடைநிகழ் செலவு நீங்கலாக உணவிற்கு ஆகிர அடக்கச் செலவு 90 காசாகும். உதவித்தொகை பெறுபவர்களுக்கு குழந்தை நல நிலையங்களில் உணவு அளிக்கப்பட வேண்டும். இவர்கள் ''ஃபர்'' (WHOAPFAR) திட்டத்தின் கீழும் வாரத்திற்கு ½ கிலோ அரிசி பெறுவதற்குத் தகுதியானவர்களாவர். சத்துணவு பெறாத அல்லது பெற இயலாத மற்றவர்கள் தற்போதுள்ளவாறு தொடர்ந்து ஒரு கிலோ அரிசி பெறுவதற்குத் தகுதியானவர்களாவர். முதியோர் உதவித் தொகை பெறுவோர் சுமார் 1,59,850 பேருக்கு சத்துணவு வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பொதுப் பங்கீட்டு முறை செயலிலுள்ளது. தற்போது இம்மாநிலத்தில் 17,844 நியாய விலைக் கடைகள் உள்ளன. இவற்றில் 15,753 கடைகள் கிராமப் பகுதிகளிலும், 2,091 கடைகள் நகர்ப்பகுதிகளிலும் உள்ளன. இம்மாநிலம் முழுவதிலும் சுமார் 118 இலட்சம் குடும்ப நுகர்பொருள் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நியாய விலைக் கடைகள் மூலமாக குடும்ப நுகர்பொருள் பங்கீட்டு அட்டைகள் வைத்திருப்

போருக்கு அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், 'பாமோலின்' முதலிய இன்றியமையாப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

மனிதாபிமான அடிப்படையில் குடிசை வாழ் மக்களின் பிரச்சினைகளை ஆய்ந்து, அவர்களுக்கு பல மாடிக் குடியிருப்புகளையும் மேம்படுத்தப்பட்ட மனைகளையும் வழங்குவதில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், இந்தியாவில் மற்ற மாநிலங்களுக்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. 1981—82 ஆம் ஆண்டு வரை ரூ. 2,653.28 இலட்சம் செலவில் 33,579 குடியிருப்புகள் கட்டப்பட்டன. 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 247.97 இலட்சம் செலவில் 2,200 குடியிருப்புகள் கட்டப்பட்டன.

வளர்ந்து வரும் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான தேவைகளை நிறைவு செய்வதற்காக ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை, பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை, சமூக நலத்துறை ஆகியவற்றின் நலத் திட்டங்கள் விரிவாக்கப்பட்டன. ஆதி திராவிடர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசு 1980—81 ஆம் ஆண்டிலிருந்து தனி துணைத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. 1980-85 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 535 கோடியாகும்.

பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் தொடங்கியதிலிருந்து பழங்குடியினர் மேம்பாட்டுப் பணிகள் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980-85) பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.2,167 இலட்சமாகும். 1981-82 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவு ரூ. 367.25 இலட்சமாகும்.

இவ்வாண்டில் நிலமற்ற 12,198 ஏழை மக்களுக்கு பயிரிடத்தக்க 14,450.60 ஏக்கர் நிலம் வழங்கப் பட்டது. 1,49,844 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

இந்த அறிக்கையில் அரசின் பல்வேறு துறைப் பணி களும், சாதனைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ் வாண்டில், பொதுமக்கள் திருப்தியடையும் வகையில் குடிநீர்ப்பற்றாக்குறையை எல்லா நிலையிலும் அதி காரிகள் சரிக்கட்டிய முறை பாராட்டிற்குரிய சாதனை எனலாம். சென்னை மாநகரில் குடிநீர்ப் பற்றாக்குறை மிகக் கடுமையாக இருந்த போதிலும், இரயில்வே டாங்க்கு களிலும், 400 லாரிகளிலும் குடிநீர் கொண்டு வந்து நிலைமை சரிக்கட்டப்பட்டது. கிராமப்பகுதிகளிலுள்ள மக்களும் குடிநீர்ப் பற்றாக்குறையால் ஓரளவு அல்ல லுற்றனர். இந்த இடர்ப்பாட்டினைக் களைந்து, மக்களுக்கு இந்த அடிப்படைத் தேவையை வழங்கிய தில் அரசு அதிகாரிகள் மிகுந்த கடமையுணர்வுடன் பணியாற்றினர்.

இவ்வெளியீடு அரசுத் துறைகளுக்கும், கல்வி நிறு வனங்களுக்கும் பயனுள்ளதாக இருக்குமென்று நம்பப் படுகிறது.

தலைமைச் செயலகம், (ஒம்) கு. சொக்கலிங்கம்,
சென்னை-9, அரசுத் தலைமைச் செயலாளர்.
26-1-1984.

அத்தியாயம் 1

பொது

அத்தியாயம் 1

பொது.

1982-83 ஆம் ஆண்டில் சீர் பெருமக்கள் வருகை.

பாரத குடியரசுத் தலைவர் அவர்கள் தமிழ் நாட்டில் 1982-83 ல் சுற்றுப் பயணம் செய்த விபரம்.

பாரத குடியரசுத் தலைவர்

வ. எண்.	சுற்றுப் பயண தேதி.	சுற்றுப் பயணம் செய்த இடங்கள்.
(1)	(2)	(3)
1	22–8–82 முதல் 25–8–82 வரை.	சென்னை, ஆவடி, நாகப்பட்டினம், திருநல்லூர், . காரைக்கால், நாகூர், வேளாங்கன்னி, மதுரை, ராமேஸ்வரம், மணப்பாரை, திருச்சி.
2	12–9–82 மற்றும் 13–9–92.	கன்னியாகுமரி.

பாரதப் பிரதமர் அவர்கள் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்த விபரம்.

வ. எண்.	சுற்றுப் பயண தேதி.	சுற்றுப் பயணம் செய்த இடங்கள்.
(1)	(2)	(3)
1	31–10–82	சென்னை.
2	2–1–83 முதல் 3–1–83 வரை.	சென்னை.
3	28–3- 83	சென்னை, வந்தவாசி, திருவண்ணாமலை.

அயல்நாட்டு முக்கிய பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு 1982-83ல் விஜயம் செய்த விபரங்கள்

வ. எண்,	முக்கிய பிரமுகர் பெயர், அந்தஸ்து.	விஜயம் செய்த நாட்கள்.	விஜயம் செய்த இடங்கள்.
(1)	(2)	(3)	(4)
1.	திரு. ராஜதுரை, இலங்கை அமைச்சர், வட்டாரவளர்ச்சி, இந்து அறநிலையத் துறை.	2 – 4– 82 முதல் 6– 4–82 வரை.	சென்னை.
2.	திரு. ஜேம்ஸ் ஸ்கட்லி, காரியதரிசி (வர்த்தகம்,) ஆஸ்திரேலியா.	3– 4–82 மற்றும் 4– 4–82	சென்னை.
3.	மேதகு கதுல்லா ஜமீல், வெளிவிவகார அமைச்சர் மாலத்தீவு.	3– 4–82 மற்றும் 4– 4–82	சென்னை.
4.	திரு. பெட்ரோ ரோஸ். உறுப்பினர், கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி ஏற்றுமதி தொடர்பு பற்றிய மத்திய கமிட்டியின் தலைவர்.	5– 4–82 மற்றும் 6– 4–82	சென்னை.
5.	திரு. ஜான்பெரஸ் நோவா இந்தியாவுக்கான கியூபா குடியரசின் தூதர்.	5– 4–82 மற்றும் 6– 4–82	சென்னை.
6.	மேதகு திரு. மான் ஜமாலு தீன், ஹை-கமிஷனர், (தூதுவர்) மலேசியா.	6– 5–82 மற்றும் 7– 5–82	சென்னை.
7.	சீனாவினுடைய 8 நபர் பத்திரிக்கை குழு.	9– 5–82 மற்றும் 10- 5- 82	சென்னை.
8.	திரு. அகமது ஹல்மே டிசு, விவசாய அமைச்சர், மாலத்தீவு.	10– 5– 82 மற்றும் 2,5– 5–82	சென்னை.
9.	திரு. ராஜதுரை, இலங்கை அமைச்சர், வட்டார வளர்ச்சி இந்து அறநிலையத் துறை, இலங்கை.	17– 5– 82 மற்றும் 19– 5– 82	சென்னை.

அயல்நாட்டு முக்கிய பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு 1982-83ல் விஜயம் செய்த விபரங்கள்

வ. எண்,	முக்கிய பிரமுகர் பெயர், அந்தஸ்து.	விஜயம் செய்த நாட்கள்	விஜயம் செய்த இடங்கள்
(1)	(2)	(3)	(4)
10.	திரு. ஹாிஜி-பார்ன்ஸ் சர், அமெரிக்க தூதர்.	19–5–82 முதல் 22–5–82 வரை.	சென்னை, கோயம்புத்தூர் குன்னூர்.
11.	லெப்டினன்ட் ஜெனரல் எம். ஐ. உச்சி, ராணுவ அலுவலகத் தலைவர் மற்றும் 6 பேர்.	26–5–82 மற்றும் 27–5–82	சென்னை, ஆவடி.
12.	மேதகு திரு வேதாநந்த்ஷா, நேபாள தூதர், மேடம் ஷா.	27–5–82 முதல் 29–5–82 வரை	மதுரை, சென்னை, கன்னியாகுமரி, ராமேஸ்வரம், திருநெல்வேலி.
13.	திரு. டி. பி. பூனபொக்கி, இந்தியாவில் உள்ள இலங்கை தூதர்.	25–6–82 மற்றும் 26–6–82	சென்னை.
14.	மேதகு ஜயாடிஸ் சம்-செவரி ரானா நேபாள அரசின் வெளிநாட்டு காரியதரிசி.	13–7–82 மற்றும் 14–7–82	சென்னை.
15.	திரு. லியோன்போ தாவா-டி-செரிசோ, ராயல் பூட்டானின் வெளிநாட்டு அமைச்சர்.	15–7–82 முதல் 17-7–82 வரை மற்றும் 20–7–82	சென்னை.
16.	மேதகு திரு. எஸ். சுப்பிரமணியம், வீட்டு வசதி வாரிய துணை அமைச்சர் மலேசியா.	16–7–82 முதல் 21–7–82 வரை.	சென்னை.
17.	திரு. பெர்னார்டு திலக ரத்தினா, இலங்கையின் இந்திய தூதரின் மதிப்பு.	11–8–82	சென்னை.

அயல்நாட்டு முக்கிய பிரமுகர்கள் தமிழ்நாடிற்கு 1982-83 ல் விஜயம் செய்த விபரங்கள்

வ. எண்.	முக்கிய பிரமுகர் பெயர், அந்தஸ்து.	விஜயம் செய்த நாட்கள்.	விஜயம் செய்த இடங்கள்.
(1)	(2)	(3)	(4)
18.	மேதகு மாசிவ், ரஷியாவின் உப-ஜனாதிபதி.	22–8–82 மற்றும் 23–8–82	சென்னை.
19.	திரு. ரோல்ப் ராமிஷே, ஜெர்மன் குடியரசின் தூதர்.	24–8–82 மற்றும் 25–8–82	சென்னை.
20.	ஸ்பெயின் நாட்டின் அரசி	2–9–82 4–9–82 மற்றும் 10–9–82	சென்னை.
21.	திரு. முகமது முஸ்தபா உசேன், சுகாதார அமைச்சர் மாலத்தீவு, குடியரசு,	18–9–82 25–9–82 மற்றும் 26–9–82	சென்னை.
22.	திரு. ஹர்-டி-டாசினகங்ர். அமெரிக்க தூதர்.	22–9–82 முதல் 24–9–82 வரை.	சென்னை.
23.	திரு. ராஜா ஜாளி இஸ்மாயில், இந்தியாவில் உள்ள மலேசிய உயர் ஆணையாளர்.	28–9–82 முதல் 2–10–82 வரை.	சென்னை.
24.	மேதகு டாட்டா சாமிவேல், பொதுப்பணித்துறை அமைச்சர், மலேசியா.	2–10–82 முதல் 6–10–82 வரை,	சென்னை, மாமல்லபுரம், மதுரை.
25.	துணை பிரதம மந்திரி, மலேசியா.	1–11–82 மற்றும் 10–11–82	சென்னை.

அயல்நாட்டு முக்கிய பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு 1982–83ல் விஜயம் செய்த விபரங்கள்.

வ. எண்.	முக்கிய பிரமுகர் பெயர், அந்தஸ்து.	விஜயம் செய்த நாட்கள்.	விஜயம் செய்த இடங்கள்.
(1)	(2)	(3)	(4)
26.	திரு. ராபர்ட் வேட் ஜெரி சிஎம்ஜி, இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் தூதர்.	3–11–82 முதல் 7–11–82 வரை.	சென்னை, மகாபலிபுரம்.
27.	மேதகு கேஸ்டன் தார்ன், ஐரோப்பிய கம்யூனிடியின் தலைவர் மற்றும் திருமதி கேஸ்டன்.	4–11–82	சென்னை, காஞ்சிபுரம், மாமல்லபுரம், திருச்சி.
28.	ஜஸ்டிஸ் திரு. சமர்கோன் இலங்கையின் தலைமை நீதிபதி.	13–11–82 முதல் 16–11–82 வரை.	சென்னை, மாமல்லபுரம்.
29.	எம். எச். அமர்க் தலைமையிலான நான்கு நபர் குழு, அரசுத் தொடர்பு உயர் நிதி அதிகாரி, இலங்கை.	17–11–82 மற்றும் 18–11–82	சென்னை.
30.	திரு. ஹின்ஸ் அமர்சார்டு, ஹேப் உலக வங்கியின் மூத்த துணை பிரசிடெண்ட், அலுவலகத்தின் மூத்த ஆலோசகர்.	17–11–82 முதல் 20–11–82 வரை.	சென்னை. மாமல்லபுரம் மதுரை.
31.	கொரியாவின் தேசிய நடனக் குழுவின் 35 நபர் குழு.	21–11–82 முதல் 24–11–82 வரை.	சென்னை.
32.	சீனாவின் 37 நபர் கொண்ட பாட்டு மற்றும் நடனக் குழுவினர்.	23–11–82 முதல் 26- 11- 82 வரை.	சென்னை.

அயல்நாட்டு முக்கிய பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு 1982-83ல் விஜயம் செய்த விபரங்கள்.

வ. எண்.	முக்கிய பிரமுகர் பெயர், அந்தஸ்து.	விஜயம் செய்த நாட்கள்.	விஜயம் செய்த இடங்கள்.
(1)	(2)	(3)	(4)
33.	திரு. எம். ஏ. முஷித், நிதி மற்றும் திட்ட அமைச்சர், பங்களாதேஷ்.	27-11-82 மற்றும் 28-11-82	சென்னை.
34.	திரு. ஹிரோஜி முகாசா, தேசிய ரோட்டரியின் பிரசிடெண்ட்.	28-11-82 மற்றும் 29-11-82	சென்னை.
35.	திரு. தாசோ-லாம்-பஞ்ஞர், திட்டத் துணை அமைச்சர், ராயல் பூட்டான் அரசு.	2-12-82 மற்றும் 3-12-82	சென்னை. வேலூர்.
36.	திருமதி சனோனா ஹமீது மற்றும் மாஸ்டர் அனெர்ஷா ஹமீது, இலங்கை வெளி விவகார அமைச்சரின் மனைவியும், மகனும்.	6-12-82	சென்னை, கன்னியாகுமரி.
37.	திரு. ஏ. எம். ஆர். பி. அட்டநாயக், துணை அமைச்சர், உயர் கல்வி, இலங்கை பார்ட்டியினர்.	10-12-82 முதல் 12-12-82 வரை.	சென்னை. மாமல்லபுரம்
38.	திரு. பெர்னார்டு-பி-திலகரத்தினா, இந்தியாவில் உள்ள இலங்கையின் உயர் ஆணையாளர்.	12-12-82 முதல் 20-12-82 வரை. மற்றும் 22-12-82	சென்னை, வேலூர், காஞ்சிபுரம், மதுரை, கொடைக்கானல், கன்னியாகுமரி.
39.	வியட்நாமின் வெளிவிவகார அமைச்சர் மற்றும் பார்ட்டியினர்.	13-12-82	சென்னை.

அயல்நாட்டு முக்கிய பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு 1982-83ல் விஜயம் செய்த விபரங்கள்.

வ. எண்.	முக்கிய பிரமுகர் பெயர், அந்தஸ்து.	விஜயம் செய்த நாட்கள்.	விஜயம் செய்த இடங்கள்.
(1)	(2)	(3)	(4)
40.	திரு. ஹரன்ஸ் டி.லிக்ஸ், வியன்னாவின் அகில உலக அட்டாமிக் சக்தி ஏஜென்சியின் டைரக்டர் ஜெனரல் மற்றும் திரு. ஜோஹன், திரு. ஏ. மேலந்தர், ஸ்பெஷல் அஸிஸ்டென்ட், திரு. பி. கே. பட்னாயகர் பார்ட்.	14-12-82 முதல் 16-12-82 வரை.	சென்னை.
41.	சீனாவின் 8 நபர் குழு	21-12-82	சென்னை.
42.	பூட்டானின் 11 மூத்த நீதிபதிகள் குழு.	24-12-82 முதல் 26-12-82 வரை.	சென்னை.
43.	திரு. சி. இராஜதுரை, இலங்கை அமைச்சர்.	4-1-83	சென்னை.
44.	திருமதி டி. சி. கன்காபா, திருமதி மோனிகாபௌடா இரண்டு நபர் குழு.	4-1-83 முதல் 6-1-83 வரை.	சென்னை, மாமல்லபுரம்.
45.	மேதகு கிரேவில்லே ஏஜான்னர், லேபர் பாராளுமன்ற உறுப்பினர், லண்டன்.	6-1-83 மற்றும் 7-1-83	சென்னை.
46.	ஒரு ஆறு நபர் குழு பங்களாதேஷ், தலைமை ஏ. ரஹ்மான், உதவி அந்நிய செயலாளர், பங்களாதேஷ்.	3-1-83 முதல் 14-1-83 வரை.	சென்னை.
47.	பூடானிலிருந்து வரும் பதினொரு நபர் அடங்கிய அதிகாரிகள் குழு.	16-1-83 முதல் 18-1-83 வரை.	சென்னை.

அயல்நாட்டு முக்கிய பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு 1982-83ல் விஜயம் செய்த விபரங்கள்.

வ. எண்	முக்கிய பிரமுகர் பெயர், அந்தஸ்து.	விஜயம் செய்த நாட்கள்.	விஜயம் செய்த இடங்கள்.
(1)	(2)	(3)	(4)
48.	திரு. கே. மஜீத்கான், கல்வி அமைச்சர், பங்களாதேஷ்	13- 1-83	சென்னை.
49.	மேதகு தாடோ அப்துல் மன்னன் பின்ஒத்தமான், விவசாய அமைச்சர், மலேசியா.	23- 1-83 மற்றும் 24-1-83	சென்னை.
50.	மேதகு அப்துல் காபர் லக்னவால், விவசாயத்துறை அமைச்சர், ஆப்கானிஸ்தான்.	25- 1-83 மற்றும் 26- 1-83, 29- 1-83 மற்றும் 30- 1-83.	சென்னை.
51.	திரு. கிப்ரா, நிர்வாகச் செயலாளர், பொருளாதாரம் மற்றும் சமூக கமிட்டி ஆசியாவும், பசிபிக்கும்.	7- 2-83 மற்றும் 8- 2-83	சென்னை.
52.	மேதகு அனுருத் ஜெகன்னாத், பிரதம மந்திரி, மோரிசியஸ்.	10- 2-83 மற்றும் 11- 2-83	சென்னை, எண்ணூர்.
53.	மேதகு எண்ரிக் மாகோ, ஸ்பெயின் நாட்டு தூதர்.	13- 2-83	சென்னை.
54.	திரு. சி. ராஜதுரை, இலங்கை அமைச்சர்.	14- 2-83	சென்னை.
55.	திரு. டி. ஸ்டப்ஸ், ஓ. பி. ஈ. பிரிட்டிஷ் துணை கமிஷனர்.	16- 2-83	சென்னை.
56.	ஸர். வில்லியம் ரைரீ, செயலாளர் ஓவர்சிஸ் வளர்ச்சி நிர்வாகம் ஐக்கிய அரசு (இங்கிலாந்து)	18- 2-83 முதல் 21- 2-83 வரை.	சென்னை.

STATE DEPARTMENT OF

அயல்நாட்டு முக்கிய பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு (1982-83) விஜயம் செய்த விபரங்கள்.

வ.	முக்கிய பிரமுகர் பெயர், அந்தஸ்து.	விஜயம் செய்த நாட்கள்.	விஜயம் செய்த இடங்கள்.
(1)	(2)	(3)	(4)
57.	திரு. கே. ஏ. பஷிர், சட்ட அமைச்சர், பங்களாதேஷ்.	19– 2–83 மற்றும் 20– 2–83	சென்னை.
58.	திரு. ஆண்ட்ரூ போர்டெய்ன் தலைமைப் பதிப்பாளர், லே மாண்டே தினசரி, பாரீஸ்.	20– 2–83 முதல் 23– 2–83 வரை.	சென்னை.
59.	திருவாளர்கள் உசான், அகமது சலீம், உதவிச் செயலாளர், அந்நிய விவகார அமைச்சகம், மாலத்தீவு.	23– 2–83 மற்றும் 24– 2–83	சென்னை.
60	பூடான்–இந்திய நேச பதினோரு நபர் பூடான் குழு.	24– 2–83 முதல் 26– 2–83 வரை.	சென்னை.
61.	திரு. டபில்யூ. டி. ஜெயசின்ஙீஸ், அந்நிய செயலாளர், இலங்கை.	27– 2–83	சென்னை.
62.	திரு. ஜேவியர் பெரீஷ் டீ சியூலர், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர்.	4– 3–83 முதல் 6–3–83 வரை.	சென்னை. காஞ்சிபுரம், மாமல்லபுரம் மதுரை.
63.	மேதகு டேடோ செரி, மகாதிர் முகம்மது, பிரதம மந்திரி. மலேசியா.	6– 3–83	சென்னை.
64.	மாலத்தீவு அதிபரும் உடன் ஐந்து நபர்களும்.	10 3–83 முதல் 11–3–83 வரை.	சென்னை.

அயல்நாட்டு முக்கிய பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு 1982-83ல் விஜயம் செய்த விபரங்கள்.

வ. எண்.	முக்கிய பிரமுகர் பெயர், அந்தஸ்து.	விஜயம் செய்த நாட்கள்.	விஜயம் செய்த இடங்கள்.
(1)	(2)	(3)	(4)
65.	திரு. பாத்துல்லா ஜமீல், அந்நிய விவகார மந்திரி, மாலத்தீவு.	11– 3–83 மற்றும் 12– 3– 83	சென்னை.
66.	திரு. அகமது ஜாகி, மாலத்தீவு தூதர்.	12– 3– 83 மற்றும் 13– 3–83	சென்னை.
67.	திரு. ஏ. சி. எஸ். ஹமீது அந்நிய விவகார மந்திரி, இலங்கை.	14–3–83 முதல் 19– 3–83 வரை.	சென்னை. மதுரை, கொடைக்கானல், திருச்சி.
68.	கர்னல், என்ஹன் ..., தளபதி, சிங்கப்பூர் கடற்படை.	24– 3–83 முதல் 26– 3–83 வரை.	கோயம்புத்தூர், வெலிங்டன், சென்னை.
69.	திரு. டி. ஜெயசின்ஹே, அந்நிய விவகார அமைச்சர், இலங்கை.	25– 3–83	சென்னை.
70.	திரு. மோதிர்வாடா, இயக்குநர், பொருளாதார விவகாரம், இலங்கை.	25– 3–83	சென்னை.
71.	திரு. இப்ராகிம் ஹுசேன் ஜாகி, அந்நிய விவகார செயலாளர், மாலத்தீவு.	25– 3–83 மற்றும் 26– 3–83 31– 3– 83 மற்றும் 1– 4–83	சென்னை.

நிர்வாகம்:

தமிழ் நாட்டின் ஆளுநராக திரு. சாதிக் அலி அவர்கள் 4—11—1980 அன்று பொறுப்பேற்று 2—9—1982 வரையில் தொடர்ந்து இருந்தார். பிறகு, ரைத் தொடர்ந்து, தமிழ் நாட்டின் ஆளுநராக திரு. எஸ். எல். குரானா அவர்கள், 3—9—1982 அன்று பொறுப்பேற்று இவ்வறிக்கை காலம் முழுவதும் தொடர்ந்து பதவி வகித்து வருகிறார்.

முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலான அமைச்சரவை கீழ்க்கண்ட அமைச்சர்களுடன் அறிக்கை காலம் உள்ளிட்டு, தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

திருவாளர்கள்—

1. இரா. நெடுஞ்செழியன்
2. ச. இராமச்சந்திரன்
3. கே. ஏ. கிருஷ்ணசாமி
4. எஸ். டி. சோமசுந்தரம்
5. இராம. வீரப்பன்
6. செ. அரங்கநாயகம்
7. கா. காளிமுத்து
8. சி. பொன்னையன்
9. ப. குழந்தைவேலு
10. எஸ். இராகவானந்தம்
11. டாக்டர் எச். வி. ஹண்டே
12. கா. இராசாமுகமது
13. சு. முத்துசாமி
14. சு. திருநாவுக்கரசு
15. சொ. நீ. இராசேந்திரன்
16. எம். விஜயசாரதி
17. திருமதி கோமதி சீனிவாசன்

ஆளுநர் அவர்களின் சுற்றுப்பயணங்கள்.

மாநிலத்திற்குள்.

1982 ஏப்ரல் :

ஆளுநர் அவர்கள், 13-ஆம் நாளன்று, திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரசங்குடி கிராமத்திற்கு வருகை புரிந்தார். திருச்சிராப்பள்ளி வட்ட மேசை அமைப்பு ஏற்பாடு செய்திருந்த விழாவொன்றில் கலந்து கொண்டார். திருச்சிராப்பள்ளி நகரில், கண்நோய் மருத்துவத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. 22-ஆம் நாளன்று, வேலூர், கிறுத்துவ மருத்துவக் கல்லூரியின் '' ரூசா '' பிரிவு (Rhusa Unit) கே. வி. குப்பம் கிராமத்தில் (வட ஆர்க்காடு) ஏற்பாடு செய்திருந்த விழாவில் அவர் கலந்து கொண்டார். வேலூரில் நகராட்சி, புதிய பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார். 23-ஆம் நாளன்று இராணிப்பேட்டை பாரத் ஹெவி எலக்டிரிக்கல் நிறுவனம், சிப்காட் (Sipcot) நிறுவனத்தின் ஏனைய தொழிற் பிரிவுகள் ஆகியவற்றை அவர் பார்வையிட்டார். 30-ஆம் நாளன்று திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தொடக்க விழாவிற்கு அவர் தலைமை வகித்தார்.

1982 மே :

ஆளுநர் அவர்கள், மே 6-ஆம் நாள் முதல் மே 27ஆம் நாள் வரையில் உதகமண்டலத்தில் இருந்தார். 22-ஆம் நாளன்று தாவர இயல் தோட்டத்தில் ஆண்டு மலர்க்கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். அவர் 28-ஆம் நாள் முதல் 31-ஆம் நாள் வரை, மதுரை, கோடைக்கானல், பழனி ஆகிய இடங்களில் இருந்தார்.

1982 ஜுன் :

12-ஆம் நாளன்று கோயம்புத்தூரில் இளைஞர் பன்னாட்டுத் தெற்கு, மேற்கு, மத்திய இந்திய மண்டலங்களின் முதல் கூட்டு மண்டல மாநாட்டை அவர் தொடங்கி வைத்தார்.

1982 செப்டம்பர் :

3–9–1982-ஆம் நாளன்று ஆளுநராகப் பொறுப்பேற்ற திரு. எஸ். எல். குரானா, இந்தியக் குடியரசுத் தலைவரை வரவேற்க, 12-ஆம் நாளன்று கன்னியாகுமரியில் இருந்தார். 13-ஆம் நாளன்று குடியரசுத் தலைவரை வழியனுப்பி வைத்துவிட்டு, 13, 14-ஆம் நாட்களில் அவர் அம்மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தார்.

1982 அக்டோபர் :

ஆளுநர் அவர்கள், 18-ஆம் நாள் முதல் 21ஆம் நாள் வரையில் கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் இருந்தார். நகரக் கூட்டுறவு வங்கிகளின் ஆறாவது மாநில அளவிலான மாநாட்டையும், கோயம்புத்தூர் மாநகரக் கூட்டுறவு நகர வங்கியின் வைர விழாவினையம் அவர் தொடங்கி வைத்தார். கோயம் புத்தூர் மாவட்டம், திம்மம் பாளையம் கிராமத்தில் பள்ளிக் கட்டிடம் ஒன் றத் திறந்து வைத்தார்.

1982 நவம்பர் :

9, 10ஆம் நாட்களில் திருச்சி மாவட்டத்திலும், 25, 26ஆம் நாட்களில் தருமபுரி மாவட்டத்திலும் அவர் சுற்றுப்பயணம் செய்தார். கிராமப் பகுதிகளை அவர் பார்வையிட்டார். சுகாதாரம், கல்வி, காடு வளர்ப்புத் திட்டங்கள் போன்ற வளர்ச்சிப் பணிகள் சம்பந்தப்பட்ட விழாக்களில் அவர் கலந்து கொண்டார்.

1982 டிசம்பர் :

18ஆம் நாள் முதல் 20ஆம் நாள் வரையில் அவர் மதுரை மாவட்டத்தில் இருந்தார். 18ஆம் நாளன்று, மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவிற்கு அவர் தலைமை வகித்தார். மதுரையிலும், கிராமப்பகுதிகளிலும் நடைபெற்ற விழாக்களில் அவர் கலந்து கொண்டார்.

1983 சனவரி :

11, 12-ஆம் நாட்களில் அவர் சேலத்தில் இருந்தார். கூட்டுறவு, கிராம வளர்ச்சி விழாக்களில் அவர் கலந்துகொண்டார் ; மேட்டூர் அணையையும் அவர் பார்வையிட்டார்.

1983 பிப்ரவரி :

8, 9ஆம் நாட்களில், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் அவர் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழாவில் பேருரை நிகழ்த்தினார். 24-ஆம் நாளன்று, கோயம்புத்தூரில் பஞ்சாலை ஆராய்ச்சி மன்றத்தின் கூட்டுத் தொழில் நுட்ப மாநாட்டை அவர் தொடங்கி வைத்தார்; பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்ட செய்திப்படம் ஒன்றை அவர் வெளியிட்டார்.

1983 மார்ச் :

28ஆம் நாளன்று பிரதமருடன் வறட்சித் துயர்த்தணிப்புப் பணிகளைப் பார்வையிட வட ஆர்க்காடு மாவட்டத்திற்குச் சென்றார். 29-ஆம் நாளன்று அவர் வட ஆர்க்காடு மாவட்டத்தில் நடைபெற்று வந்த வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார். அன்று மாலை வேலூர் அரசு பெண்டிலெண்ட் மருத்துவ மனையில் 20 படுக்கை வசதியுடன் கூடிய மகப் பேறுக்குப் பிந்திய புதிய சிகிச்சை வார்டு ஒன்றையும், 25 படுக்கை வசதியுடன் கூடிய புதிய சித்த முறை மருத்துவ வார்டு ஒன்றையும் துவக்கி வைத்தார்.

2 மாநிலத்திற்கு வெளியே சுற்றுப்பயணம்.

1982 ஜூன் :

ஆளுநர் அவர்கள் 15ஆம் நாளன்று, எர்ணாகுளத்தில் தாமோதர மேனன் முதல் நினைவுச் சொற்பொழிவாற்றினார்.

1982 நவம்பர் :

ஆளுநர் அவர்கள் 18.ஆம் நாள் முதல் 21ஆம் நாள் வரையில் டில்லியில் இருந்தார்.

1982 டிசம்பர் :

டிசம்பர் திங்கள் 3ஆம் நாள் முதல் 5ஆம் நாள் வரை அவர் டில்லியில் இருந்தார்.

1983 சனவரி :

அங்காடி நிருவாக நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த ஆப்ரோ-ஏசியன் மாநாடு தொடர்பாக 19ஆம் நாள் முதல் 21ஆம் நாள வரையில் அவர் டில்லியில் இருந்தார்.

3. மாநகரில் ஆளுநர் அவர்கள் பங்கேற்ற முக்கிய நிகழ்ச்சிகள்.

1982 ஏப்ரல் :

ஏப்ரல் முதல் நாளன்று, ஆளுநர் அவர்கள், பாரதிய வித்யா பவன் ஏற்பாடு செய்திருந்த ராஜாஜி நினைவுப் பரிசளிப்பு விழா விற்குத் தலைமை வகித்தார். 2ஆம் நாளன்று, தென்னிந்திய 5-வது விளம்பர ஓவியக் கண்காட்சியை அவர் தொடங்கி வைத்தார். 14ஆம் நாளன்று, புரோட்டீன் உணவுப் பொருள்கள் குறித்த கருத்தரங்கை அவர் தொடங்கி வைத்தார்.

1982 மே :

மே திங்கள் 5ஆம் நாளன்று, 28வது அகில இந்தியக் கைத்தறி விழா — கைத்தறி கண்காட்சியில் அவர் சிறப்புரை ஆற்றினார்.

1982 ஜூன்:

27ஆம் நாளன்று, தமிழ் நாடு மாநிலச் சட்ட உதவி—ஆலோசனைக் குழுவின் செயற்குழுக் கூட்டத்திற்கு அவர் தலைமை வகித்தார்.

1982 ஜூலை :

15ஆம் நாளன்று, மாநில அரசு ஏற்பாடு செய்திருந்த காமராஜ் அவர்களின் 80-வது பிறந்தநாள் விழாவினைத் தொடங்கி வைத்தார். 27ஆம் நாளன்று, அகில இந்திய தபால்-தந்தித் துறையின் பூப்பந்தாட்டப் போட்டியினைத் தொடங்கி வைத்தார்.

1982 ஆகஸ்டு :

4ஆம் நாளன்று, மத்தியச் சிறையில் ரக்ஷபந்தன் சிறப்பு விருந்தினராக அவர் கலந்து கொண்டார். 18ஆம் நாளன்று, சென்னை நிழற்படம் எடுப்பவர் சங்கத்தின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்ட "20-வது அகில இந்திய நிழற்படக்காட்சியகத்தை" அவர் தொடங்கி வைத்தார். 23ஆம் நாளன்று திரு. டி. சி. கோத்தாரி அவர்களின் பாராட்டு விழாவிற்குத் தலைமை வகித்தார். 27ஆம் நாளன்று, பாரதிதாசன் பல்கலைக் கழகத் திட்டக் குழுவின் முதற் கூட்டத்திற்கு அவர் தலைமை வகித்தார். 28ஆம் நாளன்று, திரு. கலியாணசுந்தரம் அவர்களின் நூற்றாண்டு விழாவினைத் தொடங்கி வைத்தார்.

1982 செப்டம்பர் :

3–9–1982ஆம் நாளன்று ஆளுநராகப் பொறுப்பேற்ற திரு. எஸ். எல். குரானா, 17ஆம் நாளன்று, ஸ்ரீலங்காவிற்கும், இந்தியாவிற்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியைத் தொடங்கி வைத்தார். 19ஆம் நாளன்று, தமிழ் நாடு, இந்திய நிறுவனப் பொது நிருவாகம் ஏற்பாடு செய்திருந்த 'பொருள் நுகர்வு' என்ற கருத்தரங்கில் அவர் நிறைவுரை நிகழ்த்தினார்.

1982 அக்டோபர் :

இந்திய - அமெரிக்க வர்த்தக சபையின் ஆதரவில், 22ஆம் நாளன்று நடைபெற்ற 'இந்திய - அமெரிக்கக் கூட்டு முயற்சி' என்ற கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். 26ஆம் நாளன்று, இந்திய கிறித்துவ வரலாற்றுச் சங்கத்தின் 5-வது பொது மாநாட்டை அவர் தொடங்கி வைத்தார்.

1982 நவம்பர் :

3-ஆம் நாளன்று, ஐரோப்பிய சமுதாயக் குழுத் தலைவர், திரு. கெஸ்தின் தோர்ன் அவர்களுக்கு விருந்தளித்தார். 6-ஆம் நாளன்று பாரத் சாரணசாரணியர் அளித்த விருதினை ஆளுநர் ஏற்றுக் கொண்டார். 14-ஆம் நாளன்று, அகில இந்தியக்

கூட்டுறவு வார விழாவை அவர் தொடங்கி வைத்தார். 16-ஆம் நாளன்று, 'உற்பத்தி அளவு —பகுப்பாய்வு' என்ற கருத்தரங்கை அவர் தொடங்கி வைத்தார்.

1982 டிசம்பர் :

6-ஆம் நாளன்று இராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் அவர், காவல் துறையினருக்குப் பதக்கங்களை வழங்கினார். 9-ஆம் நாளன்று இந்தியத் தொழிற்நுட்ப நிறுவன (I.I.T.) வளாகத்தில், இந்திய வானூர்தியியல் சங்கத்தின் 34-ஆம் ஆண்டு பொதுக்கூட்டத்தை அவர் தொடங்கி வைத்தார். அதே நாளன்று, இந்திய நூலாசிரியர்கள் சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டுக் கூட்டத்தில் அவர் நிறைவுரை ஆற்றினார். 11-ஆம் நாளன்று இந்திய "Radiation on Cologists" சங்கத்தின் நான்காவது அகில இந்தியக் காங்கிரஸ் சங்கத்தை அவர் தொடங்கி வைத்தார். 14-ஆம் நாளன்று, சென்னை, 'ஸ்பாஸ்டிக் நிலையத்தில்' கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார். 15-ஆம் நாளன்று, மாநில நீர்ப்பாசன அமைச்சர்களின் 7-வது மாநாட்டைத் தொடங்கி வைத்தார் ; 17-ஆம் நாளன்று, மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூற்றாண்டு விழாவின் நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பாரதி நூற்றாண்டு நினைவு மலரை அவர் வெளியிட்டார். 23-ஆம் நாளன்று, "இந்தியாவில்", சமூகப் பொருளாதாரச் சட்டத்தின் "மறுமலர்ச்சி" குறித்த அகில இந்திய மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

1983 சனவரி :

25-ஆம் நாளன்று, பாரதிய வித்தியாபவனின் வெள்ளி விழாவிற்கு அவர் தலைமை வகித்தார். 29-ஆம் நாளன்று, கணித அறிவியல் நிறுவனத்தின் 31-ஆம் ஆண்டு கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். அதே நாளன்று மாலை, அங்காடி நிருவாக நிறுவனத்தின் ஆதரவில் நடைபெற்ற 'இந்தியாவில் நிருவாக வளர்ச்சி' என்பது குறித்த கருத்தரங்கை அவர் தொடங்கி வைத்தார். 31-ஆம் நாளன்று, மத்தியத் தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆதரவில் நடைபெற்ற தோல் தொழில் வார விழாவினை அவர் தொடங்கி வைத்தார்.

1983 பிப்ரவரி :

4-ஆம் நாளன்று, இந்திய வார்ப்படத் தொழிலாளர் நிறுவனத்தின் ஆண்டு விழாவினை அவர் தொடங்கி வைத்தார். அன்று பிற்பகல், அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவிற்கு அவர் தலைமை வகித்தார். 5-ஆம் நாளன்று, முன்னாள் இராணுவத்தினருக்குத் தேனீர் விருந்தளித்தார். 7-ஆம் நாளன்று, ஒன்பதாம் அகில இந்திய ஊர்க்காவல் படை—சிவில் பாதுகாப்புத் தொழில் விளையாட்டுப் போட்டியையும், 8-ஆம் நாளன்று, அகில இந்திய வேதிக் மாநாட்டையும் தொடங்கி வைத்தார். 12-ஆம் நாளன்று, தமிழ்நாடு முட நீக்கியல் சங்கத்தின் 16-வது ஆண்டு மாநாட்டை அவர் தொடங்கி வைத்தார். 21-ஆம் நாளன்று, சென்னை பத்திரிகையாளர்கள் சங்க உறுப்பினர்கள் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். 28-ஆம் நாளன்று, சென்னைப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவிற்கு அவர் தலைமை வகித்தார்.

1983 மார்ச் :

4-ஆம் நாளன்று, சென்னை நிருவாகச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற வர்த்தகத் தலைமைப் பரிசளிப்பு விழாவிற்கு அவர் தலைமை வகித்தார். 5-ஆம் நாளன்று, ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் திரு. ஜாவீர்-பெரிஸ்-டி-குள்ளரைப் பாராட்டி, விருந்து வைத்தார். 10-ஆம் நாளன்று, போக்குவரத்து சரக்கு அனுப்புகைப் பொறியாளர்கள் நிறுவனத்தின் ஆதரவில் நடைபெற்ற "கிராம வளர்ச்சியில் போக்குவரத்தின் பங்கு" என்பது குறித்த கருத்தரங்கை அவர் தொடங்கி வைத்தார். 14-ஆம் நாளன்று, சென்னை வர்த்தகச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு அவர் தலைமை வகித்தார்.

4. இராஜ்பவனில் தங்கிய முக்கிய விருந்தினர்கள் :

இந்தியக் குடியரசுத் தலைவர், ஐரோப்பிய சமுதாயக் குழுத் தலைவர் திரு. கௌர்ஸ்தன் தோர்ன் ; திருமதி தோர்ன்; மொரிசியஸ் பிரதமர் திரு. ஆண்டூர் ; ஜெகநாத், திருமதி ஜெகநாத், ஆந்திர பிரதேசம், ஒரிஸ்ஸா, பீகார் ஆளுநர்கள், புதுச்சேரி, அந்தமான் நிகோபர் ஆகியவற்றின் துணை ஆளுநர்கள்.

STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY,

இந்திய தலைமை நீதிபதி, ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான் முதலமைச்சர்கள்,

மத்திய வேளாண்மை அமைச்சர்.

மத்திய வணிகத்துறை அமைச்சர்

மத்திய பாதுகாப்பு அமைச்சர்.

மத்திய நிதி அமைச்சர்.

மத்திய பாசனம் அமைச்சர்.

மத்திய சட்டம் அமைச்சர்.

மத்திய மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை அமைச்சர்.

மத்திய திட்டம் அமைச்சர்.

மத்திய கப்பல் போக்குவரத்து-போக்குவரத்து அமைச்சர்.

மத்திய நாடாளுமன்ற விவகாரம் அமைச்சர்.

மத்திய பணிகள்—வீட்டு வசதி அமைச்சர்.

மத்திய தொழில் அமைச்சர்.

மத்திய பெட்ரோலியம் அமைச்சர்.

மத்திய தகவல் தொடர்பு அமைச்சர்.

மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர்.

மத்திய தொழிலாளர் நலன் மறுவாழ்வுத்துறை அமைச்சர்.

மத்திய இரசாயனங்கள், உரங்கள் அமைச்சர்.

மத்திய தகவல்தொடர்பு ராஜாங்க அமைச்சர்.

மத்திய உள்துறை—நாடாளுமன்ற விவகாரங்கள் ராஜாங்க அமைச்சர்.

மத்திய வேளாண்மை, ராஜாங்க அமைச்சர்.

மத்திய தொழில் ராஜாங்க அமைச்சர்.

மத்திய செய்தி-ஒலிபரப்பு ராஜாங்க அமைச்சர்.

மத்திய கல்வி ராஜாங்க அமைச்சர்.

திரு. கமலாபதி திரிபாதி, தலைவர், விற்பனைவரி வல்லுநர்க் குழு.

திரு. எல். கே. ஜா., தலைவர், பொருளாதார—நிருவாக சீர்திருத்தக் குழு.

டாக்டர் மன் மோகன் சிங், கவர்னர், இந்திய ரிசர்வ் வங்கி.

நீதிபதி திரு. ஏ. என். குரோவர், தலைவர், இந்திய செய்தி ஸ்தாபனம்.

டாக்டர் எஸ். மாதுரி ஆர். ஷா. தலைவர், பல்கலைக் கழக மானியக் குழு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை—அமைப்பு :

ஏழாவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மாண்புமிகு பேரவைத் தலைவர் உட்பட 235 உறுப்பினர்களைக் கொண்டதாகும். அவற்றில் ஒவ்வொரு அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்	132
2. திராவிட முன்னேற்றக் கழகம்	34
3. இந்திய தேசியக் காங்கிரஸ் (இ)	31
4. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)	11
5. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி	10
6. காந்தி — காமராஜ் தேசிய காங்கிரஸ்	3
7. அகில இந்திய பார்வர்டு பிளாக்	3
8. தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்	3
9. ஜனதா	2
10. நியமன உறுப்பினர் ..	1
11. சுயேட்சை	4
மாண்புமிகு பேரவைத் தலைவர்	1
மொத்தம்	235

கூட்டத் தொடர்கள் மற்றும் கூட்டங்கள் :

இவ்வறிக்கை கால கட்டத்தில் ஏழாவது சட்டமன்றப் பேரவையின் ஐந்தாவது மற்றும் ஆறாவது கூட்டத் தொடர்கள் முறையே 6—9—1982 மற்றும் 24—1—1983 ஆகிய தேதிகளில் துவங்கப்பெற்று, 11—11—1982 மற்றும் 11—5—1983 ஆகிய தேதிகளில் இறுதி செய்யப்பெற்றது.

மேற்சொன்ன இரு கூட்டத் தொடரில் பேரவை 66 நாட்கள் கூடியது. அதாவது ஐந்தாவது கூட்டத்தொடரில் ஐந்து நாட்களும் மற்றும் ஆறாவது கூட்டத்தொடரில் 61 நாட்களும் கூடியது.

ஆளுநர் உரை :

இக்கால கட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் திரு. சுந்தர்லால் குரானா அவர்கள் 1983 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24ஆம் தேதி, திங்கட்கிழமையன்று காலை 11-00 மணி அளவில் சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் பேரவை, மேலவை அடங்கிய கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார்கள். 27—1—1983 ஆம் தேதியன்று, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை திரு. கே. குப்புசாமி அவர்கள் கொண்டு வந்தார்கள். திரு. மா. சின்னராஜ் அவர்கள் இதை வழிமொழிந்தார்கள். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் ஏழு நாட்கள் நடைபெற்றன. பின்னர் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் எவ்வித மாற்றமும் இன்றி 4-2-1983 ஆம் தேதியன்று பேரவையில் நிறைவேற்றப்பெற்றது.

நிதிநிலை அலுவல்கள்:—

இவ்வறிக்கையின் கால கட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள நிதிநிலை அலுவல்கள் நடைபெற்றன:—

	அவையில் வைக்கப்பெற்ற நாள்.	விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற நாட்கள்.
	(1)	(2)
1. 1982-83-ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதி அறிக்கை.	8-9-1982	9-9-1982
2. 1983-84-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம்.	5-3-1983	பொது விவாதம் 6 நாட்கள், மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் 28 நாட்கள்.
3. 1982-83-ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதி அறிக்கை.	29-3-1983	29-3-1983
4. 1974-75-ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.	13-4-1983	19-4-1983

5. 10-3-1983-ஆம் தேதியன்று 1983-84-ஆம் ஆண்டின் முன்பண மானியக் கோரிக்கைகள் அளிக்கப்பெற்று வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

சட்டமியற்றும் அலுவல்கள்:

ஏழாவது சட்டமன்றப் பேரவையின் ஐந்தாவது மற்றும் ஆறாவது கூட்டத் தொடர்களின் போது அறிமுகம் செய்யப்பெற்ற 51 சட்ட முன்வடிவுகளில், 43 வடிவுகள் ஆய்வு செய்து நிறைவேற்றப்பட்டன.

வினாக்கள்:

இக்கால அளவில் பேரவையில் விடையளிக்கப்பெற்ற உடுக்குறியிட்ட மற்றும் குறுகிய கால வினாக்களின் எண்ணிக்கை

மற்றும் உடுக்குறியிடாத வினாக்களின் விடைகள் அவையில் வைக்கப்பெற்ற விவரங்கள் பின்வருமாறு : —

உடுக்குறியிட்ட வினாக்கள்	948
குறுகிய கால வினாக்கள்	9
அவையில் வைக்கப்பெற்ற உடுக்குறியிடாத வினாக்கள் —விடைகள்.	1,082

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்:

இக்கால அளவில் 40 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பேரவையில் எழுப்ப அனுமதி கோரப்பெற்றது. சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் கருத்துக்களும் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் ஆகியோரின் விளக்கங்களும் கேட்ட பின்னர் அத்தீர்மானங்களை அவையில் விவாதிக்க அனுமதி மறுக்கப்பெற்றது.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பின் மீது மாண்புமிகு அமைச்சர்களின் அறிக்கைகள்:

இக்கால அளவில், சட்டமன்றப் பேரவையின் 54 (1)-ஆவது விதியின் கீழ் எழுப்பப்பெற்ற, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பின் மீது, மாண்புமிகு அமைச்சர்கள் 72 விவர அறிக்கைகளைப் பேரவையில் அளித்தார்கள்.

உரிமைப் பிரச்சினைகள்:

இக்கால அளவில், பதினான்கு உரிமைப் பிரச்சினைகள் எழுப்பப் பெற்றன. அவற்றில், எட்டு உரிமைப் பிரச்சினைகளை உரிமைக் குழுவின் ஆய்விற்காகவும், அறிக்கைக்காகவும், மாண்புமிகு பேரவைத் தலைவரால் அக்குழுவிற்கு அனுப்பப் பெற்றன.

குழுக்கள் அமைத்தல்:

இக்கால அளவில் அமைக்கப்பெற்ற 1983-84-ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவைக் குழுக்கள் பின்வருமாறு :—

1. அலுவல் ஆய்வுக் குழு.
2. பேரவை விதிகள் குழு.
3. உரிமைக் குழு.

4. மதிப்பீட்டுக் குழு.

5. பொதுக் கணக்குக் குழு.

6. பொது நிறுவனங்கள் குழு.

7. ஒப்படைவு அதிகாரத்தின் கீழ் இயற்றப்பெறும் சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

8. அவைக் குழு.

9. அரசு உறுதிமொழிக் குழு.

பேரவையில் அளிக்கப் பெற்ற அறிக்கைகள் :

இக்கால அளவில் 32 சட்டமன்ற குழுக்களின் அறிக்கைகள் சம்பந்தப்பட்ட குழுக்களின் தலைவர்களால் பேரவையில் அளிக்கப்பெற்றன.

பேரவையில் வைக்கப்பெற்ற ஏடுகள் :

இக்கால அளவில் 627 ஏடுகள் பேரவையில் வைக்கப்பெற்றன. அதன் விவரம் வருமாறு :—

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்	386
(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய, தாள்கள்	241
மொத்தம்	627

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

உறுப்பினர் எண்ணிக்கை :

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் தலைவர் உட்பட 63 உறுப்பினர்கள் இருப்பர். 1983-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் நாள் நிலவரப்படி மேலவையில் 42 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர். 21 இடங்கள் காலியாக இருந்தன. இந்த 42 உறுப்பினர்களில் 17 உறுப்பினர்கள் அனைத்திந்திய அண்ணா

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்; 4 உறுப்பினர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தையும், 3 உறுப்பினர்கள் ஆசிரியர் பட்டதாரிகள் முன்னேற்ற முன்னணியையும், 3 உறுப்பினர்கள் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியையும் சேர்ந்தவர்கள். இந்திய யூனியன் முஸ்லீம் லீக், ஐக்கியக் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் ஆகியவற்றில் ஒவ்வோர் உறுப்பினரும், 9 சுயேச்சை உறுப்பினர்களும், மாண்புமிகு தலைவரும் உள்ளனர்.

கூட்டங்கள் :

இவ்வாண்டில், இரண்டு கூட்டத் தொடர்கள் நடைபெற்றன. சட்டமன்ற மேலவை, 62-ஆம் கூட்டத் தொடரில் 4 நாட்களும், 63-ஆம் கூட்டத் தொடரில் 44 நாட்களும் கூடியது.

ஆளுநர் :

63-ஆம் கூட்டத் தொடரில் தொடக்க நாளான 24-1-1983 அன்று ஆளுநர் அவர்கள் சட்டமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார். நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது 7 நாட்கள் விவாதம் நடைபெற்றது. நன்றி தெரிவிக்கும் தீர்மானம் திருத்தம் ஏதுமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

உறுப்பினர் பதவி விலகல் :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. ப. உ. சண்முகம், எம். எல். சி. அவர்கள் 25—1—1983 முதல் உறுப்பினர் பதவியை விட்டு விலகினார்.

புதிய உறுப்பினர் தேர்வு :

திரு. ப. உ. சண்முகம், எம். எல். சி. பதவி விலகியதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப திரு. வலம்புரி ஜான் அவர்கள் 28—2—1983 முதல் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரங்கல் தீர்மானம் :

பின்வருபவர்களின் மறைவிற்கு இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :

1. திரு. சேக் முகமது அப்துல்லா.
ஜம்மு —காஷ்மீர் மாநில முதலமைச்சர்.

2. சர்தார் உஜ்ஜல் சிங், தமிழ்நாட்டின் முன்னாள் ஆளுநர்.

இரங்கல் குறிப்புகள் :

பின்வருபவர்களின் மறைவிற்கு இரங்கல் குறிப்புகள் தெரிவிக்கப்பட்டன :

1. திரு. இராமகிருஷ்ண ஆச்சாரி, முன்னாள் மேலவை உறுப்பினர்.

2. திரு. சா. கணேசன், முன்னாள் மேலவை உறுப்பினர்.

3. திரு. பிக்கினி வெங்கடரத்தினம், ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முன்னாள் அமைச்சர்.

4. திரு. சி. கேசவ ஆதித்தன், பேரவை உறுப்பினர்.

5. திரு. டி. கே. பகவதி, முன்னாள் மேலவை உறுப்பினர்.

நிதி நிலை அலுவல் :

இவ்வாண்டில், மேலவையில் நிதி நிலை அலுவல் குறித்த பின்வரும் இனங்கள் விவாதிக்கப்பட்டன :—

1. 1982-83-ஆம் ஆண்டு செலவிற்கான முதல் துணை நிதி நிலை அறிக்கை.

2. 1982-83-ஆம் ஆண்டு செலவிற்கான இறுதி துணை நிதி நிலை அறிக்கை.

3. 1983-84-ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட அறிக்கை.

4. தமிழ்நாடு மின்வாரியத்தின் 1982-83-ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கை மற்றும் 1981-82-ஆம் ஆண்டின் துணை நிதி நிலை அறிக்கை.

5. 1974-75-ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான விவர அறிக்கை.

அரசின் சட்டமுன் வடிவுகள் :

அறிக்கையாண்டில், சட்டமன்றப் பேரவையின் நிறைவேற்றப் பட்டு, மேலவையின் ஒப்புதல் அல்லது பரிந்துரைக்காக மேல வைக்கு வரப்பெற்ற 45 சட்டமுன் வடிவுகள் மேலவையில் திருத்தங்கள் அல்லது பரிந்துரைகள் ஏதுமின்றி நிறைவேற்றப் பட்டன.

வினாக்கள் :

அவையில் 353 உடுக்குறியிட்ட வினாக்கள் 1 குறுகிய கால வினா ஆகியவற்றிற்குப் பதிலளிக்கப்பட்டது. 92 உடுக்குறியிடப் படாத வினாக்களுக்கான பதில்கள் அவை முன் வைக்கப்பட்டன.

விதி 42-ன் கீழ் அளிக்கப்பட்ட அறிக்கை :

அறிக்கையாண்டில், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து மேலவை விதிகளின் 42-ஆம் விதியின் கீழ் அமைச்சர்களின் கவனம் ஈர்க்கப்பட்டதன் பேரில் அவர்கள் 63 அறிக்கைகளை அவைக்கு அளித்தனர்.

விதி 82-ன் கீழ் அளிக்கப்பட்ட அறிக்கை :

மேலவை விதிகளில் 82-ஆம் விதியின் கீழ் 3 அறிக்கைகளை அமைச்சர்கள் அளித்தனர்.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் :

அவையில் 9 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எழுப்பப்பட வேண்டுமென கோரப்பட்டன. அனைத்து ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கும் தலைவர் அனுமதியை மறுத்தார்.

சட்டப்படிக்கான அமைப்புகளுக்குத் தேர்தல் :

1. தமிழ் பல்கலைக் கழகப் பேரவைக் குழிவிற்கு மாண்புமிகு புலவர் புலமைப்பித்தன் அவர்கள் 11—9—1982-ஆம் நாளன்று முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2. தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழக ஆளுகைக் குழு விற்கு திரு. ம. சங்கரலிங்கம் அவர்கள் 11—2—1983-ஆம் நாளன்று முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்,

கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம் :

1. 62-ஆவது கூட்டத்தொடர் —இல்லை.

2. 63-ஆவது கூட்டத்தொடர்

அறிக்கையாண்டில் மேலவையில் பின்வரும் கொள்கை விளக்கக் குறிப்புகள் குறித்து விவாதங்கள் நடைபெற்றன :

1. கல்வி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

2. சமுதாய நலவளர்ச்சி —நகராட்சி நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

3. மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

4. உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

5. ஊரகத் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

6. தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

7. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

8. தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

9. பிற்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

அத்தியாயம் 2

வேளாண்மைத் துறை.

அத்தியாயம் 2.

வேளாண்மைத் துறை.

வேளாண்மை.

பருவ நிலைகள் :

1982–83-ல், இம்மாநிலத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் தென்மேற்குப் பருவ மழை, வடகிழக்குப் பருவமழை ஆகிய இரண்டுமே பொய்த்துவிட்டன. தென் மேற்குப் பருவ மழையும், கோடை மழையும் வழக்கத்தைக் காட்டிலும் குறைவாகவே பெய்தது. அதாவது (—) 37 சதவீத அளவு மழை குறைந்தது. தஞ்சாவூர், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு முதலிய வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்ட மாவட்டங்களில் மழையின் அளவு இவ்வாறு பெரிதும் குறைந்தது. மாவட்ட வாரியாகப் பார்க்கையில், 15 மாவட்டங்களில் 12 மாவட்டங்களில் மழை குறைவாகவே பெய்தது. வடகிழக்குப் பருவ மழையும் மிகக் குறைவாகவே பெய்தது. 15 மாவட்டங்களில் 6 மாவட்டங்களில் மழை குறைவாக இருந்தது. ஆறு மாவட்டங்களில் மழையே இல்லை. திருநெல்வேலி, இராமநாதபுரம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் இயல்பான அளவுக்கே மழை பெய்தது. என்றாலும், பரவலாகப் பெய்யாது அங்கும் இங்குமாகப் பெய்தது. இதன் காரணமாக இம்மாநிலத்திலுள்ள நீர்த்தேக்கங்கள் அனைத்திலும் நீர் மட்டம் குறைந்தது. கர்நாடக மாநிலத்திலிருந்து நீர்வரத்து குறைந்ததால் மேட்டூர் நீர்த்தேக்கம் போன்ற இம்மாநிலத்தில் முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைந்தது, ஏனைய நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைந்தபட்ச அளவே இருந்தது. ஏரிகளின் நீர் மட்டமும் குறைந்திருந்தது. ஏரிகள் பலவற்றில் நீரே இல்லை. தென் மேற்குப் பருவ மழை பொய்த்தது; கோடை காலத்தில் மழை பெய்யவில்லை. இதன் காரணமாக கிணறுகள் நீர்மட்டமும் பெருமளவுக்குக் குறைந்தது. இதனால் நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள் முதலானவற்றின் விளைச்சல் பரப்பும் உற்பத்தியளவும் பெரிதும் குறைந்தன. விளைச்சல் பரப்பளவு குறைந்தது மட்டுமன்றி, மேற் சொன்ன பயிர்களின் உற்பத்திக்குத் தேவையான ஈரப்பதம் குறைந்தது; பயிர்களின் வளர்ச்சி ஒவ்வொரு நிலையிலும் பாதிக்கப்பட்டது; இதன் விளைவாக உற்பத்தி இழப்பு மேலும் அதிகரித்தது.

அரசு விதைப் பண்ணைகள் :

தமிழ் நாட்டில் அரசு விதைப் பண்ணைகள் மொத்தம் 44 இருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் அண்ணா பண்ணை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இருங்கூர் பண்ணை, திருநெல்வேலி மாவட்டத்தில் கிள்ளிகுளம் ஆகிய மூன்று பெரும் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

இப் பண்ணைகளின் முக்கிய பணிகள் வருமாறு :

1. நெல், சிறு தானியம், காய்கறி, பயறு, பருத்தி ஆகிய வற்றில் மூல சான்றளிக்கப்பட்ட விதை வகைகளின் தரமான விதைகளை உற்பத்தி செய்வது.

2. அண்ணா பண்ணை, கிள்ளிகுளம் பண்ணை போன்ற தெரிந்தெடுத்த பண்ணைகளில் கலப்பின சிறு தானிய, பயறு விதைகள் உற்பத்திக்கான ஆதார விதைகளை உற்பத்தி செய்வது.

3. பயிர் வளர்ப்பில் நவீன அறிவியல் முறைகளையும், நிருவாக முறைகளையும் விளக்கிக் காட்டுவதில், அண்மையி லுள்ள உழவர் சமுதாயத்திற்கு இது ஓர் முன்மாதிரிப் பண்ணை யாக விளங்குவது. பயிரிடுமுறைத் திட்டம், பாசன வசதிகளை மேம்படுத்துதல், பயிரிடு திறனைப் பெருக்குதல் ஆகியவை குறித்த திட்டங்களை உரிய வகையில் மாற்றியமைத்ததன் மூல மும், 1981–82-ல் 13.138 இலட்சம் ரூபாய் ஆதாயம் கிடைத் தது. (இது தணிக்கையிடப்பட்ட கணக்காகும்.)

இடு பொருள்கள் :

நெல், சிறு தானிய விதைகள் கொள்முதலும் விநியோகமும் :— உயர் விளைச்சலுக்குத் தரமான விதை மிகவும் அத்தியா வசமான இடு பொருளாகும். சான்றளிக்கப்பட்ட விதைகள் மட்டுமே நியாயமான விலையில் உழவர்களுக்களிக்கப்படுவ தென்பது கொள்கையின்பாற்பட்டதாகும்.

விதை உற்பத்தியில் மூன்று நிலைகள் உள்ளன. அவை யாவன,—பயிர் பெருக்க விதைகள், மூல விதைகள், சான்றளிக் கப்பட்ட விதைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்தல் ஆகும். பயிர் பெருக்க விதைகள் ஆராய்ச்சி நிலையத்தில் உற்பத்தி

செய்யப்படுகின்றன. அவை, தெரிந்தெடுத்த அரசு விதைப் பண்ணைகளில் மூல விதைகளாகப் பெருக்கப்படுகின்றன. பின்னர் அவை சான்றளிக்கப்படும் விதைகளாகப் பெருக்கப் படுகின்றன. 1982—83-ல், 11,238 டன் நெல், 131 டன் கேழ் வரகு, 89 டன் சோளம், 546 டன் கலப்பின சிறு தானிய விதைகள் ஆகியவை விநியோகிக்கப்பட்டன.

எருக்களும் இரசாயன உரங்களும் :

(ஏ) இரசாயன உரங்கள் விநியோகம் :— மிகத் தொலைவில் உள்ள பகுதிகள் உட்பட, எல்லா மாவட்டங்களிலும் அமைந்துள்ள 14,783 கூட்டுறவு, தனியார் கடைகள் மூலமாக, இரசாயன உரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. 1982—83-ல் நுண் உரச் சத்துக்களுக்காக வழங்கப்பட்ட இரசாயன உரங்கள் குறித்த விவரங்கள் வருமாறு :—

	(இலட்சம் டன் கணக்கில்)
நைட்ரஜன்	2.69
பாஸ்பேட்	1.01
பொட்டாசியம்	1.01

இரசாயன உரத்தரக்கட்டுப்பாடு :

இவ்வாண்டில், மேற்கொண்ட தரக்கட்டுப்பணி—மேம்பாட்டுப் பணிநடவடிக்கைகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தரக்கட்டுப்பாடு :

1.	எரு கலவை நிறுவனங்களை ஆய்வு செய்தல்	1,464
2.	எரு கலவை நிறுவனங்களை திடீரென ஆய்வு செய்தல்	343
3.	எரு கலவை நிறுவனங்களிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை ..	1,291
4.	ஆய்வு செய்யப்பட்ட வணிகர் கடைகளின் எண்ணிக்கை	20,021

5. வணிகர் கடைகளை திடீரென ஆய்வு செய்தல்	2,499
6. வணிகர் கடைகளிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை	6,812
7. வரையறுத்த தரத்திற்கும் குறைந்த தர முள்ள மாதிரிகள்	671
8. தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	8
9. பதிவுச் சான்றிதழை ரத்து செய்தல் ..	53
10. பதிவுச் சான்றிதழ் செல்திறனைத் தற்காலிக மாக நிறுத்தி வைத்தல்	257
11. விடுவிக்கப்பட்ட எச்சரிக்கைகள்	874

இரசாயன உர உற்பத்தி மேம்பாட்டுப் பணிகள் :

1. இரசாயன உர உபயோக பிரச்சாரங்கள் ..	806
2. களப்பணி நடைபெற்ற நாட்கள்	339
3. இரசாயன உர உபயோகம் குறித்த கைப் பிரதிகள்	588
4. இரசாயன உரப் பயன்குறித்த விளம்பர சுவரொட்டிகள்	100
5. அகில இந்திய வானொலி நிலையத்தில் வாசிக்கப்படும் செய்தி அறிக்கைகள் ..	1,119

மலக் கலவை எரு உற்பத்தித் திட்டம் :

கலவை எரு தயாரிக்க மனித மலத்தைப் பயன்படுத்துவது நல்ல எருவாகப் பயன்படுத்துவதோடு மட்டுமன்றி, பெரிய ஊராட்சிகளின் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் உதவியாக இருக்கிறது. இது பயிர் விளைச்சலுக்கு மிகவும் பய னுள்ள வகையில் உபயோகப்படுத்தப்படுகிறது. அது ஊராட்சி களின் வருவாய் வாயிலாகவும் ஆதாரங்களைப் பெருக்கவும் பயன் படுகிறது. 1982—83-ல் 3.10 இலட்சம் மெட்ரிக் டன் மலக் கலவை உரம் தயாரிக்கப்பட்டு வேளாண்மைப் பணிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

உள்ளூர் எரு ஆதாரங்கள் மேம்பாடு :

1982—83-ல் 87.77 இலட்சம் மெட்ரிக் டன் எரு உற்பத்தி செய்து பயன்படுத்தப்பட்டது.

பயிர்ப் பாதுகாப்பு :

பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இத்துறை கீழ்க்காணும் திட்டப் பணிகளைச் செயற்படுத்தி வருகிறது :—

(1) பயிர்ப்—பாதுகாப்பு இரசாயனப் பொருள்களை வாங்கி விநியோகித்தல்.

(2) பயிர் நோய் பரவியுள்ள பகுதிகளில் நிலப் பரப்பில் பெருமளவில் மருந்து தூவுவதன் மூலம், நெற் பயிரின் தண்டுப் பகுதியைத் தாக்கும் தண்டுப் பூச்சியைக் கட்டுப்படுத்தும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்.

(3) நெற்பயிரைத் தாக்கும் புகையானைக் (பழுப்புநிற வெட்டுக் கிளியைக்) கட்டுப்படுத்தும் மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டம்.

(4) உழவர்களுக்கு வாடகைக்கு விடுவதற்காகப் பயிர்ப் பாதுகாப்பு சாதனங்கள் தொகுப்பை வலுப்படுத்தல்.

(5) பயிர்ப் பாதுகாப்பு சாதனங்கள் பராமரிப்பும், பழுது பார்ப்பும்.

(6) பயிர்ப் பூச்சிக்கொல்லி மருந்துகள் தரக் கட்டுப்பாடு.

(7) பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் குறித்த கண்காணிப்பு.

(8) நிலங்களைச் சுற்றிப்பார்த்து நிலைமையை அறிதல்.

(9) உழவர்கள் நிலத்தில் நெற் பயிரில் பரவும் பயிர்ப் பூச்சிகொல்லி அகற்று ஒருங்கிணைந்த நிர்வாகத் தொழில் நுட்பம்.

(10) ஆசிரியர் பயிற்சி.

பயிர்ப் பாதுகாப்பு இரசாயன மருந்துகளை வாங்கி வழங்குதல்:

பயிர்ப் பாதுகாப்பு இரசாயன மருந்துகளை வாங்கிய வகையில் 1982–83-ல், 388.28 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. இவ் வாண்டில், 5,287 மெட்ரிக் டன் இரசாயனத் தூள் படிவங்களும், 98,721 லிட்டர் இரசாயன நீர்மப் படிவங்களும் விநியோகிக்கப் பட்டன. அவசியமான பயிர்ப்பாதுகாப்பு இரசாயன மருந்துகள் 774 வேளாண்மைக் கிடங்குகள் மூலம் இருப்பு வைத்து விநி யோகிக்கப்படுகின்றன ; அத்துடன், 8,870 தனியார் விற்பனைக் கடைகள் உழவர்களின் தேவையை நிறைவு செய்கின்றன.

பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பல்வகைப் பயிர்களையும் நடைமுறைகளையும் கொண்டு வருதல் :

இவ்வாண்டில், பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் எய்திய சாதனைகள் குறித்த விவரங்கள் வருமாறு :—

	இலட்சம் எக்டேர் கணக்கில் இலக்கு குறித்த நிலத்தின் பரப்பளவு.	இலட்சம் எக்டேர் கணக்கில் சாதனை பெற்ற நிலத்தின் பரப்பளவு.
இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்ட நிலத்தின் பரப்பளவு :		
(ஏ) உணவுப் பயிர்கள் ..	47.900	41.839
(பி) உணவு அல்லாத பயிர்கள்	24.419	24.973
(சி) விதை பக்குவப்படுத்தல் ..	20.329	17.865
(டி) களை எடுப்பு	0.390	0.368
(இ) பயிர்களைக் கொறிக்கும் உயிரினங்களைக் கட்டுப்படுத்தல்	4.400	5.079

உயர் விளைச்சல் தரும் பயிர் வகைகள் திட்டம் :

இத்திட்டம், உதகமண்டலம் நீங்கலாக, அனைத்து மாவட்டங்களிலும் 1966—67 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. நெல், சிறு தானியங்கள் விளையும் பகுதி முழுவதையும் உயர் விளைச்சல் தரும் பயிர் வகைகள் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம், பயிர் உற்பத்தியைப் பெருக்க இயலும். பயிர் வாரியான சாதனை விவரங்கள் வருமாறு :—

பயிரின் பெயர்.	சாதனைகள் (இலட்சம் எக்டேர் கணக்கில்)
(1)	(2)
1, நெல்:	
(1) I. R. ரகங்கள்	13.135
2) உயர் விளைச்சல் தரும் ஏனைய ரகங்கள்..	2.650
	15.785

பயிரின் பெயர்	சாதனைகள் (இலட்சம் எக்டேர் கணக்கில்)
(1)	(2)
2, சிறு தானியங்கள் :	
(1) சோளம்	2.320
(2) கம்பு	2.230
(3) கேழ்வரகு	1.167
(4) மக்காச் சோளம்	0.269
	5.986

பயறு வகைகள் உற்பத்தி மேம்பாடு :

பயறு வகைகள் விதை நிலையம்—விதை பெருக்கம் குறித்த ஒருங்கிணைந்த திட்டம்.

7.727 இலட்சம் எக்டேர் பரப்பில் பயறு வகைகள் பயிரிடப் பட்டன. 1982–83-ல் 13.83 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பயறு வகைகளைப் பயிரிடுவது என்று திட்டமிடப்பட்டிருக்க, இக்கால அளவில் 4.80 இலட்சம் டன் பயறு வகைகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், 2.60 இலட்சம் டன் பயறு வகைகள்தான் உற்பத்தி செய்யப்பட்டன. வறட்சி யின் காரணமாக உற்பத்திப் பரப்பளவு குறைந்தது. 1982–83-ல் 881.91 எக்டேர் பரப்பளவில் பயறு வகை மூலவிதைப் பண்ணை களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. 130.083 டன் மூலவிதைகள் கொள்முதல் செய்யப்பட்டன. 9819.35 எக்டேரில் சான்றளிக் கப்பட்ட, சான்றளிக்கப்படாத விதைப் பண்ணைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. சான்றளிக்கப்பட்ட சான்றளிக்கப்படாத விதைகள் 1,854.632 டன் கொள்முதல் செய்யப்பட்டது. 2,166.149 மெட்ரிக் டன் உயர் தர விதைகளும், 1,86.489 கிழங்கு வகை விதைப் பொட்டலங்களும் விநியோகிக்கப்பட்டன.

புன்செய் நில வேளாண்மை ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் கோவில்பட்டி.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டியில் புன் செய் நில வேளாண்மை ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் செயலில் உள்ளது. புன்செய்ப் பயிரின் ஏக்கர் விளைச்சல் அளவைப் பெருக்குவதும், கலப்பினப் பயிர்ப் பண்ணைகள் ஆகியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, புன்செய் நில உழவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1982-83-ல் இத்திட்டத்தின் கீழ் எய்திய முன்னேற்றம் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1. இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட நிலத்தின் பரப்பளவு.	807 எக்டேர்
2. விதை விநியோகம்	75.47 குவிண்டால்
3. நிரந்தரப் பணிகள்	8
4. அடிப்படைத் தேவைகள் :	
(எ) செய்முறை விளக்கம் (எண்ணிக்கை)	100
(பி) உழவர்கள் பயிற்சி (எண்ணிக்கை)	16
(சி) கல்விப் பயணம் (எண்ணிக்கை)	2
(டி) களப்பணி நாட்கள் (எண்ணிக்கை)	10
5. பண்ணை இயந்திரம் :	
(எ) வேளாண்மைக் கருவிகள் விநியோகம் (எண்ணிக்கை)	695
(பி) பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் (எண்ணிக்கை)	160
6. கால்நடை வளர்ப்பு :	
(எ) கறவை மாடுகள் வழங்குதல் (எண்ணிக்கை)	381
(பி) செம்மறியாடு வளர்ப்புப் பிரிவுகள் வழங்குதல் (எண்ணிக்கை)	32

உழவர் பயிற்சி நிலையங்கள் ;

தேவையான இடுபொருள்களைக் கொண்டு ஏக்கர் விளைச்சல் அளவைப் பெருக்குவதற்கு, வேளாண்மை உற்பத்தி குறித்த புதிய தொழில் நுட்ப உத்தியை உழவர் சமுதாயம் பயன்படுத்தக் கற்றுக் கொடுப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்தை எய்த, பயிர் உற்பத்தி குறித்த தொழில் நுட்ப உத்தி, உயர் விளைச்சல் தரும் நவீன விதைகள், தாவர வகைகள் அதிகரித்த உற்பத்திக்குத் தேவையான இடுபொருட்கள் அனைத்தையும் செவ்விய முறையில் பயன்படுத்துவது குறித்த விவரங்கள் ஆகியவை உழவர்களுக்குத் தொடர்ந்தாற்போல் வழங்கப்பட்டு வருகின்றன

இத்திட்டம், (1) தொழில்முறை உழவர்கள் (2) பண்ணைப் பெண்கள் (3) இளம் உழவர்கள் ஆகிய மூன்று வகையான உழவர்களுக்குப் பொருந்துகிறது. இராணிப்பேட்டை, திண்டிவனம், ஆடுதுறை, லால்குடி, திருநெல்வேலி, காஞ்சீபுரம், குடுமியான்மலை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் 14 இருக்கின்றன. மதுரை, கோயம்புத்தூர், வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பொறுப்பில் உள்ளன. உதகையிலுள்ள நிலையம், தருமபுரி, தோட்டக் கலை, மலைத் தோட்டப் பயிர்கள் பாதுகாப்பு இயக்குநர் பொறுப்பில் உள்ளது.

உழவுப் பணிகளில் குறிப்பாக, உயர்விளைச்சல் தரும் பயிர்வகைகள் விஷயத்தில் நவீன தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்துவதில் உழவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென்றே உழவர் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1982—83-ல் எய்திய சாதனை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

	(எண்ணிக்கை கணக்கில்)
1. நிறுவனப் பயிற்சி ..	249
2. மகளிர்க்கு செய்முறைப் பயிற்சி	126
3. அமைப்பாளர்களுக்கு நிறுவனப் பயிற்சி ..	96
4. அந்தந்த இடங்களுக்குச் சென்று பயிற்சி அளித்தல்.	1362
5. உழவுத் தொழில்சார்ந்த கல்வித் திட்டம் உள்ளிட்ட சிறப்புப் பயிற்சித் திட்டம் முதலியன.	277

கால்நடை வளர்ப்பு.

கால்நடை வளர்ப்பு :

இம்மாநிலத்தில் மாவட்ட கால்நடை பண்ணைகள் ஏழும், அயல் இன கால்நடை வளர்ப்பு பண்ணை ஒன்றும், அரசுப் பால் பண்ணை ஒன்றும், கால்நடை பண்ணையும் தொடர்ந்து செயற்பட்டு வந்துள்ளன. 1982—83-ஆம் ஆண்டில் இப் பண்ணைகளின் சாதனை வருமாறு :—

1.	1—4—1982 நாள் நிலவரப்படி கால்நடைகளின் எண்ணிக்கை.	4,722
2.	ஆண்டு இறுதியில் (அதாவது 31—3—1983-ஆம் நாளன்று) கால்நடையின் எண்ணிக்கை.	4,707
3.	பிறந்த கன்றுகள்	1,229
4.	வாங்கிய கால்நடைகள்	602
5.	விற்பனையாகிய காளைகள் ..	419
6.	துறை நிறுவனங்களுக்கு மாற்றப்பட்ட காளைகள்.	457
7.	உற்பத்தி செய்யப்பட்ட பாலின் மொத்த அளவு (லிட்டரில்).	11,71,590.04 லிட்டர்.
8.	மக்களுக்கு விற்பனை செய்யப்பட்ட பால்.	11,19,421.16 லிட்டர்கள்,
9.	பால் விற்பனையில் மூலம் கிடைத்த தொகை.	24,01,915.08 ரூபாய்.
10.	எரு விற்பனை மூலம் கிடைத்த தொகை	84,601.78

வம்சாவளி சோதனையிடும் திட்டம் :

1982—83-ஆம் ஆண்டில் வம்சாவளி சோதனைத் திட்டம் ஒசூரிலும் ஒரத்த நாட்டிலும் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றன. இத் திட்டத்தின் படி இருந்த கால்நடைகளின் விவரங்கள் பின்வருமாறு :—

வம்சாவளி சோதனைத் திட்டம் :

		ஒசூர் (ரெட் சிந்தி).
1.	ஆண்டு தொடக்கத்திலிருந்த கால்நடைகளின் எண்ணிக்கை.	251
2.	ஆண்டு இறுதியில் கால்நடைகளின் எண்ணிக்கை.	293
3.	கன்றுகளின் எண்ணிக்கை—	
	(1) பசுங் கன்றுகள்	47
	(2) எருது கன்றுகள்	46
4.	உற்பத்தி செய்யப்பட்ட பாலின் அளவு	1,09,479.00 லிட்டர்கள்.
5.	**பால் விற்பனையில் மூலம் கிடைத்த தொகை.**	**2,07,300.00 ரூபாய்.**

வம்சாவளி சோதனைத் திட்டம் :

		(முர்ரா எருமை)
1.	ஆண்டு தொடக்கத்திலிருந்த கால்நடைகளின் எண்ணிக்கை.	150
2.	ஆண்டு இறுதியில் கால்நடைகளின் எண்ணிக்கை.	192
3.	பிறந்த கன்றுகளின் எண்ணிக்கை	..
4.	உற்பத்தி செய்யப்பட்ட பாலின் அளவு	2,23 748.5 லிட்டர்கள்

ஆநிரைக் காப்பகம் :

இந்த ஆண்டு இரண்டு ஆநிரைக் காப்பகங்கள் அரசிடமிருந்து நிதியுதவி பெறுகின்றன. இப்பிரிவுகளின் சாதனை விவரம் வருமாறு :—

1.	(1—4—1982) அன்றுள்ளபடி இக்காப்பகங்களிலிருந்த கால்நடைகளின் எண்ணிக்கை.	72
2.	(31—3—1983) அன்றுள்ள படி இக்காப்பகங்களிலிருந்த கால்நடைகளின் எண்ணிக்கை.	80
3.	உற்பத்தி செய்யப்பட்ட பாலின் மொத்த அளவு.	47 072.85 லிட்டர்கள்

இடேரி வளர்ப்புத் திட்டம் :

1982—83-ஆம் ஆண்டில் கிடேரி வளர்ப்புத் திட்டம் புதுக்கோட்டை, உதகமண்டலம் மாவட்ட கால்நடைப்பண்ணைகளில் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் சாதனை வருமாறு :—

1.	(1—4—1982) அன்றுள்ள படி கிடேரிகளின் எண்ணிக்கை.	389
2.	வாங்கிய கிடேரிகளின் எண்ணிக்கை	76
3.	பிறந்த கன்றுகளின் எண்ணிக்கை ..	62
4.	1—4—1983-ஆம் நாள் வரையிலான கன்றுகளின் எண்ணிக்கை.	395

1982–83-ஆம் ஆண்டு தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டங்கள் 9 செயற்பட்டு வந்தன. இத்துடன் 500 கிளை நிலையங்களும் இருந்தன. இத்திட்டங்களின் சாதனை வருமாறு :—

1.	செயற்கை முறையில் கருவுற்ற பசுக்களின் எண்ணிக்கை.	3,97,259
2.	பிறந்த கன்றுகளின் எண்ணிக்கை ..	56,278
3.	சிகிச்சை செய்யப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	7,44,280
4.	காயடிக்கப்பட்ட காளைகளின் எண்ணிக்கை,	65,982
5.	தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	8,81,614
6.	பசுக்கள்-கன்று அணிகளின் எண்ணிக்கை ..	9

மையக் கிராம வளர்ச்சி வட்டாரங்கள் :

1982–83-ஆம் ஆண்டில் 620 துணை நிலையங்களுடன் 62 மையக் கிராம வளர்ச்சி வட்டாரங்கள் செயற்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் சாதனை வருமாறு :—

1.	செயற்கை முறையில் கருவுற்ற பசுக்களின் எண்ணிக்கை.	3,36,753
2.	கன்றுகளின் எண்ணிக்கை	58,308
3.	சிகிச்சை பெற்ற கால்நடைகளின் எண்ணிக்கை.	5,14,732
4.	காயடிக்கப்பட்ட காளைகளின் எண்ணிக்கை.	56,619
5.	தடுப்பூசி போடப்பட்ட பசுக்களின் எண்ணிக்கை.	8,71,805

செம்மறி ஆடு வளர்ப்பு :

1982–83-ஆம் ஆண்டில் 2 செம்மறியாட்டுப் பண்ணைகளும் 4 செம்மறியாட்டுப் பிரிவுகளும் தொடர்ந்து செயற்பட்டன. இவற்றின் சாதனை பின்வருமாறு :—

1.	1–4–1982-ஆம் நாளன்றிருந்தவாறு செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை.	6,345
2.	1–4–1983-ஆம் நாளன்றிருந்தவாறு செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை.	6,353
3.	பிறந்த ஆட்டுக்குட்டிகளின் எண்ணிக்கை	2,578
4.	இனப்பெருக்கத்திற்காக விற்பனை செய்யப்பட்ட செம்மறியாடுகள்.	1,090
5.	விற்பனை மூலம் கிடைத்த தொகை	2,15,438 ரூபாய்.

குடல் புழு நீக்கம் மூலம் ஆட்டு இறைச்சி உற்பத்தியை பெருக்குதல் :

1982—83-ஆம் ஆண்டில் ரூ. 38.28 இலட்சம் செலவில், ஆட்டிறைச்சி உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் திருநெல்வேலி, வட ஆர்க்காடு, தருமபுரி, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. இதன் பலனாக ஆட்டிறைச்சி உற்பத்தி அதிகரித்து மாநிலத்தில் கூடுதல் வருவாய் ஏற்பட்டது.

கோழி வளர்ப்பு :

1982—83-ஆம் ஆண்டில் குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் இரண்டும் கோழிப்பண்ணை விரிவாக்க நிலையங்கள் 29-ம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றன. இந்நிலையங்களின் சாதனை பின்வருமாறு :—

1.	1–4–1982-ஆம் நாளன்றிருந்தவாறு கோழிகளின் எண்ணிக்கை.	75,183
2.	1–4–1983-ஆம் நாளன்றிருந்தவாறு கோழிகளின் எண்ணிக்கை.	50,803
3.	பொரிக்கப்பட்ட கோழிக்குஞ்சுகளின் எண்ணிக்கை.	1,03,874
4.	இனப் பெருக்கத்திற்காக விற்கப்பட்ட கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கை.	48,310
5.	உணவிற்காக விற்கப்பட்ட கோழிகளின் எண்ணிக்கை.	34,829
6.	சேகரிக்கப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை	29,84,810
7.	இனப் பெருக்கத்திற்காக விற்கப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை.	45,727
8.	உணவிற்காக விற்கப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை.	24,46,573

பன்றி வளர்ப்பு :

1982—83-ஆம் ஆண்டில் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் 6 செயற்பட்டு வந்தன. இப்பிரிவுகளின் செயல்பாடு குறித்த சுருக்கம் வருமாறு :—

1.	1–4–1982-ஆம் நாளன்றிருந்தவாறு பன்றிகளின் எண்ணிக்கை.	528
2.	1–4–1983-ஆம் நாளன்றிருந்தவாறு பன்றிகளின் எண்ணிக்கை.	587
3.	ஈன்ற பன்றிக் குட்டிகளின் எண்ணிக்கை	920

4. இனப்பெருக்கத்திற்காக விடப்பட்ட பன்றிகளின் எண்ணிக்கை. 565

5. உணவிற்காக விற்கப்பட்ட பன்றிகளின் எண்ணிக்கை. 78

6. விற்பனை மூலம் பெற்ற தொகை ரூபாய் 40,244

திவன மேம்பாடு :

1982—83-ஆம் ஆண்டில் தீவன விதை உற்பத்திப் பிரிவுகள் 6 செயல்பட்டு வந்தன. தீவன உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாவட்டக் கால்நடை வளர்ப்புப் பண்ணைகளுக்கு கூடுதல் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இப்பிரிவுகளின் செயல்பாடு குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது :—

1. புல் வளர்க்கப்பட்ட மொத்தப் பரப்பளவு. 4,541.77 ஏக்கர்.

2. உற்பத்தி செய்யப்பட்ட தீவனத்தின் மொத்த அளவு. 1,51,80,497 கிலோ கிராம்.

3. விற்பனை செய்யப்பட்ட தீவனத்தின் மொத்த அளவு. 15,58,481.5 கிலோ கிராம்,

4. வழங்கப்பட்ட தீவன நாற்றுகள் .. 1,05,12,46,656

5. தீவனத்தை விற்பனை செய்த வகையில் கிடைத்த தொகை. 8,32,841.02 ரூபாய்

கால்நடை மருத்துவப் பணிகள் :

1982—83-ஆம் ஆண்டில், 18 தனி மருத்துவச் சிகிச்சை நிலையங்களும், 52 கால்நடை மருத்துவமனைகளும், 3 கால்நடை மருத்துவமனை-மையக் கிராம நிலையங்களும், 577 கால்நடை மருந்தகங்களும், 72 கால்நடை மருத்துவமனை-மையக்கிராம நிலையங்களும் 2301 துணை நிலையங்களும், 8 கால்நடை நோய் ஆய்வுப் பிரிவுகளும், 46 நடமாடும் மருத்துவப் பிரிவுகளும், கால்நடைகளுக்கு மருத்துவ வசதியளிக்கும்

பணியில் ஈடுபட்டன. இந்த மருத்துவ நிலையங்கள் ஆற்றிய பணிகளின் விவரம் வருமாறு :—

1.	சிகிச்சை அளிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	82,63,146
2.	காயடிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	4,31,259
3.	நோய்த்தடுப்பு ஊசி போடப்பட்ட கால் நடைகளின் எண்ணிக்கை.	73,48,798
4.	செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	8,94,486
5.	ஈன்ற கன்றுகள்	1,90,336

கால்நடை நோய்த் தடுப்பு மருந்துப் பொருள்கள் :

இம்மாநிலத்திலும் அண்டை மாநிலங்களிலும் உள்ள கால் நடை மருத்துவ நிலையங்களின் பயனுக்கான தடுப்பூசி மருந்து களையும், நிணநீரையும் இராணிப்பேட்டையிலுள்ள கால் நடை நோய்த்தடுப்பு மருந்துபொருள் தயாரிப்பு நிறுவனம் தொடர்ந்து தயாரித்து வருகிறது. இந்நிறுவனத்தில் 31 வகையான உயிரியல் உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கப் பட்டன. தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட உயிரியல் உற்பத்திப் பொருள்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டி ருக்கின்றன. அவையாவன: -

உற்பத்திப் பொருளின் பெயர்.	உற்பத்தி செய் யப்பட்ட அளவு.	விற்பனை செய்யப்பட்ட அளவு
அம்மைப்பால்	3,23,90,810 டோஸ்	1,17,57,115 டோஸ்
உயிர்க்காப்புப் பொருள்	17,375 மில்லி.	7,545 மில்லி.
கரைசல்	11,790 லிட்டர்.	75 லிட்டர்

கோமாரி நோய் ஒழிப்புத் திட்டம் :

இம்மாநிலத்தில் கோமாரி நோயை ஒழிப்பதில் 17 மாவட்டக் குழுக்களும் 10 நோய்க் கண்காணிப்புப் பிரிவுகளும், 16 சோதனை

சாவடிகளும் ஈடுபட்டன. இத்திட்டத்தின் சாதனை வருமாறு: –

1. கோமாரி நோய்த் தடுப்புப் பணியாளர்களால் நோய்த்தடுப்பு ஊசி போடப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	69,99,957
2. ஏனைய துறைப்பணியாளர்களால் நோய்த்தடுப்பு ஊசி போடப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	9,43,548
3. எத்தனை முறை சிகிச்சை அளிக்கப்பட்டதென்பது.	90
4 நோயால் தாக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	890
5 இறந்த கால்நடைகளின் எண்ணிக்கை.	485

தனித் திட்டங்கள் :

கால்நடை வளர்ப்பு சிறப்புத் திட்டத்தின் கீழ் 1982–83-ம் ஆண்டில் 1,454 செம்மறியாட்டுப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 22·85 இலட்சம் நிதி உதவியுடன் கன்று வளர்ப்புத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1982–83ஆம் ஆண்டு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 415 செம்மறியாட்டு மந்தைகளும், 40பன்றி வளர்ப்புப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டன. 1982–83ஆம் ஆண்டு பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வெவ்வேறு கால்நடை வளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அதாவது, கால்நடைகளை வழங்குதல், உறைவிந்து தொழில் நுட்பவியல் அறிமுகப்படுத்துதல் போன்றவற்றிற்கு ரூ. 24·22 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. 1982–83 ஆம் ஆண்டு வறட்சிப் பாங்கானப் பகுதித் திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்பு வெவ்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ரூ. 45·50 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

உறை விந்து தொழில் நுட்பவியல் :

பால்பெருக்கத் திட்டம் செயல்படாத பகுதிகளில் வெளிநாட்டுக் கால்நடைகளுடன் உள்நாட்டுக் கால்நடைகளைச் சேர்த்து கலப்பினம் செய்வதற்கும், உறைவிந்து தொழில் நுட்ப

வியலுக்குப் பயன்படும் எருதுகளின் எண்ணிக்கையைப் பெருக்கு வதற்கும் மொத்தம் ரூ.117.31 இலட்சம் செலவில் மத்திய அரசின் நிதி உதவியுடன் மற்றோர் உறைவிந்து சேமிப்புத் திட்டத்திற்கு தற்போது அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் திட்டத்தின் மூலம் சுமார் 400 கால்நடை வளர்ப்பு நிலையங் களில் உறைவிந்து சேமிப்பு தொழில் நுட்பவியல் செயலுக்குக் கொண்டுவரப்படும்.

வரவு-செலவு:

1982-83 ஆம் ஆண்டு மொத்த வரவு-செலவுத் தொகை குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	(ரூபாய் ஆயிரத்தில்)
வரவு	11,114
செலவு	1,60,279

பால்வள நிறுவனம்.

மாநில பால்வள நிறுவனம் 1958 ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்டது. 1963 ஆம் ஆண்டு மாதவரத்தில் முதல் பால பண்ணை நவீன முறையில் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டு மதுரையில் பால்பண்ணை ஒன்று அமைக்கப் பட்டது. கிராமப் பகுதிகளில் கிடைக்கும் உபரிப் பாலைக் கொள்முதல் செய்வதற்கும் சென்னை, மதுரை ஆகிய ஊர்களிலுள்ள முதன்மைப் பால் பண்ணைகளுக்கு அனுப்புவதற்கு முன்னர் இடைப்பட்ட நிலையில் அவற்றைப் பதப்படுத்துவதற்கும் வசதி செய்து கொடுக்க பல குளிர்ப்பதன நிலையங்கள் அமைக்கப்பட்டன. பால்பெருக்குத் திட்டம் 1-ன் கீழ் நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர் பாலைக் கையாளும் திறன் கொண்ட உற்பத்தி சமப்படுத்தும் பால்பண்ணை ஒன்று ஈரோட்டில் நிறுவப்பட்டது. இது ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங் களிடமிருந்து சேகரிக்கப்படும் பாலைப் பெற்று விநியோகித்து வருகிறது. ஈரோடு நகரத்திற்கான பால் தேவை யினைப் பூர்த்தி செய்த பின்னர் உபரியாக உள்ள பாலானது

சென்னை பால் பண்ணைக்கு அதற்கு எவ்வளவு தேவையோ அதனை அனுப்பி வைக்கிறது. அதற்குப் பின்னரும் மீதமாகும் பாலானது வெண்ணெய் ஆடை நீக்கிய பால் மாவு போன்ற பால் உற்பத்தி பொருட்களாக மாற்றப்படுகிறது. சேலத்தில் இதைப் போன்ற உற்பத்தி சமப்படுத்தும் பால்பண்ணை ஒன்றும் கிருஷ்ணகிரியில் 10 டன் திறன் கொண்ட பால் மாவு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும் கட்டப்பட்டு விரைவில் தொடங்கி வைக்கப்பட உள்ளன. இத்துறை மேற்கொண்டு வந்த பால் கொள்முதல், பால் பதனிடுதல், பால், பால் உற்பத்திப்பொருட்கள் ஆகியவற்றின் விற்பனை ஆகிய வணிக நடவடிக்கைகள் 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு பால்வள நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டன, இந்நிறுவனமானது 1981 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமாக மாற்றப்பட்டது. இம்மாநிலம் முழுவதிலும் கிராம அளவில் பால் உற்பத்தியாளர் ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களையும் மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களையும் ஏற்படுத்துவதே தற்போது இத்துறையின் முக்கிய பொறுப்பாகும்.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துதல், பதிவு செய்தல், மேற்பார்வையிடுதல், கட்டுபாட்டின் கீழ் வைத்திருத்தல் ஆகியவையே பால்வளத் துறையின் முக்கிய நடவடிக்கைகளாகும். தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் பால் பெருக்குத் திட்டம் 1-ன் கீழ் கொண்டுவரப்படவில்லையாதலால் இம்மாவட்டங்களின் பால் வள நடவடிக்கைகளையும் இத்துறை கவனித்து வருகிறது. பால்பெருக்குத் திட்டம் 1-ன் கீழ்வரும் மாவட்டங்களான செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் தருமபுரி, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி, மதுரை ஆகியவற்றின் வளர்ச்சி நடவடிக்கைகளை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் மூலம் கவனித்து வருகிறது, பால்பெருக்குத் திட்டம் 1 31—3—1981 ஆம் நாளன்று முடிவடைந்தது. பால்பெருக்குத் திட்டம் 1-ன் தொடர்ச்சியாக பால்பெருக்கு திட்டம்-11-சுமார் 4,287 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் தொடங்கப்பட்டது.

STATE DEPARTMENT OF ARCH
LIBRARY

தமிழ்நாட்டிலுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவகம்

கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுகளை மட்டுமே ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. கிராம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் ''ஆனந்த் முறையில்', (அமுல் முறையில்) அமைக்கப்பட்டுள்ளன. ''ஆனந்த்'' முறை சங்கங்களின் அனுகூலங்கள் வருமாறு:—

1. மரபு வழி அமைக்கப்பட்ட சங்கங்களில் கொள்ளளவின் அடிப்படையில் பாலுக்குப் பணம் வழங்கப்படுவது போலல்லாது, சங்கங்கள் அளவில் அந்தந்த இடங்களில் சோதனை செய்யப்படுவதன் அடிப்படையில் பாலில் அடங்கியுள்ள கொழுப்புப் பொருளுக்கு ஏற்ப விலை நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

2. சங்கங்கள் கடன் பெறுவதையே நோக்கமாகக் கொண்டு அமைக்கப்படவில்லை.

3. பால் உற்பத்தியாளர்களுக்கு நலன் பயக்கும் அடிப்படையிலேயே இச்சங்கங்கள் அமைக்கப்படுகின்றன.

4. பால் உற்பத்தியினைப் பெருக்குவதற்காக, தொழில் நுட்ப இடு பொருள்களான கால்நடை மருத்துவ வசதி, செயற்கை முறை கருத்தரிக்கச் செய்வதற்குரிய வசதி, சரிவிகித கால்நடைத் தீவனம் முதலியவை உறுப்பினர்களுக்கு அவர்கள் இல்லங்களிலேயே அளிக்கப்படுகின்றன. செயற்கை முறை கருத்தரிக்கும் பணியில் இத்தகைய சங்கப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

5. கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் தொடக்கச் சங்கம் மாவட்ட அளவில் இத்தகைய பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் ஒன்றியம் மாநில அளவில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் இணையம் என மூன்றடுக்கு அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பால், பால் உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்யும் பொறுப்பினை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மேற்கொண்டுள்ளது.

பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படாத மாவட்டங்களில் பால் கொள்முதல் 7 குழுக்கள் 1982–83 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்பட்டு வந்தன. இக்குழுக்களுக்கு 1982–83 ஆம் ஆண்டில் 7.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது

பால் கொள்முதல் செய்யும் குழுக்களின் பணிகள்:

கரூர் அருப்புக்கோட்டை, கோவில்பட்டி, தேவக்கோட்டை தஞ்சாவூர், புதுக்கோட்டை, நாகர் கோவில் ஆகிய ஊர்களைத் தலைமையிடமாகக் கொண்டு தற்போது பால் கொள்முதல் 7 குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. 1981–82 ஆம் ஆண்டில் 154 சங்கங்கள் அமைக்கப்பட்டன. 1982–83 ஆம் ஆண்டில் இந்தப் பால் உற்பத்தியாளர்கள் 7 குழுக்கள் 157 சங்கங்களைப் புதியதாக அமைத்தன. இதனையும் சேர்த்து இக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து மொத்தம் 582 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் நாளொன்றுக்கு 20,830 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டதற்கு மாறாக இச்சங்கங்கள் இந்த ஆண்டில் 33,800 லிட்டர் பாலை உற்பத்தி செயதுள்ளன. 1982–83 ஆம் ஆண்டில் 157 சங்கங்கள் புதிதாக அமைக்கப்பட்டு பால் உற்பத்தியில் 62 சதவீதம் அதிகரித்துள்ளது.

கால்நடை மருத்துவ நடமாடும் பிரிவுகள்.

திட்டப் பணிகள் அல்லாதவற்றின் கீழ் 4 திட்டப்பணிகளின் கீழ் 4 என மொத்தம் கால்நடை மருத்துவ 8 நடமாடும் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இக்கால்நடை மருத்துவப் பிரிவுகளின் சாதனைகள் பற்றிய விவரம் வருமாறு:

மருத்துவப் பிரிவின் பெயர். (1)	ஒரு திங்களில் சிகிச்சை அளிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை. (2)	ஒரு திங்களில் செய்யப்பட்ட செயற்கை முறை கருத்தரிப்பு. (3)
(i) திட்டப் பணிகள்—		
1. கரூர் ..	233	16
2. திருவாரூர்	206	3.
3. புதுக்கோட்டை	355	
4. தேவக்கோட்டை	333	

மருத்துவப் பிரிவின் பெயர்.	ஒரு திங்களில் சிகிச்சை அளிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை.	ஒரு திங்களில் செய்யப்பட்ட செயற்கை முறை கருத்தரிப்பு.
(1)	(2)	(3)
(ii) திட்டப் பணிகள் அல்லாதவை:—		
5. கன்னியாகுமரி	465	62
6. திருச்சி (பெரம்பலூர்)	529	53
7. தஞ்சாவூர்	418	6
8. அருப்புக்கோட்டை ..	480	

1. கூட்டுறவு தொடக்கச் சங்கங்கள்—

(i) தமிழ்நாட்டிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் (கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை (செயல்பட்டு வரும் சங்கங்கள்).	4 703
(ii) பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை (செயல் பட்டு வரும் பால் உற்பத்திச் சங்கங்கள மட்டும்).	10.84 இலட்சம்

(iii) இச்சங்கங்களில் செலுத்தப்படட பங்கு மூலதனம் ரூ. 182.99 இலட்சம்

II. கூட்டுறவுப் பால் வழங்குவோர் ஒன்றியங்கள—

(i) பால் வழங்குவோர் ஒன்றியங்களின் எண்ணிக்கை.	11
(ii) பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் எண்ணிக்கை.	15
(iii) ஒன்றியங்களிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை.	19,483
(iv) இவ்வொன்றியங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்.	ரூ. 92.05 இலட்சம்.

(III) பால் உற்பத்தியும் விற்பனையும்:

(i) தினசரி சராசரி பால் உற்பத்தி சங்கங்களிலும் ஒன்றியங்களிலும்).	7.86 இலட்ச லிட்டர்.
(ii) தினசரி உள்ளூர் சராசரி விற்பனை	3·91 இலட்சம் லிட்டர்.
(iii) தினசரி தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கு சராசரி விற்பனை	3.95 இலட்சம் லிட்டர்

காலநடை தீவனப் பண்ணைகளில் பராமரிப்பு.

உழவர்கள் தங்களது கால்நடைகளின் தீவினத்திற்காகத் தீவினப் பயிர்களைப் பயிரிட ஊக்கப்படுத்தும் வகையில், விதைப் பொருள்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் இத் திட்டத்தின் கீழ் ரூ. 500 உதவித் தொகையும், தீவினத்தைச் சாகுபடி செய்வதற்கு தனிப்பட்ட உழவருக்கு இத்திட்டத்தின் கீழ் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 200 உதவித் தொகையும் தீவினத் தைச் சாகுபடி செய்வதற்கு தனிப்பட்ட உழவருக்கு இத்திட்டத் தின் கீழ், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 200 உதவித் தொகையும் வழங் கப்படுகிறது. இந்த உதவித் தொகைகள் இரண்டு தவணைகளில வழங்கப்படுகின்றன. முதல் தவணை முதல் வெட்டின் போதும், இரண்டாம் தவணை ஓராண்டின் முடிவிலும் வழங்கப்படுகின்றன. 1982-83 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ. 18,400 பெறப்பட்டு பால் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. இந்தத் தீவினத் திட்டத்தின் மூலம் 11 பால் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள 154 உறுப்பினர்கள் பயனடைந் தனர்.

கிராமப்புற பால் உற்பத்தி விரிவுப் பணித் திட்டம்.

1982-83 ஆம் ஆண்டில் மேற்படி திட்டத்திற்காக ரூ. 5,02,300 பெறப்பட்டு பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டது. மேற்சொன்ன திட்டத்தின் மூலம் 33 பால் கூட்டுறவுச் சங்கங்களும், ஒன்றியங்களும் பயனடைந்தன.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

1982-83 ஆம் ஆண்டில்: '' மலைப் பகுதி மேம்பாட்டுத் திட் டத்தின் '' கீழ் ரூ. 55 இலட்சம் பெறப்பட்டு நீலகிரி மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு வழங்கப் பட்டது. இத்திட்டத்தின் கீழ், நீலகிரி மாவட்டத்தில் பால் பெருக்க நடவடிக்கைகளுக்காக 50 சதவீத வட்டியுடன் கூடிய கடனும், 50 சதவீதம் பங்கு மூலதனமும் இந்த ஒன்றியத்திற்குக் கடன் உதவியாக வழங்கப்பட்டது.

இந்த பால்வளத்துறை செயல்படுத்திய ஏனைய திட்டங்கள் திட்டப் பணிகள்.

ஆதி திராவிடர் நலத் திட்டம்.

ஆதி திராவிடர் நலத் திட்டத்தின் கீழ், கறவை மாடுகள் வாங்குவதற்காக, கூட்டுறவுச் சங்கங்களின் ஆதி திராவிடர் உறுப்பினர்களுக்கு ஆதி திராவிடர் நல வரவு-செலவுத் திட்டத்தில் உதவித் தொகை அனுமதிக்கப்பட்டது. அவர்கள், கறவை, மாடுகள் வாங்குவதற்கு நாட்டுடமை ஆக்கப்பட்ட வங்கிகள் மூலமாகக் கடன் உதவி அளிக்கப்பட்டது. 1982—83 ஆம் ஆண்டில், 225 ஆதி திராவிடர் உறுப்பினர்களுக்கு நிதி உதவியாக ரூ. 15,08,600 உதவித் தொகை வழங்கப்பட்டது. மேலும், இவ்வாண்டில், கிறித்துவ மதத்திற்கு மாறிய 277 ஆதி திராவிடர் களுக்கும், ரூ. 2,00,000 நிதியுதவி அளிக்கப்பட்டது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதித் திட்டம்.

இத்திட்டம் இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் செயற்படுத்தப்படுகின்றது. அரசு இத்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவித் தொகை அனுமதித்துள்ளது. 1982—83 ஆம் ஆண்டில், மேற்படி திட்டத்தின் கீழ், அடிப்படை வசதிகள் அளிப்பதற்காக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 157.603 இலட்சமும், தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 8.30 இலட்சமும் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதித் திட்டங்கள் மூலம், வறட்சிக் காலங்களில், உழவர்கள் தங்களது வாழ்க்கையை நடத்துவதற்கு பால் உற்பத்தித் தொழிலை ஒரு துணைத் தொழிலாகக் கொள்வதற்கு பேருதவியாக இருந்தது.

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் ஆதி திராவிடர்களுக்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி.

1982—83 ஆம் ஆண்டில் மாவட்ட வளர்ச்சி மன்றத்தால் முறையாகக் கண்டறியப்பட்ட, வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட பால் கூட்டுறவுச் சங்க ஆதி திராவிடர் உறுப்பினர்களுக்கு '' மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி ''யின் கீழ் உள்ள நிதிகளிலிருந்து தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் ரூ. 37.50 இலட்சம்

வழங்கியது. கறவை மாடுகள் வாங்குவதற்காக ஓர் உறுப்பினருக்கு, கால்நடை ஒன்றுக்கு உயரளவு ரூ. 1,250 வரையிலும் (கால்நடையின் விலையில் 50 சதவீதம்) வழங்கப்படுகிறது ஒவ்வொரு கறவை மாட்டின் உயரளவு விலை ரூ. 2,500 வரையில் கணக்கிடப்படுகிறது. 1982—83 ஆம் ஆண்டில் மேற்படி நிதியிலிருந்து ரூ. 37.48 இலட்சம் பெறப்பட்டு, 3,184 ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.

பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் அமைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்.

1982—83 ஆம் ஆண்டில் 840 தொடக்க பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டன. 132 மரபுப் படிக்கான தீவிர சங்கங்கள், கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களாக மாற்றப்பட்டன. மேலும்' முடங்கிப்போன 87 கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்கள் புத்துயிரளிக்கப்பட்டு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றப்பட்டன.

பால் பண்ணை மாதவரம்.

நகரப் பால்காரர்கள் கறவை மாடுகளை கால்நடைப் பண்ணையில் வைத்திருந்து பால் வழங்கும் திட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கு அதிக ஆர்வம் காட்டவில்லை. எனவே கறவை மாடு சொந்தக்காரர்களின் எண்ணிக்கை குறைந்தது. ஆகையால் இதுவரை பால வளத்துறைப் பொறுப்பில் இருந்து வந்த கால்நடைப் பண்ணை அரசு பால் பண்ணை, புல் பண்ணை ஆகியவை கால்நடை வளர்ப்புத்துறைக்கு மாற்றப்பட்டன. மாந்தோப்பு, குடியிருப்புக் கட்டிடங்கள் சாலைகள் ஆகியவை பால்வளத்துறையிடம் உள்ளன. பல்வேறு வகைப்பட்ட 457 குடியிருப்புக்களை இத்துறை பராமரித்து வருகிறது.

விரிவான விளம்பரத்தின் மூலமாக மாந்தோப்பு, தென்னை மரங்கள் ஆகியவை ஆண்டுதோறும் ஏலம் விடப்படுகின்றன; 1982—83 ஆண்டு இந்தத்தோப்பின் மூலம் ஏலத்தில் கிடைத்த தொகை ரூ. 1,24,705.00 ஆகும். இதே போன்று பால் பண்ணைக் கழிவு நீரைப் பயன்படுத்தி புல் வளர்க்கப்பட்டு ஆண்டு தோறும் ஏலம் விடப்படுகிறது; இவ்வாண்டின், இதன் மூலம் கிடைத்த தொகை ரூ. 30,000.00 ஆகும்.

1982—83 ஆம் நிதியாண்டில் இத்துறைக்குக் கிடைத்த வருவாய் பின்வருமாறு : —

		ரூபாய்.
(1)	கால்நடை வைத்திருப்பவர்களிடமிருந்து வாடகை.	22,684.00
(2)	பால் பொருள்கள் — கால் நடைத் தீவனம் விற்பனை.	729.54
(3)	ஏனைய வருவாய்	3,97,749.54
(4)	வாடகை	3,19,788.31
(5)	கழிக்க -திருப்பிக் கொடுக்கப்பட்டவை	3,855.40
(6)	நிகர வருவாய்	7,37,096.59

விதைச் சான்றளிப்பு.

கோயம்புத்தூரைத் தலைமையகமாகக் கொண்டு 24-10-197 முதல் தனி விதைச் சான்றளிப்புத் துறை செயல்படத் துவங்கியது. மத்திய அரசின் விதைச் சட்டம், 1966 மற்றும் 1968-ன் விதிமுறைகளின்படி விதைச் சான்றளிப்புப் பணிகளை விதைச் சான்றளிப்புத் துறை செயலாண்மை நிலையம் என்ற முறையில் தமிழ் நாட்டில் செயல்பட்டு வருகிறது. விதைச் சான்றளிப்பு என்பது நெறிமுறைப் படுத்த ஏற்பட்ட அமைப்பு. விதைகளில் போதுமான அளவு மரபு வழித் தூய்மை, புறத்தூய்மை, வெளி முதிர்ச்சி ஆகிய குணங்கள் உள்ளதா என்பதை கவனிப்பதும் அவ்வித சிறந்த விதைகளையும், செழித்து வளரக்கூடிய ஒட்டுப் பயிர்களின் உயர் ரகங்களை உற்பத்திக்கு இருப்பு வைப்பதற்காகவுமே அவ்வித விதைகள் கிடைக்க வாய்ப்பளிக்கவும் ஏற்படுத்தப்பட்டது. விதைச் சான்றளிப்பின் முக்கிய நோக்கம் மேற் கண்ட ஏற்பாட்டுடன் விதை உற்பத்தி செய்தல், சுத்தப்படுத்தி தேவைக்காக இருப்பு வைப்பதுமாகும்.

1982–83 ஆம் வருடத்திய திட்டம் மற்றும் சாதனை விபரம் (பரப்பு ஏக்கரில்) : —

வரிசை எண்ணும் பயிர்களின் பெயரும்	இலக்கு.	சான்றளிப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பளவு. ஏக்கர்
(1)	(2)	(3)
1 நெல்	16,000	15,140
2 வீரிய கம்பு		2,413
3 வீரிய சோளம்	5,000	3,236
4 வீரிய மக்காச் சோளம்		449
5 வீரிய கம்பு	2,000	72
6 வீரிய சோளம்		794
7 வீரிய மக்காச் சோளம்		10
8 வீரிய ராகி ..		589
9 வீரிய பருத்தி	1,000	252
10 சாதாரண பருத்தி	4,000	8,236
11 பயறு வகைகள்	6,000	9,400
12 எண்ணெய் வித்துக்கள்	350	974
13 காய்கறிகள்	650	707
மொத்தம்	35,000	42,272

வரிசை எண்ணும் பயிர்களின் பெயரும்.	சுத்திகரிப்பு செய்த விதைகளின் அளவு.	சான்றட்டைகள் பொருத்திய விதைகளின் அளவு.
	மெட்ரிக் டன்	
(1)	(2)	(3)
1 நெல்	13,331	12,480
2 வீரிய கம்பு	1,391	1,133
3 வீரிய சோளம்	3,580	2,959
4 வீரிய மக்காச் சோளம்	385	142
5 வீரிய கம்பு	32	29
6 வீரிய சோளம்	175	109
7 வீரிய மக்காச் சோளம்	5	2
8 வீரிய ராகி	282	127
9 வீரிய பருத்தி	160	114
10 சாதாரண பருத்தி	1,244	1,426
11 பயறு வகைகள்	770	660
12 எண்ணெய் வித்துக்கள்	196	127
13 காய்கறிகள்	69	70
மொத்தம்..	21,620	19,378

சான்றளிப்பின் கீழ் வசூலிக்கப்கட்ட வருவாய்த் தொகை 1982-83-ம் வருடம் :

வரிசை எண்ணும் கட்டணமும்.	1983–84 (ரூபாய் இலட்சத்தில்.)
1 விதைச் சான்றுக் கட்டணம், விதைப் பரிசோதனைக் கட்டணம், மறு மதிப்பீட்டுக் கட்டணம் மற்றும் மறு சுத்திகரிப்புக் கட்டணம், சான்றட்டைகள் கட்டணம், இதரக் கட்டணங்கள்.	21.39

விதை ஆய்வு :

விதைச் சட்டம் 1966-ஐ அமுல் படுத்துவதன் மூலம் விதைச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட தரப்படி விவசாயிகளால் அதிக உற்பத்திக்கு வாங்கப்படும் வேளாண் இடு பொருள்களின் தரத்திற்கு உறுதி அளிக்கப்படுகிறது. 1977-ல், அரசு தனியாக விதை ஆய்வகம் ஏற்பட அனுமதி அளித்தது. இத்திட்டம் சென்னை வேளாண்மை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தது. விதைச் சான்றளிப்புத் துறைத் தனியாக செயல்படத் துவங்கிய பின் விதைச் சான்றளிப்பு இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் 1–10–1981 முதல் கொண்டு வரப்பட்டது.

1982-83 ஆம் வருடத்திய விதை ஆய்வுத் திட்டத்தின் இலக்கு மற்றும் சாதனை விபரம் எண்களில் :

வரிசை எண்ணும் விபரமும்.	இலக்கு 1982–83.	சாதனை 1982–83.
1 விற்பனை மையங்கள் ஆய்வு	5,000	5,737
2 விதை மாதிரிகள் எடுத்தது	5,000	3,932

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம்.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் 1966 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் :—

(1) வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், கோழி வளர்ப்பு போன்றவற்றை நவீன முறையில் வளர்ச்சி பெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்.

(2) உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல்.

இந்நிறுவனத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 400 இலட்சம் ஆகும். அதில் ரூ. 360 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு அதற்குரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு ரூ. 195 இலட்சமும் இந்திய அரசு ரூ. 165 இலட்சமும் செலுத்தியுள்ளன.

உர விற்பனை :

இக்கழகம் 1979—80ஆம் ஆண்டு முதல் விவசாயத்திற்கு இன்றியமையாததான உர வகைகளை விநியோகம் செய்ய ஆரம்பித்தது. கடந்த இரண்டு ஆண்டு காலங்களில் விநியோகங்கள் :

காலம்	விநியோகம் செய்த உரங்களின் அளவு.	மதிப்பு.
	(மெ. டன்னல்.)	(இலட்சத்தில்).
1981—82	29139	662.56
1982—83	26782	638.18
	(டிசம்பர் 1982 இறுதி வரை).	

1982-83ஆம் ஆண்டின் இறுதி மூன்று மாதங்களில் 8218 மெ.டன் அளவு உரங்களை வினியோகம் செய்ய திட்டமிட்டுள்ளது 1983-84ஆம் ஆண்டில் ரூ. 1166.40 இலட்சம் மதிப்புள்ள 50,000 மெ.டன் உரங்களை விற்பனை செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.

டிராக்டர்கள் மற்றும் பவர் டில்லர்கள் விற்பனைத் திட்டம் :

வெவ்வேறு விதமான உள்நாட்டில் தயார் செய்யும் டிராக்டர் களை இக்கழகம் விநியோகம் செய்து வருகிறது. டிராக்டர்கள் மற்றும் பவர் டில்லர்கள் இதுவரை தனியார்களுக்கும் அரசுத் துறைகளுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டு டிசம்பர் 1982 வரை ரூ. 44.41 இலட்சம் மதிப்புள்ள 56 டிராக்டர்களையும் ரூ. 15.98 இலட்சம் மதிப்புள்ள 57 பவர் டில்லர்களையும் விற்பனை செய்துள்ளது. ஜனவரி 1983 முதல் மார்ச் 1983 வரை ரூ. 22.04 இலட்சம் மதிப்புள்ள 29 டிராக்டர் களையும் ரூ. 4.75 இலட்சம் மதிப்புள்ள 19 பவர் டில்லர்களையும் விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 76 இலட்சம் மதிப்புள்ள 96 டிராக்டர்களையும் ரூ. 24 இலட்சம் மதிப்புள்ள 80 பவர் டில்லர்களையும் விநியோகம் செய்ய இக் கழகம் திட்டமிட்டுள்ளது.

உதிரி பாகங்கள் விற்பனை :

விவசாயிகளின் டிராக்டர்களை முறையாகப் பராமரித்து நல்ல நிலையில் வைத்திருக்க நியாயமான விலையில் தேவைப் பட்ட அளவு தரமுள்ள உதிரி பாகங்களை சீராக விநியோகம் செய்ய வேண்டியதின் அவசியத்தை முன்னிட்டு, இக் கழகம் உள்நாடு மற்றும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உதிரி பாகங்களைத் தேவையான அளவில் இருப்பில் வைத்து விற்பனை நிலையங்கள் வாயிலாக விநியோகம் செய்கின்றது. பல் வேறு உற்பத்தியாளரிடமிருந்து தேவைப்பட்ட உதிரி பாகங் கள் மற்றும் டயர்கள், டியூப்கள், மின்கலங்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்யும் பொருட்டு, அந்த நிறுவனங்களுடன் இக் கழகம் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது. தற்சமயம் இக் கழகம் சென்னை, காஞ்சீபுரம், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி மயிலாடுதுறை, மதுரை, திருநெல்வேலி, சேலம், மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 9 இடங்களில் விற்பனை நிலையங்களை யும், வேலூர், திருவண்ணாமலை, பண்ருட்டி, பாண்டிச்சேரி ஈரோடு மற்றும் காரைக்கால் ஆகிய 6 இடங்களில் கிளை விற்பனை நிலையங்களையும் கொண்டுள்ளது. இவ்விற்பனை நிலையங்கள் மூலம் மின்கலங்கள், டயர்கள் மற்றும் டியூப்கள், பிரசித்திப் பெற்ற டிராக்டர் மற்றும் பவர் டில்லர்களின் உதிரி பாகங்கள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன. 1981-82 ஆம் ஆண்டு ரூ. 165.29 இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங்கள் விற்பனை செய்யப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டில் டிசம்பர் 1982 இறுதி வரை 9 மாதங்களில் ரூ. 115.14 இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங் கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டின் இறுதிக்கால மூன்று மாதங்களில் ரூ. 51 இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங்களும் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 170 இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங்களை விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

பூச்சிக் கொல்லி மருந்து விற்பனை :

1972ஆம் ஆண்டு இக்கழகம் பிரசித்தி பெற்ற பூச்சிக் கொல்லி மருந்துகளில் முக்கியமான பி.எச்.சி. 10 சதவிகிதம் தூள் போன்றவற்றை தயாரிக்க ஆரம்பித்தது. இப்பொழுது, இந் நிறுவனம் தனது சொந்தத்தில் ரூ. 9.79 இலட்சம் முதலீட்டில் அம்பத்தூரில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த

தொழிற் சாலை தனது வர்த்தக ரீதியிலான உற்பத்தியை 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் தொடங்கியது. பெருகி வரும் பூச்சிக் கொல்லி மருந்துகளின் தேவையை ஈடு கட்ட ரூ. 4 இலட்சம் செலவில் தனது இரண்டாவது ஆலையை ஏற்படுத்தியுள்ளது. இந்திய தர நிர்னயக் கழகத்தின் தரத்திற் கேற்ப உயர்ந்த பூச்சிக் கொல்லி மருந்துகள் உற்பத்தி செய்யப் பட்டு பொது மக்களுக்கு இக்கழகத்தின் கிளை நிலையங்கள் மூல மும் வேளாண்மைத் துறைக் கிடங்குகள் மூலமும் விநியோகிக்கப் படுகின்றன. 1981-82 ஆம் ஆண்டில் 2,575 மெ. டன். அளவு தூள் மருந்துகளும், 8,712 லிட்டர் அளவு திரவ மருந்துகளும் ரூ. 28.46 இலட்சத்திற்கு விநியோகம் செய்யப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் (டிசம்பர் திங்கள் 1982 முடிய) ரூ. 19.52 இலட்சம் மதிப்புள்ள 1,450 மெ. டன். தூள் மருந்துகளும், ரூ. 3.94 இலட்சம் மதிப்புள்ள 11,785 லிட்டர் திரவ மருந்து களும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1983 ஜனவரி முதல் 1983 மார்ச் வரை ரூ. 20.41 இலட்சம் மதிப்புள்ள1,503 மெ. டன் கள் மருந்துகளும், ரூ. 2.42 இலட்சம் மதிப்புள்ள 8,250 லிட்டர் அளவுள்ள திரவ மருந்துகளும் விற்பனை செய்ய உத்தேசித்துள் ளது. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 42.80 இலட்சம் மதிப்புள்ள 3,105 மெ. டன் தூள் மருந்துகளும் ரூ. 11.15 இலட்சம் மதிப் புள்ள 30250 லிட்டர் திரவ மருந்துகளும் உற்பத்தி செய்து விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

மீன்பிடி வலைத் தயாரிப்புத் திட்டம் :

மீன் பிடித்தலை நவீன மயமாக்கும் முயற்சியில் இயந்திரங் களின் மூலம் தயாரிக்கப்பட்ட வலைகளின் தேவையை ஈடு கட்டும் பொறுப்பை இக்கழகம் மேற் கொண்டது. இதற்காக இக்கழகத்தால் துவக்கப்பட்ட தொழிற்சாலை ஆண்டொன்றிற்கு 60 மெ. டன் அளவு நைலான் நூல்களிலிருந்து மிகக் கெட்டியான பாலி எத்திலின் நூல்களைக் கொண்டும் மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் திறன் கொண்டது. மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் நான்கு இயந்திரங்களைக் கொண்ட இத் தொழிற்சாலை 1976ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் துவக்கப்பட்டது. 1978-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இணைக்கப்பட்ட மற்றொரு இயந்திரம் இத் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை 50 மெ. டன் அளவிலிருந்து 60 மெ. டன். அளவிற்கு உயர்த்தியது. இக்கழகத்தால் தயாரிக்

கப்பட்ட மீன்பிடி வலைகள் அதனுடைய தரத்தாலும், விலை யாலும் விற்பனையில் அதிக மதிப்பைப் பெற்றுள்ளன. மிக நுண்ணிய நைலான் வலையிலிருந்து மிகக் கெட்டியான நூல்களைக் கொண்ட மீன்பிடி வலைகள் வரை இங்கு தயாரிக்கப்படுகின்றன. இக்கழகம் இந்தியாவின் மீன்பிடி தொழிலின் தேவைகளை ஈடு கட்டுவதாலும், தன்னுடைய மீன்பிடி வலைத் தயாரிப்புகளி னாலும், நன்மதிப்பையும், நல்லபெயரையும் பெற்றுள்ளது.

1982-83 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 1982 வரை 16.5 மெ. டன் அளவு மீன்பிடி வலைகளை விற்பனை செய்துள்ளது. 1983 ஜனவரி முதல் மார்ச் 1983 வரை 8 மெ. டன். அளவு வலைகளை விற்பனை செய்ய உத்தேசித்துள்ளது. 1983-84ஆம் ஆண்டு 28 மெ. டன் அளவு மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

இலைப்புரத மாவுத் திட்டம், உடுமலைப்பேட்டை :

இக் கழகம் இலைப்புரத மாவு தயாரிக்கும் தொழிற் சாலையை உடுமலைப் பேட்டையில் நிறுவியுள்ளது. இலைப்புரத மாவுலூசரின் என்ற புல்வகையைப் பக்குவப் படுத்துவதன் மூலம் தயாரிக் கப்படுகின்றது. கால்நடைகளுக்கும் கோழிகளுக்கும் தேவையான சத்துணவு தயாரிக்க இந்த இலைப்புரத மாவு பயன்படுத்தப்படு கின்றது. இது நல்ல முறையில் விற்பனை செய்யப்படுகின்றது. 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 1.13 இலட்சம் மதிப்புள்ள 116 மெ. டன் அளவு இலைப் புரத மாவு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1983 ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை 130 மெ. டன் அளவு விற்பனை செய்து, 1982-83 ஆம் ஆண்டுக்கான விற்பனையை ரூ. 2.08 இலட்சம் மதிப்புள்ள 200 மெ. டன் அளவு இலைப்புரத மாவு விற்பனையை அடைய உத்தேசித்துள்ளது.

எண்ணெய் பிழிந்தெடுக்கும் திட்டம், போச்சம்பள்ளி :—

இக் கழகம் சூரியகாந்தி வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுப் பதற்காக எண்ணெய் சம்பந்தப்பட்ட எல்லா தொழில்களையும் மேற்கொள்ளக்கூடியதும், ஆண்டொன்றிற்கு 12,000 மெ. டன். சூரியகாந்தி எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் பிழியக் கூடிய திறன் கொண்ட முழுமையான தொழிற்சாலை ஒன்றை தர்மபுரி மாவட்டத்திலுள்ள பிற்பட்ட பகுதியான போச்சம்

பள்ளியில் நிறுவி உள்ளது. தமிழ்நாட்டில் மட்டும் 1982-83 ஆம் ஆண்டு (டிசம்பர் 82 வரை) 2,250 மெ. டன் சூரியகாந்தி விதைகள் கொள்முதல் செய்து எண்ணெய் பிழிந்தெடுக்கிறது.

1982-83 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1982 முடிய, 600 மெ. டன் கடலை எண்ணெய் வித்துக்கள் பிழிந்தெடுக்கப்பட்டன. இவ்வாலையின் திறனை வீணாக்காமல் இருக்க இக்கழகம் போதிய முயற்சிகள் எடுத்துக்கொண்ட போதிலும், தொடர்ந்து ஏற்பட்ட மின் பற்றாக்குறையை சமாளிக்க இவ்வாலைக்குப் பொருத்தமான டீசல் ஜெனரேட்டர் பொருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது பிப்ரவரி மற்றும் மார்ச்சு 1983 இல் இன்னும் 1,000 மெ.டன் சூரிய காந்தி விதைகளும் 1000 மெ. டன் கடலை விதைகளும் அரைக்கப் படலாம் என்று உத்தேசித்துள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் 7,500 மெ. டன் சூரிய காந்தி வித்துக்களையும், 2500 மெ. டன் கடலை வித்துக்களையும் இவ்வாலையில் பிழிந்தெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் (டாப்கோ) 12-7-73ம் நாளன்று கோழி வளர்ப்பினை மேம்படுத்தும் பொருட்டும் வணிக முறையிலே அதனை விரிவாக்கும் பொருட்டும் ரூபாய் 100 இலட்சங்களை மூலதனமாகக் கொண்டு ஓர் அரசுத் துறை நிறுவனமாகத் தொடங்கப்பட்டது.

முக்கிய நோக்கங்களாவன :

கோழி, கோழியிலிருந்து பெறப்படும் முட்டை, இறைச்சி மற்றும் இதர துணைப் பொருட்கள், கோழித் தீவனம் ஆகிய வற்றின் உற்பத்தி, முறைப்படுத்துதல், சேமித்தல் மற்றும் விற்பனை செய்தல்; கோழி வளர்ப்புத் தொடர்பான தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் உதவி அளித்தல், கோழி வளர்ப்பு, அதன் துணைப் பொருட்கள், தீவனம், தேவைப்படும் சாதனங்கள் ஆகியவற்றை உருவாக்கி, கோழி வளர்ப்புத் துறையில் உற்பத்தி, விற்பனை, வாகன வசதி, விநியோகம், ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய பணிகளுக்கு உதவுதல்.

தீவன உற்பத்தி நிலையங்கள் :

1. நந்தனம் (சென்னை).
2. கொட்டப்பட்டு (திருச்சி).
3. கப்பலூர் (மதுரை).
4. திருப்பூர் (பெரியார் மாவட்டம்).

இந்நான்கு தீவனக் கலவை நிலையங்களும், தொழில் மற்றும் விவசாயத் துறையில் கிடைக்கும் துணைப் பொருட்களைக் கொண்டு இந்திய தர நிறுவனத்தின் தரத்திற்கேற்ப, கோழித் தீவனத்தை உற்பத்தி செய்கின்றன. தீவனத்திற்கான மூலப் பொருட்களை நந்தனத்தில் உள்ள இந்நிறுவனத்தின் பகுத்துளர் ஆய்வகத்தில் கடுமையாக சோதனை செய்கின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான தீவனத் தயாரிப்பு மற்றும் விற்பனை விபரங்கள் பின்வருமாறு :

	தீவன உற்பத்தி (மெட்ரிக்-டன்)	தீவன விற்பனை (மெட்ரிக்-டன்)
1981–82	9,129	9,609
1982–83	5,433	5,556

குஞ்சு பொரிப்பகங்கள் :

அரசூர் (கோவை மாவட்டம்), கப்பலூர் (மதுரை மாவட்டம்) ஆகிய இரு குஞ்சு பொரிப்பகங்களும் வீரிய இனக் குஞ்சுகளை உற்பத்தி செய்கின்றன. தமிழ் நாட்டில் குறிப்பாக சேலம், பெரியார், செங்கல்பட்டு, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் வீரிய இனக் குஞ்சுகளின் அறிமுகம் கோழி வளர்ப்பினை வியாபார நோக்குடைய ஒன்றாக மாற்றியுள்ளது.

இரு குஞ்சு பொரிப்பகங்களின் உற்பத்தி பின்வருமாறு :

ஆண்டு.	மொத்தம் பொரிக்கப்பட்ட குஞ்சுகளின் எண்ணிக்கை. (பெட்டை மற்றும் ஆண்).
1981–82	10.76 இலட்சங்கள்.
1982–83	9.70 ,,

சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கோழிப் பெருக்கம் :

சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் (கோழிப்பெருக்கம்) குறிக்கோள் :

(1) கால்நடை வாயிலாகப் பெறப்படும் புரதச் சத்துமிக்க உணவு வகைகளான பால், முட்டை, இறைச்சி ஆகியவற்றைப் பெருக்குவதாகும்.

(2) இத்திட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் கிராம மக்களுக்கு உற்பத்தித் திறன் மற்றும் வேலை வாய்ப்பினை அளிப்பதோடு, விவசாயத் தொழிலாளர்கள், நடுத்தர மற்றும் சிறு விவசாயிகள் பெருமளவில் மேற்கொள்ளும் வகையில் பல சிறப்பு அம்சங்களைக் கொண்டதாகும்.

மேற்கூறிய குறிக்கோள்களை அடையும் முகத்தான், இத் திட்டத்தை செங்கல்பட்டு, வட ஆற்காடு, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் இந்நிறுவனம் நிறைவேற்றி வருகிறது.

அத்தியாயம் 3

வணிக வரி மற்றும் அறநிலையத் துறை

அத்தியாயம் 3.

வணிக வரி மற்றும் அறநிலையத் துறை.

வணிக வரிகள்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் 1959 :

இச்சட்டத்தின்கீழ் வணிகர்கள் பதிவு செய்தல் முதல் கட்டமாகும். 1–4–1974 அன்று இருந்தவாறு பலமுறை வரி விதிப்பு பொருட்களின் வரி விதிப்புக்குட்பட்ட விற்றுமுதல் ரூ. 30,000 பதிவு செய்வதற்குக் குறைந்த பட்ச விற்றுமுதல் தொகையாகும். பதிவு பெற்ற வணிகர்கள் மட்டுமே வரி வசூலிக்க இயலும் பலமுனை வரிக்கு உட்பட்ட பொருள்களின் விற்று முதல் ரூ. 50,000-க்கு மேற்பட்டால் தான் வரி விதிப்பு செய்ய முடியும். இது 1–4–1974 முதலே நடைமுறையில் உள்ளது. ஆனால் ஒரு முனை வரி விதிப்புக்குட்பட்ட பொருள்களில் வாணிபம் செய்பவர்களுக்குப் பதிவு செய்ய (மற்றும்) வரி விதிப்பிற்கு குறைந்தபடி விற்றுமுதல் தொகை அளவு ஏதுமில்லை. ஒருமுனை வரி விதிப்பு அவ்வப்போது பல கருத்துக்களை நினைவு கொண்டு மாற்றம் செய்யப்பட்டும், தேவைப்படின் பலமுனை வரி விதிப்பில் உள்ள பொருட்கள் ஒரு முனை வரி விதிப்பிற்குக் கொணரப்பட்டும் வருகின்றன.

1981–82 ஆம் ஆண்டில் இருந்த பதிவு பெற்ற 2,47,474 வணிகர்களைக் காட்டிலும் கூடுதலாக நடப்பு நிதியாண்டில் பதிவு பெற்ற 2,50,713 வணிகர்கள் உள்ளனர். வரிவிதிப்புக்கு உட்பட்ட வணிகர்களின் எண்ணிக்கையும் சென்ற ஆண்டில் இருந்த 1,07,452-ஐ காட்டிலும் இந்த ஆண்டில் 1,11,031 ஆக இருக்கின்றன.

தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச்சட்டம் 1970 :

இது சென்ற ஆண்டுகளில் இருந்ததைப் போல் கீழ்க்கண்டவாறு வரி விதிக்கப்பட்டு வருகின்றன:—

விற்றுமுதல் தொகை (வரி விதிப்புக்கு உட்பட்டது)	வரிவிதிப்பு விகிதம்.
ரூ 3 — 5 லட்சங்கள் ..	.4 சதவிகிதம்.
ரூ 5 — 7 லட்சங்கள்	.5 சதவிகிதம்
ரூ 7 — 10 லட்சங்கள்	.6 சதவிகிதம்.
ரூ. 10 லட்சத்திற்கு மேல்	.7 சதவிகிதம்

தமிழ்நாடு விற்பனை வரி (உபரி வரி) சட்டம் 1971 :

இச்சட்டத்தின் கீழ் முதன் முதலாக சென்னை நகரம், அதன் புறநகர் பிரிவுகளில் 32 கி.மீ. எல்லைக்குட்பட்டது மற்றும் மதுரை, திருச்சி, கோவை மற்றும் சேலம் நகரங்களில் செலுத்தப்பட வேண்டிய வரித் தொகையில் 5 விழுக்காடு உபரி வரி விதிக்க வழி வகுக்கப்பட்டது. பின்னர் 1–4–1979 முதல் இச்சட்டம் 39 நகராட்சிகளுக்கும், மதுரை, கோவை, திருச்சி (மற்றும்) சேலம் நகர்ப்புறங்களில் 16 கி.மீ. எல்லைக்கு உட்பட்ட இடங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டு 33-வது சட்டத்தின்படி 10–6–1981 முதல் சென்னை நகர் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் 32 கி.மீ. எல்லைக்குட்பட்ட இடங்களில் வரித் தொகையில் கூடுதலாக 5 சதவிகிதம் உபரி வரி (கூடுதல் உபரி வரி) விதிக்க வழி வகுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மத்திய விற்பனை வரிச் சட்டம் 1956 :

இத்துறையில் பராமரிக்கப்பட்டு வரும் சட்டங்களில் இரண்டாவது முக்கியமானதுமான சட்டமாகும். மாநிலங்களுக்கிடையேயான வாணிபம் செய்யப்படும் தொகையின் மீது வரி விதிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. இது ஒரு மத்திய சட்டமாயினும் இதன் நிர்வாகமும் இச்சட்டத்தின் கீழ் ஈட்டப்படும் மொத்த வருவாயும் அந்தந்த மாநிலங்களிடையே ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1982–83ஆம் ஆண்டில் 1,20,145 பதிவு பெற்ற வணிகர்களும், 27,222 வரி விதிப்புக்குட்பட்ட வணிகர்களும் உள்ளனர். 1981–82-ல் இருந்த வரி விதிப்புக்குட்பட்ட 23,975 வணிகர்களைக் காட்டிலும், 3,247 கூடுதலாகும். சென்ற ஆண்டில் வரிவிதிப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 22,250. இது நடப்பு ஆண்டில் 25,966 ஆக உள்ளது. நடப்பு ஆண்டில் சென்ற ஆண்டு வசூல் தொகை ரூ. 10,149 லட்சங்களைக் காட்டிலும் ரூ. 1,448 லட்சங்கள் கூடுதலாக ரூ. 11,597 லட்சங்கள் வசூலிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம் 1939 (மற்றும்) உள்ளாட்சி நிறுவன நிதிச் சட்டம் 1961 :

இவ்விரு சட்டங்களும் திரையரங்குகள் கட்டணங்களின் பேரில் நடத்தப் பெறும் காட்சிகளுக்கான வரி விதிப்பு ஆகும். அனுமதி

இலவசமான காட்சிகளுக்கு வரிவிதிப்பு ஏதுமில்லை. தமிழ்நாடு உள்ளாட்சி நிறுவன நிதிச் சட்டத்தின் கீழ் நகராட்சிகள், மாநகராட்சி, ஊராட்சி ஆகிய நிறுவனங்களின் நிதி நிலையினைப் பெருக்குவதற்காக தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் வரி மீது உபரி வரி விதிக்கப்படுகிறது. 15—11—82 முதல் அமுலாக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டு சட்டம் 1-ன் படி முதல்நிலை, தேர்வு நிலை நகராட்சிகள் மற்றும் நகரியங்களுக்கும் தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம் 1939 பிரிவு 5-ஏ (மற்றும் 5 பி-இன் கீழ் விதிக்கப்படும் இணக்கவரி கேளிக்கை (Compounded Entertainment Tax) வரிவிதிப்பு முறை நீட்டிக்கப்பட்டது. 3—1—1983 முதல் அமுல்படுத்தப்பட்ட 1982 ஆம் ஆண்டு சட்டம் 25-ன்படி கீழ்க்கண்ட புதிய திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன.

(அ) பிரிவு 5-பின் கீழ் தொடர்ந்து ஒரு வாரத்திற்கு மேல் நடைபெறாத காட்சிகளுக்கு கேளிக்கை வரி அலுவலரே வரித் தொகையினை வஜா செய்யலாம்.

(ஆ) பிரிவு 10 எப்ன் கீழ் தாமதமாக செலுத்தப்படும் வரித் தொகைக்கு 2 சதவிகித வட்டி விதிக்கலாம்.

(இ) குறிப்பிட்ட இலவச அனுமதிச் சீட்டிற்கு மேல் வழங்கப்பட்ட சீட்டுகளுக்கு வரி விதிக்க பிரிவு 3-ல் புதிய உட்பிரிவு ஏற்படுத்தப்பட்டது.

1982—83 நிதியாண்டில் கீழ்க்கண்டவாறு 1956 திரையரங்குகள் செயல்பட்டு வந்தன: —

நிலையானது :	குளிர்சாதனம் பொறுத்தப்பட்டது	56
	மற்றவை	927
	திறந்த வெளியரங்கம்	5
	அரை-நிரந்தரம்	149
	நடமாடும் தற்காலிக திரையரங்கம்	819
	மொத்தம்	1,956

செயலாக்கப் பிரிவு அலுவலர்களால் நடத்தப்பட்ட தணிக்கைகளின் மூலம் 4,291 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 22.63 லட்சங்கள் வரி ஏய்ப்பு/இணக்கக் கட்டணம் விதிக்கப்பட்டது.

சென்ற ஆண்டில் வரி ஏய்ப்பு/இணக்கக் கட்டணமாக ரூ. 26.09 லட்சங்கள் விதிக்கப்பட்டன. இந்த இரண்டு சட்டங்களின் கீழும் சென்ற ஆண்டு வசூலான ரூ. 3,132 லட்சங்களுக்கு ரூ. 510 லட்சங்கள் கூடுதலாக ரூ. 3,642 லட்சங்கள் வசூலிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குதிரைப் பந்தய வரிச் சட்டம் 1935 :

குதிரைப் பந்தயங்கள் சென்னை கிண்டியிலும், உதகமண்டலத்திலும் நடைபெறுகின்றன. 7—1—82 முதல் பந்தய வரி 20 சதவிகிதமாகவும், உபரி வரி 5 சதவீதமாகவும் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஹைதராபாத், பெங்களூர், பம்பாய் (மற்றும்) கல்கத்தா ஆகிய இடங்களில் நடைபெறும் பந்தயங்களுக்கு 24—4—81 (மற்றும்) 15—5—81 ஆகிய நாட்களிலிருந்து 15 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டு வருகிறது.

இச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் விவரம் வருமாறு : —

	1982—83 (ரூபாய் லட்சத்தில்.) கிண்டி	உதகமண்டலம்
(அ) குதிரைப்பந்தயம் கணிப்புப் பொறி	.209	12
(ஆ) குதிரைப் பந்தய ஒப்புநர்	202	28
மொத்தம்	411	40

தமிழ்நாடு ஆடம்பர விடுதிகள் (மற்றும்) தங்கும் இல்லங்கள் மீதான வரிவிதிப்புச் சட்டம் 1981 :

ஆடம்பர விடுதிகளிலும் தங்கும் இல்லங்களிலும் ஏற்படுத்தப்படும் ஆடம்பர பொருட்களுக்கான (குளிர்பதனம், தொலைக்காட்சி, வானொலி, கூடுதல் படுக்கைகள் போன்ற) மற்றும் தங்குவதற்கான கட்டணம் ரூ. 20 அல்லது அதற்கு மேற்படும் இனங்களில் வரி விதிப்பு செய்ய ஏற்படுத்தப்பட்ட சட்டம் ஆகும். ரூ. 20-க்கு மேல் ரூ. 50-க்கு குறைவாக ஒரு நாளுக்கு ஒரு நபரிடம் வசூல் செய்யப்படும் கட்டணத்தில் 5 சதவிகிதமும்,

ரூ. 50-க்கு மேல் ஒரு நபரிடம் ஒரு நாளுக்கு வசூலிக்கப்படும் கட்டணத்தில் 10 சதவீதமும் வரி வசூல் செய்யப்படுகிறது. 1982—83 நிதி ஆண்டில் ரூ. 131 லட்சங்கள் வசூல் செய்யப்பட்டு உள்ளது. இது சென்ற ஆண்டில் வசூலிக்கப்பட்ட ரூ. 110 லட்சத்தைக் காட்டிலும் ரூ. 21 லட்சங்கள் கூடுதலாகும்.

தணிக்கைச் சாவடிகள் :

1982—83 நிதியாண்டில் மதுரை மற்றும் சென்னை செயலாக்கப் பிரிவு துணை ஆணையர்களின் ஆளுகைக்கு உட்பட்டு 66 தணிக்கைச் சாவடிகள் இருந்தன. மொத்தம் 56,88,652 லாரிகள் தணிக்கை செய்யப்பட்டு 48,479 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டன (சென்ற ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் 44,175). சென்ற ஆண்டில் வசூல் செய்யப்பட்ட ரூ. 165.07 லட்சங்களைக் காட்டிலும், நடப்பு ஆண்டில் (வரியாக ரூ. 105.40 லட்சமும் இணக்கக் கட்டணமாக ரூ. 101.74 லட்சமும்) ரூ. 207.14 லட்சங்கள் வசூலிக்கப்பட்டுள்ளன.

இந்து சமய அறநிலையங்கள்.

இத்துறையின் நிருவாகப் பொறுப்பிலுள்ள சமய நிறுவனங்கள் வருமாறு :—

1. கோயில்கள்	31,728
2. மடத்தைச் சேர்ந்த கோயில்கள்.	55
3. மடங்கள்	55
4. குறிப்பிட்ட கட்டளைகள்	1,721
5. அறக்கட்டளைகள்	189
6. சமணக் கோயில்கள்	17
மொத்தம்	33,765

இத்தகைய சமய நிறுவனங்களுள் ஆண்டு வருமானம் 200 ரூபாய்க்கும் குறைவாகக் கிடைக்கும் 8,232 நிறுவனங்களுக்கு உதவித் தொகை அளிக்க அவற்றில் வருவாய் மதிப்பிடப்படுவதில்லை. ஒவ்வொரு சமய நிறுவனத்திற்கும் தனியாக நிருவாகப் பிரிவு இருக்கிறது. இதற்குத் தனி வரவு-செலவுக் கணக்கும்

உள்ளது. சமய நிறுவனம் ஒவ்வொன்றிற்கும், வரவு-செலவுத் திட்ட செலவுக்கும், பணியாளரமைப்புச் செலவுக்கும் அனுமதி அளிக்கப்படுகிறது.

கோயில் பணியாளர்கள் :

பணியாளர்களின் சம்பளவிகிதம் திருத்தப்பட்டு அகவிலைப் படி உயர்த்தப்பட்டுள்ளது. கோயில் பணியாளர்களுக்குக் குடும்ப நல நிதித் திட்டமும், தொகுப்பு ஈட்டுறுதித் திட்டமும் கொண்டு வரப்பட்டுள்ளது.

சமய நிறுவனங்களுக்குத் திருப்பணிகளும் மீண்டும் புதுப்பித்துக் கட்டுதலும்.

கோயில்களுக்குத் திருப்பணி செய்வதிலும் புதுப்பித்துக்கட்டு வது குறித்தும் தொடர்ந்து கூனிக் கவனம் செலுத்தப்பட்டு வரு கிறது. இவ்வாண்டில் நிருவாக வகையில் அனுமதி அளிக்கப் பட்ட பணிகளின் மொத்த எண்ணிக்கை 654 ஆகும். இவற்றின் மொத்த மதிப்பு 6.87 கோடி ரூபாயாகும். இதில் 1·42 கோடி ரூபாய் மதிப்புள்ள 371 பணிகள் இவ்வாண்டு முடிக்கப்பட்டன. பாழடைந்த நிலையிலுள்ள கோயில்களைப் புதுப்பித்துக் கட்டு வதற்காக 1982—83 ஆம் ஆண்டில் அரசு 20 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கியுள்ளது. பெருமளவில் புதுப்பிக்கும் பணியும், ஏனைய திருப்பணிகளும் நடைபெற்று வருகிற கோயில்கள் வரு மாறு.

தொடர் எண்.	கோயிலின் பெயர்.	மதிப்பீட்டுத் தொகை. (ரூபாய்.)
1	அருள்மிகு அரங்கநாதசாமி கோவில், திருவரங்கம் (தெற்கு வாயில் இராஜ கோபுரம் கட்டுதல்).	1,00,00,000
2	அருள்மிகு சபாநாயகர் கோயில், சிதம்பரம், தென் ஆற்காடு மாவட்டம் (பல்வேறு திருப்பணிகள்).	54,46,000
3	அருள்மிகு கோட்டை மாரியம்மன் கோயில், சேலம் (இராஜ கோபுரம் கட்டுதல்).	13,00,000
4	அருள்மிகு தண்டாயுதபாணிசாமி, கோயில், பழனி (தெற்கு, வடக்கு வெளிச் சுற்றுப் பிரகாரத்தை அகலப்படுத்தல்).	22,40,000

தொடர் எண்.	கோயிலின் பெயர்.	மதிப்பீட்டுத் தொகை. (ரூபாய்)
5	அருள்மிகு மங்களநாதசாமி கோயில் உத்தரகோசமங்கை, இராமநாதபுரம் மாவட்டம் (அணையொட்டி மண்டபம் கட்டுதல்).	9,50,000
6	அருள்மிகு சுப்பிரமணியசாமி கோயில், திருச்செந்தூர், திருநெல்வேலி மாவட்டம் (கோபுரத்தைப் புதுப்பித்துக் கட்டுதலும், திருப்பணியும், ஏனைய பணிகளும்).	24,35,000
7	அருள்மிகு முத்துமாரியம்மன் கோயில், தாயமங்கலம், இராமநாதபுரம் மாவட்டம் (திருக்குளம் கட்டுதல்).	4,00,000
8	அருள்மிகு வரதராஜ பெருமாள் கோயில், தரங்கம்பாடி, தஞ்சாவூர் மாவட்டம் (மாசிலாதசாமி கோயில் கட்டுதல்)	3,00,000
9	அருள்மிகு சுவேதாரண்ய ஈஸ்வரர் கோயில், திருவெண்காடு, தஞ்சாவூர் மாவட்டம்.	2,75,000
10	அருள்மிகு சுப்பிரமணியசாமி கோயில், குமாரவயலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	4,10,000
11	அருள்மிகு மார்க்கபந்துசாமி கோயில், விரிஞ்சிபுரம், தென் ஆற்காடு மாவட்டம்.	2,32,000

இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட சிறப்புப் பணிகள்:

பின்வரும் பழங்கோயில்கள் உட்பட 70 கோயில்களில் "கும்பாபிஷேகங்கள்" நடத்தப்பட்டன:—

1	அருள்மிகு குமரக்கோட்டம் சுப்பிரமணிய சுவாமி கோயில், காஞ்சிபுரம், செங்கற்பட்டு மாவட்டம்.	27-5-82
2	அருள்மிகு கன்னிகாபரமேசுவரி கோயில், சேலம் நகரம், சேலம் வட்டம், சேலம் மாவட்டம்.	27-5-82
3	அருள்மிகு வஞ்சியம்மன் கோயில், மூலனூர், பெரியார் மாவட்டம்.	2-6-82
4	அருள்மிகு தர்மர் திரவுபதியம்மன் கோயில், வல்லதினக் கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.	2-6-82

5	அருள்மிகு கபாலீசுவரர் கோயில், மயிலை, சென்னை-4.	8-7-82
6	அருள்மிகு காளஹஸ்தீசுவரர் கோயில், திண்டுக்கல், மதுரை மாவட்டம்.	29—8—82

கண்காட்சி :

1982 ஜூன்-ஜூலை மாதங்களில் கும்பகோணத்திலும், 1982 ஜூன்-ஜூலை மாதங்களில் திருநெல்வேலியிலும் 1982 ஜனவரி மாதத்தில் சென்னையிலும் இந்து, சமய பண்டைய நாகரீகம், கலை, பண்பாடு ஆகியவற்றை விளக்குகின்ற வகையில் மாவட்ட அளவிலான கண்காட்சி அரங்கங்களை இந்து சமய அறக்கட்டளை நிருவாகத் துறை அமைத்தது. ஒவ்வொரு கண்காட்சியிலும் முதல் பரிசு பெற்றது.

கட்டிடங்கள் :

கோயில்களின் இயங்காச் சொத்துக்களிலிருந்து போதிய அளவு வருமானம் பெறுவதற்கு நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டு இவ்வாண்டில், ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நிலங்களையும், மனைகளையும் அரசு தன் உடைமையில் எடுத்துக் கொள்வதன் மூலமும், தரிசு நிலங்களைச் சாகுபடி செய்வதன் மூலமும், 1935 கட்டிடங்கள், மனைகளின் வாடகையை உயர்த்தியதன் மூலமும் ரூ. 3,41,324·81 கூடுதல் ஆண்டு வருமானம் பெறப்பட்டுள்ளது. கோயில் சிலைகளின் நிழற்படங்கள் அடங்கிய 'ஆல்பம்' தயாரிக்கும் பணி இவ்வாண்டில் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வறிக்கையாண்டில் 5,148 கோயில்களின் 29,722 சிலைகள் புகைப்படமெடுக்கப்பட்டுள்ளன. 4,502 கோயில்களின் ஆல்பங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 230 கோயில்களில் உள்ள 1529 சிலைகள், பாதுகாப்பு ஏற்பாடுகளுடன், அண்மையில் உள்ள கோயில்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

கோயில்கள் நடத்தும் கல்வி-சமூக நல நிறுவனங்கள் :

1.	மகளிர் பல்தொழில் பயிற்சிப் பள்ளி	1
2.	ஆண்கள் பல்தொழில் பயிற்சிப் பள்ளி	1
3.	மகளிர் கலைக் கல்லூரி ..	3
4.	மேல் நிலைப் பள்ளிகள்	15

5.	உயர்நிலைப்பள்ளிகள்	5
6	நடுநிலைப்பள்ளிகள்	5
7	தொடக்கப்பள்ளிகள் ..	3
8	ஆங்கில மெட்ரிக் பள்ளி	1
9	வேத, ஆகம பாடசாலைகள்	6
10	தேவாரப் பாடசாலகைள்	7
11	செவிடர்- ஊமையர் பள்ளி	1
12	தவில்-நாதஸ்வரம் பள்ளிகள்	3
13	கருணை இல்லங்கள் ..	3
14	நூலகங்கள்	202
15	சித்தமருந்தகங்கள்	20
16	ஆங்கில முறை மருத்துவமனைகள் ..	2
17	அரசு உதவித் தொகை பெறும் அன்பு இல்லங்கள்.	31
18	கோயில் நிதிகளை மட்டுமே கொண்டு செயல் படுகின்ற அன்பு இல்லங்கள்.	7
19	ஓதுவார் பயிற்சிப் பள்ளி	1

திருக்கோயில் :

மாதாந்திர பத்திரிகையான ''திருக்கோயில்'' 4,500 நகல்கள் அச்சிடப்பட்டு, இந்திய நாட்டிலும், வெளிநாடுகளிலும் வழங்கப் பட்டுள்ளன.

பதிவுத் துறை.

தலைமை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரியாக பதிவுத் துறைத் தலைவர்1982—83-ல் 15 மேல்முறையீடுகள் மற்றும் மாவட்டாட்சியர்களால் ஆணை கோரப்பட்ட 127 வழக்கு களிலும் இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 56ன் படி ஆணை யிட்டுள்ளார். இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 57(1)-ன்படி 5 வழக்குகள் உயர்நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் :

1981—82 ஆம் ஆண்டு இறுதியில் 42 ஆக இருந்த மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் எண்ணிக்கை 1982—83 ஆம் ஆண்டின் இறுதியில் 44 ஆக உயர்ந்துள்ளன.

சார் பதிவாளர் அலுவலகங்கள் :

இவ்வாண்டு தொடக்கத்தில் 450 சார்பதிவாளர் அலுவலகங்களைக் கொண்டதாக இருந்த இத்துறை மேற்கொண்டு 30 சார் பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்பட்ட பின் ஆண்டு இறுதியில் 480 சார்பதிவாளர் அலுவலகங்களைக் கொண்டுள்ளது.

முத்திரை வருவாய் :

(அ) உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் மிகுவரி உட்பட 1981-82-ல் 48·91 கோடியாக இருந்த பதிவான ஆவணங்கள் மீது செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை 1982-83-ல் 57·18 கோடியாக உயர்ந்துள்ளது. இதற்கு சார்பதிவாளர்கள் மதிப்புக் குறைவைக் கண்டுபிடிப்பதில் விழிப்புணர்வுடன் செயல்பட்டதை காரணமாகக் கொள்ளலாம். இத்தொகையில் 19·08 கோடி மிகுவரியாக வசூலிக்கப்பட்டு 18·49 கோடி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு 0·59 கோடி இத்துறைக்கு வசூலிக்க கட்டணமாக பெறப்பட்டது.

(ஆ) இந்த ஆண்டில் முத்திரைச் சட்டத்தின் கீழ் 32,156 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 64·14 இலட்சம் முத்திரைத் தீர்வையாகவும், இணக்கக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டது. 1981—82-ல் 23,458 வழக்குகளில் ரூ. 42·30 இலட்சம் வசூலிக்கப்பட்டிருந்தது

(இ) 1982—83-ல் பதிவு அலுவலர்களால் முத்திரைச் சட்டம் பிரிவு 41-ன்படி 85,994 ஆவணங்களுக்கு ரூ. 2·87 கோடி வசூலிக்கப்பட்டது. சென்ற ஆண்டில் இது 96,627 ஆவணங்களாகவும் ரூ. 3·78 கோடியாகவும் இருந்தது. மேலே கலம் 8(அ)-யில் முத்திரைத் தீர்வு வருவாய் கூடுதல் தொகையில் இத்தொகை சேர்த்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

புள்ளி விவரங்கள் :

பதிவுகள் :

அறிக்கைக்கு முந்திய காலத்தில் 10,89,142 ஆக இருந்த ஆவணங்களின் பதிவு எண்ணிக்கை அறிக்கை ஆண்டில் 10,52,192 ஆக குறைந்துள்ளது. மாநிலத்தில் நிலவிய வறட்சி ஆவணப் பதிவில் வீழ்ச்சிக்கு காரணமாகலாம்.

ஆவண வகைகள் :

பதிவுச் சட்டத்தின் கீழ் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டிய ஆவணங்களின் எண்ணிக்கை 10,07,831-லிருந்து 9.57,336 ஆக குறைந்துள்ளது. அறிக்கை காலத்தில் குறிப்பிடத்தக்க அல்லது புதுமையான ஆவணங்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

உயில் மற்றும் தத்து ஆவணங்கள் :

1. அறிக்கை காலத்தில் பதிவான உயில்களின் எண்ணிக்கை 19,122. கடந்த ஆண்டில் இவ்வெண்ணிக்கை 19,747.

2. அறிக்கை காலத்தில் பதிவான தத்து ஆவணங்கள் எண்ணிக்கை 8. இது கடந்த ஆண்டில் ஒன்று.

3. அறிக்கை காலத்தில் 93 உயில்களடங்கிய உறைகள் பாது காப்புக்கு தாக்கல் செய்யப்பட்டன. கடந்த ஆண்டில் இவ் வெண்ணிக்கை 123.

பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சொத்து மதிப்பு :

1. அறிக்கை காலத்தில் பதிவான ஆவணங்களின் மொத்த சொத்து மதிப்பு ரூ. 794·40 கோடிகளாகும். சென்ற ஆண்டில் இது ரூ.711·96 கோடி.

2. அறிக்கை காலத்தில் பதிவான ஒரு ஆவண சொத்தின் சராசரி மதிப்பு ரூ. 6,537-லிருந்து ரூ. 7,690க்கு உயர்ந்துள்ளது.

3. அறிக்கை காலத்தில் பதிவான ஒரு ஆவணத்தின் சராசரி பதிவுக் கட்டணம் ரூ. 74·61. இது சென்ற ஆண்டில் ரூ. 63·58 ஆக இருந்தது.

தேடுதல்களும், நகல்களும் :

1. அறிக்கை காலத்தில் வில்லங்க சான்றுக்கான மனுக்களின் எண்ணிக்கை 4,52,964. சென்ற ஆண்டில் 4,79,810.

2. அறிக்கை காலத்தில் தனித் தேடுதல் மனுக்களின் எண்ணிக்கை 1,71,648. சென்ற ஆண்டில் 1,68,213.

3. அறிக்கை காலத்தில் பலவகை தேடுதல் மனுக்களின் எண்ணிக்கை 23,479. சென்ற ஆண்டில் 25,507.

4. அறிக்கை காலத்தில் நகல் மனுக்களின் எண்ணிக்கை 2,09,684. சென்ற ஆண்டில் 1,74,431.

5. அறிக்கை காலத்தில் பலவகை நகல் மனுக்களின் எண்ணிக்கை 28,038. சென்ற ஆண்டில் 35,272.

கூட்டுறவு சங்கங்கள், நிலவள வங்கிகள் மற்றும் வணிக வங்கிகளுக்காக ஆற்றிய பணிகள்.

1. அறிக்கை காலத்தில் கூட்டுறவு சங்கங்களுக்கும் நிலவள வங்கிகளுக்கும், இத்துறை ஆற்றிய பணிகளுக்காக ஈடு செய்யப்பட்ட தொகை ரூ. 40.73 இலட்சங்கள். சென்ற ஆண்டில் ஈடு செய்யப்பட்ட தொகை ரூ. 43.58 இலட்சங்கள்.

2. வணிக வங்கிகளுக்காக ஆற்றிய பணிக்கென ரூ. 1.04 இலட்சம் ஈடு செய்யப்பட்டது. சென்ற ஆண்டில் ஈடு செய்யப்பட்ட தொகை ரூ. 1.41 இலட்சம்.

வருமானம் :

அறிக்கை காலத்தில் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 785.11 இலட்சங்கள். சென்ற ஆண்டில் ரூ. 692.52 இலட்சம். இந்த உயர்வுக்கு திருத்தி அமைக்கப்பட்ட வழிகாட்டி பதிவேடு சந்தை மதிப்பும், அதன் விளைவாக உயர்ந்த ஆவணங்களின் சொத்துகளின் மதிப்பும் காரணமாகும். அறிக்கை காலத்தில் வசூலான தேடுதல் கட்டணம் ரூ. 97.88 இலட்சங்கள். சென்ற ஆண்டில் ரூ. 106.20 இலட்சங்கள். அறிக்கை காலத்தில் வசூலான நகல் கட்டணம் ரூ. 15.21 இலட்சங்கள். சென்ற ஆண்டில் ரூ. 23.60 இலட்சங்கள். அறிக்கை காலத்தில் பதிவுச் சட்டப்படி இதர இனங்களுக்காக வசூலான தொகை ரூ. 40.91 இலட்சங்கள். சென்ற ஆண்டில் ரூ. 80.83 இலட்சங்கள். அறிக்கை ஆண்டில் இத்துறையின் மொத்த வருமானம் ரூ. 9.39 கோடிகள். சென்ற ஆண்டில் இது ரூ. 8.39 கோடியாக இருந்தது.

செலவினம் :

அறிக்கை காலத்தில் செலவு ரூ. 3.85 கோடிகள். சென்ற ஆண்டில் செலவு ரூ. 3.51 கோடிகள்.

தமிழ்நாடு சீட்டு நிதி.

1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் நடை பெற்ற பணி விவரங்கள் :—

(அ) 1981–82 ஆம் ஆண்டு முதலில் 17,423 சீட்டுகள் நடைமுறையிலிருந்தன. 1982–83 ஆம் ஆண்டில் 18,438 சீட்டுகள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

(ஆ) 1981–82 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட சீட்டுகள் 9,146. 1982–83 ஆம் ஆண்டில் 11,911 என உயர்ந்துள்ளது.

(இ) 1981–82 ஆம் ஆண்டில் 8,131 சீட்டுகள் முடிவுற்றன. 1982–83 ஆம் ஆண்டில் முடிவுற்ற சீட்டுகள் எண்ணிக்கை 11,034.

(ஈ) 1981–82 ஆம் ஆண்டின் முடிவில் நடைமுறையிலிருந்த சீட்டுகள் எண்ணிக்கை 18,438. 1982–83 ஆம் ஆண்டு முடிவில் நடப்பிலிருந்த சீட்டுகள் எண்ணிக்கை 19,315.

(உ) 1981–82 ஆம் ஆண்டு முடிவில் நடப்பிலிருந்த சீட்டுகளுக்கான சீட்டுத் தொகை ரூ. 15,29,30,101. 1982–83 ஆம் ஆண்டு முடிவில் நடப்பிலிருந்த சீட்டுகளுக்கான சீட்டுத்தொகை ரூ. 21,33,36,123.

(ஊ) 1981–82-ஆம் ஆண்டு முடிவில் அனைத்து சீட்டுப் பதிவாளர்களிடமிருந்த மொத்தப் பிணையத்தொகை ரூ. 17,02,41,100.50. 1982–83 ஆம் ஆண்டு முடிவில் இருந்த மொத்தப் பிணையத்தொகை ரூ. 22,37,62,633.50. இத்தொகையில் கருவூலத்தில் செலுத்தப்பட்ட பிணையத் தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

	ரூபாய்
1981–82 ஆம் ஆண்டு	— 1,99,81,862.50.
1982–83 ஆம் ஆண்டு	– 89,50,112.50.

பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் :

(அ) துணை விதிகள் :

1981–82-ல் 9,901 துணை விதிகள் பதிவு செய்யப் பட்டிருந்தன. 1982–83 ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட துணைவிதிகளின் எண்ணிக்கை 10,262.

(ஆ) துணை விதி திருத்தங்கள் :

1981–82 ஆம் ஆண்டில் 1,326 திருத்தங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இந்த ஆண்டில் (1982–83) 1,514 திருத்தங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(இ) சிட்டு ஒப்பந்தங்கள் :

1981-82 ஆம் ஆண்டில் 11,553 சிட்டு ஒப்பந்தங்கள் கோர்வை செய்யப்பட்டிருந்தன. இவ்வாண்டில (1982–83) 11,296 சிட்டு ஒப்பந்தங்கள் கோர்வை செய்யப்பட்டுள்ளன.

(ஈ) பிணையத் தொகை செலுத்துவதற்காக மனுக்கள் :

1981–82 ஆம் ஆண்டில் 9,146 மனுக்களும் 1982–83-ம் ஆண்டில் 11,911 மனுக்களும் பெறப்பட்டுள்ளன.

(உ) துவக்கச் சான்றுகள் :

1981–82 ஆம் ஆண்டில் 9,146 துவக்கச் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் (1982–83) 11,911 துவக்கச் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளன.

(ஊ) இதர ஆவணங்கள் :

1981–82 ஆம் ஆண்டில் 2,70,437 இதர ஆவணங்களும் 1982-83 ஆம் ஆண்டில் 1,80,981 இதர ஆவணங்களும் கோர்வை செய்யப்பட்டுள்ளன.

நிதிநிலை :

இவ்வாண்டு மற்றும் சென்ற ஆண்டு வரவு செலவுகளின் விவரங்களும், முடிவுகளும் கீழே கொடுக்கப்படுகின்றன :—

1981—82:—

மொத்த வரவு — ரூ. 22,24,060.50

மொத்த செலவு — ரூ. 14,28,541.47

நிகர வருமானம் ரூ. 7,95, 519.03

1982—83 :

மொத்த வரவு — ரூ. 34,12,574.75

மொத்த செலவு — ரூ. 14,88,852.51

நிகர வருமானம் — ரூ. 19,23,722.24

இந்தியக் கூட்டுப் பங்குதாரர் சட்டம்.

நிறுவனத்தைப் பதிவு செய்தல் :

இம்மாநிலத்தில், முந்தைய ஆண்டில் 10,162 நிறுவனங்கள் பதிவாயின; இவ்வாண்டில் 10,663 நிறுவனங்கள் பதிவாயின. நிறுவனங்கள் பதிவில் சற்று உயர்வு காணப்படுகிறது.

நிதிநிலை :

1982—83-ல் மொத்த வரவு ரூ. 3,12,417.05. செலவு ரூ. 38,870.35. ரூ. 2,73,546.70 மீதம் ஏற்பட்டுள்ளது.

முந்தைய ஆண்டில் வரவு ரூ. 1,32,771.30 செலவு ரூ. 39,124.65 ஆகும்.

தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம்.

தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம், இம்மாநிலத்தில் 22—4—1978ஆம் நாளன்று செயலுக்கு வந்தது; இதனால் 1860-ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் (மத்தியச் சட்டம் 21/1860) ரத்தாயிற்று. 1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழும் 1955ஆம் ஆண்டு திருவாங்கூர், கொச்சி இலக்கியம், அறிவியல்-அறக் கட்டளை சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழும் பதிவான சங்கங்கள் அனைத்தும், இச்சட்டத்தின்கீழ் பதிவாகியுள்ளனவாகக் கருதப்படுகிறது.

1982—83ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 30,433 சங்கங்கள் செயல்பட்டு வந்தன; கடந்த ஆண்டில் 28,003 சங்கங்கள் செயல்பட்டு வந்தன. இவ்வாண்டில் 3,158 சங்கங்கள் பதிவாயிருக்க, முந்தைய ஆண்டில் பதிவான சங்கங்கள் 4,014 ஆகும். இவ்வாண்டில், செயலற்றுப்போன 511 சங்கங்கள் மீண்டும் புத்துயிர்பெற்றன. 378 சங்கங்கள். ஏனைய மாவட்டங்களிலிருந்து மாற்றப்பட்டன; இவ்வாறிருக்க, முந்தைய ஆண்டில், செயலற்றுப்போன 264 சங்கங்கள், மீண்டும் புத்துயிர் பெற்றன. 987 சங்கங்கள், பிற மாவட்டங்களிலிருந்து மாற்றப்பட்டன. இவ்வாண்டில், கலைக்கப்பட்ட சங்கங்கள் 1,051 ஆகும். 1982—83ஆம் ஆண்டில், 1,713 சங்கங்கள் செயல்படவில்லை என அறிவிக்கப்பட்டது. இவ்வாண்டில், 624 சங்கங்கள், ஒரு மாவட்டத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டன. நிதியாண்டு இறுதியில் செயல்பட்டு வந்த சங்கங்கள், 31,092 ஆகும். முந்தைய ஆண்டில் செயல்பட்டு வந்த சங்கங்கள் 30,433 ஆகும்.

நிதிநிலை :

இச்சட்டத்தின்கீழ் 1982—83ஆம் ஆண்டில் கிடைத்த மொத்த வருவாய் 2,47,806.55 ரூபாய் ஆகும். முந்தைய ஆண்டில் கிடைத்த மொத்த வருவாய் 2,23;924.30 ரூபாய் ஆகும்.

எஸ்டேட் நிலவரி ஏற்பாடு.

நிலவரி ஏற்பாட்டுத் துறை பின்வரும் பல்வேறு வகைத் திட்டங்களை நிறைவேற்றும் பணியை மேற்கொண்டு வருகிறது. அவற்றின் விவரம் வருமாறு :—

தமிழ்நாடு 1948ஆம் ஆண்டு எஸ்டேட் (நீக்குதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) (சட்டம் 26/48) சட்டம்:

ஜமீன், கீழ்க் குத்தகை, இனாம் எஸ்டேட்டுகள் ஆகியவை தமிழ்நாடு எஸ்டேட்டு (நீக்குதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் 26/48 ஆம் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன. இவ்வகையில் 29,931.21 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள 5,134 எஸ்டேட்டுகளுக்கு நிலவரி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ், அனைத்து எஸ்டேட்டுகளுக்கும் நிலவரி ஏற்பாட்டுப் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தை நிறைவேற்றியதன் காரணமாகப் பயனடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 23,33,840 ஆகும். அனைத்து கிராமங்கள் சம்பந்தமான பதிவேடு தயாரிக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இனாம் எஸ்டேட்டு (நீக்குதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) (சட்டம் 26/63).

26/48 ஆம் சட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ள இயலாத இருவாரம் இனாம் எஸ்டேட்டுகள், புதிய இனாம் எஸ்டேட்டுகள், பகுதி இனாம் கிராமங்கள் ஆகியவை இச்சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு, அவை, 15–4–1965 ஆம் நாளிலிருந்து தொகுதி தொகுதிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன. மொத்தத்தில் 1,597.84 சதுர மைல் (4,138.48 சதுர கிலோ மீட்டர்) பரப்பளவுள்ள 2,131 இனாம் எஸ்டேட்டுகள் 15–4–1965 ஆம் நாளிலிருந்து தொகுதி தொகுதிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றுள், 27·91 சதுர மைல் (72.29 சதுர கிலோ மீட்டர்) பரப்புள்ள 36 இனாம் எஸ்டேட்டுகளின் நில உரிமைதாரர்கள் அறிவிக்கைக்கு எதிராக மனு தாக்கல் செய்திருப்பதாலும், நீதிமன்றங்களில் தீர்ப்பளிக்கப்படாமல் அல்லது கீழ் நீதி மன்றத் தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளதாலும், நிலவரி

ஏற்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை. 1,569.96 சதுர மைல் (4,066.12 சதுர கிலோ மீட்டர்) பரப்பளவுள்ள 2,096 எஸ்டேட்டுகளுக்கு நிலவரி விதிக்கப்பட்டு, அவற்றில் அனுபோகதாரர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. இச் சட்டத்தின் கீழ் பயனடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 3,55,963 ஆகும். தென்ஆர்க்காடு மாவட்டம், கள்ளக் குறிச்சி வட்டத்திலுள்ள கல்ராயன் மலை, சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் வட்டம் ஆகிய இடங்களில் நிலவரி விழிப்புப் பணி மேற் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இந்த மலைப் பகுதியில் 259.36 சதுர மைல் (671.74 சதுர கிலோ மீட்டர்) பரப்பளவு நிலப்பகுதி, அங்குள்ள மலைவாழ் பழங்குடியினரிடம் உள்ளது. மேற்சொன்ன நிலப்பரப்பில் 21 கிராமங்கள் சம்பந்தப் பட்ட நிலங்களுக்கு 26/63ஆம் சட்டத்தின் கீழ் நிலப் பதிவேடுகள் தயாரிக்கும் பணி சேலத்திலுள்ள, சேலம்-தருமபுரி அச்சிடுவோர் தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்று வருகிறது.

சட்டம் 27/1963 :

1963 ஆம் ஆண்டு குத்தகை நிலங்களை நீக்குதல், இரயத்துவாரிகளாக மாற்றுதல் சட்டம் (27/63), இடைத் தரகர்களுக்கு, குறிப்பிட்ட கால அளவு குத்தகை முறையில் நீண்டகாலமாக குத்தகைக்கு விடப்பட்டுள்ளதை நீக்குவதற்காக இயற்றப் பட்டது. இந்தக் குத்தகைகள், இச்சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டு, அத்தகைய குத்தகைதாரர்களுக்கு, நிலவரி ஏற்பாட்டின்படி வரி விதிக்கப்பட்டது. 13 கிராமங்களின், 82.30 சதுர மைல் பரப்பளவுள்ள நிலங்களுக்கு இச்சட்டத்தின்படி வரி விதிக்கப்பட்டது.

தமிழ்நாடு, சிறு இனாம் (நீக்குதல், ரயத்துவாரி நிலங்களாக மாற்றுதல்) சட்டம் 30/1963 :

1960-65ஆம் ஆண்டுகளில் இனாம் ஆணையாளர் உடைமை உரிமை வழங்கி உறுதி செய்த சிறு இனாம்கள் இச்சட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டு 15—2—1965ஆம் நாளிலிருந்து அரசிடம் நிலை பெற்றது. 13,585 கிராமங்களில் 1 9.85 சதுர மைல் (4,065.91 சதுர கிலோ மீட்டர்) பரப்பளவில் அமைந்துள்ள சிறு இனாம்கள் அறிவிக்கை வெளியிடப்பட்டு அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டன. இரு கிராமங்களில், 1569.58 சதுர மைல்கள் பரப்பளவில் அமைந்துள்ள இனாம்களைத் தவிர, மீதமுள்ள இனங்கள் அனைத்திலும் நிலவரி ஏற்பாட்டுப்

பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன. இக்கால அளவில் ஒரு கிராமத்தில், (0.03 சதுர மைல்) நிலவரி ஏற்பாட்டுப் பணி நிறைவேற்றி முடிக்கப்பட்டது. இந்த இரு நேர்வுகளும் நீதி மன்றத் தடை ஆணைகள், மற்ற தடை ஆணைகள் ஆகியவற்றால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் கீழ் பயன் பெறு பவர்களின் மொத்த எண்ணிக்கை 6,03,260 ஆகும். சிறு கிராமங் களுக்கான இழப்பீட்டுத் தொகை நிலவரி ஏற்பாட்டு அதிகாரி களால் நிர்ணயிக்கப்படுகிறது. பதிவேடுகளில் செய்ய வேண்டிய பதிவு மாற்றங்கள் தொடர்பான திருத்தக் குறிப்புகள் வருவாய் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. 30/63ஆம் சட்டத்தின்படி 27 கிராமங்களில் வரி விதிக்கப்பட்ட இனாம்களின் விவரக் குறிப்புகள் தொடர்பாக 'A' பதிவேட்டிற்கான திருத்தக் குறிப்புக்கள் தயாரிக்கும் பணி இன்னும் முடிவடையவில்லை. அப்பணி, சேலம், சேலம்-தருமபுரி, அச்சிடுவோர் தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்று வருகிறது.

கூடலூர் ஜன்மம் எஸ்டேட்டுகள் (நீக்குதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் 24/1969 :

1929ஆம் ஆண்டு மலபார் குத்தகை உரிமைச் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ், குடியிருக்கும் உரிமை பெற்ற குத்தகை தாரர்கள் உள்ள நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்திலுள்ள ஜன்மம் எஸ்டேட்டுகள் மேற்கூறிய சட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. பத்து கிராமங்களில் உள்ள இந்த ஜன்மம் எஸ் டேட்டு நிலங்களின் மொத்தப் பரப்பளவு 125.14 சதுர மைல் (324.11 சதுர கிலோ மீட்டர்) ஆகும். 27—11—1974ஆம் நாளி லிருந்து அரசிடம் நிலைப்பெற்றுள்ள ஜன்மம் எஸ்டேட்டுகளில் இச்சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் நில வரி ஏற்பாட்டுப் பணி மேற் கொள்ளப்பட்டது. சில ஜன்மம் நிலம் வைத்துள்ளவர்கள் சிலரும், மலைத் தோட்டக் குத்தகைதாரர்களும் உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து தடை ஆணைகள் பெற் றுள்ளனர். 66.59 சதுர மைல் (173.46 சதுர கிலோ மீட்டர்) பரப்பளவு நிலங்கள் மேற் சொன்ன உச்ச நீதிமன்றத்தின் தடை ஆணைகளால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பகுதி களில் நிலவரி விதிப்புப் பணி 30—4—1979 அன்று முடிவடைந் துள்ளது. தடை ஆணைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், களப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு தற்போது முடிக்கப்பட் டுள்ளன. தொடர் நடவடிக்கைகள், தடை ஆணைகள் நீக்கப் பட்ட பிறகே மேற்கொள்ள இயலும்.

முத்திரைத் தாள்கள் (அஞ்சல் முத்திரைத் தாள் அல்லாதவை.)

1982—83 ஆம் ஆண்டில் முத்திரைத் தாள் வகை ஒவ்வொன்றின் கீழும் கிடைத்த வருவாய் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

C. நீதித் துறை சாராத முத்திரைத் தாள் கணக்குத் தலைப்பு.	1982—83 ஆம் ஆண்டிற்கான கணக்குப் புள்ளி விவரங்கள்.	1981—82 ஆம் ஆண்டிற்கான கணக்குப் புள்ளி விவரங்கள்.
(1)	(2)	(3)
	ரூ. பை.	
1 மாற்று முறி	16,39,123,25	17,40,906.00
2 ஒட்டக்கூடிய ரெவின்யூ முத்திரைத் தாள்கள்	2,65,95,632.60	2,53,10,314.04
3 நீதித்துறை சாராத ஏனைய முத்திரைத் தாள்கள்.	56,47,01,780.55	49,97,10,191.10
4 ஏனைய முத்திரைகள் வாயிலாகக் கிடைத்த வரவு.	7,086.08	4,753.30
5 முத்திரைத் தாள் ஒட்டப்படாத அல்லது போதுமான அளவு முத்திரைத் தாள் ஒட்டப்படாத பத்திரங்கள்.	4,77,25,282.24	3,07,95,699.48
6 ஒட்டக்கூடிய தனி முத்திரைத் தாள்	3,02,04,492.45	2,35,72,934.07
7 அபராதமும் தண்டனையும்	1,34,619.20	1,70,048.35
8 பல்வகை வரவுகள் ..	1,77,571.77	5,13,975.72

B. நீதித்துறை சார்ந்த முத்திரைத் தாள்.

கணக்குத் தலைப்பு:	1982—83 ஆம் ஆண்டிற்கான கணக்குப் புள்ளி விவரங்கள்.	1981—82 ஆம் ஆண்டிற்கான கணக்குப் புள்ளி விவரங்கள்.
(1)	(2)	(3)
	ரூ. பை.	
1 முத்திரைத் தாள்கள் வாயிலாகக் கிடைக்கப் பெற்ற நீதித் துறைக் கட்டணங்கள்.	7,16,46,498.04	6,65.03,248.66
2 பத்திரப் பதிப்புப்படி முத்திரைத்தாள் விற்பனை.	13,15,756.30	13,69.257.63
3 அபராதமும் தண்டனையும்	43,490.56	1,09.199.74
4 பல்வகை வரவுகள்	9,021.30	18,855.95
மொத்தம்	74,42,00,354.34	64,98,19,384.04

மேற்கூறிய கணக்குப் புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், முத்திரைத் தாள்களின் விற்பனை மொத்தம் ரூ. 9.45 கோடி அதிகரித்துள்ளது என்பது தெரியவருகிறது. இயங்காச் சொத்தின்மீது விதிக்கப்படும் முத்திரைத் தாள் தீர்வை வீதத்தைத் திருத்தி அமைத்ததும், சில பத்திரங்கள் மீது முத்திரைத் தாள் தீர்வை வீதத்தை உயர்த்தியதுமே இதற்குக் காரணமாகும்.

எந்தவிதத் தடங்கலும் இல்லாமல் மாவட்டங்களுக்கு முறையாக முத்திரைத் தாள்களை வழங்குவதற்காக தேவைக் குறிப்பானது, இந்த ஆண்டு, இந்தியக் கருவூலப் பத்திர அச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முத்திரைத் தாள் போதவில்லை என்று இம்மாநிலத்திலுள்ள எந்தப் பகுதியிலிருந்தும் உரிமம் பெற்ற முத்திரைத் தாள் விற்பனையாளர்களிடமிருந்தோ அல்லது பொதுமக்களிடமிருந்தோ புகார் ஏதும் வராமலிருப்பதே இந்த முத்திரைத் தாள் நிருவாகச் செயல் முறையின் சிறப்புக் கூறாகும்.

இதற்கு துறையினரால் எடுக்கப்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகள் காரணமாகும்:—

1. எல்லா மாவட்டங்களிலும் போதுமான அளவு முத்திரைத் தாள்களை இருப்பு வைத்திருத்தல்.

2. எதிர்பாராத தேவை ஏற்படும் கருவூலங்களில், அவர்களின் தேவையை நிறைவு செய்ய பிறிதொரு கருவூலத்திலிருந்து அவற்றை மாற்றிக் கொள்ளுதல்.

3. சம்பந்தப்பட்ட கருவூலங்களின் இருப்பு நிலை பற்றிய அறிக்கையை நுணுக்கமாக ஆய்வு செய்தல்.

4. ஒருங்கிணைந்த தேவைக் குறிப்பைத் தயாரித்து, வரையறுக்கப்பட்ட நாளில் இந்தியக் கருவூலப் பத்திரங்கள் அச்சகத்திற்கு அனுப்புதல்.

5. தேவைப்படும்போதெல்லாம் முத்திரைத் தாள்களை வழங்குமாறு கோரி, இந்தியப் பாதுகாப்பு அச்சகத்துடன் அவ்வப்போது கடிதத் தொடர்பு கொள்ளுதல்.

நில அளவை-நிலப்பதிவேடுகள்.

தமிழ்நாடு நில அளவை—நிலப்பதிவேடுகள் துறை 1—3—1968 முதல் செயல்பட்டு வருகிறது. நில நிருவாகத்துறை ஆணையாளர் அலுவலகத்தில் இணை ஆணையாளராக அலுவல் முறையில் இருக்கும் நில அளவை நில வரி ஏற்பாட்டுத் துறை இயக்குநர் இத்துறையின் தலைவராவார். இவருக்கு உதவியாக நில அளவை நிலப்பதிவேடுகள் இணை இயக்குநர் உள்ளார். அலுவலகப் பணியில் இணை இயக்குநருக்கு உதவியாக இரண்டு நேர்முக உதவியாளர்களும், ஒரு கணக்கு அலுவலரும் ஒரு நிருவாக அலுவலரும் அலுவலகத்தில் உள்ளனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒருங்கிணைந்த நில அளவை நிலப்பதிவேடுகள் பிரிவு அலுவலகம் ஒன்று உள்ளது. இதற்கு நில அளவைத்துறை உதவி இயக்குநர் தலைவர் ஆவார். இவர் மாவட்ட ஆட்சித் தலைவரின் (நில அளவை) நேர்முக உதவியாளராகவும் செயல் படுகிறார். வெளியூர் உட்பட மாவட்டத்தில் உள்ள நில அளவைப் பணித் தொடர்பான அனைத்து இனங்களுக்கும் தனி இனங்களுக்கும் வருவாய்த்துறை பதிவேடுகளைப் பராமரிப்பதற்கும் உதவி இயக்குநர் பொறுப்பு வகிக்கிறார்.

இவ்வாண்டில் பெரியார் மாவட்டத்தில் தருமபுரம் காங்கேயம் வட்டங்களில் முந்தைய ஆண்டு மறு நில அளவை செய்யப்பட்ட 22 கிராமங்கள் குறித்த நில அளவைப் பதிவேடுகள், வருவாய் சம்பந்தப்பட்ட முறையில் மேற்கொண்டும் தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக நிலவரி ஏற்பாட்டுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. அதேபோல குன்னூர் வட்டம், உதகமண்டல வட்டத்தின் ஒரு பகுதி ஆகியவற்றிற்கான பதிவேடுகளும், நிலவரி தொடர்பாக மேற்கொண்டும் தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக நிலவரி ஏற்பாட்டுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. அதே சமயத்தில், மதுரை மாவட்டம், கொடைக்கானல் வட்டம் தொடர்பான இத்தகையப் பதிவேடுகள் தயாரித்து முடிக்கப்பட்டு, மேற்கொண்டும் தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக நிலவரி ஏற்பாட்டுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன.

நகர்ப்பகுதி நில அளவை.

இவ்வாண்டில், தென்னாற்காடு மாவட்டத்தில் நெல்லிக் குப்பம் நகராட்சிப் பகுதி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்

கோட்டை, கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருப்பூர், பெரியார் மாவட்டத்தில் கோபிச்செட்டிப்பாளையம், சேலம் மாவட்டத்தில் திருச்செங்கோடு, ஆத்தூர், நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டல நகர்ப்பகுதி ஆகிய இடங்களில் நகர்ப்பகுதி நில அளவைப் பணி தொடர்ந்து செய்யப்பட்டது,

பதிவேடுகளை நாளது வரையாக்கும் திட்டம்.

நிலப்பதிவேடுகளை நாளது வரையாக்கும் இத்திட்டம் இம்மாநிலத்தில் 1979 ஆம் ஆண்டிலேயே கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தைக் கொண்டு வருகையில் இத்துறையில் பல்வேறு பிரிவுகளில் உள்ள பணியாளர்களை ஒன்று திரட்டி அவர்களிடம் இப்பணி பகிர்ந்தளிக்கப்பட்டது. அவ்வாறு ஒன்று திரட்டுவதன் மூலம் 28 பிரிவுகள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவும் ஒரு வட்டத்திற்குப் பொறுப்பாக இருக்கும். இத்திட்டப் பகுதியில் பணியின் முன்னேற்றம், விவசாயிகள் பெறும் பலன்கள் ஆகியவற்றைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு இம்மாநிலத்தின் நிலை நிதிக்குழு விரிவாக ஆய்வு செய்தது. இதுவரை அடைந்துள்ள சாதனைகள், கிராம மக்கள் அடைந்துள்ள பயன்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தேவையான பணியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, இம்மாநிலத்தில் இதற்கென குறிக்கப்பட்ட எஞ்சியப் பகுதிகளிலும் இதனைக் கொண்டுவரும் வகையில், இப்பிரிவுகளின் எண்ணிக்கையை உடனடியாக 80 ஆக உயர்த்த அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதன்படி, சுமார் 6,000 பேர்கள் பணிக்கு எடுக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு, பணியில் அமர்த்தப்பட்டனர்.

பதிவேடுகளை நாளது வரையாக்கும் திட்டத்தின் பணி முன்னேற்றம்.

1	இம்மாநிலத்தில் இத்திட்டத்தின்கீழ் வரக்கூடிய மொத்த பகுதி ..	80,000 ச.கி.மீ.
2	30–4-1980 வரை இத்திட்டப்பணிக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட கிராமங்களின் மொத்த எண்ணிக்கை ..	9,567 கிராமங்கள்.
3	2 ஆம் எண் இனத்தின்கீழ் வரும் பகுதி	70,205 ச.கி.மீ.

4	இதற்கு இடம் கண்டறியப்பட்டு இப் பணி முடிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை	2,650 கிராமங்கள்.
5	4 ஆம் இனத்தின்கீழ் வரும் பகுதி.	16,608 ச.கி.மீ.
6	EF-ன் கீழ் இப்பணி முடிக்கப்பட்ட கிராமங்களின் மொத்த எண்ணிக்கை	2,261 கிராமங்கள்.
7	6 ஆம் எண் இனத்தின்கீழ் வரும் பகுதி	13,873 ச.கி.மீ.
8	இப்பணிக்கு கண்டறியப்பட்டுள்ள துணை கோட்டங்களின் மொத்த எண்ணிக்கை	5,95,736
9	ஆய்வு செய்யப்பட்ட மொத்த கற்களின் எண்ணிக்கை	25,02,714
10	அளவிடப்பட்ட துணைக் கோட்டங்களின் மொத்த எண்ணிக்கை	19,43.364
11	புதுப்பிக்கப்பட்ட கற்களின் மொத்த எண்ணிக்கை	9,26.339
12	கணக்கிடப்பட்ட நில ஆக்கிரமிப்புப் பகுதிகளின் மொத்த எண்ணிக்கை.	97,500
13	அளவிடப்பட்டு வரைபடம் தயாரிக்கப் பட்ட இயற்கையமைப்புக் கூறு பற்றிய விவரங்களின் மொத்த எண்ணிக்கை	3,20,540
14	தகராறு உள்ள இனங்கள் அறிவிக்கப் பட்ட இனங்களின் மொத்த எண்ணிக்கை	12,348
15	30-4-1983 வரை ஒப்படைக்கப்பட்ட நியாயமான கணக்குகளின் மொத்த எண்ணிக்கை	1,149
16	13 அறிவிக்கை வெளியிடப்பட்ட கிராமங்களின் மொத்த எண்ணிக்கை	1,089
17	வழங்கப்பட்ட பட்டாக்களின் விவரங்கள்—	
	தனிப்பட்ட வகையில்	5,33,661
	கூட்டுமுறை	1,87,900
	மொத்தம்	7,21,561
18	இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை	10,30,888

இவ்வாண்டில், முதன்முறையாக இத்துறை சென்னையில் அரசு பொருட்காட்சியில் அரங்கம் ஒன்றை அமைத்தது. இத் துறைகளின் நடவடிக்கைகள் குறித்து மக்களுக்கு தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல் தயாரிக்கப்பட்ட பதிவேடுகள் நன்மைகளின் குறித்து அவர்களுக்கு தெரிவிப்பதற்காகவும் இது அமைக்கப் பட்டது. இந்த அரங்கத்தில், மத்திய நில அளவை அலுவலகத் தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட பல்வேறு வரைபடங்களை விற்பதற்காக ஒரு விற்பனைப் பிரிவும் அமைக்கப்பட்டது. அது மிகவும் பயனளித்தது. எனவே, மதுரை, திருச்சி, கும்பகோணம், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நடத் தப்படும் அரசுப் பொருட்காட்சிகளிலும் இதே போன்ற அரங் கங்களை ஏற்படுத்த அரசு இத்துறைக்கு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணி, இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் தொடங்கப்பட்ட அரங்கத்திற்கு அரசு இத்துறைக்கு இரண்டாம் பரிசை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம்:

இத் தீர்ப்பாயம், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், மத்திய விற்பனை வரிச் சட்டம், தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் மற்றும் தமிழ்நாடு மேல் வரிச் சட்டம் ஆகியவற்றின் படி இயங்கும் இரண்டாம் நிலை தீர்ப்பாயம் ஆகும். இத்தீர்ப் பாயச் செயல் முறைகளிலும் வரை முறைகளிலும் 1982—83-ஆம் நிதியாண்டில் எவ்வித மாற்றமும் இல்லை. தமிழ்நாட்டில் மொத்தம் நான்கு தீர்ப்பாயங்கள் இயங்கி வருகின்றன. இதில் மாநிலத் தலைநகரமான சென்னை மாநகரத்தில் முதன்மைத் தீர்ப்பாயமும், ஒரு கூடுதல் தீர்ப்பாயமும் இயங்கி வருகின்றன. இவை தவிர, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இரு பெருநகரங் களிலும் முறையே ஒவ்வொரு கூடுதல் தீர்ப்பாயம் இயங்கி வரு கிறது.

1—4—1982-ஆம் தேதியில் 2,321 முறையீடுகளும், 13 தீர்ப் பாய பரிசீலனை மனுக்களும் நிலுவையாக அனைத்து தீர்ப்பாயங் களிலும் இருந்தன. கடந்த நிதியாண்டில் 3,653 முறையீடுகளும்

66 பரிசீலனை மனுக்களும் பதிவு பெற்றன. இதனால் தீர்வு காணவேண்டிய முறையீடுகள் 5,974-ஆகவும், பரிசீலனை மனுக்கள் 79-ஆகவும் உயர்ந்தன. இவற்றில் 2,521 முறையீடுகளும் 16 பரிசீலனை மனுக்களும் தீர்வு காணப்பட்டன. 31 —3 —1983-ஆம் தேதியில் 3,453 முறையீடுகளும் 63 பரிசீலனை மனுக்களும் தீர்வுக்காக வேண்டி நிலுவையிலுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

தமிழ்நாட்டு இந்தத் தீர்ப்பாயம் வேளாண்மைவருமான வரிச் சட்டம் 1956-ன் கீழ் இயங்கும் இரண்டாம் நிலை முறையீட்டுத் தீர்ப்பாயம் ஆகும். கடந்த நிதியாண்டின் ஆரம்பத்தில் (1 —4 —1982) 87 மேல் முறையீடுகள் நிலுவையாக இருந்தன. இந்த ஆண்டில் 132 முறையீடுகள் பதிவு பெற்றன. இதன் மூலம் மொத்தம் 219 முறையீடுகள் தீர்வு காண்பதற்கு வந்தன. இவற்றுள் 178 முறையீடுகள் முடிக்கப்பட்டன. 31 —3 —1983-ஆம் நாளில் 41 முறையீடுகள் நிலுவையில் இருந்தன.

தமிழகத்தில் மொத்தம் 16 மேல் முறையீட்டு உதவி ஆணையர்கள் உள்ளனர். இவர்கள் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச்சட்டம், தமிழ்நாடு மேல் வரிச்சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் முதல் முறையீடுகளை விசாரிப்பவர்கள். இவர்களின் நாட்குறிப்பு, காலமுறை அறிக்கைகள் மற்றும் ஆய்வுகள் மூலமாக இவர்களின் செயல்முறைகள் பரிசீலிக்கப்படுகிறது. தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், மத்திய விற்பனை வரிச் சட்டம், கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல் வரி ஆகியவற்றின்கீழ் மொத்தம் 6,790 முறையீடுகள் நிலுவையாக 1—4—1982-இல் இருந்தன. நிதியாண்டில் மொத்தம் 14,933 முறையீடுகள் வரப்பெற்றன. முடிவுற வேண்டிய மொத்த முறையீடுகளின் எண்ணிக்கை 21,723 ஆகும். இவற்றுள் 14,003 முறையீடுகள் முடிக்கப்பட்டன. 31—3—1983-இல் 7,720 முறையீடுகள் நிலுவையில் உள்ளன.

வக்பு வாரியம்.

1982–83 ஆம் நிதியாண்டிற்காக ஒப்பளிக்கப்பட்ட வக்பு நிறுவன சீரமைப்பு மான்யத் தொகை ரூ. 5,00,000 வக்பு வாரியத்தின் பொறுப்பில் பங்கீடு செய்வதற்காக கொண்டு வரப்பட்டுள்ளது. இத்தொகையில் 38 வக்ப் நிறுவனங்களுக்கு முதல் தவணையாகவும், 159 வக்ப் நிறுவனங்களுக்கு இரண்டாவது தவணையாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

வக்பு வாரிய சாதனைகள் பின்வருமாறு :—

இந்த 5-வது வக்பு வாரியம் ஏற்படுவதற்கு முன்பு இயங்கிய வக்பு வாரியங்கள் முத்தவல்லிகளை நியமிக்கவும், முத்தவல்லிகளை நீக்கவும், இன்னும் இதர தகராறுகளை விசாரிக்கவும தமிழ் நாட்டிலுள்ள எல்லா முத்தவல்லிகளையும் அது சம்பந்தப்பட்டவர்களையும் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்ததால் முத்தவல்லிகளுக்கும், அது சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும், இதில் ஈடுபட்ட தனிப்பட்டவர்களுக்கு அதிக செலவினங்கள் ஆயின.

இந்த இக்கட்டான நிலையை 5-வதாக அமைக்கப்பட்ட ஜனாப்.எஸ்.எச். செய்யது யூசுப் தலைமையில் இந்த வாரியம் மூன்று விசாரணை ஆய்வு குழுக்களை நியமனம் செய்து, சென்னை, திருச்சி, மதுரை ஆகியவைகளை மையமாக வைத்து மேற்படி ஆய்வுக் குழு இயங்கி அதனுடைய அறிக்கைகளை சமர்ப்பித்து வருகின்றன. மேலும், 4 விசாரணை ஆய்வுக் குழுவை சென்னை. திருச்சி, மதுரை, சேலம், ஆகியவைகளை மையமாகக் கொண்டு விசாரணை நடத்தி அறிக்கைகளை துரிதமாக வழங்குகின்றது. மேற்படி விசாரணைக்குழு நியமனம் செய்த பிறகு, நீண்டகாலமாக முடிவடையாமல் இருந்த வழக்குகளை இந்த வாரியத்தால் துரிதமாக தீர்வுகாண முடிந்தது.

மத்திய சிறைச்சாலையில், வெள்ளிக்கிழமை தொழுகையையும், பெருநாள் தொழுகையையும், ஒரு முல்லாவை நியமித்து இவ்வாரியம் நடத்தி வருகிறது.

வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள பேர்ணாம்பட்டு கிராமத்தில் ஜாதி கலவரத்தினால் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கு இவ்வாரியம் ரூ. 10,000 வழங்கியது.

1958 ஆம் ஆண்டிலிருந்து வாரிய ஊழியர்களின் பணிகளை முறைப்படுத்தாமலும் ஒழுங்குபடுத்தாமலும் , ஊதிய உயர்வு கொடுக்காமலிருந்த நிலைமைகளை மாற்றி பதவி உயர்வும், நிலுவையுடன் ஊதிய உயர்வும், பணியாளர்களுக்கு வழங்கி ஊக்குவித்தது.

முன்பு 51 இள நிலை எழுத்தாளர்களும், தட்டெழுத்தாளர்களும் இவ்வாரியத்தில் இருந்தார்கள். இளநிலை எழுத்தாளர்களுக்கும், உதவி எழுத்தாளர்களுக்கும் பதவி உயர்வு இல்லாத சூழ்நிலைகளை மாற்றி 9 உதவி எழுத்தர்களாக இருந்த பணியமைப்பை மாற்றி 35 ஆக மாற்றியது. இன்னும் வட ஆற்காடு, தென் ஆற்காடு ஒரு புது சரக அலுவலகத்தை வேலூரை மையமாகக் கொண்டு நடக்க இந்த நடப்பு ஆண்டிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தல பணியாளர்கள் வாரிய வழக்குகள் நீதி மன்றங்களில் நடக்கும் பொழுது ஏற்படும் செலவுகளை தங்கள் சொந்த பணத்திலிருந்து செலவு செய்து கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். தல பணியாளர்களின் பொருளாதாரப் பாதிப்பை நீக்கும் வண்ணம் ஒவ்வொரு தல பணியாளர்களுக்கும் ரூ. 100, கண்காணிப்பாளர்களுக்கு ரூ. 200 சில்லரை சிலவு முன்பணமாகக் கொடுத்து வாரிய ஊழியர்களின் துயரைப் போக்கியது.

வக்பு நிறுவன முத்தவல்லிகள், நம்பகர்கள் ஆகியவர்களுக்கு அவர்களில் பொறுப்பு பற்றியும், வக்பு சட்டத்தைப் பற்றியும், நிறுவனங்களை எவ்விதம் நடத்த வேண்டும் என்பது பற்றியும் அறிந்து கொள்ள ‘ இஸ்மி ’ என்ற மாத தமிழ் ஏடு நிறுவி வாரியத்தின் சீர்மிக ஆற்றலை பிரதிபலிக்கச் செய்தது.

3-வது வக்பு வாரியம் மோசடியாக உடன்பாடு செய்து போட்ட தீர்மானங்களை எல்லாம் ரத்து செய்து வக்பு சொத்துக்களை மீட்க நடவடிக்கை செய்தது.

சிறு மருத்துவ உடல் நல நிலையங்களை, திட்டு விளை, கன்னியாகுமரி மாவட்டத்திலும், மாத்தூர், மதுரை மாவட்டத்திலும், சோழமாதேவி, கோயம்புத்தூர் மாவட்டத்திலும் ஆரம்பித்துள்ளது.

465 ஏழை பையன்களுக்கு நல்ல சத்துணவும், மற்றும் துணி மணிகளும் கொடுத்து இலவசமாக விருத்த சேதனம் செய்தது.

ஏழை விதவைகளுக்கும், இதர முஸ்லீம் நிறுவனங்களுக்கும் இலவசமாக தையல் இயந்திரங்களை கொடுத்து உதவியுள்ளது.

அனாதையான மாணவர்கள் மேல் படிப்புக்கும், திக்கில்லா பெண்களின் கலியாண செலவும், உடல் ஊனமுற்றோரின் அன்றாட வாழ்க்கைக்கான வசதி சாதனங்கள் கொடுத்தும் இலவச மானியம் பெற்று பயனடைந்தவர்கள் 194 பேர்கள். இதில் 144 பேர்கள் 1982–83 ஆம் ஆண்டில் பயனடைந்துள்ளனர்.

ரம்ஜான் மாதத்தில் தொழுநோய் உள்ள ஆண் பெண்களுக்கு இலவசமாக துணிமணிகள் வழங்கப்படுகின்றன.

தலைவர் எஸ். எச். செய்யது யூசுபு அவர்கள் சொந்தச் செலவில் நபிகள் நாயகம் முகைதீன் ஆண்டவர்கள், சாஹுல் ஹமீது ஆகிய நபிகள், அவுலியாக்கள் மீது மௌலூது ஓதி நேர்ச்சை வழங்கி வரப்பட்டுள்ளது.

வக்பு வாரியத்தில் ஒரு மஸ்ஜிதை நிர்மாணித்து அதில் முன்னின்று நடத்தும் பேஷ்இமாமுர்கு தலைவர் எஸ்.எச். செய்யது யூசுபு தனது சொந்தச் செலவில் சம்பளம் கொடுத்து, வக்பு வாரிய ஊழியர்களும், பொது மக்களும் இறைவனை வணங்க வசதி செய்து தந்த இச்சாதனை வக்பு வாரிய சரித்திரத்திலேயே முதல் முதலாக இடம் பெற்றுள்ளது. இதற்குமுன் வக்புவாரிய சரித்திரத்திலேயே இவ்வித உன்னதமான காரியம் நடைபெறவில்லை.

அரசு ஊழியர்களுக்கு கிடைக்கும் மருத்துவ சலுகைகளை வக்பு ஊழியர்களுக்கும் கிடைக்கச் செய்து எல்லா வக்பு ஊழியர்களும் பயனடைய செய்யப்பட்டுள்ளது.

இதுவரை வக்பு வாரியத்திற்குச் சொந்தமான இடமில்லாமல் இருந்த நிலைமாறி, ஜார்ஜ் டவுன் பகுதியில் ஜாபர்சிங்ரோடில் மத்திய பாதுகாப்பு அரசுக்குச் சொந்தமான 5 மனைகள் ரூ. 3,07,692 மத்திய அரசின் இணையுடன் வாங்கி வக்பு வாரிய கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனி அதிகாரியின் ஆலோசனையின் பேரில் குடிமுறை வழக்குகளை ஆலோசிக்க ஒரு சட்ட ஆலோசகரை நியமித்துள்ளது

வக்பு வாரியத்தின் நேரடிப் பார்வையில் இரண்டு கலைக் கல்லூரிகள் மதுரையிலும், உத்தமபாளையத்திலும இயங்கி வருகின்றன.

அத்தியாயம் 4.

கூட்டுறவுத் துறை

STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY

அத்தியாயம் 4.

கூட்டுறவுத் துறை

கூட்டுறவு.

துறையின் அமைப்பு :

இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் 1955 ஆம் ஆண்டு வரையில் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் நிருவாகப் பொறுப்பின் கீழ் இருந்தன. 1956–57 ஆம் ஆண்டி லிருந்து, சில வகைச் சங்கங்களின் நிருவாகப் பொறுப்பு சந்தர்ப் பத்திற்கேற்ப கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ்ப் பதிவாள ருக்குள்ள அதிகாரங்களை வழங்கி ஏனையத் துறைகளிடம் அல் லது சட்டப் படிக்கமைந்த வாரியத்திடம் மாற்றப்பட்டது தற்போது, கூட்டுறவுச் சங்கப் பதிவாளரைத் தவிர, அந்தந்தப் பணிக்குரிய பதிவாளர்கள் 12 பேரும் உள்ளனர்.

பதிவாளர், கூட்டுறவுத் துறையின் தலைவராவார். கூட் டுறவுச் சங்கப் பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றும் முக்கியப் பணிகள், நகர்ப்புறப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும், வேளாண்மை உற்பத்தி, கிராமக் கடன் அளித்தல், நகர்ப்புறக் கடனுதவி, விற்பனை, வேளாண் விளை பொருள்களைச் செய்முறைப் படுத்தல், வேளாண்மை இடு பொருட்கள், நுகர்பொருள்கள், இன்றியமையாப் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்தல் ஆகியவற்றின் தொடர்புடைய தாகும்.

நடுவர் தீர்ப்பு :

பொதுவான பொருளாதாரத் தேவைகளுடன் மக்களிடையே சிக்கனம், சுய உதவி, பரஸ்பர உதவியை ஏற்படுத்துவதே கூட் டுறவுச் சங்கங்களின் பொதுவான நோக்கமாகும். கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், உரிமையியல் நீதிமன்றம் மூலம் தங்களு டைய தகராறுகளை அதிகச் செலவிட்டு நீண்டகாலம் வழக் காடித் தீர்த்துக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படின், இந்த நோக்கங்களை எய்துவது சாத்தியமாகாது. 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் அன்றுள்ளவாறு நடுவர் தீர்ப்புக்கு வரப்பட்ட உரிமை கோரிக்கைகள் 31,322 இருந்தன. இந்த

ஆண்டில், 2,31,261 நடுவர் தீர்ப்பு உரிமைக் கோரிக்கைகள் வரப்பெற்றன. இவற்றில் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளன்றுள்ளவாறு, 2,24,423 உரிமைக் கோரிக்கைகள் குறித்து முடிவெடுக்கப்பட்டன ; 38,160 உரிமை கோரிக்கைகள் முடிவுறாமல் உள்ளன.

நிறைவேற்பு :

1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளன்றுள்ளவாறு, 4,68,728 நிறைவேற்பு மனுக்கள் முடிக்கப்பெறாமலிருந்தன. 1—4—1982 முதல் 31 – 3 — 1983 வரையில் 1,07,996 நிறைவேற்பு மனுக்கள் வரப்பெற்றன. ஆண்டு இறுதியில் 95,530 மனுக்கள் முடிக்கப்பெற்றன ; 4,81,194 மனுக்கள் முடிக்கப்படாமல் உள்ளன.

இழப்பு பொறுப்பு நடவடிக்கை :

1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளன்றுள்ளவாறு, துணைப் பதிவாளரிடம் 489 இழப்புப் பொறுப்பு நடவடிக்கைகள் முடிவுறாமலுள்ளன. 1—4—1982 முதல் 31 – 3 — 1983 வரையில் 165 இழப்புப் பொறுப்பு வழக்குகள் வந்தன. 31— 3 — 1983 அன்றுள்ளவாறு 203 வழக்குகள் முடிக்கப்பெற்றன ; 451 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன.

விசாரணை :

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 65 ஆம் பிரிவு, ஒரு சங்கத்தின் அமைப்பு, செயற்படும் தன்மை, நிதி நிலைமை குறித்து பதிவாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் விசாரணை நடத்துவதற்கு வகை செய்கிறது. 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளன்றுள்ளவாறு ஆண்டுத் தொடக்கத்தில் 272 விசாரணைகள் முடிவுறாமலிருந்தன. 1982—83 ஆம் ஆண்டில் 451 விசாரணைகள் நடத்த உத்தரவிடப்பட்டது ; 403 விசாரணைகள் முடிக்கப்பட்டன ; 31—3. 1983 அன்றுள்ளபடி 320 விசாரணைகள் முடிவுறாமல் இருந்தன

ஆய்வு :

கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதில் தெரிவித்துள்ள குறைகளை நீக்கும் பொருட்டு அல்லது அச்சங்கங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தெரிவிக்கும் பொருட்டு பொதுவாகக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. 1-4-1982 அன்றுள்ளவாறு, ஆண்டுத் தொடக்கத்தில் 68 ஆய்வுகள் முடிவுறாமல் இருந்தன. 1982-83 ஆம் ஆண்டில் 249 ஆய்வுகள் நடத்த உத்தரவிடப்பட்டன; 31-3-1983 அன்றுள்ளவாறு 220 ஆய்வுகள் நடத்தி முடிக்கப்பட்டன; 97 ஆய்வுகள் முடிவுறாமல் இருந்தன.

கலைப்பு :

1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளன்றுள்ளவாறு கலைக்கப்பட்ட 1,335 சங்கங்கள் ஆண்டுத் தொடக்கத்தில் கலைப்பு அதிகாரிகளின் பொறுப்பில் இருந்தன. 111 சங்கங்களின் நடவடிக்கைகள் 1982-83 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டன. 31-3-1983 அன்றுள்ளவாறு கலைக்கப்பட்ட 245 சங்கங்களின் பணிகள் இறுதியாக முடிக்கப்பட்டன. கலைக்கப்பட்ட 1201 சங்கங்கள் மூடப்பட உள்ளன.

வேளாண்மைக் கடன்

இம்மாநிலத்தில் 4,676 வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றின் கீழ் மொத்த வேளாண்மை நிலங்களில் 81.1 சத விகிதம் வருகிறது. இந்த ஆண்டில், இச்சங்கங்கள் ரூ. 67.18 கோடிக்கு குறுகியக் காலக் கடன் (பயிர்க்கடன்) அளித்துள்ளன. மேலும், இச்சங்கள் உழவு மாடுகள், கறவை மாடுகள் ஆகியவற்றை வாங்குதல், செம்மறியாடு வளர்த்தல், கோழிப்பண்ணை வைத்தல், கன்று வளர்த்தல் உழவுக் கருவிகள் வாங்குதல் முதலியவற்றுக்கு ரூ. 15.97 கோடி நடுத்தரக் காலக் கடன் வழங்கியுள்ளன. வறட்சி, வெள்ளம் காரணமாக உறுப்பினர்களிடம் காலங்கடத்த பாக்கித்தொகை அதிகமாக ஏற்பட்டதைத் தொடர்ந்து கூட்டுறவுக் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கு உழவர்ச் சங்கங்கள் ஒருமித்த கடும்

எதிர்ப்பு தெரிவித்தனால் 1978–79, 1979–80, 1980–81 ஆம் நிதி ஆண்டுகளில் குறுகியக் கால, நடுத்தரக் கால வேளாண்மைக் கடன் அளிக்கும் அளவு ஒரே சீராகக் குறைந்து வந்துள்ளது.

காலங்கடந்த பாக்கித்தொகை மிக அதிகமாக இருந்ததால் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கிய மோசமான நிலைமைகளைக் கருத்திற்கொண்டு 1981 மார்ச் திங்கள் முதல் வாரத்தில் அரசு, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கடன் பெற்ற செல்வந்தர்கள் அதிகத் தொகை கடன் வாங்கியவர்கள் ஆகியோர்மீது சட்ட நடவடிக்கை எடுக்க மத்தியக் கூட்டுறவு வங்கிகளை அனுமதித்தது. கடும் நடவடிக்கை எடுக்கப் பட்டதால். மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் கணிசமான அளவு தொகையை வசூலித்து காலங்கடந்த பாக்கித் தொகையின்அளவை 30 – 6 – 1981-க்குள் 31.8 சதவீததிற்குக் குறைக்க முடிந்தது. இதன் காரணமாக, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தும், இந்திய ரிசர்வ் வங்கி அனுமதித்தக் கடன் வரையறை அளவுக்குக் கடன் வழங்கும் தகுதியைப் பெற்றன. எனவே, 1981–82 ஆம் ஆண்டில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ரூ. 77.20 கோடிக்கு குறுகியக் காலக் கடனும், ரூ. 9.79 கோடிக்கு நடுத்தரக் காலக் கடனும் வழங்க முடிந்தது. ஆனால் 1980–81 ஆம் ஆண்டில் வழங்கிய இக்கடன்கள் முறையே ரூ. 21.52 கோடி, ரூ. 4.25 கோடி மட்டுமே ஆகும். எனினும், 1982–83 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட குறுகியக் கால வேளாண்மைக் கடன் அளவு குறைந்துள்ளது. உறுப்பினர்கள் அளவில் காலங்கடந்த நிலுவைத் தொகை அதிகமாக இருந்ததையும், வறட்சி நிலை நிலவியதையும் முன்னிட்டு, 1982–83-ல் குறுகியக் கால வேளாண்மைக் கடன் ரூ. 67.18 கோடி அளவுக்கு மட்டும் வழங்கப்பட்டது. நடுத்தரக் காலக் கடன் ரூ. 15.97 கோடிக்கு வழங்கப்பட்டுள்ளது. இது எப்போதுமே வழங்கப்படாத அளவுக்குச் சிறந்த சாதனையாகும். 31—3—1983 நாள் நிலவரப்படி, குறுகியக் காலக் கடனில் காலங்கடந்த பாக்கித் தொகை ரூ. 107·74 கோடியாகும். இது கேட்புத் தொகையில் 71.5 சதவீதமாகும்.

கூட்டுறவு விற்பனை :

தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், உழவர்கள் தங்களுடைய வேளாண், விளைபொருட்களை நல்ல விலைக்கு

விற்க உதவுகின்றன. இந்த ஆண்டில் 116 தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருந்தன. இவை ரூ. 62.76 கோடி அளவுக்கு வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்துள்ளன. இச்சங்கங்கள் விற்பனை செய்த முக்கியப்பொருட்கள் நெல், வேர்க்கடலை, பருத்தி, உருளைக்கிழங்கு காய்கறிகளாகும்.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகள் :

நகர, கிராமப் பகுதிகளில் 3,693 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 2,839 கல்லூரி உயர்நிலைப் பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டக சாலைகளும் அடங்கும். இக்கூட்டுறவுப் பண்டகச் சாலைகள் மாணவர்களுக்கும் மக்களுக்கும் தேவைப்படுகிற பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள், எழுதுபொருட்கள் முதலியவற்றை விற்பனை செய்கின்றன. மகளிருக்காகவென்றே 15 பண்டக சாலைகளும் தொழிற்சாலை, மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக 287 பண்டகசாலைகளும் உள்ளன. 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகள் உள்ளன. தொடக்கக் கூட்டுறவுப் பண்டக சாலைகள் இல்லாத இடங்களில் அல்லது தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலை செவ்வனே செயற்படாத இடங்களில் 978 சில்லறை விற்பனை நிலையங்களை இவை நடத்தி வருகின்றன. நுகர்வோரின் தேவைகளை நிறைவு செய்வதற்காக 406 கிளைகளைத் தொடக்கப் பண்டகசாலைகள் தொடங்கியுள்ளன. நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள் 1982–83 ஆம் ஆண்டு ரூ. 228 கோடி மதிப்புக்குச் சில்லறை விற்பனை செய்துள்ளது; ஆனால் 1981–82-ல் ரூ. 211.30 கோடி அளவுக்கு விற்பனை செய்துள்ளது.

மத்திய அரசிடமிருந்து பெறும் நிதியுதவி :

மத்திய அரசுப் பொறுப்பேற்கும் நுகர்பொருள் திட்டத்தின் கீழ், வேலைவாய்ப்புக்கு வழி வகுக்கிற நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் விரைவான முன்னேற்றத்திற்கு, 1971–72 ஆம் ஆண்டிலிருந்து நிதியுதவி அளித்து வந்துள்ளது. நுகர்வோர்

கூட்டுறவு சங்கங்கள், மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 24.84 இலட்சம் நிதியுதவியைப் பெற்றன.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில அரசு நிதியுதவி :

மாநில அரசு, நிருவாகப் பணியாளர் செலவுக்கு உதவித் தொகை வழங்குதல், தரச் சோதனை ஆய்வுக் கூடங்களை அமைத்தல், நடைமுதல் மூலதனத்தை உயர்த்துவதற்கு பங்கு மூலதனம், கடன் வழங்குதல், டிரக்குகள், மேசை, நாற்காலி போன்ற மரச்சாமன்கள், பொருத்திகள் (fixtures) ஆகியவற்றை வாங்குதல், நவீன சில்லறை விற்பனைப் பிரிவுகளை அமைத்தல், நலிந்த நிலையிலுள்ள தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளைச் சீரமைத்தல் போன்றவற்றுக்காக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவியை நீட்டித்துள்ளது. 1982—83 ஆம் ஆண்டில் மாநிலத் திட்டப் பணிகளின் கீழ் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவற்றின் மேம்பாட்டுக்காக மொத்தம் ரூ. 31.44 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது.

கிராமத்திற்கு ஒரு கடைத் திட்டம் :

கிராமப் பகுதிகளில் அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட்கள், சர்க்கரை, மிளகாய், புளி, தனியா, கடலெண்ணெய் பாமோலின் எண்ணெய், மண்ணெண்ணெய் முதலியவற்றை நியாயமான விலைக்கு வழங்குவதற்காக ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடையைத் தொடங்குவதன் மூலம் இத்திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதும் பொது விநியோக முறையின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகக் கூட்டுறவுக் துறைக்கு ஒதுக்கப்பட்ட 11 மாவட்டங்களிலுள்ள கிராமங்களில் 6,669 கடைகளை (இவற்றில் 5,396 முழு நேரக் கடைகள்; 1,273 பகுதி நேரக் கடைகள்) கூட்டுறவுத் துறை தொடங்கியுள்ளது.

மேசை, நாற்காலிகள், சாதனங்கள் வாங்குவதற்காக ஒவ்வொரு கடைக்கும் தொடராயின உதவித் தொகையாக ரூ. 1,250-மும், லாரிகள் வாங்குவதற்காக முன்னணியிலுள்ள 8 சங்கங்கள்

ஒவ்வொன்றுக்கும் ரூ. 1.00 இலட்சமும் அரசு வழங்கியுள்ளது. பணியாளர், வாடகை, ஏனைய செலவு ஆகியவை குறித்து முழுநேரக்கடை ஒவ்வொன்றுக்கும் ஆண்டொன்றுக்கு தொடரின உதவித் தொகையாக ரூ. 3,000-மும் பகுதிநேரக் கடை ஒவ்வொன்றுக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 600-ம் அரசு வழங்கியது.

எல்லா மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுகளால் கிராமங்களில் ஏற்கெனவே நடத்தப்படும் 4,441 நியாய விலைக் கடைகள் முழுநேரக் கடைகளாக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து தற்போது 11,159 கடைகள் உள்ளன. கிராமக் கடைகள் 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 85.00 கோடிக்கு இன்றியாமையா பொருள்களை விற்பனை செய்துள்ளன.

முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கம் :

சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின், அதாவது முடிதிருத்துவோர்கள் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக தமிழ் நாட்டில் 16 முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன. நவீன முடிதிருத்தும் நிலையம் அமைப்பதற்காக இதுவரை 8 முடிதிருத்துவோர் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவும், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களிலுள்ள குறைந்தது 12 உறுப்பினர்களுக்கு ஆதாயகரமான வேலைவாய்ப்பு அளிப்பதற்காக சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு உதவி செய்யும் மற்றுமொரு நவீன முடிதிருத்தும் நிலையம் அமைப்பதற்காக திருத்தணி முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 1982—83 இல் ரூ. 21,000-நிதியுதவி (கடனாக ரூ. 15.000 உதவித் தொகையாக ரூ. 6,000) அளிக்கப்பட்டது.

சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் :

சலவைத் தொழிலாளர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக இம்மாநிலத்தில் 19 சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன. இதுவரை 8 சலவைத் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களும், நவீன உலர் சலவைப் பிரிவை அமைப்பதன் மூலம் சலவைத் தொழிலாளர்

சமூகத்தில் வறுமைக்கோட்டிற்கும் கீழே உள்ள 25 பேருக்கு ஆதாயகரமான வேலை வாய்ப்பு அளிப்பதற்கு சம்பந்தப்பட்ட சங்கம் உதவி செய்யும். 1982-83-ல், நவீன உலர் சலவைப் பிரிவை அமைப்பதற்காக தென் சென்னை சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 2.64 இலட்சம் நிதியுதவி (கடனாக ரூ. 1.32 இலட்சம் உதவித் தொகையாக ரூ. 1.32 இலட்சம்) அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி, சென்னை :

கூட்டுறவு வங்கியின் முதல் தலைமை நிறுவனமான தமிழ் நாடு மாநில கூட்டுறவு வங்கி, அப்போது சென்னை மத்திய நகர வங்கி எனப்பட்டது. 1905 நவம்பரில் தொடங்கி, 77 ஆண்டு காலம் பணியாற்றியுள்ளது. இவ்வங்கி தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவு களுக்கு தன்னுடைய வழக்கமான பணியைச் செய்து வருகிறது. இவ்வங்கி குறுகிய கால நடுத்தர கால வேளாண்மைக் கடன்களை வழங்குவதில், முக்கிய பங்காற்றியுள்ளது. இம்மாநிலத்தில் பசுமைப்புரட்சிக்காக பெருமளவில் இவ்வங்கி உதவியுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, நூற்பு ஆலைகள், தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவுச் சங்கம் உட்பட கைத்தறி கூட்டுறவுகளின் முன்னேறத்திற்கு பெரிதும் துணை புரிந்துள்ளது.

பங்கு மூலதனம் :

இவ்வங்கியின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 500 இலட்சமாகும். 1973 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் நிலவரப் படி இவ்வங்கியின் பங்கு மூலதனம் ரூ. 358.19 இலட்சம் என்றிருக்க 31-3-1983 ஆம் நாள் நிலவரப்படி இவ்வங்கியின் பங்கு மூலதனம் ரூ. 514.68 இலட்சமாக உயர்ந்துள்ளது. மாநில அரசு பங்கேற்கும் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசு பங்கு மூலதனத்திற்கு ரூ. 126.00 இலட்சம் அளித்துள்ளது. இம்மாநிலத்தில், மத்திய கூட்டுறவு வங்கி ரூ. 387.62 இலட்சமும் முன்னுரிமைப் பங்கு வைத்திருப்போரும், ('பி' வகை, பங்கு) தாரரும் எஞ்சிய தொகையையும் அளித்துள்ளனர்.

வைப்பீட்டுத் தொகைகள்.

1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி வங்கியில் வைப்பீட்டுத் தொகை ரூ. 13,562.53 இலட்சமாகும் வைப்பீடுகளின் விவரம் வருமாறு :

கூட்டுறவு ஆண்டு.	கூட்டுறவு களிடமிருந்து	ஏனையோரிட மிருந்து.	மொத்த வைப்பீடு கள்.
	ஆண்டு இறுதியில் வைப்பீடுகள்	ஆண்டு இறுதியில் வைப்பீடுகள்	ஆண்டு இறுதியில் வைப்பீடு கள்.
1976—77	3,497	2,114	5,611
1977—78	5,344	3,440	8,784
1978—79	5,763	5,375	11,138
1979—80	7,217	5,813	13,030
1980—81	9,223	7,834	17,057
1981—82	11,032	4,815	15.847
1983 மார்ச்	10,289	3,273	13,562

கடன்கள் :

1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி மாநிலக் கூட்டுறவு வங்கி வாங்கியுள்ள மொத்த கடன் ரூ. 9,880.36 இலட்சமாகும். இவ்வங்கி தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து (நேபார்டு) ரூ. 9,282.42 இலட்சம், வேளாண்மை மறு நிதியுதவி-வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 510.56 இலட்சம், இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து ரூ. 35.69 இலட்சம் கடன் வாங்கியுள்ளது. ரூ. 9,880.36 இலட்சம் கடனில், நடுத்தர கால வேளாண்மைக் கடனாக இந்திய ரிசர்வ் வங்கி யிடமிருந்து ரூ. 136.42 இலட்சம் வாங்கப்பட்டுள்ளது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி அமைப்புத் திட்டத்தின் 17 (4)(ஏ) பிரிவின் கீழ் ரூ. 50.00 இலட்சம் கடன் வாங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் :

வேளாண்மைக்கு அடுத்தபடியாக, கைத்தறித் தொழில், கிராம மக்களில் பெரும்பாலோருக்கு வேலை வாய்ப்பை அளிக்கிறது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படு படுகிறது. தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தயாரித்த கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதைக் கவனித்துக் கொள்வதற்கென்று தமிழ்நாடு கைத்தறி செநவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவைப்படும் நூலையும் இச்சங்கம் அளிக்கிறது. மேற்சொன்ன பணிகளுக்காக, சங்கத்திற்குத் தேவைப்படும் நடைமுறை மூலதனம், இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து மறு நிதியுதவி பெற்று இவ்வங்கி மூலம் அளிக்கப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டில் கைத்தறித் துணி உற்பத்தி விற்பனைக்காக ரூ. 4,000 இலட்சமும், நூல் வர்த்தகத்திற்காகவும் ரூ. 400 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் :

இம்மாநிலத்திலுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு, இம் மாநிலத்தின் நுகர்வோர் கூட்டுறவுகளின் தலைமை அமைப்பான தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், 29-6-1966 அன்று அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. இணையம் 30-7-1966 அன்று தன்னுடைய பணியைச் செய்யத் தொடங்கியது. இந்த இணையம் 1982-83 ஆம் ஆண்டிற்குள்ளாக 17 ஆண்டுக்காலப் பணியை வெற்றிகரமாக முடித்துள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் :

பணியைச் செவ்வனே செய்யும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகம் சீரமைக்கப்பட்டு, 5 அதிகாரிகளின் பொறுப்பில் வைக்கப்பட்டது.

ஒவ்வொரு பிரிவும் கண்காணிப்பாளரின் பொறுப்பிலுள்ளது. அவருக்கு முதுநிலை, இளநிலை உதவியாளர்கள் உதவி புரிகின்றனர். பொது நிருவாக-கணக்குக் கோட்டத்தைக் கவனிப்பதற்காக, கணக்கு அதிகாரி ஒருவரும், சார் கணக்கு அதிகாரியும்,

அலுவலக மேலாளரும் இருக்கின்றனர். நிருவாகப் பணியாளர்கள், அதாவது திரைப்படக் கருவி இயக்குபவர்களும், ஓட்டுநர்களும், மாவட்டத்திலுள்ள மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களின் தனி அதிகாரிகளுடன் சேர்ந்து உறுப்பினர் கல்வித் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றனர். இதற்காக 6 மோட்டார் வண்டிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நூலகத்தைச் சிறந்த முறையில் பராமரிப்பதற்கும், செய்தித் தாள்களையும், புத்தகங்களையும் கொடுப்பதற்காகவும் நூலகர் நியமிக்கப்பட்டுள்ளார். 1976 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரின் சட்டத்தின் (தனி அதிகாரிகளை நியமித்தல்) கீழ் தலைமை நிருவாகியாக நியமிக்கப்பட்ட இணைப் பதிவாளர்கள்/தனி அதிகாரி உரிய முறையில் நிருவாகத்தைச் சீரமைப்பதற்காக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

வானொலி, தொலைக்காட்சி, தமிழ்நாடு திரைப்படப் பிரிவு ஆகியவற்றில் கூட்டுறவு பற்றிய விளம்பரம் :

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் 1982-83 ஆம் ஆண்டில், சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி அனைத்திந்திய வானொலியில் கூட்டுறவு பற்றி பரந்த அளவில் விளம்பரம் செய்துள்ளது. மேற்சொன்ன வானொலி நிலையங்கள் கூட்டுறவு பற்றிய உரைகளை அவ்வப்போது பதிவு செய்து ஒலிபரப்புகின்றன. கூட்டுறவு அமைப்பின் மூலமாகப் பயனடைந்தோரின் நேர்முகப் பேட்டியும், நன்கு செய்கின்ற கூட்டுறவு அமைப்புகள் பற்றியும் பதிவு செய்யப்பட்டு ஒலி பரப்பப்படுகின்றன. பெருமக்கள், அமைச்சர்கள் கலந்து கொள்ளும் முக்கிய கூட்டுறவு விழாக்கள் அனைத்திந்திய வானொலியில் ஒலி பரப்பப்படுகின்றன. தொலைக் காட்சிகளிலும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் திரைப்படத்திலும் காட்டப்படுகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தயாரிக்கும் திரைப்படங்கள் வாயிலாக, கூட்டுறவுத் கடன்களைத் திருப்பியளிப்பதன் முக்கியத்துவம் பற்றி அடிக்கடி தொலைக் காட்சி மூலம் காட்டப்படுகின்றன. 1982 ஆம் ஆண்டு 29 ஆம் அனைத்திந்தியக் கூட்டுறவு வாரம் 14-11-1982 முதல் 20-11-1982 வரை மகத்தான அளவில் வள்ளுவர் கோட்டத்தில் கொண்டாடப்பட்டது. இது மாநில அளவில் நடைபெறும் விழாவாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்நாட்டின் மாண்புமிகு அமைச்சர்கள், அதிகாரிகள், கூட்டுறவாளர்கள் இவ்

விழாவில் பங்கு கொண்டனர். பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வள்ளுவர் கோட்டத்தில் அலங்கார அணி விளக்குகள் அமைக்கப்பட்டன. முதன்மையான நாளிதழ்களில் கூட்டுறவுப் பணிகள்பற்றி முழு பக்க விளம்பரங்கள் பெரிய அளவில் கொடுக்கப்பட்டன.

சிறப்பாகச் செயற்படும் எல்லா வகைக் கூட்டுறவுகளுக்கும் கேடயங்கள அளிக்கப்பட்டன. பேச்சுப் போட்டிகளில் வாகை சூடிய கல்லூரி மாணவர்களுக்குப பரிசுகள் அளிக்கப்பட்டன. மாநிலத்தில் மிக அதிக மதிப்பெண் பெற்ற பயிற்சி நிறுவன மாணவர்களுக்கும், மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. கூட்டுறவாளர்கள் குருதி தானம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா முடிவு நாளன்று போட்டி விளையாட்டுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் முறையாக சுழல் கேடயம் வழங்கப்பட்டது.

அத்தியாயம் 5.

கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை.

அத்தியாயம் 5.

கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை.

தொல்பொருள் ஆய்வுத் துறை,

கல்வெட்டுப் பிரிவு.

இதுவரை வெளியிடப்பட்ட கல்வெட்டுகளின் மூலத்திற்கு உரிய ஆங்கில மொழி பெயர்ப்புக் குறிக்கள தயார் செய்யப் பட்டுள்ளன. (ஏழு புத்தகங்கள்) திருக்கோயிலூர் வட்டம், ஜம்பையிலும், தஞ்சை வட்டத்திலும் 100 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. சிறப்பாக ஜம்பை அதியமான் கல்வெட்டும், கீர்வாலையில் இராட்டிர கூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் கல்வெட்டும் கண்டுபிடிக்கப்பட்டன. இவைகளில் 61 கல்வெட்டுக்கள் படிக்கப்பட்டன, 20 கல்வெட்டுக்கள் அச்சுக்குத் தயார் நிலையில் ஒப்பம் செய்யப்பட்டுள்ளன.

அகழ்வாய்வுப் பிரிவு

கங்கை கொண்ட சோழபுரம், கரூர் ஆகிய இடங்களில் நடந்த அகழ்வாய்வுகள் பற்றிய அறிக்கைகளுக்கான குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. தென்னாற்காடு மாவட்டத்தில், கீழ்வாலை, மேல்வாலை, கண்டாச்சிபுரம், குளிர்சுனை, ஒதியத்தூர், உடையாநத்தம் பழைய கருவாச்சி, ஒட்டம்பட்டு, நாதியானூர், தேவனூர் ஆகிய இடங்களில் மேற்பரப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. பல கற்காலக் கருவிகளும், புதைகுழிகளும், பானை ஓடுகளும், சுடுமண் உருவங்களும் கிடைத்ததோடு, மான், மீன், எருமை, புலி, மனித உருவங்கள் எழுதப்பட்ட பல்வகையான வண்ண ஓவியங்களிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டன. இதே போல, கோவை மாவட்டம், வெள்ளெருக்கம்பாளையம், வேட்டைக்காரன்மலை ஆகிய இடங்களிலும் வரலாற்றுக்கு முந்தைய கால ஓவியங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளன. திருச்சியை அடுத்த கண்ணனூரில் அகழ்வாய்வு மேற்கொள்ளப் பட்டு, போசளர்களின் (கி. பி. 13 ஆம் நூற்றாண்டு) அரண்மனைப் பகுதிகள், 22 அடி ஆழத்தில் தண்ணீர் செல்லும் கால்வாய், சதுர வடிவத் தொட்டி, இரும்பு ஆணிகள், சீனநாட்டுப் பீங்கான் ஓடுகள் ஆகியவைகள் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

அருங்காட்சியகம்.

கொற்கை, குற்றாலம், ஆரணி மற்றும் பூண்டி ஆகிய இடங்களில் அருங் காட்சியகங்கள் அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பாதுகாப்புப் பணி.

இப்பணி தொடரப்பட்டு திருப்பருத்திகுன்றம் சமணக் கோயில், இராமேஸ்வரம் அருங்காட்சியகம் போன்றவைகளில் இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

பொது

தமிழ்நாடு அரசுச் சுற்றுலாத்துறை சென்னையில் நடத்தும் பொருட்காட்சிப் பணியில் பங்கேற்று காட்சிக் கூடம் அமைக்கப் பட்டுத் தேவையான விளக்கங்கள் தரப்பட்டன. இங்கிலாந்து நாட்டில் லண்டன் மாநகரில் நடைபெற்ற இந்தியா விழாவில் (Festival of India) காட்சி பெற இருக்கும் தமிழகச் செப்புத் திருமேனிகளுக்கான புகைப்படங்கள் தயாரித்து அரசுக்கு அனுப் பப்பட்டன. டெல்லியில் நடந்த கூட்டு சேரா மாநாடுகளில் உச்சி மாநாட்டினைத் தொடர்ந்து, அங்கு நடைபெற்ற தமிழக செப்புத் திருமேனிகளின் காட்சிக்காக தமிழகத் திருமேனிகள் பலவும், சென்னை இராசாசி மண்டபத்திற்குக் கொண்டுவரப் பட்டு, சிறப்புப் படை விமானம் மூலம் டெல்லிக்குக் கொண்டு சென்று காட்சிக்கு வைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

கல்லூரிக் கல்வி,

பல்கலைக் கழகங்கள் :

இம்மாநிலத்தில் எட்டு பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவை சென்னை பல்கலைக் கழகம், மதுரை-காமராஜ் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகரிலுள்ள அண்ணாமலை பல்கலைக் கழகம், கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகம், சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக் கழகம், கோயம்புத் தூரிலுள்ள பாரதியார் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளியி லுள்ள பாரதிதாசன் பல்கலைக் கழகம், தஞ்சாவூரிலுள்ள தமிழ்

பல்கலைக் கழகம் ஆகியனவாகும். காந்தி கிராம- ஊரக உயர் கல்வி நிலையம் 1976—77லிருந்து பல்கலைக் கழகமாகக் கருதப்படும் தகுதியைப் பெற்றுள்ளது.

புதிய கல்லூரிகளையும், புதிய பாட வகுப்புகளையும் தொடங்குதல் :

அண்ணாமலை பல்கலைக் கழகம் பட்டப்படிப்பு வகுப்புகளை மூடியதனால் ஏற்பட்ட இடையூறுகளைக் குறைப்பதற்காக 1982—83ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் புதிய கலைக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டது. ஸ்ரீ சாரதா மகளிர் உடற் பயிற்சிக் கல்லூரி ஒன்றும் சேலத்தில் புதிதாகத் தொடங்கப்பட்டது. 1982—83ஆம் ஆண்டில் 17 அரசு கல்லூரிகளிலும், 43 அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும், புதிய பாட வகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டது பற்றிய விவரங்கள் வருமாறு :—

அரசு கல்லூரிகளிலுள்ள புதிய பாட வகுப்புகள் :

இளங்கலை பட்டப்படிப்பு	பொருளாதாரம், அலுவலகப் பாடப் பட்டப் படிப்பு.
அறிவியல் பட்டப் படிப்பு	இயற்பியல், தாவரவியல், உயிரியல்.
வணிகவியல் பட்டப் படிப்பு	
முதுகலை பட்டப் படிப்பு	பொருளாதாரம்.
முதுகலை அறிவியல் பட்டப் படிப்பு.	கணிதவியல், இயற்பியல், வேதியல்.

அரசு உதவி பெறும் கல்லூரிகளிலுள்ள புதிய பாட வகுப்புகள் :

இளங்கலை பட்டப் படிப்பு	பொருளாதாரம், தமிழ், ஆங்கிலம், வரலாறு, அலுவலகப் பாடப் பட்டப் படிப்பு, அரேபிய மொழி.
அறிவியல் பட்டப் படிப்பு	கணிதவியல், இயற்பியல், தாவரவியல், உயிரியல்.

வணிகவியல் பட்டப் படிப்பு :

முதுகலைப் பட்டப் படிப்பு	வரலாறு, தமிழ், ஆங்கிலம், பொருளாதாரம்.
முதுகலை அறிவியல் பட்டப் படிப்பு.	இயற்பியல், கணிதவியல், வேதியியல், உயிரியல், புள்ளி விவர இயல்.
முதுகலை வணிகவியல் பட்டப் படிப்பு.	

மாணவர்களைச் சேர்த்தல் :

இம்மாநிலத்தில் 1982—83-ஆம் ஆண்டில் கல்லூரிகளில், மாணவர்களைச் சேர்ப்பதற்கு அனுமதிக்கப்பட்ட இடங்கள், சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புகளில் உள்ள காலி இடங்கள் பற்றி கீழே அறிக்கையில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

பயிற்று மொழி.	அனுமதிக்கப் பட்ட இடங்கள்.	சேர்க்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை.	காலியிடங் களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
பட்டப் படிப்பு வகுப்புகள் :			
(ஏ) அரசு கல்லூரிகள் :			
தமிழ் பயிற்று மொழி	8,075	7,375	700
ஆங்கிலம் பயிற்று மொழி	10,776	10;118	658
மொத்தம் (ஏ)	18,851	17,493	1.358
பி) அரசு உதவி பெறும் கல்லூரிகள் :			
தமிழ் பயிற்று மொழி	1,677	1,296	381
ஆங்கிலம் பயிற்று மொழி	44,872	40,176	4,696
மொத்தம் (பி)	46,549	41,472	5,077
பெருமொத்தம் (ஏ மற்றும் பி) ..	65,400	58,965	6.435

1982–83-ஆம் ஆண்டில் கல்லூரிகளிலுள்ள மாணவர்கள் ஆசிரியர் எண்ணிக்கை :

மாணவர்களின் எண்ணிக்கை :

கல்வி நிறுவனத்தின் வகை.	அரசுக்குச் சொந்தமானவை. கல்லூரிகளின் எண்ணிக்கை. ஆடவர்.	மகளிர்.	மாணவர்களின் எண்ணிக்கை. மாணவர்.	மாணவியர்.
(1)	(2)	(3)	(4)	(5)
கலை-அறிவியல்	39	..	34,700	3,230
கல்லூரிகள் ..	..	14	..	15,929
கல்வியியல் கல்லூரிகள்	5	..	717	5
	..	2	4	356
கீழ்த்திசை மொழிக் கல்லூரிகள்	..			..
உடற்பயிற்சிக் கல்லூரிகள்	..			..
சமூகப் பணிக் கல்லூரிகள்	..		..	..
இசைக் கல்லூரிகள் ..	2		266	297
— ஊரக உயர் கல்வி நிலையம்				
பெரு மொத்தம்	46	16	35,687	19,817

— காந்தி கிராம ஊரக உயர் கல்வி நிலையம், 1976–77-லிருந்து பல்கலைக் கழகமாகக் கருதப் படுகிறது.

மாணவர்களின் எண்ணிக்கை—தொடர்ச்சி.

கல்வி நிறுவனத்தின் வகை.	அரசு உதவி பெறும்/தனியார் துறை நிறுவனங்கள். கல்லூரிகளின் எண்ணிக்கை. ஆடவர். (6)	மகளிர். (7)	மாணவர்களின் எண்ணிக்கை. மாணவர். (8)	மாணவியர். (9)
கலை-அறிவியல் கல்லூரிகள்	96	..	82,336	5,557
	..	39	..	40,913
கல்வியியல் கல்லூரிகள்	8	..	570	294
	..	8	8	932
கீழ்த் திசை மொழிக் கல்லூரிகள்	15		1,096	519
உடற்பயிற்சிக் கல்லூரிகள்	3	..	286	93
	..	1	..	22
சமூகப் பணிக் கல்லூரிகள்	2		194	49
இசைக் கல்லூரிகள் ..	..		..	..
* ஊரக உயர் கல்வி நிலையம்	1		510	113
பெருமொத்தம்	125	48	85,000	48,492

* காந்தி கிராம ஊரக உயர் கல்வி நிலையம், 1976–77–லிருந்து பல்கலைக்கழகமாகக் கருதப்படுகிறது.

கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் எண்ணிக்கை விவரம்.

கல்வி நிறுவனங்களின் வகை.	அரசுக் கல்லூரிகள்.		தனியார் கல்லூரிகள்.	
	ஆடவர்.	மகளிர்.	ஆடவர்.	மகளிர்.
(1)	(2)	(3)	(4)	(5)
கலை-அறிவியல் கல்லூரிகள் :				
(i) ஆடவர் கல்லூரி	2,908	161	6,196	261
(ii) மகளிர் கல்லூரி		1,216	11	2,655
கல்வியியல் கல்லூரிகள் :				
(i) ஆடவர் கல்லூரி	65	2	54	13
(ii) மகளிர் கல்லூரி		31		68
கீழ்த் திசை மொழிக் கல்லூரிகள் . .			134	19
உடற் பயிற்சி கல்லூரிகள்			29	7
சமூகப் பணிக் கல்லூரிகள்			20	5
இசைக் கல்லூரிகள்	27	18		
ஊரக உயர்கல்வி நிலையம்	. .	. .	69	7
மொத்தம்	3,000	1,428	6,513	3,035

மாலை நேரக் கல்லூரிகள்

மாலை நேரக் கல்லூரிகளின் எண்ணிக்கை

(i)	அரசுக் கல்லூரிகள்	10
(ii)	தனியார் கல்லூரிகள்	26
(iii)	மதுரை-காமராஜர் பல்கலைக்கழக மாலை நேரக் கல்லூரி.	1

மாலை நேரக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை

(i)	அரசுக் கல்லூரிகள்	1,522
(ii)	தனியார் கல்லூரிகள்	10,212
(iii)	மதுரை-காமராஜர் பல்கலைக்கழக மாலை நேரக் கல்லூரி.	616

தேசியப் பணித் திட்டம்

கல்லூரி மாணவர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தை குறிப்பாகக் கல்வித்துறையில் தேசியப் பணிக்காக செலவிடச் செய்வதே தேசியப் பணித் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தில், பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் தாமாகவே கலந்து கொள்கின்றனர். 1982—83-ல் 50,000 மாணவர்கள் இத்திட்டத்தில் பங்கு கொண்டனர். மாணவர் ஒருவருக்கான ஆண்டுச் செலவு, தேசிய பணித்திட்டம் -பொதுத்திட்டத்தின்கீழ் 60 ரூபாயும், சிறப்பு முகாம் திட்டத் தின்கீழ் 100 ரூபாயும் ஆகும். இச்செலவினத்தை மத்திய-மாநில அரசுகள் 7:5 என்ற வீதத்தில் பங்கிட்டுக் கொள்கின்றன.

தமிழ் பயிற்று மொழி உதவித் தொகை

தமிழ் பயிற்று மொழி மூலம் உயர் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், பட்ட வகுப்பு பயிலுகின்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டிற்கு ரூ. 180 தமிழ் பயிற்று மொழி உதவித்தொகை அளிக்கப்பட்டு வருகிறது. அரசு 1982—83ஆம் ஆண்டில் உதவித் தொகை வழங்குவதற் காக ரூ. 41,30,200 அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 22,840 மாணவர்கள் பயனடைந்தனர்.

படிப்புதவித் தொகைகள்

(a) தேசியப் படிப்புதவித் தொகை (தகுதி அடிப்படையில்)

நன்றாகப் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு உதவுவதற்காக, மெட்ரிக் பாட வகுப்பிற்கு மேல் படிக்க விரும்புகின்ற உதவி தேவைப்படும் தகுதி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் தேசிய படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு, 1982—83இல் ரூ. 49,99,952 செலவிடப் பட்டது. பெற்றோர் வருமானம் ஆண்டிற்கு ரூ. 6,000-க்கு மேற்படின் அத்தகைய மாணவர்களுக்கு தகுதிச் சான்றிதழும், 100 ரூபாய் தேசியப் பரிசும் வழங்கப்படுகிறது. பட்ட மேற்படிப்பு மாணவர்கள் படிப்புதவித் தொகை பெறுவதற்கு, இத்தகைய வருமான வரம்பு இல்லை.

(b) தொடக்கப்பள்ளி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் பிள்ளை களுக்கானமா நிலப் படிப்புதவித் திட்டம். --
மத்திய உதவி நிறுத்தப்பட்டதன் காரணமாக, 1979—80ஆம் ஆண்டிலிருந்து, மாநில நிதியிலிருந்தே இத்திட்டத்திற்கான செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்று இத்திட்டத்தைச் செயல் படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 70 மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை அளிக்கப்படு கிறது. விவரம் வருமாறு :—

மெட்ரிக் பாட வகுப்பிற்கு மேற்படிப்பு	35
புகுமுக வகுப்பிற்கு மேற்படிப்பு	25
பட்டப்படிப்பிற்கு மேற்படிப்பு	7
பட்ட மேற்படிப்பிற்கு மேற்பட்டப் படிப்பு	3
	70

1982-83ஆம் ஆண்டில், 149 மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் ரூ. 1,31,765 செல விடப்பட்டது.

(c) தேசியக் கடன் படிப்புதவித் திட்டம் . – இது, மத்திய அரசு உதவி பெறும் திட்டம், இத்திட்டம் முழுவதும் இந்திய அரசால் ஏற்படுத்தப்பட்டு 1963–64லிருந்து செயல்படுத்தப்படுகிறது. மெட்ரிக் படிப்பிற்கு மேற்படிப்பு படிக்க விரும்புகின்ற, உதவி தேவைபபடும். தகுதியுடைய மாணவர்களுக்கு நிதி உதவி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும், இதற்காக ஒவ்வொரு ஆண்டும் 1,500 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

1982–83ஆம் ஆண்டில், 6,360 புதிய புதுப்பிக்கப்பட்ட படிப்புதவித் தொகைகளுக்கு அனுமதிக்கப்பட்டது. இந்நோக்கத்திற்காக ரூ. 27,80.117 செலவிடப்பட்டது.

மாநில தகுதி படிப்புதவித் தொகை, மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பிலிருந்து பட்ட மேற்படிப்பு வரையிலான வகுப்புகளுக்கு, ஆண்டிற்கு 10 திங்களுக்கு வழங்கப்படுகிறது. இப்படிப்புதவித் தொகையின் மதிப்பு வருமாறு :–

	மாணவர் இல்லத்தில் தங்காமல் பயில்வோர் திங்கள் ஒன்றுக்கு ரூபாய்.	மாணவர் இல்லத்தில் தங்கிப் பயில்வோர் திங்கள் ஒன்றுக்கு ரூபாய்.
(1)	(2)	(3)
மேல்நிலைக் கல்வி, முதலாண்டு பட்டப் படிப்பு.	50.00	75.00
2ஆம் ஆண்டு 3ஆம் ஆண்டு பட்டப் படிப்பு.	75.00	110.00
தொழில் கல்வி பட்ட மேற்படிப்பு	100.00	125.00

இத்திட்டத்திற்காக ரூ. 9,925 செலவு ஏற்பட்டது. இதனால், ஒன்பது மாணவர்கள பயனடைந்தனர்.

அரசுத் தேர்வுகள்.

இத்துறை, 40 தேர்வுகளை நடத்துவதற்குப் பொறுப்பு வகிக்கிறது. முக்கிய தேர்வுகள் எஸ்.எஸ்.எல்.சி. மேல்நிலைக் கல்வித் தேர்வு ஆகியவையாகும். இவற்றில் ஒவ்வோர் ஆண்டும் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர்.

1982 ஆம் ஆண்டு ஏபரல்—மே, செப்டம்பர், அக்டோபர் திங்கள்களில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு, மேல்நிலைக் கல்வித் தேர்வு எழுதிய மாணவர்கள் வெற்றி பெற்ற மாணவர்கள் ஆகியோரின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

தேர்வுகள்	1982 மார்ச் தேர்வு எழுத பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை.	ஏப்ரலில் தேர்ச்சி பெற்றவர்களின் சதவீதம்.
(1)	(2)	(3)
எஸ். எஸ். எல். சி. தேர்வு:—		
பள்ளி மாணவர்கள்/தனித் தேர்வர்கள் (Privat: candidat.s).	3,36,891	
பள்ளி மாணவர்கள் மட்டும்	2,70,521	53
ஆங்கிலோ-இந்தியக் கல்வித் தேர்வு	2,832	79
மெட்ரிக்குலேசன் தேர்வு	2,829	90
மேல் நிலைக் கல்வித் தேர்வு: —		
பள்ளி மாணவர்கள்/தனித் தேர்வர்கள்.	1,57,599	
பள்ளி மாணவர்கள் மட்டும்	1 30,389	62

(1)	1982 செப்டம்பர் – அக்டோபர் தேர்வு எழுத பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை. (4)	1983 மார்ச்-ஏப்ரலில் தேர்வு எழுத பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை. (உத்தேசமாக.) (5)
எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு—		
பள்ளி மாணவர்கள்/தனித் தேர்வர்கள் (Private candidates).	1,06,644	3,60,000
பள்ளி மாணவர்கள் மட்டும் ..		
ஆங்கிலோ-இந்தியக் கல்வித் தேர்வு.	635	3,200
மெட்ரிக்குலேசன் தேர்வு	291	3,600
மேல்நிலைக் கல்வித் தேர்வு—		
பள்ளி மாணவர்கள்/தனித் தேர்வர்கள்.	48,550	1,82,000
பள்ளி மாணவர்கள் மட்டும் ..		

அரசு அருங்காட்சியங்கள்.

மாவட்ட அருங்காட்சியகம் திருச்சிராப்பள்ளியில் தோற்றுவிக்கப்பட்டது. அதை தமிழக மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் 6–2–1983 ஆம் தேதியன்று தொடங்கி வைத்தார்.

ஒவ்வொரு தலைமையிடத்திலும் ஒரு மாவட்ட அருங்காட்சியகத்தைத் தொடங்குவதென்கிற திட்டத்தின் ஒரு பகுதியாக அருங்காட்சியகங்கள் இயக்ககத்தால் மேலும் ஒரு மாவட்ட அருங்காட்சியகம் வேலூரில் அமைக்கப்பட்டது.

சென்னையில் குழந்தைகள் அருங்காட்சியகக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

தேசிய கலைக்கூடத்திற்கு ரூ. 27 இலட்சம் செலவில் கட்டப் பட்டுவந்த இணைப்புக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

பொதுவிலங்கியல் கூடத்தை நவீனப்படுத்தும் பணி நிறைவுற்றது. பொருளாதார-தாவர இயல், புவியியல் கூடங்களை நவீனப்படுத்தும் பணி நடந்தேறி வருகிறது.

நூற்றாண்டு விழா பொருட்காட்சிக் கூடத்தை மேம்படுத்தும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிறப்பு பொருட்காட்சியகங்கள்

இவ்வாண்டில் பின்வரும் சிறப்புப பொருட்காட்சிகள் நடத்தப் பட்டன.

(1) தென்னிந்திய வரலாற்றுப் பேரவையின் மூன்றாவது மாநாட்டில் தொல்பொருள் ஆராய்ச்சிப் பிரிவானது ஈரோட்டில் 8—5—1982 ஆம் நாளன்று நடத்திய சிலைகள், நாணயங்களின் நிழற்படக்காட்சிகள்.

(2) வேதியியல் காப்பகப் பிரிவு 30—6—1982 ஆம் நாளன்று நடத்திய ''அருங்காட்சியகப் பொருள்களைப் பாதுகாத்தல்''.

(3) வேதியியல் காப்பகப் பிரிவு 24—12—1982 ஆம் நாளிலிருந்து 28—12—1982 ஆம் நாள் வரையில் நடத்திய '' சென்னையிலுள்ள அரசு அருங்காட்சியகத்தின் வேதியியல் காப்பகம், ஆராய்ச்சிக் கூடம் மேற்கொண்ட ஐம்பது ஆண்டுக் கால பாதுகாப்புப் பணி மற்றும் நெசவுத் துணிகளின் பாதுகாப்பு '' இதை, சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி சி. கே. கரியாலி, இ.ஆ.ப. அவர்கள் 23—12—1982 ஆம் நாளன்று தொடங்கி வைத்தார்.

(4) சென்னையில் நடைபெற்ற 1983 ஆம் ஆண்டு அகில இந்திய சுற்றுலா-தொழில் பொருட்காட்சியில் அருங்காட்சியகங்கள் துறை பங்கெடுத்துக் கொண்டது.

(5) புதுக்கோட்டையிலுள்ள அரசு அருங்காட்சியகம் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நடத்திய "புதுக்கோட்டை நெசவுகள்".

(6) மாவட்ட வன அதிகாரியும் அரசு கலைக் கல்லூரியைச் சேர்ந்த தேசிய சமூகப் பணி மாணவர்களும் ஒருங்கிணைந்து சேலம் அரசு அருங்காட்சியகத்தில் 1982 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12 முதல் 15 ஆம் நாள் வரையில் நடத்திய "தமிழ் இலக்கியம் கண்ட உள்நூர் மலர்க்காட்சி". இது, "சேலம் மாவட்ட சமூக-கலாச்சார வரலாறு" குறித்த மாநாடு தொடர்பாக, அருங்காட்சியகங்கள் துறை இயக்குநர் திரு. என். ஹரி நாராயணன் அவர்களால் 12–6–1982 ஆம் தேதியன்று தொடங்கி வைக்கப்பெற்றது.

(7) சென்னையில் நடைபெற்ற 1983 ஆம் ஆண்டு அகில இந்திய சுற்றுலா-தொழில் பொருட்காட்சியில் சேலம் மாவட்ட அரங்கை அமைப்பதில் சேலம் அரசு அருங்காட்சியகம் முக்கியப் பங்கு வகித்தது.

(8) மதுரையிலுள்ள அரசு அருங்காட்சியகம் 1982 ஆம் ஆண்டு அக்டோபர் 1 முதல் 10 ஆம் நாள் வரையில் நடத்திய "நவீன வண்ணக் கலைகள்". இதை, மதுரை ஸ்ரீமீனாட்சி கல்லூரி முதல்வர் திருமதி ருக்மணி மாரியப்பன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

(9) சென்னை, அரசு அருங்காட்சியகத்தில் மானிடவியல் பிரிவு 1982 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடத்திய "தம்பூரா".

(10) நாணயவியல் பிரிவு 1982 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடத்திய "தென்னிந்திய நாணயங்கள்".

(11) தொல்பொருள் ஆராய்ச்சிப் பிரிவு, சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 1983 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15 முதல் 28 ஆம் நாள் வரையில் நடத்திய "பாரதியார் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்". இந்நிகழ்ச்சிகள், 14–2–1983 ஆம் நாளன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

பயிற்சியும் போட்டியும் :

விலங்கியல் பிரிவு, சென்னை, அரசு அருங்காட்சியகத்தில், 1982 ஆம் ஆண்டு மே திங்கள் 17 முதல் 31 ஆம் நாள் வரையில் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தோற் பாவைக் கலையில் பதினேழாவது ஆண்டு குறுகிய காலப் பயிற்சி நடத்தியது. 1982 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 முதல் 30 ஆம் நாள் வரையில் '' அருங்காட்சியகப் பொருட்களைப் பாதுகாத்தல் '' குறித்த எட்டாவது நினைவூட்டுப் பயிற்சி வகுப்பு நடத்தப் பட்டது. இதில் ஆந்திரப் பிரதேசம், கேரளம், கர்நாடகம், பாண்டிச்சேரி, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த ஏழு நபர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். 30—6—1982 ஆம் நாளன்று தமிழ்நாடு பால்வள நிறுவன நிருவாக இயக்குநர் ஏ. எம். சுவாமிநாதன், இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரையும் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கினார்.

கூடுதலாகச் சேர்க்கப்பட்ட பொருட்கள் :

புதையல்கள், கொள்முதல், பறிமுதல், பண்டமாற்று, சுற்றுலா; அன்பளிப்பு ஆகிய வழிகளில் கிடைத்த கீழ்க்கண்ட பொருள்கள் வெவ்வேறு பிரிவுகளில் சேர்க்கப்பட்டன :—

(அ) சென்னை, அரசு அருங்காட்சியகம் :

தொல்பொருள் பிரிவு :

எண்பத்தொன்பது வெண்கலப் பொருட்கள், மூன்று தாமிரத் தாம்பாளங்கள், தமிழில் நவீன எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட உலோகத்தட்டு ஒன்று, நீர்வண்டை ஓவியம் ஒன்று, வெள்ளி மைதாங்கி ஒன்று, தேவியின் காரை உருவத்தலைப்பகுதி ஒன்று, திருவாச்சியின் வகைகள் இரண்டு, கற்சிலைகள் இரண்டு ஆகியன.

மானிட இயல் பிரிவு :

பதினெட்டு வகையான தங்க ஆபரணங்கள், ஒன்பது வெள்ளி தெய்வக் காணிக்கைகள் ஆகியன.

நாணயங்கள் பிரிவு :

இருபத்தாறு இலங்கைத் தங்க நாணயங்கள், நூற்றி எண்பத்தாறு இந்திய-பிரிட்டன் வெள்ளி நாணயங்கள், நூற்றி இருபத்தெட்டு தென்னிந்தியத் தங்க பாளங்கள், இரண்டு இந்திய-பிரிட்டன் ஒரு சுவாமி தங்கபகோடாக்கள், இரண்டாயிரத்து முன்னூற்றி அறுபத்தாறு இராஜராஜ சோழர் கால தாமிர நாணயங்கள், முப்பத்தொன்பது முதல்நாள் அஞ்சலக உறைகள், க்போல்டர்கள், அஞ்சல் தலைகள் ஆகியன.

விலங்கியல் பிரிவு :

மேற்பாகம் வைக்கோல் நிறமாகவும் கீழ்ப்பாகம் வெண்மையானதாகவும் உள்ள ஆந்தை வகை, மீன்கொத்திப் பறவை, பூக்கொத்திப் பறவை, சிக்ரா இவற்றின் பாடம் செய்து வைத்த உருவங்கள்.

தாவர இயல் பிரிவு :

ஒன்பது புதியவகை நிலக்கடலை, ஒன்பது புதியவகை காப்பிக் கொட்டைகள்.

அரசு அருங்காட்சியகம், சேலம் :

பூவேலைப்பாடு அமைந்த தளக் கற்கள், சிறிய வெங்கலப் பாவை விளக்கு, ஒரே கால அளவைச் சேர்ந்ததும் அக்ராமிக் நாகரிகத்தை எடுத்துக்காட்டுவதாக உள்ளதும், மரத்தில் செதுக்கப்பட்டதுமான ஆஸ்திரேலியன் முதுமக்கள் முகத்தோற்றம்.

அரசு அருங்காட்சியகம், மதுரை :

ஒற்றைக் கல்சிற்பம், ஒரு சிறிய பித்தளை உலோகக் குதிரையில் வீற்றிருக்கும் தெய்வச்சிலை, ஒரு தாமிர தெய்வச்சிலை, ஒரு கலம்காரி ஓவியம், கலைத்திறன் கொண்ட ஆறு சிலம்புகள், இரு ஜதை தாளக் கட்டைகள், யானை உருவம் பதித்த கரடு முரடான மட்பாண்டம்.

அரசு அருங்காட்சியகம், திருச்சிராப்பள்ளி :

ஒரு புள்ளிமான் சிலை, ஒரு காளியம்மன் சிலை, மூன்று கற்சிலைகள், நெட்டியில் ஆன ஒரு பொருள், ஐந்து கடற்பஞ்சு வகைகள், பழம் சின்னங்கள் இருபது ஆகியன.

சட்டக்கல்வி

சட்டக் கல்வியில் தரம் உயர்த்தும் நோக்கத்தோடு தமிழ் நாட்டில் சட்டக் கல்வித்துறை 1953 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இத்துறை தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் உயர்த்துவதற்காக இவ்வாண்டும் தொடர்ந்து பணியாற்றியுள்ளது.

இத்துறை தோற்றுவித்த பிறகு தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் மிகவும் உயர்ந்துள்ளது. தற்போது சட்டப் பட்ட படிப்பைத் தவிர சென்னை சட்டக் கல்லூரியில் நான்கு பிரிவுகளில் சட்ட மேற் படிப்பு (எம்.எல்) வகுப்புகள் நடத்தப் பட்டு வருகின்றன. அப்பிரிவுகளின் விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது—

பிரிவு II	குற்றவியல் மற்றும் தீங்கியல்.
பிரிவு III	ஒப்பந்தவியல் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட சட்டம் உட்பட.
பிரிவு IV	சொத்துரிமை சட்டம்
பிரிவு V	தொழிலாளர் சட்டம் நிர்வாகச் சட்டம் மற்றும் தொழிற்சாலை சட்டம்.

இதைத் தவிர மதுரை சட்டக் கல்லூரியிலும் இவ்வாண்டி லிருந்து சொத்துரிமை என்ற பிரிவில் சட்ட மேற் படிப்பு நடத்தப்படுகிறது. 1978-79 ஆம் ஆண்டில் ஆரம்பித்த திருச்சி மற்றும் கோவை சட்டக் கல்லூரிகள் மிக செம்மையாக செயல் பட்டு வருகின்றன.

இத்துறையின் கீழ் இயங்கிவரும் 4 சட்டக் கல்லூரிகளில் மொத் தம் 2,490 மாணவர்கள் பயில்கின்றனர். சட்டப் படிப்பு மற்றும்

சட்ட மேற்படிப்பு ஆகிய வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை கீழ் வருமாறு :-

	சட்டப் படிப்பு.	சட்ட மேற்படிப்பு
சென்னை	984	107
மதுரை	692	15
திருச்சி	345	
கோவை	347	..
மொத்தம்	2,368	122

இத்துறையில் நான்கு சட்டக் கல்லூரிகளிலும் பணி புரியும் மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு :—

முதல்வர்கள்	4
பேராசிரியர்கள்	10
இளநிலைப் பேராசிரியர்கள்	39
பகுதி நேர இளநிலைப் பேராசிரியர்கள்	53
உடற்பயிற்சி இயக்குநர் ...	4

தேசிய மாணவர் படை

முன்னுரை :

பள்ளி, கல்லூரி மாணவ மாணவியருக்குப் பயிற்சியளிக்கும் வகையில் தேசிய மாணவர் படைத்துறை இயங்கி வருகிறது. நிருவாகக் காரியங்களுக்காக தேசிய மாணவர் படை இயக்குநர், தமிழ்நாடு, புதுச்சேரி ஆகிய மாவட்டங்களில் வட்டார அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். அவர் கூடற்படைப் பணி முதல்வர் (கம்மாதார்) பிரிகேடியர் பதவித் தரத்தில் முறையாகப் பணியிலுள்ள ஒரு அதிகாரி அப்பதவியை வகிக்கிறார். தேசிய மாணவர் படைத் தலைமையிடங்கள் ஆறும், தேசிய மாணவர்ப்படைப் பிரிவுகள் ஐம்பதும் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் உள்ளன.

நிருவாகம் :

தேசிய மாணவர் படைப் பிரிவு, மாநில, மத்திய அரசு ஆகிய இரு அரசுகளின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. மாநில அரசின் கல்வித்துறை தேசிய மாணவர் படை இயக்கத்தை நிருவகித்து வருகிறது. மத்திய அரசைப் பொறுத்தவரை டில்லியில் இயங்கி வரும் தேசிய மாணவர் படை தலைமை இயக்குநர் அலுவலகம் இதனை நிருவகித்து வருகிறது.

பணியாளரமைப்பு :

தேசிய மாணவர் படை இயக்குநர் அலுவலகத்தில் பணியாற்றும் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் இருவரைத் தவிர ஏனைய அதிகாரிகள் அனைவரும் ராணுவப் பணியிலிருந்து நியமிக்கப்பட்டவர்களாவர். இதைப் போலவே, தேசிய மாணவர் படையினருக்கும் பயிற்சியளிக்கும் பயிற்சி ஆசிரியர்களும் முறையான பணியிலிருந்து பெறப்பட்டவர்களாவர். தேசிய மாணவர் படை இயக்ககம் (மாநிலப் பிரிவு) தேசிய மாணவர் படைத் தலைமையிடங்கள், தேசிய மாணவர் படைப் பிரிவுகள் ஆகியவற்றின் அலுவலகங்களில் நிருவனப் பணியில் உள்ளவர்கள் அனைவரும் மாநில அரசுப் பணியாளர்களாவர்.

தேசிய மாணவர் படையில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டு காரியத்திற்கு தேசிய மாணவர் படை இயக்குநரே தலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். அவருக்கு மாநில அரசு நிதி அதிகாரங்களை அளித்துள்ளது.

நடவடிக்கைகள் :

1982-83 ஆம் ஆண்டில் பின்வரும் பயிற்சி வகுப்புகளும், பயிற்சி முகாம்களும் நடத்தப்பட்டன :

அமைக்கப்பட்ட பயிற்சி முகாம்களின் எண்ணிக்கை	
ஆண்டு பயிற்சி முகாம்கள்	—
அனைத்திந்திய பயிற்சி முகாம்/பயிற்சி வகுப்புகள்	60

இவற்றைத் தவிர வீரச் செயல் நடவடிக்கைகள் பலவும் நடத்தப்பட்டன.

சாதனைகள்.

1983 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் நடைபெற்ற குடியரசு தின முகாமின் போது, தமிழ்நாடு இயக்ககம் பின்வரும் பரிசுகளைப் பெற்றுள்ளது.

(அ) முதுநிலைப் பிரிவில் தேசியப் படைப் பிரிவைச் சேர்ந்த சிறந்த மாணவர்களுக்கான பரிசுக் கேடயம் ;

(ஆ) கப்பல் வடிவமைப்புப் போட்டியில் அனைத்திந்திய அளவில் முதலிடம் ;

(இ) விமானம் வடிவமைப்புப் போட்டியில் அனைத்திந்திய அளவில் முதலிடம்.

(ஈ) துப்பாக்கிச் சுடும் போட்டியில் முதலிடம் ;

(உ) முதலுதவி/வீட்டுச் செவிலிப் பணியில் முதலிடம்.

(ஊ) விமானப் பயிற்சி/போட்டியில் (Gliding) இரண்டாமிடம். ;

(எ) உடற் பயிற்சியில் இரண்டாமிடம் ;

(ஏ) படகுப் போட்டியில் இரண்டாமிடம்.

1982 மே/ஜூன் திங்களில் நடைபெற்ற மலையேறும் சுதர்சன் மலைப்போட்டியில் நம்முடைய தேசிய மாணவர் படைப் பிரிவு கலந்து கொண்டு 6507 மீட்டர் உயரம் வரை வெற்றிகரமாக மலையேறினர். கனடா நாட்டில் நடைபெற்ற மாணவர் பரிவர்த்தனை செய்யும் திட்டத்தின்படி தேசிய மாணவர் படைப் பிரிவைச் சேர்ந்த 2 அதிகாரிகளும், 1 தேசிய மாணவர் படைப் பிரிவு மாணவரும் பங்கேற்றனர். தேசிய மாணவர் படைப் பிரிவினால் சமூகப் பணி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் டிசம்பர் திங்கள் வரை தேசிய மாணவர் படையைச் சேர்ந்த சுமார் 1,939 மாணவர்கள் தாமாகவே முன்வந்து இரத்த தானம் செய்தனர். கோயம்புத்தூரிலுள்ள விமானப் படைப் பிரிவு, விமானப்படைப் பிரிவு மாணவர்களில் சிறந்த மாணவர்க்கான விமானப் படைப் பிரிவுத் தலைவரின் வெள்ளிப் பதக்கத்தை கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து வென்றுள்ளது.

பொது நூலகத்துறை.

நூலகப் பணி மனித வளர்ச்சிக்கு ஒரு நல்ல முதலீடு. இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது. இதனால் பயிற்சி கொண்ட மனிதத் திறம் பெறுகிறோம். இது வளர்ச்சிக்கு நல்ல சூழ்நிலையையும் மனோபாவத்தையும் உண்டாக்குகிறது. நூலகப் பணியின் சிறப்பை உணர்ந்த தமிழ்நாடு அரசு, 1948-ல் தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தை இயற்றி, பரந்த கிராமிய நகர நூலகப் பணிக்கு வழிவகை செய்தது.

பணிமுனைகள்:

தமிழ்நாடு பொது நூலகச் சட்டப்படி தற்போது தமிழ்நாட்டில் கீழ்க்காணும் பணிமுனைகள் செயல்பட்டு வருகின்றன.

அரசுத்துறை :

மாநில மைய நூலகம்	1

மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் :

மாவட்ட மைய நூலகங்கள்	16
கிளை நூலகங்கள்	1,475
மொத்த பணி முனைகள்	1,492

அடிப்படை செய்திகள் :

மொத்த மக்கள் தொகை	4,82,97,456 (1981)
மொத்த படித்தவர் தொகை	2,21,11,593 (1981)
நூலகப் பணிக்கான செலவுத் தொகை	3,81,37,000
மொத்த நூல்கள் இருப்பு	97,28,797
பணி முனைகள்	1,492
மொத்த வாசகர்கள் தொகை ..	3,16,32,358
பயன்படுத்திய நூல்கள் எண்ணிக்கை	78,78,561
மொத்த நூலக உறுப்பினர்கள்	10,11,714
இரவலாக கொடுத்த நூல்களின் எண்ணிக்கை	90,20,983
உபயோகப்படுத்தப்பட்ட மொத்த நூல்கள்.	1,68,99,544

பள்ளிக் கல்வி.

இம்மாநிலத்தின் தேவைகளை நிறைவு செய்து வரும் பலதரப்பட்ட, பல்வேறு நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு :—

பள்ளிகளின் வகைகள்	பள்ளிகளின் எண்ணிக்கை.
1. மேல்நிலைப் பள்ளிகள் :	
(a) சாதாரணப் பள்ளிகள் ..	1,292
(b) ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்	26
(c) மெட்ரிகுலேஷன் பள்ளிகள்	42
மொத்தம்	1,360
(d) ஏனைய பள்ளிகள் : (உயர்நிலைப்பள்ளிக் கல்விக்கான மைய அரசு வாரியம், இந்தியன் ஸ்கூல் சர்டிபிகேட், கேந்திரீய வித்யாலயங்கள்) ..	56
மொத்தம் மேல்நிலைப் பள்ளிகள்	1,416
2. உயர்நிலைப் பள்ளிகள் :	
(a) சாதாரணப் பள்ளிகள் ..	2,071
(b) ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்	18
(c) மெட்ரிகுலேஷன் பள்ளிகள்	78
மொத்தம்	2,167
(d) ஏனைய பள்ளிகள் : (உயர்நிலைப் பள்ளிக் கல்விக்கான மைய அரசு வாரியம், இந்தியன் ஸ்கூல் சர்டிபிகேட், கேந்திரிய வித்யாலயங்கள்) ..	93
மொத்தம்—உயர்நிலைப் பள்ளிகள் ..	2,260

3. மொத்தம்—மேல்நிலைப் பள்ளிகளும், உயர் நிலைப் பள்ளிகளும்	3,676
4. நடுநிலை உயர் தொடக்கப் பள்ளிகள்	5,565
5. தொடக்கப் பள்ளிகள்	28,290
6. பாலர் பள்ளிகள்	33
7. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்	79
8. கீழ்த்திசை மொழிப் பள்ளிகள் :	
(i) உயர்நிலைப் பள்ளிகள்	18
(ii) மேல்நிலைப் பள்ளிகள்	22

1982–83 திருத்த மதிப்பீட்டின்படி தமிழ்நாடு அரசின் (வருவாய் கணக்கிலான) மொத்தச் செலவாகிய ரூ. 1,576 கோடியில் கல்வி மானியத்துக்காக 339 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. பள்ளிக் கல்வி, மாநிலக் கல்வியாராய்ச்சி–பயிற்சி மன்றம் ஆகியவற்றின் வளர்ச்சித் திட்டங்களைத் திட்டமிடும் கண்காணிக்கும், நிறைவேற்றும் தலைமை நிருவாக அதிகாரி பள்ளிக் கல்வி இயக்குநர் ஆவார்.

நவீன அறிவியல் அடிப்படையில் பள்ளி வசதி செய்து கொடுத்தல், கல்வி வசதி அளித்தல் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்யவும், இருக்கும் வசதிகளை மேம்படுத்தவும், தற்கால நடைமுறைக்கேற்ற வகையில் பள்ளிகளுக்கு அதிநுட்ப அறிவியல் சாதனங்கள் வழங்கவும், 6—11 மற்றும் 11—14 வயதுத் தொகுதிச் சிறுவர் சிறுமியரை அனைவரையும் பள்ளியில் சேர்க்கவும் செவ்விய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன ; அவை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்வித் தரத்தை உயர்த்தவும், கல்வித் தரங்களில் புதிய நிலைகளை உருவாக்கவும், இடவசதி, அறிவியல் போதனை நூலங்கள், விளையாட்டுத் திடல்கள் முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்படுவதுடன், எற்கனவே உள்ள வசதிகளும் மேம்படுத்தப்படுகின்றன. பணிக்காலத்தில் பயிற்சி அளிக்கும் திட்டங்கள், கல்வியாலோசனைக் கருத்தரங்குகள் முதலியவற்றை மேற்கொள்வதன் மூலம் வலுவான சீரான முறையில் அறிவியல் கல்வி வளர்க்கப் பெறுகிறது. தொழி

முறையில் தகுதி வாய்ந்த அறிவியல் ஆசிரியர்கள் கூடுதலாக நியமிக்கப்படுகின்றனர். மாணவர்கள் கல்வித் தகுதியை வளர்க்க புதிய மதிப்பீட்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன. தொடக்கப் பள்ளிகளிலுள்ள ஏழை மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கமளிக்க இலவச மதிய உணவு, பாடப் புத்தகங்கள், எழுது பலகைகள் (Slates) சீருடைகள் முதலியவை வழங்கப்படுகின்றன. கல்வி வசதிகள் தமிழ்நாட்டில் குறிப்பிடத் தக்க அளவுக்குப் பெருகியுள்ளன ; பின் வரும் புள்ளி விவரங்களில் இருந்து இந்த முன்னேற்றத்தை அறியலாம்.

ஆண்டு.	தொடக்கப் பள்ளிகள்.	நடுத்தரப் பள்ளிகள்.	உயர் நிலைப் பள்ளிகள்.	மேல் நிலைப் பள்ளிகள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1981—82	27,767	5,556	2,168	1,405	36,896
1982—83	28,290	5,565	2,260	1,416	37,531

தொடக்கக் கல்வி

1982—83-ல் இம்மாநிலத்திலிருந்த தொடக்கப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 28,290 ஆகும். அதன் விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது. (மாணவர் எண்ணிக்கையும் ஆசிரியர்கள் எண்ணிக்கையும் கொடுக்கப்பட்டுள்ளன).

நிருவாகம்.	பள்ளிகளின் எண்ணிக்கை.	மாணவர்களின் எண்ணிக்கை.	மாணவியரின் எண்ணிக்கை.	ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
அரசினர் பள்ளிகள்.	1,467	1,35,065	1,27,096	6,702
தனியார் பள்ளிகள்.	4,939	6,63,253	5,73,171	29,343
நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகள்.	1,152	1,90,519	1,78,813	9,700
ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்.	20,732	15,62,466	12,42,995	68,968
மொத்தம்	28,290	25,51,303	21,22,075	1,14,713

பள்ளி வளர்ச்சி மாநாடுகள்

1982-83-ல் பள்ளி வளர்ச்சி மாநாடுகள் 45 நடத்தப்பட்டன ; 706 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள நன்கொடைகள் கிடைத்தன. மொத்தம் 1.18 இலட்சம் ரூபாய் செலவில் ஏழை மாணவர்களுக்குச் சீருடைகள் வழங்கப்பட்டன.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்

குழந்தைகளுக்கான முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் 1-7-1982-ல் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம் முதலில் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த 2—9 வயதுள்ள குழந்தைகளுக்குச் செயற்படுத்தப்பட்டது ; பின்னர் இது நகர்ப் பகுதிகளுக்கு நீட்டிக்கப்பட்டது. பெரும்பாலும் 2—9 வயதுள்ள குழந்தைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கப்படுகிறது. ஏற்கனவே செயலில் இருந்த மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வந்து 10—14 வயதுள்ள மாணவ மாணவியரும் இப்புதிய திட்டத்தின் கீழ் தொடர்ந்து நன்மை பெறுகின்றனர். 2—4 வயதுள்ள குழந்தைகளுக்கு சமூக நலத்துறையில் பாலர் பள்ளிகள் மூலம் உணவு வழங்கப்பட்டு வருகிறது. 5—9 வயது உள்ள மாணவர்களுக்கு பள்ளிக் கல்வித் துறையினால் ஏற்பு அளிக்கப்பட்ட தொடக்க மற்றும் நடுத்தரப் பள்ளிகள் மூலம் உணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடர்பான புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

	மையங்கள் எண்ணிக்கை.	உணவு பெறுவோர் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1. பள்ளி மதிய உணவு மையங்கள்	33,829	39,19,000
2. குழந்தைகள் காப்பகங்கள்	27,840	23,30,000
மொத்தம் நிலையங்கள்	61,669	62,49,000

உணவின் அளவு நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு

(1)	5 — 9 வயதுக் குழந்தைகள். (2)	2 — 4 வயதுக் குழந்தைகள். (3)
	(கிராம்களில்).	
அரிசி	100	80
பருப்பு	10	10
எண்ணெய்	7	7
காய்கறிகள் உணவுக்கு ருசி கூட்டும் பொருள்கள்	50	50

கேர் நிறுவனம் வழங்கும் பொருள்கள்

1982—83 ஆம் ஆண்டில் பள்ளி சத்துணவுத் திட்டத்துக்கு கேர் இலவச உணவு 7,235 டன் கோதுமை 393 டன் எண்ணெய் ஆகியவையும் பயன்படுத்தப்பட்டன. அவற்றின் மதிப்பு ரூ. 2.87 கோடியாகும்.

இத்திட்டத்தின் மூலம் உண்டாகிய கூடுதல் வேலைவாய்ப்பு

இத்திட்டம் வேலைவாய்ப்பை இதற்குமுன் ஏற்பட்டிராத அளவுக்கு குறிப்பாக கிராமப் பகுதிகளிலுள்ள விதவைகளுக்கும் அனாதைகளுக்கும் உருவாக்கிக் கொடுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை வருமாறு :

குழந்தைகள் காப்பகங்கள் சமூக நலத்துறை

1. குழந்தை நலத் திட்ட அமைப்பாளர்கள்	27,920
2. குழந்தை நலத் திட்ட உதவியாளர்கள்	50,570

பள்ளிச் சத்துணவு மையங்கள்

1. சமையல்காரர்களும் கூடுதல் சமையல்காரர்களும்	34,295
2. உதவியாட்கள்	33,837
3. பள்ளிச் சத்துணவு அமைப்பாளர்கள்	33 829
மொத்தம்	1,80,451

பள்ளியில் மாணவர்களைத் கூடுதலாக சேர்த்தல்

இத்திட்டத்தைச் செயற்படுத்திய பின்னர் தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகளில் 1982—83-ல் 6—11 மற்றும் 11—14 வயது மாணவ மாணவியர் 3.11 லட்சம் பேர் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இது அண்மை ஆண்டுகளில் ஒரு போதும் நிகழாத சாதனை ஆகும்.

இடைநிலைக் கல்வி

தொடக்கக் கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் வகையில் இத்துறை மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக தொடக்க, நடுத்தரப் பள்ளிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் உயர்ந்து வந்துள்ளது. இதனால் 1982—83-ல் இருந்த உயர் நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை பற்றிய விவரம் வருமாறு :—

(i) மாநில போர்டு உயர்நிலைப் பள்ளிகள் ..	2,071
(ii) ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்	18
(iii) மெட்ரிகுலேஷன் பள்ளிகள்	78
(iv) மத்திய கல்வி போர்டுடன் இணைக்கப் பட்ட பள்ளிகள் ஏனைய மத்தியப் பள்ளி கள் ஆகியவற்றின் எண்ணிக்கை.	93
மொத்தம்	2,260

ஆங்கிலோ இந்தியக் கல்வி

பெண்களுக்கான பயிற்சிப் பள்ளி ஒன்று உட்பட 45 ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள் முக்கியமாக இந்திய சமூகத்தைச் சேர்ந்த ஆங்கிலோ-இந்தியர் அடுத்த இம்மாநிலத்திற்குக் குடி பெயர்ந்து வந்துள்ளவர்கள் (பெரும்பாலும் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த பணியாளர்கள் மற்றும் அயல்நாட்டுக் குடி மக்கள்) ஆகியோரின் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன. இப்பள்ளிகளில் பாட மொழி ஆங்கிலமாகும். எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் திட்டம் போன்றதொரு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம் இப்பள்ளிகளில் இடம் பெற்றுள்ளது.

இப்பள்ளிகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

பள்ளிகளின் வகைகள்.	அரசுப் பள்ளிகள்.	மானியம் பெறும் தனியார் பள்ளிகள்.	மானியம் பெறாத தனியார் பள்ளிகள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
மேல்நிலைப் பளளிகள்.	2	23	1	26
உயர்நிலைப் பள்ளிகள்.	6	10	2	18
பயிற்சி நிறுவனம்.		1	—	1
மொத்தம்	8	34	3	45

பள்ளிகளின் வகைகள்.	மாணவர்களின் எண்ணிக்கை.		
	ஆண்கள்.	பெண்கள்.	மொத்தம்.
(1)	(6)	(7)	(8)
மேல்நிலைப் பள்ளிகள் ..	16,929	11,335	28,264
உயர்நிலைப் பள்ளிகள் ..	3,809	8,484	12,293
பயிற்சி நிறுவனம்	..	49	49
மொத்தம்	20 738	19,868	40,606

	எண்ணிக்கை.		ஆசிரியர்களின் மொத்தம்.
	ஆண்கள்.	பெண்கள்.	
(1)	(2)	(3)	(4)
மேல்நிலைப் பள்ளிகள் ..	276	617	893
உயர்நிலைப் பள்ளிகள் ..	68	344	412
பயிற்சி நிறுவனம்	1	4	5
மொத்தம்	345	965	1,310

மேல்நிலைக் கல்வி :

1982—83-ல் அரசினர் சாதாரண உயர்நிலைப் பள்ளிகள் 4> மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 9 ஆகியவை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன. இம்மாநிலத்திலிருந்த மேல்நிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 1,416 ஆகும்.

அரசு விருது மற்றும் பள்ளி ஆசிரியர்களுக்கான சலுகைகள் :

207 ஆசிரியர்கள் ஆற்றிய தகைசால் பணியைப் பாராட்டி அவர்களுக்கு அரசு விருது வழங்கப்பட்டது.

தத்தம் நிலையில் 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலை வழங்கும் சலுகை 1—6—1981 முதல் இளநிலை இடைநிலை ஆசிரியர்களுக்கும் 1982—83 முதல் பி.எட். தர ஆசிரியர்களுக்கும் அளிக்கப்பட்டது. அனைத்து ஆசிரியர்களுக்கும் 1982—83 ஆம் ஆண்டிலிருந்து ஈட்டிய விடுப்பு 3 நாட்களிலிருந்து 10 நாட்களாக அதிகரிக்கப்பட்டது.

ஆசிரியர்களது குறைகளை அவ்வப்போது உடனுக்குடன் உரிய மட்டத்தில் தீர்த்து வைக்கும் பொருட்டு கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில நிலைகளில் '' ஆசிரியர்களுக்கான ஆலோசனைக் குழுக்களை '' அரசு அமைத்துள்ளது. இக் குழுக்களில் அதிகாரிகளும், அங்கீகாரம் பெற்ற ஆசிரியர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளும் உள்ளனர்.

தமிழ் வளர்ச்சி.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் 1982—83ஆம் நிதியாண்டில் 31 தமிழறிஞர்களுக்கு 1—4—1982 முதல் 3 ஆண்டுகளுக்குத் திங்கள் தோறும் ரூ. 250 வீதம் நிதியுதவி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது இவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 15—1—1983 அன்று நடைபெற்ற வள்ளுவர் விழாவில் முதல் திங்களுக்குரிய நிதியுதவியை வழங்கிச் சிறப்பித்தார்.

திரு. வி. க. விருது :

திரு. வி. க. விருது ஆண்டுதோறும், அண்ணா பிறந்த நாள் விழாவில் சிறந்த எழுத்தாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதன்படி விருதுபெறும் எழுத்தாளர் ரூ. 10,000 பணமாகப் பெறுவார். இவ்விருது 1979-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 1982-இல் திருக்குறளார் வி. முனுசாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

பாவேந்தர் பாரதிதாசன் விருது :

பாரதிதாசன் பிறந்த நாள் விழாவில் ஆண்டு தோறும் கவிஞர் ஒருவருக்கு இவ்விருது வழங்கும் முறையில் ரூ. 10,000 ரொக்கப் பரிசாக அளிக்கப்பட்டு வந்தது. 1982-ஆம் ஆண்டுக்கான இவ்விருது கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் :

தந்தை பெரியார் அவர்கள் மேற்கொண்ட எழுத்துச் சீர் திருத்தத்தை ஏற்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி, அரசு நடவடிக்கைகள் அனைத்திலும் சீர்திருத்திய எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தினைத் தொடர்ந்து தமிழ் எழுத்துக்களை சீர்திருத்தி அமைக்கும் பொருட்டு மகாவித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் தலைமையில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தக் குழு ஒன்று அமைக்கப் பெற்றது.

திருவள்ளுவர் திருநாள் :

திருவள்ளுவரின் நினைவைப் போற்றச் செய்யும் வகையில் ஆண்டு தோறும் சனவரித் திங்கள் 15 ஆம் நாளன்று திருவள்ளுவர் திருநாள் அரசு விழாவாக நடத்தப்பெற்று வருகிறது. 1983 ஆம் ஆண்டுக்குரிய இவ்விழா வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அதிகார பூர்வமான தமிழ்நாட்டு வரலாறு நூலின் இரண்டாம் தொகுதியான சங்க காலம் வெளியிடப்பட்டது.

மொழிபெயர்ப்புப் பணி

பல்வேறு அரசுத் துறைகளில் 29 படிவங்களும் நூல்களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பல்வேறு துறைகளுக்குரிய 12 நூல்கள் 17 படிவங்கள் ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு இறுதி ஆய்வு செய்து முடிக்கப்பபெற்றது. இவ்வாண்டில் பல்வேறு துறைகளின் 9 நூல்கள் அச்சிட்டு வெளியிடப் பட்டுள்ளன ; 8 நூல்கள் அச்சில் உள்ளன.

ஆய்வு :

துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்டாட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் இவ்வாண்டில் இருமுறை தமிழ்த் திட்டச் செயலாக்கம் குறித்து ஆய்வு செய்துள்ளார்.

அனைத்து மாவட்டத் தமிழ் வளர்ச்சி ஆய்வு உதவி இயக்குநர்களாலும் 1982-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 1983 மார்ச்சு முடிய 6.329 அரசு அலுவலகங்களில் தமிழ்த் திட்டச் செயலாக்கம் குறித்து ஆய்வு செய்யப் பெற்றது.

தவிர 4. இ. ஆ. ப. அலுவலர்களுக்கும், ஒரு இ. கா. ப., அலுவலருக்கும் தமிழ்த் திட்டச் செயலாக்கம் தொடர்பான இவ்வியக்ககத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.

1. அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழியாக தமிழை தீவிரமாக நடைமுறைப்படுத்துதல் :—இத்திட்டம் இவ்வாண்டு வெகு தீவிரமாக நடை முறைப்படுத்தப்பட்டது.

2. தமிழில் சிறந்த நூல்களை வெளியிட நூலாசிரியர்களுக்கு நிதி உதவி அளித்தல்—இத்திட்டத்தின் கீழ் நூலாசிரியர்களுக்கு நடப்பு ஆண்டில் ரூ. 18,850 நிதியுதவியாக ஒப்பளிப்பு செய்யப் பட்டுள்ளது.

3. கீழ்க்கண்ட திட்டங்கள் தமிழ் மொழி முன்னேற்றத்திற்கென இவ்வாண்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது :—

(i) தமிழில் ஆராய்ச்சி செய்யும் அறிஞர்களுக்கு உபயோகப் பட ஏதுவாக நல்ல தமிழ் நூல்கள் விவர அட்டவணை தயாரித்தல்.

(ii) தமிழ்நாடு வரலாறு எழுதும் பணி.

(iii) பிறமொழி சிறப்பிலக்கியங்களை தமிழில் மொழி பெயர்த்தல்.

(iv) தமிழ் சொல்லகராதி பதிப்புகளை மேன் மேலும் அரசு அலுவலகங்களில் அலுவலர்களால் பயன்படுத்தப்பட பதிப்பித்தல்

(v) தமிழ் வளர்ச்சி இயக்ககத் துறையினை பொருட்காட்சி மற்றும் விழாக்களில் பங்கேற்க செய்தல்.

4. **தமிழ் மொழி வளர்ச்சியை பிறமாநிலங்களில் ஊக்குவித்தல்.**—இந்த ஆண்டில் நிதியுதவியாக 6 பல்கலைக்கழகங்கள் கல்வி நிறுவனங்களுக்கு தமிழ் இருக்கை தோற்றுவிக்க, தமிழின் பகுதி நேரப்பட்டய வகுப்பு நடத்த ரூ. 3,45,352.70 அளிக்கப் பட்டது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் பெரும் அளவில் திரட்டிய கிடைத்தற்கரிய அரசு ஆவணங்களைக் கொண்டதாகத் திகழ்கிறது. இது ஒரு வரலாற்று ஆராய்ச்சி நிலையமாகவும் விளங்குகிறது. மேலும், ஆட்சியாளர்களுக்குத் தேவையான ஆவணங்களை வழங்குகிறது. கடந்த மூன்று ஆண்டுக்களுக்குரிய ஆவணங்கள் தவிர ஏனைய தமிழக அரசுத் தலைமைச் செயலக ஆவணங்களும் கடந்த பத்தாண்டுகளுக்குரிய ஆவணங்கள் தவிர ஏனைய வருவாய்த்துறை வாரியம் ஆவணங்களும் இக் காப்பகத்தில் உள்ளன. சில துறைத் தலைவர் அலுவலகங்களில் ஆவணங்களும் மற்றும் பலவகையான வரலாற்று நிருவாகச் சிறப்புமிக்க ஆவணங்களும் இங்குள்ள ஆவணத் திரட்டில் அடங்கும். இங்குள்ள ஆங்கில மொழி ஆவணங்கள் 1670-ஆம் ஆண்டு முதல் உருவாக்கப்பட்டவையாகும்.

ஆவணங்கள்.

பெறப்பட்ட ஆவணங்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் :

இவ்வறிக்கைக் காலத்தில், தலைமைச் செயலகப் பல்வேறு துறைகளைச் சார்ந்த 1977 ஆம் ஆண்டில் 467 ஆவணக் கட்டுகளும் 1966 முதல் 1971 வரையிலான ஆண்டுகளைச் சார்ந்த

வருவாய்த் துறை வாரியத்தின் 137 ஆவணக் கட்டுக்களும் பாது காப்பிற்காக இக்காப்பகத்திற்கு மாற்றப்பட்டன. பிணைமுறி ஒப்பந்தங்கள், பத்திரங்கள் போன்ற 1,938 பாதுகாப்பு நிலைப் பேழை ஆவணங்களும் பெறப்பட்டன.

மாவட்ட ஆவணக் காப்பகங்கள்

1,528 முடிப்புக் கோப்புகள் கொண்ட 53 ஆவணக்கட்டுக்கள் கோயம்புத்தூர் மாவட்ட ஆவணக்காப்பகப் பொறுப்பிற்கும், 356 நிலையான முடிவுக் கோப்புகள் மதுரை மாவட்ட ஆவணக் காப்பகப் பொறுப்பிற்கும் மாற்றப்பட்டன.

அரசிற்கும் மற்ற மாநில ஆவணக் காப்பகங்கட்கும், பொது மக்களுக்கும் தகவல் அளித்த பணி.

இந்த அறிக்கை ஆண்டில், தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலகம், வருவாய்த்துறை வாரியம், வனத் துறைத் தலைவர், ஆராய்ச்சியாளர்கள் முதலியோரிடமிருந்து ஆவணங்கள் வேண்டி யும், தகவல் வேண்டியும், 68,627 கோரிக்கை மனுக்கள் வந்தன. இவற்றில் 196 கோரிக்கைகளுக்கு, பொருள் விவர அட்டவணை களைப் பார்வையிட்டுத் தேவையான ஆவணங்களைத் தேடிக்கண்டு பிடிக்கும் பணியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. 54.250-க்கும் மேற்பட்ட ஆவணங்கள், தலைமைச் செயலகம், வருவாய்த்துறை வாரியம் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் முதலானோர்க்கு அளிக்கப் பட்டன. இவ்வறிக்கைக் காலத்தில், 49,600-க்கு மேற்பட்ட ஆவணங்கள திரும்பப் பெறப்பட்டு, 46,900-க்கு மேற்பட்ட ஆவணங்கள் உரிய கட்டுகளிற் சேர்க்கப்பெற்றன, தனி உரிமைச் சான்று மற்றும் வடிவமைப்புக் கட்டுப்பாட்டு அலுவலரின் அச்சிட்ட விவரக் குறிப்பீடுகள் முதலியவற்றைப் பொதுமக்கள் இலவசமாகப் பார்வையிட, தமிழ்நாடு ஆவணக் காப்பகம் தமிழ் நாட்டில் ஓர் ஆய்வுமையமாகத் தொடர்ந்து பணிபுரிகிறது.

மாவட்ட ஆவணங்கள் பற்றிய அறிக்கை :

1857 ஆம் ஆண்டு வரையிலான ஆங்கில மொழியில் உள்ள மாவட்ட ஆவணங்கள் இக்காப்பகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. 1857-க்குப் பிறகு ஆங்கிலத்தில் உள்ள மாவட்ட ஆவணங்களும் ஒரு சிலவற்றைத் தவிர வட்டார மொழியில் உள்ள பதிவுருக் களும், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், துறைத் தலைவர் அலுவலகங்களிலும் பாதுகாக்கப்படுகின்றன.

நூலகம் :

இக்காப்பக நூலகத்தில் சுமார் இரண்டரை லட்சம் எண்ணிக்கையுள்ள அரிய சிறந்த புத்தகங்கள் உள்ளன. ஆராய்ச்சியாளர்களுக்கும், காப்பக அலுவலர்களுக்கும் இது ஒரு 'மேற்கோள் நூலக' மாக இயங்குகிறது. அறிக்கைக் காலத்தில் தலைமைச் செயலகத்திலிருந்தும், துறைத் தலைவர் அலுவலகங்களிலிருந்தும் 459 புத்தகங்கள் வரப்பெற்று நூலகத்தில் சேர்க்கப்பெற்றன. ஆராய்ச்சியாளர்களிடமிருந்தும், ஆவணப் பிரிவுகளிலிருந்தும் 7,027 கோரிக்கை மனுக்கள் வரப்பெற்று, 7,015 புத்தகங்கள் வழங்கப்பெற்றன. 6,033 புத்தகங்கள் திரும்பப்பெறப்பட்டு, உரிய இடங்களில் வைக்கப்பெற்றன. தமிழ்நாடு அரசிதழிலிருந்து சான்றிட்ட பகுதி நகல்கள் கேட்போருக்கு வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்றது, 456 பேர்களுக்கு அரசிதழ் நகல்கள் வழங்கப்பெற்று, தேடு கட்டணம் மற்றும் தட்டச்சுக் கட்டணமாக ரூ. 3,516.60 வசூலிக்கப்பெற்றது. இக்காப்பகப் பதிப்புகளின் விற்பனை வாயிலாக ரூ.839.14 கிட்டியது.

வரலாற்று ஆராய்ச்சி

ஆராய்ச்சி அறிஞர்கள்

பல்வேறு ஆராய்ச்சித் தலைப்புகளில் ஆராய்ச்சிக்கான ஆவணங்களை இங்கு பார்வையிட்டுத் தேவையான தகவல்களைத் திரட்டிக்கொள்ள, 299 ஆராய்ச்சி அறிஞர்கள் இந்த அறிக்கை ஆண்டில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுள் 220 பேர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். 70 பேர் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். 9 பேர் மேல் நாட்டினர்.

ஆராய்ச்சி பணி உதவித் தொகை :

இம்மன்றம் ஆண்டுதோறும் நான்கு ஆராய்ச்சியாளர்களுக்கு ஆராய்ச்சி பணி உதவித் தொகை வழங்குகிறது. ஒவ்வோர் ஆராய்ச்சியாளரும் இரண்டு ஆண்டுகள் பணிபுரியவேண்டும். ஒவ்வொருவருக்கும் ரூ. 750-க்குக் குறையாமலும், ரூ. 1000-க்கு மேற்படாமலும் மாத உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

அரசுப் பணியில் இருப்போராயின் அவர்களின் மாத ஊதியத்திற்குச் சமமான தொகையும், அத்துடன் கூடுதலாக ரூ. 100-ம் அளிக்கப்படும். மேலும், ஆராய்ச்சிச் செலவுக்காகவும், புத்தகங்கள் வாங்குதல் பயணச் செலவு போன்றவற்றிற்காகவும் ஆண்டு ஒன்றிற்கு ஓர் ஆராய்ச்சியாளருக்கு ரூ. 5,000 வீதம் அளிக்கப்படுகிறது. இந்த அறிக்கைக் காலத்தில் 1980—82 ஆண்டுக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்ற இரு ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆராய்ச்சிப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு தங்கள் பணிகளை முடித்தனர். 1982—84 ஆண்டுக்கு நான்கு ஆராய்ச்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அவர்களுள் இருவர் மட்டும் பணியில் சேர்ந்தனர். அவ்விருவரில் ஒருவர் சொந்த வேண்டுகோளின் பேரில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். ஆராய்ச்சியாளர் பணியிடத்தில் ஏற்பட்ட மூன்று காலியிடங்களுக்கு காத்திருப்பவர் பட்டியலிலிருந்தும் 1982—84-க்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற மற்ற வேட்பாளர்களை நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

தொழில் நுட்பக் கல்வித் துறை.

தமிழ் நாட்டில் தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சி ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முந்தைய ஆண்டுகளைப் போலவே தொழில் நுட்பக் கல்வியின் தரத்தை வளப்படுத்துவதையும், தொழில் நுட்பக் கல்விக்கான வசதிகளைப் பெருக்குவதையுமே பெருமளவு நோக்கமாக இவ்வாண்டின் கொள்கையாக அமைந்துள்ளது.

பாலிடெக்னிக்குகள் :

1982—83 ஆம் ஆண்டில் கீழ் காணும் புதிய பாடங்கள் துவங்கப்பட்டன.

பட்டப்படிப்பு :

1. பெயின்டிங்	அரசினர் கலைத் தொழில் கல்லூரி, சென்னை.
2. ஸ்கல்ப்ச்சர்	அரசினர் கலைத் தொழில் கல்லூரி, சென்னை.

டிப்ளோமா படிப்பு

1. எலக்ட்ரானிக்ஸ்	பக்தவச்சலம் பாலிடெக்னிக், காஞ்சிபுரம்.
2. மிஷின் டிசைன் அண்டு டிராப்டிங்	அரசினர் பாலிடெக்னிக், நாகர்கோவில்.

போஸ்ட் டிப்ளமா :

1. இன்டஸ்டிரியல் என்ஜினியரிங்.	நாச்சிமுத்து பாலிடெக்னிக், பொள்ளாச்சி.
2. இன்ஸ்ட்ருமென்ட் டெக்னிக்ஸ்.	சென்ட்ரல் பாலிடெக்னிக், சென்னை.
3. பவுண்டரி இன்ஜினியரிங்	தந்தை பெரியார் இ.வி. ராமசாமி அரசினர் பாலிடெக்னிக், வேலூர்.

விருப்பப்பாடங்கள் :

1. பவர்சிஸ்ட்டம்ஸ் என்ஜினியரிங்.	ராஜகோபால் பாலிடெக்னிக், குடியாத்தம்.
2. பண்டமென்டல்ஸ் ஆஃப் டி.வி. அன்ட் சர்விசிங்.	பி.ஏ.வி. ராமசாமி ராஜா பாலிடெக்னிக், ராஜபாளையம்.

புதிய பாலிடெக்னிக்குகள் :

1982—83 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் புதிய பாலிடெக்னிக்குகள், பாலிடெக்னிக்குகளில் சேரவிழையும் மாணவர்களின் தேவையை சமாளிக்கவும் தொழிலகங்களில் உள்ள வேலை வாய்ப்பை பயன்படுத்தத் தேவையான தொழில் நுட்பவியலாளர்களைத் உருவாக்கவும் துவக்கப்பட்டன.

அரசினர் பாலிடெக்னிக்குகள் :

1. அரசினர் பாலிடெக்னிக், உதகமண்டலம்.
2. பாரதியார் நூற்றாண்டு நினைவு மகளிர் பாலிடெக்னிக். எட்டயபுரம்

தனியார் பாலிடெக்னிக் :

1. ருக்மணி ஷண்முகம் பாலிடெக்னிக், சிலைமான்.
2. வி. ராமகிருஷ்ணா பாலிடெக்னிக், திருவெற்றியூர்.
3. காமராஜ் பாலிடெக்னிக், பழவிளை.
4. அய்யா நாடார் ஜானகி அம்மாள் மகளிர் பாலிடெக்னிக், சிவகாசி.
5. அருள்மிகு பழனியாண்டவர் பாலிடெக்னிக், பழனி.
6. நஞ்சப்பா இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னலாஜி, மொரட்டுப் பாளையம்.
7. கோடை பாலிடெக்னிக், கொடைக்கானல்.

கம்யூனிடி பாலிடெக்னிக்:

அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக்குழுவின் பரிந்துரையின்படி கிராமப்புறங்களில் தொழில் நுட்ப முன்னேற்றம் பெருக, சில பாலிடெக்னிக்குகள், கம்யூனிடி பாலிடெக்னிக்குகளாக செயல்பட்டு வருகின்றன.

1. ஸ்ரீராமகிருஷ்ணா மிஷின் வித்தியாலயா பாலிடெக்னிக், கோயம்புத்தூர்.
2. அண்ணாமலை பாலிடெக்னிக், செட்டிநாடு.
3. பக்தவச்சலம் பாலிடெக்னிக், காஞ்சிபுரம்.

இத்திட்டத்திற்கு மத்திய அரசு 100 சதவிகிதம் நிதியுதவி அளித்து வருகிறது.

நேரடி மத்திய உதவித் திட்டம் :

நேரடி மத்திய உதவித் திட்டத்தின்கீழ் நன்கு முன்னேற்றம் அடைந்த பாலிடெக்னிக்குகள் வளர்ந்துவரும் தொழில் நுட்பத் துறைகளில் வளர்ச்சித்திட்டங்கள் செயல்படுத்த மத்திய அரசு நேரடி மத்திய உதவி அளித்து வருகிறது.

1982—83 ஆம் ஆண்டில் மத்தியஅரசு நிதியுதவி அளிக்கப் பட்ட பயிலகங்களில், இத்திட்டங்களின் விவரம், ஏற்பளிக்கப் பட்ட செலவின விவரம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பயிலகங்கள் பெயர்.	திட்டம்.	நிதி யுதவி. (ரூபாய் இலட்சத்தில்
(1)	(2)	(3)
1. சங்கர் இன்ஸ்டியூட் ஆப் பாலிடெக்னிக், தாழையூத்து.	இன்ஸ்டிருமென்டேஷன்	3.00
2. முருகப்பா பாலிடெக்னிக், ஆவடி.	டெவலப்மென்ட் ஆப் ரூரல் டெக்னாலஜி.	1.00
3. சேஷசாயி இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி, திருச்சிராப்பள்ளி.	புரடக்ஷன் சென்டர் ..	2,75
4. வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக், நாகப்பட்டினம்.	அப்ரோப்ரியேட் டெக்னாலஜி டெவலப் மென்ட் சென்டர்.	3.00
5. முகமது சதக் பாலி டெக்னிக், கீழக்கரை.	டிை	3.00
6. எஸ். எஸ். மாரி செட்டி யார் நெசவுத் தொழில் பயிலகம், சென்னை.	டிை	3.00

பொறியியற் கலலூரிகள் :

1982—83 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் புதிய பாடங்கள் துவங்கப்பட்டுள்ளன.

பட்டமேற்படிப்பு :

1. மைக்ரோவேவ் அண்ட் ஆப் டிகள் என்ஜினியரிங்.	அ.செ. பொறியியற் கல்லூரி, காரைக்குடி.
2. அப்ளைட் கெமிஸ்ட்ரி	அரசினர் பொறியியல் கல்லூரி, கோவை.
3. கம்ப்யூட்டர் எய்டட் டிசைன் ஆப் ஸ்ரக்ட்சர்ஸ்.	கோயம்புத்தூர் தொழில் நுட்பக் கல்லூரி, கோவை.

1982—83 ஆம் ஆண்டில் அண்ணா பல்கலைக் கழகத்தில் கம்ப் யூட்டர் சயன்ஸ் பட்டப்படிப்பு துவக்கப்பட்டுள்ளது.

1982—83 ஆம் ஆண்டில், நேரடி மத்திய உதவித் திட்டத் தின்கீழ் பொறியியற் கல்லூரிக்கு அளிக்கப்பட்ட நிதியுதவி விவரம் கீழ்வருமாறு :—

பயிலகங்களின் பெயர்.	திட்டம்.	நிதி யுதவி. (ரூபாய் இலட்சத்தில்)
(1)	(2)	(3)
1. அரசினர் பொறியியற் கல்லூரி, சேலம்.	கம்ப்யூட்டர் வசதிகள்	5.00
2. அரசினர் பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி.	ஷை	5.00
3. கோயம்புத்தூர் இன்ஸ்டி யூட் ஆப் டெக்னாலஜி, கோயம்புத்தூர்.	இன்ஸ்ட்ருமென்டேஷன்	5.00

புத்தக வங்கி :

மாநில அரசு உதவியுடன், தனியார் துறையிடமிருந்து பெற்ற நன்கொடை மூலமாகவும் அனைத்துத் தொழில் நுட்பப் பயி லகங்களிலும் புத்தக வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன. புதிதாக துவக்கப்பட்ட பாலிடெக்னிக்குகளிலும் புத்தக வங்கிகள் நிறுவப்பட்டு உள்ளன. தாழ்த்தப்பட்ட வகுப்பு/பழங்குடியினர் மாணவர்களுக்கென தனியே ஒரு புத்தக வங்கி ரூ. 2.55 இலட்சங்கள் மத்திய அரசு நிதியுதவியுடன் அனைத்துப் பொறியியல் கல்லூரிகளிலும் நிறுவப்பட்டுள்ளது.

தொழிலகப் பயிற்சி :

இத்திட்டத்தின்கீழ் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலி டெக்னிக் ஆசிரியர்கள் குறுகிய கால பயிற்சிக்காக பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு தொழிலகங்களில் நிலவும் தற் போதைய நிலையினை அறிய அனுப்பப்படுகின்றனர். இது வரை 518 ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

தொடர் கல்வித் திட்டம் :

தொடர் கல்வித் திட்டத்தின் கீழ், நாட்டிலுள்ள பல்வேறு தொழில் நுட்ப பயிலகங்களால் நடத்தப்படும் கருத்தரங்குகள், குறுகிய காலபாடங்கள், கோடைப் பள்ளிகள் போன்றவை களில் பங்கேற்க ஆசிரியர்கள் ஆண்டுதோறும் அனுப்பப்படு கின்றனர்.

கன்னிமாரா பொது நூலகம்.

கன்னிமாரா பொது நூலகம், சென்னை 1886 முதல் 1891 வரை சென்னை கவர்னராகயிருந்த கன்னிமாரா பிரபுவின் பெயரைக்கொண்டு ஆங்கிலோ இத்தாலிய பாணியில் கட்டப்பட்டது. இந்நூலகம் 5–12–1886 அன்று சென்னை அரசால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1950 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இந்நூலகம் 1948 ஆண்டின் சென்னை பொது நூலக சட்டத்தின்கீழ் மாநில மைய நூலகமாக ஆகியது. 1955 ஆம் வருடம் செப்டம்பர் திங்கள் 10 ஆம் நாளுக்குப் பிறகு இந்தியாவில் பிரசுரமாகும் (தனியார் அல்லது பொது பிரசுரம்) எல்லா பிரசுரங்களையும் பெறும் இந்தியாவிலுள்ள நான்கு தேசிய சேமிப்பு நூலகங்களில் ஒன்றாக ஆகியது.

இந்நூலகத்தில் ஒரே சமயத்தில் 340 வாசகர்கள் அமர்ந்து படிப்பதற்கான இருக்கை வசதியுள்ளது. இந்நூலகம் 1956 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் முதல் யுனெஸ்கோ நிறுவனத்தின் தகவல் மையமாகவும் செயல்பட்டு வருகிறது. ஐக்கிய நாட்டு சபையின் வெளியீட்டுகளுக்கும் இங்கு பெறப்படுகிறது. இந்நூலகத்தில் பாடநூல் பிரிவு ஒன்று 1–11–1981 முதல் செயல்பட்டு வருகிறது. இது தமிழ் நாட்டிலுள்ள மாணவர் சமுதாயத்திற்கு பணியாற்றி வருகிறது.

இந்நூலகம் 1–4–1980 முதல் அரசின் புதிய ஆணைப்படி காலை 8-00 மணி முதல் மாலை 8-00 மணி வரை 12 மணி நேரம் பொது மக்களின் பயனிற்காக திறந்து வைக்கப்படுகிறது. மூன்று தேசிய விடுமுறை நாட்களான (1) குடியரசு தினம் (2) சுதந்திர தினம் (3) மகாத்மா காந்தி பிறந்த தினம் தவிர அனைத்து நாட்களிலும் இந்நூலகம் செயல்பட்டு வருகிறது.

இவ்வாண்டின் அங்கத்தினர்கள் எண்ணிக்கை 31–3–1983 வரை 20,293 ஆகும். சென்ற ஆண்டின் எண்ணிக்கை 31–3–1983 வரை 18,290 ஆகும். இவ்வாண்டின் அங்கத்தினர்கள் விலகல் எண்ணிக்கை 277 சென்ற ஆண்டின் எண்ணிக்கை 270. ஆகையால் இவ்வாண்டு அங்கத்தினர்களின் எண்ணிக்கை 2,002 ஆக உயர்ந்துள்ளது.

1982—83 ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு சராசரி 838 வாசகர்கள் என்ற வீதத்தில் மொத்தம் 3,03,488 வாசகர்கள் இந்நூலகத்தினைப் பயன்படுத்தியுள்ளனர். 1982 ஆம் ஆண்டு மே 15 ஆம் நாள் சனிக்கிழமை அவ் வாண்டிலேயே அதிகமான வாசகர்கள் அதாவது 1,260 பேர் இந்நூலகத்தினைப் பயன் படுத்தியுள்ளனர். மேற்கூறிய மொத்த வாசகர்கள் இவ்வாண் டில் நாள் ஒன்றுக்கு சராசரி 3,066 நூல்கள் என்ற வீதத்தில் மொத்தம் 11,10,252 நூல்களைப் பயன்படுத்தியுள்ளனர். இதில் இவ்வாண்டில் 20,292 உறுப்பினர்களுக்கு நாள் ஒன்றுக்கு சராசரி 413 நூல்கள் என்ற வீதத்தில் இரவலாக வழங்கப் பட்ட 1,49,744 நூல்களும் அடங்கும். 1982 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்றுதான் அவ் வாண்டிலேயே அதிக எண்ணிக்கை அதாவது 794 நூல்கள இரவல் வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் ௬.

நிதித் துறை

அத்தியாயம் 6

நிதித்துறை

கருவூலக் கணக்கு இயக்கம்.

தற்சமயம் தமிழ்நாட்டில் 163 சார்நிலைக் கருவூலங்கள் இயங்கி வருகின்றன. அவைகளின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

	தெரிவு நிலை.	நிலை 1	நிலை 2	மொத்தம்
வங்கி சார்புடையவை.	14	50	50	114
வங்கி சார்பு அற்றவை.	3	16	30	49
மொத்தம்	17	66	80	163

சார்நிலைக் கருவூலங்கள் 163-ல் 30 சார்நிலைக் கருவூலங்கள் வாடகை கட்டிடத்தில் செயல்படுகின்றன. 30 அலுவலகங்கள் அரசுக்குச் சொந்தமான வகைப்படுத்தப்பட்ட மாதிரிக் கட்டிடங்களிலும் 102 அலுவலகங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒரு பிரிவிலும், 1 அலுவலகம் வட்டாட்சியர் அலுவலகம் அல்லாத அரசுக்குச் சொந்தமான கட்டிடத்திலும் செயல் படுகின்றன.

புதிய சார்நிலைக் கருவூலங்கள்:

ஒரு புதிய வங்கி சாரா சார்நிலைக் கருவூலம், திருச்சிராப் பள்ளி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கத்தில் 17—4—1982 அன்று திறக்கப்பட்டது.

சார்நிலைக் கருவூலங்களுக்குப் புதிய கட்டிடங்கள்:

1982–83-ம் வருடத்தில், கீழ்க்கண்ட இடங்களில் சார்நிலைக் கருவூலகங்களுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

வரிசை எண்.	மாவட்டம்.	கட்டப்பட்ட இடத்தின் பெயர்.	கட்டிடத்தின் மதிப்பு.
1.	தென் ஆற்காடு	கள்ளக்குறிச்சி.	3.46 லட்சம்.
2.	தென் ஆற்காடு	செஞ்சி ..	3.46 லட்சம்.
3.	செங்கல்பட்டு	திருப்பெரும்புதூர்.	3.46 லட்சம்.
4.	இராமநாதபுரம்	ஸ்ரீவில்லிப்புத்தூர்	3.46 லட்சம்.

5. திருச்சிராப்பள்ளி.	திருச்சி	3.46 லட்சம்.
6. தருமபுரி	கிருஷ்ணகிரி ..	3.46 லட்சம.

மேலே குறிப்பிடப்பட்டவைகளுடன் 15—7—1982 அன்று 1.67 லட்சம் மதிப்புள்ள புதிய கட்டிடம் காஞ்சிபுரத்திலும் 5–11–1982 அன்று 2.70 லட்சம் மதிப்புள்ள புதிய கட்டிடம் பொன்னேரியிலும் திறக்கப்பட்டன.

மாநில நிதி

	(ரூபாய் ஆயிரத்தில்).
மொத்த வரி வருவாய் ..	11,03,91,19
வரியில்லா மொத்த வருவாய்	1,67,53,28
மானியங்களாக வழங்கிய மொத்தத் தொகை	4,06,57,16
வருவாய்க் கணக்கின் கீழ் மொத்த வரவுகள்.	16,78,01,63

வருவாய்க் கணக்கின் மீதான செலவு.

	(ரூபாய் ஆயிரத்தில்).
பொதுவான பணி ..	3,60,51,74
சமூக-சமுதாய நலப்பணி	7,10,82,43
பொருளாதாரப் பணி	4,83,25,86
உதவி மானியங்களாக வழங்கியத் தொகை	21,47,64
வருவாய்க் கணக்கின் மீதான மொத்த செலவு.	15,76,07,67

மூலதனக் கணக்கின் மீதான செலவு.

பொதுவான பணிகள் குறித்த மூலதனக் கணக்கு.	9,13,57
சமூக-சமுதாய நலப் பணிகள் குறித்த மூலதனக் கணக்கு.	31,11,33
பொருளாதாரப் பணிகள் குறித்த மூலதனக் கணக்கு.	1,10,50,66
ருவாய்க் கணக்கிற்குப் புறம்பான மொத்த மூலதனச் செலவு.	1,50,75,56

ரொக்க இருப்பு:

31 —3 —1983ஆம் நாளது நிலவரப்படி தமிழக அரசின் ரொக்க இருப்பு ரூ. (—) 404.11 இலட்சமாகும்.

வருவாய்க் கணக்கு:

தமிழ்நாட்டின் 1982-83ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் ரூ. 16,78,02 இலட்சமாகும். அந்த ஆண்டிற்கான செலவு ரூ. 15,76,08 இலட்சமாகும். இதனால் ஏற்பட்ட உபரித் தொகை ரூ. 1,01,94 இலட்சமாகும்.

மூலதனக் கணக்கு :

விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்தவைகளின் கணக்கில் ரூ. 19,78.17 இலட்சமும், சமூக சமுதாய நலப் பணிகளின் மூலதனக் கணக்கில் ரூ. 31,11·33 இலட்சமும், நீர் மின் விசை மேம்பாடு மூலதனக் கணக்கில் ரூ. 37,49·36 இலட்சமுமாக மொத்த மூலதனச் செலவு ரூ. 1,50,75·56 இலட்சமாகும்.

சிறப்பு நிதிகள்.

பஞ்சத் துயர் தணிப்பு நிதி :

இந்த நிதியானது 1936 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சத் துயர் தணிப்பு நிதிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. பஞ்சம் உள்ளிட்ட ஏனைய இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் கடும் வறட்சி, வெள்ளம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இடருதவி அளிப்பது குறித்த செலவையும், அதுபோல பாசன வசதி பாதுகாப்பு அல்லது பஞ்சத்துயர் தணிப்புக்காக மேற் கொள்ளும் ஏனைய பணிகள் குறித்தச் செலவினையும் ஈடு செய்வதற்கு இத்தொகை எடுத்துக்கொள்ளப்படுகிறது. 1953 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30ஆம் நாளன்று இந்நிதியில் இருந்த ரொக்க இருப்பு ரூ. 11.79 இலட்சமாகும். பெயரளவி லான இந்த இருப்பிற்குரிய நிதி ஒதுக்கத்திற்கு, 1953ஆம் ஆண்டு ஆந்திர மாநிலச் சட்டத்தில் வகைச் செய்யப்படவில்லை. பரஸ்பர உடன்பாட்டின் மூலம் இது தீர்க்கப்பட்டது. 30 —9 —1953ஆம் நாளன்று இந்நிதியில் இருந்த பெயரளவி லான முழு இருப்பையும் தமிழ்நாடு மாநிலத்திற்கு மாற்றிக் கொடுக்க, ஆந்திர அரசும், மைசூர் அரசும் ஒப்புக்கொண்டன. அதன்படி 30 —9 —1953 ஆம் நாளன்று

இருந்த இருப்புத் தொகை, தமிழ்நாடு மாநிலக் கணக்குக்கு கொண்டு வரப்பட்டன. 31—10—1956ஆம் நாள் நிலவரப் படி இந்நிதியின் இறுதி இருப்பு ரூ. 22.11 இலட்சமாகும். இதில் ரூ. 2,38 இலட்சமும் ரொக்கமும், ரூ. 19.73 இலட்சத் திற்கான (கொள்முதல் விலை) ஈட்டுறுதிப் பத்திரங்களும் அடங்கும். 1956-ஆம் ஆண்டு மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளதிற்கிணங்க அடுத்து அமையும் மாநிலங்களுக்கிடையே இந்த இருப்பின் நிதி ஒதுக்கம் செய்யப்படும் வரை இந்த இருப்புத் தொகை முழுவதும், மறு சீரமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநிலக் கணக்குகளுக்குத் தற்காலிகமாகக் கொண்டு வரப்பட்டது. 1982-83ஆம் ஆண்டு தொடக்கத்தில் இந்நிதியில் எஞ்சியிருந்த தொகை ரூ. 20.75 இலட்சமாகும். இதில் அடங்கியுள்ள ஈட்டுறுதிப் பத்திரங்கள் மட்டுமே ரூ. 20·75 இலட்சத்திற்கு (கொள்முதல் விலை) இருந்தன. ஏழாம் நிதிக்குழுவின் பரிந்துரைகளை ஒட்டி வருவாய்க் கணக்கிலிருந்து இந்நிதிக் கணக்கிற்கு அளிக்கும் ஆண்டு தொகை ரூ. 859.00இலட்சமென்று வரையறுக்கப்பட்டது, அதன்படி, இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் மக்களுக்குத் துயர் தணிப்புக் குரிய செலவை ஈடு செய்வதன் பொருட்டு 1982 83-ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கிலிருந்து இந்நிதிக்கு ரூ. 859.00 இலட்சம் மாற்றப்பட்டது. 31—3—1983ஆம் நாளன்று இந்நிதியில் இருந்த இருப்பு ரூ. 20·75 இலட்சமாகும். இதில் அடங்கியுள்ள ஈட்டுறுதிப்பத்திரங்கள் மட்டுமே ரூ. 20.75 இலட்சத்திற்கு (கொள்முதல் விலை) இருந்தன

பொதுமக்களிடமிருந்து பெறும் கடன்கள் :

ஆய்வாண்டில் தமிழக அரசு பொது மக்களிடமிருந்து பெற்ற கடன் தொகை ரூ. 35,46·54 இலட்சமாகும். இதில் நில உச்ச வரம்பு இழப்பீட்டுப் பத்திரங்களுக்குரிய தொகையும் அடங்கும். இந்த ஆண்டில் கொடுத்துத்தீர்க்கப்பட்ட நில உச்ச வரம்பு இழப்பீட்டுப் பத்திரங்களுக்குத் தொகை திருப்பிச் செலுத் தியது உட்பட பொதுமக்களிடமிருந்து பெற்ற மொத்தக் கடன் தொகை ரூ. 18,13·99 இலட்சமாகும்.

இந்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள் :

பல்வேறு மேம்பாடு மற்றும் ஏனைய திட்டங்கள் குறித்த செலவைச் செய்வதற்காக நடப்பாண்டில் இந்திய அரசிடமிருந்து பெற்ற மொத்தக் கடன் உதவித் தொகை ரூ. 2,08,57·23.

இம்மாநிலத்தின் சில மூலதனப் பொறுப்புக்களையும் சொத்துக்களையும் காட்டும் விவர அட்டவணை:

	31—3—1983ஆம் நாள் நிலவரப்படியுள்ள ஆஸ்திப் பொறுப்புக்கள். (ரூபாய் இலட்சத்தில்.)
கடன்கள் :	
இந்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்.	12,13,00·50
பொதுமக்களிடமிருந்து பெற்ற கடன்.	3,38,63·78
தமிழ்நாடு நில உச்ச வரம்பு இழப்பீட்டுப் பத்திரங்கள் குறித்த 4 சதவீதத் தொகை.	90·01
மீட்கப்படாத தனிக் கடன்கள்	1·29
	31—3—1983ஆம் நாள் நிலவரப் படியான சொத்துக்கள் (ரூபாய் இலட்சத்தில்.)
ஏனைய வகையில் திரட்டியக் கடன்கள் :	
வழிவகை முன்பணங்கள்	
மிகைப்பற்று	
ஏனையக் கடன்கள்	69,32·03
ஏனைய ஆஸ்திப் பொறுப்புகள் :	
மாநில வருங்கால வைப்பு நிதி, சேமிப்பு வங்கி வைப்பீடு.	1,35,83·75
மொத்த ஆஸ்திப் பொறுப்புகள்	17,57,71·36
ஆஸ்தி இருப்புகள் :	
அரசுக்குச் சேர வேண்டிய கடன்களும் முன்பணங்களும்.	8,08,70·11
மின்சார வாரியத்திற்கு வழங்கிய கடன்கள்.	8,78,23·94
மூலதனச் செலவு	11,42,11·73
ரொக்க இருப்பு மற்றும் முதலீடுகள்	25,61·39
மொத்த ஆஸ்தி இருப்புக்கள்	28,54,67·17

அரசுப் புள்ளிவிவர தொகுப்பு நிலையம்.

தமிழ்நாடு அரசுப் பணிகளில் கணக்கீட்டுப் பொறி முறை இருகட்டங்களில் அறிமுகம் செய்யப்பட்டது. முதன் முதலாக 1971ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வரவு செலவுத் திட்ட புள்ளி விவர தொகுப்பு மையம் நிறுவப்பட்டது. இரண்டாவதாக 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசு புள்ளி விவரத் தொகுப்பு நிலையம் அமைக்கப்பட்டது. வரவு-செலவுத் திட்ட புள்ளி விவர தொகுப்பு மையம் பின்னர் அரசுப் புள்ளி விவரத் தொகுப்பு நிலையத்துடன் சேர்க்கப்பட்டது.

கருவூலப் பணிமுறை :

துணைக் கருவூலங்கள், கருவூலங்களின் துணைக் கருவூலப் பிரிவுகள் ஆகியவற்றின் கணக்கிடும் பணிகளில் பிறவற்றுடன் அன்றாட வரவு-செலவு விவர பொருள் வகைப்பட்டியல், அன்றாட கணக்கு நாட்குறிப்பேடு (சிட்டா) தயாரிக்கும் பணியும் அடங்கும். இதற்கு முன்னர் பணப்பட்டிகளும், காசோலைகளும் பெருந்தலைப்பு வாரியாகப் பிரிக்கப்படுகின்றன.

கருவூலங்களில், அவற்றைச் சேர்ந்த துணைக் கருவூலங்கள் அனுப்புகிற ஆவணங்கள் தொகுக்கப்படுகின்றன. நடவடிக்கை கைச்சாத்துக்களை சீர்படுத்துவதும், வழங்கிய தொகைகளுக்கான பட்டியல்களைத் தயாரித்தலுமாகும். பின்னர் துணைக் கணக்கு களுக்கு ஆதரவாக கைச்சாத்து வாரியாகத் தனித்தனி விவரங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஒரு திங்களுக்கான புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு, துறை இணக்கம் செய்யும் பணி யினை மேற்கொள்கிறது. இச்செய்முறையில் காண்பனவற்றைக் கொண்டு, கருவூலத்தின் திருத்தங்கள் தெரிவிக்கப்பட்டு, சரி செய்து அவை சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. பின்னர் அம் மாதத்திற்கான துணைக் கணக்குகள் மூலக்கணக்குகளைத் தயா ரித்துத் தொகுக்கும் பணியானது மேற்கொள்ளப்படலாம். இவை அடுத்துவரும் முதல் திங்களில் 20-ம் தேதிக்குள் மாநிலக் கணக்குத்துறைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

காசோலைகள் வழங்கும் கோட்டத்தில் நடைபெறும் பணி :

மூன்று துறைகளைச் சார்ந்த கோட்டத் தகுதி வாய்ந்த 257 அலுவலர்கள் பட்டிகளுக்கு முற்றிலும் மாறுபடும் வகையில் காசோலை முறையினைப் பின்பற்றுகின்றனர். அவர்கள் தங்களது

கோட்டங்களில் மாதாந்திர துணைக் கணக்குகளுக்கு நிகரான கணக்குகளைத் தயாரித்து மாநிலக் கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்புகின்றனர்.

வணிகவரி மதிப்பீட்டைப் பயன்படுத்தும் முறை :

இந்த ஏற்பாட்டில், வரி மதிப்பீடுசெய்து முடித்த பின்னர்வரி மதிப்பீட்டு அலுவலர் அளிக்கும் புள்ளிவிவரங்களை அதாவது வரிமதிப்பீட்டுப் புள்ளி விவரங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. இத்திட்டம் 1973-74-ல் செயற்படத் தொடங்கியது.

இவ்வாண்டில் தேங்கிக் கிடந்த பணிகளில் பெரும் பகுதி முடிக்கப்பட்டுவிட்டது. குறிப்பாக, மொத்தமுள்ள 27 தொகுதிகளில், 16 தொகுதிகளுக்கான புள்ளி விவரங்கள் தொகுப்புப் பணி 1982-83ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு விட்டன. 1982-83-ம் ஆண்டிற்கான அரையாண்டுப் பகுப்பாய்வுப் பணி உரியகாலத்தில் முடிக்கப்பட்டு வணிகவரித் துறையிடம் அளிக்கப்பட்டது. அரையாண்டுப் புள்ளி விவரங்களில் வரி விதிக்கப்பட்ட 40,000 பேர்களிடமிருந்து வரப்பெற்ற 82,000 பற்று, வரவு அறிக்கைகள் அடங்கும் ஆண்டு புள்ளி விவரத்தில் முதல் உள்ள விதிக்கப்பட்ட 1.17 இலட்சம் பேர்களிடமிருந்து வரப்பெற்ற 2.9 இலட்சம் மதிப்புள்ள வணிகப் பற்று, வரவு அறிக்கைகள் அடங்கும்.

எஸ். எஸ். எல். சி. தேர்வுகள் :

இவ்வாண்டில் கணக்கீட்டுப் பொறிமுறையில் இதுவும் கொண்டு வரப்பட்டது. அதன் விவரம் வருமாறு :—

	செய்முறைப் பணி.	
	தேர்வுக்கு முன்னர்.	தேர்வுக்குப் பின்னர்.
1982ஆம் ஆண்டு மார்ச் திங்கள் ..	..	X
1982ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்	X	X
1983ஆம் ஆண்டு மார்ச் திங்கள்	X	..

மேற்சொன்ன மூன்று தேர்வுகளில் முறையே 3.37 இலட்சம் 1.00 இலட்சம், 3·47 இலட்சம் மாணவர்கள் தேர்வு எழுதினர். மார்ச் மாதத் தேர்வில் சுமார் 3,400 பள்ளிகள் 1,500 தேர்வு நிலையங்களில் தேர்வு நடத்தப்பட்டது.

தேர்வுகளை முறைப்படுத்துவதில் அரசு புள்ளி விவர தொகுப்பு நிலையம் ஆற்றிய சிறப்புப் பணிகளாவன :—

(1) கணக்கீட்டுப் பொறி அடிப்படையில் தேர்வுக்கு முந்தைய, பிந்திய புள்ளி விவரங்களைச் சரிபார்த்து உன்னிப்பாக கண்காணித்தல்.

(2) நிருவாக முடிவுகளுக்கு உதவிடும் வகையில் கடைசி நேரத்தில் தேர்வு நிலையத்தில் செய்யப்படும் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றங்களுக்கு பெருமளவில் ஏற்பாடு செய்தல்.

(3) வினாத்தாள்கள் வழங்குவதை சரிபார்ப்பதற்குக் கணக்கு அறிக்கை.

(4) பெயர்ப்பட்டியலை முழுமையாகவும், துல்லியமாகவும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள தேர்வுக்கு பிந்திய திருத்தங்களை ஏற்று சேர்த்துக் கொள்வதற்கான வழிவகைகள்

(5) உயர் அளவில் முடிவுகள் எடுப்பதற்கு இயலும் வகையில் செய்து, மதிப்பெண் பதிவேடு, மதிப்பெண் சான்றிதழை அட்டவணையிடுதல், தேர்வெழுதுவோர் தேர்வு எழுதிய முறையைப் பகுப்பாய்வு செய்தல்.

மேல்நிலைப் பள்ளித் தேர்வுகள் :

இவ்வாண்டில் மேல்நிலைப் பள்ளித் தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு :—1982 மார்ச் 1.29 இலட்சம், 1982 அக்டோபர் 0.45 இலட்சம், 1983 மார்ச் 1.73 இலட்சம்.

பணியாளரமைப்பு ஆய்வுக் குறிப்பேடு :

புள்ளி விவரத் துறை அளித்த பணியாளரமைப்பு ஆய்வு குறிப்பேடு தொடர்பான சுமார் 4,000 அட்டைகள் காந்த நாடாக்களில் பதிவு செய்யப்பட்டன.

(விவர அட்டவணை 2.41ஏ, 2.42ஏ)

வேலை வாய்ப்பும்-பயிற்சியும் :

நந்தனத்திலுள்ள தொழில்-நிருவாக வேலைவாய்ப்பு நிறுவனத்தில் வேலைவாய்ப்பு-பயிற்சிப் புள்ளி விவரங்களைக் கணக்கீட்டுப் பொறியின் மூலம் கணக்கிடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணக்கீட்டு பொறிமூலம் கோப்புகளைத் தயாரிப்பதை மேம்படுத்தும் பொருட்டு, பதிவு செய்துள்ளவர்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு (1) எம். காம் பட்டதாரிகள், (2) பொறியியல், மருத்துவப் பட்டதாரிகள், (3) ஏனைய பட்டதாரிகள்.

1983 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள்வரை வந்த புள்ளி விவரங்கள் அனைத்தும் கணக்கீட்டுப் பொறிமூலம் கோப்புகள் தொகுக்கப்பட்டுள்ளன.

மூலப் பொருள் கோப்பு முடிக்கும் பணியானது நடைபெற்று வருகிறது.

தேர்வு நோக்கிலான தனி நபர் பற்றிய அடிப்படை விவரக் குறிப்பு :

கழிந்த மூன்றாண்டுகளில் 9, 10, 11, 12 ஆம் வகுப்புகளுக்கு பாடம் சொல்லிக்கொடுத்து வருகிற அல்லது ஏதேனும் ஒரு வகுப்பிற்கு பாடம் சொல்லிக் கொடுத்த ஆசிரியர்கள் குறித்த அடிப்படை விவரக் குறிப்புகள் தொகுக்கும் முறை இந்த ஏற்பாட்டின்கீழ் வருகின்றன.

சிறந்த தேர்வாளர் என்று மதிப்பிடப் பெற்றவர்கள் பற்றிய விவரக் குறிப்பு தொகுக்கப்படுகிறது. அவர்களுடைய தகுதிகள், அலுவலகங்கள் ஆகிய பலவிவரங்களை சரிபார்த்த பின்னர் இப்புள்ளி விவரங்கள் கணக்கிட்டுப் பொறிமூலம் கோப்பாகத் தொகுக்கப்படுகின்றன.

இவ்வாண்டில் பற்றிய அடிப்படை விவரக் குறிப்புகள் 45,000 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள். சேகரித்து ஆய்வு செய்யப்பட்டது.

கணக்கீட்டுப் பொறி தொழிலுத்தி பற்றிய கருத்தரங்கு :

இவ்வாண்டில் அரசுப் புள்ளி விவரத் தொகுப்பு நிலையம் (1) பொதுப் பணித்துறைப் பொறியாளர் கலந்து கொள்ளும் மூன்று நாள் மதிப்பீட்டுக் கருத்தரங்கு.

(2) மாநிலத்திலுள்ள அனைத்து கல்வி ஆய்வு அலுவலர்களுக்கு அமைப்பு ரீதியிலான ஒரு நாள் கருத்தரங்கு தெரிந்தெடுக்கப்பட்ட மேல் நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களில் இரு தொகுதியினருக்கு மூன்று நாள் கருத்தரங்கு உள்ளிட்டும் பல நிலைகளில் கூட்டங்கள் பலவற்றை நடத்தியது.

உள்ளாட்சி நிதித் தணிக்கை.

1982-83 ஆம் ஆண்டில், இத்துறை மொத்தம் ரூ. 1143.49 கோடியை தணிக்கை செய்தது; தணிக்கை செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 2,201 ஆகும். அதன் விவரம் வருமாறு :—

நிறுவனங்களின் பெயர்.	தணிக்கை செய்யப் பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை.	வரவுகள். (ரூ. கோடியில்.)	செலவுகள் (ரூ. கோடியில்.)
மாநகராட்சிகள், நகராட்சிகள், நகரியக் குழுக்கள்.	109	154.25	153.08
நகராட்சி ஒன்றியங்கள்	362	206.77	185.81
பேரூராட்சிகள் ..	572	20.62	18.19
பல்வகை நிறுவனங்கள் ..	1,158	196.62	208.15
	2,201	578.26	565.23

	(கோடி.)
வரவுகள்	578.26
செலவுகள்	565.23
மொத்தம்	1,143.49

1,868 எண்ணிக்கையுள்ளவையும், மாநிலத்திலுள்ள பல்வேறு உள்ளாட்சி மன்றங்களின் நிதிக்கு ஏற்பட்ட ரூபாய் 154·55 இலட்சம் மொத்த இழப்பு குறித்தவையுமான இழப்புப் பொறுப்புக்குப் பதிலாக அறிக்கைகள் இழப்புக்குப் பொறுப்பான நிர்வாக

அதிகாரிகளின் மீது அவசியமான நடவடிக்கை எடுப்பதற்காகச் சம்பந்தப்பட்ட நிர்வாகத்துறைகளுக்கு அனுப்பப்பட்டன. நிர்வாக அதிகாரிகள் செய்த முக்கியமான நிதிமுறைகேடுகள், அவற்றின் விளைவாக உள்ளாட்சி மன்றங்களின் நிதிகளில் ஏற்பட்ட ரூ. 35.32 இலட்சம் இழப்பு ஆகியவற்றை விளக்கும் இழப்பு குறித்த அறிக்கைகள் உள்ளாட்சி மன்றங்களின் பணியிலிருந்து ஓய்வு பெற்ற/ஓய்வு பெறும் நிர்வாக அதிகாரிகளிடமிருந்து தொகையைத் திருப்பி வசூலிப்பதற்காக நகராட்சிகள் ஆய்வாளர்/ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டன.

இழப்புப் பொறுப்புக்குப் பதிலான அறிக்கைகளில் அடங்கியுள்ள 499 மறுப்புரைகளுக்கும் இழப்பு அறிக்கைகளின் அளவில் அடங்கியுள்ள 416 மறுப்புரைகளுக்கும் இவ்வாண்டில் பதிலளிக்கப் பட்டன. 1982-83 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு தணிக்கை அனுமதிச் சான்றிதழ் வழங்கப் பட்டது. மத்திய அரசின் அறக்கட்டளைகளின் பொருளாளருக் கும் ஏஜென்டாகவும் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயற்படுகிற உள்ளாட்சி நிதிக் கணக்குகள் ஆராய்வாளர், முத வராகப் பணிபுரிந்தார். ரூ. 102.19 இலட்சம் மதிப்புள்ள 812 மாநில அறக்கட்டளைகளையும் 4 ஒன்றிய அறக்கட்டளைகளை யும் நிர்வகித்தார்.

இதன் மூலம் கிடைக்கும் வட்டி இந்த அறக்கட்டளைகளின் திட்டத்திலுள்ள விதித்துறைகளின்படி, அறக்கட்டளைகளின் நிர்வாகிகளுக்குப் பிரித்துப் கொடுக்கப்பட்டது.

உள்ளாட்சி நிதிக்கணக்குக் குழு :

நகராட்சிகளின் தணிக்கை அறிக்கையில் நடவடிக்கை எடுக்கப் படாமல் உள்ள கடும் மறுப்புரைகளைத் தீர்ப்பதற்காக, நகராட்சி நிர்வாக இயக்குநர், தலைமையின் கீழ் அரசால் அமைக்கப்பட்ட இக்குழு, வேலூர், ஈரோடு, சேலம் ஆகிய இடங்களில் கூடி, நீண்ட நாட்களாக நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ள அறிக்கை மறுப் புரைகள் குறித்து பரிசீலித்தது. 30,994 மொத்த மறுப்புரை களில், 23,213 மறுப்புரைகளுக்குப் பதிலளிக்கப்பட்டது; 7,781 மறுப்புரைகளுக்கு 31—3—83 ஆம் நாளன்றுள்ளவாறு பதிலளிக்கப் படாமல் இருந்தது.

சிறு சேமிப்பு.

இம்மாநில மக்களிடையே சிக்கனக் கொள்கையை வாழ்க்கையின் பொது இயல்பாக வளர்க்கப் பாடுபடுவதையும் வீடு தோறும் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி தேசிய வளர்ச்சிக்காக நிதி திரட்டுவதையும் தமிழ்நாடு அரசு சிறு சேமிமிப்பு நிறுவனம் தனது தலையாய இரு நோக்கங்களாகக் கொண்டுள்ளது. சேமிப்பு இயக்கத்தை ''ஒரு மக்கள் இயக்கம்'' ஆக ஆக்குவதே இந்நிறுவனத்தின் பணியாக இருந்து வருகிறது. 1982–83-க்கு ரூ. 55.15 கோடியை இலக்காக அரசு வரையறுத்துள்ளது., இது குறித்து 1982–83-ல் ரூ. 43.93 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. பல்வேறு பத்திரங்களின் கீழ் எய்திய சாதனை வருமாறு :—

1983 மார்ச்சுத் திங்கள் வரையிலான சிறு சேமிப்பு பத்திரங்கள் வாரியான வசூல் :

பிணையங்கள்.	பெரு மொத்தம். (ரூபாய் இலட்சத்தில்) ரூ. பை.	நிகர மொத்தம். (ரூபாய் இலட்சத்தில்) ரூ. பை.
(1)	(2)	(3)
1. அஞ்சலகச் சேமிப்பு வங்கி	10,749.38	1,154.85
2. தவணை வைப்பீடுகள்	4,087.56	53.78
3. தொடர் வைப்பீட்டுத்தொகை	695.53	298.86
4. தொடர் வைப்பீடுகள்	2,149.88	465.01
5. சான்றிதழ்கள் ..	1,861.13	1,757.47
6. பொது வருங்கால வைப்பு நிதி	18.04	17.43
மொத்தம்	19,561.52	3,747.40
பாரத ஸ்டேட் வங்கியின் மூலமாக பொது வருங்கால வைப்பு நிதி.	648.66	645.58
பெருமொத்தம்	20,210.18	4,392.98

முந்தைய ஆண்டுகளைப் போலவே, இவ்வாண்டிலும் சேமிப்பு பழக்கம் இளைஞர்கள் மனதில் படியும் பொருட்டு, கல்லூரி-உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு சிறு சேமிப்பு பற்றி

பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன. சஞ்சயிகா திட்டம் உயர்நிலைப் பள்ளிகளில் மிகவும் பிரபலமாக இருக்கிறது. அங்கு மாணவர்கள் வங்கிகள் செயல்படும் முறைப்பற்றி தாங்களாகவே அறிந்து கொள்கிறார்கள். இந்த சஞ்சயிகா திட்டத்தின் மூலம் உயர்நிலைப் பள்ளிகளில் கணிசமான அளவில் சேமிப்பு சேர்ந்துள்ள இம்மாநிலத்தில் பெயர்பெற்ற நாடகக் குழுக்களால் சிறு சேமிப்பைப்பற்றி நிகழ்த்தப்பட்ட 100 நாடகங்களின் மூலமும் சிறு சேமிப்பு பற்றி பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு அக்டோபர், நவம்பர் திங்களில், கோயம்புத்தூர், தருமபுரி, திருநெல்வேலி, சென்னை நகரம் ஆகிய இடங்களில் உலக சிக்கன நாள் கொண்டாடப்பட்டது.

அரசு வணிகத் திட்டங்கள் துறை.

கீழ்க்காணும் அரசுத் துறை அலுவலகங்கள், நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் முதலியவைகளுக்கு அரசு வணிகத் திட்டங்கள் முதன்மைத் தணிக்கையாளர் அகத் தணிக்கையாளராக இருந்துள்ளார். அறிக்கைக்குரிய இவ்வாண்டில் இத்துறையால் கீழே கொடுக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது:—

(அ) தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்.

(ஆ) முன்னாள் தமிழ்நாடு பால்வள நிறுவனம்— தற்போது தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்.

(இ) வேளாண்மை இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பராமரிக்கப்படும் இரசாயன உரங்களின் கொள்முதல் மற்றும் பங்கீட்டுத் திட்டக் கணக்குகள்.

(ஈ) அனைத்து வேளாண்மைக் கிடங்குகளின் அரசுத் துறை சார்ந்த கணக்குகள்.

(உ) எடைகள் மற்றும் அளவுகள் நிறுவனங்களின் கட்டுப்பாடு அலுவலர் மற்றும் தொழிலாளர் துறையின் சார்நிலை அலுவலர்களால் பேணப்படும் கணக்குகள்.

(ஊ) தமிழகம், உதகை, தமிழ்நாடு அரசு விருந்தினர் மாளிகை, சென்னை மற்றும் தமிழ்நாடு மாளிகை, புதுதில்லி ஆகியவற்றின் கணக்குகள்.

(எ) சின்கோனாத் துறை.

(ஏ) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

(ஐ) படச்சுருள் தொழில் நிலையம், அடையாறு.

(ஒ) தமிழ்நாடு அரசு திரைப்படத்துறை பிரிவு, அடையாறு.

(ஓ) கலைவாணர் அரங்கம், அண்ணா கலையரங்கம், வேலூர் செய்தி தகவல் நிலையம், சென்னை இராஜாஜி மன்றம் மற்றும் சீரணி அரங்கம், சென்னை.

இவ்வாண்டில் சென்னை மற்றும் மதுரை நகராட்சியுடன் இணைந்த அனைத்து நிறுவனங்கள் மற்றும் சிறப்பு நிலை, தேர்வு நிலை, முதல்நிலை, நகராட்சிகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பொதுப்பண்டக சாலை, மரவேலை அலகு மற்றும் தக்கைக் கல் உற்பத்தி பிரிவு ஆகியவற்றின் இருப்புப் பொருட்கள் முன்னறிவிப்பில்லாத ஆய்வுகள் மூலம் இருப்புப் பொருள் சரி பார்க்கப்பட்டது. இருப்புப் பொருள் சரி பார்த்து முடிக்கப் பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை, சரி பார்த்த இருப்புப் பொருட்களின் தோராய மதிப்பு, குறைவாக மற்றும் மிகையாகக் காணப்பட்ட பொருட்களின் மதிப்பீடு முதலிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

வரிசை எண்ணும் இருப்புப் பொருள் சரிபார்த்த நிறுவனங்களின் விவரம்.	இருப்புப் பொருள் சரிபார்த்த நிறுவனங்களின் எண்ணிக்கை.	சரிபார்த்த இருப்புப் பொருட்களின் மதிப்பு.	குறைவுகள் காணப்பட்ட மொத்த இனங்கள்.
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
1 அரசு நிறுவனங்கள் ..	356	6,959.43	44,113
2 சிறப்பு, தேர்வு மற்றும் முதல்தர நகராட்சிகள்.	52	167.63	1,926
3 சென்னை மாநகராட்சி கீழுள்ள நிறுவனங்கள்.	26	645.85	1,805
4 மதுரை மாநகராட்சி கீழுள்ள நிறுவனங்கள்.	109	152.69	924
5 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.	3	454.00	71
கூடுதல்	546	8,379.60	48,839

வரிசை எண்ணும் இருப்புப் பொருள் சரிபார்த்த நிறுவனங்களின் விவரம்.	குறைவுகளின் மதிப்பு.	மிகையாகக் காணப்பட்ட மொத்த இனங்கள்.	மிகையாகக் காணப்பட்ட இனங்களின் மதிப்பு.
(1)	(5)	(6)	(7)
	(ரூபாய் இலட்சத்தில்.)		(ரூபாய் இலட்சத்தில்)
1 அரசு நிறுவனங்கள் ..	13.89	3,079	2.82
2 சிறப்பு தேர்வு மற்றும் முதல்தர நகராட்சிகள்.	1.98	610	0.62
3 சென்னை மாநகராட்சி கீழுள்ள நிறுவனங்கள்.	4.73	535	0.60
4 மதுரை மாநகராட்சி கீழுள்ள நிறுவனங்கள்.	10.96	379	0.79
5 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.	8.18	115	0.25
கூடுதல்	39.74	4,718	5.08

அறிக்கைக்குரிய இவ்வாண்டில் முறைகேடுகளும் இழப்புகளும் தணிக்கை மற்றும் இருப்புப் பொருள் சரிபார்த்தலின் போது கண்டுபிடிக்கப்பட்டு அதன் விவரங்கள் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களின் தனிக் கவனத்திற்குக் சிறப்புக் கடிதங்கள் மூலம் தக்க நடவடிக்கைக்காகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பரிசு சீட்டுத் திட்டம்

தமிழ்நாடு பரிசு சீட்டுத் திட்டம் 15—8—1968 அன்று சென்னை இராசாசி மண்டபத்தில் காலஞ்சென்ற தமிழக முன்னாள் முதல்வர் அறிஞர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு 12—9—1975 வரை செயல்பட்டு வந்தது. 12—9—1975-ல் மேற்கூறிய திட்டம் தற்காலிகமாக கைவிடப் பட்டது. இத்திட்டம் கைவிடப்படுவதற்கு முன்னர் 78 குலுக் கல்கள் (67 சாதாரண குலுக்கல்கள் மற்றும் 11 சிறப்பு குலுக் ல்கள்) நடத்தப்பட்டது. இத்திட்டம் மீண்டும் ஆகஸ்டு 76-ல்

க

துவக்கப்பட்ட பின்னர், முதல் குலுக்கள் 30—9—1976-ல் நடத்தப் தப்பட்டது. இது முதல் 31—3—1983 வரை 102 குலுக்கல்கள் நடத்தப்பட்டன. 1982—83 ஆம் ஆண்டில் (அதாவது 1—4—1982 முதல் 31—3—1983 முடிய) மொத்தம் 36 குலுக்கல்கள் நடத்தப் பட்டுள்ளன. ஏப்ரல், ஆகஸ்டு, நவம்பர் 1982 மற்றும் ஜனவரி 1983 நடைபெற்ற சிறப்பு குலுக்கள்கள் முறையே புதுக்கோட்டை காஞ்சிபுரம், ஈரோடு மற்றும் தருமபுரி மாவட்டங்களில் நடத்தப் பட்டன.

1982—83 ஆண்டு (4/82 முதல் 3/83 முடிய) வருமானம், செலவு, நிகர வருமானம் பற்றிய ஆண்டு நிதி இறுதி மதிப்பீடு விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

	ரூபாய்.
1. மொத்த வருமானம்	8,50,00,000
2. மொத்த செலவு	5,80,36,000
3. நிகர வருமானம்	2,69,64,000

அத்தியாயம் 7

உணவுத் துறை

110E-2—12

அத்தியாயம்-7

உணவுத் துறை

நுகர் பொருள் வாணிபம்

1982 ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில் வர்த்தகர்கள் லெவி மூலம் கொள்முதல் செய்யப்பட்டது. இதன்படி அவர்கள் வாங்கும் நெல் மற்றும் அரிசியின் 50 விழுக்காடு வர்த்தகர்களிடம் இருந்து அரசால் கொள்முதல் செய்யப்பட்டது. அரசு தேவையான அளவுக்கு, முக்கியமாக நலிந்த காலத்தில் பொது விநியோக முறையின் கீழ் விநியோகம் செய்யும் பொருட்டு போதுமான அளவுக்கு இருப்பு வைப்பதற்குத் தீர்மானம் செய்தது. ஆதலால் ஏகபோக கொள்முதல் திட்டத்தின்படி நெல் கொள்முதல் செய்ய உத்தரவு இட்டது. இந்தத் திட்டம் 22–1–1983 முதல் தஞ்சாவூர் மாவட்டத்திலும் 16–2–1983 முதல் காவேரி டெல்டாப் பகுதியில் உள்ள தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார் கோயில் தாலுக்காக்களிலும், திருச்சி மாவட்டத்திலுள்ள திருச்சி, லால்குடி, முசிறி மற்றும் குளித்தலை தாலுக்காக்களிலும் செயல்படும். இந்தத் திட்டத்தின் கீழ் இப்பகுதிகளில் விற்பனைக்கு வரக்கூடிய உபரி நெல்/அரிசியையும் அரசால் மட்டுமே கொள்முதல் செய்யப்படும். தனியார் வணிகம் தடை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இப்பகுதிகளிலுள்ள நெல்/அரிசி சில்லறை வணிகர்கள், உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடிக் கொள்முதல் செய்து அரிசியாக்கி சில்லறை விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

1982–83 ஆம் ஆண்டில், கீழ்காணும் அளவுக்கு அரிசி மற்றும் நெல் கொள்முதல் செய்யப்பட்டது:—

பட்டம்.	நெல்.	அரிசி.
(1)	(2)	(3)
	(மெட்ரிக் டன்களில்.)	
சம்பா 1982 (1–4–82 முதல்)	1,29,114	1,01,563
குறுவை 1982	2,61,024	34,153
சம்பா 1983 (31–3–83 முடிய)	2,27,716	21,540

இன்றியமையாப் பொருட்களின் விநியோகம்:

தமிழகம் முழுவதும் பொது விநியோகத் திட்டம் சீரான முறையில் அமுல் படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இம் மாநிலத்தில் 17,844 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 15,753 கடைகள் ஊரகப் பகுதிகளிலும்' 2,091 கடைகள் நகர் பகுதிகளிலும் இயங்கி வருகின்றன.

மாநிலம் முழுவதிலும் 118 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அரிசி, லெவி கோதுமை, கோதுமைப் பொருட்கள், லெவி சர்க்கரை, மண்ணெண்ணெய், பாமாலின் ஆயில் போன்ற அத்தியாவசியப் பொருட்கள், குடும்பதாரர்களுக்கு இந்த நியாய விலைக் கடைகள் மூலமாக விநியோகம் செய்யப்படுகின்றன. நியாய விலைக் கடைகள் மூலமாக, குடும்ப அட்டைதாரர்களுக்கு, 1982-83 ஆண்டில் 8,11,052 டன்கள் அரிசி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. நியாய விலைக் கடைகளை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகத்தாராலும் கூட்டுறவுத் துறையினராலும், மற்றும் ஏனைய நிறுவனங்களாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தனியுடைமை வர்த்தகர்களை பொது விநியோக முறையிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

கோதுமை மற்றும் கோதுமை பொருட்கள் :

குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு மாதம் ஒன்றுக்கு 1 கிலோ என்று கணக்கிட்டால், இந்த மாநிலத்திற்கு 11,000 டன்கள் கோதுமை தேவைப்படும். பல மாவட்டங்களில் வறட்சி நிலைமை நிலவுகின்றது. எனவே, லெவி கோதுமையின் ஒதுக்கீட்டளவை அதிகமாக்க மைய அரசை மாநில அரசு கேட்டுள்ளது. 1983 ஏப்ரல் மாதத்திற்குரிய ஒதுக்கீட்டை 4,000 டன்களிலிருந்து 15,000 டன்களாக மைய அரசு உயர்த்தியுள்ளது. லெவி கோதுமை நடப்பாண்டில் 6-8-1982 வரையில் கிலோ 1-க்கு ரூ. 1-55 வீதமும், அதற்குப் பின் 20-4-1983 வரை கிலோ ஒன்று ரூ. 1.75 வீதமும் அதன் பின் கிலோ ஒன்றுக்கு ரூ. 1.87 வீதமும் குடும்ப பங்கீடு அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

மத்திய அரசு கோதுமையை ,கோதுமைப் பொருட்களாக மாற்றும் பொருட்டு இம்மாநிலத்திலுள்ள கோதுமை உருளை மாவு

ஆலைகளுக்கு ஒதுக்கீடு செய்து வருகிறது. இம்மாநிலத்தில் 33 கோதுமை உருளை மாவு ஆலைகள் உள்ளன. 1980 ஆம்ஆண்டு ஆகஸ்டு மாதம் வரை மாதம் ஒன்றுக்கு அளிக்கப்பட்ட 65,000 டன்களுக்குப் பதிலாக தற்போதைய மாத ஒதுக்கீடு 30,000 டன்களாகும். விநியோக கட்டுப்பாடு இல்லை என்றாலும், கோதுமை உருளை மாவு ஆலைகளில் தயார் செய்யப்படும் மைதா, ரவை ஆகியவைகளை 60 விழுக்காடு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் எடுத்து அவற்றை நியாய விலைக் கடைகளின் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் ரொட்டி உற்பத்தி செய்வோர் போன்ற மொத்த நுகர்வோர்களுக்கும் வழங்கி வருகிறது. மைதா மற்றும் ரவை ஆகியவைகளின் விலைகளை அரசு நிர்ணயித்துள்ளது. 1 கிலோ மைதா மற்றும் ரவையின் சில்லறை விலை ரூ. 3.05 ஆகும்.

சர்க்கரை விநியோகம்:

குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு ஒவ்வொரு மாதமும் 20,531.5 டன்கள் லெவி சர்க்கரையை மாநிலத்திற்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோக முறையின்கீழ் கிராம நகர வேறுபாடின்றி குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபருக்கும் தலா 425 கிராம்கள் வீதம் சர்க்கரை வழங்கப்படுகிறது. இப்படி கணக்கிட்டு ஒரே ஒரு குடும்பத்திற்கு கிடைக்கும் அளவிற்கு உச்ச வரம்பு கிடையாது. 1982–83-வது ஆண்டில் இம்மாநிலத்திற்கு மைய அரசு 2,49,860.8 டன்கள் லெவி சர்க்கரை ஒதுக்கீடு செய்தார்கள்.

மண்ணெண்ணெய் விநியோகம்:

மண்ணெண்ணெய் விளக்கு எரிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் பயன்படும் ஒரு அத்தியாவசியப் பொருளாகும். இது நியாய விலைக் கடைகள் மூலம் கார்டுதாரர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. தவிர குடும்ப அட்டை முறைக்கு வெளியே பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்கும் கைவண்டிக்காரர்களுக்கும் மண்ணெண்ணெய் கொடுக்கப்படுகிறது. பருவ கால அடிப்படையில் மத்திய அரசால் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் மாதாந்திர சாராசரி ஒதுக்கீடு சுமாராக

35,400 டன்கள் ஆகும். 1982–83 ஆம் ஆண்டில் மத்திய அரசு 4,24,750 டன்கள் மண்ணெண்ணெய் தமிழ்நாட்டிற்குக் கொடுத்துள்ளது.

பாமாலின்:

பொது விநியோக முறையின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு, அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பாமாலின் எண்ணெய்யை ஒவ்வொரு மாதமும் மைய அரசு வழங்கி வருகிறது. மாத ஒதுக்கீடு 2,930 டன்களிலிருந்து 5,300 டன்கள் வரை ஆகும். 1982–83 வது ஆண்டில் தமிழ்நாட்டிற்கு 43,820 டன்கள் பாமாலின் எண்ணெய் ஒதுக்கீடு செய்திருந்தது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தினராலும், கூட்டுறவுத் துறையினராலும் நடத்தப்பட்டுவரும் நியாய விலைக் கடைகள், அவற்றின் கணக்குகள், உணவு பொருள் வழங்கு துறை அலுவலர்களை இடையிடையே ஆய்வு செய்யப்படுகின்றன. முறைகேடு தென்படுமேயானால், முறைகேட்டிற்கு காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போலி குடும்ப அட்டைகள் நீக்கும் பொருட்டு குடும்ப அட்டைகள் இடையிடையே சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கிடங்கு வசதிக் க்ழகம்

இருப்பு வைப்பதனால் அளவில்/தரத்தில் ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதன் மூலமும், கிடங்குகள் வசதி நடவடிக்கைகளை மேம்படுத்தி, இருப்பு வைப்பதற்கு அறிவியல் முறையில் வசதிகள் செய்து கொடுப்பதன் மூலமும், உணவுப் பொருட்களை இருப்பு வைப்பதில் தன்னிறைவை எய்த சிறந்த முறையில் பணி புரிவதே இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். இக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ஆறு கோடி ரூபாயாகும். இதில், மத்தியக் கிடங்குகள் வசதிக் கழகமும், மாநில அரசும் முதலீடு செய்துள்ளன. இவ்விரு அமைப்புகளும் 31–3–1983 ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டில் 50:50 என்ற அடிப்படையில் ஒவ்வொன்றும் ரூ. 220.50 இலட்சம் பங்கு மூலதனம்

செலுத்தியுள்ளன. இவ்வாறாக, 31–3–1983 ஆம் நாள் நிலவரப்படி இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மொத்த பங்கு மூல தனம் ரூ. 441 இலட்சமாக இருந்தது. 1982–83 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் மொத்தமுள்ள 53 கிடங்குகளின் கொள்திறன் 2.82 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தபோதிலும், அவற்றில் மொத்தம் 3.10 இலட்சம் மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டில் கட்டப்பட்ட கிடங்கின் கொள்திறன் 31,600 மெட்ரிக் டன்னாகும். இவ்வாண்டு இறுதியில் மொத்த கொள்திறன் 2.92 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தபோதிலும் மொத்தம் 3.21 இலட்சம் மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டது. அவ்வாண்டு முடிவில் இருந்த கிடங்குகளின் எண்ணிக்கை 55 ஆகும். இந்த ஆண்டில், கிடங்குகளின் ரசீதுகளின் பேரில் வணிகர்கள், வங்கிகளிடமிருந்தும், ஏனைய நிதியுதவி நிறுவனங்களிடமிருந்தும் ரூ. 3.12 இலட்சம் முன்பணம் பெற்றனர். 50,021 மெட்ரிக் டன் உணவு தானியங்கள் புகையூட்டி தூய்மைப்படுத்தப்பட்டன. 1982–83 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட இரசாயன புகையூட்டுப் பொருட்கள் ஆகியவற்றின் மதிப்பு ரூ. 73,666.59 ஆகும். இக்கழகம் ஏனைய கிடங்குகளில் புகையூட்டி தூய்மைப்படுத்தும் பணியை மேற்கொண்டு அதற்கான கட்டணமாக ரூ. 0.18 இலட்சத்தைப் பெற்றது.

ஆதாய - விரய விபரம் : கீழே குறிப்பிட்டுள்ளவாறு 1982–83-ல் ரூ. 80 இலட்சம் மொத்த ஆதாயம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1982–83 ஆம் ஆண்டுக் கணக்குகள் தணிக்கை செய்து முடிக்கப்படவில்லை.

		1982–83 (ரூபாய் இலட்சத்தில்).
(1) மொத்த வருமானம்	..	170.00
(2) நிருவாகச் செலவு	..	(—) 76.50
(3) தேய்மானம் ..	..	(—) 11.00
(4) கடன்கள் மீதான வட்டி	..	(—) 2.50
மொத்த ஆதாயம்		80.00

இக்கழகம், இதன் பணியாளர்களுக்கு 1981–82 ஆம் ஆண்டு 20 சதவீதம் ஊதியக் கொடை அளித்தது. பங்கு தாரர்களுக்கு 5 சதவீதம் லாபப் பங்கு அறிவிக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது

அத்தியாயம்

வன, மீனளத்துறை.

அத்தியாயம் 8

வன மீனளத் துறை

சின்கோனாத் துறை

சின்கோனாத் துறை தமிழ்நாடு அரசின் ஒரு வணிக நிறுவனமாகும். அத்தகைய நிறுவனங்களின் பட்டியலில் முதலிடம் வகிக்கும் இத்துறை சின்கோனா பயிரிடுவதிலும், சின்கோனாப் பட்டையிலிருந்து கொய்னாப் பொருட்கள் தயாரிப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இப்பொருட்களுக்கான உள்நாட்டு வெளிநாட்டு தேவையினைப் பூர்த்தி செய்து வருகிறது. இதோடு மட்டுமல்லாமல் சமுதாயத்தில் பின்தங்கியுள்ள கிராமப்புற மக்களின் வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்காகவும் இத்துறையின் வருவாயை பெருக்குவதற்காகவும், மருந்து மற்றும் வாசனைத் தைலங்கள் நல்கும் செடிகளையும் பயிரிட்டுவருகிறது. 1982—83ம் ஆண்டில் ரூ. 4,98,996 மதிப்புள்ள கொய்னாப் பொருட்களை உள்நாட்டில் இத்துறை விற்பனை செய்தது. ரூ. 29,28,613 மதிப்புள்ள மருந்து மற்றும் வாசனைத் தைலங்கள் 1982—83-ம் ஆண்டில் இத்துறையால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், மிளகு, பட்டை மற்றும் பைரத்ரம் மலர்கள் போன்ற பலவகைப் பொருட்களின் விற்பனையால் ரூ. 3,58,102 வருவாயும் ஈட்டியுள்ளது. சில்வர் ஓக் மரம் விற்பனை மூலம் இத்துறை ஈட்டிய வருமானம் ரூ. 7,80,481. மேலும் வாட்டல் பட்டை விற்பனை, மேய்ச்சல் கட்டணம் முதலிய இனங்களின் மூலம் ஈட்டிய வருவாய் ரூ. 2,46,720.

சின்கோனா அறுவடை:

85,245 கிலோ கிராம் உலர்ந்த சிக்கோனாப்பட்டை 1982—83 ஆம் ஆண்டில் அறுவடை செய்யப்பட்டது.

மதுரை, கும்பகோணம், திருநெல்வேலி, சேலம், கோவை மற்றும் சென்னை ஆகிய இடங்களில் நடந்த அரசு பொருட்காட்சிகளில் இத்துறை கலந்து கொண்டது. இதன்மூலம் துறையின் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விளம்பரம் ஈட்டப்பட்டது. உதகையில் நடந்த மலர்க் கண்காட்சியில் கலந்துகொண்டு அரசுத் துறை காட்சியங்களில் இரண்டாவது பரிசைப் பெற்றது.

சின்கோனாவிலுள்ள அரசினர் கொய்னா தொழிற்சாலை,

கீழ்க்காணும் கொய்னாப் பொருட்கள் 1982—83-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டது :—

		கிலோ.
(1)	கொய்னா சல்பேட் தூள்	478.100
(2)	சின்கோனா பெப்ரிபியூஜ்	819.500
(3)	குனிடின் சல்பேட்	51.000
(4)	சின்கோனா பின்தங்கிய மருந்துக் கலவைகள்	1,650.00
(5)	சின்கோடினின் மருந்துக் கலவை	140.00

மீனளம்.

நடப்பு ஆண்டில் துறை தயாரித்த அனைத்துத் திட்டங்களையும் செயல்படுத்தியதில் எல்லா வகையிலும் முன்னேற்றம் காணப்பட்டது. மீன் விற்பனை வசதிகளை விரிவுபடுத்தி மேம்படுத்துவதற்கான அடிப்படை வசதிகளைப் பெருக்கி, மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அப்போது தான் உற்பத்தியாளருக்கு உரிய விலை கிடைக்கச் செய்யவும், நல்ல விலை பெறவும் மாநிலத்திலுள்ள மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்தவும் இயலும்.

கரையோர மீன்பிடி நிலையங்கள்:

சென்னை, கடலூர், மல்லிப்பட்டினம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களிலுள்ள இத்துறையின் கரையோர மீன்பிடி நிலையங்கள் புதிய மீன்பிடி வாயில்களை மதிப்பீடு செய்ய, ஆய்வு நடத்துவதுடன், மீனவர்களின் பயனுக்காக நவீன மீன் படகுகளை எவ்வாறுபயன்படுத்துவது என்பது குறித்த செய்முறை விளக்கப் பயிற்சிகளை நடத்தின. இந்நிலையத்திற்குச் சொந்தமான புதிய மீன்பிடி படகுகள், மீன்கள் நிறைந்துள்ள இடங்கள் குறித்து ஆய்வு நடத்துவது மட்டுமல்லாது மீன் வளங்களைக் காப்பதற்கும், மோசமான பருவ காலங்களில் மீனவர்களை மீட்பதற்கும் பயன்படுத்தப்பட்டன.

உள்நாட்டு மீன் வளங்களை மேம்படுத்துதல், பயன்படுத்துதல்:

உள்நாட்டு மீன் வளங்களை மேம்படுத்தி பயன்பெற பெருமளவு வாய்ப்புகள் உள்ளன. நம் மாநிலத்தில் உள்ள, எல்லா உள்நாட்டு நீர்நிலைகளிலும் மீன் குஞ்சுகளை சேகரித்து வளர்க்க, ஆண்டு தோறும் சுமார் 350 மில்லியன் மீன் குஞ்சுகள் தேவைப்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போது 60 மில்லியன் மீன் குஞ்சுகளே கிடைக்கின்றன. இவற்றில் ஆற்றுப்படுகைகளிலிருந்து சேகரிக்கப்படுபவை 40 மில்லியன்

மீன் குஞ்சுகள் ஆகும். மீதமுள்ள 20 மில்லியன் குஞ்சுகள் தூண்டுதல் வகை இனவிருத்தி முறைமூலம் உற்பத்தி செய்யப்படுபவையாகும். இயற்கை நீர்நிலைகளிலிருந்து மீன் முட்டைகளை சேகரிப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளதால், பற்றாக்குறையை சரிசெய்ய நமது மாநிலத்தில் மேலும் பல தூண்டுதல் வகை இனவிருத்தி முறையில் குஞ்சு பொறிக்கும் நிலையங்களை ஏற்படுத்துவது அவசியமாகிறது. இத்திட்டத்திற்காக 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 23 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. 1982-83-ஆம் ஆண்டில் இயற்கை வாயில்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மீன் குஞ்சுகள், தூண்டுதல் முறை மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி அளவு குறித்த விவரம் வருமாறு :—

		தூண்டுதல் வகை இனவிருத்தி முறைமூலம் (இலட்சங்களில்).
1.	பூண்டி ..	67.90
2.	செம்பரம்பாக்கம்	23.65
3.	லால்பேட்டை	115.80
4.	சாத்தனூர் அணை ..	180.70
5.	அக்கரைப்பேட்டை	..
6.	தஞ்சாவூர் (துறையைச் சார்ந்தது).	42.55
7.	தஞ்சாவூர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு நிறுவனம்.	48.01
8.	வைகை	65.50
9.	மஞ்சளாறு	26.30
10.	பாலாறு பொரந்தலாறு ..	..
11.	மணிமுத்தாறு	250.35
12.	பேச்சிப்பாறை	3.75
13.	அமராவதி	17.35
14.	ஆளியாறு	32.46
15.	திருமூர்த்தி	8.85
16.	பவானிசாகர்	206.45
17.	சின்னாறு	10.00
18.	கிருஷ்ணகிரி (துறையைச் சார்ந்தது).	103.50
19.	கிருஷ்ணகிரி மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகவரமைப்பு.	23.20
20.	மேட்டூர் அணை	146.80
	மொத்தம் ..	1,373.12

இயற்கை வாயில்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மீன் குஞ்சுகள் :

		(இலட்சங்களில்.)
1.	சென்னை	3.20
2.	மேட்டூர் அணை	10.95
3.	தென் ஆர்க்காடு	2.04
4.	உதகமண்டலம்	1.05
5.	செங்கற்பட்டு	7.75
6.	தூத்துக்குடி	5.19
7.	ஈரோடு ..	5.39
8.	திருநெல்வேலி	..
9.	தருமபுரி	2.06
10.	புதுக்கோட்டை	9.53
11.	நாகர்கோவில்	0.06
12.	இராமநாதபுரம்	0.18
13.	மதுரை	1.59
14.	தஞ்சாவூர்	115.78
	மொத்தம்	164.77

மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகவரமைப்பு:

எக்டேர் ஒன்றிற்குக் கிடைக்கும் மீன் உற்பத்தி அளவினை உயர்த்துவதன் மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியினைப் பெருக்கவும், கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பினை வழங்கவும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகவரமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின்கீழ், மீன் வளர்ப்பு மேற்கொள்ள நீர் நிலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகள் மீன் வளர்ப்போர் கண்டறிந்து அவர்களுக்கு நீண்ட காலத்திற்கு குத்தகைக்கு விடப்படுகின்றன. இந்த நீர்நிலைகளைத் தூர் எடுத்துச் சீரமைக்கவும், வங்கிகள், அரசு ஆகியவற்றிடமிருந்து மூலதனம், இடுபொருள் உதவியை அளிப்பதன் மூலம் மீன் வளர்க்க, அவர்களுக்கு உதவியளிக்கப்படுகின்றது வங்கி கடனுதவி அளிக்கின்றது. அரசு உதவித் தொகை வழங்குகின்றது. 1982—83 ஆம் ஆண்டில் வட ஆர்க்காடு, புதுக்கோட்டை, கன்னியாகுமரி, பெரியார்

மாவட்டங்களில் மேலும் 4 முகவரமைப்புகள் அமைக்கப்பட்டன. இவை தவிர, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சி தருமபுரி, மதுரை, திருநெல்வேலி, மாவட்டங்களில் ஏற்கனவே 7 முகவரமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

மீனவப் பயிற்சி நிலையங்கள்:

நவீன மீன்பிடி முறைகள், ஆழ்கடல் மீன்பிடி டீசல் எஞ்சின் இயந்திரங்கள் பராமரிப்பு, நீர்வழிப் போக்குவரத்து-கடற்பயண அடிப்படைக் கோட்பாடுகள் ஆகியவற்றில் தொழில் நுட்பத் திறனுடைய பயிற்சியாளருக்கான தேவைகள் அதிகரித்து வருவதால், பின்வரும் 6 கடற்கரை மாவட்டங்களில் மீனவப் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.
ஒவ்வொரு நிலையமும் நிறுவப்பட்ட ஆண்டும், அதில் பயிற்சியளிக்கப் பட்ட மீனவர் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

மீனவர் பயிற்சி நிலையங்கள்.	கால அளவு.	பயிற்சி முடிக்கப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை.	நிறுவப்பட்ட ஆண்டு.
(1)	(2)	(3)	(4)
சென்னை ..	2-1-1982 முதல் 31-10-1982 வரை.	30	15-5-1961
கடலூர் ..	ஷ்	32	13-12-1964
நாகப்பட்டினம	ஷ்	43	15-4-1957
மண்டபம்	ஷ்	42	20-10-1964
தூத்துக்குடி	ஷ்	30	15-5-1956
குளச்சல்	ஷ்	37	16-12-1964

1982-83 ஆம் ஆண்டில் அனைத்து பயிற்சி நிலையங்களில் செய்முறை பயிற்சியளிக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட மீன்களின் விற்பனை மூலம் மொத்தம் 25,688.60 ரூபாய் கிடைத்தது.

வீட்டு வசதித் திட்டம் :

1975-ஆம் ஆண்டு வரையில் வீடுகள் கட்டுவதற்காக மீனவர்களுக்கு கடனும், உதவித் தொகையும் வழங்கப்பட்டு வந்தது. மீனவர்களுக்குகாக மொத்தம் 237 சதுர அடி பரப்பளவுள்ள சிமெட்டி காங்கிரீட் வீடுகளை இலவசமாக 1975–76 ஆம் ஆண்டிலிருந்து கட்டிக் கொடுப்பதென்று அரசு முடிவெடுத்தது. இதற்காக அரசு ஆண்டுதோறும் முறையாக ரூ. 1.00 கோடி நிதி ஒதுக்கம் செய்து வந்துள்ளது. 1982–83 ஆம் ஆண்டு வரையில் 6,685 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மீனவர்களுக்கு துயர் தணிப்பு உதவிகள்:

கடலில் மீன் பிடிக்கும்போது அக்குடும்பத்தைக் காப்பாற்றி வருபவர் உயிரிழந்தால், இறந்துவிட்ட அம்மீனவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த சட்டப்படிக்கான வாரிசுக்கு கருணை மானியமாக 5,000 ரூபாய் வழங்கப்படும். அதில், 2,000 ரூபாய் சட்டப்படியான வாரிசுக்கு உடனடியாக வழங்கப்படும். மீதமுள்ள 3,000 ரூபாய் திங்களொன்றுக்கு 100 ரூபாய் வீதம் 30 தவணைகளில் வழங்கப்படும். இதுவரையில் குடும்பத்தைக் காப்பாற்றி வந்து கடலில் உயிரிழந்த 232 மீனவர் குடும்பங்கள் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளன. இதுவரையில் 8,74,213 ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்:

மாநிலம் முழுவதிலும் 513 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 13 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விவரம் வருமாறு :–

ஆழ்கடல் மீன்பிடி கூட்டுறவுச் சங்கம்	284
உள்நாட்டு மீன்பிடி சங்கம்	198
ஏனைய மீன்பிடி சங்கம்	44
மொத்தம்	526

மீனவர் விற்பனை ஒன்றியம், இணையம் முதலியவை உட்பட ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டங்கள் :

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஈஞ்சம்பாக்கத்திற்காக 30 படகுகள் வாங்குவதற்காக 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 6.00 இலட்சம் உதவித் தொகை அளிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 12 இலட்சமாகும்.

பரிசில் காப்பிடப்பட்ட பெட்டிகள், கியோஸ்க்குகள், நைலான் வலைகள், சைக்கிள்கள் வாங்குவதற்காக, திருச்சி மாவட்டத்திலுள்ள 3 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவித் தொகையாக ரூ. 54,000 அனுமதிக்கப்பட்டது. இத்திட்டச் செலவு ரூ. 1.87 இலட்சமாகும்.

மீன் காட்சியகம் :

சென்னையிலுள்ள ஆழ்கடல்-தண்ணீர் மீன் காட்சியகத்தினை மொத்தம் 1,80,961 நாடு முழுவதிலிருந்தும் வந்த பொதுமக்கள், கல்லூரி, பள்ளி மாணவர்கள் பார்வையிட்டனர். வாயில் கட்டணமாக 36,273.70 ரூபாய் வசூலிக்கப்பட்டது. ஆர்வமுள்ள பொதுமக்களுக்கு அழகு மிக்க மீன்களை விற்பனை செய்வது போன்று மீன்காட்சியகத்தில் பணிகள் மும்முரப்படுத்தப்பட்டுள்ளன. மீன்காட்சியகத்தில் மீன்களை விற்பனை செய்ததன் மூலம் 779 ரூபாய் கிடைத்துள்ளது.

"வனங்கள்"

தீவிர மறு உற்பத்தி செயல்முறைகளின் வாயிலாக வன விளை பொருட்களின் உற்பத்தி அளவினை வளர்ச்சியுறும் சமநிலையில் பேணிக் காத்தலே வன மேலாண்மையின் முக்கிய குறிக்கோளாகும். அதே காலத்தில் இயற்கைக் காடுகளை சுற்றுப்புற சூழல்களை முன்னிட்டு பேணிக் காப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டது. காடுகளைப் பேணிக் காப்பதற்காக மத்திய அரசினால் நிறைவேற்றப்பட்ட 1980 வனப் பாதுகாப்புச் சட்டம், இயற்கை காடுகளை வெட்டுவதற்கான தடை உட்பட பல்வேறு சட்டங்களும் விதிகளும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டன. இவ்வாண்டில் விறகு மரக் கூப்புகள் ஏதும் வெட்டப்படவில்லை.

வனங்களின் பொதுவான நிலை :

1982—83 ஆம் ஆண்டில் வனப்பரப்பு 22·01 இலட்சம் எக்டேர்கள், இப்பரப்பளவு ஒதுக்கக் காடுகள் (18.12 இலட்சம் எக்டேர்) ஒதுக்கநிலங்கள் (3·33 இலட்சம் எக்டேர்)மற்றும் வகைப் படுத்தாத காடுகள் (0·56 இலட்சம் எக்டேர்) நிலப் பரப்பில் வனப்பரப்பு 16·9 விழுக்காடு (%) ஆகும். தனி ஆளுக்கு சரா சரி வனப்பரப்பு 0·04 எக்டேர். இருக்க வேண்டிய விழுக்காடா கிய 33-ஐ எட்டுவதற்காக காடுகளின் கீழ் அதிக நிலப்பரப்பைக் கொண்டு வருவதற்காக சமூக காடுகள் திட்டங்கள் பெருமளவில் செயல்படுத்தப்படுகின்றன.

வன விளைபொருட்கள் வழங்கல் :

சந்தனம் :பட்டுப்போன சந்தன மரங்கள் மட்டுமே மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை வெட்டி எடுக்கப்பட்டு, சந்தன மரக் கிடங்குகட்கு எடுத்துச் செல்லப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டு இறுதியாக பொது ஏலத்தில் விற்கப்படுகின்றன. 1982—83ஆம் ஆண்டில் 1947 டன்கள் சந்தனம் ரூபாய் 658·20 இலட்சத்திற்கு விற்கப்பட்டன. சராசரி ஒரு டன்னுக்கு ரூ. 33,806 கிடைத் தது. .சந்தனக் கட்டைகளை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு தடை விதித்தமையால், கிடைத்த வருவாய் வெகுவாக பாதிக்கப் பட்டுள்ளது.

வெட்டுமரம் :

வனச் செயல்திட்டங்களில் உள்ள விதிமுறைகளின்படி வனத் துறையின் வாயிலாக காடுகளில் உள்ள வெட்டுமரம் வெட்டி எடுக்கப்பட்டு அரசு கிடங்குகளில் ஏலத்தில் விற்கப்படுகின்றன. அல்லது பல்வேறு துறையினருக்கு வழங்கப்படுகின்றன.

விறகு : கூப்புகள் மற்றும் வனப்பண்ணைத் தோட்டங்களி லிருந்து கிடைக்கும் விறகு தோட்டங்களில் உள்ள மரங்களாகவே விற்கப்பட்டு தனி ஆட்களின் வாயிலாக அப்புறப்படுத்தப்படுகின் கின்றன.

கூழ்மரம், மூங்கில் வாட்டில் (மிலாறு) பட்டை :

காடுபடு தொழிற்சாலைகளுக்குரிய மூலப் பொருள்களை வனத் துறை கீழ்க்கண்டவாறு வழங்கியது :

வரிசை எண்ணும் வகையும்.	தொழிற்சாலையின் பெயர்.	வழங்க குறிக்கப் பட்ட அளவு. (டன்களில்)	விலை ரூ.-டன் (5% நிர்வாக செலவு நீங்கலாக)
(1)	(2)	(3)	(4)
1. கற்பூரம் (ப்ளுகம்).	திருவாளர்கள் தென் இந்திய விஸ்கோஸ்.	44,185 15,000 ——— 59,185 ———	280
2. மிலாறு மரம் (வாட்டில்).	திருவாளர்கள் தென் இந்திய விஸ்கோஸ்.	46,570	225
3. தைல மரம் (யூகலிப்டஸ்) கிராண்டிஸ்.	திருவாளர்கள் தென்னிந்திய விஸ்கோஸ்	31,820	255
4. தைலமரம் (யூகலிப்டஸ்) ஹைபிரிட்	திருவாளர்கள் சேசசாயி பேப்பர் மற்றும் போர்ட்ஸ்	33,[illegible]	[illegible]
5. மூங்கில்	திருவாளர்கள். சேசசாயி பேப்பர் மற்றும் போர்ட்ஸ்	28,438	30
6. மிலாறுபட்டை (வாட்டில்).	திருவாளர்கள். டான் இந்தியா.	15,123	600

ரப்பர் :

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ரப்பர் தோட்டங்களி லிருந்து கிடைக்கும் ரப்பர் கீர்ப்பாறை மற்றும் பெருஞ்சாணியி லுள்ள தொழிற் சாலைகளில் பதப்படுத்தப்படுகின்றன 4,600 எக்டேர் பரப்பில் உள்ள தோட்டங்களிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 கோடி மதிப்புள்ள 2,000 டன்கள் ரப்பர் உற்பத்தி யாகிறது.

வளர்ச்சி திட்டங்கள் :

சமூகக்காடுகள் (சிடா) :

ஸ்விடன் பல்நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் செயலாக்கப்படும் சமூகக் காடுகள் திட்டம் வனத்துறையின் முக்கிய வன வளர்ப்பு திட்டமாக மாறியுள்ளது. 1982—83ல் குறிக்கப்பட்ட இலக்கான 34,670 எக்டேர் காடுகளில் 1775கி.மீ. நீளத்தில் காடுகளில் 28782 எக்டேர் காடுகளும் 1854 கிலோ மீட் டர் நீளக்காடுகளும் வளர்க்கப்பட்டன. இவ்வாண்டில் 133·20 இலட்சம் நாற்றுகள் ஊக்குவிக்கும் மற்றும் விரிவாக்கத் திட்டங் களில் வழங்குவதற்காக உண்டாக்கப்பட்டன. 111.88 இலட் சம் நாற்றுகள் இத்திட்டங்களின் கீழ் பொது மக்களுக் வழங்கப் பட்டன. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் செலவான தொகை ரூ. 694·14 இலட்சங்கள் (தோராயமானது) இது குறி யளவான ரூ. 794·31 இலட்சங்களில் 87 சதவீதம் ஆகும் சிடாவின் அங்கத்தினர், தமிழ்நாடு இந்திய அரசுகளின் பிரதிநிதி கள் அடங்கிய சிடா ஆய்வு வாரியம் 18—12—82 அன்று தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலரின் தலைமையில் கூடி திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டது.

தேக்கு :

480 எக்டேர் குறியளவில், 453 எக்டேர் பரப்பில் தேக்கு செம்மரம் போன்ற திண்மர வகை மரங்கள் எழுப்பப்பட்டன. செலவான தொகை ரூ. 7.87 இலட்சங்கள். குறியளவு ரூ. 6.09 இலட்சங்கள்.

மென்மரம் :

இவ்வாண்டில் ரூ. 1·36 இலட்சம் செலவில் 98 எக்டேர் பரப்பில் மென்மரத் தோட்டங்கள் எழுப்பப்பட்டன. இதற்கான குறியளவுகள் முறையே ரூ. 1·09 இலட்சங்கள் மற்றும் 120 எக்டேர்கள் ஆகும்.

மிலாறு (வாட்டில்) :

ரூ. 5·20 இலட்சம் செலவில் 621 எக்டேர்ல் பரப்பளவில் மிலாறு தோட்டங்கள் எழுப்பப்பட்டன.

விறகு மரக்காடுகள் :

இவ்வாண்டின் குறியளவுகளான 4760 எக்டேர் மற்றும் செலவு ரூ. 61.31 இலட்சங்களில், 4467 எக்டேர் பரப்பளவில் ரூ. 56.76 இலட்சங்கள் செலவில் விறகு மரத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டன. இத் தோட்டங்கள் முதிர்நிலை அடையும்பொழுது, விறகு வழங்குதலை அதிகரிப்பதே இத் திட்டதின் நோக்கமாகும்.

சந்தன மரம் :

ரூ. 21·53 இலட்சம் செலவில் 115 எக்டேர் பரப்பில் சந்தன மரங்கள் வளர்க்கவும், 111 எக்டேரில் சந்தன மரங்களை பேணவும் 95 எக்டேரில் புதர் தோட்டங்களை எழுப்பவும் இவ்வாண்டில் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கூழ்மரம் :

1982—83 ஆம் ஆண்டில் 2138 எக்டேரில் தோட்டங்கள் எழுப்பப்பட்டன. 543 எக்டேர் பரப்பில் வெற்றிடங்கள் நிரப்பப் பட்டன. மற்றும் தீவிர பண்படுத்தும் செயல்முறைகள் 923 எக்டேர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டன. குறியளவான ரூ. 43.76 இலட்சங்களில், ரூ. 53·27 இலட்சங்கள் இவ்வாண்டில் செலவு செய்யப்பட்டன.

முந்திரி :

250 எக்டேர் பரப்பளவு குறியளவில் 200 எக்டேர் பரப்பில் முந்திரி தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. 927 எக்டேர் தோட்டங்கள் தீவிரமாக பேணப்பட்டன. இவ்வாண்டில் ரூ. 5·18 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டன. நிதி ஒதுக்கீடு ரூ. 11·73 இலட்சங்கள்.

ரப்பர் : திட்டத்தின் கீழ் மதிப்பீடான ரூ. 21·04 இலட்சங்களில், ரூ. 18.66 இலட்சங்கள் செலவு செய்து தோட்டங்கள் பேணப்பட்டன.

புயற்தடுப்பு மரம் வளர்ப்புத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் ரூ. 2·71 இலட்சம் செலவில் 87 எக்டேர் தோட்டங்கள் எழுப்பப்பட்டன.

அழிந்த காடுகளை மீண்டும் வளர்ப்பதற்கான திட்டம் :

அழிந்த காடுகளில் மீண்டும் மரங்களை வளர்ப்பதற்காக 3,117 எக்டேர் பரப்பில் தீவிர தோட்ட உற்பத்தி கோட்டங்கள் ரூ. 44·95 இலட்சம் செலவில் தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதற்கான குறியளவுகள் 2860 எக்டேர் மற்றும் ரூ. 40.53 இலட்சங்கள் ஆகும்.

காடுபடு சிறு பொருட்கள் :

காடுபடு சிறு பொருட்களின் மரங்கள் 904 எக்டேர் பரப்பளவில் வளர்க்கப்பட்டு 467 எக்டேரில் பேணப்பட்டன. இதற்கான குறியளவுகள் 823 எக்டேர் மற்றும் 750 எக்டேர் ஆகும். இதற்காகக் குறிக்கப்பட்ட ரூ. 13·23 இலட்சங்களுக்குப் பதில், ரூ. 19.86 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டன.

வனச் செய்தி திட்டம் ;

இதற்கான குறியளவான ரூ. 0.56 இலட்சங்களில் ரூ. 0.18 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டன.

வன ஆராய்ச்சி

குறிக்கப்பட்ட இலக்கு ரூ. 5·53 இலட்சங்கள், விதைத் தோட்டங்களைப்பேணுதல், வன கணக்கியல் வேலைகள் மற்றும் விதை சேகரித்தல் போன்ற அலுவல்கட்காக ரூ. 15.27 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டன.

வெட்டுமரப் பணிகளும் வனப் பயன்பாடும் :

சென்ற ஆண்டு எஞ்சிய கட்டடங்கள் மற்றும் சாலை அமைக்கும் அலுவல்கட்காக ரூ. 5.83 இலட்சங்கள் செலவிடப்பட்டன.

சாலைப் போக்கு வரத்து :

இவ்வாண்டில் ரூ. 28.94 இலட்சங்கள் செலவில் சாலைகள் அமைக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கட்டிடங்கள் :

குறியளவான ரூ. 35.63 இலட்சங்களில் ரூ. 20.54 இலட்சங்கள் கடந்த ஆண்டுகளில் எஞ்சிய அலுவல்கட்கென செலவு செய்யப்பட்டன.

இயற்கை பாதுகாப்பு :

வன விலங்குகள் பாதுகாப்பினை அபிவிருத்தி செய்ய ரூ. 26.16 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டன.

வண்டலூர் உயிரியல் பூங்கா :

ஒரு உயிரியல் பூங்கா அமைப்பதற்கான கட்டிட அலுவல், நிலங்களை வகைப்படுத்தவும், அலுவல் மேற்கொள்ளப்படுகின்றன. நீர்யானை, வரிக்குதிரை, மான் மற்றும் சில பறவைகள் மாநகராட்சி உயிரியல் பூங்காவிலிருந்து கொண்டு வரப்பட்டன. வனப்பகுதிகளில் உள்ள யானை இடங்களிலிருந்து யானைகள் கொண்டு வரப்பட்டன. குறியளவான ரூ. 54.70 இலட்சங்களுக்குப் பதிலாக ரூ. 55.68 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டன.

மனமகிழ் மையம் :

குறும்பப்பட்டி என்ற இடத்தில் ரூ. 1.94 இலட்சம் செலவில் ஒரு மனமகிழ் மையம் நிறுவப்பட்டது.

பழங்குடி மக்கள் மேம்பாடு :

இவ்வாண்டில் கீழ்க்கண்ட பணிகட்காக ரூ. 33·22 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டன.—

1. 1,270 எக்டேர் பரப்பில் வனத் தோட்டங்கள்.
2. 218 எக்டேர் பரப்பில் தீவிர பேணும் பணிகள்.
3. சாலைகள்.
4. கட்டிடங்கள்.

வன விலங்குத் திட்டங்கள் :

பின்வரும் திட்டங்களுக்காக ரூ. 31.01 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டன.—

1. சிங்கவால் குரங்கு.
2. முதலைப் பண்ணை
3. கோடிக்கரை சரணாலயம்.
4. முதுமலை சரணாலயம்.
5. தார் சரணாலயம்.
6. பொருட்காட்சி.
7. கிண்டி தேசிய பூங்கா.

முந்திரி பதிய பெருக்கம் :

ரூ. 0·14 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டன.

ஊரக விறகு மரத்தோட்டங்கள் :

இந்த மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தில் ரூ. 119.06 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டன. 6,369 எக்டேர் பரப்பில் காடுகளும் 132 கிலோ மீட்டர் சாலையோரத் தோட்டங்களும் எழுப்பப்பட்டன. இவ்வாண்டில் 41.26 இலட்சம் நாற்றுகள் எழுப்பப்பட்டன.

STATE DEPARTMENT OF ARCHAE
LIBRARY.

மேற்கு மலைத்தொடர் வளர்ச்சி திட்டம் :

இவ்வாண்டில் 1,328 எக்டேர் பரப்பில் சூழ்மரத் தோட்டங்கள் எழுப்பப்பட்டன. பழைய தேயிலை ரப்பர், கிராம்பு தோட்டங்கள் பேணப்பட்டன. குறியளவான ரூ. 85.30 இலட்சங்கட்கு பதிலாக ரூ. 96.91 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டன

மலைப்பகுதிகள் மேம்பாட்டு திட்டம் :

216 எக்டேர் பரப்பில் ரூ. 33.20 இலட்சம் செலவில் இத் தோட்டங்கள் எழுப்பப்பட்டன. இதற்கான குறியளவுகள் முறையே 215 எக்டேர் மற்றும் ரூ. 27.04 இலட்சங்கள் ஆகும்.

மரம் வளர்ப்பு விழா.

1982 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் 32-வது மரம் வளர்ப்பு விழா வருடாந்திர விழாவாக மிகச் சிரிய முறையில் தமிழகமெங்கும் கொண்டாடப்பெற்றது. அதிக அளவில் விளம்பரம் செய்துஅதன் மூலம் மரம் வளர்ப்பு விழாவின் முக்கியத்துவம் பொது மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. அச்சமயத்தில் மரம் நடும் விழாவினை குறிக்கும் வகையில் மரங்கள் நடும் பணியினை மாணவர்கள் மேற்கொண்டார்கள். அம்மாதத்தில் மரங்கள் நடுதலினால் ஏற்படும் பயன் பற்றி வனத்துறையினர் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

21—3—1983 அன்று ''உலக வன நாள்'' வனத்துறையினரால் தமிழகமெங்கும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. சென்னையிலுள்ள ராஜ்பவனத்தில், 21—3—1983 அன்று ஒரு ஞாபகார்த்த செடி நடும் விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் கலந்து கொண்டார்கள். மரம் நடுதல் மற்றும் வன விலங்கு சம்பந்தமான நிகழ்ச்சிகள் வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் அஞ்சல் செய்யப்பட்டன. வனத்துறை அதிகாரிகள் பல்வேறு கல்வி நிலையங்களில், மரம் நடுவதின் முக்கியத்துவத்தைப் பற்றி சொற்பொழிவாற்றினார்கள். 21—3—1983 முதல் 31—3—1983 வரை

கல்வி நிறுவனங்களுக்கு மரக் கன்றுகள் இலவசமாக வினியோகிக்கப்பட்டன. மாநில மெங்கும் உள்ள திரை அரங்குகளில் 21–3–1983 முதல் 31–3–1983 வரை '' பிழைத்து வாழ மரம்'' என்ற ஸ்லைடுகள் காண்பிக்கப்பட்டன. மரங்கள் நடுவதின் அவசியத்தையும் மேலும், வனங்களை காப்பதின் முக்கியத்துவத்தையும் சமுதாயத்திற்கு முக்கியமாக நலிந்த பிரிவினருக்கு அவைகளினால் கிட்டும் பயனும், ஆங்கில மற்றும் தமிழ் பத்திரிகைகளில் விளம்பரங்கள் மூலம் எடுத்து கூறப்பட்டது. பள்ளி கல்வி இயக்குநர் மற்றும் கல்லூரி கல்வி இயக்குநர் ஆகியோரை இயற்கையில் நாட்டம் கொண்டுள்ள மாணவர்களை மாநிலத்தில் வெவ்வேறு வனங்கள் உள்ள பகுதிகளுக்கு பிரிவு பிரிவாக அழைத்துச் சென்று காட்டுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

1982–83 ஆம் ஆண்டில் பல்வேறு மரம் வளர்ப்பு திட்டங்கள் மற்றும் சமூக காடுகள் திட்டத்தின் கீழும் 54,634.19 ஹெக்டேர் பரப்பில் மரங்கள் எழுப்பப் பட்டன. சாலையோர மரங்கள் 1,985.57 கிலோ மீட்டர் தூரத்திற்கு எழுப்பப்பட்டன. 169.490 இலட்சம் மரக்கன்றுகள் பொது மக்களுக்கு வினியோகிக்கப்பட்டது. மொத்தத்தில் 1982–83 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் 980.312 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டன.

அத்தியாயம் 9.

மக்கள் நல்வாழ்வு - குடும்ப நலத்துறை

அத்தியாயம் 9.

மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத்துறை.

பிறப்பு மற்றும் இறப்பு.

தமிழ்நாடு மாநகர முனிசிபல் சட்டம் 1919, தமிழ்நாடு மாவட்ட முனிசிபல் சட்டம் 1920 (கன்டோன்மென்ட் போர்ட்) மற்றும் பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 1969-ன் படி வரப்பெற்ற வடிப்புகள் பற்றிய அறிக்கை :—

பெயர்.	பிறப்புகள். 1982-83.	இறப்புகள். 1982-83.
(1)	(2)	(3)
தமிழ்நாடு மாநகர முனிசிபல் சட்டம் (1919 வருடத்திய 4 ஆவது சட்டம்).	19	4
தமிழ்நாடு மாவட்ட முனிசிபல் சட்டம் (1920 ஆம் வருடத்திய 5 ஆவது சட்டம்)	8	7
கண்டோன்மெண்டு போர்டு		
பிறப்பு, இறப்பு பதிவு சட்டம் 1969 (1969 வருடத்திய 18 வது சட்டம்).		
மொத்தம்	27	11

இந்திய கிறித்துவ திருமணச் சட்டம், 1872 :

இவ்வாண்டில் 18,060 திருமண வடிப்புகள் பெறப்பட்டன. இவற்றில் 60 வெளி நாட்டவர்களுக்கும், 18,000 இந்திய கிறிஸ்தவர்களுக்கும் சார்ந்தவை. கடந்த ஆண்டு பெறப்பட்ட 17,300 திருமண வடிப்புகளில் 75 வெளி நாட்டவர்களுக்கும் 17,225 இந்திய கிறிஸ்தவர்களுக்கும் சார்ந்தவை.

பார்ஸி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் 1936 :

கடந்த ஆண்டிலும் இவ்வாண்டிலும் திருமணங்கள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

இந்திய கிறிஸ்துவ திருமணச் சட்டம், 1872-ன் படி திரு மணங்கள் நடைபெற்றவை :

தமிழ்நாட்டில் நடைபெற்ற திருமணங்கள்.

(1)	வெளி நாட்டினர். 1981–82. (2)	1982–83 (3)
1 திருமணப் பதிவாளர்கள் (பிரிவு 7-ன் படி.) 2 உரிமதாரர்கள் (பிரிவு 6 மற்றும் 9). 3 பாதிரிமார்கள் (ரோம், இங்கிலாந்து ஸ்காட்லாந்து சர்ச் சேர்ந்தவர்கள்.) 4 இதர சர்ச்சுகள் சேர்ந்த அபிஷேகம் செய்விக்கப்பட்ட பாதிரிமார்கள்.	75	60

(1)	இந்திய கிருஸ்துவர். 1981–82. (4)	1982–83 (5)
1 திருமணப் பதிவாளர்கள் (பிரிவு 7-ன் படி.) 2 உரிமதாரர்கள் (பிரிவு 6 மற்றும் 9). 3 பாதிரிமார்கள் (ரோம், இங்கிலாந்து ஸ்காட்லாந்து சர்ச் சேர்ந்தவர்கள்). 4 இதர சர்ச்சுகள் சேர்ந்த அபிஷேகம் செய்விக்கப்பட்ட பாதிரிமார்கள்.	17,225	18,000

தேடுதல்களும், நகல்களும்.

தேடுதல்கள்.

இவ்வாண்டில் பிறப்பு இறப்பு திருமணங்களின் வடிப்புகளுக்காக 129 தேடுதல்கள் செய்யப்பட்டன. கடந்த ஆண்டு 94 தேடுதல்கள் செய்யப்பட்டன. இவற்றில் இவ்வாண்டில் வெளி நாட்டவரிடமிருந்து 10 தேடுதல்கள் பெறப்பட்டன. கடந்த ஆண்டில் 14 பெறப்பட்டன.

நிதி நிலைமை.

பிறப்பு இறப்பு திருமணச் சட்டங்கள் (தனித் திருமணச் சட்டம் இந்து திருமணச் சட்டம் உள்பட) கீழ் இவ்வாண்டு வருவாய் ரூ. 1,04,283.17. கடந்த ஆண்டு வருவாய் ரூ. 96,436.50. இந்த ஆண்டு செலவு ரூ. 50,408.40. கடந்த ஆண்டு செலவு, ரூ. 57,706.29.

சிறப்புத் திருமணச் சட்டம்4 1954.

சிறப்புத் திருமணச் சட்டம் 1954 இன்கீழ் 1982—83-ம் ஆண்டில் செய்த பணி விபரங்கள் கீழ் குறிப்பிட்டுள்ளவாறாகும்:

விபரம்.	1—4—1982 முதல் 31—3—1983 வரை.	1—4—1981 முதல் 31—3—1982 வரை.
(1)	(2)	(3)
1 திருமணங்களின் எண்ணிக்கை. —		
(அ) பிரிவு 13 இன்கீழ் மதப்படி செய்து வைக்கப்பட்ட திருமணங்கள்.	590	559
(ஆ) பிரிவு 16 இன்கீழ் பதிவு செய்யப்பட்டவை.	35	26
(இ) நடைபெற்ற தேடுதல்கள்	180	185
3 கொடுக்கப்பட்ட நகல்கள்	868	839
	ரூ.	ரூ.
4 இச்சட்டத்தின்கீழ் வருவாய்	11,412.00	10,901.50

இந்து திருமணச் சட்டம் 1955.

இந்து திருமணச் சட்டம் 1955 இன்படி 1982–83 ஆம் ஆண்டில் செய்த பணி விபரங்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறாகும் : —

	காலம்.	
	1982–83	1981–82..
(1)	(2)	(3)
1 பதிவு செய்யப்பட்ட இந்துத் திருமணங்கள்.	12,096	9,550
2 நடைபெற்ற தேடுதல்கள்	2,354	1,591
3 கொடுக்கப்பட்ட நகல்கள்	12,231	10,483
	ரூ.	ரூ.
4 இச்சட்டத்தின்கீழ் வருவாய்	87,296.00	70,520.00

தொற்றுநோய்த் தடுப்பு.

தொற்றுநோய் பரவியிருப்பது குறித்து மருத்துவர்கள், தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு பொதுச் சுகாதாரச் சட்டத்தின் 56, 62 ஆம் பிரிவுகளின்படி உள்ளூர் சுகாதார அதிகாரிக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். அதேபோல் குடும்பத்தலைவரும், வீட்டுச் சொந்தக்காரரும் தகவல் அளிக்க வேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்நோய் கண்டுள்ளவர்கள், இந்நோயினால் இறந்தவர்கள் ஆகியோர் குறித்த புள்ளி விவரங்கள் மாவட்டச் சுகாதார அதிகாரிகள், மாவட்ட மருத்துவ அதிகாரிகள், மருத்துவக் கல்லூரித் தலைவர்கள் ஆகியோரிடமிருந்து சேகரிக்கப் படுகின்றன. இம் மாநிலத்தில், பெரியம்மை, பிளேக் நோய் முறையே 1974, 1965 ஆம் ஆண்டிலிருந்து இல்லை.

காலரா :

இம் மாநிலத்தில், இக்காலரா நோய் குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட இடங்களில் பரவும் நோயாக உள்ளது. பொருட் காட்சிகள், திருவிழாக்களின்போது காலரா நோய் பரவாமல் இருக்க முன் கூட்டியே தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. அறிக்கையாண்டில் 2,948 பேருக்கு நோய் கண்டிருந்தது. இவர்களுள் 32 பேர் இறந்தனர்.

மலேரியா :

மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டம் (மத்திய அரசு 1977 ஆம் ஆண்டிலிருந்து மாற்றியமைத்துள்ளவாறு) 1982—83 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. தருமபுரியில், பெண்ணாற்றங்கரையிலுள்ள கிராமங்கள், சேலம், வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, இராமேஸ்வரம் தீவு உட்பட இராமநாதபுர மாவட்டத்தின் கடலோரப் பகுதிகள் ஆகிய இடங்களில் மலேரியா நோய் பரவியிருந்தது. இவற்றைத் தவிர, சென்னை, சேலம், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கரூர் முதலிய சில நகர்ப்புற பகுதிகளிலும் மலேரியா நோய் கண்டிருந்தது. மலேரியா நோய்க் கண்டிருந்தவர்களைக் கண்டுபிடித்து காய்ச்சல் கண்டுள்ள 43.88 இலட்சம் பேரிடமிருந்து இரத்தத் துளி எடுத்துச் சோதனையிடப்பட்டது. அவர்களுள் 68,045 பேருக்கு மலேரியா நோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. நோய் பரவியுள்ள மேற்சொன்ன பகுதிகளில் முறையாக பூச்சி மருந்துகள் தெளிக்கப்பட்டன. சென்னை, சேலம், இராசிபுரம், இளம்பிள்ளை, தூத்துக்குடி, ஈரோடு, வேலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், குமாரபாளையம் ஆகிய இடங்களில் நகர்ப்பகுதி மலேரியா கட்டுப்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மலேரியா நோயைத் தடுக்கும் பொருட்டு லார்வா புழு நிலையிலுள்ள கொசுக்களை ஒழிக்கத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

யானைக்கால் நோய் :

இம் மாநிலத்தில் யானைக்கால் நோயைத்தடுப்பதற்காக 19 நோய்க்கட்டுப்பாட்டுப் பிரிவுகளும், 33 இரவு நேர மருந்தகங்களும் கோயம்புத்தூரில் யானைக்கால் ஆய்வுப் பிரிவு ஒன்றும் செயற்படுகின்றன. செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் இந்நோய் பரவியுள்ள பொருட்கள், சாதனங்கள் வழங்குவதன் மூலம் 50 : 50 அடிப்படையில் மத்திய உதவி அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டில் யானைக்கால் நோய் கண்டுள்ளதா என்று அறிவதற்கு 5,33,671 பேர்களுக்கு சோதனை செய்யப்பட்டு, இதில் 11,153 நபர்களுக்கு யானைக்கால் நோய் இருப்பதாகத் தெரிய வந்தது.

நரம்புச் சிலந்தி நோய் :

இந்நோய் பரவியுள்ள எல்லாக் கிராமங்களிலும் குடிநீர் வாயில்களில் சைக்லாப்ஸ் வகை பூச்சிகள் செறிந்திருக்கும் அளவு குடிநீரை முறையாகத் தூய்மைப்படுத்துவதன்மூலம் குறைக்கப்படுகிறது. இவ்வாறு செய்வதனால், சமுதாயத்தில் இந்நோய் பரவுவது தடுக்கப்படுகிறது. இந்த ஆண்டில் இந்நோய் இம் மாநிலத்தில் இல்லை.

நோய்த்தடுப்பு விரிவுத் திட்டம்:

தொண்டைப்புண், கக்குவான் இருமல், இசிவு நோய், இளம் பிள்ளைவாதம், தட்டம்மை, காசநோய், குடற்காய்ச்சல் ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நோய்த்தடுப்பு ஊசிபோடப்பட்டதன் இலக்கும் சாதனையும் வருமாறு :—

தொடர் எண்.	ஊசி/மருந்து.	இலக்கு (இலட்சத்தில்).	ஊசி போட்டுக் கொண்டவர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்).	ஊசிபோட்டுக் கொண்டவர்கள் சதவீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1	முத்தடுப்பு ஊசி	11.00	8.89	81
2	தொண்டைப்புண்தடுப்பு ஊசி	10.00	5.84	58
3	இசிவு நோய்த் (தாய்மார்கள்) தடுப்பு ஊசி.	7.00	3.86	55
4	இசிவு நோய்த் (10 ஆண்டு) தடுப்பு ஊசி.	2.00	2.00	100
5	இசிவு நோய்த் (16 ஆண்டுகள்) தடுப்பு ஊசி.	1.50	0.80	53
6	ஃபர்ஸோலேட் மாத்திரை (பெரியது).	8.00	5.85	73
7	ஃபர்ஸோலேட் மாத்திரை (சிறியது).	8.00	5.88	73
8	வைட்டமின் (A)	20.00	13.66	68
9	இளம்பிள்ளைவாத தடுப்புச் சொட்டு மருந்து.	5.00	4.76	45
10	**முத்தடுப்பு ஊசி**	**7.50**	**6.20**	**83**

சுற்றுப்புறச்சூழல் கட்டுப்பாடுத் துறை

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்:

நமது மாநிலத்தில் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் திட, திரவ வாயுக்கழிவுப்பொருட்களினால் ஏற்படும் மாசுபோன்ற சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகளை ஆய்வதற்காக, 1972 ஆம் ஆண்டு சூழல் நலவியற் துறை அமைக்கப்பட்டது. இத்துறை ஆலோசனை கூறும் ஓர் அமைப்பாகச் செயல்பட்டது. இத் துறைக்குச் செயல்படுத்தும் அதிகாரங்கள் இல்லை. அரசு, தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தை 27—2—1982 முதல் மத்திய நீர் (தூய்மைக் கெடுதலைத் தவிர்த்தல் மற்றும் கட்டுப்படுத் தல்) சட்டம், 1974ன் பிரிவு 4 உட்பிரிவு 1ன் கீழ் ஏற்படுத்தி யுள்ளது. இச்சட்டம் 1982 ஆகஸ்ட் திங்களில் இம்மாநிலத்தில் அமுலுக்கு வந்தது. அரசு, மாசு கட்டுப்பாடு துறையை தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தோடு இணைத்து உத்திரவு பிறப்பித்துள்ளது.

1982—83 ஆம் ஆண்டுக் காலத்தில் இவ்வாரியம் உருவாக்கப் பட்ட ஆரம்ப நிலையில் இருந்தது. அவ்வாண்டில், தொழிற் சாலைகளினின்று/வணிக நிறுவனங்களினின்று 450 விண்ணப் பங்கள் வாரியத்தின் இசைவை வேண்டி வந்திருக்கின்றன. 130 தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு அவை வெளியேற்றும், தொழிற்சாலைக் கழிவு நீர் மற்றும் பிறகழிவு நீர் சுத்திகரிக்கப் படும் நடைமுறைகள் குறித்து ஆராயப்பட்டது. 80 தொழிற் சாலைகளுக்கு மேற்படி ஆண்டில் தடையிலாச் சான்றிதழ் வழங் கப்பட்டிருக்கிறது. இத்துடன், பொதுமக்களிடமிருந்தும், மற்ற நிறுவனங்களிடமிருந்தும் நீர்/காற்று மாசுறும் பிரச்சினை குறித்த 8 புகார்கள் இவ்வாரியத்திற்கு வந்திருந்தன. அப்புகார்கள், ஆராயப்பட்டு, நீர் மற்றும் காற்று மாசுட் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த உரிய வழிவகைகள் எடுக்கப்பட்டன.

தமிழ்நாடு சூழல் வாரியம்:

1976இல் அரசினரால் தமிழ்நாடு சூழல் வாரியம் ஏற்படுத்தப் பட்டது. தமிழகத்தின் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றி ஆலோசனை வழங்கும் முதனிலை அமைப்பாக இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது.

இவ்வாரியம் சுற்றுப்புறச் சூழல் நிலை குறித்து கீழ்க்காணும் நான்கு திட்டங்களுக்கு அனுமதி வழங்கியது:—

(க) சென்னை, பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலைய மேம்பாட்டுத் திட்டம்.

(கா) இந்திய விண்வெளி ஆய்வுக் கழகத்தினரின் ஏவுகணைக்கான திரவ எரிபொருள் பரிசோதனை நிலையம் நிறுவுதல்.

(கி) மேட்டூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம்.

(கீ) எண்ணூர் அனல் மின் நிலைய மேம்பாட்டுத் திட்டம்.

சூழல் நலக் கல்வி:—

சூழல் நலக் கல்வியின் முக்கியத்துவத்தை அறிவுறுத்துவது தமிழ்நாடு சூழல் வாரியத்தின் ஒரு பணியாகும். சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதில் நமது கவனத்தை வலியுறுத்தும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5 ஆம் நாள் உலகச் சுற்றுப்புறச் சூழல் நாளாக கொண்டாடப்படுகின்றது. இந்த ஆண்டு வானொலியிலும், தொலைக்காட்சியிலும் உலகச் சுற்றுப் புறச் சூழல் நாளையொட்டி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன

இந்திய முறை மருத்துவ இயக்ககம்

இந்திய முறை மருத்துவத்தின்கீழ், அதாவது, சித்தமுறை ஆயுர்வேதம், யுனானி முறை மருத்துவத்தின்கீழ் மருத்துவ நிவாரணம், கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி, ஏனைய வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவது இந்திய முறை மருத்துவ இயக்ககத்தின் முக்கிய பணிகளாகும். இந்திய முறை மருத்துவ இயக்ககம், சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா இந்திய முறை அரசு மருத்துவ மனை வளாகத்தில் அமைந்துள்ளது. இம்மாநிலத்திலுள்ள இந்திய முறை மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனைகள் உட்பட இந்திய முறை மருத்துவத்தின் பல்வேறு நிலையங்களின் நிர்வாக, நிதி விவகாரங்கள் இந்த இயக்ககத்தின் பொறுப்பில் உள்ளன. இந்த இயக்ககத்தில் யோகா, இயற்கை வைத்திய முறை என்கிற ஏனைய இரண்டு மருத்துவ முறைகளும் உள்ளன.

மருத்துவ நிவாரணம்:

அறிஞர் அண்ணா இந்தியமுறை அரசு மருத்துவமனை:—

சென்னை, அறிஞர் அண்ணா இந்தியமுறை அரசு மருத்துவ மனை 14—4—1970 முதல் சென்னை அரும்பாக்கத்தில் அமைந்துள்ளது. இம்மருத்துவமனை குழந்தைகளுக்கான படுக்கை வசதிகளுடன் தற்போது இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் இந்திய முறை மருத்துவத்தின் மூன்று முறைகளிலும், அதாவது சித்தா, ஆயுர்வேதம், யுனானி முறை மருத்துவங்களில் புற நோயாளிகள் (அக) நோயாளிகள் சிகிச்சை வசதிகள் உள்ளன. இந்திய முறை மருத்துவத்தின் மூன்று முறைகளின் கீழும் அரசுப் பணியாளர்களுக்கென்று புறநோயாளிகள் சிகிச்சைக்காகத் தனி வசதிகள் இம்மருத்துவமனையில் உள்ளன. வளர்ச்சித் திட்டங்களின்கீழ், இம்மருத்துவ மனைக்காக முந்தைய ஆண்டுகளில் பின் வரும் பணிகள் அனுமதிக்கப்பட்டு, 1982–83 ஆம் ஆண்டில் அப்பணிகள் நடந்தேறி வருகின்றன.

	(ரூபாய் இலட்சத்தில்)
1 கழிவு நீரகற்றல் வசதிகள்	6.35
2 சுற்றுச்சுவர் கட்டுதல்	3.35
3 நவீன சமையலறை வசதி	1.00
4 புறநோயாளர் கட்டிடச் சீரமைப்புக்கென்று கட்டிடங்கள் கட்டுதல்.	3.90
5 24 படுக்கைகள் கொண்ட சிறார் வார்டுக்கென்று கட்டிடங்கள் கட்டுதல்.	2.90

24 படுக்கைகள் கொண்ட சிறார் வார்டு ஒன்றுக்கு பணியாளர் ஏனைய செலவுகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கலலூரியுடன் இணைந்த மருத்துவ மனை:—

208 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்று பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைந்துள்ளது. அம்மருத்துவமனையில் சித்த முறை மருத்துவ சிகிச்சை மட்டுமே அளிக்கப்படுகிறது. இந்நிலையத்தில் சித்த முறை மருத்துவத்தில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு மருத்துவமனை பயிற்சி வசதிகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளன.

மருந்தகம் :--

சென்னை, அறிஞர் அண்ணா இந்திய முறை அரசு மருத்துவ மனையுடன் இணைந்த இம்மருந்தகம் இம்மருத்துவமனைக்குத் தேவையான சித்தா, ஆயுர்வேதம், யுனானி மருந்துப் பொருட்களைத் தயாரித்து வருகிறது ; இம்மருந்தகத்தின் ஆண்டு உற்பத்தித் திறனளவு ரூபாய் 6·00 இலட்சத்திற்கும் அதிகமாகும். இம்மருந்தகத்தில் தயாரிக்கப்படுகின்ற மருந்துப் பொருட்கள் சென்னை அறிஞர் அண்ணா இந்திய முறை அரசு மருத்துவ மனையின் பயனுக்கென்றே தயாரிக்கப்படுபவையாகும்.

இம்மருந்தகம் தற்போது இயந்திர மயமாக்கப்பட்டு வருகிறது; நவீன சுகாதார முறைகள் அனைத்தையும் பின்பற்றி இம்மாநிலத்திலுள்ள மருத்துவமனைகள் மருந்தகங்களுக்குத் தேவையான மருந்துப்பொருட்களைத் தயாரிக்கக்கூடிய திறன்கொண்ட நவீன மருந்தகமாக இது மேம்படுத்தப்பட்டு வருகிறது.

உயர் அழுத்த மின் வழங்கல், வாயு இயந்திரப் பிரிவு நீராவி குழாய் அமைப்பு ஆகிய வசதிகளுடன் ரூபாய் 22.95 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் இம்மருந்தகத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது ; இம்மருந்தகத்திற்கான கட்டிடக் கட்டுமான பணி முடிக்கப்பட்டுள்ளது.

சித்தமுறை மருத்துவப் பிரிவு :

மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள், வட்ட மருத்துவமனைகள் ஏனைய மருத்துவமனைகளில சித்த முறை மருத்துவபிரிவுகள் :

ஏற்கெனவே, மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 15-ம், வட்ட மருத்துவமனைகளில் 73-ம் ஏனைய மருத்துவ மனைகளில் 15-ம் சித்த முறை மருத்துவப் பிரிவுகள் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதி வரை செயல்பட்டு வருகின்றன.

அரசு மருந்தகங்கள் :

இம்மாநிலத்தில் இந்திய முறை மருத்துவத்தில் அரசு மருந்தகங்கள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன: —

சென்னை மாநகர் :

தலைமைச் செயலகத்திலுள்ள அரசு சித்த மருந்தகம்.	சென்னை அறிஞர் அண்ணா இந்திய முறை அரசு மருத்துவ மனையுடன் இணைந்தது.
2 சேப்பாக்கத்திலுள்ள அரசு சித்த மருந்தகம்.	ஷை
3 சைதாப்பேட்டையிலுள்ள அரசு சித்த மருந்தகம்.	ஷை
4 திருவல்லிக்கேணியிலுள்ள அரசு சித்த மருந்தகம்.	ஷை

மேற்சொன்ன நான்கு மருந்தகங்களும் சென்னை அறிஞர் அண்ணா இந்திய முறை அரசு மருத்துவமனையுடன் இணைந்துள்ளன.

மாவட்டம் :

1. அரசினர் சித்த மருத்துவமனை, வாய்மேடு, தஞ்சாவூர் மாவட்டம்.

2. அரசினர் சித்த மருத்துவமனை, சோமசரம்பேட்டை, திருச்சி மாவட்டம்.

3. அரசினர் சித்த மருத்துவமனை, ஆனந்தூர், இராமநாதபுரம் மாவட்டம்.

4. அரசினர் சித்த மருத்துவமனை, வாலாஜாபாத், செங்கற்பட்டு மாவட்டம்.

5. அரசினர் ஆயுர்வேத மருத்துவமனை, புதுக்கோட்டை கன்னியாகுமரி மாவட்டம்.

6. அரசினர் ஆயுர்வேத மருத்துவமனை, எடலக்குடி, கன்னியாகுமரி மாவட்டம்.

7. அரசினர் ஆயுர்வேத மருத்துவமனை, திருப்திசாரம், கன்னியாகுமரி மாவட்டம்.

8. அரசினர் ஆயுர்வேத மருத்துவமனை, புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.

9. அரசினர் ஆயுர்வேத மருத்துவமனை, செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.

கிராமப்புர அரசினர் சித்த மருந்தகங்கள் :—

மூலைமுடுக்குகளில் உள்ள கிராமங்களுக்கு மருத்துவ வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு, அரசு, 20 கிராமங்களில் கிராமப்புற அரசினர் சித்த மருந்தகங்களைத் தொடங்க அனுமதியளித்துள்ளது.

மருத்துவக் கல்வி :

சித்த மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டையில் (இந்திய முறை மருத்துவக் கல்லூரி) 1964 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. சித்தமுறை மருத்துவத்தில் உள்ள அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி இது மட்டுமேயாகும். இக்கல்லூரி மதுரையிலுள்ள, மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டு, 1976–77 ஆம் ஆண்டில், பி.ஐ.எம். பாட முறையில் மதுரையில் சேர்ந்த மாணவர்கள் மருத்துவக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டனர். இந்திய மருத்துவ முறை மத்தியக் குழு ஒப்புதல் அளித்துள்ள பி.எஸ்.எம். மற்றும் எஸ். வகுப்பு 1977–78 ஆம் ஆண்டு கல்வி ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டது. சித்த மருத்துவ முறையில், இரு பிரிவுகளிலுமுள்ள அதாவது (1) சித்த மருத்துவம், (2) சித்த குணபாதம் ஆகியவற்றிலுள்ள சித்த மருத்துவ அறுவைச் சிகிச்சை ஆகியவற்றில் பட்ட மேற்படிப்பும் இக்கல்லூரியில் 30—12—1978 ஆம் ஆண்டு முதல் அளிக்கப்பட்டு வருகின்றன.

பட்ட படிப்புக் கல்வி :

பி.எஸ்.எம். மற்றும் எஸ். பட்ட வகுப்புக் கல்வி 5 ஆண்டுகள் காலம் 6 திங்கள் உட்பட 5½ ஆண்டுகள் கால அளவு கொண்டது. ஆண்டுதோறும் பி.எஸ்.எம். மற்றும் எஸ். கல்விப் படிப்புக்காக

75 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவர்களுள் 53 மாணவர்கள் பயிற்சி உதவித் தொகை பெறுபவர்கள் ஆவர். 22 பேர் பயிற்சி உதவித் தொகை பெறாதவர்கள் ஆவர். பயிற்சி உதவித் தொகையாக ஒவ்வொரு மாணவருக்கும், திங்கள் தோறும் ரூ. 75 வழங்கப்படுகிறது. இப்பட்டக் கல்வி பெற்றவர்கள் உதவி மருத்துவ அதிகாரிகளாக அரசு, உள்ளாட்சி மன்றங்களில் மருந்தங்களில் பணியில் நியமிக்கப்பட தகுதியுடையவர்களாவர்.

பட்ட மேற்படிப்புக் கல்வி :

இக்கல்வியின் கால அளவு 3 ஆண்டுகள் ஆகும். ஆண்டு தோறும், மருத்துவம், குணபாதம் ஆகிய பட்டமேற்படிப்புக் கல்வியில் ஒவ்வொரு பிரிவிலும் 10 மாணவர்கள் வீதம் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஒவ்வொரு மாணவருக்கும் பின்வரும் வீதத்தில், படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது:—

(1) முறையாகப் பணியில் நியமிக்கப்பட்டவர்கள் 5 ஆண்டுகள் பணியாற்றி தகுதிகாண் பருவ நிலையை முடித்தவர்கள்.	திங்கள் ஒன்றுக்கு ரூ. 650 வீதம்.
(2) முறையாக பணியில் நியமிக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்குக் குறைவாக பணியாற்றியவர்கள்.	ரூ. 500 வீதம்.
(3) முறையாக பணியில் நியமிக்கப்படாதவர்கள், தற்காலிகப் பணியில் நியமிக்கப்பட்டவர்கள்.	ரூ. 325 வீதம்.

மருந்தாக்கவியலில் பட்டயப் படிப்பு :

சித்தம், ஆயுர்வேதம், யுனானி, ஆகிய மூன்று முறைகளுக்கும் மருந்தாக்கவியல் பட்டயப் படிப்பு 1974—75 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது. சித்தா, ஆயுர்வேதம், யுனானி ஆகிய மூன்று மருத்துவமுறைப் பட்டயக் கல்வியிலும், சென்னை, அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை மருத்துவமனை, பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில்

1982–83 ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு :

1. அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.	சித்தா —25 மாணவர்கள் அனைவருக்கும் பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது.
2. அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை மருத்துவமனை, சென்னை.	சித்தா —25 மாணவர்கள் அனைவருக்கும் பயிற்சி உதவித்தொகை வழங்கப்படுகிறது.
ஆயுர்வேதம்	5 மாணவர்கள்.
யுனானி	5 மாணவர்கள்.
	35 மாணவர்கள்
	மேற்சொன்ன மூன்று மருத்துவ முறையிலும் பட்டயக் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது.
பெரு மொத்தம்	25+35 — 60

நடப்பு ஆண்டில் 21 மாணவர்கள் இக்கல்வியில் தேர்ச்சி பெற்றுள்ளனர். (சித்தா 15, ஆயுர் வேதம் 4, யுனானி 2) 1982 ஆம் நாளன்று டிசம்பர் திங்கள் வரை இப்பட்டயக் கல்வியில் தேர்ச்சி பெற்றுள்ள மாணவர்களின் விவரம் வருமாறு :

சித்தா	122
ஆயுர்வேதம்	28
யுனானி	11
மொத்தம்	161

மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திங்களிலும் ரூ. 30 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

யுனானி மருத்துவக் கல்லூரி :

இக்கல்லூரியில், பி.யு.எம். மற்றும் எஸ். 7½ ஆண்டுக் கால அளவுள்ள பட்டயக் கல்வி 2 ஆண்டுகள் புதுமுகப் பாடமுள்ள பயிற்சி காலம் உட்பட ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இக்கல்லூரியில் 15 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படு கின்றனர். இவர்களுள் 10 மாணவர்களுக்கு திங்கள் தோறும் ரூ. 75 வீதம் பயிற்சி உதவித் தொகையாக கல்வி ஆண்டு முழுவ தற்கும் வழங்கப்படுகிறது (9 திங்கள் மட்டும்).

இந்திய முறை மருத்துவத்தில் மருத்துவர்களாகப் பதிவு செய்தல் :

31—3—1983 ஆம் நாளன்றுள்ளவாறு சென்னை ஒருங் கிணைந்த மருத்துவக் குழுவிலும், சென்னை இந்திய முறை மருத் துவக் குழுவிலும் உள்ள மொத்த மருத்துவர்களின் எண்ணிக்கை குறித்த விவரம் வருமாறு :—

1. ஒருங்கிணைந்த மருத்துவக் குழு	773
2. இந்திய முறை மருத்துவக் குழு	13,188

இவர்களில், நடப்பாண்டில் பதிவு செய்துகொண்ட மருத்துவர் களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

1. ஒருங்கிணைந்த மருத்துவக் குழு	இல்லை.
2. இந்திய முறை மருத்துவ மத்தியக் குழு —	
(1) ஏ சிறப்பு	29
(2) ஏ வகுப்பு	2
(3) பி வகுப்பு	7
(4) பி2 வகுப்பு	32
(5) சி வகுப்பு	ஏதுமில்லை.
மொத்தம்	70

கிங் நிறுவனம், கிண்டி

இரத்த வங்கி :

இரத்தத் தொகுதி நிணநீர், இரத்த நுண்ணிமைமங்கள் ("வெட்" பிளாஸ்மா) ஆகியவைச் செயல்முறைப்படுத்தப்பட்டு, மாநில மருத்துவ மனைகள் அனைத்திற்கும் ஏனைய தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன. இரத்தம் தொகுதிகளை அறிதல் "RH" சோதனை ஏனைய சோதனை ஆராய்ச்சி பணிகள் முதலியன போன்ற இரத்த சம்பந்தப்பட்ட சோதனைகள் இரத்த வங்கி ஆய்வுக்கூடத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாடு மாநிலத்தில் தற்போது அனுமதி பெற்ற இரத்த வங்கிகள் 77 உள்ளன. இவற்றில் 63 வங்கிகள், மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்குத் தேவைப்படும் இரத்தம் கொடுக்கும் பணி செய்து வருகிறது. ஏனையவை, இன்னும் செயல்படவில்லை. மைய இரத்த வங்கி, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள எல்லா இரத்த வங்கிகளுக்குத் தேவைப்படும் இரத்தத்தை வழங்குகிறது.

1940 ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள்—ஒப்பனைப் பொருள்கள் சட்டம் :

நோய் எதிர்ப்பு மருந்துகள், வைட்டமின்கள் (தனி-பல லிவர் எக்ஸ்ட்ராக்ட் ''), செயற்கை கரிம மருந்துப் பொருள்கள் "ஹார்மோன்கள்", வாலாயமான மருந்துகள் (கன்வன்ஷனல் பாரன்டெரலஸ்) போன்ற பல்வேறு வகையைச் சேர்ந்த மருந்துகளின் 326 மாதிரிகள், மருந்துப் பொருள்கள்-ஒப்பனைப் பொருள்கள் விதிகளைச் சேர்ந்த விதித்துறைகளின்படி பகுப்பாய்வு செய்து, அவை குறித்த அறிக்கை அனுப்பப்பட்டது. இவற்றில் 5 மாதிரிகள், நிலையான தரம் அற்றவை என சான்றளிக்கப்பட்டது.

இம்மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள், தொழிலாளர் ஈட்டுறுதி அரசு மருத்துவமனைகள் முதலியன

1940 ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள்-ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின் கீழ், பல்வேறு வகைகளைச் சேர்ந்த மருந்துகளின் 38 மாதிரிகள், அவ்வப்போது வழங்கப்பட்ட அல்லது குறிப்பிட்டக் காலத்திற்கொருமுறை வழங்கப்பட்ட மாதிரிகள்

பகுப்பாய்வு செய்து, அறிக்கை ஒன்றை அனுப்ப வேண்டிப் பெறப்பட்டன. இவற்றில் 4 மாதிரிகள், நிலையான தரம் அற்றவை என தெரிவிக்கப்பட்டுள்ளன.

நோய் நுண்மத் தீர்வு நிலை சோதனை :

இவ்வாண்டில் சோதனையிட்ட மருந்துப் பொருள்கள் குறித்து 694 சோதனைகள் நடத்தப்பட்டன.

பைரோஜென் காய்ச்சலுக்குரிய சோதனை :

இந்த வகையில் 470 சோதனைகள் நடத்தப்பட்டன.

நஞ்சியல் சோதனை :

இதன் கீழ் 2,049 சோதனைகள் நடத்தப்பட்டன.

இரசாயனப் பொருள் பகுப்பாய்வு :

இத்தலைப்பின்கீழ் சாதாரண, விதவிதமான, விரிவான சோதனைகள் 3,250 நடத்தப்பட்டன.

ஆற்றல் (பொட்டன்சி) சோதனை :

இத்தலைப்பின்கீழ் (21+9) 30 சோதனைகள் நடத்த வேண்டியதாயிற்று. (ஏ. ஆர். நோய்த்தடுப்பு மருந்து ஆற்றல் சோதனை, ஏ. ஆர். வீ. பிரிவு 9-ல் நடத்தப்பட்டது).

குறிப்பிட்ட நஞ்சியல் சோதனை :

68 சோதனைகள் நடத்தப்பட்டன.

அசாதாரண நஞ்சியல் சோதனை :

இத்தலைப்பில் 51 சோதனைகள் நடத்தப்பட்டன.

புரோஃபிலாக்டிக் நோய்த்தடுப்பு ஊசி மருந்து

இப்பிரிவில், காலரா நோய்த்தடுப்பு-முத்தடுப்பு ஊசி மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. பிளேக் நோய்த்தடுப்பு மருந்து, பம்பாயில் உள்ள '' ஹாப்கின் பையோ பார்மாசியூடிகல் லிமிடெட் '' நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள

பொதுச் சுகாதாரத்துறைப் பயனுக்கெனச் சேமித்து வைக்கப்படுகிறது. இப்பிரிவில் ஆய்வுக்கூடத் தொழில் நுட்பவியல் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குத் (தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு) குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை பயிற்சி அளிக்கப்படுகிறது. பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இம் மாநிலத்திலும் ஏனைய மாநிலங்களிலும் உள்ள பல்வேறு கல்லூரிகளிலிருந்து வரும் மாணவர்களுக்கு சுகாதாரப் பிரிவுகளிலிருந்து சுகாதாரப் பார்வையாளராக வரக்கூடிய மாணவர்களுக்கும் இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த நோய்த்தடுப்பு ஊசி மருந்துகளை எவ்வாறு தயாரிப்பது, அவற்றை எவ்வாறு போடுவது என்பது குறித்து அவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. உலக வங்கி நோய்த்தடுப்புத் திட்ட நிதியுதவி பெறும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தின் கீழ், மதுரை, இராம்நாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுச்கு இவ்வாண்டில் சுமார் 2,94,000 ரூபாய் பெறுமானமுள்ள 9.8 இலட்சம் முத்தடுப்பு ஊசி மருந்துகள் வழங்கப்பட்டன.

காலரா நோய்த் தடுப்பு ஊசி மருந்து

'இனாபா' (569B) 'ஓகாவா' (8/12/58) என்ற வகையைச் சேர்ந்த ''விப்ரோ ப்பிரீஸ் டிரைட்சீட்'' என்ற மருந்துப் பொருள்கள், கசவ்வியில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து பெறப்படுகின்றன. இது வழக்கமாகப் பின்பற்றப் பட்டு வரும் நோய்த்தடுப்பு மருந்தாகும். இதில், கரியகக்காடி (பெனால்) தன்மை இல்லாததும், கரியாக்காடி தன்மை உடையதும் ஆகும்.

காலரா நோய்தடுப்பு ஊசி மருந்து :

	(கன சி.சி. சென்டி
1982-83-ல் தயாரித்த அளவு ..	35,08,133),
தமிழ்நாடு மாநிலத்திற்குக் கொடுத்த அளவு ..	50,89,107
ஏனைய மாநிலங்களுக்குக் கொடுத்த அளவு	36,500
வழங்கப்பட்ட மொத்த அளவு	51,25,607

நிணநீர் தயாரிப்புப் (DAT) பிரிவின் 1982—83 ஆம் ஆண்டுச் சாதனை.

	சேகரிக்கப் பட்ட இரத்த அளவு.	பிரிக்கப் பட்ட பிளாஸ்மா அளவு.	செயல் முறைக்கு எடுக்கப் பட்ட பிளாஸ்மா அளவு.	தயாரிக்கப் பட்ட நச்சுத் தடுப்பு மருந்தின் அளவு.	பயனுக்கென வழங்கப் பட்ட நச்சுத் தடுப்பு மருந்தின் அளவு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		(லிட்டரில்)			
இசிவு நோய் (நச்சு தடுப்பு மருந்து)	1,012.5	688.4	1,087.3	140.7	42.0
பாம்பு நச்சு தடுப்பு மருந்து	983.5	646.2	596.9	68.6	31.0

நிணநீர் நிரப்பு பிரிவில் (DAT) 1982—83 நிதியாண்டில் தயாரித்த
வாங்கிய, வழங்கிய நிணநீர் அளவினைக் காட்டும் விவர அறிக்கை.

தொடர் எண் மற்றும் நிணநீர் பெயர்.	தயாரித்த அளவு.	வழங்கிய அளவு.	வாங்கிய அளவு.	சோதனைக்கு வாங்கிய அளவு.
(1)	(2)	(3)	(4)	(5)
1 புரோனகலாக்டிக் (ஒரு டோஸ்) (அல்லது) இசிவு நோய் (நச்சு தடுப்பு மருந்து) 1500ஐ.யு.	16,590 (டோஸ்)	25,840 (டோஸ்)	இல்லை.	இல்லை.

2	குரேபிவ் 10,000ஐ.யு. (அல்லது) இசிவு நோய் நச்சு தடுப்பு மருந்து 10,000ஐ.யு.	இல்லை.	21,870 10,000	30,000 10,000 ஐ.யு.	இல்லை. 4709 குப்பிகள் 10,000ஐ.யு. 'KIPM' தயாரிப்பு— சோதனையில் உள்ளது.
3	இசிவு நோய் டாக்சாய்டு(PTBP) (ஒரு டோஸ்)	9,24,110 (டோஸ்)	13,14,270 (டோஸ்)	4,00,000 (டோஸ்)	4,00,000 (டோஸ்)
4	பாம்பு நச்சு தடுப்பு மருந்து	2,944 குப்பிகள்.	8,068 குப்பிகள் ஆம்ல்ஸ்.	6,000 குப்பிகள் ஆம்ல்ஸ்.	1,000 குப்பிகள். (D) 'SI' பூனா.
5	டிப்திரியா நச்சு தடுப்பு மருந்து 10, 000ஐயு.	இல்லை.	3,282 10,000 ஐ.யு.	1000 1,000 ஐ.யு.	இல்லை.
6	ஆண்டிகாஸ் காங்கிரின் நிணநீர் 10,000 ஐ.யு.	இல்லை.	இல்லை.	இல்லை.	இல்லை.

மருத்துவக் க்ல்வி.

மருத்துவப் பணியாளர்களுக்கும், மருத்துவத் துணைப் பணி யாளர்களுக்கும் கல்வி கற்பித்தல் (கல்லூரி இணைந்த மருத்துவ மனைகள், எல்லைப்புற மருத்துவ மனைகள் ஆகியவற்றின் மூலம் அளிக்கப்படுகிறது) மருத்துவப் பணிகள், ஆராய்ச்சி மேம்பாடு போன்றவை மருத்துவக் கல்வி இயக்ககத்தின் கீழ்ச் செயல் படுகின்றன. மருத்துவக் கல்வி இயக்குநர் இத்துறையின் தலைவ ராவார். மாநிலத் தலைமையிடத்தில் அதிகாரிகள் அடங்கிய குழு அவருக்கு உதவியாகப் பனியாற்றி வருகிறது.

மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மருத்துவ நிறுவனங்களின் விவரம் வருமாறு :—

1. மருத்துவக் கல்லூரிகள் எட்டு.

2. பல் மருத்துவக் கல்லூரி ஒன்று.

3. கல்லூரி இணைந்த மருத்துவ மனைகள் இருபது ;

4. கலைஞர் கருணாநிதி நகர், அறிஞர் அண்ணா நகர், தண்டையார்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள எல்லைப்புற மருத்துவ மனைகள்;

5. புதுவாழ்வு—செயற்கை உறுப்பு நிறுவனம் கலைஞர் கருணாநிதி நகர், சென்னை

6. கிங் நிறுவனம், கிண்டி. (நோய்த் தடுப்பு மருந்து) (பொதுச் சுகாதார ஆய்வுக் கூடம்).

7. உருக்கு நோய்—மார்பு நோய் சிகிச்சை நிறுவனம், சேத்துப்பட்டு, சென்னை.

வரவு செலவுத் திட்டம் :

வருவாய்க் கண்க்கு

1982–83 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதி (
—ரூ. 37.71 கே

1982–83 ஆம் ஆண்டில் ஆன செலவு—ரூ. 39.36 கோடி.

மொத்த செலவில் 54.5 சதவீதம் சம்பளம், ஊதியம், யிற்சி உதவித் தொகை ஆகியவற்றிற்காகவும், 17.6 சதவீதம் ந்து களுக்காவும். 12.2 சதவீதம் இயந்திரம், சாதனத்திற்காகவும்,

5.6 சதவீதம் உணவிற்காகவும், 10.1 சதவீதம் ஏனைய பல்வேறு இனங்களுக்காகவும் செலவிடப்பட்டது. ரூ. 39.36 கோடியில் ரூ. 1.86 கோடி திட்டச் செலவின் கீழ் வருகிறது.

மூலதனச் செலவுகள் :

1982–83 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. 5.33 கோடி)

1982–83 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் கட்டுவதற்காக ஆன செலவு .. .. 2.37 கோடி

படுக்கை வசதிகள் :

1981–82 ஆம் ஆண்டில். மருத்துவக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மருத்துவ மனைகளில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 14,889 ஆகும். 1982–83 ஆம் ஆண்டில் படுக்கைகளின் எண்ணிக்கை உயர்த்தப் படுவதற்கு அனுமதி வழங்கியதன் காரணமாக தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 14,896 ஆக உயர்ந்துள்ளது. கல்லூரி இணைந்த பல்வேறு மருத்துவ மனைகளில் 1982 ஏப்ரல் திங்கள் முதல் 1982 ஆம் ஆண்டு செம்டம்பர் திங்கள் வரை நாள்தோறும் சராசரி 16,706 அக நோயாளிகளுக்கும் 51913 புற நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது.

பாட முறைகள் :

பட்டப்படிப்புப் பாடமுறைகள் :

பின்வரும் மருத்துவப் பட்டப் படிப்புப் பாடமுறைகள் பல் மருத்துவப் பட்டப் படிப்புப் பாடமுறை ஆகியவை மருத்துவக் கல்லூரிகளிலும், சென்னை பல் மருத்துவக் கல்லூரியிலும், கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

1. எம். பி.பி.எஸ்., (M.B.B.S.)
2. பி. பார்மசி ; (B. Forme) மருந்தாக்கியல்.
3. பி.டி.எஸ். (B.D.S.)

பின்வரும் எட்டு மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பு பாடமுறை வகுப்புகள் நடத்தப்படுகின்றன

1982—83-ல் மொத்தம், 1,054 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

1. சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.
2. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை.
3. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை.
4. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு.
5. மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.
6. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.
7. கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி, கோயம்புத்தூர்.
8. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி.

சென்னை பல் மருத்துவக் கல்லூரியில் 46 மாணவர்களுக்கு (B.D.S) பி.டி. எஸ். படிப்பு கற்றுக் கொடுக்கப்படுகிறது.

சென்னை மருத்துவக் கல்லூரியில் 25 மாணவர்கள், மதுரை மருத்துவக் கல்லூரியில் 31 மாணவர்கள், மொத்தம் 56 மாணவர்களுக்கு மருந்தாக்கியல் (இளநிலை) கல்வி கற்பிக்கப் படுகிறது

பட்டமேற்படிப்பு :

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி நீங்கலாக ஏனைய மருத்துவக் கல்லூரிகள் அனைத்திலும் பின்வரும் பட்ட மேற் படிப்பு, பட்டய, பட்டக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

ட்ட மேற்படிப்புப் பட்டயக் கல்வி :

(1) மகப்பேறு—மகளிர் நோயியல் பட்டயம் (டி.ஜி.ஓ.) (D.G.O.)

(2) குழந்தைகள் நலவியல் தகுதிப் பட்டயம் (டி.சி.எச்). D.C.H.)

(3) மருத்துவக் கதிர் வீச்சியல் தகுதிப்பட்டயம் (டி.எம்.ஆர். டி). (D.M.R.D.)

(4) மருத்துவக் கதிர் வீச்சு மூலம் நோய் கண்டறிதலில்) தகுதிப்பட்டயம் (டி.எம்.ஆர்.டி.) (D.M.R.T.)

(5) டி.எல்.ஓ. (D.L.O.)

(6) கண் நோயியல் தகுதிப் பட்டயம் (டி.ஓ.)(D.O.)

(7) முடநீக்கியலில் தகுதிப் பட்டயம் (டி.ஆர்த்தோ) (D. Ortho)

(8) பால்வினை நோயியல் தகுதிப்பட்டயம் (டி.வி.) (D.V.)

(9) கண் நோயியல் தகுதிப்பட்டயம் (டி.சி பி.) (D.C.P.)

(10) உருக்கு நோய்—மார்பு நோயியல் தகுதிப் பட்டயம் (டி.டி.சி.டி.) (D.T.C.D.)

(11) டி.டி. (D.D.) தகுதிப்பட்டயம்.

(12) தகுதிப்பட்டயம் (டி.பி.எம்.) (D.P.M.)

(13) (டி.பி.எம்.) டிப்ளோமா பிஸகல் மெடிசின் (D. Phys. Md.)

(14) பொதுச் சுகாதாரத் தகுதிப் பட்டயம் (டி.பி.எச்) (D.P.H.)

(15) எல்.பி.எச். தகுதிப்பட்டயம் (L.P.H.)

(16, மயக்க மருந்தியல் தகுதிப்பட்டயம் (டி. ஏ.)(D.A.)

மொத்த இடங்கள் 459.

மருத்துவப்பட்ட மேற்படிப்பும் உயர் இறப்புக் கல்வியும் :

(1) எம்.டி. (பொது மருத்துவம்) (M.D. General Medicine)

(2) எம்.டி. நோய்க் குறியியல் (எம்.டி.பதாலஜி) (M.D. Pathology)

(3) எம். டி. உடலமைப்பியல் (எம்.டி. மைக்ரோபயலாஜி) (M.D. Microbiology)

(4) எம்.டி. நுண் உயிரியல் (எம்.டி.பிசியாலஜி). (M.D. Physiology)

(5) எம்.டி. மகப்பேறு மகளிர் நோயியல் எம்.டி. அப்ஸ்) டிரிக்ஸ் சைனகாலஜி). (MrD. Obstetrics) and Gynaecology)

(6) எம்.டி. தடுப்பு மருந்து (M.D. Social and Preventive Medicine)

(7) எம்.டி. மருந்தாக்கியல். (M.D. Pharmacology)

(8) எம்.டி. குற்றத் தடவியல் மருத்துவம்
(M.D. Forensic Medicine)

(9) எம்.டி. சிசு நோய் மருத்துவவியல்
(M.D. Psychatric Medicine)

(10) எம்.டி. மனநோயியல் (M.D. Paediatric Medicine)

(11) எம்.டி. மயக்க மருந்தியல் (M.D. Anaesthesiology)

(12) எம்.டி. கதிர்வீச்சு மூலம் நோய் கண்டறிதல்
(M.D. Radio Diagnosis)

(13) எம். டி. கதிர் வீச்சு மருத்துவம் (M.D. Radio Therapy)

(14) எம்.டி. தோல் நோயியல் (M.D. Dermatology)

(15) எம்.டி. உருக்குநோய்—மார்பு நோய் சிகிச்சை மருத்துவவியல் (M.D. Tubercclosis and Chest Diseases)

(16) எம்.டி. உயிர் வேதியல் (M.D. Bie-Chemistry)

(17) எம்.டி. பால்வினை நோயியல் (M.D. Venereology)

(18) எம். எஸ். பொது அறுவை மருத்துவம் (M.S. General Surgery)

(19) எம்.எஸ். உடற்கூற்றியல் (M.S. Anatomy)

(20) எம். எஸ். கண் நோயியல் (M.S. Opthalmology)

(21) எம். எஸ். காது; மூக்கு தொண்டை நோயியல்
(M.S. ENT)

(22) எம்.எஸ். முட நீக்கியல் (M.S. OrthaPaedics)

(23) எம். டி. எஸ். (M.D.S. periondotia Oral Surgery, Operative Surgery, Orthodontial Prosthetic Dentistry and Oral Pathology)

(24) எம். பார்மசி (M. Pharmacy)

மொத்த இடங்களின் எண்ணிக்கை 417.

1. எம். சிசு நோய் அறுவை மருத்துவம்
(M.Ch. Paediatric Surgery)

(2) எம்.சி.எச். பிளாஸ்டிக் அறுவை மருத்துவம்
(M.Ch. Plastic Surgery)

(3) எம்.சி.எச். நரம்பு அறுவை மருத்துவம் (M.Ch. Neuro Surgery)

(4) எம்.சி.எச். பிறப்புறுப்பு சிறு நீரக அறுவை மருத்துவம். (M.Ch. Genitic Urinary Surgery)

(5) எம்.சி.எச். மார்புப் பகுதி அறுவை மருத்துவம் (M.Ch. Thoracic Surgery)

(6) டி.எம். இதய நோயியல் (D.M. Cardiology)

(7) டி. எம். சிறு நீரகவியல் (D.M. Nephrology)

(8) டி. எம். வயிறு—குடல் நோயியல் (D.M. Gastro-Enterology)

மொத்த இடங்கள் 50.

பி.எச்.டி. படிப்பு :

இந்தப் படிப்பில் இத்தனை மாணவர்களைச் சேர்க்கலாம என்று அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை எதுவுமில்லை 1982—83-ல் பி எச்.டி. படிப்பில் சேருவதற்காக 10 மாணவர்கள் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

மருத்துவத் துணைப் பாடமுறைகள் :

மருந்தாக்கியல் தகுதிப் பட்டயம் (D. Pharmacy), கதிர் வீச்சியல் உதவியாளர் (Certified Radiology Assistant), இருட்டறை உதவியாளர் (Dark Room Assistant), ஆய்வுக்கூடப் பணியாளர் (Laboratary Technician) தரம்-II துப்புரவு ஆய்வுப் பணி (Sanitary Inspection), கண் சிகிச்சை உதவியாளர் (Optician), ஆய்வுக் கூட தொழில் நுட்பவியல், (Laboratary Technology) கண் நோயியல் உதவியாளர் (Ophthlamic Assistant), ஆர்த்தாப்டிஸ்ட் (Orthoptist), முடநீக்கியல் தொழில் நுட்பப் டணியாளர் (Ptosthetic and Orthopaestic) Technician), ஆகிய பாடமுறை வகுப்புக்கள், ஆகிய மருத்துவத் துணைப் பாடமுறை வகுப்புக்கள் சென்னை, மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிகளில் நடத்தப் படுக்கின்றனர்

செவிலியர் இயன் மருத்துவம் ஆகியவற்றில் பயிற்சியளித்தல் :

1982–83-ல் செவிலியர் பயிற்சி பெறுவதற்காக 690 மாணவர்களும் இயன் மருத்துவப் பயிற்சி பெறுவதற்காக 17 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

1982-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில், சென்னை புதுவாழ் வளிக்கும் செயற்கை உறுப்பு பொருத்தும் அரசு நிறுவனத்தில் இயன் மருத்துவ பட்டப் படிப்பு வகுப்புக்கள் தொடங்கப் பட்டன. இதில் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.

மருத்துவ மனைகளின் பணியாளர்களின் எண்ணிக்கை :

மருத்துவக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டிலுள்ள மருத்துவ மனைகளில், 1982–83ல், 14,710 பணியாளர்கள் பணியாற்றினர். இதில், 836 அதிகாரிகள் மருத்துவ அதிகாரிகள் ஆவர் 3168 பணியாளர்கள் செவிலியர் ஆவர்.

கல்லூரி பணியாளர்களின் எண்ணிக்கை :

கல்லூரிகளில் பணியாற்றுபவர்களின் மொத்த எண்ணிக்கை 4,169 ஆகும். இதில், 1,722 மருத்துவ அதிகாரிகள் 679 மருத்துவத் துணைப் பணி சார்ந்த பணியாளர்கள் ஆகியோர் அடங்குவர். எம் பி. பி. எஸ். முதல் வருடப் படிப்பு விட்டு விடப்பட்டதால், மருத்துவக் கல்லூரிகளின் பணியாளர் எண்ணிக்கை குறைந்துவிட்டன.

/

திட்டப் பணி :

1982–83-ல், 39 திட்டப் பணிகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மருத்துவம் மற்றும் குடும்ப நலம்

வருவாய்த்துறை மாவட்டங்களைப் போன்று மாநிலம் (சென்னை மாவட்டம் தவிர) பதினைந்து மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் மருத்துவம் மற்றும் குடும்பநலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனாலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் சிறிது மாறுபட்ட நிலையில் குடும்பநலத் திட்டங்கள செயல்படுத்தப்படுகின்றன.

மாவட்ட அளவில் மருத்துவத் துறைக்கு மாவட்ட மருத்துவ அலுவலர் பொறுப்பானவராகவும், மாவட்டத்தில் குடும்பநலம் மற்றும் தாய்சேய் நலத்திட்டத்திற்கு மாவட்டக் குடும்பநல தாய் சேய் நல அலுவலர் பொறுப்பாகவும் உள்ளனர். தொழிலாளர் மாநில ஈட்டுறுதி மருத்துவ மனைகள் குடிமுறை அறுவை மருத்துவ அலுவலர் நிலையில் தலைமைப் பொறுப்பு ஏற்கப்பட்டு வருகின்றன. மண்டல நிர்வாக மருத்துவ அலுவலரின் கட்டுப்பாட்டில் புறநகர் பிரிவிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் இயக்கி வருகின்றன.

விரிவு படுத்தப்பட்ட மற்றும் சிறப்பு மருத்துவ வசதிகளை மாவட்ட தாலூகா மற்றும் தாலூகா அல்லாத மருத்துவ மனைகளிலும், மருந்தகங்களிலும் மேம்படுத்துவதே முக்கிய நோக்கமாகும். சிறப்பு மருத்துவ வசதிகளாவன: மகப்பேறு மனைகளில் நோய் இயல், கண்நோய் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை இயல், மேகநோய் இயல், முடவியல் அறுவை சிகிச்சை, மயக்கமுறை மருத்துவம், சேய் நலம், பல் மருத்துவ பிரிவு, நோயாளர் வண்டி, நோய்க்குறியியல், சோதனைக் கூடம், தொழுநோய், சிறப்புப் பிரிவு, உருக்கு நோய் மற்றும் பல்வேறு சிகிச்சைத் துறைகளில் முன்னேற்றங்கள்.

தொழுநோய் கட்டுப்பாடு திட்டம் :

1982–83ஆம் ஆண்டில் சிகிச்சைப் பணியில் செய்யப்பட்ட சாதனை விபரம் கீழே தரப்படுகிறது;—

1.	நடப்பு ஆண்டில் உள்ள தெரிந்த நோயாளிகள்.	67,152

2.	சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை.	57,380
3.	நோயினின்றும் குணமடைந்தவர்கள்	27,413
4.	கணக்கெடுக்கப்பட்ட மக்கள் தொகை	1,64,52,959
5.	பரிசோதனைக் குட்படுத்தப்பட்ட மக்கள் தொகை. ..	1,33,90,667
6.	கண்டுபிடிக்கப்பட்ட புதிய தொழு நோயாளிகளின் எண்ணிக்கை. ..	31,330

மறுவாழ்வில்லங்கள் மீதான விளக்க அறிக்கை :

தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் 10 இடங்களில் மறுவாழ்வு இல்லங்கள் அமைத்துள்ளது.

1. அரசினர் மறுவாழ்வு இல்லம், பரனூர், செங்கை மாவட்டம்.

2. அரசினர் மறுவாழ்வு இல்லம், உளுந்தூர்ப்பேட்டை, தென் ஆற்காடு மாவட்டம்.

3. அரசினர் மறுவாழ்வு இல்லம், பர்கூர், தருமபுரி மாவட்டம்.

4. அரசினர் மறுவாழ்வு இல்லம், புதுக்கோட்டை.

5. அரசினர் மறுவாழ்வு இல்லம், மனையேறிப்பட்டி, தஞ்சை மாவட்டம்.

6. அரசினர் மறுவாழ்வு இல்லம், யா. புதுப்பட்டி, மதுரை மாவட்டம்.

7. அரசினர் மறுவாழ்வு இல்லம், மல்லவாடி, வட ஆற்காடு மாவட்டம்.

8. அரசினர் மறுவாழ்வு இல்லம், விண்ணப்பள்ளி, பெரியார் மாவட்டம்.

9. அரசினர் மறுவாழ்வு இல்லம், தேவியாகுறிச்சி, சேலம் மாவட்டம்.

10. அரசினர் மறுவாழ்வு இல்லம், செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம்.

திட்டத்தின் முக்கிய நோக்கம்:

இத்திட்டத்தின் முக்கியநோக்கம், தொழுநோயாளிகள் நோயிலிருந்து விடுபடவும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது மாகும். அவர்கள் மறுவாழ்வில்லங்களை விட்டு வெளியேறும்போது பிச்சையெடுக்காமல் தாமாகவே வாழ வழி செய்வதுமாகும்.

காசநோய்க் கட்டுப்பாடு இயக்கம் :

1963-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் காசநோய்க் கட்டுப்பாடு இயக்கம் செயல்பட்டு வருகிறது. இவ்வியக்கத்தின் கீழ் தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட காசநோய் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவ மனைகள், மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகிவற்றில் காசநோயினை ஆய்வுகள் மூலம் கண்டறியவும் காசநோய்க்கான மருந்துகள் வழங்கவும் இலவச வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பி. ஸி. ஜி. (காசநோய்த் தடுப்பு) இயக்கம் காசநோய்க் கட்டுப்பாடு இயக்கத்தின் ஓர் அம்சமாகும். தமிழ்நாட்டில் 23 பி.ஸி.ஜீ. குழுக்கள் உள்ளன. இக்குழுவினர் வீடு வீடாகச் சென்று சிறுவர்களுக்கு பி.ஸி.ஜி. அளிக்கிறார்கள். விரைவில் இக்குழுக்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள சுகாதார ஊழியர்களுக்கு பி. சி. ஜி. பயிற்சி அளிப்பதற்கு அந்நிலையங்களுக்கு அனுப்பப்படுவார்கள். பல நோய்த் தடுப்பு பணிகளும் ஒன்றாக பி. வி ஜி. யும் சுகாதார ஊழியர்களால் அளிக்கப்படும். சென்னையில் உள்ள பி.ஸி.ஜீ. கண்காணிப்புக் குழு மாவட்டங்களுக்குச் சென்று பி.ஸி.ஜி. தடுப்பு ஊசி திட்டத்தைக் கண்காணிக்கின்றது.

தமிழ்நாட்டில் இரண்டு காசநோய்த் தடுப்பு விளம்பரக் குழுக்கள் பணியாற்றி வருகின்றன. பொதுக் கூட்டங்கள் மற்றும் சினிமாப்படக் காட்சிகள் முதலியன மூலம் இக்குழுக்கள் காசநோய்த் தடுப்பு விளம்பரப் பணியாற்றுகின்றன.

1982–83-ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து ஒரு மாவட்ட காசநோய் அதிகாரியும், இரண்டு சிகிச்சை அமைப்பாளர்களும், ஒரு புள்ளி விவர உதவியாளரும், ஒரு எக்ஸ்-கதிர் பணியாளரும் ஒரு ஆய்வகப் பணியாளரும் பெங்களூரிலுள்ள தேசிய காசநோய் தடுப்பு நிலையத்திற்கு பயிற்சி பெற அனுப்பப்பட்டனர்.

காசநோய் தடுப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் கீழ்க்காணும் பணிகள் 1982–83-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டன :

1. புதிதாக எக்ஸ்-ரே (மார்பகம்) எடுக்கப்பட்டவர்கள்.	3,04,845
2. புதிதாக சளி பரிசோதனை செய்யப்பட்டவர்கள்.	2,32,100
3. (அ) இவற்றின் மூலம் புதிதாகக் கண்டறியப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட காசநோயாளிகள்.	88,820
(ஆ) அவர்களுள் சளியில் நோய்க் கிருமிகள் (பிறருக்கு நோயைத் தொற்றும் நிலையில்) கொண்டவர்கள்.	18,121
4. இந்த ஆண்டில் முறையாக சிகிச்சை முடியப் பெற்றவர்கள்.	12,525
5. பி. சி. ஜி. தடுப்பு ஊசி அளிக்கப்பட்டவர்கள்.	11,98,472

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் :

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டமான தொழிலாளர் நலம் மற்றும் வேலை வாய்ப்பு மத்திய அமைச்சரவையில் நிர்வாக வரம்பிற்குட்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி இணையத்தின் தன்னாட்சியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி இணையத்தில் வரையறுக்கப்பட்ட கட்டணத்தை தொழிலாளர்களும், வேலை கொடுப்பவர்கள் அளிக்கும் தொகையிலும் நிதி கிடைக்கப் பெற்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் இயங்குகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ வசதி பெறுவதற்கான நிர்வாகம் சட்டப்படி மாநில அரசின் பொறுப்பில் அமைந்துள்ளது.

20 மற்றும் 20-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலையில் இத்திட்டம் செயல் பட்டு வருகிறது. 10—ம் அதற்கு மேற்பட்ட தொழிலாளர் கள் உள்ள மின் சக்தி பயன்படுத்தப்படும் தொழிற்சாலை யும் இத்திட்டத்தில் அடங்கும். மேலும், புதிதாக 20-ம் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் சிற்றுண்டி சாலை, உணவு விடுதி மற்றும் திரைப்பட அரங்கு கள் ஆகியவைகள் இதில் கொண்டு வரப்பட்டுள்ளது. மாதம் ரூ. 1,000க்கு மேற்படாமல் சம்பளம் வாங்கும் தொழிலாளர்களுக்கு இச்சலுகை உண்டு.

குடும்ப நலம்.

தமிழ் நாட்டில், முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில், அதாவது 1956 ஆம் ஆண்டு தொடங்கி, குடும்ப நலத் திட்ட மானது தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டது. குடும்ப நலத் திட்டமானது முழுக்க முழுக்க ஒரு தன்னிச்சை திட்டமாக எந்த அளவிலும் எந்த நிலையிலும், எந்த விதமான கட்டாயமோ, வற்புறுத்தலோ இன்றி செயல்படுத்தப்படுகிறது.

(1) குடும்ப நல அறுவை சிகிச்சைத் திட்டம் :

1982–83 ஆம் ஆண்டிற்கு 2,92,000 குடும்ப நல அறுவை சிகிச்சைகளை இலக்காக இந்திய அரசு நிர்ணயித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் அடைந்த சாதனை விவரம் கீழே தரப் பட்டுள்ளது :—

இலக்கு.	சாதனை (தற்காலிகமானது).	சாதனை (விழுக்காடு).
(1)	(2)	(3)
2,92,000	2,72,940	92.7

1982–83 ஆம் ஆண்டு 72,379 நவீன முறையிலான பெண் அறுவை சிகிச்சைகள் (Laproscobic sterilisation) செய்யப் பட்டது.

கருத்தடை வளையம் :

இத்திட்டத்தின் கீழ் 1982—83 ஆம் ஆண்டிற்கான இலக்கும் சாதனையும் கீழ் குறிக்கப்பட்டுள்ளது :—

இலக்கு.	சாதனை (தற்காலிகமானது).	சாதனை (விழுக்காடு).
(1)	(2)	(3)
89,000	36,884	41.4

மரபு வழியிலான கருத்தடை சாதனங்கள் விநியோகம் :

நிரோத், ஜெல்லி/கிரீம், நுரை மாத்திரைகள் மற்றும் டயாபாரம் ஆகியவை மரபு வழியிலான கருத்தடை சாதனங்கள் ஆகும். தமிழ் நாட்டில் நிரோத் வழக்கத்தில் உள்ளது. மற்ற சாதனங்கள் இந்திய அரசிடமிருந்து வரப் பெறவில்லை. இந்த முறையின் கீழ் சாதனை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

இலக்கு.	சாதனை (தற்காலிகமானது)	சாதனை (விழுக்காடு).
(1)	(2)	(3)
1,75,000	41,892	23.9

வாய்வழி உட்கொள்ளும் மாத்திரைத் திட்டம் :

வாய் வழி மாத்திரைகள், ஆரம்ப நல நிலையங்கள், நகர குடும்ப நல நிலையங்கள் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்கள் மூலமாக, குழந்தை பிறப்பை தடுக்கும் நிமித்தம் விநியோகிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1982—83 ஆம் ஆண்டு அடைந்துள்ள சாதனை கீழே தரப்பட்டுள்ளது :—

இலக்கு.	சாதனை (தற்காலிகமானது).	சாதனை (விழுக்காடு).
(1)	(2)	(3)
32,000	3,514	11.0

சட்ட ரீதியான கருக் கலைப்புத் திட்டம் :

கருக்கலைப்புச் சட்டம் 1971 ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்டது. இத்திட்டம் 1972 ஆம் ஆண்டு தொடங்கி இந்தியாவில் செயல்படுத்தப் பெறுகிறது. கருக் கலைப்பானது அடிப்படையாக ஒரு உடல் நலம் காக்கும் திட்டமாகும். இதனால் சட்ட ரீதியில் அல்லாத கருக் கலைப்பினால் மகளிரிடையே உண்டாகும் நோய்களையும், இறப்புகளையும் குறைக்க ஏதுவாகிறது. இந்தத் திட்டத்துடன் குடும்ப நல முறைகளை இணைப்பதன் மூலம், குழந்தை பிறப்புகளுக்கிடையே இடைவெளி விடுதல் மற்றும் சிறு குடும்ப நல நெறி அடைதல் ஆகியவை எய்த முடிகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற மருத்துவர்களால் சாதன வசதிகள் மிக்க, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிலையங்களில் கருக்கலைப்பு செய்யப்படுகிறது. 1982–83 ஆம் ஆண்டு முடிவில் 196 கருக்கலைப்பு நிலையங்கள் தமிழ் நாட்டில் உள்ளது. 1982–83 ஆம் ஆண்டு 54,263 மகளிருக்கு கருக்கலைப்புகள் செய்யப்பட்டது. அவற்றில் 44,683 மகளிர் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்டனர். 4,647 பேர் கருத்தடை வளையம் பொருத்திக்கொண்டனர்.

மன நலம்.

சென்னை மனநல மருத்துவ நிறுவனம், தமிழ் நாட்டிலுள்ள ஒரே ஒரு மன நல மருத்துவமனையாகும். இதில் 1,800 படுக்கைகள் உள்ளன. சிறைக் கைதிகளுக்கென்று தனியாக இரு பிரிவுகள் உள்ளன. இவை ஆடவருக்கு ஒன்றும், மகளிருக்கு ஒன்றுமாக உள்ளன. இதில்—

(அ) விசாரணை செய்யப்படுவதற்கு இயலாதவரெனக் கருதப்படுபவர்கள் ;

(ஆ) குற்றம் செய்த போது மனநலமின்றி இருந்தார் என்ற அடிப்படையில் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் ;

(இ) சிறைத் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் போது இயல்பிற்கு மாறாக நடந்துகொள்பவர்கள் ;

(ஈ) ஏற்கெனவே மரண தண்டனை பெற்று, தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன் உள்ளமுடைந்தவர்கள் ஆகியோர் சிகிச்சைக்காக இப்பிரிவுகளில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். மாஜிஸ்டிரேட் அல்லது காவல் துறை ஆணையர் அனுப்பும் குழந்தைகள் மனநல மருத்துவ நிறுவனத்தில் சேர்த்துக்கொள் ளப்படுகின்றனர்.

புறநோயாளிப் பிரிவு, புதிய கட்டிடத்தில் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை செயற்படுகிறது. எக்ஸ்ரே, இதயத் துடிப்பை மின்னியல் முறையில் அளக்கும் வரைபடக் கருவி (E.C.G.), வேதியல், நரம்பியல், மன நிலை ஆய்வு ஆகிய நவீன வசதிகள் இங்கு உள்ளன. புற நோயாளிகள் பிரிவில் ஒரு மருந்தகம் செயற்படுகிறது. இது நோயாளிகளுக்குத் தேவைப்படும் மருந்துகளை வழங்குகிறது. இங்கு சிகிச்சை அளிக்க 8 மருத்துவ ஆலோசகர்கள் உள்ளனர். அவர்களுக்கு உதவியாக உதவி அறுவை மருத்துவர்கள் உள்ளனர். நோயாளி களை மருத்துவ ஆலோசகர் பரிசோதித்த பின்னர், உதவி அறுவை மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கின்றனர். ஒவ்வொரு நாளும் மருத்துவச் சிகிச்சைப் பிரிவின் உதவி அறுவை மருத்து வர்கள் புற நோயாளிகள் பிரிவுக்கு வந்திருந்து, நோயாளி களுக்குச் சிகிச்சையளிக்கின்றனர். பழைய நோயாளிகள் குறிப் பிட்ட காலத்திற்கொருமுறை சோதிக்கப்படுகின்றனர். அவசிய மேற்பட்டால், மேற் கொண்டும் சிகிச்சை அளிக்கப்படுவதற்கும், ஆலோசனை நல்குவதற்கும் சம்பந்தப்பட்ட மருத்துவ ஆலோச கரிடம் காட்டப்படுகின்றனர். இவ்வாண்டில் பின்வரும் சிறப்புச் சிகிச்சைப் பிரிவுகள் செயற் பட்டன :

(1) நரம்பியல் உளவியல் சார்ந்த சிகிச்சைப் பிரிவு

(2) சிறார் மன்நல ஆலோசனைப் பிரிவு

(3) முதியோர் மனநல சிகிச்சைப் பிரிவு

(4) வாதசன்னி நோய் சிகிச்சைப் பிரிவு

(5) இளைஞர் சிகிச்சைப் பிரிவு

(6) நரம்பியல் நோய் சிகிச்சைப் பிரிவு.

அக நோயாளிகளுக்கான சிகிச்சைப் பணிகள் :

இந்த மன நல மருத்துவ நிறுவனத்தின் நோயாளிகள் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 1,800 ஆகும். மருத்துவமனையின் முக்கியப் பகுதியில் ஆண் களுக்கும், பெண்களுக்கும், தனித்தனிப் பிரிவுகள் உள்ளன. ஆண்களுக்கு 12 பிரிவுகளும், பெண்களுக்கு 6 பிரிவுகளும் உள் ளன. ஆண்கள் பிரிவுகளில் ஒரு பிரிவும், பெண்கள் பிரிவுகளில் ஒரு பிரிவும் நோயாளிகளை மருத்துவமனையில் சேர்த்துக் கொள்ளுவதற்குரிய பிரிவாக உள்ளன. ஆண்கள் பிரிவுகளிலும், பெண்கள் பிரிவுகளிலும் உள்ள தனி வார்டுகளில் குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். தண்டனை பெற்றிருக்கும் அல்லது விசாரணைக் கைதிகளாக இருக்கும் அல்லது மரண தண்டனை பெற்று தண்டனை இன்னும் நிறைவேற்றப்படாம லிருக்கும் மன நோயாளிகளுக்குத் தனிப் பிரிவுகள் (ஆண்களுக்கு ஒன்றும் பெண்களுக்கு ஒன்றும்) உள்ளன. இசிவு நோயாளிகள் காச நோயாளிகள், தொழு நோயாளிகள், ஆகியோருக்குத் தனிப் பிரிவுகள் உள்ளன. அபாயகரமான நோய் பற்றிய நோயாளிகள் என்ற பட்டியலில் இடம் பெற்றிருக்கும் நோயாளி களுக்குத் தனி வார்டு உள்ளது.

1982–83 ஆம் ஆண்டில் சிகிச்சைக்கு வந்த புற நோயாளிகளின் எண்ணிக்கை —

புதிய நோயாளிகள் —3,028

பழைய நோயாளிகள் — 1,10,469

1982–83 ஆம் ஆண்டில் சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவ மனையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை—

ஆண்கள்—1,282

பெண்கள்—705

மொத்தம் —1,987

1982—83 ஆம் ஆண்டில் சிறப்பு சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற வந்த நோயாளிகளின் எண்ணிக்கை—

	புதிய நோயாளிகள்.	பழைய நோயாளிகள்
	(1)	(2)
நரம்பியல்-உளவியல் சார்ந்த சிகிச்சைப் பிரிவு.	5	153
வாத சன்னி நோய் சிகிச்சைப் பிரிவு	71	8,937
இளைஞர் சிகிச்சைப் பிரிவு	157	4,131
சிறார் மனநல ஆலோசனைப் பிரிவு	162	3,507
நரம்பியல் நோய் சிகிச்சைப் பிரிவு	36	1,472
முதியோர் மனநல சிகிச்சைப் பிரிவு	27	914

பிறப்பு இறப்புப் புள்ளி விபரம்.

1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டு மக்கள் தொகை 48,408,077 மற்றும் தமிழ் நாட்டின் பரப்பளவு 130,059 சதுர கிலோ மீட்டர். மாநிலத்தின் 1982 ஆண்டுக்கான ஆண்டு இடை மதிப்பீட்டு மக்கள் தொகை 49,369,000 ஆகும்.

1969 ஆம் ஆண்டு பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் (1969 ஆண்டின் மத்திய சட்டம் XVIII) மற்றும் அதன் கீழ் வகுக்கப் பட்ட 1977 ஆம் ஆண்டு தமிழ் நாடு பிறப்பு-இறப்புப் பதிவு விதிகள் ஆகியவற்றின் கீழ், மாநிலம் முழுவதும் பிறப்பு இறப்புப் பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மக்கள் நல் வாழ்வு-தடுப்பு மருந்து இயக்குநர், மாநிலத்தின் பிறப்பு இறப்புப் பதிவைச் சரிபார்க்கவும், ஒருங்கிணைக்கவும், மேற் பார்வையிடவும், திறமிக்க பதிவு முறையை ஏற்படுத்தவும் சட்டத்தின் கீழ் தலைமைப் பிறப்பு-இறப்புப் பதிவாளர் என பதவி குறிக்கப்பட்டுள்ளார்.

ஊராட்சிகளுக்கு கிராம நிர்வாக அலுவலர்கள் பிறப்பு இறப்பு பதிவாளர்களாகவும், பேரூராட்சிகளுக்கு செயல் அலுவலர்கள்/நல்வாழ்வு உதவியாளர்கள்/துப்புரவு ஆய்வாளர்கள் பிறப்பு இறப்புப் பதிவாளர்களாகவும் உள்ளனர். நகராட்சிகளின் ஒவ்வொரு பதிவுப் பிரிவுக்கும் கன்னியாகுமரி மாவட்டம், மற்றும் திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகளுக்கும் நல்வாழ்வு உதவியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். பிறப்புகளையும், இறப்புகளையும் பதிவு செய்ய அறிவிப்பதற்கான காலக்கெடு முறையே 14 நாட்கள் மற்றும் 7 நாட்கள் ஆகும்.

மாதிரிப் பதிவுத் திட்டம் :

மாநில அளவில் நம்பத் தகுந்த பிறப்பு இறப்பு வீதங்களைக் கணக்கிட 1–7–1968 முதல் கிராமப் பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 150 பதிவுப் பிரிவுகளில் மாதிரிப் பதிவுத் திட்டம் நடைமுறையில் உளளது. இத்திட்டம் சாதாரணப் பதிவு முறையில் உள்ள இடை வெளியை அறியவும் உதவியாக உள்ளது. மாதிரியை அங்கிங்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், தொடர்ந்து பிறப்பு இறப்புப் பதிவு பகுதி நேரக் கணக்கெடுப்பாளர்களால் செய்யப்பட்டு, மாத விவர அறிக்கைகள் நேரடியாக மாநில தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் சனவரி முதல் ஜூன், ஜூலை முதல் டிசம்பர் மாத அரையாண்டு காலக் கணக்கெடுப்பு முழு நேரக் கணக்குத் தொகுப்பாளர்களால் எடுக்கப்பட்டு கணக்கெடுப்பாளர்கள் மற்றும் கணக்குத் தொகுப்பாளர்களின் புள்ளி விவரம் ஒப்பு நோக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டு சரியான பிறப்பு இறப்புக் கணக்கு பெறப்படுகிறது. இவ்வாறு மாநிலத்திற்கான பிறப்பு இறப்பு வீதம் மதிப்பிடப்படுகிறது. 1982 ஆண்டுக்குக் கணக்கிடப்பட்ட பிறப்பு இறப்பு வீதங்கள் வருமாறு :—

1982 (ஊரகப் பகுதிகள்).

பிறப்பு வீதம் : (1,000 மக்கள் தொகை மதிப்பீட்டுக்கு)	27.1
இறப்பு வீதம் : (1000 மக்கள் தொகை மதிப்பீட்டுக்கு)	11.7
சிசு மரண வீதம் : (உயிருடன் பிறந்த 1,000 பிறப்புகளில்)	80.5

அத்தியாயம் 10.

உள் துறை.

அத்தியாயம் 10

உள்துறை

இட வசதிக் கட்டுப்பாடு.

தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 30—9—1960 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. இச்சட்டம், 1973 ஆம் ஆண்டு 23 ஆம் சட்டத்தின் மூலம் மேலும் திருத்தப்பட்டது. குடியிருப்பிற்கு உரிய, குடியிருப்பிற்கு அல்லாத கட்டிடங்களை வாடகைக்கு விடுவதை முறைப்படுத்தல், வாடகையினைக் கட்டுப்படுத்தல், குடியிருப்போரை நியாயமான காரணமின்றி வெளியேற்றுவதைத் தடுத்தல் முதலியவை இச்சட்டத்தின் நோக்கங்களாகும். சென்னை மாநகரில், இடவசதிக் கட்டுப்பாடு அலுவலர், தற்போது சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவார்; இச் சட்டத்தின் செயல்வரம்பிற்குள் வரும் கட்டிடங்கள் காலியாக இருப்பது குறித்த அறிக்கையினைப் பெற்று, இக் கட்டிடங்களை அதன் உரிமையாளர்கள் குடியிருக்க அல்லது பழுதுபார்க்க அல்லது இடித்துவிடப்பட சட்டத்தின் ஆளுகையிலிருந்து விடுவிப்பது குறித்துப் பரிசீலிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளார். மேற்சொன்ன பொருள்பற்றி சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் பிறப்பிக்கும் ஆணைக்கு எதிராக முறையீடு ஏதும் செய்ய விரும்பினால், அரசே மேல்முறையீட்டு அதிகார மன்றமாகும். இடவசதிக் கட்டுப்பாட்டு அதிகாரி பதவி எடுக்கப்பட்ட பின்னர் 1—4—1979 ஆம் நாளிலிருந்து இடவசதிக் கட்டுப்பாட்டு அதிகாரியின் பணியும் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் ஒருவகை செய்யப்பட்ட கட்டிடங்கள் குறித்த விவரங்கள் வருமாறு :—

1. அறிவிக்கப்பட்ட இல்லங்களின் எண்ணிக்கை	71
2. ஒதுக்கீடு செய்யப்பட்ட இல்லங்களின் எண்ணிக்கை	57
3. இடவசதிக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப் பட்ட இல்லங்களின் எண்ணிக்கை	132
4. அரசின் குடியிருப்பின் கீழ் புதிதாக எடுத்துக் கொள்ளப்பட்ட இல்லங்களின் எண்ணிக்கை ..	இல்லை.
5. இவ்வாண்டு இறுதியில் அரசின் குடியிருப்பின் கீழ் இருந்து வரும் இல்லங்களின் எண்ணிக்கை..	707

1982–83 ஆம் ஆண்டில், 373 அரசு அதிகாரிகள், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலலகத்தில் (இடவசதி கட்டுப்பாட்டுப் பிரிவு) இடவசதி கோரி தங்கள் பெயரைப் பதிவு செய்தனர். இடவசதித் துணை வட்டாட்சியாளரும், இடவசதி ஆய்வாளர்களும், அவர்களது வாளாயமான பணியான கட்டிடங்களைப் பார்வையிட்டு விசாரணை நடத்தும் பணியுடன், காலியான கட்டிடங்கள் குறித்து தகவல் தெரிவிக்காதிருப்பின் அதனைக் கண்டுபிடிக்கும் பணியும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

1982–83 ஆம் ஆண்டில் 132 கட்டிடங்கள் பல்வேறு காரணங்களை முன்னிட்டு விடுவிக்கப்பட்டன. இந்த ஆண்டில் 71 குடியிருப்பு இல்லங்களும், 4 குடியிருப்பு அல்லாத இல்லங்களும் ஒதுக்கீடு செய்வதற்கு தயாராக இருந்தன. இவற்றில் 57 இல்லங்களும் 2 குடியிருப்பு அல்லாத கட்டிடங்களும் அரசு அதிகாரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. இந்த ஆண்டில் ஒரே ஒரு இல்லத்திற்கு மட்டுமே இச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

திரைப்படங்கள்

திரைப்படம் காட்டுவதற்குச் சான்றிதழ்கள் அளித்தல், திரைப்படக் கருவிகள் மூலம் திரைப்படம் காட்டுவதை முறைப்படுத்தல் ஆகியவற்றிற்கு வகை செய்வதற்காக 1952 ஆம் ஆண்டு திரைப்படச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 37/1952) மத்திய அரசு இயற்றியது. தமிழ் நாடு அரசும் 1955 ஆம் ஆண்டு தமிழ் நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டத்தை (சட்டம் எண் 9/1955) இயற்றியது. திரைப்பட அரங்குகளில் படங்களைக் காட்டுவதற்காகத் தனியாருக்கு உரிமங்கள் வழங்க இச்சட்டம் வகை செய்கிறது. இச்சட்டத்தின் விதித்துறைகளின் படி மாவட்டங்களில் (வெளியூர்களில்) மாவட்ட ஆட்சித் தலைவரே உரிமம் வழங்கும் அதிகாரியாவார். சென்னை மாநகரைப் பொறுத்த வரையில் காவல் துறை கமிஷனரே உரிமம் வழங்கும் அதிகாரியாவார். திரைப்படச் சட்டத்தின்படி சென்னை மாவட்ட ஆட்சியர் உரிமம் வழங்கும் அதிகாரி அல்லர். திரைப்படக் காட்சி உரிமம் வழங்குவதில் இரண்டு

தெளிவான நிலைகள் உள்ளன, அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. மறுப்பின்மைச் சான்றிதழ் வழங்குதல்.
2. 'சி' படிவ உரிமம் வழங்குதல்.

மறுப்பின்மைச் சான்றிதழ், 'சி' படிவ உரிமங்கள்.

இம்மாநிலத்தில் 1982-83 ஆம் ஆண்டில் நிலையான, பகுதி நிலையத் தற்காலிக திரை அரங்குகள் கட்டுவதற்கு 376 மறுப்பின்மை சான்றிதழ்களும் 277 'சி' படிவ உரிமங்களும் வழங்கப்பட்டன.

உரிமம் வழங்கும் அதிகாரியின் அதிகாரங்கள்.

இச்சட்டத்தின் விதித்துறைகளுக்கு இணங்காவிடினும், அவற்றை மீறினாலும் உரிமங்களை ரத்து செய்யவோ அல்லது தற்காலிகமாக ரத்து செய்யவோ உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு ; மேலும், சம்பந்தப்பட்ட தரப்பினர் கேட்டுக் கொள்வதன் பேரில் ஒருவர் பெயரிலுள்ள உரிமத்தை மற்றொருவர் பெயருக்கு மாற்றுவதற்கும் இவர்களுக்கு அதிகாரமுண்டு.

மேல்முறையீட்டு அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்கள்.

நில நிருவாக ஆணையாளர் மேல்முறையீட்டு அதிகாரியாக இருக்க சட்டமும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் அதிகாரமளிக்கின்றன. மறுப்பின்மைச் சான்றிதழ் அல்லது 'சி' படிவ உரிமம் வழங்குவதால் அல்லது மறுக்கப்படுவதனால் அல்லது உரிமத்தைப் புதுப்பிப்பதால் அல்லது உரிமத்தினை மாற்றுவதால் பாதிக்கப்படும் எவரும் அந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நில நிருவாக ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். தாமதத்திற்குப் போதிய காரணங்கள் எடுத்துரைக்கப்பட்டால், வரையறுக்கப்பட்ட 30 நாட்களுக்கு மேல் 2 மாத காலதாமதத்திற்கு நில நிருவாக ஆணையாளர் அனுமதி வழங்கலாம். சம்பந்தப்பட்ட தரப்பினர் தாமாகவோ அல்லது தம்முடைய வழக்குரைஞர் மூலமாகவோ எடுத்துரைக்கும் கருத்துக்களை நில நிருவாக ஆணையாளர்

நேரடியாகவே கேட்டறிந்து மேல்முறையீடுகளை முடிவு செய்கிறார். மேல்முறையீடு முடிவு செய்யப்படும் வரையில் இடைக்காலத்தடை உத்தரவு பிறப்பிக்கவும் நில நிருவாக ஆணையாளருக்கு அதிகாரமுண்டு. நில நிருவாக ஆணையாளரிடம் முறையீடு செய்து கொள்வதற்கான கட்டணம் ரூ. 300 ஆகும். மேல்முறையீட்டு அதிகாரியின் ஆணையினால் பாதிக்கப்பட்டவர்கள் அரசுக்கு மறு விசாரணை மனு செய்து கொள்ளலாம்.

மாநில அரசின் அதிகாரங்கள்.

மாநில அரசு, விதிகள் இயற்றும் அதிகார மன்றமாகும். இச் சட்டத்தின் விதித்துறைகளின்கீழ் அல்லது எந்த ஒரு விதிகளின் கீழ் விலக்களிக்கும் அதிகாரம் அரசுக்கே உண்டு. மேல்முறையீட்டு அதிகாரியின் முடிவை எதிர்த்து 1955 ஆம் ஆண்டு தமிழ் நாடு திரைப்படங்கள் (ஒழுங்கு படுத்துதல்) சட்டம் பிரிவு 5(7) மற்றும் 9(எ)-ல் செய்து கொள்ளப்படும் சீராய்வு மனுக்களை விசாரணைக்கு அனுமதிக்கும் அதிகாரம் அரசுக்கு உண்டு.

திரைப்பட அரங்குகளின் வகை.

1. நிலையான திரைப்பட அரங்கு.
2. பகுதி நிலையத் திரைப்பட அரங்கு.
3. தற்காலிக திரைப்பட அரங்கு.

'' பகுதி நிலையத் திரையரங்கு '' என்பது 1970 ஆம் ஆண்டு அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதுவகை திரையரங்காகும். ஏனைய எல்லாக் காரியங்களுக்கும் இவை நிலையான திரையரங்கு போலவே கருதப்படுன்றன. (5 முதல் 7 ஆண்டு கால முடிவில் இது நிலையான திரையரங்கமாக மாற்றப்படக்கூடும்). நிலையான திரையரங்குகளுக்கு பொருந்தும் விதிகள், பகுதி நிலையத் திரையரங்குகளுக்கும் பொருந்தும்.

மேற்சொன்ன மூன்று வகைகளைத் தவிர, திறந்த வெளித் திரையரங்குகளும் உள்ளன. செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், சோமங்கலம் கிராமத்தில் 1976 ஆம் ஆண்டில் திறந்தவெளி திரையரங்கம் ஒன்று செயல்படத் தொடங்கியது.

31—3—1983 அன்றுள்ளவாறு, மாநிலத்திலுள்ள திரைப்பட அரங்குகளின் எண்ணிக்கை வருமாறு :—

1.	நிலையான திரையரங்குகள்	984
2.	பகுதி நிலையத் திரையரங்குகள்	160
3.	திறந்தவெளி திரையரங்குகள்	1
4.	தற்காலிக திரையரங்குகள்	880
		2,025

உரிமையியல் நீதி மன்றங்கள்.

சென்னை உயர்நீதிமன்றம் (மேல் முறையீடு).

பின்வரும் வகையிலான வழக்குகளைத் தவிர பிறவகை வழக்குகள் அதிகரித்துள்ளன:—

(1) வரி வழக்குகள்

(2) மண உரிமை வழக்குகள்

(3) ரிட் மனுக்கள்

(4) உச்ச நீதி மன்றம் செல்ல அனுமதி கோரும் மனுக்கள்

(5) அவமதிப்பு வழக்கு தொடர்பான மேல்முறையீடுகள்.

(6) வாணிகக் குறி வழக்குத் தொடர்பான இரண்டாம் மேல் முறையீடுகள்.

முதல் மேல் முறையீடுகள், ரிட் மேல் முறையீடுகள், உரிமையியல் மறு விசாரணை மனுக்கள், வரி வழக்கு குறித்த மனுக்கள், உரிமையியல் பல்வகை மனுக்கள் ஆகியவகையிலான வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்றம் (முதலேற்பு வழக்குகள்).

உரிமையியல் வழக்குகள், உயில் சம்பந்தமான முதலேற்பு வழக்குகள், மண உரிமை முதலேற்பு வழக்குகள், முதலேற்பு மனுக்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. நிறைவேற்று மனுக்கள் குறித்த வழக்குகளின் எண்ணிக்கை சிறிது குறைந்துள்ளது.

மாநகர் உரிமையியல் நீதி மன்றம், சென்னை.

முதலேற்பு வழக்குகள், மேல்முறையீடுகள், உரிமையியல் பல்வகை மேல் முறையீடுகள், உரிமையியல் பல்வகை மனுக்கள், முதலேற்பு மனுக்கள், தொழிலாளர் நல காப்புறுதி முதலேற்பு மனுக்கள் ஆகிய வழக்குகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. நிலம் கையகப்படுத்தல் குறித்த வழக்குகள் நிறைவேற்று மனுக்கள் குறித்த வழக்குகள் ஆகியவற்றின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை.

பல்வகை மனுக்கள், மோட்டார் வண்டிகள் தொடர்பான கோரிக்கை முதலேற்பு மனுக்கள், வாடகைக் கட்டுப்பாட்டு மேல் முறையீடுகள், நகராட்சி வரி விதிப்பு மேல் முறையீடுகள், வெளியேற்றம் குறித்த மேல் முறையீடுகள், மோட்டார் வண்டி கோரிக்கை முதலேற்பு மனுக்களில் நிறைவேற்று மனுக்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. சிறுவகையிலான வழக்குகள், வாடகைக் கட்டுப்பாடு முதலேற்பு மனுக்கள், வழக்கை மீண்டும் புதிதாக விசாரணை செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்கள், நிறைவேற்று மனுக்கள் ஆகிய வழக்குகள் தாக்கல் செய்யப்படுவது குறைந்துள்ளது.

வெளியூர் உரிமையியல் நீதிமன்றங்கள் :

முதலேற்பு வழக்குகள் :

மேல்நிலை நீதி மன்றங்கள் :

தாக்கல் செய்யப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 8,172 லிருந்து 10,206 ஆக கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது. பொதுவாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின்

எண்ணிக்கை பெரியார் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய மாவட்டங்களைத் தவிர பிற அனைத்து மாவட்டங்களிலும் உயர்ந்துள்ளது.

கீழ்நிலை நீதி மன்றங்கள்.

தாக்கல் செய்யப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 99,665 லிருந்து 80,002 ஆகக் கணிசமான அளவிற்குக் குறைந்துள்ளது. தென் ஆர்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கை கணிசமான அளவிற்குக் குறைந்துள்ளது.

சிறு வழக்கு நீதிமன்றங்கள் :

மேல்நிலை நீதிமன்றங்கள் :

தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 2,197 லிருந்து 1988 ஆகக் குறைந்துள்ளது.

கீழ்நிலை நீதிமன்றங்கள்.

தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 8,576 லிருந்து 7,911 ஆகக் குறைந்துள்ளது. தென் ஆர்க்காடு, பெரியார், மதுரை (வடக்கு), சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை பெருமளவிற்குக் குறைந்துள்ளது.

உரிமையியல் மேல் முறையீடுகள் :

மேல்நிலை நீதிமன்றங்கள் :

தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடுகளின் எண்ணிக்கை 6,827 லிருந்து 7,799 ஆக உயர்ந்துள்ளது. கன்னியாகுமரி, தஞ்சாவூர் (மேற்கு) ஆகிய மாவட்டங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

உரிமையியல் பல்வகை மேல் முறையீடுகள் :

மேல் நிலை நீதிமன்றங்கள் :

தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 4,187லிருந்து 3,418 ஆகக் குறைந்துள்ளது.

தென் ஆர்க்காடு, மதுரை (தெற்கு), தருமபுரி, தஞ்சாவூர் (கிழக்கு), ஆகிய மாவட்டங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது.

உரிமையியல் பல்வகை மனுக்கள் :

மேல் நிலை நீதிமன்றங்கள் :

தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 117,310 லிருந்து 121,855 ஆக உயர்ந்துள்ளது.

கீழ்நிலை நீதிமன்றங்கள் :

தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 311,736 லிருந்து 317,455 ஆக உயர்ந்துள்ளது.

முதலேற்பு மனுக்கள் :

மேல்நிலை நீதிமன்றங்கள் :

தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின்எண்ணிக்கை 7,580 லிருந்து 8,277 ஆக உயர்ந்துள்ளது.

கீழ்நிலை நீதிமன்றங்கள் :

தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 3,128 லிருந்து 3,281 ஆக உயர்ந்துள்ளது.

வாடகைக் கட்டுப்பாட்டு முதலேற்பு மனுக்கள் :

கீழ்நிலை நீதிமன்றங்கள் :

தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 5,766 லிருந்து 5,430 ஆகக் குறைந்துள்ளது.

நொடிப்பு நிலை அறிவிப்பு மனுக்கள் :

மேல்நிலை நீதிமன்றங்கள் :

தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 497 லிருந்து 521 ஆக ஓரளவிற்கு உயர்ந்துள்ளது. தென் ஆர்க்காடு பெரியார், கன்னியாகுமரி, மதுரை (தெற்கு), மதுரை (வடக்கு), தருமபுரி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, ஆகிய மாவட்டங் களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

கீழ்நிலை நீதிமன்றங்கள் ;

தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 219லிருந்து 186 ஆகக் குறைந்துள்ளது ; திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை கணிசமான அளவிற்கு குறைந்துள்ளது.

நிறைவேற்று மனுக்கள் :

மேல்நிலை நீதிமன்றங்கள் :

தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 5,228 லிருந்து 5,429 ஆக உயர்ந்துள்ளது. கோயம்புத்தூர், இராமநாத புரம், தஞ்சாவூர் (கிழக்கு) ஆகிய மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்கள் அனைத்திலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

கீழ்நிலை நீதிமன்றங்கள் :

தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 54,039 லிருந்து 49,440 ஆக பெருமளவிற்குக் குறைந்துள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தைத் தவிர பிற அனைத்து மாவட்டங் களிலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

நடுவர் தீர்ப்பிற்கு விடப்பட்ட வழக்குகள் :

மேல்நிலை நீதிமன்றங்கள் :

தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 37 லிருந்து 30 ஆகக் குறைந்துள்ளது.

வாடகைக் கட்டுப்பாட்டு நடுவர் மற்ற மேல் முறையீடுகள் :

தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 256 லிருந்து 390 ஆக உயர்ந்துள்ளது.

தொழில் நடுவர் மன்றம், சென்னை.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள் :

தொழில் நடுவர் மன்றம், சென்னை.

தொழில் தகராறுகள் சட்டத்தின் 10-ஆம் பிரிவின் கீழ் அனுப்பிவைக்கப்பட்ட தொழில் தகராறுகளின் எண்ணிக்கை 83 லிருந்து 71 ஆகக் குறைந்துள்ளது. ஆனால், அதே நேரத்தில் 33, 33ஏ, 33சி ஆகிய பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 23 லிருந்து 134 ஆக உயர்ந்துள்ளது.

தொழிலாளர் நல நீதிமன்றம், சென்னை.

10-ஆம் பிரிவின் கீழ் அனுப்பிவைக்கப்பட்ட தொழில் தகராறுகள் 33, 33ஏ, 33சி ஆகிய பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, இக்கால அளவில் முறையே 529 லிருந்து 626 ஆகவும், 1,275 லிருந்து 1,422 ஆகவும் உயர்ந்துள்ளது.

தொழிலாளர் நல நீதிமன்றம், மதுரை :

10-ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட தொழில் தகராறுகளின் எண்ணிக்கை 242 லிருந்து 241 ஆக குறைந்துள்ளது 33, 33ஏ, 33சி ஆகிய பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 519 லிருந்து 346 ஆக பெருமளவிற்குக் குறைந்துள்ளது.

தொழிலாளர் நல நீதிமன்றம், கோயம்புத்தூர் :

தொழில் தகராறுகள் சட்டத்தின் 10-ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட தொழில் தகராறுகள் குறித்த வழக்குகளின் எண்ணிக்கை 257லிருந்து 222 ஆகக் குறைந்துள்ளது. 33, 33ஏ, 33சி ஆகிய பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 369லிருந்து 420 ஆக உயர்ந்துள்ளது.

31—3—1983-ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டில் செயல்பட்ட தற்காலிக நீதிமன்றங்களின் எண்ணிக்கை வருமாறு :

(1) மாவட்ட கூடுதல் நீதிமன்றங்கள்	12
(2) மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றத்தில் செயல்பட்ட தற்காலிக நீதிமன்றங்கள் (இதில் கல்லூரி நடுவர் மன்றம் அடங்காது).	6
(3) கூடுதல் துணை நீதிமன்றங்கள்	19
(4) துணை நீதிபதி பதவித் தரத்தில் மாநகர் உரிமையியல் நீதிமன்றத்தில் உதவி நீதிபதியைக் கொண்ட கூடுதல் நீதிமன்றங்கள், சென்னை, சிறு வழக்குகள் நீதிமன்றத்தில் உயர்நீதி மன்றத் துணை நடுவர்கள்.	10
(5) மாவட்டக் கூடுதல் முனிசீப் நீதிமன்றங்கள்	40

(இதில் பின்வரும் மாவட்டக் கூடுதல் தற்காலிக முனிசீப் நீதிமன்றங்களும் அடங்கும்).

(1) தாராபுரம்

(2) துறையூர்

(3) திருச்சிராப்பள்ளி

(4) திருச்செங்கோடு

(5) பட்டுக்கோட்டை

இதற்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது (ஆனால் இன்னும் செயல்படத் தொடங்கவில்லை).

(6) சென்னை, சிறு வழக்குகள் நீதிமன்றத்தில் மாவட்ட முனிசீப் பதவித் தரத்தில் வாடகைக் கட்டுப்பாட்டு தற்காலிக நீதிமன்றங்கள்	4
(7) தனியார் கல்லூரிகள், மேல்முறையீட்டு நடுவர் மன்றம், சென்னை.	1
(8) சென்னை, மதுரை ஆகிய இடங்களில் கூட்டுறவு வழக்குகளுக்காக தனி நடுவர் மன்றம்.	2
(9) தொழிலாளர் நலக் கூடுதல் நீதிமன்றம், மதுரை.	1

குடிமைப் பாதுகாப்பு.

குடிமைப் பாதுகாப்பு இயக்குநரின் கீழ் பணிபுரியும் ஒரு கண்காணிப்பாளர், ஒரு உதவியாளர், ஒரு இளநிலை உதவியாளர் மற்றும் ஒரு முகாம் உதவியாளரைத் தவிர குடிமைப் பாதுகாப்பு அமைப்பு இன்னும் முழுமையாக அமையவில்லை. சென்னை நகரை '' நிலை-1 '' நகரமாகவும், தூத்துக்குடியை '' நிலை-2'' நகரமாகவும் மத்திய அரசு அறிவித்ததன் பின்னர், சென்னை நகரில் குடிமைப் பாதுகாப்புத் தலைமையகத்தை நிறுவுவதற்கும், பயிற்சிநிலையம் ஒன்று அமைப்பதற்கும் மாநில அரசுக்கு, திட்டவரைவு (Proposal) அனுப்பப்பட்டு இருக்கிறது. மத்திய அரசின் ஒப்புதல் தேவைப்படுகின்றது.

குற்றவியல் நீதிமன்றம்.

1—4—1982ஆம் நாளன்றுள்ளவாறு தீர்ப்பாகாமலிருந்து செஷன்ஸ், குற்றவியல் வழக்குகளின் மொத்த எண்ணிக்கையும், 1—4—1982 முதல் 31—3—1983 வரையிலான கால அளவில் வரப்பெற்று தீர்ப்பான வழக்குகளின் எண்ணிக்கையும்,

31—3—1983 இறுதியில் உள்ளவாறு தீர்ப்பாகாமலிருந்த வழக்குகளின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	செஷன்ஸ் வழக்குகள்.	குற்றவியல் வழக்குகள்.
(i) 1—4—1982ஆம் நாளன்றுள்ளவாறு தீர்ப்பாகாமலிருந்த வழக்குகளின் எண்ணிக்கை ..	1,427	1,75,849
(ii) 1—4—1982 முதல் 31—3—1983 வரையில் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை ..	2,505	7,92,804
மொத்தம்	3,932	9,68,653
1982—83-ல் தீர்ப்பான வழக்குகளின் மொத்த எண்ணிக்கை	2,319	7,64,193
31—3—1983ஆம் நாளன்று இறுதியில் உள்ளபடி தீர்ப்பாகாமலிருந்த வழக்குகளின் எண்ணிக்கை	1,613	2,04,460

தமிழ்நாடு மாநிலத்தில் 1981—82ஆம் ஆண்டில், தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் வழக்குகள், மதுவிலக்கு வழக்குகள், வனத்துறை தொடர்பான வழக்குகள் முறையே 7,51.347, 26,259, 3,221 ஆகும். இவ்வழக்குகள், 1982—83ஆம் ஆண்டில் முறையே 7,92,804, 89,108, 3,480 ஆக அதிகரித்தன.

இக்கால அளவில், மாநிலம் முழுவதிலும், காவல் துறையினர், வழக்குரைஞர்கள், மாஜிஸ்ரேட்டுகள் ஆகியோரிடையே சுமுகமான ஒத்துழைப்பு நிலவியது.

தீயணைப்புத் துறை.

தீயணைப்பு நிலையங்கள் :

31—3—1982இல் உள்ள நிலவரப்படி 124 தீயணைப்பு நிலையங்கள் இயங்கிக் கொண்டு வருகின்றன. இவ்வருடம் ஐந்து ஓர் ஊர்தி கொண்ட தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டன. எனவே, மொத்தம் 129 தீயணைப்பு நிலையங்கள் இயங்கிக்கொண்டு வருகின்றன.

தீ விபத்து மற்றும் அவசர அழைப்புகள் :

இவ்வருடம் மாநிலத்தில் உள்ள அனைத்து தீயணைப்பு நிலையங்களும் 11,965 தீயழைப்புகளுக்குச் சென்று பணியாற்றின. அதில் 160 போலி அழைப்புகளும், 1,728 அவசரம் மற்றும் மீட்சி அழைப்புகளும், 10,077 உள்ளபடி தீ விபத்துகளும் ஆகும். உள்ளபடி ஏற்பட்ட தீ விபத்துகளில், 132 பெருந் தீ விபத்துகள் ஆகும். அதாவது ஒவ்வொரு பெருந் தீ விபத்திலும் தொகை ரூ.50,000-க்கு மேல் சேதமடைந்தன அல்லது உயிரிழப்புகள் ஏற்பட்டன. 489 அழைப்புகள் நடுத்தர தீ விபத்துகள், அதாவது ஒவ்வொரு தீ விபத்திலும் ரூ. 10,000-க்கு மேல் மற்றும் ரூ. 50,000-க்குள் பொருட்கள் சேதமடைந்தவைகள் ஆகும். 9,456 சிறிய தீ விபத்துகள் அதாவது ஒவ்வொரு தீ விபத்திலும் ரூ. 10,000 மதிப்புள்ள அல்லது அதற்கும் குறைவான மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்தன. தமிழ் நாடு முழுவதும் சுமார் ரூ. 636.6 லட்சம் மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்தன. சுமார் ரூ. 4,375.1 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் காப்பாற்றப்பட்டன.

நோயாளர் வண்டி அழைப்புகள் :

1982ஆம் ஆண்டு 5,637 நோயாளர் வண்டி அழைப்புகளுக்குச் சென்று பணியாற்றின. அவற்றில் 350 அழைப்புகள், விபத்துகள் அல்லது இலவச அழைப்புகள். 5,287 கட்டண அழைப்புகளுக்குச் சென்று பணியாற்றின. கட்டண அழைப்புகளுக்குச் சென்று பணியாற்றிய வகையில் ரூ. 1,59,164 வசூலிக்கப்பட்டது.

மற்ற பணிகள் :

சென்னை, எழும்பூர் தீயணைப்பு நிலையத்தில் ஒரு அவசர கால ஊர்தி உள்ளது. இவ்வூர்தியில் விபத்தினால் சிதைந்த மோட்டார் வாகனங்களை அகற்றவும், மீட்புப் பணியின்போது பெரும்பாரமான கட்டிடப் பகுதிகளை அகற்றவும் தனித் துணைக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வூர்தி, இவ்வாண்டு 24 அழைப்புகளுக்குச் சென்று பணியாற்றியது. இவ்வகையில் ரூ. 3,990 வசூலிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி:

சென்னை நகரில் தீயணைப்பாளர்களுக்கென ஒரு மாநிலப் பயிற்சிப் பள்ளி உள்ளது. நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள் இப்பயிற்சிப் பள்ளியில் தீயணைப்புப் பயிற்சி பெற்று வருகின்றனர். இத்துறையில் உள்ள அலுவலர்களுக்கும், நினைவூட்டுப் பயிற்சி வழங்கப்படுகிறது. ஒரு நிலையத் தீயணைப்பு அலுவலர் பயிற்சி மற்றும் இரண்டு தீயணைப்பாளர் பயிற்சிகள் இவ்வாண்டு நடத்தப்பட்டு அதன் கீழ் 204 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். தவிர, இரண்டு நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் நாகபுரி தேசிய தீயணைப்புக் கல்லூரிக்கும் மற்றும் ஒரு நிலையத் தீயணைப்பு அலுவலர் ''கொலம்போ'' திட்டத்தின் கீழ் இங்கிலாந்திலும் உயர் பயிற்சி பெற்று வந்துள்ளார்.

விருதுகள் :

இத்துறையில் ஒரு முன்னணித் தீயணைப்போருக்கு, வீர தீர செயலுக்கான இந்தியக் குடியரசுத் தலைவரின் பதக்கம் வழங்கப்பட்டது. மூன்று தீயணைப்பு அலுவலர்கள் ஒரு முன்னணித் தீயணைப்போர் மற்றும் ஒரு தீயணைப்போர் ஓட்டிக்கும் இந்தியக் குடியரசுத் தலைவரின் பாராட்டத்தகு பணிக்கான பதக்கங்கள் வழங்கப்பட்டன. ஒரு நிலையத் தீயணைப்பு அலுவலர், ஒரு முன்னணித் தீயணைப்போர் மற்றும் ஒரு தீயணைப்போர் ஓட்டிக்கு பாராட்டத் தகுதிப் பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கப் பட்டது.

தீயணைப்புத் துறை சேம நல நிதித் திட்டம் :

தீயணைப்புத் துறைப் பணியாளர்களின் நல்வாழ்வுக்கென இத்துறையில் சேமநலநிதி என்ற ஒரு திட்டம் செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பில் இத்துறையின் 3,776 பணியாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த நிதியிலிருந்து ரூ. 30,001.55 உதவித் தொகையாக உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. அரசாங்கத்தால் வருட மான்யமான தொகை ரூ 10,000 வழங்கப்பட்டது.

குற்றத் தடயப்பொருள் அறிவியல் ஆய்வகம்.

1980ம் ஆண்டு மார்ச்சு மாதம் வரையில் காவல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்த சென்னை, தமிழ்நாடு குற்றத் தடயப் பொருள் அறிவியல் ஆய்வகம், காவல் துறைக் கட்டுப்பாட்டினின்று பிரிக்கப்பட்டு, அறிவியல் வல்லுநர்—இயக்குநர் ஒருவரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. இவருக்குத் துறைத் தலைவர் பதவித்தர மளிக்கப்பட்டது. இத்துறை உள்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. ஆய்வு ஆண்டில், பேராசிரியர் சந்திரசேகரன் இயக்குநராகப் பதவியில் பொறுப்பினைத் தொடர்ந்து வகித்து வந்தார். சென்னையில் உள்ள முக்கிய சோதனைக்கூடம் 10 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இந்த 10 பிரிவுகளில் இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை வருமாறு :—

(1)	உயிரியல்	1,175
(2)	துப்பாக்கி ஆய்வியல் பிரிவு	95
(3)	வேதியியல் பிரிவு	334
(4)	ஆவணப் பிரிவு	397
(5)	ஆயத்தீர்வைப் பிரிவு	8,609
(6)	பௌதிகப் பிரிவு	147
(7)	மதுவிலக்குப் பிரிவு	13,173
(8)	ஆராய்ச்சிப் பிரிவு	83
(9)	குருதி தீரியல் பிரிவு	1,469
(10)	நஞ்சியல் பிரிவு	1,324

குற்றத் தடயப்பொருள் அறிவியல் வட்டார ஆய்வகங்களிடமிருந்து வரப்பெற்ற வழக்குகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. வேலூரில் உள்ள வட்டாரக் குற்றத் தடயப் பொருள் அறிவியல் ஆய்வகம், ஆயத்தீர்வை வழக்குகளை மட்டுமே ஆய்வு செய்கின்றது.

(1) கோயம்புத்தூர், வட்டாரக் குற்றத் தடயப்பொருள் அறிவியல் ஆய்வகம்—

நஞ்சியல் பிரிவு	1,189
மருவிலக்குப் பிரிவு	16,444
ஆயத்தீர்வைப் பிரிவு ..	820

2. மதுரை வட்டாரக் குற்றத் தடயப்பொருள் அறிவியல் ஆய்வகம்

நஞ்சியல் பிரிவு	612
மதுவிலக்குப் பிரிவு	4,819
ஆயத்தீர்வைப் பிரிவு ..	147

3. தஞ்சாவூர், வட்டாரக் குற்றத் தடயப்பொருள் அறிவியல் ஆய்வகம்:

நஞ்சியல் பிரிவு ..	894
மதுவிலக்குப் பிரிவு ..	8,973
ஆயத்தீர்வைப் பிரிவு ..	651

4. திருநெல்வேலி, வட்டாரக் குற்றத்தடயம் பொருள் அறிவியல் ஆய்வகம்:

உயிரியல் பிரிவு	556
நஞ்சியல் பிரிவு	433
மதுவிலக்குப் பிரிவு ..	2,316
ஆயத் தீர்வைப் பிரிவு	795

5. வேலூர், வட்டாரக் குற்றத் தடயப் பொருள் அறிவியல் ஆய்வகம்:

ஆயத் தீர்வைப் பிரிவு	2,092

முக்கிய ஆய்வகத்திலும் வட்டாரக் குற்றத் தடயப்பொருள் அறிவியல் ஆய்வகங்களிலும் ஆய்வு செய்து அறிக்கை அனுப்பப் பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கைப் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

முக்கிய ஆய்வகம்.	வழக்குகளின் எண்ணிக்கை.
உயிரியல் பிரிவு	1,038
துப்பாக்கி ஆய்வியல் பிரிவு	92
வேதியியல் பிரிவு	335
ஆவணப் பிரிவு	386
ஆயத்தீர்வைப் பிரிவு	8,382
பௌதீகப் பிரிவு	144
மதுவிலக்குப் பிரிவு	14,357
ஆராய்ச்சிப் பிரிவு	82
குருதி தீரியல் பிரிவு	1,317
நஞ்சியல் பிரிவு	1,3[illegible]

கோயம்புத்தூர், வட்டாரக் குற்றத் தடயப்பொருள் அறிவியல் ஆய்வகம்:

நஞ்சியல் பிரிவு	1,143
மதுவிலக்குப் பிரிவு	13,961
ஆயத்தீர்வைப் பிரிவு	820

மதுரை வட்டாரக் குற்றத் தடயப்பொருள் அறிவியல் ஆய்வகம்;

நஞ்சியல் பிரிவு	659
மது விலக்குப் பிரிவு	5,777
ஆயத்தீர்வைப் பிரிவு	147

தஞ்சாவூர், வட்டாரக் குற்றத் தடயப் பொருள் அறிவியல் ஆய்வகம்:

நஞ்சியல் பிரிவு	1,053
மதுவிலக்குப்பிரிவு	17,339
ஆயத்தீர்வைப் பிரிவு	651

திருநெல்வேலி, வட்டாரக் குற்றத் தடயப்பொருள் அறிவியல் ஆய்வகம்:

உயிரியல் பிரிவு	564
நஞ்சியல் பிரிவு	415
மதுவிலக்குப் பிரிவு	2,082
ஆயத்தீர்வைப் பிரிவு	795

வேலூர், வட்டாரக் குற்றத் தடயப் பொருள் அறிவியல் ஆய்வகம்:

ஆயத்தீர்வைப் பிரிவு ..	2,088

சென்னையில் உள்ள முக்கிய ஆய்வகத்தில் பணியாற்றும் அறிவியல் உதவியாளர்கள், குற்றம் நடந்த 73 இடங்களை நேரில் சென்றுப் பார்த்து, பரிசோதித்தனர்; குற்றத் தடயப் பொருள் அறிவியல் ஊர்தி ஆய்வகங்கள் 21-ல் பணியாற்றும் அறிவியல் உதவியாளர்கள், குற்றம் நடந்த 3,159 இடங்களை நேரில் சென்று பார்த்தனர். நிழற்படப் பிரிவு, அறிவியல் நிழற்படப் பணியைக் கவனிப்பதுடன், இவ்வாய்வக ஆய்வுக்காக வரப்பெற்ற பொருள்களின் நிழற்படங்களைத் தொடர்ந்து எடுத்து வந்தது. இவ்வாண்டுத் தொடக்கத்தில் 30 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன. இவ்வாண்டு பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 609 ஆகும். இவற்றில் 624 வழக்குகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன. 1—4—1983 ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமல் நிலுவையில் உள்ள வழக்குகளில் எண்ணிக்கை 15 ஆகும்.

நீதிமன்றத்திற்குச் சென்று சாட்சி கூறுதல்

ஆய்வக வல்லுநர்கள், 199 வழக்குகள் தொடர்பாக நீதிமன்றங்களில் நேரடியாகத் தங்களது சாட்சியங்களை அளித்தனர்.

சென்னை மாநகரக் காவற்படை.

சென்னை மாநகரக் காவல்படை, காவல் துறைக் கமிஷனரின் கட்டுப்பாட்டின் கீழ், இவ்வாண்டில், பின்வரும் அதிகாரிகள், பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டது:

காவல் துறை துணைக் கமிஷனர்கள்	9
காவல் துறை கூடுதல் துணைக் கமிஷனர்கள்.	2
காவல்துறை உதவிக் கமிஷனர்கள்	37
காவல் துறை இன்ஸ்பெக்டர்கள்	146
காவல்துறை ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள்	29
காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்கள்	465
காவல்துறை ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள்.	95
காவல்துறை ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள்.	32
தலைமைக் காவலர்கள்	1,056
காவலர்கள் (நிலை-1)	636
காவலர்கள் (நிலை-2)	6,011

மகளிர் காவலர் படைப்பிரிவு :

காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்கள் (பெண்)	6
தலைமைக் காவலர் (பெண்) ..	6
காவலர்கள் (நிலை-1) (பெண்) ..	70

1982—83 ஆம் ஆண்டில் நடந்த குற்றங்கள் பற்றிய விவர அறிக்கை:

தொடர் எண், குற்றம்பற்றிய விபரம்.	தகவல் தெரிவிக்கப் பட்டவை.	கண்டு பிடிக்கப் பட்டவை.
(1)	(2)	(3)
1. கொலை	27	25
2. ஆதாயம் கருதி செய்யப் பட்ட கொலை.	4	2
3. வழிப்பறி	1	4
4. கொள்ளை ..	53	44
5. இரவில் கன்னக் களவு	475	299
6. பகலில் கன்னக் களவு	70	49

தொடர்எண்குற்றம் பற்றிய விவரம். (1)	தகவல் தெரிக்கப் பட்டவை. (2)	கண்டு பிடிக்கப் பட்டவை. (3)
7. சைக்கிள் திருட்டு ..	1,139	889
8. குழந்தைகள் நகைத் திருட்டு	53	45
9. ஜேப்படி ..	491	445
10. மோட்டார் வண்டிகள் திருட்டு.	174	128
11. பல்வகைத் திருட்டு	4,070	2,992
12. கால்நடைத் திருட்டு ..	26	19
13. நம்பிக்கைத் துரோகக் குற்றம்	85	35
14. ஏமாற்றுதல்	326	81
மொத்தம்	6,967	5,028

கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் சதவீதம் 72

கடந்த ஆண்டில் வீட்டில் விபச்சாரம் நடத்தியதாக 146 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த ஆண்டில், வீட்டில் விபச்சாரம் நடத்தியதாக 220 வழக்குகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. சென்ற ஆண்டில் பரத்தமைத் தரகர்கள் 253 பேர் பிடிபட்டனர். 1982–83-ல் பரத்தமைத் தரகர்கள் 274 பேர் பிடிபட்டனர். சென்ற ஆண்டில் விபச்சார விடுதி களில் 479 பரத்தையர்கள் கைது செய்யப்பட்டனர். இவ் வாண்டில் விபச்சார விடுதியில் 511 பரத்தையர்கள் கைது செய்யப்பட்டனர். சென்ற ஆண்டில் 280 தெருப் பரத்தை யர்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வாண்டில் 549 தெருப் பரத்தையர்கள் கைது செய்யப்பட்டனர். இவர் களில் பெரும்பான்மையோர் சமுதாயத்தில் மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ளோரும், நடுத்தர நிலையிலுள்ளோரும் ஆவர். சென்ற ஆண்டில் 117 லாட்ஜுகள் திடீர் சோதனை செய்யப் பட்டன. இவ்வாண்டில் 106 லாட்ஜுகள் திடீர் சோதனை செய்யப்பட்டன. பெரும்பாலான குற்றவாளிகள் ஏழ்மை நிலை காரணமாக இவ்வாறு வாழ்க்கையில் நெறி பிறழ்ந்த முறையைக் கையாண்டுள்ளனர்.

குற்றங்கள் :

சென்ற ஆண்டில் பல்வேறு தலைப்புகளின் கீழ் தெரிவிக்கப் பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 8,578 ஆகும். இவ்வாண்டில் அக்குற்றங்களின் எண்ணிக்கை 6,967 ஆகும். சென்ற ஆண்டு தெரிவிக்கப்பட்ட குற்றங்களில் 5,036 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாண்டில் தெரிவிக்கப்பட்ட 6,968 குற்றங்களில் 5,028 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சென்ற ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் சத வீதம் 58 ஆகும். 1982–83-ல் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங் களின் சதவீதம் 72 ஆகும். இது, பட்டியலிடப்பட்ட குற்றவாளிகளையும், திருடப்பட்ட பொருள்களைப் பெறுபவர் களையும் தீவிரமாகக் கண்காணித்ததால் ஏற்பட்ட விளை வாகும்.

கொலை :

ஆதாயம் கருதிச் செய்யப்பட்ட 2 கொலைகள் உட்பட மொத்தம் 47 கொலைகள் நடந்ததாகச் சென்ற ஆண்டு முதல் தெரிவிக்கப்பட்டது. இவ்வாண்டில் ஆதாயம் கருதிச் செய்யப் பட்ட 4 கொலைகள் உட்பட 31 கொலைகள் நடந்துள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவல்துறைத் தகவல் கட்டுப்பாட்டுத்துறை—

காவல்துறைத்தகவல் கட்டுப்பாட்டு அறைப் பணியாளர் கள் சென்ற ஆண்டில் 7,913 அவசரத் தொலைபேசி அழைப்பு களுக்கு (''100'') உடனடியாகச் சென்று ஆவன செய்தனர். இவ்வாண்டில் 6,148 அவசரத் தொலைபேசி அழைப்புகளுக்கு உடனடியாகச் சென்று ஆவன செய்தனர். மேலும், சென்ற ஆண்டில் 514 தீ விபத்து தொடர்பான அவசர அழைப்பு களுக்கும் உடனடியாகச் சென்று ஆவன செய்தனர். இவ் வாண்டில் 721 தீ விபத்து தொடர்பான அவசர அழைப்பு களுக்கு உனடியாகச் சென்று ஆவன செய்தனர். சென்ற ஆண்டில், கார், ஸ்கூட்டர் திருட்டு, காணாமல் போனவர்கள், குழந்தைகள் பற்றிய 3,137 வானொலி செய்தி அறிவிப்பு கொடுக்கப்பட்டு, உடனடியாக நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. இவ்வாண்டில், மேற்சொன்ன வகையில் 2,165 செய்தி

அறிவிப்பு கொடுக்கப்பட்டு, விரைந்து நடவடிக்கையும் எடுக்கப் பட்டது. இவ்வாண்டில் விளம்பரம் கொடுப்பதற்கென மொத்தம் 1,627 தகவல்கள் வரப்பெற்றன. அவற்றுள் 981 தகவல்கள் வானொலியில் ஒலி பரப்பப்பட்டன. அவசர அழைப்புகள், வானொலி அறிவிப்புகள், தகவல்கள் ஆகியவை குறித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவை மிகவும் பயனுள்ளவையாக இருந்தன.

காவல்துறை துப்பறியும் நாய்க்களம்—

இவ்வாண்டில், 208 அழைப்புகளுக்குத் துப்புதுலக்குவதற் காக காவல் நாய்கள், சம்பவம் நடந்த இடங்களுக்குக்கொண்டு செல்லப்பட்டன. அதில் 85 சம்பவங்களில் துப்பறியும் நாய்கள் பயன்தரும் வகையில் துப்பு துலக்கின.

இளங்குற்றவாளிகளைச் சீர்திருத்தும் காவல் படைப்பிரிவு—

16 வயத்துக்குக் குறைவான ஆதரவற்ற இளங்குற்றவாளி களைச் சீர்திருத்தும் பணியை இக்காவல்படைப் பிரிவு கவனிக் கிறது. இவ்வாண்டில், இளங்குற்றவாளிகளைச் சீர்திருத்தும் காவல்படைப் பிரிவு 337 குற்றவாளிகளைச் சீர்திருத்த முயற்சிகள் மேற்கொண்டதில், 274 இளங்குற்றவாளிகள் காவலரால் அவர்களுடைய பெற்றோர்களிடம் ஒப்படைக்கப் பட்டனர். 54 இளங்குற்றவாளிகள் பல்வேறு சீர்திருத்தப் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டனர். 9 இளங்குற்றவாளிகளைப் பற்றிய விசாரணை இன்னும் முடிவடையவில்லை.

ஊர்க்காவல் படையினர்—

தற்போது 1,909 ஆண் ஊர்க் காவலர்களும், 201 பெண் ஊர்க்காவலர்களும் உள்ளனர். பொது தனியார் நிறுவனங் களுக்காகப் பணி புரிவதோடு மட்டுமின்றி இரவு வேளையில் ரோந்து சுற்றுவதற்கும், பந்தோபஸ்துப் பணிக்கும், போக்கு வரத்து நெருக்கடிக் காலங்களில் போக்குவரத்தை முறைப் படுத்துவதற்கும் இந்த ஊர்க்காவலர்களின் பணி, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் உள்ளூர் காவல் நிலையங்களாலும், போக்குவரத்தை முறைப்படுத்தும் காவல் நிலையங்களாலும் பயன் படுத்தப்பட்டது. காவல்துறை பணிகளுக்குப் பதிலாக ஊர்க்

காவல் படையினரை அவர்கள் வசித்து வரும் உள்ளூர்ப் பகுதிகளில் பயன்படுத்துவதன் மூலம், பொதுமக்கள் காவலருக்கிடையேயான நல்லுறவு ஏற்பட வகை செய்யப்படுகிறது.

போக்குவரத்து—

விபத்துக்கள்—

சென்ற ஆண்டில, 5,920 விபத்துக்கள் ஏற்பட்டன. இவ்வாண்டில் 5,836 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் விபத்தினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 355 ஆகும். இவ்வாண்டில் விபத்தினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 351 ஆகும். இடை நிகழ்வான மாநகரில் செல்லும் ஊர்திகளின் எண்ணிக்கை 95 சதவீதம் அதிகரித்துள்ளது, போக்குவரத்து புலனாய்வுப் பிரிவில், பல்வேறு பிரிவுகளின் கீழ்க் தொடரப்பட்ட வழக்குகளினால் ரூ. 5,24,359 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

இவ்வாண்டு முழுவதிலும் சட்டம்-ஒழுங்கு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டது.

கணக்கீட்டுப் பொறி, கொ: ாக் மைக்ரோகோட், பிற அறிவியல் சாதனங்கள் போன்ற நவீன தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்தப்பட்டதனால், குற்றப் புலனாய்வின் தரம் பெருமளவில் மேம்பாடடைந்துள்ளது. போக்குவரத்தை முறைப்படுத்துவதில் போதிய கவனம் செலுத்தப்பட்டது. அனைத்து வகைச் சிறப்பு, உள்ளூர் சட்டங்களுக்கு நல்ல மதிப்பளிக்கப்பட்டது.

சிறை.

சிறைத்துறைக்கு சிறைத்தலைவர் தொடர்ந்து தலைமைப் பொறுப்பில் இருந்து வருகிறார்.

1982–83 ஆம் ஆண்டில் இம்மாநிலத்திலிருந்து சிறைகளின் எண்ணிக்கை கீழ் வருமாறு :—

1.	மத்திய சிறைகள்	8
2.	மாநில மகளிர் சிறை	1
3.	பார்ஸ்டல் பள்ளி ..	1
4.	திறந்த வெளிச் சிறைகள்	2
5.	தனிக்கிளைச் சிறைகள்	3
6.	கிளைச் சிறைகள்	119

சிறைவாசிகள் எண்ணிக்கை விவரங்கள்—

(1–4–1982 முதல் 31–3–1983 வரை.)

வரிசை எண்ணும் விவரமும்.	தண்டனை சிறைவாசிகள்.	விசாரணை சிறைவாசிகள்.	சிவில் சிறைவாசிகள்.	பாதுகாப்பு சிறைவாசிகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
(1) 1–4–1982-ல் இருந்தவர்கள்.	5,500	3,167	18	80
(2) 1–4–1982 முதல் 31-3-1983 வரை அனுமதிக்கப்பட்டவர்கள்.	20,697	80,288	238	267
(3) 1–4–1982 முதல் 31–3–1983 வரை விடுவிக்கப்பட்டவர்கள்.	20,498	80,663	243	200
(4) 31–3–1983-ல் இருந்தவர்கள்.	5,699	2,792	12	147
(5) சராசரி எண்ணிகை.	5,137	3,000	10	104

மதுவிலக்கு சிறைவாசிகள்—

இவ்வருட ஆரம்பத்தில் தமிழ் நாடு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 742 நேரடியாக அனுமதித்தல் சிறைமாற்றம் மற்றும் இதர வகைகளில் அனுமதி செய்யப்பட்ட சிறைவாசிகள் எண்ணிக்கை 29,496, 28,732 சிறைவாசிகள் இவ்வருடத்தில் விடுதலை அடைந்தனர். எனவே வருட இறுதியில் மீதமுள்ள சிறைவாசிகளின் எண்ணிக்கை 1,506.

சிறைக் குற்றங்கள்:

இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் சிறைவாசிகளால் 448 குற்றங்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 391 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. மேலும் மீதமுள்ள 57 வழக்குகளில் மன்னிப்பு ஆணை வழங்கப்பட்டது.

தப்பித்தல் மற்றும் திரும்பப் பிடித்தல்:

இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் 20 சிறைவாசிகள் தப்பிச் சென்றனர். அவ்வாறு தப்பிச் சென்றவர்களில் இரண்டு சிறைவாசிகள் மீண்டும் பிடிக்கப்பட்டனர். 18 சிறைவாசிகள் இதுவரை பிடிபடவில்லை.

பாதுகாப்பு சிறைவாசிகள்:

(காபிபோசா மற்றும் தேசிய பாதுகாப்பு மற்றும் டி.பி.டி.ஏ. கீழ் கைது செய்யப்பட்டவர்கள்).

இவ்வறிக்கைக்குரிய ஆண்டின் ஆரம்பத்தில் 80 பாதுகாப்பு சிறைவாசிகள் இருந்தனர். இவ்வாண்டில் 267 பாதுகாப்பு சிறைவாசிகள் அனுமதிக்கப்பட்டனர். 200 பேர்கள் விடுதலை செய்யப்பட்டு ஆண்டு இறுதியில் 147 பேர்கள் மீதமிருந்தனர்.

கல்வி :

முதியோர் கல்வித் திட்டத்தின் கீழ் எழுத்தறிவுக் கல்வி சிறைவாசிகளுக்கு எல்லா மத்திய சிறைகளிலும் புகட்டப்பட்டது. அரசு செலவில் மேல் பட்ட படிப்பு வரைக்கும் அஞ்சல் கல்வி வழியாக படிக்கவும் அந்தந்த பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் தேர்வுகளை எழுதவும் சிறைவாசிகள் அனுமதிக்கப்பட்டனர். தேர்வு எழுத அவர்கள் தங்களது சொந்த உடையில் சென்றனர். மேலும் அவர்களுடன் செல்லுகின்ற வழிநடப்பு காவலர்களும் இயல்பு உடையிலேயே சென்றனர். அரசு செலவில் இந்தி படிக்கவும் தேர்வு எழுதவும் சிறைவாசிகள் தொடர்ந்து அனுமதிக்கப்படனர்.

எஸ்.எஸ்.எல்.சி., பி.ஏ., பி.காம்., எம்.ஏ., அடிப்படை கல்வி புகுமுக வகுப்பு, அடிப்படை முதல் கல்வி, தையல் வித்வான் போன்ற வகுப்புகள் படிப்பதற்கு இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் சிறைவாசிகளுக்கு தொடர்ந்து அனுமதி வழங்கப்பட்டது. கல்வி பயின்றவர்களின் விவரம் கீழ் வருமாறு :—

1.	எஸ்.எஸ்.எல்.சி.	2
2.	புதுமுக தேர்வு வகுப்பு	2
3.	இளங்கலை பட்டப்படிப்பு	11
4.	வணிக இயல் இளங்கலைப் பட்டப்படிப்பு	1
5.	எம்.ஏ. பட்டப்படிப்பு	6
6.	வணிகவியல் முதுநிலை பட்டப்படிப்பு	1
7.	தொடக்கக்கல்வி படிப்பு ..	23
8.	அடிப்படைக் கல்வி படிப்பு ..	12
9.	மருத்துவப் படிப்பு	1
	மொத்தம்	59

அறிவுரைக் கழகத் திட்டம்:

சிறைவாசிகளின் தண்டனையை மறு ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட அறிவுரைக் கழகங்கள் இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் 540 சிறைவாசிகளின் முன் விடுதலை குறித்து ஆய்வு செய்தன. இவற்றில் 318 சிறைவாசிகளின் முன் விடுதலையை பரிந்துரை செய்தது. பரிந்துரை செய்த அனைத்து நேர்வுகளிலும் மற்றும் 131 அறிவுரைக் கழகத்தால் பரிந்துரை செய்யப்படாதிருந்தாலும் அவைகளின்படி அனுப்பப்பட வேண்டிய சிறைவாசிகளின் நேர்வுகளிலும் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஏற்கனவே வருட ஆரம்பத்தில் 429 நேர்வுகள் அரசிடம் தேங்கியிருந்தன. இவற்றில் 225 சிறை வாசிகளை விடுவிக்க அரசு ஆணையிட்டது. 445 சிறைவாசிகளின் நேர்வுகளில் மீண்டும் சிறிது காலம் கழித்து அனுப்பி வைக்க ஆணையிட்டது.

பார்ஸ்டல் பள்ளி :

இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் பார்ஸ்டல் பள்ளியின் தினசரி சராசரி எண்ணிக்கை 115 ஆகும்.

கல்வி :

பார்ஸ்டல் பள்ளி வாசிகளுக்கு தினமும் 2 மணி நேரம் எழுத்தறிவு கல்வியும் 5 மணி நேரம் தொழிற் கல்விப் பயிற்சியும் அளிக்கப்பட்டன. பள்ளி வாசிகளுக்கு அவர்களுடைய தாய் மொழி மூலமாகவே அதாவது தமிழில் கல்வி புகட்டப்பட்டது. இப்பள்ளி மாணவர்களில் ஒருவர் மேல்நிலை கல்வி இரண்டாம் ஆண்டு பயின்று வந்தனர்.

தொழிற் கல்வி :

கீழ்க்கண்ட தொழில்களில் இப்பள்ளிவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது :—

(அ) தச்சு.
(ஆ) கருமார்.
(இ) புத்தகம் கட்டுதல்.
(ஈ) தையல்.
(உ) விவசாயம்.
(ஊ) கொத்துவேலை.
(எ) தேய்ப்பு வேலை.
(ஏ) பேண்ட் வாத்திய பயிற்சி.
(ஐ) சமைப்பது போன்ற வீட்டு வேலை.

பள்ளிவாசிகளின் திறமைக் கேற்றார்போல் தொழில் கல்வி அளிக்கப்படுகிறது :

பொழுது போக்குகளில் பண்பாட்டு நிகழ்ச்சிகள் :

ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் மத்திய சிறைகளில் உள்ள சிறைவாசிகள் கைப்பந்து, கபடி, பூப்பந்து, மாநில மகளிர் சிறை வேலூரில் உள்ள சிறைகளில் வலைப் பந்தும் விளையாட அனுமதிக்கப்பட்டனர். பண்பாட்டுக் குழுவின் உதவியின் கீழ் எல்லா சிறைகளிலும் பல்வேறு பொழுது போக்கு நிகழ்ச்சிகளை சிறைவாசிகளின் பயனுக்காக சிறைக் கட்டிடத்திற்குள் பிரசித்தி பெற்ற கலைஞர்களால் அடிக்கடி ஏற்பாடு செய்யப்பட்டது. சிறைவாசிகளின் நலனில் உண்மையாக பற்று கொண்ட தாராள மனம் படைத்தவர்கள் உள்ளூர் விநியோகஸ்தர்கள் மற்றும் சமூக நிலையங்களின் உதவியைக் கொண்டு நீதி புகட்டுகின்ற திரைப் படங்கள் சராசரியாக மாதம் இருமுறை சிறைவாசிகளுக்கு காட்டப்பட்டது.

புதிய மாற்றங்களும் நிர்வாக சிர்திருத்தங்களும் :

பல்வேறு பல்கலைக் கழகங்களால் நடத்தப்படும் தபால் கல்வி முறையின் கீழ் மேல் நிலைப் பட்டப்படிப்பு இரட்டை பட்டப்படிப்பு இவைகளில் சேர்ந்து படிக்கவும், தேர்வுக்கு ஆஜராகவும் தகுதி வாய்ந்த சிறைவாசிகளுக்கு அனுமதி அளிக்க சிறைத் துறைத் தலைவருக்கு அதிகாரம் வழங்கியுள்ளனர். கீழ்க்கண்டவாறு அரசினர் ஆணையிட்டுள்ளனர் :—

(i) சிறைகளில் கேண்டீன் விதி 4-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள வாங்கும் வரம்பு ரூ. 10, ரூ. 15-ம் : 'பி' வகுப்பு சிறைவாசிகள் 'எ' வகுப்பு சிறைவாசிகள் மற்றும் தனிப்பட்ட வகுப்பு இவர்களுக்கு வாரத்திற்கு முறையே ரூ. 20 மற்றும் ரூ. 30 ஆக உயர்த்தப்படவிருக்கிறது.

(ii) விசாரணை சிறைவாசிகளும் மேற்கண்ட கேண்டீன் வசதிகளை பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்படுவர்.

(iii) கேண்டீன் விதி எண். 4-ன் நீக்கி தண்டனை சிறைவாசிகளும் அவர்கள் சிறையில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து வசதிகளை பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்படுவர்.

நன்னடத்தைப் பிரிவு.

நன்னடத்தைப் பிரிவு இவ்வாண்டும் தொடர்ந்து திருப்திகரமாக இயங்கி வருகிறது. இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த விசாரணைகளின் எண்ணிக்கை, நன்னடத்தை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை மற்றும் கண்காணிப்பில் வைக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை முறையே 12,309,40,147, 5,421 ஆகும்.

தமிழ்நாடு காவல்துறை.

1982-83-ல் சட்டத்தைச் செயற்படுத்தல், ஒழுங்கை நிலைநாட்டுதல், குற்றங்கள் நடைபெறாமல் தடுத்தல், குற்றங்களில் துப்பு துலக்குதல் போன்ற பணிகளில் போதிய கவனம் செலுத்தப்பட்டது. கிராமப் பகுதி ஒழுக்கக் கண்காணிப்புக் குழு, சிறுவர் சங்கங்கள், ஊர்க்காவல் படை ஆகியவையும் காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் ஆகியவையும், காவல் துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவையும் நெருங்கிய தொடர்பினையும் வளர்க்கப் பெரிதும் உதவியுள்ளன.

குற்றங்களின் மொத்த எண்ணிக்கை :

1982-83-ல் கொலைகள் உட்பட சொத்துக்கள் தொடர்பாக நடைபெற்ற குற்றங்களின் மொத்த எண்ணிக்கை 29,677 ஆகும்; கடந்த ஆண்டில் இதே கால அளவில் நடைபெற்ற இத்தகைய குற்றங்கள் 32,792 ஆகும். இவ்வகையில், இவ்வாண்டில் 3,085 குற்றங்கள் குறைவாக நடை பெற்றுள்ளன; அல்லது 9.4 சதவீதம் குறைந்துள்ளது. திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் கிழக்கு, இராமநாதபுரம் மேற்கு, பெரியார் மாவட்டங்கள் நீங்கலாக மற்ற மாவட்டங்கள் அனைத்திலும் குற்றங்கள் குறைந்துள்ளதை அறியலாம். குற்றங்களின் மாவட்ட வாரியான விவரத்திலிருந்து குற்றங்கள் அதிகரித்துள்ளதை / குறைந்துள்ளதை நன்கு அறியலாம் :

கொலை உட்பட்ட குற்றங்களின் மொத்த எண்ணிக்கை :

மாவட்டம்.	1–4–1982 முதல் 31–3–1983 வரை.	1–4–1981 முதல் 31–3–1982 வரை.	கூடுதல் அல்லது குறைவு.	சதவீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)
இரயில்வே காவல் துறையினர்	515	529	(—) 14	(—) 2.6
திருச்சிராப்பள்ளி	3,039	3,010	(+) 29	(+) 0.9
புதுக்கோட்டை ..	587	608	(—) 21	(—) 3.4
தஞ்சாவூர் கிழக்கு ..	1,341	1,431	(—) 90	(—) 6.3
தஞ்சாவூர் மேற்கு ..	1,639	1,731	(—) 92	(—) 5.3
தென்னார்க்காடு ..	2,206	2,704	(—) 498	(—) 18.4
செங்கற்பட்டு கிழக்கு	2,902	3,086	(—) 184	(—) 5.9
செங்கற்பட்டு மேற்கு	1,386	1,438	(—) 52	(— 3.6
மதுரை தெற்கு ..	1,260	1,270	(—) 10	(—) 0.8
மதுரை வடக்கு ..	1,082	1,653	(—) 571	(—) 34.5
இராமநாதபுரம் கிழக்கு	654	641	(+) 13	(+) 2.0
இராமநாதபுரம் மேற்கு	942	894	(+) 48	(+) 5.3
திருநெல்வேலி ..	2,238	2,327	(—) 89	(—) 3.8
கன்னியாகுமரி	658	854	(—) 196	(—) 22.9
கோயம்புத்தூர் நகர்ப்பகுதி	1,614	1,750	(—) 136	(—) 7.7
கோயம்புத்தூர் கிராமப்பகுதி	773	910	(—) 137	(—) 15.0
பெரியார்	1,052	933	(+) 119	(+) 12.7

நீலகிரி	326	445	(—) 119	(—) 26.4
சேலம்	1,648	2,088	(—) 440	(—) 21.0
தருமபுரி	815	919	(—) 104	(—) 11.3
வட ஆர்க்காடு	3,000	3,541	(—) 541	(—) 15.2
	29,677	32,762	(—) 3085	(—) 9.4

கொள்ளை வழிப்பறி நீங்கலாக ஏனைய எல்லா வகைக் குற்றங்களும் குறைந்துள்ளன—

குற்றங்களின் வகை.	1–4–1982 முதல் 31–3–1983 வரை.	1–4–1981 முதல் 31–3–1982 வரை.	கூடுதல் அல்லது குறைவு.	சதவீதம்.
கொலை	1,235	1,243	(—) 8	(—) 0.9
கொள்ளை	46	31	(+) 15	(+) 48.3
வழிப்பறி	256	215	(+) 41	(+) 19.0
வீட்டில் கன்னம் வைத்துத் திருடுதல்.	7.903	8,455	(—) 552	(—) 6.5
பெருந்திருட்டு	17,695	20,035	(—) 2340	(—) 11.6
சிறு திருட்டு	1,502	1,725	(—) 223	(—) 12.6
கால்நடை திருட்டு ..	1,040	1,058	(—) 18	(—) 1.7
மொத்தம்	29,677	32,762	(—) 3085	(—) 9.4

கொலை—

1-4-1982 முதல் 31-3-1982 வரையில் 1,235 கொலைக் குற்றங்கள் நடைபெற்றுள்ளன. 1981-82 கால அளவில் 1,243 கொலைக் குற்றங்கள் நடைபெற்றன ; எனவே, இவ்வாண்டில் சொற்ப அளவில் அதாவது 8 கொலைக் குற்றங்கள் அல்லது 0.6 சதவீதம் குற்றம் குறைவாக நடைபெற்றுள்ளன. 1981-82 ஆம் ஆண்டின் கால அளவுகளை ஒப்பிடுகையில், திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் கொலைக் குற்றங்கள் அதிகமாக நடைபெற்றதாகக் கண்டறியப் பட்டது. புதுக் கோட்டை, தஞ்சாவூர் கிழக்கு, செங்கற்பட்டு கிழக்கு, செங்கற் பட்டு, மேற்கு, மதுரை தெற்கு, இராமநாதபுரம் கிழக்கு, திரு நெல்வேலி, கன்னியாகுமரி, பெரியார் மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும் கொலைக் குற்றங்கள் குறைந்துள்ளது என்பதை அறியலாம்.

கொள்ளை —

இவ்வாண்டில் 46 குற்றங்கள் நடைபெற்றுள்ளன என்று தெரி விக்கப்பட்டது; கடந்த ஆண்டில், இதே கால அளவில் 31 குற்றங் கள் மட்டுமே நடைபெற்றன; எனவே, இவ்வாண்டில் 15 குற்றங் கள் அல்லது 48.3 சதவீதக் குற்றங்கள் அதிகரித்துள்ளன.

வழிப்பறி—

இவ்வாண்டில் 256 குற்றங்கள் நடைபெற்றுள்ளன என்றும், கடந்த ஆண்டில், இதே கால அளவில் 215 குற்றங்கள் நடை பெற்றன என்றும் 41 குற்றங்கள் அல்லது 19.0 சதவீதக குற்றங் கள் அதிகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

வீட்டில் கன்னம் வைத்துத் திருடுதல்—

1982-83-ல் 7,903 குற்றங்கள் நடைபெற்றுள்ளன என்றும், கடந்த ஆண்டில் இதே கால அளவில் 8,455 குற்றங்கள் நடை பெற்றன என்றும், இவ்வாண்டில் 552 குற்றங்கள் அல்லது 6.5 சதவீதக் குற்றங்கள் குறைவாக நடைபெற்றுள்ளன என்றும் தெரி விக்கப்பட்டது. இவ்வகையிலான குற்றங்கள் செங்கற்பட்டு கிழக்கு, திருச்சிராப்பள்ளி, தென்னார்க்காடு. வடார்க்காடு மாவட்டங்களில் பெருமளவில் நிகழ்ந்துள்ளன.

பெருந்திருட்டு —

இவ்வாண்டில், அதாவது, 1982-83-ல், 17,695 குற்றங்கள் நடைபெற்றுள்ளன; கடந்த ஆண்டில் இவ்வகையில் நடைபெற்ற குற்றங்களைக் காட்டிலும் (20,035) 2,340 குற்றங்கள் இந்த ஆண்டில் குறைந்துள்ளது.

சிறு திருட்டு—

இவ்வாண்டில், இவ்வகையில் 1,502 குற்றங்கள் நடைபெற்றுள்ளன. 1981-82ல் நடைபெற்ற குற்றங்களைக் காட்டிலும் (1,725) 223 குற்றங்கள் அல்லது 12.9 சதவீதக் குற்றங்கள் இந்த ஆண்டில் குறைந்துள்ளது.

கால்நடைத் திருட்டு—

இவ்வாண்டில், இவ்வகையில் 1,040 குற்றங்கள் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது; கடந்த ஆண்டில் இதே கால அளவில் நடைபெற்ற குற்றங்களைக் காட்டிலும் (1,058) 18 குற்றங்கள அல்லது 1.7 சதவீதக் குற்றங்கள் இந்த ஆண்டில் குறைந்துள்ளது.

துப்பு துலக்கிய குற்றங்களின் சதவீதம்—

இந்த ஆண்டில் (1982—83) நடைபெற்றதாகக் கூறப்பட்ட 29,677 குற்றங்களில் 10,701 வழக்குகளில் குற்றம் புரிந்தவர்கள் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டனர். துப்பு துலக்கிய குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட (வழககுகள்) குற்றங்கள் 36.1 சதவீதமாகும்; 1981-82 ஆம் ஆண்டில் இதே கால அளவில் 34.1 சதவீதக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஒழுங்கமைதி பாதுகாப்பு தொடர்பான குற்றங்கள்—

1982-83-ல் குற்றவியல் நடைமுறைக் கோவையின் 109, 110 ஆகிய பிரிவுகளின்படி 31,461 நபர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது; 1981-82 இதே கால அளவில் 30,372 நபர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவர்களில்,

24,326 நபர்கள் பிணைப்படுத்தப்பட்டனர். (Bound over) 1981-82-ல் இதே கால அளவில் 21,065 நபர்கள் பிணைப்படுத்தப்பட்டுள்ளனர். (Bound Over).

துப்பறியும் நாய்படை—

சென்னை மாநகர், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு இடங்களில் நாய்படை மனநிறைவளிக்கும் வகையில் பணியாற்றி வருகின்றது. 1—4—82 முதல் 31–3–83 வரையிலான காலங்களில் 725 வழக்குகளில் நாய்கள் துப்பறியும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. 302 வழக்குகளில் பயனளித்துள்ளன.

இவ்வாண்டில் 1,057 சிறார்கள் சொத்துக்கள் தொடர்பான குற்றங்கள் செய்ததாகத் தெரிய வந்தது. கடந்த ஆண்டில், இதே கால அளவில் இது 1,565 ஆக இருந்தது. மாநிலத்திலுள்ள சிறுவர் சங்கங்கள் 31 நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு காவலர் நிதி —

இறந்து போன காவலர்களின் ஆதரவற்ற குடும்பத்தினருக்கே உதவி செய்வதற்காக, காவலர் நலநிதி 1871 ல் எற்படுத்தப் பட்டது. அரசிதழ் பதிவு பெறாத காவல்துறை அதிகாரிகள் இறந்துவிட்டால், நோயுற்றால் அல்லது வேறு எதேனும் எதிர்பாராத நிகழ்ச்சிகளினால் பாதிக்கப்பட்டால் மத்தியக்குழு அத்தகையோருக்கு உதவி தேவையெனக் கருதியதால், அத்தகையோரின் குடும்பத்தினருக்கு ஏற்படும் இன்னல்களைக் களையவும் அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்யவும் 'காஸன்'(Gasson) காவலர் நலநிதி 1944-ல் ஏற்படுத்தப்பட்டது. காவல் துறையில் பணியாற்றும் அரசிதழ் பதிவு பெறாத காவலர்களின் நிலையை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு, அரசு 1951 ஆம் ஆண்டில், இவ்விரு நிதிகளையும் ஒன்று சேர்த்து, தமிழ்நாடு காவலர் நலநிதி என்னும் நலநிதியை ஏற்படுத்தியது. தாமாகவே முன்வந்து உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆண்டுச் சந்தா, துறையின் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் அளிக்கும் நன்கொடைத் தொகை ஆகியவையை இந்நல நிதியின் வருவாய் ஆதாரமாகும். இதைத் தவிர, இந்நிதிக்கு அரசு ஆண்டுதோறும் ரூ. 1,50,000 உடனடி மானியம் வழங்குகிறது.

தமிழ்நாடு திரையரங்குக் கழகம்—

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் 12—4—72 அன்று தமிழ் நாடு அரசுக்குச் சொந்தமான ஒரு தனி நிறுவனமாக அங்கீகரிக்கப் பட்ட பங்கு முதலீடாக ரூ. 10 இலட்சத்தோடு ஆரம்பிக்கப்பட் டது. பிறகு இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 50 இலட்சத்திற்கு அதாவது 50,000 சாதாரண பங்குகளாக பங்கு ஒன்றுக்கு ரூ. 100 வீதம் 1978-79-ம் ஆண்டில் கூடுதலா னது. இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் 31-3-83-ன் படி ரூ. 35 இலட்சம் அதாவது 35,000 சாதாரண பங்குளாக பங்கு ஒன்று ரூ. 100 வீதம் முழுவதுமாக தமிழக அரசும், அரசு நியமனதாரர்களும் அளித்துள்ளனர். இந்நிறுவனத்தின் செயல் பாட்டு விதி முறைகளின்படி தனிநபர், நிறுவனம், கூட்டு வியா பாரம் மற்றும் கூட்டுறவு அமைப்புகள் முதலியன தமிழகத்தி லுள்ள கிராமப்புறங்களில் பகுதிநிலைத்திரையரங்குகள் கட்டவும் அவற்றை நிரந்தர திரையரங்குகளாக மாற்றவும் இந்நிறுவனம் நிதியுதவி அளிக்கிறது. மேலும் மேற்கூறிய விதிமுறைகள் விரிவாக் கப்பட்டு நிரந்தர திரையரங்குகள், டூரிங் திரையரங்குகள், திறந்த வெளித் திரையரங்குகள் மற்றும் மேற் கூறியவைகளை பகுதி நிலைத் திரையரங்குகளாக/நிரந்தர திரையரங்குகளாக மாற்றவும் நிதியுதவி அளிக்க விதிமுறைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

மூலதனத்தொகை -

தமிழ்நாடு அரசின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாக ரூ. 35 இலட்சமும் நீண்டகாலக் கடனாக ரூ. 15 இலட்சமும் இக் கழகத்தின் மூலதனமாகும்.

31—3—83 நாளின்படி 80 விண்ணப்பங்களுக்கு மட்டுமே கடன் ஒப்புதல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இது தமிழ் நாட்டிலுள்ள 13 மாவட்டங்களுக்குமான ரூ. 92,03 இலட்ச ஒப்புதல் ஆகும். இதில் ரூ. 88.55 இலட்சம் கடன் தொகை வழங்கப் பட்டுள்ளது. இன்னும் திரைப்பட அரங்கு கட்டுதல் ஒருதொழிலாக அங்கீ கரிக்கப்படவில்லை. இதுவரை 75 திரையரங்குகள் கட்டி முடிக் கப்பட்டு திரைப்படக் காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஒழுக்கக் கண்காணிப்பு நிறுவனங்கள்--

சீர்திருத்தப்பள்ளி மற்றும் மகளிர் ஒழுக்க கண்காணிப்புப் பணி என்று அழைக்கப்படும் இத்துறையிலுள்ள நிறுவனங்கள் 1920-ம் ஆண்டு தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்திலுள்ள நியமனங்களின்படி, குழந்தைகளின் (கைவிடப்பட்ட, கட்டுப்பாடற்ற மற்றும் இளங்குற்றவாளிகளான) பாதுகாப்பு, சீர்திருத்தப் பயிற்சி மற்றும் அவர்களின் மறுவாழ்வு ஆகியவைகளை குறிக்கோளாகக் கொண்டு இயங்குகின்றன. இச்சட்டத்தின் செயலாக்கம் பற்றிய பொறுப்பு காவல்துறையினரை சார்ந்து உள்ளது.

வரவேற்பில்லங்கள்—

பையன்கள் மற்றும் பெண்களுக்கென்று அமைந்துள்ள வரவேற்பில்லங்களில், நீதிமன்றங்களின் விசாரணை மற்றும் புலனாய்வு ஆகியவைகளுக்கான நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பையன்கள் மற்றும் பெண்களுக்கு, முறையான பாதுகாப்பும், பராமரிப்பும் வழங்கப்படுகிறது. மாநிலத்திலான ஒன்பது வரவேற்பில்லங்களும் கீழ்க்கண்ட இடங்களில் இயங்கி வருகின்றன. சென்னை, திருநெல்வேலி, இராமநாதபுரத்தில் அமராவதிப்புதூர், தென்னாற்காடு மாவட்டத்தில் விழுப்புரம், சேலம், ஈரோடு, தர்மபுரி மற்றும் செங்கற்பட்டு, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள சீர்திருத்தப் பள்ளிகளுடன் இணைந்தும் செயல்படுகின்றன. இவை தவிர தனியார் பராமரிப்பில் அரசு மானியத்தைப் கொண்டு, ஐந்து இடங்களிலும் வரவேற்பில்லங்கள் இயங்கி வருகின்றன. அவை வருமாறு; வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் தஞ்சாவூர் (பெண்களுக்கு மட்டும்) மேலும், சென்னை, பாலமந்திர் நிறுவனத்தில் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கென ஒரு வரவேற்பில்லமும் இயங்கி வருகிறது. அனைத்து வரவேற்பில்லங்களிலும் சேர்த்து ஆரம்ப எண்ணிக்கையாக 1—4—1982 அன்று 919 பையன்கள் 38 பெண்கள் இருந்தனர். 9,454 பையன்களும்; 442 பெண்களும் புதிதாக அனுமதிக்கப்பட்டும் 9,453 பையன்களும், 434 பெண்களும் இலத்தினின்றும் நீக்கம் செய்யப்பட்டனர். ஆண்டு இறுதியில் 31—3—83 அன்று 920 பையன்களும் 46 பெண்களும் வரவேற்பு இல்லங்களில் இருந்தனர்.

பிற்காப்பில்லங்கள் :

நீண்ட கால தங்குமிடங்களாக இயங்கும் மூன்று பிற்காப்பு இல்லங்களில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்காக வேலூரில் ஒன்றும், பையன்களுக்காக செங்கற்பட்டு மற்றும் மதுரையிலும் இயங்கி வருகின்றன. வேலூரில் இயங்கும் அரசினர் மகளிர் பிற்காப்பில்லத்தில் பெண்கள் சீர்திருத்தப்பள்ளி, மகளிர் காப்பகங்கள் மற்றும் வேலூர் பெண்களுக்கான மாநில சிறை ஆகியவைகளிலிருந்து பயிற்சி முடிந்து வெளியேறும் பெண்களுக்கு மேற்கொண்டு தங்குமிடம் அளித்து, பயிற்சியை தொடர்ந்து அளிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகிறது. இத்துடன் இணைந்த வகையில் வேலூரில் தொழிற் பயிற்சிக் கூடமொன்றும் (அரசினர் ஆடைகள் மற்றும் ஹோல்டால் செய்தலுமான பயிற்சி நிலையம்) இல்லவாசிகளுக்கென இயங்கி வருகிறது. செங்கற்பட்டில் அமைந்துள்ள அரசினர் மாணவர் பிற்காப்பு இல்லத்தில் சீர்திருத்தப்பள்ளிகளிலிருந்து வெளியேறும் ஆதரவற்ற மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு, அவர்கள் கருமார் பணியிலும், புத்தக கட்டுமான பயிற்சியிலும் பயிற்றுவிக்கப்படுகின்றனர். மதுரையில் அமைந்துள்ள அரசினர் மாணவர் பிற்காப்பில்லத்தில் தென் மாவட்டங்களைச் சேர்ந்த சீர்திருத்தப் பள்ளிகளிலிருந்து வெளியேறும் ஆதரவற்ற மாணவர்கள் அனுமதிக்கப் பட்டு, அவர்கள் கருமார் பணியிலும் தையற் பயிற்சியிலும் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

அரசினர் மகளிர் பிற்காப்பில்லம், வேலூர்.

1—4—1982 அன்று 56 பெண்கள் மறுவாழ்விற்காக இருந்தனர். 31—3—1983 இறுதியில் அம்மாதிரியான பெண்களின் எண்ணிக்கை 54 என்ற அளவில் இருந்தது.

அரசினர் சிறுவர் பிற்காப்பில்லம், மதுரை

1—4—1982 அன்று ஆரம்ப எண்ணிக்கையாக 25 பையன்கள் இருந்தனர். ஆண்டு முழுவதும் 58 பையன்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில் 56 பையன்கள் இல்ல நீக்கமும் செய்யப்பட்டனர். 1—3—1983 அன்று 27 பையன்கள் இல்லத்தில் இருந்தனர்.

அரசினர் சிறுவர் பிற்காப்பில்லம், செங்கற்பட்டு:

1—4—1982 அன்று 33 பையன்கள் இல்லத்தில் இருந்தனர். ஆண்டு முழுவதும் 75 பையன்கள் அனுமதிக்கப்பட்டனர். 60 பையன்கள் இல்ல நீக்கம் செய்யப்பட்டனர். 31—3—1983 அன்று 48 பையன்கள் இல்லத்தில் இருந்தனர்.

சீர்திருத்தப் பள்ளிகள் :

அனைத்து சீர்திருத்தப் பள்ளிகளிலும் சேர்த்து, ஆரம்ப எண்ணிக்கையாக 1—4—1982 அன்று 2,664 பையன்கள், 703 பெண்கள் இருந்தனர். 2,680 பையன்களும், 162 பெண்களும் புதிதாக சேர்க்கப்பட்டும், 2,935 பையன்கள், 156 பெண்கள் பள்ளி நீக்கம் செய்யப்பட்டும் உள்ளனர், ஆண்டு முடிவான 31—3—1983 அன்று 2,409 பையன்கள், 709 பெண்கள் பள்ளியில் இருந்தனர்.

தொழிற்கல்வி :

பொதுக்கல்வி தவிர மாணவர்களின் திறமை, விருப்பம் ஆகியவைகளின்படி. அவர்களுக்கு தொழிற்கல்வி பயிற்சி அளிக்கப்படுகிறது. அரசு சீர்திருத்தப்பள்ளிகளில், கீழ்க்கண்ட தொழில்களில் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

தச்சு, நெசவு, தையல், உலோகப் பணி, கருமார் பணி, புத்தகம் கட்டுதல், பாய் நெசவு, கொளத்துப்பணி, இசை (குரல்), வாத்திய இசைப் பயிற்சி, விவசாயம், விசைத்தறி நெசவு, மற்றும் சோப் செய்தல்.

மகளிர் மீட்பு நிலையங்கள்/மகளிர் வரவேற்பு இல்லங்கள் :

மேற் சொன்ன சட்ட விதிகளின்படி, நீதிமன்றங்களின் விசாரணை மற்றும் தேவைக்காக, பெண்கள் மற்றும் சிறுமிகளை தற்காலிகமாக பாதுகாத்து பொறுப்பேற்க, இம்மாதிரியான நிலையங்கள அமைக்கப்பட்டுள்ளன.

மேற் சொன்ன மகளிர் காப்பகத்துடன் இணைந்த நேரடி நிர்வாகத்தில் மகளிர் மீட்பு நிலையங்கள் மற்றும் வரவேற்பு இல்லங்கள் இணைந்து இயங்கி வருகின்றன. மேலும், தனியார்

பராமரிப்பில், அரசின் மானியத் தொகை கொண்டு இரண்டு நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவை வருமாறு :

தஞ்சாவூர் (தஞ்சாவூர் மகளிர் காப்பக நிலைய ஆதரவில் இயங்குவது). மற்றொன்று சென்னையில் இயங்குவது (அபய நிலையம்). சென்னை மகளிர் காப்பக நிலையத்தின் கீழியியங்கும் அதிகார பூர்வமற்ற நிறுவனமாகும். சென்னை, அபய நிலையம், பாதுகாப்பு தேவைப்படும் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகளுக்காக இயங்கி வருகிறது. அதுமட்டுமன்றி, சென்னை, அரசினர் மகளிர் காப்பகம், மற்றும் ஸ்திரிசதனாவில் குறுகிய கால தங்குமிடம் ஒன்றும், அதனுடன் இணைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

அறிக்கை வழங்கும் இவ்வாண்டில், கடந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 2,829 இல்லவாசிகளின் எண்ணிக்கையை ஒப்பிடும் போது, சுயமாக இயங்கும் ஐந்து நிலையங்கள் மற்றும் சென்னை, அரசினர் மகளிர் காப்பக ஸ்திரிசதனா நிலையத்துடனும், மற்றும் மதுரை அரசினர் மகளிர் காப்பகத்துடனும் இணைந்த நிலையங்களிலுமாக சேர்த்து மொத்தம் 3,595 மகளிரும், 32 சிறுவர்களும் அனுமதிக்கப்பட்டனர்.

கல்வி :

1. சென்னை, அரசினர் மகளிர் காப்பக ஸ்திரிசதனாமீட்பு இல்லம் மற்றும் மணமாகாத தாய்களின் இல்லம்.

எட்டாம் வகுப்பு வரை இயங்கும் பள்ளி (அரசினர் ஸ்திரி சதனா சிறப்பு பள்ளி) ஒன்று தற்போதும் அங்கு செயல்பட்டு வருகிறது. கல்வியில் அதிக ஆர்வம் செலுத்தும் இல்லவாசிகள் அவர்களது உயர் கல்விக்காக, சென்னை லேடி வெலிங்டன் உயர்நிலைப்பள்ளிக்கு 9, 10 மற்றும் +2 கற்க அனுப்பி வைக்கப் படுகின்றனர்.

அரசினர் மகளிர் காப்பகம், திருச்சிராப்பள்ளி :

இவ்வில்லத்தில் எட்டாம் வகுப்பு முடிய கல்வியில் பயிற்சி அளிக்கும் வகையில், வசதிகள் உள்ளன. மேலும், இல்லவாசிகள் தையல் மற்றும் ஆடை தயாரிப்பிலும் பயிற்றுவிக்கப்படுகின்றனர். கல்வி கற்கும் வயதினைத் தாண்டி விட்ட நிலையில் அனுமதிக்கப்

படும் இல்லவாசிகளுக்கு, சிறந்த முறையில் அடிப்படை நிலையி லிருந்து போதிக்கும் முறை வகுக்கப்படுகிறது.

அரசினர் மகளிர் காப்பகம், மதுரை :

கல்வித் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில், இவ் வில்லத்தில் ஐந்தாம் வகுப்பு முடிய இயங்கும் பள்ளி ஒன்று உள்ளது. கல்வியின் தர நிர்ணய அமைப்பான ஆதார மற்றும் வயது வந்தோர் கல்வி திட்ட அடிப்படையில் வகுப்புகள் முறை யாக நடத்தப்படுகின்றன.

அரசினர் மகளிர் காப்பகம், சேலம் மற்றும் கோயம்புத்தூர் :

மேற்படி இல்லங்களில் இடைநிலை ஆசிரியர்களை அமர்த்தி இல்லவாசிகளுக்கு எழுத, படிக்க, கணக்கிட ஆரம்ப அடிப்படை யிலிருந்து கல்வி கற்றுத்தரப்படுகிறது.

கூடுதல் சிறப்புப் பணிகள் :

சென்னை, அரசினர் மகளிர் காப்பக ஸ்திரிசதனா நிலையம் மற்றும் மணமாகாத தாய்களின் இல்லம் ஆகியவைகளின் இல்ல வாசிகள் அவர்களது முறையான சில பயிற்சிகள் மற்றும் பொதுக் கல்வி தவிர நாடகங்கள், இசை, நடனம் மற்றும் பஜனை போன்றவற்றிலும் மிகுந்த ஈடுபாடு செலுத்தி வருகின்றனர். திரைப்பட சேமிப்பு நிலையத்திலிருந்து அவ்வப்போது வழங்கப் படும் சிறந்த மற்றும் கல்வி சம்பந்தமான திரைப்படங்கள், உயர்ந்த ஒலி அமைப்புடன் கூடிய, திரைப்படக் கருவியால் இல்லவாசிகளுக்கு திரையிடப்படுகின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும், இவ்வில்ல மாணவிகள் வாரந்தோறும் பங்கு பெறுகின்றனர். பிற நிறுவனங்களின் இல்லவாசிகளும், இம் மாதிரியான பல்வேறு முறைகளிலும் பங்கு பெறுகின்றனர். சிறந்த இடங்களுக்கு இல்லவாசிகள் சுற்றுலா பயணமாக அழைத் துச் செல்லப்படுவதோடு, ஆர்வமிக்க பணிகளிலும் ஈடுபடுத்தப் படுகின்றனர். இல்லவாசிகளுக்கும் சிறந்த ஒழுக்க போதனைகள் எல்லா இல்லங்களிலும் நடத்தப்படுகின்றன.

மறு வாழ்வு திட்டங்கள்:

அறிக்கை வழங்கும் இவ்வாண்டில் 279 இல்லவாசிகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ளபடி மறுவாழ்க்கை அமைத்து தரப்பட்டுள்ளது :—

1.	பெற்றோர்கள் மற்றும் கணவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டவர்கள்.	187
2.	வேலூர், அரசினர் ஆடைகள் மற்றும் உள்ளடக்கிகள் செய்யும் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற அரசினர் மகளிர் பிற்காப்பு இல்லத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள்.	85
3.	திருமணம் செய்து வைக்கப்பட்டவர்கள்	7

1—4—1982 முதல் 31—3—1983 முடிய உள்ள காலத்தில் இவ்வில்லங்களுக்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 16.49 இலட்சத்தில் கடந்த ஆண்டில் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 12.54 இலட்சம் ஆகும். தொழிற் பிரிவு மட்டுமில்லாது பல்வேறு வகைகளிலும் அரசுக்கு ரூ. 18,950 வருமானம் வந்துள்ளது.

அத்தியாயம்-11.

வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறை

அத்தியாயம்-11.

வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை.

சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம், தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புச் சட்டம் என்கிற குறித்த சட்டப்படி அமையப்பெற்ற ஒரு நிறுவனமாகும். பின்னர் இச் சட்டம் தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு 22 ஆம் சட்டத்தின்படி திருத்தப்பட்டது. இம் மன்றத்தின் அதிகார வரம்பு இவ்வாண்டில் மாறவே இல்லை.

இம்மன்றத்தின் முக்கிய நோக்கங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :

(a) பெருநகர்ப் பகுதியை, சுகாதார சூழ்நிலையுடன் கூடிய வாழ்வுக்கேற்றவாறு முறையாக மேம்படுத்தத் திட்டங்கள் வகுப்பது.

(b) வளர்ச்சித் திட்டத்தின்படி, உரிய இடத்தில், உரிய காலத்தில், பல்துறை அளவிலான ஒருங்கிணைப்பு, வளர்ச்சிக் கண்காணிப்பு ஆகியவற்றின் மூலமாக அரசு நிறுவனங்கள் நேரடி முதலீடுகள் செய்ய உத்திரவு பிறப்பிப்பது.

(c) மேற்படி திட்ட நோக்கத்தை எய்த, இத்திட்டத்திற் கிணங்க தனியார் துறை வளர்ச்சியை முறைப்படுத்துவது.

(d) ஏற்று ஒப்புதலளித்த திட்டங்களின் நோக்கங்களை நிறைவேற்ற முக்கியமான இடங்களில் வளர்ச்சிப் பணியை மேம் படுத்துவது.

இம்மன்றம் இவ்வாண்டில் பத்து முறையும், குழு பதினாறு முறையும் கூடின. சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்தில் செயல்முறைப் பிரிவுகள் மூன்று உள்ளன ; அவை குறித்த விவரம் வருமாறு :—

(a) வளர்ச்சித் திட்டப் பிரிவு.

(b) பகுதித் திட்டப் பிரிவு.

(c) பகுதி மேம்பாட்டுப் பிரிவு.

சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம்—I :

இத்திட்டம், 1977–78 ஆம் ஆண்டு முதற்கொண்டு செயற் படுத்தப்பட்டு வருகிறது ; அது தற்போது நிறைவுபெறும் நிலை யில் இருக்கிறது. இத்திட்டத்திற்கான தற்போதைய செலவு மதிப்பீடு ரூ. 56.11 கோடி ஆகும். பாதுகாப்பு (மனைகள், பணிகள், குடிசைப் பகுதி மேம்பாடு), வேலை வாய்ப்புப் பெருக்கம், மகப்பேறு-குழந்தை நலப் பணி, சாலை பேருந்துப் போக்கு வரத்து ஆகிய துறைகளில் கணிசமான முதலீடு செய்ய சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்—I வகை செய்கிறது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் துறை, சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்று வாரியம், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், சமூக நல இயக்குநர், காவல் துறை, பல்லவன் போக்குவரத்துக் கழகம், சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம் ஆகியவை இத்திட்டத்தைச் செயற் படுத்தும் முக்கிய நிறுவனங்களாகும்.

சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம்—II :

இத்திட்டம் 1981–82-ல் தொடங்கப்பட்டது ; 1985-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நகர்ப்பகுதி பிரச்சினை களைக் குறைந்த செலவில் சமாளித்து, பெருநகரை மேற்கொண் டும் வளர்ச்சி பெறச் செய்வதற்காக, 73.9 கோடி ரூபாய் செல வாகும் II ஆம் திட்டத்தின் நோக்கமாகும். மொத்தச் செல வான 73.9 கோடி ரூபாயில் 35.28 கோடி ரூபாயை உலக வங்கி நிதியுதவியாக வழங்கும் இத்திட்டத்திற்கு உலக வங்கி வழங்கும் கடனுக்கான ஒப்பந்தம் 14–1–1981-ல் கையொப்பமாகியது. குடிசைப் பகுதி சீரமைப்பு, குடிசைப் பகுதிகளில் மருத்துவப் பாதுகாப்பு, பாலர் பள்ளிகள், மனைகள், பணித் திட்டங்கள், சென்னை மாநகராட்சி கெட்டிக் கழிவுப் பொருள்களைத் தூய்மைப்படுத்தி மீண்டும் பயன்படுத்தல், சாலைப் போக்கு வரத்து மேம்பாடு, நகர்ப் பகுதிப் போக்குவரத்துத் திட்டத்திற்கு நிதியுதவி, சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்—I-ல் வகை செய்யப்பட்டுள்ளதுபோல், நகர்ப் பகுதி ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவது முதலிய பணித் திட்டங்கள் அடங்கிய அடங்கல் திட்டப் பணிகளுக்கு இடம் பெற இத்

திட்டம் வகை செய்கிறது. இது தொடர்பான அமைப்புகள் இத் திட்டப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்புள்ளவை ஆகும், சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம் இத்திட்டப் பணிகளைக் கண்காணித்து, ஒருங்கிணைக்கும் பொறுப்புடைய தாகும்.

திட்டமிடும் பணி :

சென்னைப் பெருநகர்ப் பகுதியில் மனை ஒன்றை மேம்படுத்த/ கட்டிடம் ஒன்றைக் கட்ட விழையும் எவரும், நகர-நாட்டுப்புற அமைப்புச் சட்டத்தின் 48, 49 ஆம் பிரிவுகளின்படி, இந்த அதிகார மன்றத்திடமிருந்து திட்ட அனுமதி பெற்றாக வேண்டும். அது, பெருந்திட்ட நிலப்பயன் மண்டல மேம்பாட்டுக் கட்டுப் பாட்டு விதிமுறைகளுக்கு ஏற்ப இருக்க வேண்டும். இந்த விதிமுறைகள், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந் திட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளன. இந்த விதிமுறை களைக் கொண்டுதான் சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதிகள் வருங்காலத்தில் மேம்பாட்டு இலட்சியத்தை அடைய முடியும். திட்ட அனுமதி வழங்கும்/வழங்க மறுக்கும், அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்கள்/திட்டத்தின்படி அல்லாது கட்டப்படும் கட்டிடங்கள் குறித்து நடவடிக்கை தொடருதல் ஆகியவை குறித்த அதிகாரங்களின் பெரும்பாலானவை சென்னைப் பெரு நகர்ப் பகுதியில் அமைந்துள்ள உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளன. 1982–83-ல் இந்த அதிகார மன்றத்திற்கு வரப்பெற்று முடிவெடுத்த விண்ணப்பங்களின் எண் ணிக்கை விவரம் பின் வருமாறு :

(i) இவ்வாண்டுத் தொடக்கத்தில் முடி வெடுக்கப்படாதிருந்த திட்ட அனுமதி விண்ணப்பங்களின் எண்ணிக்கை.	501
(ii) வரப்பெற்ற திட்ட அனுமதி விண்ணப் பங்களின் எண்ணிக்கை.	3,121
(iii) முடிவெடுக்கப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பங்களின் எண்ணிக்கை.	3,250
(iv) இவ்வாண்டு இறுதியில் முடிவெடுக்கப் படாதிருந்த திட்ட அனுமதி விண்ணப் பங்களின் எண்ணிக்கை.	372
(v) இவ்வாண்டில் பரிசீலனை செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.	258

பகுதி மேம்பாட்டுப் பணி :

புதிய நகர்—மறைமலை நகர் :

சென்னைப் பெருநகர்ப் பகுதியின் முக்கிய வளர்ச்சிக்கு இன்றியமையாத பெருந் திட்டத்தில் வகை செய்துள்ள மூன்று புதிய/துணை நகரங்களில் மறைமலை நகரும் ஒன்றாகும். மறைமலை நகருக்குரிய புதிய நகர்த் திட்டம், 3,300 ஏக்கர் பரப்பளவில், 1,00,000 மக்களுக்கு இடவசதி அளிக்க உருவாக்கப்பட்டதாகும். எல்லா வசதிகளையும் தன்னகத்தே கொண்ட வகையில் வகுக்கப்பட்ட இத்திட்டம், தொழில் பகுதி, நகர்ப் பகுதி, மனமகிழ் திட்டப் பகுதி, குடியிருப்புப் பகுதி ஆகியவற்றிற்கு வகை செய்கிறது. மறைமலை நகருக்கான இந்த நில மேம்பாட்டுக் கொள்கைக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம் 1979-ல் ஒப்புதல் அளித்தது.

மறைமலை நகரில் நில வீட்டு வசதி மேம்பாடு :

இத்திட்டத்தின் முதற் கட்டமாக, 693 ஏக்கர் பரப்பளவுள்ள காட்டு நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டது. திட்டமிட்டபடி எடுத்துக்கொண்ட மொத்தம் 10 அண்டைப் பகுதிகளில், முறையே, 134 ஏக்கர், 115 ஏக்கர், 145 ஏக்கர் பரப்பளவுள்ள மூன்று அண்டைப் பகுதிகள், 8,000 குடும்பங்களைக் குடியமர்த்துவதற்காக முதல் கட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டன. குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு கட்டப்பட்ட 1,366 வீடுகளும், நடுத்தர வருமானமுள்ளவர்களுக்குக் கட்டப்பட்ட 60 வீடுகளும் பொது மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. ''ஹட்கோ'' நிதியுதவியுடன் குறைந்த வருமானமுள்ளவர்களுக்காக 234 வீடுகளும் நடுத்தர வருமானமுள்ளவர்களுக்காக 60 வீடுகளும் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அதே போன்று, ஒருங்கே அமைந்துள்ள சுமார் 480 ஏக்கர் நிலம், தொழில் நடவடிக்கைகளுக்காக, மேம்படுத்தப்பட்டுள்ளது.

பேருந்து-ட்ரக் நிலையங்கள் :

மூன்று தேசிய நெடுஞ்சாலைகள், 4, 5, 45 ஆகிய பெருவழிகளில் மூன்று பேருந்து-ட்ரக் நிலையங்கள் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. இதற்கென தெரிந்தெடுத்துள்ள மனைகள், முறையே, கோயம்பேடு, மாதவரம், ஆலந்தூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இத் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கி, 324 இலட்சம் கடனுக்கு வகை செய்துள்ளது.

அனைத்து நாடுகள் வளர்ச்சி அமைப்பைச் (I. D. A.) சாராத வேறு திட்டப் பணிகள்.

சென்னைப் பெருநகர்ப் பகுதியில், குடிநீர் வடிகால் திட்டம், சாலைகள் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டப் பணிகள், மத்திய அரசின் நிதியுதவியுடன் 1975—76-லிருந்து நிறைவேற்றப் பட்டு வருகின்றன. குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்று திட்டங் களுக்கு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், சென்னைப் பெரு நகர் வளர்ச்சி அதிகார மன்றம், சாலைத் திட்டங்களுக்கு சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் துறை, வடிகால் திட்டங்களுக்கு சென்னை மாநகராட்சி, பொதுப் பணித் துறை, பகுதி மேம்பாட்டுக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம் ஆகியவை மேற்படி திட்டப் பணிகளை நிறை வேற்றும் பொறுப்புள்ள அமைப்புகளாகும். நெடுஞ்சாலை கிராமப் பணிகள் துறை, சென்னை மாநகராட்சி ஆகியவை நிறை வேற்றிவரும் 12 சாலை பணிகள் நடை பெற்று வருகின்றன. தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் நிறைவேற்றும் குடிநீர்-வடி கால் திட்டப் பணிகள் 6 நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு கழிவு நீரகற்று வாரியம் எடுத்துக் கொண்டுள்ள கழிவு நீரகற்று திட்டப் பணிகள 5 நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

நிதியுதவி :

சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்தில் திட்டப் பணிகளுக்கு உதவும் நிதி ஆதாரங்கள் வருமாறு :—

(i) தமிழ்நாடு அரசிடமிருந்து பெறும் கடன்களும் — மானியங்களும்.

(ii) வீட்டு வசதி—நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறும் கடன்கள்.

(iii) மனைகள்/கட்டிடங்கள் விற்பனை மூலம் கிடைக்கும் வரவுகள்.

(iv) நகர்-நாட்டுப்புற அமைப்புச் சட்டத்தின் கீழ் விதிக்கும் "மேம்பாட்டுக் கட்டணங்கள்" மூலம் கிடைக்கும் வரவுகள்.

(v) 'மேம்பாட்டு நிதி' வகையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதியில் உள்ள உள்ளாட்சி மன்றங்கள் செலுத்தும் ஒரு சதவீத பங்குத் தொகை.

அனைத்து நாடுகள் வளர்ச்சி அமைப்பின் நிதியுதவி பெறும் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டங்கள் (i), (ii) அனைத்து நாடுகள் வளர்ச்சி அமைப்பின் (I. D. A.) நிதியுதவி பெறும் சாராத திட்டப் பணிகள் ஆகியவற்றிற்குரிய நிதிகளைச் சம்பந்தப் பட்ட அமைப்புகளுக்கு அரசே நேரடியாக வழங்குகிறது. 1982–83-ல் மொத்தம் 805.54 இலட்சம் ரூபாய் வரவு கிட்டியது; 663.47 இலட்சம் ரூபாய் செலவு ஏற்பட்டது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு 1961 ஆம ஆண்டு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். இவ்வாரியத்தின் தலைவரையும் உறுப்பினர் களையும் அரசு நியமனம் செய்கிறது.

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு வீட்டு வசதி திட்டம் :

நடைபாதை வியாபாரிகள், சிறிய கடை உரிமையாளர்கள, நாட்கூலி தொழிலாளர்கள், சிறு வியாபாரிகள், சிறு கருவித் தொழிலாளர்கள் முதலியோர் இத்திட்டத்தினால் பயனடை கின்றனர். இந்த ஆண்டு 2,821 கட்டடத் தொகுதிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, மனை-பணித் திட்டம் உட்பட 1,625 கட்டிடத் தொகுதிகள் கட்டி முடிக்கப்பட்டன. இதற்கு 33.57 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

குறைந்த வருமானம் உடையோருக்கான வீட்டு வசதித் திட்டம் :

351 ரூபாய் முதல் 600 ரூபாய் வரை மாத வருமானம் பெறு பவர்களின் பயனுக்காக இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு, 2,801 கட்டிடத் தொகுதிகள் எடுத்துக் கொள்ளப் பட்டன. 198.31 இலட்சம் ரூபாய் செலவில் 1,561 கட்டிடத் தொகுதிகள் கட்டி முடிக்கப்பட்டன.

நடுத்தர வருமானம் உடையோருக்கான வீட்டு வசதி, அதிக வருமான உடையோருக்கான வீட்டு வசதித் திட்டங்கள் :

நடுத்தர வருமானம் உடையவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம் 601 ரூபாய் முதல் 1,500 ரூபாய் வரை மாத வருமானம் பெறுபவர்களுக்கு பயனளிக்கிறது. 1,501 ரூபாய்க்கு மேல் மாத வருமானம் பெறுபவர்களுக்கு, அதிக வருமானம் உடையவருக்கான வீட்டு வசதித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 6,941 கட்டிடத் தொகுதிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. 8,77.21 இலட்சம் ரூபாய் செலவில், 2,759 கட்டிடத் தொகுதிகள் கட்டி முடிக்கப்பட்டன.

நிலம் கையகப்படுத்தலும் வளர்ச்சித் திட்டங்களும்:

வீட்டு வசதி வாரியம், பெரும் நிலப்பரப்பைக் கையகப் படுத்தி, அவற்றை மேம்படுத்தி அவ்வப்போது பலதரப்பட்ட மக்களுக்கு விற்பனை செய்கிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேம்படுத்தப்பட்ட சுற்றுப்புறப் பகுதிகளில் அகலமான சாலைகள், தெரு விளக்குகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றல், பள்ளிகள், மருத்துவ மனைகள், விளையாடுமிடங்கள், சமுதாயக் கூடங்கள் போன்ற எல்லா வசதிகளும் உள்ளன. சென்னை மாநகரில், தென் சென்னை, அசோக் நகர், கலைஞர் கருணாநிதி நகர், அறிஞர் அண்ணா நகர், கொரட்டூர், வியாசர்பாடி, அறிஞர் அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், திருவான்மியூர் போன்ற பகுதிகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேம்படுத்தப்படுகின்றன. இதைப்போன்று, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, திருச்செங்கோடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, வேலூர் போன்ற நகரங்களின் சுற்றுப்புறப் பகுதிகளும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேம்படுத்தப்படுகின்றன. இந்த ஆண்டு இப் பணிக்காக 263.71 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

குடிசைப் பகுதி மேம்பாடு/குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம்:

நான்கு இடங்கள் தவிர, அதாவது மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய இடங்கள் தவிர ஏனைய நகரங்களில் குடிசைப் பகுதித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட தடையை அரசு இந்த ஆண்டு தளர்த்தியுள்ளது.

இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கான நிதியொதுக்கத்தை 50 இலட்சத்திலிருந்து 350 இலட்சமாக உயர்த்தியுள்ளது. இந்த ஆண்டு சேலம் மாவட்டத்தில் உளள பள்ளிப்பாளையத்தில் 1.248 கட்டிடத் தொகுதிகளும், மதுரை வடக்கில் தாதநேரி ஊராட்சியில் 2,928 கட்டிடத் தொகுதிகளும் மேற்கொள்ளப் பட்டன. இந்த ஆண்டு 368 கட்டிடத் தொகுதிகள் கட்டி முடிக்கப்பட்டன. இதற்காக 127.39 இலட்சம் ரூபாய் செல விடப்பட்டது.

பிறந் துறை பணிகள்:

சென்னைப் பெருநகர்ப் பகுதி வளர்ச்சி அதிகார மன்றம், மறைமலை நகரில் 500 ஏக்கர் பரப்பில் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. அங்கு, சாலைகள் அமைத்தல், மழை நீர் வடிகால் அமைத்தல், சிறு பாலங்கள் கட்டுதல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. அவை தற்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. குறைந்த வருமானமுடைய தொகுதியினருக்கு 1,096 வீடுகளும், நடுத்தர வருமானம் பெறும் தொகுதியினருக்கு 90 வீடுகளும் கட்டும் பணியை வாரியம் மேற்கொண்டுள்ளது. இதில், குறைந்த வருமானமுடைய தொகுதியினருக்கு, 774 வீடுகளும், நடுத்தர வருமானம் பெறும் தொகுதியினருக்கு 30 வீடுகளும் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மணலியில், 419 ஏக்கர் பரப்பில் மற்றொரு வளர்ச்சித் திட்டத்தை சென்னைப் பெருநகர்ப் பகுதி வளர்ச்சி அதிகார மன்றம் மேற் கொள்ளத் திட்டமிட்டு அப்பணியைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைத்தது. மணலியில் குறைந்த வருமானமுடைய தொகுதியினருக்கு இதுவரை 958 வீடுகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ளது. நடுத்தர வருமானம் பெறும் தொகுதியினருக்கு இப்போது 270 வீடுகளைக் கட்டி வருகிறது.

மனைகளும் பணித் திட்டங்களும்:

உலக வங்கியின் ஆதரவில் செயல்படும் இத் திட்டத்தால், சென்னைப் பெருநகர்ப் பகுதியில் வாழும், பொருளாதாரத்தில் நலிவுற்ற தொகுதியாளர் பயனடைவர். சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் –I-ன் கீழ், அரும்பாக்கத்தில் 2,304 வீட்டு மனைகளும், வில்லிவாக்கத்தில் 3,750 வீட்டு மனைகளும் மேம்

படுத்தப்பட்டன. இவற்றில், அரும்பாக்கத்திலுள்ள 1,699 வீட்டு மனைகளும், வில்லிவாக்கத்திலுள்ள 2,242 வீட்டு மனைகளும், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கப்படும். கொடுங்கையூரில் பணி நடைபெற்று வருகிறது. பொருளாதார நிலையில் நலிவுற்ற பிரிவினருக்கு 1,245 வீட்டு மனைகள் மேம் படுத்தப்பட்டன. 5,238 வீட்டு மனைகள் மேம்படுத்தப்படுகின் றன.

ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் மதுரையில் எல்லிஸ் நகர் திட்டத்தை யும், கோயம்புத்தூரில் குறிச்சியில் மேற்கொள்ளப்படும் திட் டத்தையும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டது. இத் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதியுதவியளித்தது. நடுத்தர சிறு நகரங்களின்கீழ் ஒருங்கிணைந்த நகர்ப்பகுதி வளர்ச்சிப் பணிகள் உதகமண்டலம், திருவண்ணாமலை, கரூர் ஆகிய இடங் களில் மேற்கொள்ளப்படுகின்றன.

வீட்டுவசதி நகர்பகுதி வளர்ச்சிக் கழகத்தின் (HUDCO) பணி.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு முக்கிய நிதி உதவி அளிக்கும் நிறுவனமான புதுடில்லியிலுள்ள வீட்டுவசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகம் (HUDCO) 1982—83 ஆம் ஆண்டில், 2,420.45 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் 40 திட்டங் களுக்கு ஒப்புதலளித்துள்ளது. இது முந்தைய ஆண்டுகளை விட அதிகமாகும். 11,785 கட்டிடத் தொகுதிகளை மேம்படுத்தி கட்டுமானப்பணியைத் தொடங்க இக்கழகம் ஒப்புதலளித்துள்ளது. மேற்குறிப்பிட்ட கட்டிடத் தொகுதிகளுக்கு, இக் கழகம் வழங்கிய மொத்தக் கடன் தொகை 1,662.09 இலட்சம் ரூபாய்க்கும். அதிகமாகும். நில மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள் வதற்கான வரைவுத் திட்டங்களுக்கு இவ்வாரியம் ஒப்புதலளித்தது. வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் விதித்துறையின்கீழ், வீட்டு வசதி-மேம்பாட்டுத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான விதி களுக்கும் இவ்வாரியம் ஒப்புதலளித்தது. இவை தவிர, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் 70, 71ஆம் பிரிவுகளை விரிவாக திருத்துவதற்கும் இவ்வாரியம் ஒப்புதலளித்தது. எத்தனை வீடுகள் தேவை என்பது குறித்து ஆய்வு செய்த பின்னர்,

19 நகராட்சிகளுக்குள் (கூட்டு நகர்ப்பகுதிகள்) வரும் 70 ஊராட்சிகளில் வீட்டு வசதி - வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளவும் இவ்வாரியம் ஒப்புதலளித்தது. இதற்கிணங்க, வீடுகள் தேவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இப் பணி முடிவுறும் நிலையிலுள்ளது. இந்த ஆய்வின் அடிப்படையில், வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள இந்த ஊராட்சிகளில் வீட்டு வசதி தேவைப்படும் பொருத்தமான பகுதிகள் கண்டறியப் படும். மேற்குறிப்பிட்டவற்றுடன் திட்டமிடல் பிரிவு, இந்த ஆண்டு 45 வரைபடங்களையும், 46 கட்டிட வடிவமைப்புகளையும் தயாரித்து அவற்றிற்கு ஒப்புதலளித்தது. 459 இனங்களுக்கு மறுப்பின்மைச் சான்றிதழ் வழங்கியது.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

1970 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் துவக்கப்பட்ட குடிசைப்பகுதி மாற்று வாரியம் தொடர்ந்து தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், அலுவலக சார்பற்ற தலைவர், ஆறு அலுவலக சார்பற்ற அங்கத்தினர்கள், பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்த ஒன்பது அங்கத்தினர்கள் மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் அடங்கிய அமைப்புடன் பணியாற்றி வருகிறது.

வாரியத்தின் நோக்கம்:

(அ) குறிப்பிட்ட காலவரையரைக்குள் அனைத்துக் குடிசைப் பகுதிகளையும் அகற்றுவது.

(ஆ) சென்னை நகரில் புதிதாக உருவாகும் குடிசைகளை மற்றும் இதர ஆக்கிரமிப்புகளை தடுப்பது.

(இ) குடிநீர், மின்வசதி மற்றும் கழிவுநீர் அகற்றுதல் முதலிய வசதிகளுடன் குடிசைவாழ் மக்களை மாடிக் குடியிருப்புகளில் அமர்த்துவது.

(ஈ) குடிசைப் பகுதிகளில் குடிசை அகற்றும் திட்டம் செய்யப்படாத பகுதிகளில் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி, மின் வசதி போன்ற சுகாதார வசதிகள் அமைத்துக் கொடுத்தல்.

(உ) தனியார் நிலத்தில் வசிக்கும் குடிசை வாழ் மக்களை வெளியேற்றும் நடவடிக்கையை தடுத்து அவர்களுக்கு புதிய மாடி குடியிருப்புகளில் அமர்த்துவது போன்றன.

சென்னை நகர எல்லை விரிவாக்கப்பட்டபின் அக்கோட்டங்களில் உள்ள 85 குடிசைப்பகுதிகளில் சமூகப் பொருளாதார ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்பகுதிகளில் சுமார் 14,400 குடும்பங்கள் வசிக்கின்றன என விவரம் சேகரித்தது. முதற் கட்டமாக, இவ்வாரியம் கால கட்ட நிர்ணயித்ததோடு, திட்டத்தை வகுத்து அப்பகுதிகளில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பல்வேறு திட்டங்களின்கீழ் மாடிக் குடியிருப்புகள் கட்டுவது மற்றும் அடிப்படை சுகாதார வசதிகள் அளிப்பது போன்ற பணி செயல்படுத்தப்படுகின்றன. அவை பின் வருமாறு :—

(அ) அரசு மானியத்தில் குடிசைப்பகுதிகளை அகற்றுவது;

(ஆ) பக்கிங்காம் கால்வாய் திட்டம் ;

(இ) ''ஹட்கோ'' நிறுவனத்தில் உதவியால் குடிசைப்பகுதிகளை அகற்றும் திட்டம் ;

(ஈ) உலக வங்கித் திட்டம் ;

(உ) சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம்; மற்றும்

(ஊ) குடிசைப்பகுதிகளில் விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம்.

கட்டிடப்பணி சாதனைகள்:

பல மாடிக் குடியிருப்புகள் இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குடியிருப்பும் பல நோக்கு அறை, குளியல் அறை, கழிவு நீர் அறை கொண்டு தனித்து உள்ளது. தற்போது ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஆகும் செலவு சுமார் ரூ. 16,000 ஆகும். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் செயல்பட தொடங்குவதற்கு முன்பே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 7,191 குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்பட்டன. இவ்வாரியம் ஏற்பட்ட பிறகு 1981–82 வரை ரூ. 2,653.28 லட்சம் செலவில் 33,579 குடியிருப்புக்கள் கட்டப்பட்டுள்ளன. 1982–83ம் ஆண்டில் ரூ. 247.97 லட்சம் செலவில் 2,200 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன.

சுற்றுபுறமேம்பாட்டுத் திட்டம் மற்றும் விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம்:

சென்னை நகரிலுள்ள எல்லா குடிசைப் பகுதிகளையும் உடனடியாக அகற்ற முடியாது. அரசின் நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்த முறையான திட்டங்களைத் தீட்டி, பல கட்டங்களில் செயல்பட வேண்டியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குடிசைப் பகுதிகளிலும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன. அவையாவன :—

(அ) 10 குடும்பங்களுக்கு ஒரு கழிவு நீர் அறை.

(ஆ) 20 குடும்பங்களுக்கு ஒரு குளியல் அறை.

(இ) 40 மீட்டர் நீளமுள்ள பாதைக்கு ஒரு தெருவிளக்கு.

1981—82 ஆம் ஆண்டு வரை 40,700 குடும்பங்கள் ரூ. 661.43 இலட்சம் செலவில் இத்திட்டத்தினால் பயன் பெற்றுள்ளார்கள். 1982—83 ஆம் ஆண்டில் மேலும் 6,000 குடும்பங்கள் ரூ. 53.35 லட்சம் செலவில் பயனடைந்துள்ளார்கள்.

உலக வங்கித் திட்டம்:

குடிசைப் பகுதிகளில் ரூ. 606 லட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகளுக்காக உலக வங்கி இவ்வாரியத்திற்கு நிதி உதவி செய்ய முன்வந்தது. சென்னை பெருநகர் வளர்ச்சி குழுவினரால் இத்திட்டத்தின் கண்காணிப்பும் குடிசை மாற்று வாரியம் இத்திட்டங்களை செயல்படுத்தும் அங்கமாகவும் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் சிறப்பு அம்சமானது குடிசை வாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்யப்படுவதல்லாமல் தங்களுடைய மனைகளில் வீடுகள் கட்டிக் கொள்வதற்காக நிலத்தைச் சொந்தமாக்கித் தருவதேயாகும். முதற்கட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தவர்கள்.

ஆண்டு.	பயனடைந்த குடும்பங்கள்.	மதிப்பீடு.
(1)	(2)	(3) (லட்சத்தில்.)
1980 வரை	18,338	282.60
1980—81	6,524	91.70
1981-82		53.95
1982--83	..	16.39
மொத்தம்	24,862	444.64

STATE DEPARTMENT OF ARCH
LIBRARY,

1981-ம் ஆண்டில் இத்திட்டப் பணியின் இரண்டாவது கட்டமாக எம்.யூ.டி.பி. (MUDP I & II) திட்டத்தின்கீழ் தொடங்கப் பட்டது. 1981—82 ஆம் ஆண்டில் 49 குடிசைப் பகுதிகளில் சுமார் 10,000 குடும்பங்கள் ரூ. 108.22 இலட்சம் செலவில் பயனடைந்துள்ளனர். 1982—83 ஆம் ஆண்டில் 12,000 குடும்பங்கள் ரூ. 247.11 இலட்சம் செலவில் பயன் பெற்றனர். எம்.யூ.டி.பி. 1 மற்றும் 2 திட்டங்களின் கீழ் 119 பாலர் பள்ளிகளும் 8 ஆரம்பப்பள்ளிகளும், 47 தொழிற்கூடங்களும் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன.

தவனை முறைத் திட்டம்:

நிரந்தர வருமானம் உடைய குடிசை வாசிகளின் ஆசையை ஈடேற்ற தவணைமுறைத் திட்டம ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அக்குடிசைப்பகுதியிலேயே வசிக்கும் குடும்பங்களுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. அரசு மற்றும் பொது நிறுவனங்களில் பணிபுரிந்து மாதம் ரூ. 350-க்கு குறைவாக வருவாயுடைய குடிசை வாசிகளுக்கும் இத்திட்டத்தின் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இதுவரை 2923 குடியிருப்புக்கள் தவணை முறைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடியிருப்புதாரரும், இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாத தவணையாக கீழ்தளத்திற்கு ரூ.45-ம் முதல் மாடிக் குடியிருப்புக்கு ரூ. 40-ம் இரண்டாம் மாடிக் குடியிருப்புக் ரூ. 35-ம் மூன்றாம் மாடிக் குடியிருப்புக்கு ரூ. 30-ம் 25 வருடங்களுக்கு செலுத்த வேண்டும்.

குடிசைப் பகுதிகளில் சமூகப் பணி:

நடப்பு ஆண்டில் குடிசை வாழ் மக்களின் பயனைக் கருதி சில திட்டப் பகுதிகளில் 27 தொலைக்காட்சிப் பெட்டிகள் நிறுவப் பட்டன. குடிநீர் பற்றாக் குறையுள்ள குடிசைப்பகுதிகளுக்கு நான்கு லாரிகள் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

குடிசை வாழ் மக்களின் தனிப்பட்ட சமூக பொருளாதார நிலைமைகளினால் அவர்களது வாழ்க்கை பலதரப்பட்டவையாகவும் மிகவும் சிக்கலாகவும் உள்ளது. மாடிக் குடியிருப்புகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகள் அளிப்பதன் மூலம்

சுற்றுப்புறங்கள் மேம்படுத்தப்படுவதாலும் அவர்கள் சொந்த மாகவே வீடுகள் கட்டிக் கொள்வதற்கு வசதியாக நிலஉரிமை வழங்குவதன் மூலம் மனிதாபிமான அடிப்படையில் குடிசை வாழ் மக்களுக்குத் தொண்டு புரிவது இக்குடிசை மாற்று வாரியம் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது.

நகர் நாட்டுப்புற அமைப்புத் திட்டம்,

1971 ஆம் ஆண்டு நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டம், 1973 ஆம் ஆண்டிலிருந்து செயலுக்குக் கொண்டு வரப் பட்டது. இச் சட்டம் வட்டார அமைப்புத் திட்டப் பகுதிகள், உள்ளூர்த் திட்டப் பகுதிகள், புதிய நகர் விரிவாக்கப் பகுதிக்கான வீட்டு மனைகள் தொடர்பாக குறித்த சட்டப்படிக்கான அறி விக்கை வெளியிடுவதற்கும் இவை தொடர்பாக பொருத்தமான திட்ட அதிகாரமன்றங்களை ஏற்படுத்துவதற்கும் வகை செய்கிறது.

வட்டார திட்டப் பணிகள்:

வட்டாரத் திட்டம். தேசிய அல்லது மாநிலத் திட்ட அமைப் பிற்குள், குறிப்பிட்ட ஒரு பகுதியின் தேவையை நிறைவு செய் வதற்காக, அப்பகுதியின் வளங்களைப்பற்றி விரிவாக ஆய்வு செய்த பின்னர் அதன் வளர்ச்சித் திட்டத்திற்கு வகை செய்து "திட்டப்பகுதி" எனப்பட்ட பகுதிக்கான திட்டத்தை விளக்கு வதோடு அப்பகுதித் தேவைகளை ஈடு செய்ய கொள்கைகளையும் பணிகளையும் வரையறுக்கிறது. இம்மாநிலம் பிரிக்கப்பட்டுள்ள எட்டு வட்டாரங்களுக்கான எட்டு வட்டாரத் திட்டங்களை இந்த இயக்ககம் தயாரித்துள்ளது, இத்தகைய வரைவுத் திட்டங்களைத் தயாரிக்கும் பணி 1975-ல் முடிக்கப்பட்டது. இவைபற்றி வட் டாரக் கருத்தரங்குகளில் விவாதிக்கப்பட்டது. இவற்றைத் தொடர்ந்து கொள்கைகளையும் திட்டங்களையும் எளிதில் நிறை வேற்றுவதற்காக, மாவட்ட வட்டாரத் திட்டங்கள் தயாரிக்கப் பட்டு வருகின்றன, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தஞ்சாவூர், ஆகிய நான்கு மாவட்டங்களுக்கான வரைத் திட் டங்கள் தயாராக உள்ளன. பிற மாவட்டங்களுக்கான் மாவட்ட

வட்டாரத் திட்டங்களைத் தயாரிக்கும் பணி விரைவில் தொடரும். ''யூனிசெஃப்'' உதவித் திட்டமாக, தஞ்சாவூர் மாவட்ட அமைப்புத் திட்டத்தின் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தஞ்சாவூரில் சிறிய நடுத்தர நகர் மேம்பாட்டுத் திட்டமும் நிறைவேறி வருகின்றது.

உள்ளூர் அமைப்புத் திட்டப்பகுதியும், பெருந்திட்டங்களும்:

1982—83—ல் அறிவிக்கப்பட்ட 4 உள்ளூர் திட்டப் பகுதிகள் உட்பட, அரசு இதுவரையில் 109, உள்ளூர்த்திட்டப் பகுதிகளை அறிவித்துள்ளது, இந்த இயக்ககம், 69 திட்டப் பகுதிகளுக்கு, மேம்பாட்டுத் திட்ட வரைபடங்களை, பெருந்திட்டங்களைத் தயாரித்துள்ளது. வெகுகாலமாகிவிட்டதாலும், ஒரு சில நகர்ப்பகுதிகள் விரைவாக முன்னேற்றமடைந்துள்ளதையும் கருத்தில் கொண்டும் இத்திட்டங்களில் சிலவற்றைக் காலத்திற்கேற்ப நாளதுவரை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. அரசின் இசைவிற்காகவும், இறுதியாக ஒப்புதல் அளிப்பதற்காகவும் அனுப்ப வேண்டிய பெருந்திட்டங்களை இந்த இயக்ககம் பரிசிலித்து வருகிறது. அரசு 19 பெருந்திட்டங்களை வெளியிட அனுமதி அளித்துள்ளது. 5 பெருந்திட்டங்கள் இறுதியாக அரசின் ஒப்புதலைப் பெற்றுள்ளன. திருவண்ணாமலை, வேலூர், குடியாத்தம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி தொடர்பான பெருந்திட்டங்களுக்கு 1982—83-ல் அரசு இசைவளித்துள்ளது. மேலும், மேட்டுப்பாளையம், கோபிச்செட்டிப்பாளையம், நாமக்கல், பரமக்குடி, இராஜபாளையம் ஆகியவற்றின் பெருந்திட்டங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

விரிவான மேம்பாட்டுத் திட்டம்:

உள்ளூர்த் திட்டப் பகுதியின் மேம்பாட்டைக் கண்காணித்து முறைப்படுத்தி, கட்டுவதற்கென்று விரிவான மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக உள்ளூர்திட்டப் பகுதிகளுக்குள்ளேயே விரிவான மேம்பாட்டுத் திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. இம் மாநிலத்திலுள்ள உள்ளூர்த் திட்டப் பகுதிகளில் 1,149 விரிவான மேம்பாட்டுத் திட்டங்கள உள்ளன. இவற்றில் 251 பகுதிகளுக்கு நகர் அமைப்புத் திட்டங்கள்/விரிவான

மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்ற அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. 1982—83-ல் 9 விரிவான மேம்பாட்டுத் திட்டங் களுக்கு இசைவளிக்கப்பட்டுள்ளது; 6 விரிவான மேம்பாட்டு திட்டங்களுக்கு, இயக்குநர், நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட டச் சட்டத்தின் கீழ் இறுதி ஒப்புதல் அளித்துள்ளார்.

நகர்பகுதி வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டம்:

1982—83-ல் மாநில நகர்ப்பகுதி வளர்ச்சி ஒருங்கிணைப்பு திட்டத்தின் கீழ் ஆதாயம் தரும் தொழில்கள், கட்டணக் கழிப் பிடங்கள் முதலில் நடந்தேறிவரும் திட்டங்களை நிறைவேற்ற பல்வேறு உள்ளாட்சி மன்றங்களுக்கு ரூ. 112.83 இலட்சம் கடன் வழங்கப்பட்டது. ஆதாயம் தரும் தொழில்களைத் தொடங்க 16 உள்ளாட்சி மன்றங்களுக்கும், கட்டணக் கழிப்பிடங்களை அமைக்க 12 உள்ளாட்சி மன்றங்களுக்கும் கடனுதவி அளிக்கப் பட்டது.

தமிழகத்திற்கான, மத்திய அரசு பொறுப்பேற்கும், ஒருங்கிணைப்பு வளர்ச்சித் திதிட்டம் (சிறிய, நடுத்தர நகர்களுக்கான ஒருங்சிணைப்புத் திட்டம் :

தமிழகத்திலுள்ள 28, சிறிய, நடுத்தர நகர்களில், மத்திய அரசு பொறுப்பேற்கும் ஒருங்கிணைப்பு வளர்ச்சித் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படவிருக்கிறது. இந்த ஆண்டில், இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கென்று சிவகங்கை தெரிந் தெடுக்கப்பட்டு, அதற்கு ரூ. 30 இலட்சம் நிதியுதவி அளிக்கப் பட்டது. இந்த ஆண்டில், சிறு, நடுத்தர நகர்ப் பகுதி வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பல்வேறுத் திட்டங்களை நிறைவேற்ற நாகப்பட்டினம், ஆரணி, கள்ள குறிச்சி, காரைக்குடி, உதகமண்டலம், பன்னுருட்டி, புதுக் கோட்டை, நாமக்கல், சிவகங்கை, அரக்கோணம், செங்கல்பட்டு ஆகிய 11 நகர்களுக்கு ரூ. 384.60 இலட்சம் நிதியுதவி அளிக்கப் பட்டது.

மத்திய அரசு, பொறுப்பேற்கும் திட்டமான சிறிய நடுத்தர நகரமைப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு நகரும் ரூ. 80 இலட்சம் கடனுதவி பெறத் தகுதி வாய்ந்தது; பின்வரும்

திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசும், மாநில அரசும் சமமான நிதியுதவி அளிக்கும்:

1. மனைகளும் பணிகளும்.
2. போக்குவரத்தும், சாலைப் போக்குவரத்தும்.
3. மண்டிகள், அங்காடிகள்.
4. குறைந்த செலவிலான துப்புரவு வசதி.

நாளது வரையில் 28 நகர்களில், 175 திட்டங்களை நிறைவேற்ற ரூ 2,262 இலட்சம் ஒதுக்கீடு செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது; ரூ. 1,070.50 இலட்சம் வழங்கப்பட்டது.

பேரிடர் பாதுகாப்புப் பிரிவு :

பேரிடர் பாதுகாப்புப் பிரிவு, இந்த இயக்குநர் அலுவலகத்தில் முக்கியமான, சிறப்பான ஒரு பிரிவாகும். இத்திட்டங்கள், 1977-ல் ஏற்பட்ட புயலின் காரணமாக நேரடியாக விவாதிக்கப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டைப் பெற்றன. இத்திட்டத்தின் தலையாய பணி வங்காள விரிகுடா நெடுகக் கடலோர மாவட்டங்களில், வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில், புகலிடங்கள் கட்டுவதாகும். இக்கொள்கையை உலகம் முழுவதும் ஏற்றுக்கொண்டுள்ளது; மேலும், அனைத்து நாட்டு செஞ்சிலுவைச் சங்கம், ஐரோப்பிய பொருளாதாரக்கழகம் போன்ற பல்வேறு அனைத்துநாட்டு அமைப்புகளிடமிருந்து இத் திட்டம் நிதியுதவி பெறுகிறது. புகலிடங்களைக் கட்டுவதற்கான பகுதிகளைக் கண்டறியும் பணியும், இடங்களைத் தெரிந்தெடுக்கும் பணியும் மாவட்ட ஆட்சியாளர்களுடன் கலந்தாலோசித்து, நிறைவேறி வருகின்றன. இதுவரை 110 புகலிடங்கள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய பொருளாதாரக் குழுமம் நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் மேலும், 30 புகலிடங்களை, அடுத்த கட்டப் பணியின்போது, மேற்கொள்வதற்கான இடத்தைத் தெரிந்தெடுக்கும் பணியை இயக்குநர் அலுவலகம் மேற்கொண்டு வருகிறது. இப்பிரிவின் மற்றொரு முக்கியப் பணி, கள ஆய்வுகள் நடத்துவதன் மூலம் இடத்தின் புயல் பாதிப்புத் தன்மை பற்றிய ஆய்வு நடத்துவதும், புயலால்

பாதிக்கப்படும் பகுதி பற்றிய விவரங்களைத் தொகுப்பதுமாகும். இதே போன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் புயலால் பாதிக்கப் பட்ட பகுதியின் ஆய்வும், வரை படங்கள் தயாரிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

ஆராய்ச்சிப் பயிற்சிப் பிரிவு :

பயிற்சித் திட்டங்கள், கருத்தரங்குகள், கூட்டாய்வுகள் நடத்துவதற்கென்று இயக்குநர் அலுவலகம் 50 அதிகாரிகளையும் பணியாளர்களையும் பிற மாநிலங்களுக்கு அனுப்பியுள்ளது. நகர ஒதுக்குப்புற மேம்பாடு பற்றி (Remote Scnsings) பட்டமேற் படிப்பு பட்டயப்பயிற்சி பெறுவதற்காக அதிகாரி ஒருவர் அனுப்பப் பட்டுள்ளார். நகர்–நாட்டுப்புற அமைப்புத் திட்டப்படிப்பில் பட்டமேற்படிப்புப் பட்டம் பெறுவதற்கென்று மற்றுமோர் அதிகாரி அனுப்பப்பட்டுள்ளார். மேலும் நகரமைப்பு திட்டத்தில் பட்டயமேற்படிப்பிற்காகப் பணியாளர் இருவர் அனுப்பப்பட்டுள் ளனர் இப்பிரிவுச் சட்டங்கள் விதிகளில் திருத்தம் கொண்டு வருதல். அவ்வப்போது நகர அமைப்பு திட்ட அறிக்கைகள் வெளியிடுதல் போன்ற, சட்டப் பணிகளையும் நிறைவேற்றி வருகின்றது. மேலும் மேம்பாட்டு திட்டங்கள் தொடர்பான கூட்டங்கள் கருத்தரங்குகள், ஆராய்ச்சிகளையும் நடத்தி வருகின்றது.

அத்தியாயம் 12

தொழில் துறை

அத்தியாயம் 12

தொழில் துறை

சர்க்கரை இயக்ககம்.

சர்க்கரைத் தொழிலில் வளர்ச்சியையும் அதன் இதரப் பணிகளையும் திறம்பட செயல்படுத்திட சர்க்கரைத்துறை இயக்ககம் தனியானதோர் துறையாக 1969 ஆம் ஆண்டு செயல்படத் தொடங்கியது. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் பணிகளை ஒருங்கிணைத்து மேற்பார்வையிட அரசு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் 1961 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கான அதிகாரங்களனைத் தையும் சர்க்கரைத் துறை இயக்குநருக்கு வழங்கியுள்ளது. கரும்பு ஆணையாளர் என்ற முறையில் சர்க்கரைத்துறை இயக்கு நர் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு பயிரிடுவதற்கான பகுதி களை ஒதுக்கீடு செய்வதுடன் கரும்பிற்கான செல் துணை வசூல் பணிகளையும் கவனித்து வருகிறார். மேலும், சர்க்கரை இயக்குநர் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தினை, பொறி யியல் பணியாளர்களைக் கொண்ட தனி அமைப்பின் மூலம் செயல்படுத்திக் கொண்டு வருகிறார்.

ஆய்வுக்குரிய ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள மொத்தம் செயல்பட்டு வரும் 21 சர்க்கரை ஆலைகளில், 8 தனியார் துறையினையும், பத்து கூட்டுறவுத் துறையினையும் இரண்டு பொதுத் துறையினையும் எஞ்சிய ஒன்று மத்திய அரசினால் நிர்வகிக்கப்படும் தனியார் துறையினையும் சார்ந்தவையாகும். இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளில் உரிமம் வழங்கப் பட்ட உற்பத்தித் திறன், நிறுவிய நிலை உற்பத்தித் திறன் ஆகியவை குறித்து விவரங்கள் குறிப்பிட்டுள்ளன :—

உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறன்—43,050 டன் கரும்பு ஒரு நாளைக்கு.

நிறுவிய நிலை உற்பத்தித் திறன்—41,350 டன் கரும்பு ஒரு நாளைக்கு.

கரும்பு பயிரிடுதல் :

சர்க்கரைத் தொழிலில் தமிழ்நாடு நல்ல முன்னேற்றம் கண்டு வருகின்றது. 1980-81 மற்றும் 1981-82 ஆம் ஆண்டில்

தமிழ்நாட்டில் சர்க்கரை கரும்பு உற்பத்தி முறையே 135.49 மற்றும் 189.20 இலட்சம் டன்களாகும். நாட்டில் உள்ள பிற சர்க்கரை உற்பத்தி செய்யும் மாநிலங்களோடு ஒப்பிடும்போது தமிழ்நாட்டின் சாதனை போற்றத் தக்கதாக உள்ளது. இந்திய அரசு நிர்ணயித்துள்ள சட்ட பூர்வமான கரும்பு விலைக்கு சற்று கூடுதலாகவே சர்க்கரை ஆலைகள் கரும்பு பயிரிடுவோருக்கு உடனுக்குடன் வழங்குவது சர்க்கரை ஆலைகளுக்கும், கரும்பு பயிரிடுவோருக்கும் இடையே உள்ள நேரடித் தொடர்பும் நல்லுறவும் கரும்பு வளர்ச்சிப் பணிகளுக்கு ஆலைகள் கணிசமான அளவில் ஊக்கம் தந்து வேண்டிய உதவிகள் செய்து வருவது இத்தகைய முன்னேற்றத்திற்குக் காரணமாகும்.

சாதனைகள் :

1981–82 ஆம் சர்க்கரை ஆண்டின் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் 121.58 சதவீத அளவே தங்களது உற்பத்தித் திறனை பயன்படுத்தின. 1982–83 ஆம் சர்க்கரை ஆண்டின் 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளுடன் முடிவில் இந்த உற்பத்தித் திறன் 103.45 சதவீதமாகும். 1982–83 ஆம் ஆண்டில் 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் நாளுடன் முடிவடைந்த காலத்தில் சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பு அளவு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை அளவு, கிடைத்த சர்க்கரைக் கட்டுமானம் ஆகிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

பிழியப்பட்டுள்ள கரும்பின் அளவு (டன்களில்).	உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை அளவு (டன்களில்).	கிடைத்த சர்க்கரை கட்டுமானம் சதவிகிதம்.
(1)	(2)	(3)
48,09,009	4,47,685	9.31 சதவீதம்.

செஸ் நிதி வசூல் :

1981–82 ஆம் ஆண்டில் ரூ. 354.50 இலட்சம் செஸ் நிதியாக சர்க்கரை ஆலைகள் அரசுக்கு செலுத்தியுள்ளன. 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 173.90 இலட்சம் அரசுக்கு செலுத்தியுள்ளன.

கரும்பு சாலை பெருக்கமும், அபிவிருத்தியும் :

தரமான கரும்புகள் தங்கு தடையின்றி தொடர்ந்து கிடைப்பதைப் பொருத்தே சர்க்கரை ஆலைகள் திறம்பட செயல்பட முடியும். கரும்பு விளை நிலங்களிலிருந்து கரும்பினை சர்க்கரை ஆலைகளுக்கு எடுத்துச் செல்கின்ற இடைக்காலத்தில் கரும்பின் எடை குறையாவண்ணம் பார்த்துக் கொள்ளவும் நல்ல தரம் வாய்ந்த கரும்பு ஆலைக்கு தொடர்ந்து கிடைத்திடவும் சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள சுற்றுப்புற கிராமங்களில் நல்ல சாலை வசதிகள் ஏற்பட வழி வகுத்தல் அவசியம். மேற்கூறப்பட்ட குறிக்கோளினை அடைய சர்க்கரை ஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் தற்பொழுதுள்ள சாலைகளை சீரமைக்கவும் புதியதாக சாலைகளைப் போடவும், கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டம் தனியே செயல்பட்டு வருகின்றது. புதிய சாலைகளைப் போடுதல் பழைய சாலைகளைப் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்பார்வை செய்வதற்கு திருச்சிராப்பள்ளி, கடலூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு இரு கோட்டப் பொறியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இது தவிர சேலத்திலும் ஒரு அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கான செலவு கரும்பிற்கான மேல் வரி வசூலித்ததிலிருந்து அனுமதிக்கப்படுகிறது. 1982–83 ஆம் ஆண்டிற்கு இப்பணிகளுக்காக ரூ. 250 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1982–83-ஆம் ஆண்டிற்கான இலக்கும் சாதனையையும் கீழே குறிப்பிட்டுள்ளன.

வேலை நேரம்.	இலக்கு.	சாதனை 31–3–1983 வரையில்.
(1)	(2)	(3)
புதிய சாலைகள் போடுதல் கி.மீ. ..	82.387	38.27
சாலைகளுக்கு சரளைக்கல் பதித்தல்..	157.362	82.12
சாலைகளுகக தார் போடுதல் ..	203.052	109.94
பாலங்கள் அமைத்தல் (எண்ணிக்கை)	16	4
குறுக்கு வடிகால்கள் அமைத்தல் (எண்ணிக்கை).	..	..
தலைப் பாலங்கள் (எண்ணிக்கை)	..	..
சிறு பாலங்கள் (எண்ணிக்கை)	312	314

சர்க்கரை விலை :

மத்திய அரசு சர்க்கரை விற்பனை விலை மற்றும் விநியோகத்தின் மீது பகுதிக் கட்டுப்பாட்டை அமுலுக்கு கொண்டுவந்துள்ளது. இதன்படி மொத்த உற்பத்தியில் 65 சதவீதம் சர்க்கரை லெவி சர்க்கரையாக மத்திய அரசு எடுத்துக்கொள்ளும். எஞ்சியுள்ள 35 சதவீதம் சர்க்கரை உற்பத்தி மட்டுமே சர்க்கரை ஆலைகளால் வெளிச்சந்தையில் விற்க அனுமதிக்கப்படும். 1982—83 ஆம் பருவத்திற்கு தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி பிரிவுகளுக்கான சர்க்கரை ஆலைகளின் லெவி சர்க்கரை விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 307.77 என்று நிர்ணயம் செய்துள்ளது. (இதில் கலால் வரி நீங்கலாக).

கைத்தறியும் நூற்பாலையும்

மாநிலத்தின் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கு, கைத்தறி துணித் தொழில் ஆலை இயக்குநர் பொறுப்பு வகிக்கிறார். கைத்தறி நூற்பாலைத் தொழில் இயக்குநர் மாநிலத்தின் துணை அதிகாரி என்ற முறையில் இம்மாநிலத்தில் விசைத்தறி தொழில் நூற்பாலை தொழிலுடனும் தொடர்புடையவர் ஆவார். கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும், அதிலும் குறிப்பாக கூட்டுறவுத் துறையில் பணி புரிபவர்களுக்குரிய திட்டங்கள் இத்துறையினரால் நிறைவேற்றப்படுகின்றன. இத்துறை, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து பதிவு செய்து, இவற்றிற்கான நிதி உதவி ஏற்பாடு செய்கின்றது. கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரும் திட்டத்தின் கீழ், தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களை அதிக எண்ணிக்கையில் மேலும் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வந்து, இத்தகைய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் முறையான வளர்ச்சிக்கு உறுதி செய்வது இதனுடைய தனிப் பொறுப்பாகும். இத்துறை, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தையும் (கோ ஆப்டெக்ஸ்) கட்டுப்படுத்துகிறது. கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு மூலப்பொருள்களை வழங்கவும், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்துள்ள பொருட்களை நமது நாட்டிலுள்ள முக்கிய

மான் பெருநகரங்கள், நகரங்கள் அனைத்திலும் அமைந்துள்ள தனது விற்பனை நிலையங்கள் மூலமும், வெளிநாடுகளுக்கு ஏற்று மதி செய்வதன் மூலமும் விற்பனை செய்வதும் கோ ஆப்டெக்ஸ் முக்கிய பணியாகும். இத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் அமைந்துள்ள கூட்டுறவு நூற்பாலைகள், நெசவாளர் கூட்டு றவுச் சங்கங்களுக்கு தேவைப்படும் நூலை நூற்று வழங்குகின்றன. இவற்றோடு, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சரிகை நிறுவனம், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நூற்பாலை நிறுவனம் இம்மாநிலத்தின் ஆறு கூட்டுறவு கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றிற்கும் இந்த இயக்குநர் அலுவலகம் பொறுப்பு வகிக்கிறது. கைத்தறி நெசவாளர்களுக்காக பல் வேறு நடவடிக்கைகளும் இத்துறையின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலை கள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில், கைத்தறி நூற்பாலை இயக்குநரே பதிவாளராகச் செயல்படுகிறார். இவ்வாறு பதி வாளரென்ற தகுதியில் இந்நிறுவனங்கள் தொடர்பான தமிழ் நாடு கூட்டுறறவு சங்கங்கள் சட்டத்தின் விதித்துறைகள், விதிகள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கும் இவரே பொறுப்பாவார்.

கைத்தறித் தொழிலும் திட்டப்பணிகளும் :

கூட்டுறவின் கீழ் கொண்டுவருதல்— திட்டப்பணிகள்

தமிழ்நாட்டில் மொத்தம் 5·56 இலட்சம் கைத்தறிகள் செயல் படுகின்றன. இவை நாட்டிலுள்ள மொத்த கைத்தறிகளில் 1/6 பங்காகும். இம்மாநிலத்தில் மொத்தமுள்ள 5·56 இலட் சம் கைத்தறிகளில், 3·33 இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 31—3—1983 ஆம் நாள் நிலவரப்படி, 3.33 இலட்சம் தறிகளைக் கொண்ட நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் 1468 உள்ளன. மொத்தத் தில் 59 சதவீதம் தறிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. பல்வேறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக அரசு, 1982—83 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 2473·68 இலட்சம் செலவிட்டது.

நெசாவளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் 1982—83 ஆம் ஆண்டில், ரூ. 113·24 கோடி மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்தன. 1982—83 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மேலும் 156 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஏற்கெனவே உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தனியார் துறையிலிருந்து 35163 நெசவாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டனர். இதில், தறியில்லாத நெசவாளர்களுக்காக ரூ. 56.33 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்ட 18 தொழிற்சாலை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் அடங்கும்.

மூலப் பொருட்களை வழங்குதல்

(நூல்) தமிழ்நாட்டில் 3.31 இலட்சம் கதிர்களைக் கொண்ட 12 கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன. இவை, திங்களொன்றுக்கு சுமார் 12,000 பருத்தி நூல் பொறிகளை உற்பத்தி செய்கின்றன. இக்கூட்டுறவு நூற்பாலைகள் அனைத்தும், கூட்டுறவுத் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவைப்படும் 10 ஆம் எண் முதல் 100 ஆம் எண் வரையிலுள்ள பலவேறு எண்ணுள்ள பருத்தி நூல்களை தயாரித்து வழங்குகின்றன. தமிழ்நாட்டிலுள்ள முக்கியமான கைத்தறி நிலையங்களில் 22 நூல் விற்பனை நிலையங்களை கோ ஆப்டெக்ஸ் நடத்தி வருகிறது. கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூலை நெசவாளர் தொடக்கக் கூட்டுறதுவுச் சங்கங்களுக்குத் தேவைகளை யொட்டி அவற்றிற்கு அவை வழங்குகின்றன. இந்த நெசவாளர் சங்கங்களுக்கு வழங்கப்படும் நூலின் விற்பனை விலையினை இதற்கென அமைக்கப்பட்ட குழுவானது நியாயமான முறையில் நிர்ணயிக்கிறது. இம்மாநிலத்திலுள்ள கைத்தறிகளுக்கு ஆண்டு ஒன்றிற்கு தேவைப்படும் கைத்தறி நூலின் அளவு 695 இலட்சம் கிலோகிராமாகும். இது தவிர, விசைத் தறிக்கும், உள்ளாடைகள் தயாரிப்புத் தொழிற்சாலைகளுக்கும் ஆண்டொன்றுக்கு 1121 இலட்சம் கிலோ கிராம் தேவைப்படுகிறது. தேவையின் அளவு இவ்வாறிருக்க, மாநிலத்திலுள்ள 237 நூற்பாலைகள் ஆண்டொன்றில் 2170 இலட்சம் கிலோ கிராம் நூலினை நூற்கின்றன.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ;

நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப் படும் மூலப் பொருட்களை வாங்கி வழங்குவதும், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள தொடக்கச் சங்கங்களுக்கு விற்பனை வசதி யினைச் செய்து கொடுப்பதும் கோ ஆப்டெக்ஸின் முக்கிய நோக்கமாகும். ஏற்கெனவே கூறியுள்ளவாறு, கோ ஆப் டெக்ஸ் 22 நூல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது என்பதோடு, கூட்டுறவு நூற்பாலைகள் நூற்கும் நூலை வாங்கி அவற்றின் மூலம் தொடக்கச் சங்கங்களுக்குக் கொடுக்கின்றது. நமது மாநிலத்திற்குள்ளும், வெளியிலுமுள்ள முக்கிய மாநகரங்கள் நகரங்கள் ஆகியவற்றில் 601 விற்பனை நிலையங்களை கோ ஆப் டெக்ஸ் நடத்தி வருகிறது. அரசுப் பங்குத் தொகையான 12.81 கோடி ரூபாயினையும் சேர்த்து கோ ஆப்டெக்ஸின் செலுத்தப் பட்ட பங்கு மூலதனம் 15.82 கோடி ரூபாயாகும். இதற்கு, 1982—83 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 40 கோடி வரையில் ரொக்கக் கடன் அனுமதிக்கப்பட்டது. 1982—83 ஆம் ஆண்டில் கோ ஆப் டெக்ஸ் நெசவாளர் 1982—83 ஆம் ஆண்டில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து ரூ. 74.67 கோடி மதிப்புள்ள உற்பத்தியில் பொருட்களைக் கொள்முதல் செய்தது. இதன் விற்பனை 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 79.56 கோடியாக இருந் தது.

கூட்டுறவு நூற்பு ஆலை ;

12 கூட்டுறவு நூற்பாலைகளின் செலுத்தப்பட்ட பங்கு மூல தனம் ரூ. 2,070.59 இலட்சமாகும் அரசின் பங்குத்தொகை ரூ 1,210.85 இலட்சமாகும். இவை 217.39 இலட்சம் கிலோ கிராம் 40 ஆம் எண் நூலினை நூற்றன. 31—3—1983 ஆம் நாள் நிலவரப்படி, நடைமுதல் மூலதனம் பின்னர் தொகை திருப்பிக் கொடுப்பது என்ற ஏற்பாட்டின் அடிப்படையில் படும் கடன்கள், தொகுப்புக் கடன்கள் முதலிய அனைத்து வகைக் கடன்களின் கீழ் நிலுவையாக உள்ள மொத்தத் தொகை ரூ. 1,702.87 இலட்சமாகும்.

1980—83 ஆண்டுகளில் கூட்டுறவு நூற்பாலைகள் செயல் பற்றிய விவரம் வருமாறு :

	1979 முதல் 1980 வரை	1980 முதல் 1981 வரை
	(ரூபாய் இலட்சத்தில்)	
1. உற்பத்தி (மதிப்பு)	4007·89	4887·23
2. விற்பனை (மதிப்பு) ..	3,995·61	4,843·20
3. பெருமொத்த ஆதாயம்.	709·36	(—) 190·17
4. வட்டி ..	126·73	199·61
5. தேய்மானம் ..	133·37	143·69
6. நிகர ஆதாயம் (+) ..	449·26*	(—) 153 13
7. பணியிலமர்த்தப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை.	9,791	9,996

	1981 முதல் 1982 வரை.	1982 முதல் 1983 வரை.
	(ரூபாய் இலட்சத்தில்).	
1. உற்பத்தி (மதிப்பு)	5,160.76	5,761·35
2. விற்பனை (மதிப்பு) ..	5,081·46	5,876·46
3. பெருமொத்த ஆதாயம்.	149·86	573·03
4. வட்டி ..	215·08	245·25
5. தேய்மானம் ..	147·07	157·42
6. நிகர ஆதாயம் (+) ..	(—) 212·29	(+) 170·36
7. பணியிலமர்த்தப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை.	10,128	10,128

முக்கிய கவனிப்பு ;

*நூற்பாலைத் தொழிலில் ஏற்பட்ட மந்த நிலைக் காரணமாக ஏற்பட்டது.

விரிவாக்கத் திட்டம் ;

ரூ. 180 இலட்சம் திட்டச் செலவில் தற்போதுள்ள 13,760 கதிர்கள் சென்ற நிறுவத் திறனை 25,000 கதிர்களாக உயர்த்தும் விரிவாக்கத் திட்டத்தினை தென் ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை நிறைவேற்றி வருகிறது.

ரூ. 334 இலட்சத் திட்டம் செலவில் 13,200 கதிர்கள் கொண்ட 'B' பிரிவு ஒன்றினை நிறுவும் விரிவாக்கத் திட்டத்தினை வட ஆர்க்காடு கூட்டுறவு நுற்பாலை நிறைவேற்றி வருகிறது.

விலைக் கட்டுப்பாட்டுத் துணி ஜனதா துணி தயாரிப்புத் திட்டம் ;

இந்த ஆண்டில் 20,000 தறிகள் ஜனதா வேட்டிகள், லுங்கிகள், சேலைகள் தயாரிப்பதில் ஈடுபடுத்தப்பட்டன. ரூ. 451.40 இலட்ச மதிப்புள்ள சுமார் 3 கோடி சதுர மீட்டர் ஜனதா கைத்தறி வேட்டிகளும்; லுங்கிகளும், சேலைகளும் உற்பத்தி செய்யப்பட்டன. இவை கோ ஆப்டெக்ஸ்ஸின் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 1982–83 ஆம் ஆண்டில், ரூ. 415 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

தொழில்-வணிகம்.

தொழில்-வணிக இயக்ககம், சிறு தொழில்களையும், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களையும் பதிவு செய்கின்றது. வெளிநாடுகளிலிருந்து இயந்திரங்களையும். கச்சாப் பொருட்களையும்' இறக்குமதி செய்வதற்கான இன்றியமையாச் சான்றிதழ் வழங்குகின்றது ; சிறு தொழில் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கும், பொருட்களை ஆய்வு செய்யவும், சோதனை செய்யவும் வசதிகள் செய்து கொடுக்கின்றது; தொழில் நுட்பத் தகவல்அறிவிக்கும் பணியினைச் செய்கின்றது : மிகச் சிறிய சிறிய தொழில்களை ஊக்குவிப்பதற்காக அந்தந்தத் தொழிலுக் குரிய, துணை, கூட்டுறவு, தனியார் தொழிற்பேட்டைகளை ஏற் படுத்துகின்றது ; தவணை முறையில் இயந்திரங்களை வாங்கவும், பொருட்களை வழங்குவதற்கென்று ஏற்பளிக்கப்பட்ட வணிகராகப் பதிவு செய்யவும் தொழில் உரிமங்கள் வழங்கக்கோரும் மனுக்களை பரிந்துரை செய்து அனுப்பிவைக்கிறது ; தென்னைநார்த்தொழிலை மேம்படுத்துகின்றது. மத்திய அரசு உதவி பெறும் திட்டங்களை நிறைவேற்றுகின்றது ; தொழில் நிருவாக வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்கிறது : ஆய்வுகளை நடத்தி புள்ளி விவரங்களை வைத்து வருகின்றது ; வல்லுநர்களின் உதவியை வழங்குகின்றது ; நாளதுவரையிலான திட்டங்களை வகுக்கின்றது; நாட்டிலுள்ள கனிமவளத்தினை ஆய்வு செய்கின்றது.

மாவட்டத் தொழில் மையங்கள் ;

மாவட்டத் தொழில் மையங்கள் தொழில்கள் உருவாக்குவதற்குப் பரந்த நோக்கில் தாராளமான நடைமுறை கொண்டு வந்து, தொடர்ந்து உதவியும் அளித்ததால், தகுதியுடைய சிறு தொழில் முனைவர்கள் சுமார் 2,000 பேருக்கு உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து தொழில் உரிமங்கள் கிடைத்தன. 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரையில் மாவட்டத் தொழில் மையங்களின் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டதன் பலனாக, 34,678 நிரந்தர சிறுதொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன ; இதனால் 4 இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்தது ; 1982—83 ஆம் ஆண்டில், 11342 சிறுதொழில் முனைவர்களுக்கு நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 24.19 கோடி ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. மேற்சொன்னவை தவிர, வங்கிகளிடமிருந்து நிதி உதவிபெறுவதை முறைப்படுத்தவும், மாவட்டத் தொழில் மையங்கள்உதவி புரிந்தன. தேசிய சிறுதொழில் கழகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், ஆகிய நிறுவனங்களிடமிருந்து 38,181 சிறு குடிசை, கைவினைத் தொழில் முனைவர்கள் 36.25 கோடி ரூபாய் உதவித் தொகையாகப் பெற்றனர்.

அடையாறு மின்னணுவியல் ஆய்வு வளர்ச்சிக் கழகம் ;

அடையாறு பகுதியினைச் சுற்றியுள்ள மின்னணுவியல் தொழில்களுக்குத் தேவையான சோதனை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக, இந்நிலையம் அமைக்கப்பட்டது. இந்நிலையத்தினால் நகரத்திலும், நகர்ப்புற பகுதிகளிலும் அமைந்துள்ள அனைத்து சிறு மின்னணுவியல் தொழில் பிரிவுகளும் பயனடைகின்றன.

காக்களூர், மத்திய மின்பொருள் சோதனை ஆய்வுக்கூடம் ;

இச்சோதனை ஆய்வுக்கூடம், இந்திய தர நிறுவனம், இரயில்வே, பொருள் வழங்குதல், விற்பனைத் தலைமை இயக்குநர், ஆகியோரால் அங்கீகாரம் செய்யப் பெற்றது. நமது நாட்டிலேயே தலைசிறந்த முன்னோடி மின்சார ஆய்வுக் கூடமாகும். ஒரு புதிய மின்னொளிச் சோதனை ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்காக அரசு ரூ. 2.5 இலட்சம் அனுமதித்துள்ளது.

மின்மருத்துவச் சாதனை தயாரிப்பு நிலையங்கள் ;

தற்போது சென்னை, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் மின் மருத்துவச் சாதன தயாரிப்பு நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. அவை, அரசு மருத்துவ நிலையங்களிலுள்ள ஈ.சி.ஜி., ஈ.ஈ.ஜி, டயோதெர்மி, உயரழுத்த நிலை மின் கருவி, நிழற்பட மின்னணுகலோரி மீட்டர் ஆகிய மருத்துவ மின்னணு சாதனங்களை பழுதுபார்க்கும் பணிகளை செய்கின் கின்றது.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் :

தீப்பெட்டி, தென்னை நார்தொழில் போன்ற அதிக வேலைவாய்ப்பு அளிக்கும் சில கிராமத் தொழில்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் வெகுவேகமாக வளர்ந்துள்ளன. தொழில் கூட்டுறவுத் துறையில் இந்த ஆண்டு குறிப்பிடத் தக்க அளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதியில் 898 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 3,904.11 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் தயாரிக்கப்பட்டிருக்கையில், இச்சங்கங் கள் ரூ. 7,346.29 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை விற்பனை செய்தன.

தமிழ்நாடு மாநில தொழில் கூட்டுறவு வங்கி :

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தமிழ்நாடு மாநில தொழிற் கூட்டுறவு வங்கி நிதி உதவி அளிக்கிறது. 31–12–1982 ஆம் நாள் அன்றுள்ள படி இவ்வங்கியின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 100.84 இலட்சமாகும். இதில் அரசின் பங்குத்தொகை ரூ. 48.30 இலட்சமாகும். இதனுடன் இணைக்கப்பட்ட சங்கங்களின் பங்கு மூலதனம் ரூ. 42.55 இலட்சமாகும். இவ்வங்கி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறித்த காலக் கடன் களும், ரொக்கக் கடன்களும், வழங்குகின்றன,

தேயிலைத் தொழிற்சாலைகள் :

நீலகிரி மாவட்டத்தில் 13 தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன, இவற்றில் 11 தொழிற்சாலைகள் ஏற்கனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இரண்டு

தொழிற்சாலைகள் கட்டப்பட்டு வருகின்றன. 7,128 சிறு தேயிலைத் தோட்ட அதிபர்களுக்கு 13,570 ஏக்கர் பரப்பு தேயிலைத் தோட்டங்கள் சொந்தமானவை இவர்கள் தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில் உறுப்பினர் களாவர். இத்தொழிற்சாலைகள் 40,000 பேருக்கு மேல் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு அளிக்கின்றன இவை தமிழ்நாட்டின் தேயிலை உற்பத்தியில் 9 சதவிதத்தை உற்பத்தி செய்கின்றன. குன்னூரிலும், கொச்சியிலும் சேமிப்புக் கிடங்குகளையுடைய நீலகிரி சிறு தேயிலைப் பயிரிடுவோர் பணித் தொழிற் கூட்டுறவுச் சங்கம், அதாவது ''இன்கொசெர்வ்'' எனும் சங்கம் 100 கிராம், 250 கிராம் 500 கிராம் தேயிலை, தேயிலைத்தூள் வகைகள் அடங்கிய சிறு பொட்டல விற்பனையின் மூலம் ருசிமிக்க, தரமான தேயிலையை விற்பனை செய்யத் தொடங்கியுள்ளது.

தென்னை நார் பொருள் ;

இம்மாநிலத்தில் தென்னை நார்பொருள் வளர்ச்சிக்கு மிகுந்த வாய்ப்புள்ளது. இந்தியாவில் தமிழ்நாடு தென்னை பயிரிடுவதில் மூன்றாவது இடத்தை வகிக்கின்றது; தமிழ்நாட்டில் மொத்த தென்னை மட்டையின் 43.3 சதவீதம் தென்னை நார்பொருள் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இதன்மூலம் 23,000 மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. வெள்ளை, பழுப்பு தென்னை நார்பொருள் துறையில் சுமார் 308 தொழிற்பிரிவுகள் உள்ளன. 1982–83 ஆம் ஆண்டில கயிறு திரிக்கும் துறையில் 10 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. 56 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 7,422 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்தன. 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 4.80 இலட்சத்துக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது.

தோல் தொழிற்சாலை ;

பெரிய, நடுத்தர, சிறிய அளவிலான தோல் தொழிற்சாலைகள் பெரும்பாலும் செங்கற்பட்டு, வடஆற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை, பெரியார் மாவட்டங்களில் பெரும்

எண்ணிக்கையில் செயற்பட்டு வருகின்றன. சென்னைத் துறை முகத்தின் மூலம் ஒவ்வொராண்டும் சுமார் ரூ. 200 கோடி மதிப்புள்ள தோல்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இது நமது நாட்டில் மொத்த ஏற்றுமதியில் 60 சதவீதமாகும். சிறிய தோல் பதனிடு தொழிலதிபர்களுக்கு உதவி புரிவதற்காக, தோல் வேலை நிறைவு பணி தொழிற் கூட்டுறவுச் சங்கம் வாணியம்பாடியில் அமைக்கப்பட்டுள்ளது. இராணிப் பேட்டை, திண்டுக்கல், பேரணாம்பட்டு ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் சுமார் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் இத்தகைய நிலையங்களை கூட்டுறவு அடிப்படையில் ஏற்படுத்துவதற்கான திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அரசு வர்த்தக் கழகத்தின் தோல் வளர்ச்சி நிதியிலிருந்து இச்சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 50 இலட்சம் மதிப்புடைய இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள் வழங்கப் படுமென்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. இச்சங்கங்கள் அமைக் கப்படுவதால் கிட்டத்தட்ட 200 தோல் பதனிடுவோர் பயனடைவர்.

இண்டி. தொழிற்பயிற்சி நிலையம் :

கருவி, அச்சு-வடிவமைப்பு, மின்னனு கருவியல், குளிர் பதனம், நீர்வளிப் பொறியியல், ரப்பர் தொழில் நுட்பயியல் ஆகிய சிறப்புத் துறைகளில் கிண்டியிலுள்ள தொழிற் பயிற்சி நிலையம் தீவிரப் பயிற்சி அளிக்கிறது. உலோக வர்த்தக சான்றிதழ் பயிற்சி வகுப்பில் கருவிப் பொறியியல் பட்டயப் படிப்பாக மாற்றப்பட்டுள்ளது. ஏனைய சான்றிதழ் பயிற்சிகளும் மூன்றாண்டு பட்டப்படிப்பாக மாற்றப்பட்டு இந்த ஆண்டு முதல் நடத்தப்பட்டுவருகிறது. கருவிப் பொறியில் மின்னணு கருவியாக்கம், குளிர்ப்பதனம்-சீர்வளிப் பொறியியல் ஆகிய பட்டப்படிப்பு ஒவ்வொன்றிலும் 30 பேருக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது.

திண்டுக்கல் கருவி, அச்சு வடிவமைப்பு பயிற்சி நிலையம் :

கருவி, அச்சு வடிவமைப்புகளை வடிவமைத்தல், தயாரித் தலில் அதிலும் குறிப்பாக பூட்டுகளைத் தயாரிப்பதில்

இந்நிலையம் தீவிரப் பயிற்சியளிக்கின்றது. இதுவரையில் 273 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. பல்வேறு கருவி தயாரிக்கும் தொழிற்சாலைகளில் இவர்கள் அனைவரும் நன்முறையில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். பயிற்சிப் பெறுவோருக்கு திங்களொன்றிற்கு 50 ரூபாய் பயிற்சி உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. இச்சான்றிதழ் பயிற்சி வகுப்பானது தற்போது கருவிப் பொறியியல் பட்டையப் படிப்பாக மாற்றப் பட்டுள்ளது. தற்போது பயிற்சி பெறுவோர் 72 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

கிராமப் பணி நிலையம் :

திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் ஒன்றும், அம்பாசமுத்திரத்தில் இரண்டுமாக மொத்தம் மூன்று அடிப்படை கிராமக் பணி நிலையங்கள் வேளாண்மைக் குடும்பங்களிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு உலோகப் பற்றவைப்பு, பொருத்துதல், கடைசல் பணி ஆகிய துறைகளில் பயிற்சியளிக்கின்றது. இதற்கான பயிற்சி கால அளவு 18 திங்கள் காலமாகும். பயிற்சி பெறுவோருக்கு திங்களொன்றுக்கு 30 ரூபாய் பயிற்சி உதவித்தொகை வழங்கப்படுகின்றது.

கிராமக் கைவினைஞர்களுக்கு பயிற்சி அளித்தல் :

கடந்த மூன்றாண்டுகளில் ரூ. 13.65 இலட்சம் செலவில் 1,589 கிராமக் கைவினைஞர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. ஆய்வாண்டில் ரூ. 7.03 இலட்சம் செலவில் 1,227 கிராமக் கைவினைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம் செயற் படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட தொழில் மைய கடன் உதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் கிராமக் கைவினைஞர்களுக்கு ஆண்டுக்கு 6-1/4 சதவீத வட்டியுடன் கடன்தொகையாக 10,000 ரூபாய் வரையில் கடன் அனுமதிக்கப்படுகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்ட 1979—80 ஆம் ஆண்டிலிருந்து 1982—83 ஆம் ஆண்டு இறுதி வரையில் 2,663 பேருக்கு ரூ. 189.21 இலட்சம் வரையில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கதர் கிராமத் தொழில் திட்டங்கள் தவிர பின்வரும் சிறப்புத் திட்டங்களையும் தொடர்ந்து திருப்திகரமாக நிறைவேற்றி இயங்கி வருகிறது.

1. தீவிர பழங்குடி வளர்ச்சித் திட்டம்.
2. மலைப்பகுதி முன்னேற்றத் திட்டம்.
3. வறட்சி நிவாரணப் பணித் திட்டம்.
4. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.
5. சிறப்புக் கூட்டுத் திட்டம்.

நடப்பாண்டில் 42 கிராமிய நூற்பு நிலையங்கள் துவக்கப் பட்டு 439 நூற்பு கூடங்களாக அதிகரித்து வாரியத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

இவ்வாரியம் நடப்பாண்டில் 34,901 நபர்களுக்கு கூடுதலாக நிலையான வேலை வாய்ப்பு அளித்துள்ளது. கதர் மற்றும் கிராமத் தொழில்களின் கீழ் மொத்தம் 4,88,570 பேர் நிலயான வேலை வாய்ப்பளிக்கப் பெற்றனர்.

ரூ. 914.59 இலட்சம் மதிப்பாக இருந்த கதர் உற்பத்தி ரூ. 1,012.10 இலட்சமாக உயர்ந்தது. ரூ. 785.85 இலட்சமாக இருந்த கதர் விற்பனை ரூ. 903.68 இலட்சமாக உயர்ந்துள்ளது.

ரூ. 205.92 இலட்சம் இருந்த சமையலுக்கு பயன்படாத எண்ணை மற்றும் சோப்பு உற்பத்தி ரூ. 211.12 இலட்சமாக உயர்ந்துள்ளது. இதுவரையில் 3,178 மின்விசைச் செக்குகள் விநியோகிக்கப்பட்டுள்ளன, வெளி நாட்டிற்கு நடப்பாண்டில் ரூ. 28.30 இலட்சம் மதிப்புள்ள பனைப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

வாரியத்தின் கீழ் செயல்படும் அலகுகளின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரம் பின்வருமாறு :—

கயிர் அலகுகள் —

அலகுகளின் எண்ணிக்கை ..	727
கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை	4

நூல் உற்பத்தி (மெட்ரிக் டன்கள்)—

கைராட்டை		2.08
அம்பர்		1.15
கிராமிய நூற்பு நிலையங்கள்		374.69

கதர் உற்பத்தி—

மீட்டர்	51.73	
மதிப்பு	739.87	இலட்சங்கள்.

பட்டு உற்பத்தி—

மதிப்பு	272.23	இலட்சங்கள்.

கதர் விற்பனை—

மதிப்பு	903.68

வேலை வாய்ப்பு மற்றும் கூலி வழங்கியது :

	எண்ணிக்கை.	ரூபாய் (இலட்சத்தில்.)
நூற்போர்	29,433	119.04
நெய்வோர்	7,931	187.75
மற்றவர்	813	73.86

கிராமிய கலை மற்றும் கைவினைத் தொழில்—

கிராமிய கலை மற்றும் கைவினை அலகுகள் :

கிராமத் தொழில்கள்—	206	25

அ. கிராமத் தொழில் அலகுகள். 166

ஆ. கிராமத் தொழில் கூட்டுறவு சங்கங்கள். 1,276.

இ. உற்பத்தி .. ரூ. 6,507.61 இலட்சங்கள்.

ஈ. விற்பனை ரூ. 7,148.52 இலட்சங்கள்.

உ. வேலை வாய்ப்பு 4,50,393 நபர்கள்.

ஊ. கூலி வழங்கியது .. ரூ. 2,157.37 இலட்சங்கள்.

பட்டுப் புழு வளர்ப்பு

சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு பட்டுப் புழு வளர்ப்பு இயக்குநர் அலுவலகம் ஒன்று தனியாக ஏற்படுத்தப் பட்டு, 1979 ஏப்ரலிலிருந்து செயல்பட்டு வருகிறது.

முசுக்கட்டை மரம் வளர்ப்புப் பகுதி :

இம்மாநிலத்தில், பட்டுப்புழு வளர்ப்புத் தீவிரத் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டதாலும், 1982–83 ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட முயற்சிகளாலும், முசுக்கட்டை மரம் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் மேலும் 8,000 ஏக்கர் நிலப் பரப்பில் முசுக் கட்டை மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு இறுதி யில் மொத்தம் 55,042 ஏக்கர் நிலப் பரப்பில் முசுக்கட்டை மரம் வளர்க்கப்பட்டது. தமிழ்நாட்டில் இத் தொழிலில் 76,000 குடும்பங்கள் ஈடுபட்டிருக்கின்றன.

வறட்சிப் பாங்கான பகுதித் திட்டம் :

இத் திட்டம், இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டங் களில் செயல்படுத்தப்பட்டது. 1982–83 ஆம் ஆண்டு இறுதி வரையில் இம் மாவட்டங்களில் 3,062 ஏக்கர் நிலம் இத் திட்டத் தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் 4,200 குடும்பங்கள் ஈடுபட்டிருக்கின்றன.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம் :

தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங் களை சேர்ந்த மலைப் பகுதிகளில் வாழும் பழங் குடியினரைப் பின்தங்கிய நிலையிலிருந்து மேம்பாட்டடையச் செய்யும் நோக் குடன், இம் மாநிலத்தில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச் சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1982–83 ஆம் ஆண்டு இறுதி வரையில் இம்மாநிலத்திலுள்ள மலைப் பகுதி களில் 1,091 ஏக்கர் பரப்பில் மரம் நடும் பணியில் 1,425 குடும் பங்கள் ஈடுபட்டிருக்கின்றன.

மலைப் பகுதி வளர்ச்சித் திட்டம் :

நீலகிரி மாவட்டத்தில் பட்டுப் புழு வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்த மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நீலகிரி

மாவட்டத்தில் 1981—82 ஆம் ஆண்டில் தனித் திட்டமொன்று தொடங்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ், 1982—83 வரையில் 170 குடும்பங்கள் 139 ஏக்கர் நிலப் பரப்பில் முசுக்கட்டை மரம் வளர்க்கும் பணியில் ஈடுபட்டு பயனடைந்துள்ளனர்.

பட்டுப் புழுக்கூடு தயாரித்தல் :

1982—83 ஆம் ஆண்டில் 80.00 இலட்சம் கிலோ கிராம் (மதிப்பிடப்பட்ட அளவு) பட்டுப் புழுக்கூடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய ஆண்டு இந்த பட்டுப் புழுகூட்டின் தயாரிப்புஅளவு 63.00 இலட்சம்/கிலோ கிராம் ஆகும். மொத்தம் தயாரிக்கப்பட்ட 80.00 இலட்சம்/கிலோ கிராம் பட்டுப் புழுக் கூடுகளில், இம் மாநிலத்திலுள்ள அரசு நிறுவனங்கள் தனியார் நிறுவனங்கள், தொழில் கூட்டுறவு பட்டு நூல் சங்கங்கள் ஆகியவை இந்த ஆண்டில் பட்டு தயாரிப்பதற்கு 30.24 இலட்சம்/கிலோ கிராம் பட்டுப் புழுக் கூடுகளைப் பயன்படுத்தியுள்ளன. முந்தைய ஆண்டில், பட்டுத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பட்டுப் புழுக் கூடுகளின் அளவு 27.53 இலட்சம்/கிலோ கிராமாகும்.

கச்சாப்பட்டு உற்பத்தி :

1982—83—இல் இம்மாநிலத்தில், 6.80 இலட்சம்/கிலோ கிராம் கச்சாப் பட்டு உற்பத்தி செய்ய வேண்டுமென மதிப்பிடப்பட்டது. 6.80 இலட்சம்/கிலோ கிராம் கச்சாப் பட்டு உற்பத்தி செய்ய வேண்டுமென மதிப்பிடப் பட்டிருந்தபோதிலும், இம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கச்சாப்பட்டின் அளவு 1.65 இலட்சம்/கிலோ கிராம் ஆகும். சென்ற ஆண்டில் இதற்கு நிகரான கால அளவில் உற்பத்தி செய்யப்பட்ட அளவு 1.51 இலட்சம் கிலோ கிராம் ஆகும்.

வேலை வாய்ப்பு வசதிகள் :

தமிழ்நாட்டைச் சேர்ந்த 15 மாவட்டங்களிலுள்ள சுமார் 2,75,210 பேர் கொண்ட 76,000 குடும்பங்கள் பட்டுப் புழு வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

1983—84 ஆம் ஆண்டில் 8,000 ஏக்கரில் முசுக்கட்டை மரம் நடுவதன் மூலம் மேலும் 40,000 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநிலப் புவியியல்.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை பின்வரும் கனி வளங்கள் குறித்து விரிவான ஆய்வு நடத்தியது:—

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், நாரலாபள்ளி பகுதியிலுள்ள மஹராஜ கடையில் தங்கம் குறித்த ஆய்வு 1:50000 என்னும் அளவில் முறையான வரைபடம் தயாரித்து முடித்ததையும், நாரலாபள்ளி மலைப்பகுதியின் வடக்கு, மேற்கு மலைச் சரிவுகளில் பள்ளங்கள் வெட்டுவதன் மூலம் விரிவான ஆய்வு நடத்தி முடித்ததையும் தொடர்ந்து, டெலஸ்கோப்பு முதலிய கருவிகளின் உதவியுடன் 1:1000 என்னும் அளவில், 0.50 ச.கி.மீ. பரப்பில் கனி வள ஆராய்ச்சி நடத்தப்பட்டது. மொத்தத்தில் 39 பள்ளங்கள் வெட்டப்பட்டன. அகழ்ந்தெடுக்கப்பட்ட பரப்பு சுமார் 1,000 கன மீட்டராகும். காற்று மண்டலத்தில் உள்ள ஆக்ஸிஜனுடன் சேர்ந்து மாறுதலடைந்த தாதுப் பொருள் பூமியின் மேற் பரப்பில் காணப்படுகிற பகுதிகள் Gossom Zone) விட்டு விட்டு அடுக்கடுக்காக உள்ளன. இப் பரப்பின் அகலம் ஒரு சில சென்டி மீட்டர்களிலிருந்து சுமார் 1 மீட்டர் வரையிலாகும். தங்கம் இருக்கிறதா எனக் கண்டறிய ஓடையிலுள்ள வண்டல் மண்ணும், மேற் பரப்பு மண்ணும் மாதிரி எடுத்ததோடு இருபத்தாறு, மேற் பரப்பு மண் மாதிரிகளும், பள்ளம் வெட்டி ஐம்பத்திரண்டு மாதிரிகளும் சேகரிக்கப்பட்டன. மேற்பரப்பு மண் மாதிரிகளில் 1 டன்னுக்கு 7 கிராம் தங்கம் இருந்தது ; பள்ளம் வெட்டி எடுத்த மண் மாதிரிகளில் 1 டன்னுக்கு 1 கிராம் வரையில் தங்கம் இருந்தது.

தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், கரியப்பட்னத்தைத் சுற்றி சிலிகா மணல் குறித்த ஆய்வு.

சிலிகா மணல் படிவப் பகுதியொன்று 1:5000 அளவில் வரையறுக்கப்பட்டது. இந்த சிலிகா தொழில் பயன்பாட்டிற்குப் பயன்படுமா என்பதை ஆய்வு செய்யும் பொருட்டு மண் மாதிரிகள் வேதியல், இயற்பியல் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. சிலிகா மண் மாதிரியை அலசி வடிகட்டிய பின்னர் சிலிகன்டை ஆக்ஸைடு 94.43 சதவீதம் முதல் 98.72 சதவீதம் வரை இருந்தது. இம்மணல், வார்ப்பு மணலாகவும் மட்டரக வண்ணக் கண்ணறையாகவும் பயன்படுத்துவதற்கு ஏற்றது எனக் கருதப்படுகிறது.

இப் பகுதியில் சுமார் 6.6 மில்லியன் டன் சிலிகா மணல் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சென்னை லிமிட்டிடி நிறுவனம் குத்தகைக்கு எடுத்துள்ள பகுதிகளில் சுண்ணாம்புக்கல் ஆய்வு:

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், திருமால், கொக்குளம் கிராமங்களில் 1:4000 அளவில் சுண்ணாம்புக்கல் கிடைக்கும் பகுதி என்று வரையறுக்கப்பட்டது. இந்த நிறுவனம் குத்தகைக்கு எடுத்த நிலப்பகுதிக்கு அருகிலுள்ள புதூர் கிராமத்தில், 1.கி.மீ. 100 மீட்டர்பரப்பில் ஆய்வு நடத்தப்பட்டு, அவ்விடத்தில் தற்காலிகமாக 5 மில்லியன் டன் சுண்ணாம்புக்கல் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வெங்கடேசபுரம் கிராமத்தில் பள்ளம் வெட்டி சுண்ணாம்புக்கல் ஆய்வு நடத்தப்பட்டது. மேலும் சாஜி மலை, கயத்தாறு ஆகிய இடங்களிலும் கங்கார் சுண்ணாம்புக்கல் படிமங்கள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. வேதியல் ஆய்வுக்கென்று பதினேழு மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. சுண்ணாம்புக் கற்கள் சிலவற்றில் மெக்னீஷியம் கலந்துள்ளது. பொதுவாக, கால்சியம் ஆக்ஸைடு 75 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையும், மக்னீசியம் ஆக்ஸைடு 2 சதவீதம் முதல் 4 சதவீதம் வரையும் சிலிகா மணல் சுமார் 18 சதவீதமும் உள்ளன. விரிவாகத் துளையிட்டு மண் மாதிரி எடுக்கும் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டம், சங்கரிதுர்க்கத்திலுள்ள இந்தியா சிமிண்ட்ஸ் நிறுவனம் குத்தகைக்கு எடுத்துக் கொண்ட பகுதியில் சுண்ணாம்புக்கல் ஆய்வு :

இந்தியா சிமிண்ட்ஸ் நிறுவனம் தன்னுடைய ஆலைக்கு, அடுத்த சில ஆண்டுகளுக்கு எவ்வளவு சுண்ணாம்புக்கல் தேவைப்படும் என்பதை மதிப்பிடுமாறு கேட்டுக் கொண்டதன் பேரில், சேலம் மாவட்டம், சங்கரிதுர்க்கம் என்னுமிடத்திற்கு அருகில் மேற்படி நிறுவனம் குத்தகைக்கு எடுத்த பகுதியிலும் அடுத்துள்ள பகுதிகளிலும் சுண்ணாம்புக்கல் இருப்பது பற்றி மதிப்பிடப்பட்டது. இந்த ஆய்வுப் பணியில் விரிவான கனிவள வரைபடத் தயாரிப்புப் பணியும் (1:4000 என்னும் அளவில்) டைமண்டு துளையிடும் பணியும் அடங்கும். மொத்தத்தில், டைமண்டு, வேகண்டிலில் துளையிடும் முறைகளில் 193 துளைகள் போடப்பட்டுள்ளன. மொத்தத்தில் 3,600 மீட்டர் தொலைவிற்கு துளை போடப்

பட்டு, வேதியல் ஆய்வுக் கென்று 3,000 மாதிரிகள் சேகரிக்கப் பட்டன. இந்நிறுவனம் குத்தகைக்கு எடுத்த நிலப் பகுதியில், மொத்தம் 12.80 மில்லியன் டன் சுண்ணாம்புக்கல் இருப்பதாக மதிப்பிடப்பட்டது.

இதையொட்டியிருக்கும் (குத்தகைக்கு எடுக்காத) பிற பகுதியில் 6.63 மில்லியன் டன் சுண்ணாம்புக்கல் இருப்பதாக நிருபண மாகியுள்ளது.

மதுரை மாவட்டம், தேனி வட்டம், வர்ஷநாடு கிராமத்தில் கனிவள ஆய்வு :

வர்ஷநாடு பள்ளத்தாக்குப் பகுதியில் சுண்ணாம்புக்கல் அலுமினியம், இரும்பு, மக்னீசியம் சிலிகேட் உள்ள பாறைகளைக் கண்டு பிடிக்க முறைப்படியான ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இதுவரை 40 ச.கி. மீட்டர் பரப்பளவில் ஆய்வு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. குண்டு என்னுமிடத்தின் வட கிழக்கில் சுமார் $1\frac{1}{2}$ கி.மீ. தொலைவிற்கு சுண்ணாம்புக்கல் ஓரளவுக்கு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. மேற் கொண்டும் ஆய்வுப் பணி நடந்தேறி வருகிறது.

இரத்தினக்கல் ஆய்வு :

கன்னியாகுமரி மாவட்டம் :

கன்னியாகுமரி மாவட்டம், விளவன்கோடு வட்டம், பாலக்கல் பகுதியில், இரத்தினக்கல் இருப்பதைக் கண்டறியும் ஆய்வு தொடர்ந்து நடைபெற்றது. 45 ச.மீ. பரப்பில் இரத்தினக்கல் ஆய்வுப்பணி முறையாக மேற்கொள்ளப்பட்டது; மேலும், இரத்தினக்கல் அமைந்துள்ள பகுதியைக் கண்டறிந்து எல்லை வரையறுக்கும் பொருட்டு, சுமார் அரை சதுர மீட்டர் பரப்பில் விரிவான ஆய்வுப் (1:4000 என்னும் அளவில்) பணி மேற்கொள்ளப்பட்டது. கூழாங்கற்கள் நிறைந்த பகுயில் 'சின்டிலோ' மீட்டர் ஆய்வு நடத்தியதில் வினாடிக்கு 80 முதல் 700 ஒளிவீச்சு இருப்பதாகத் தெரிந்தது. மொத்தத்தில் ஐந்து குழிகள் வெட்டப் பட்டன. கற்களை அலசி எடுப்பதற்காக 8 கன மீட்டர் தோண்டப்பட்டது. கண்ணாடி போன்ற மஞ்சள் நிற சிறு துண்டுக்கல் கிடைத்தது. ஆய்வின் முடிவு பயனளிப்பதாக இல்லாததால் மேற் கொண்டு பணி நிறுத்தப்பட்டது.

சேலம் மாவட்டம் :

நாமக்கல் வட்டத்திலுள்ள வில்லி பாளையம், பரமத்தி அருகிலும், மோசனூர் அருகிலுள்ள செவிட்டுரங்கன் பட்டியிலும் இரத்தினக்கல் ஆய்வு தொடர்ந்து நடத்தப்பட்டது. சுமார் 4 ச.மீட்டர், விரிவான ஆய்வுக்காக (1:4000 என்னும் அளவு) எடுத்துக் கொள்ளப்பட்டது. மாணிக்கக்கல் (Ruby) செந்நிறப் பளிங்குக்கல், அலுமினியம், இரும்பு, மக்னீசியம் சிலிகேட் அடங்கிய கற்களும் பிற கற்களும் நிறைந்து காணப்பட்டன. இக் கற்கள் இருக்கும் அளவை மதிப்பிடும் பொருட்டு இவை தொடர்பான நடவடிக்கைகளை மேற் கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்திலுள்ள எறிச்சி கிராமப் பகுதியில் அலுமினியக் கலவையைக் கண்டறிதல் :

வெண்களிமண் படிந்திருப்பதைக் கண்டறிவதற்கான விரிவான ஆய்வு எறிச்சி கிராமப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. கணவாய்ப் பகுதியில் ஆறு சோதனைக் குழிகள் தோண்டப்பட்டன. 2 மீட்டர் நிலப் பரப்பிற்குக் கீழ் 1 முதல் 3 மீட்டர் தடிமனுள்ள வெண் களிமண் உள்ளது. மொத்தம் 96 மீட்டர் ஆழத்திற்கு எட்டு இடங்களில் துளைகள் போடப்பட்டன. 76 மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்விற்காகச் சேகரிக்கப்பட்டன— களிமண் மாதிரியின் சராசரி இரசாயன பகுப்பாய்வு பின்வரும் சதவீதத்தைக் குறிப்பிடுகிறது.

ஈரத்தன்மை	LiO	SiO_2	Fe_2O_3	TiO	Al_2O_3	Cao	ஆல்களி
1.13	9.75	60.02	2.30	0.46	26.56	0.74	இல்லை.

களிமண் மாதிரியின் இயற்பியல் ஆய்வு :

தோற்றம் ..	பழுப்பு வெண்மை பிளாஸ்டிக்
மணல்துகள் அளவு	24.08 சதவீதம்.
நீர்குழைவியல்பு ..	33.84 சதவீதம்.
வறட்சி-சுருங்கும் தன்மை	2.79 சதவீதம்.
வறட்சித் திட்பம் ..	30.78 lbs/in 2
வெப்பம்-சுருங்கும் தன்மை	16.12 சதவீதம்.
வெப்பத்தன்மை ..	77.7 libs/in 2
போரோசிட்டி (Porosity)	24.7 சதவீதம்.
நீர் உறிஞ்சும் தன்மை	12.65 சதவீதம்.
எரி வண்ணம்	சிறிதளவு மஞ்சள் வண்ணம் கலந்த வெண் நிறம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தேவிப்பட்டினம் திருப்புல்லாணி பகுதியில் உப்பளத்திற்கான ஆய்வு :

இராமநாதபுரம் மாவட்டத்தில் தேவிப்பட்டினம், கிழக் கரைக்கு இடையே கடற்கரைப் பகுதி உப்பு எடுப்பதற்கான உவர் நீர் வளங்களைக் கொண்டுள்ளது.

திருப்புல்லாணியில் ஒன்றும், தேவிப்பட்டினத்தில் மற்றொன் றுமாக இரண்டு துளைகள் போடத் திட்டமிடப்பட்டன. ஒரு மீட்டர் ஆழத்தில் முறையான இடைவெளிகளில் உவர்நீர் மாதிரி களைச் சேகரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது திருப் புல்லாணியில் BH1-ல் 5 மீட்டர் ஆழத்திற்குத் துளை போடப் பட்டுள்ளது. கடலிலிருந்தும் தற்போதுள்ள உவர்நீர் மாதிரி கள் 25-ம் அப்பகுதியில் தற்போதுள்ள உவர் நீர் கிணறுகளி லிருந்தும் எடுக்கப்பட்ட உவர்நீர் மாதிரிகள் 25ம் சேகரிக்கப்பட்டு இரசாயன பகுப்பாய்வு நடத்தப்பட்டுள்ளன.

அதன் அடர்த்தி 1.7° பி ஆமியிலிருந்து 11° பி ஆமி வரை யாகும். அதில் அடங்கிய இரசாயனப் பொருள்கள் வருமாறு : சோடியம்குளோரைடு 1.59 முதல் 11.09 சதவீதம் (Nacl) கால்சியம் (ca) 0.02 முதல் 0.43 சதவீதம், மக்னீசியம் (Mg) 0.06 முதல் 0.51 சதவீதம் (S4) சல்பேட் 0.13 முதல் 0.75 சதவீதம் தமிழ்நாடு உப்பு வள நிறுவனத்தின் ஆலோசனையின் படி இப்பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதைத்தவிர, செங்கற்பட்டு மாவட்டம் பழவேற்காடு ஏரி யிலும் அதைச்சுற்றியுள்ள பகுதியிலும் உப்பளத்திற்கான வளங் களை மதிப்பிட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஏரியி லிருந்தும் கடலிலிருந்தும் மூன்று மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. சோடியம் (Na) 5,900 முதல் 14,000 ppm -ம், குளோரைடு 20,000 முதல் 34,000-ம் இருந்தது மாதிரி பகுப்பாய்வில் தெரிய வந்தது ; உப்பு எடுப்பதற்கான பகுதிகளைத் தெரிவிக்கும் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு ஆய்வுப்பணிகள் :

புவியியல் சார்ந்த பொறியியல் ஆய்வு :

பாபனாசத்திற்கும் தமிழ்நாடு மின்வாரியத்தின் உத்தேசச் சேர்வலாறு அணைக்கும் இடையே இணைப்பு சுரங்க வழி

புவியியல் ரீதியில் திட்டமிடப்பட்டது. இது, மேற்பரப்பு புவியியல் தன்மைகளுடன் ஒத்திட்டுப்பார்க்கப்பட்டது. தமிழ்நாடு மின்வாரியத்திற்கும், அதன் ஒப்பந்தக்காரருக்கும் இடையே சுரங்கப் பாதையின் புவியியல் குறித்த தகராறு ஒன்றிற்குத் தீர்வுகாண இப்பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணியில் கல் பாறையினை செதுக்கும் விரிவான பணியும் அடங்கும்.

நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு ஆய்வு ;

நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் வட்டத்தில் உறலக்கரை எஸ்டேட் ஏனையச் நிலச்சரிவு பகுதிகளில் நிலச்சரிவு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆலோசனை கூறப்பட்ட தடுப்பு-நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிபந்தனையின் பேரில், எஸ்டேட்டுகளுக்கு இசைவு அளிக்கப்பட்டது. நீலகிரி மாவட்ட ஆட்சியரின் வேண்டுகோளின் பேரில் இப்பணி மேற்கொள்ளப் பட்டது.

இத்துறை, 1982 டிசம்பரில் புதுடில்லியில் நடைபெற்ற புவியியல் சார்ந்த பொறியியல் அனைத்து மாநாட்டில் கலந்து கொண்டது. அம்மாநாட்டில் ஆய்வு அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

கன்னியாகுமரியில் உள்ள சிறிய பாறையில் திருவள்ளுவர் சிலை நிறுவுதல் ;

பாறையில் போடப்பட்ட துளைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகள், சென்னை 5 பொதுப்பணித்துறையின் மண்வள ஆய்வுக்கூடத்தில் அடங்கல் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. அமைக்க உத்தேசிக்கப்பட்ட சிலையையும் அதன் துணைக்கட்டுமானத்தையும் நிறுவுவதற்கு அப்பாறை தகுதியுடையது என்பதை சோதனைகள் வெளிப்படுத்தியுள்ளன.

புலன் மின் உற்பத்திக்கும் அதனைச் சேமித்து வைப்பதற்கும் தேவைப்படுகிற கூடுதல் நீர்த்தேக்கங்களுக்குப் பொருத்தமான இடங்களை ஆராய பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் கீழ் நல்லாறு-இரும்பாலையூர் நீரோடைகளில் உள்ள மனைப்பகுதிகளின் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

நீர்த்தேக்கப்பகுதியில் சில சந்திப்புகள் நீங்கலாக சற்கள் பாறை இடுக்கு வழியாக நல்லாறு ஓடை பாய்கிறது ; இதனை எளிதில் சமாளிக்கலாம் ; நீர்த்தேக்க அடித்தளம் அமைப்ப தற்கு இதனால் பிரச்சினை எதுவும் இருக்காது.

இரும்பாலையார் நீரோடை பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் மேல்பகுதியில் பாய்கிறது. நீரோடையின் படுகையானது தொடர்ந்து பல்வேறு பாறை அடுக்குகளைக் கொண்டதாக இருக்கிறது. தோண்டப்பட்ட துளைகள் அனைத்திலும் கடினப்பாறைகள் உள்ளபோதிலும், நீர்த்தேக்க அடித்தளம் அமைப்பதற்கு மனை பகுதியினால் பிரச்சனை இருக்காது ; நீர்த்தேக்கத்தை ஒட்டியுள்ள பகுதி மரங்கள் அதிகம் நிறைந்த பகுதியாயுள்ளதாலும், நிலப்பகுதியை ஆய்வு செய்வதற்கு இயலாததாலும், வான்வழி நிழற்படம் ஆய்வு ஒன்றின் மூலம் இப்பகுதியின் அமைப்பினைச் சித்தரிக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. வரைபடங்களைப் பெற்ற பின்னர், இப்பணி விரைவில் எடுத்துக் கொள்ளப்படும்.

மேற்சொன்ன புள்ளிவிவரங்களைத் தயாரிப்பதற்கு, இந்தியப் புவியியல் ஆய்வு நிறுவனத்தின் கூட்டுத் திட்டம் ஒன்றுக்கு மாதிரிகள் தேவைப்படுகின்றன ; பெங்களூர், ஐதராபாத் ஆகிய இடங்களில் ஆய்வுக்கூடப் பகுப்பாய்வினை நடத்த மேற்சொன்ன நிறுவனத்திற்கு வரைபடங்கள் கொடுக்கப்பட்டன. இந்தியப் புவியியல் ஆய்வு நிறுவனம், வெளியீடு ஒன்றினை விரைவில் கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு ஆய்வு பற்றிய அடங்கல் அறிக்கை ஒன்றினைத் தயாரிக்கும் பணி மேற்சொன்ன நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது ; அவ்வறிக்கை விரைவில் தயாராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம்.

தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) பொது நிறுவனமாக 1971 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இந்த நிறுவனம் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது. தமிழ்நாட்டில், நடுத்தர-பெரிய தொழில்களை உருவாக்குவதும்

மேம்படுத்துவதும் இம்மாநிலத்தில் பின்தங்கியுள்ள பகுதிகளில் விரைந்து தொழில்களை உருவாக்குவதும் இதன் முக்கிய நோக்கங்களாகும். இந்நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 15 கோடியாகும். இன்றைய நிலவரப்படி செலுத்தப் பட்ட மூலதனம் ரூபாய் 1,390.00 இலட்சம் ஆகும்.

நீதி உதவி :

தவணைக்கடன் ;

நடப்பு ஆண்டில் "சிப்காட்" அனுமதித்த தவணைக் கடன் ரூபாய் 3,036.91 இலட்சமாகும். வழங்கிய தொகை ரூபாய் 1,579.80 இலட்சமாகும். இவ்விரண்டுக்கும் திட்ட இலக்குகள் முறையே ரூபாய் 3,000.00 இலட்சமும், ரூபாய் 1,500.00 இலட்சமும் ஆகும்.

மூலதனப் பங்குகளை வாங்குதல் ;

நடப்பு ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் திட்ட இலக்கு ரூபாய் 15 இலட்சம்தான். ஆனால், அனுமதிக்கப்பட்ட தொகை ரூபாய் 18.25 இலட்சமாகும்.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் (I. D. B. I.) ஆரம்ப மூலதனம் ;

1982-83 ஆம் ஆண்டில் ரூபாய் 69.07 இலட்சம் ஆரம்ப மூலதன நிதி உதவிக்கு "சிப்காட்" நிறுவனம் அனுமதி அளித்தது. ஆனால், இதற்கான திட்ட இலக்கு ரூபாய் 60.00 இலட்சம்தான். 1982—83 ஆம்ஆண்டில் ரூபாய் 29.70 இலட்சம் வழங்கப்பட்டது.

ஊக்கச்சலுகைகள் ;

வட்டியில்லா விற்பனை வரிக்கடன் ;

மாநில அரசின் முகவராக "சிப்காட் நிறுவனம் செயல் படுத்தும் ஊக்கச் சலுகை தீவிரத் திட்டத்தின் கீழ் முக்கிய அங்கமாய் விளங்குவது வட்டியில்லா விற்பனை வரிக்கடனாகும். இம்மாநிலத்தின் ஒரு இலட்சமும் அதற்கு மேலேயும் மக்கள்

தொகை உள்ள நகரங்கள் மதுரை, திருச்சிராப்பள்ளி, நகர்ப் பகுதிகளை சுற்றிலும் எட்டு கிலோ மீட்டர் வரை உள்ள பகுதிகளைத் தவிர பின்தங்கிய ஒன்பது மாவட்டங்களில் ஏதாவது ஒன்றிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலைநகர் தொழில் தொகுதியிலும் குன்னத்தூர் வட்டாரத்திலும் தொடங்க இருக்கும் நடுத்தர அல்லது பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுகிறது. 1982—83 ஆம் ஆண்டில் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் (S.F.S.T.) ரூபாய் 376.43 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. ரூபாய் 263.30 இலட்சம்தான் வழங்கப்பட்டது. ஆனால், திட்ட இலக்கு ரூபாய் 300 இலட்சம்தான்.

மத்திய அரசு மூலதன மானியத் திட்டம் ;

இம்மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள 33 வட்டங்களில் ஏதாவது ஒரு வட்டத்தில் நிறுவப்படும் தொழில் பிரிவு, அதன் நிலையான மூலதன முதலீட்டில் 15 சதவீதத்தை இத் திட்டத்தின் கீழ் ஒரு மொத்த மானியமாக அல்லது உதவித் தொகையாகப் பெறுகிறது. தற்போது, இத் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாட்டிலுள்ள நிதி உதவி பெறத்தக்க ஒன்பது மாவட்டங்களும், மத்திய அரசிடமிருந்து உதவித்தொகை பெறத் தகுதியுள்ளனவாகும். (33 வட்டங்களை) தவிர நிதி உதவி பெறத்தக்க மாவட்டத்தில் நிறுவப்படும் தொழில் பிரிவு ரூபாய் 10 இலட்சம் உச்சவரம்பிற்குட்பட்டு திட்டச் செலவில் 10 சதவீதம் வரை நிதி உதவி பெறுகிறது.

1982—83 ஆம் ஆண்டில், மாநில அளவிலான குழு, ரூபாய் 1,636.35 இலட்சம் வரை உதவித் தொகை அளிக்க அனுமதித்துள்ளது. ஏனைய மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாடு இதில் முன்னணியில் நிற்கிறது. இத்திட்டத்தின் கீழ் 31-3-1983 ஆம் நாள் வரையில் இந்திய அரசிடமிருந்து ரூபாய் 21 கோடி திரும்பப் பெற்றுள்ளது. இது மொத்தத் தொகையில் 13.80 சதவீதமாகும்.

மாநில அரசு மூலதன மான்யத் திட்டம் ;

மூலதன நிதி உதவி அளிக்கும் திட்டங்கள் சிறு தொழில்களுக்காக அனுமதிக்கப்பட்டு தெரிந்தெடுக்கப்பட்ட 24 வட்டங்களில் அமைக்கவிருக்கும் நடுத்தர-பெருந் தொழில்களுக்கும்

கிடைக்கச் செய்யுமாறு அரசு ஆணையிட்டது. அண்மையில்' மேலும் 7 வட்டங்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், சில நெரிந்தெடுக்கப்பட்ட தொழில்களுக்கு, அதாவது, மின் அணுவியல், மருந்துப் பொருள், அட்டவணையிடப்பட்ட மருந்துப் பொருள் தயாரித்தல், ஆட்டோமொபைல் துணைப் பிரிவுகள் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு அரசு மான்யம் வழங்க அனுமதி வழங்கியுள்ளது. 1982—83 ஆம் ஆண்டு ரூபாய் 65.21 இலட்சம் வரை மாநில உதவித் தொகை அனுமதிக்கப்பட்டது. இதுவரையில் ரூபாய் 15.26 இலட்சம் கொடுக்கப்பட்டது.

தொழில் வளர்ச்சி நிலையம்

இராணிப்பேட்டை ;

729.78 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தி சிப்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது, விற்பனை செய்யத்தக்க 480.68 ஏக்கரில் 431.38 ஏக்கர் நிலம் வரை 69 தொழிற்சாலைகளுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டது. இவற்றில் 40 தொழிற் பிரிவுகள் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. 20 தொழிற் பிரிவுகளில் கட்டுமானப் பணிகள் பலவேறு நிலையில் உள்ளன.

தற்போதுள்ள தொழிற்சாலைத் தொகுதியை விரிவுபடுத்தும் பொருட்டு, நரசிங்கபுரம் கிராமத்தில் 143.97 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது, இதில் 66.81 ஏக்கர் தற்போது சுவாதீனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு உள்ளது. 47.95 ஏக்கர் நிலம் ஏற்கனவே ஒரு தொழிற் பிரிவிற்கு ஒதுக்கப் பட்டது.

ஓசூர் ;

ஓசூர் தொழிற்சாலைத் தொகுதியின் மொத்த பரப்பு 1235.86 ஏக்கராகும். அதில் 828.47 ஏக்கர் விற்பனைக்குரிய பரப்பளவாகும். 737.40 ஏக்கர் நிலப்பரப்பு ஏற்கனவே 98 தொழிற் பிரிவுகளுக்கு, ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 50 தொழிற் பிரிவுகளில் வணிக அளவில் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது, 28 தொழிற் சாலைகளில் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மானாமதுரை ;

தொழிற்சாலைத் தொகுதிக்காக 492.08 ஏக்கர் பரப்பளவு நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதில் 68.99 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் 18 தொழிற் பிரிவுகளுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு தொழிற் பிரிவு வணிக அளவில் உற்பத்தி தொடங்கியுள்ளது. 5 தொழிற் பிரிவுகளில் கட்டுமானப் பணி நடந்தேறி வருகிறது.

ஆதாயம், விரயம் ;

1982–83 ஆம் நிதி ஆண்டில், வரி விதிப்பிற்கு நிதி ஒதுக்கம் செய்வதற்கு முன்னரும் 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் 36 (1) (VIII) பிரிவின் கீழ் சிறப்பு சேம நிதியை மாற்றுவதற்கு முன்வரும் கடனுக்கு தொகை சரி கட்டியதற்குப் பின் வரும் ஆதாயம் ரூ. 114.32 இலட்சமாகயிருந்தது.

தமிழ்நாடு பீங்கான் நிறுவனம்.

தொழில் வணிகத்துறை மற்றும் டான்சியின் கீழ் இயங்கி வந்த பீங்கான் தொழில் பிரிவுகளை ஒருமைப்படுத்தி வணிக அடிப்படையில் நடத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் 1974 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

தமிழகத்தில பீங்கான் தொழிலை விரிவுபடுத்தி மேலோங்கிடச் செய்வதை தனது நோக்கமாக தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் கொண்டுள்ளது. பீங்கான் துப்புரவு சாமான்கள் பீங்கான்வீட்டு சாமான்கள், மின்தடைகள், கற்குழாய்கள், செங்கற்கள், கலைப்பொருட்கள், ஆகியவற்றை உற்பத்தி செய்வதுடன் விருத்தாசலத்தில் அமைந்துள்ள சிறுதொழிற் பிரிவினருக்காக சூளை வசதிசெய்வதும் தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் நடவடிக்கைகளில் அடங்கும். இந்த நிறுவனத்தின் பொருள்கள், விருத்தாசலம், ஓமலூர் மற்றும் திருமழிசை ஆகிய இடங்களில். உள்ள தொழில் பிரிவுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

1982—83 ஆம் ஆண்டின் செயல்நிலை விவரம் ;

	(ரூபாய் இலட்சத்தில்.)
உற்பத்தி	202.97
விற்பனை	207.91
இருப்பு நிலைமை	(+) 5.1
பற்றாக்குறை	(—) 20.35

தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சி நிறுவனம்.

இந்த நிறுவனம் 1982—83 ஆம் ஆண்டு ரூ. 231 இலட்சத்திற்கு விற்பனை செய்தது. 1981—82 இதன் விற்பனை 197 இலட்சமாக இருந்தது. சிதம்பரத்தில் இயங்கி வந்த கிளை விற்பனைக் கூடம் பொருளாதார காரணங்களினால் ஜூலைத் திங்கள் 1982 ஆம் ஆண்டில் புதுச்சேரிக்கு மாற்றப்பட்டது. பற்பல கைத்திறன் பொருட்கள் ரீதியிலான சிறப்பு கண்காட்சி கூடங்கள் இந்தியாவில் பல இடங்களில் இந் நிறுவனத்தினால் நிறுவப்பட்டு பொருட்கள் விற்பனக்கு வைக்கப்பட்டன. தமிழ்நாட்டில் அல்லாது பிற மாநிலங்களில் நடத்தப்பட்ட கண்காட்சிகளுக்கு வளர்ச்சி ஆணையர் (கைத்திறன் தொழில்கள்) புதுடில்லி அவர்களிடம் இருந்து நிதியுதவி கிடைக்கப்பெற்றது. வளர்ச்சி ஆணையர் (கைவினைப் பொருட்கள்) புதுடில்லியுடன் கூட்டாக மற்ற மாநிலங்களில் கைவனைப் பொருட்களின் கண்காட்சிகள், தமிழ் நாட்டில் பல இடங்களில் இந்நிறுவனம் நடத்தியது. இவ்வாறு நடத்தப்பட்ட கண்காட்சிகளில் சுமார் ரூ. 28 இலட்சத்திற்கு வியாபாரம் செய்யப்பட்டது. இந்த வருடத்தில் ஏற்றுமதி செய்யப்பெற்ற பொருட்களின் மதிப்பு ரூ. 8.33 இலட்சமாகும். முன்னாளில் கைத்திறன் தொழில் பண்டகசாலை சங்கத்தினால் நடத்தப் பெற்ற கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையம் தற்காலிகமாக 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளன்று இவ்வினையகத்திற்கு ஒப்படைக்கப்பெற்றது.

உற்பத்தி ;

1981–82 ஆம் ஆண்டு ரூ. 64 இலட்சமாக இருந்த உற்பத்தி அளவு ரூ. 73 இலட்சமாக 1982–83 ஆம் ஆண்டு உயர்ந்துள்ளது. மேலும் இரண்டு உற்பத்தி நிலையங்கள் (வெண்கலப் பொருட்களின் உற்பத்திக்காக நாச்சியார்கோவிலில் ஒன்றும் பஞ்ச உலோகப் பொருட்களின் உற்பத்திக்காக சுவாமிமலையில் ஒன்றும்) துவங்கப்பட்டன. மூங்கில் பொருட்களைத் தயாரிப்பதற்காக உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையம் ஒன்று திருச்சியில் இந்த வருடம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டது. காகிதக்கூழ், மண்பாண்டக கலை மற்றும் டெரக்கோட்டா ஆகிய கைத்தொழில்களுக்கான பொது வசதி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான பிரேரணை ஒன்றை வளர்ச்சி ஆணையர் (கைத்திறன் தொழில்கள்) புது டில்லி அவர்களிடம் சமர்ப்பித்ததில் ரூ. 1 இலட்சம் பகுதி நிதி உதவியாக இந் நிலையம் அமைப்பதற்கு இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

இந்த வருடத்தில் 159 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சிதிட்டங்களை நடத்த கிராம கைவினைஞர்களின் வளர்ச்சித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களிலிருந்து பகுதி நிதி உதவியும் 1—11—1974-ல் இருந்து இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்ட பயிற்சி நிலையங்களுக்காக அரசிடமிருந்து பகுதி உதவியும் இந்நிறுவனம் பெறுகின்றது.

ஆள் சேர்ப்பதற்கான விதிமுறைகளையும், பணியாளர்களுக்கு பதவி முன்னேற்ற வாய்ப்புகளுக்கான விதிமுறைகளையுங் கொண்ட பணியாளர் கொள்கை இவ்வாண்டிலிருந்து நடைமுறையில் கொண்டுவரப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்.

தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான நிறுவனமாகிய தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், 1965 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பொதுத்துறையின் கீழ், ஆலங்குளத்தில் சிமெட்டி ஆலையும், அரக்கோணத்தில் உருக்கு ஆலையையும் நடத்தும் நோக்குடன் இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டில் இந்திய அரசு, கூட்டுத்துறைக்கொள்கை ஒன்றை

வகுத்தது. தமிழ்நாட்டில் கூட்டுத்துறைத் திட்டங்களைப் செயல்படுத்தும் பணி, தமிழக அரசால் டிட்கோவிடம் கொடுக்க பட்டது. டிட்கோ, 18 ஆண்டுக்காலத்தில், பல துறைகளில் தனது பணிகளை நிறைவேற்றியுள்ளது. டிட்கோ, (அ) பொதுத் துறையில் புதிய தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது. (ஆ) தனியார் தொழில் முனைவர்களுடன் இணைந்து கூட்டுத் துறையில் தொழிற் பிரிவுகளை நிறுவியுள்ளது. (இ) நலிவுற்ற தொழில் பிரிவுகளுக்கு உதவியளித்துள்ளது. 31-3-1983 அன்றுள்ளபடி ஒன்பது பொதுத்துறை தொழிற்சாலைகள், முப்பத்து மூன்று கூட்டுத்துறை தொழிற் பிரிவுகள், இரண்டு நலிவுற்ற தொழிற் பிரிவுகள் ஆகியவற்றில் இணைப்புக்கடன் உட்பட டிட்கோ, ரூ. 51.22 கோடி முதலீடு செய்துள்ளது. இவற்றின் மொத்த செலவு ரூ. 413.75 கோடியாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) ;

இது டிட்கோவிற்கு முழுவதும் சொந்தமான கிளை நிறுவனமாகும். இந்நிறுவனம் மிக சிறப்பாகச் செயல்பட்டு, வட்டிக்காக ரூ. 343.96 இலட்சமும் தேய்மானத்திற்காக ரூ. 258.65 இலட்சமும் ஒதுக்கிய பின்னர், இந்நிறுவனத்திற்கு ரூ. 699.07 இலட்சம் ஆதாயம் கிட்டியுள்ளது.

தமிழ்நாடு கெமிகல் பிராடெக்டெஸ் லிமிடெட் ;

அறிக்கை ஆண்டில், இந்நிறுவனத்தின் பங்குகள் டிட்கோவிற்கு ஒதுக்கப்பட்டன. நிதி ஆதாரங்களில் ஏற்படக்கூடிய பற்றாக்குறைகளை ஈடு செய்யவும் இந்நிறுவனத்தின் திட்டச் செலவுக்கு அதிகமாக ஆகக்கூடிய செலவுகளைச் சரிக்கட்டவும் நிதி நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட உறுதி மொழிகளின் அடிப்படையில் இதன் பங்குகள் டிட்கோவிற்கு ஒதுக்கப்பட்டன. பின்னர் நிறுவனம் டிட்கோவின் கிளை நிறுவனமாகியது. இந்நிறுவனம், தொடர்ந்து மின்சக்தி பற்றாக்குறை இருந்தபோதிலும். 3113 டன் சோடியம் ஹைட்ரோசல்பைட்டும் 2,790 டன் திரவ சலபர் டை ஆக்ஸைடும் உற்பத்தி செய்துள்ளது. இந்நிறுவனத்தின் விற்று முதல் 1981 ஆம் ஆண்டில் ரூ. 60: இலட்சமாக இருந்தது. 1982 ஆம் ஆண்டில் ரூ. 756 இலட்சமாக உயர்ந்துள்ளது. இதனால், இந்நிறுவனத்திற்கு ரூ. 120.97 இலட்சம் ஆதாயம் கிட்டியுள்ளது. இந்நிறுவனம் தனது பணிதனைப் பல திரப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

மாநில அளவில் நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களில் முதல் நிறுவனமாகத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதும், விரைவுப்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும். இந்திய ரிசர்வ் வங்கியையும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியையும் அவ்வப்பொழுது கலந்தாலோசித்த பின்னர் இந்திய அரசால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் வாயிலாக 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவி நிறுவனச் சட்டத்தின் சில முக்கிய விதித்துறைகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்குப் பொருந்தும்படியாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

அலுவல்களும் நோக்கங்களும்.

இந்நிறுவனத்தின் முக்கிய அலுவல்களும் நோக்கங்களும் வருமாறு :—

முக்கியமாக நிலம், கட்டடம், இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்காக தொழில் நிறுவனங்களுக்கு நீண்ட கால, நடுத்தர காலக் கடன்களை வழங்குவது. எந்திரங்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்கள் செய்து கொள்ளும் ''காலம் தாழ்த்தித் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு'' (Deferred Payment Contract உத்தரவாதம் மேல் உத்தரவாதம் அளிப்பது. வங்கிகள் ஈட்டுதவி நிறுவனங்கள் பொது மக்களிடம் இருந்து பெறும் கடன்கள் முதலியவற்றின் வாயிலாக தொழில் நிறுவனங்கள் பெறும் கடன்களுக்கு உத்தரவாதம் அளிப்பது. தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், கடனீட்டுறுதிப் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவது. அவற்றுக்கு உத்தரவாதமளிப்பது. மத்திய அரசு ஒப்பளிக்கும் உதவித் தொகையை ஒட்டி இத்தொகையை தொழில் நிறுவனங்களுக்கு முன் கூட்டியே கடனாக வழங்குவது.

முக்கியமாக தமிழ்நாடு அரசு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி அளிக்கும் பங்கு மூலதனம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதிஉதவி, கடனீட்டு உறுதி பத்திரங்கள், வைப்பு தொகைகள் முதலியவை இந்நிறுவனத்தின் நிதிவாயில்கள்

ஆகும். 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள அன்று உள்ளவாறு இந்நிறுவனத்தின் நிதிவாயில்களின் நிலவரம் வருமாறு :—

	1983 ஆம்ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் உள்ளபடி.
	(ரூபாய் இலட்சத்தில்.)
பங்கு மூலதனம்	2,649.56
கடன் பத்திரங்கள்	2,941.50
இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி உதவி	3,159.00
மொத்தம்	8,750.06

1981–82, 1982–83 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் செயலாக்கம்.

இந்நிறுவனம் நிதியுதவிக்கு ஒப்புதல் அளித்தல், நிதி விநியோகித்தல், கடனைத் திரும்ப பெறல் போன்ற செயலாக்கங்களில் முந்தைய இரண்டு ஆண்டுகளில் செயலாக்கத்தோடு ஒப்பிடுகையில் போற்றத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. இந்நிறுவனம் 1982–83 ஆம் ஆண்டில் ரூபாய் 55.95 கோடி நிதியுதவிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இது முந்தைய ஆண்டில் ரூபாய் 52.13 கோடி ஒப்புதல் அளித்துள்ளதைவிட கனிசமாக உயர்ந்துள்ளது. இதுபோல் நிதி விநியோகித்த தொகை கடந்த ஆண்டில் ரூபாய் 35.07 கோடியிலிருந்து இவ்வாண்டு ரூபாய் 39.65 கோடியாக உயர்ந்துள்ளது. கடனை திரும்பப் பெறுவதிலும் கடந்த ஆண்டு ரூபாய் 13.76 கோடியிலிருந்து இவ்வாண்டு ரூபாய் 20.34 கோடியாக அதிகரித்துள்ளது.

சிறு தொழில்களுக்கு நிதியுதவி ;

இந்நிறுவனம் எளிய வழிமுறைகளில் நிதி உதவி அளிக்கிறது. சமீப வருடங்களில் இந்நிறுவனம் சமுதாயத்தில் நலிந்துள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் பயன் அடையுமாறு சிறு தொழில்களுக்கும் சின்னஞ்சிறு தொழில்களுக்கும் அதிக அளவில் நிதியுதவி அளித்து வருகிறது.

இத் தொழில் நிறுவனங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதியுதவிகளில் விவரங்கள் வருமாறு :

	1981–82	
	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்.)
சிறு தொழில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதியுதவி.	5,646	4,444.10

	1982–83 (தற்காலிகமானது.)	
	எண்ணிக்கை.	தொகை.
	(4)	(5)
சிறு தொழில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதியுதவி.	3,175	4,867.79

தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி :

i இம்மாநிலத்தில் கிராம, ஓரளவு நகர பாங்குள்ள பகுதிகளில் தொழில் வளர்ச்சியினை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தாடு தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள

தொழில் நிறுவனங்களுக்கு இந்நிறுவனம் பெருமளவில் நிதியுதவி அளித்து வருகிறது. உதவிகளின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

எளிய நிபந்தனைகளின் பேரில் ரூபாய் 30 இலட்சம் வரை கடன்கள்.

தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு இந்நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதியுதவிகளின் விவரங்கள் பின்வருமாறு:—

	1981–82		1982–83 (தற்காலிகமானது.)	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் இலட்சத்தில்.)			
தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை ..	3,180	2,685.27	1,447	2,142.00

தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கு நிதியுதவி :

தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கு அதாவது தொழில் நுணுக்கவியல்பட்ட தகுதிபட்டையம் சான்றிதழ்கள் பல்வேறு தொழில் இயல் தயாரிப்புகளின் முன் அனுபவம், திறன்கொண்டவர்கள் தாங்களாகவே தொழில் நிறுவனங்கள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காக இந்நிறுவனம் இத்திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இந்நிறுவனத்தினதால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதியுதவி விவரங்கள் வருமாறு :

	1981–82		1982–83 (தற்காலிகமானது.)	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் இலட்சத்தில்)			
தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை ..	91	103.13	66	121.07

மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கு நிதி உதவி :

தற்பொழுது மாநிலத்தில் நிலவி வரும் மின் பற்றாக்குறையை கருதி இந்நிறுவனம் மின் உற்பத்தி இயந்திரங்களையும், டீசல் இயந்திரங்களையும் வாங்க நிதியுதவியை துரிதப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியுதவியின் விவரம் பின் வருமாறு :

(ரூபாய் இலட்சத்தில்)

	1981–82		1982–83 (தற்காலிகமானது)	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
மின் உற்பத்தி இயந்திரங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை	19	25.70	676	459.08

எளிய நிபந்தனையில் கடன் வசதி-

தொழில் திட்டத்திற்கு தேவையான மூலதனத்தில் தொழில் செய்ய முனைவோர் செலுத்த இயலும் மூலதன பங்கு போக பாக்கி தேவைபடுகிற மூலதனத்தை நிதியுதவி பெறுகின்ற வகையில் இந்நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் சிறு தொழில்களுக்கும் மிகச் சிறிய தொழில்களுக்கும் நிதியுதவி அளித்து வருகிறது. தகுதி வாய்ந்த தொழில் நுட்பத் திறன் படைத்த வல்லுநர்கள் தமிழ் நாட்டில் கிராம பகுதிகளிலும், தொழில்துறையில் பின் தங்கிய பகுதிகளிலும் தொழில்களை நிறுவ இத்திட்டத்தின் விதிமுறைகள் தற்சமயம் தளர்த்தப்பட்டுள்ளன. தனி உரிமையாளர் மற்றும் பங்குதாரர் தொழில் நிறுவனங்களுக்கு இந்த நிதி உதவியானது ஆண்டொன்றுக்கு ஒரு சதவீத வட்டி வீதத்தில் அளிக்கப்படுகிறது. வரையறுக்கப்பட்டுள்ள நிறுவனங்களை பொருத்தவரை (லிமிடெட் கம்பெனிகள்) இந்த நிதியுதவியானது சேர்த்து வரும் முன்னுரிமை பங்குகள் வடிவில் (Cumulative

preference share) வழங்கப்படும், இத்திட்டத்தின்படி இந் நிறுவனம் வழங்கியுள்ள உதவி பின்வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

	1981—82		1982—83 (தற்காலிகமானது)	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
எளிய நிபந்தனை கடன் தொடக்க முதலீட்டு உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை	50	6.91	58	24.15

தமிழ்நாடு கனிம நிறுவனம்.

தமிழ் நாடு கனிம நிறுவனம், முற்றிலும் அரசுக்கு சொந்தமான நிறுவனமாக 6—4—1978-ல் நிறுவப்பட்டது. 1978—79-ல் சிறிய அளவாக ரூ. 1.50 இலட்சத்தில் ஆரம்பித்த விற்பனை படிப்படியாக முன்னேறி 1981—82ல் ரூ. 192.61 இலட்சங்களாக உயர்ந்துள்ளது.

அயல் நாட்டுக்கு ஏற்றுமதி செய்து ஈட்டிய தொகை ஏறக்குறைய ஒன்றரைக் கோடியாக உயர்ந்துள்ளது. இவை கடந்த இரண்டு ஆண்டுகளில் முறையே ரூ. 85 இலட்சங்களும், ரூ. 59 இலட்சங்களுமாக இருந்தன. கருப்பாறை மற்றும் சாம்பல் நிறப்பாறை முக்கியமாக ஜப்பான் மற்றும் மேற்கு ஜெர்மனி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

உள் நாட்டில் விற்பனை ஆகும் உயர் வகை கனிமங்கள் அதாவது சுண்ணாம்புக்கல், குவார்ட்ஸ், பெல்ஸ்பார், சிலிகா மணல் போன்றவை நிலையிலும் ஒரு புதிய உயர் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூ. 20 இலட்சங்கள் விற்பனையை எட்டியுள்ளது.

அயல் நாட்டு விற்பனை உள் நாட்டு விற்பனை ஆகியவற்றில் அடைந்துள்ள முன்னேற்றத்தை கீழ்க்காணும் விவரங்களால் தெளிவாக அறியலாம்.

அயல்நாட்டு விற்பனை.	1981—82.	1982—83.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சங்களில்.)	
கருப்புக்கல்	65.03	101.37
சாம்பல் நிறப்பாறை	19.90	45.98
	84.93	147.35
உயர்வகைக் கனிமங்களின் உள்நாட்டு விற்பனை	13.23	20.00
	98.16	167.35

கடந்த இரண்டு வருடங்களில் உற்பத்தி மற்றும் விற்பனைப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

உற்பத்தி.	1981—82.	1982—83.
(1)	(2)	(3)
	க. மீட்டர்.	க. மீட்டர்.
கருப்புக்கல்	1,809	1,400
சாம்பல் பாறை	681	2,750
	டன்கள்.	டன்கள்.
உயர்வகை கனிமங்கள்	22,820	32,000
விற்பனை :	க. மீட்டர்	க. மீட்டர்
கருப்புக்கல்	1,257	1,722
சாம்பல் பாறை	682	1,692
	டன்கள்.	டன்கள்.
உயர்வகை கனிமங்கள்	15,510	16,060

விற்பனை அதிகரித்ததால் ஆதாயத்திலும் நல்ல முன்னேற்றம் படிப்படியாக ஏற்பட்டுள்ளது. 1982—83-ல் டாமின் ரூ. 15.03 இலட்சங்கள் (வருமான வரி செலுத்தும் முன்பு நிகர ஆதாயம் எதிர்பார்க்கிறது,. கடந்த இரண்டு வருட ஆதாய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தோராய இலாபம்.	1981—82.	1982—83.
	(ரூபாய் இலட்சங்களில்.)	
	தணிக்கை செய்யப் பட்ட கணக்குகள்.	எதிர் பார்க்கப் படும் இலாபம்.
செயல்முறை ஆதாயம்	28.31	33.67
நிகர ஆதாயம் (தேய்மானம், வட்டி போக மீதி).	9.51	15.03
மூலதனம் கடந்த ஆண்டுகளில் சரி செய்யப்பட்டது.		
வருமானவரி	இல்லை	3.69
நிகர ஆதாயம் வரிக்குப் பிறகு	9.51	11.34

டாமின் தனது அலுவலர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் 1980—81 முதல் போனஸ் தருகிறது. சமூக நலப் பணிகளுக்கு டாமின் ரூ. 7.03 இலட்சங்கள் கொடுத்துள்ளது. இதில் ''தாரா நிறுவனம்'' முதலமைச்சரின் பொது நிவாரண நிதி, முதலமைச் சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் போன்ற திட்டங்கள் அடங்கும்.

சிவகங்கை கிராபைட் திட்டம்.

டாமின் சிவகங்கை கிராபைட் திட்டத்தை செயல் படுத்தி அதன் மூலம் 800 ஏக்கர் நிலத்தில் உள்ள கிராபைட்டை எடுக்க திட்டம் தீட்டியுள்ளது. அத்திட்டம் மூன்று வகையாக செயல் முறைக்கு கொண்டு வரப்படும். முதல் கட்டம் (அ) கிராபைட் கனிமத்தை வெட்டி எடுத்தல், (ஆ) வெட்டியெடுக்கப்பட்ட கிரா பைட் கனிமத்தைச் சுத்திகரித்தல் மற்றும் (இ) அதைக் கொண்டு வெப்பம் தாங்கிக் கலன்கள் முதலிய தயாரித்தல் ஆகியவன வாகும். வெளி நாட்டில் இவைகளுக்கு நல்ல கிராக்கி உள்ளது.

இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ. 400 இலட்சங்கள் எனத் திட்டமிடப்பட்ட போதிலும் முதல் இரண்டு கட்டங்களுக்கு ரூ. 248 இலட்சங்கள் மட்டும் தேவைப்படுகிறது. அரசின் பங்குத் தொகை மூலதனமாக ரூ. 45 இலட்சங்களும் தொழில் முன்னேற்ற வங்கியிடமிருந்து ரூ. 203 இலட்சங்களும் கடனாக பெறப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்பட இருக்கின்றது.

தேசிய மெட்டலாஜிகல் லேபோராட்டரி, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் ஆகிய இரு நிறுவனங்கள் தான் கனிமங்களை வெட்டியெடுக்கவும், சுத்திகரிக்கவும் திட்டங்களுக்கு ஆலோசகராக உள்ளது. கனிமங்களை வெட்டி எடுக்கவும், சுத்திகரிக்கவும் தெளிவான திட்ட விளக்கங்கள் அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

70 ஏக்கர் பட்டா நிலங்களை டாமினிடம் கொடுக்கப்பட்டுள்ளன. 195 ஏக்கர் பட்டா நிலங்கள விரைவில் தனி தாசில்தார் (நில ஆர்ஜிதம்) சிவகங்கை அவர்களால் பெறப்பட்டு டாமின் வசம் ஒப்படைக்கப்படும். மீதி உள்ள நிலங்கள் பல வகையில் நிலுவையில் உள்ளது. அரசு ஏற்கனவே புறம் போக்கு இடத்தை ஆர்சிதம் செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

ரூ. 45 இலட்சம் பங்கு முதலீட்டுத் தொகைக்கான அரசின் ஆணை பெறப்பட்டவுடன் தொழில் முன்னேற்ற வங்கியிடம் கடன் பெறுவதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும்.

சென்னை மணலியில் டாமின் கரும்பாறைகளை வெட்டி மெருகேற்றும் தொழிற்சாலையை இறக்குமதி செய்யப்பட்டுள்ள இயந்திரங்களை வைத்து ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இட்காட் தவது டெக்னோ பொருளாதார சாத்தியக் கூறுபாடுகள் நிறைந்த திட்ட அறிக்கை தயாரித்து அளித்துள்ளது. அரசு இத்திட்டத்தை அங்கீகரித்துள்ளது. டாமினுக்கு அரசு 23.10 ஏக்கர் நிலங்கள் சர்வே எண் 251-ல் மணலி கிராமம், சைதை தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டத்தில் வழங்கியுள்ளது, இத்திட்டத்திற்கு ரூ. 393 இலட்சங்கள் மொத்தச் செலவு ஆகும். இதில் ரூ. 314 இலட்சங்கள் மட்டும் தொழில் முன்னேற்ற வங்கியிடமிருந்து பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசின் பங்கீட்டுத் தொகையாக ரூ. 79 இலட்சங்கள் மட்டும் கேட்கப்படுகிறது.

வெட்டி வேருகேற்றும் தொழிற்சாலை தனது உற்பத்தியை 1983-84-ல் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டால் டாமின் உற்பத்தி, விற்பனையில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டு அன்னிய செலாவணியும் அதிகரிக்கும்.

வேலை வாய்ப்பு :

டாமின் குவாரிகளும், வெட்டியெடுக்கும் சுரங்கங்களும் பெரும்பாலும் கிராமப் புறங்களிலும், காட்டுப் பகுதியிலும் அமைந்திருப்பதால் பொருளாதார நிலையில் பின் தங்கிய சுமார் 1,800-க்கும் அதிகமான நபர் வேலை வாய்ப்பும் பெற்றுள்ளனர்.

புதிய திட்டங்கள் கொண்டு வரப்பட்டால் வேலை வாய்ப்புப் பெற்றோர் தொகை 2,000-க்கு மேல் வரும் ஆண்டில் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்.

1974 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22 ஆம் நாள் தமிழ் நாடு உப்பு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இந் நிறுவனம் 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி 22 ஆம் நாள் முதல் இயங்கத் தொடங் கியது. இந் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 100 இலட்சம். செலுத்திய மூலதனம் ரூ. 90 இலட்சம். இந் நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு உற்பத்தி செய்வதும், உப்பு சார்ந்த இரசாயன பொருட்கள் மற்றும் உப பொருட்கள் தயாரித்தலுமாகும். மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.1,45 இலட்சம் மூலதனத்துடன் மாரியூர் வாலி நோக்கத்தில் ஒரு பெரிய உப்புத் தொழிற் சாலையை இந்நிறுவனம் அமைத்துள்ளது. இதன் மொத்தப் பரப்பளவு 5,617 ஏக்கராக்கள். வேறு எந்தத் தொழிலும் ஆரம்பிக்க முடியாததும் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது மான இந்த இடத்தில் வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் எண்ணத்துடன் மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டம் தமிழக அரசால் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் அந் நிறுவனம் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மரவக்காடு, வடகாடு கிராமங்களில் சுமார் 2875 ஏக்கராப் பரப்பளவில் உப்புத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டம்-

இத்திட்டம் இராமநாதபுரத்திலிருந்து 45 கி. மீ. தூரத்தில் மிகவும் பின் தங்கிய பகுதியில் உள்ளது. இத்திட்டத்தில் 1975-76-ல் முன்னேற்ற பணிகள் தொடங்கப்பட்டன. 1976-லிருந்து உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் திட்ட மதிப்பீடு ரூ. 145 இலட்சமாகும். 1983 மார்ச் வரை இத்திட்டத்திற்கான செலவு மதிப்பீடு ரூ. 152.75 இலட்சம். மேம்பாட்டு நிலப் பரப்பளவு 4,400 ஏக்கர்களில் இது வரை 2266 ஏக்கரா நிலப் பகுதி மட்டுமே உப்பு உற்பத்திக்காக மேம்படுத்தப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டுகளில் இத் திட்டத்தின் உப்பு உற்பத்தி விற்பனை முதலிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

வருடம்.	உற்பத்தி.	விற்பனை.
(1)	(2)	(3)
	(டன்களில்)	
1981	25,600	8,194
1982	36,000	12,500

இத் திட்டம் சுமார் 1000 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பையும் 50 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பையும் அளித்து வருகிறது. இத் திட்டம் முழுவதும் வளர்ச்சியடையும் நிலையில் சுமார் 200 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிப்பதோடு 1,500 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் வழங்கும்.

மரவக்காடு வடகாடு உப்புத் திட்டம்-

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மரவக்காடு-வடகாடு கிராமங்களில் உப்புத் திட்டம் உருவாக்குவதற்கு 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழக அரசு உத்தரவிட்டது. இதன் திட்ட மதிப்பீடு ரூ. 120 இலட்சமாகும். இதன் மொத்தப் பரப்பளவு சுமார் 2,875 ஏக்கர். மேம்பாட்டுப் பணியை 1979 ஆம் ஆண்டு முதல் இந் நிறுவனம் துவக்கியது. 1980-81 ஆம் ஆண்டுகளில் சுற்றுக் கரைகள், குறுக்குக் கரைகள் அமைப்பது

போன்ற ஆரம்பப் பணிகள் நடைபெற்றன. 1982 ஆம் ஆண்டு மீதி சுற்றுக் கரைகளில் சாலைக் கரைகள் அமைக்கும் வேலைகளும் கால்வாய் உப்பளம் வேலைகளும் நடைபெற்றன. 11—5—1982 முதல் உற்பத்தி செய்யப்பட்டது.

1983 ஆம் ஆண்டுக்கான உற்பத்தி குறியீடு 20,000 டன்களாகும். சுமார் 100 உப்புப் பாத்திகள் இவ்வாண்டு உற்பத்திக்காக பயன்படுத்தப்படும். ஏப்ரல் 1983 வரை 707 டன்கள் உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ரூ. 27.40 இலட்சம் மார்ச் 1983 வரை இத் திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது இத் திட்டம் 20 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிப்பதுடன் சுமார் 200—300 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி)

1982—83 ஆம் ஆண்டில் இந் நிறுவனத்தின் உற்பத்தி ரூ. 2,274 இலட்சமாகும். முந்தைய ஆண்டில் இதன் உற்பத்தி ரூ. 2,333 இலட்சமாகும். போதுமான தேவை ஆணைகள் குறிப்பாக தோல், பொறியியல் துறைகளில் போதுமான தேவை ஆணைகள் வரப்பெறாததால் இந்த ஆண்டில் உற்பத்தி குறைந்துள்ளது. தொழிலில் பொதுவாக தேக்க நிலை இருந்ததற்கு இதுவே காரணமாகும். இவ்வாண்டில், விற்பனை ரூ. 3,152 இலட்சம் ஆகுமென்று இலக்கு இருக்கையில் ரூ. 2,463 இலட்சத்திற்கு மட்டுமே பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் விற்பனை ரூ. 124 இலட்சம் உயர்ந்தது. இத்துடன், இந்நிறுவனம் குறிப்பிட்ட காலத்திற்குள், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின்கீழ், இம்மாநிலம் முழுவதிலுமுள்ள சத்துணவு மையங்களுக்கு ரூ. 5 கோடி மதிப்புள்ள 21 சமையல் பாத்திரங்களை வழங்கியது.

கட்டுமான பிரிவுத் தொகுதி :

இந்த ஆண்டில், மேட்டூர் அணையிலுள்ள கட்டுமானம்—துத்தநாக பூசும் பணிப்பிரிவும், அம்பத்தூரிலுள்ள கட்டு

மானப் பிரிவும் பின்வரும் முக்கிய தேவை ஆணைகளை வரப்பெற்று முடித்துக் கொடுத்துள்ளன :—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1. அரக்கோணம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தில் (டிட்கோ) உருளை ஆலையை விரிவுபடுத்துவதற்கான கட்டுமானப் பொருள்களை இணைத்தல் ..	80.00
2. தமிழ்நாடு சிமிட்டி நிறுவனத்தின், டான்செம் நிறுவனத்திற்காக அரியலூர் சிமிட்டித் தொழிற்சாலையில் கட்டுமானப் பொருள்களை இணைத்தல்	25.00
3. கோயம்புத்தூர் நூற்பு, நெசவு ஆலையில் கட்டுமானப் பொருள்களை இணைத்தல்	25.00
4. புகளூர், தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தில் கட்டுமானப் பொருள்களை இணைத்தல்	20.0

கருவிகள், அது தொடர்பான சாதனங்கள் தயாரிப்புப் பிரிவு :

கிண்டியிலுள்ள 'டான்சி' கருவிகள் தயாரிப்புப் பிரிவு இந்த ஆண்டில் பின்வரும் தேவை ஆணைகளைப் பெற்று முடித்துக் கொடுத்தது :—

	(ரூபாய் இலட்சத்தில்)
1. எடைபோடும் இயந்திரம் சமூக நலத் துறை	10.00
2. ஒன்று சேர்க்கப்பட்ட மின் எரிகம்பி, பாதுகாப்புத் துறை	7.00
3. கருவிகள், துணைச் சாதனங்கள் (Jigs) பொருத்திகள் 'பெல்' நிறுவனம், திருச்சி	3.34

1982–83 இல் அம்பத்தூர் "டான்சி" இயந்திரப் பட்டறை "மார்க் 11" ஆழ்கிணறு கைப்பம்புகளை வடிவமைத்தது. 1982–83 இல் ரூ. 58 இலட்சம் மதிப்புள்ள கைப்பம்புகள் தயாரிக்கப்பட்டு, புதுடில்லி, 'யூனிசெஃப்' சென்னை, தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் – கழிவு நீரகற்று வாரியம் ஆகியவற்றிற்கு விற்பனை செய்யப்பட்டது.

பொறியியல் தொகுதி :

இத் தொகுதியின்கீழ் வரும் பிரிவுகள் இலேசான ரக உருக்கு கட்டுமானங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. 1982–83 இல் இப்பிரிவு நிறைவேற்றிய முக்கிய தேவை ஆணைகள் வருமாறு :—

(1)	(2)	(3) (ரூபாய் இலட்சத்தில்)
(i) தண்ணீர்த்தொட்டிகள், நீர்நிலையிடங்கள்.	சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றும் வாரியம்	50.00
(ii) கட்டுமானங்கள்	முதலமைச்சரின் சத்துணவுத் திட்ட மையங்கள் ..	65 00
(iii) நடைபாலங்கள், வண்டிப் பாலங்கள்	தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள்	25.00
(iv) மூன்று சக்கர சைக்கிள்கள், இரு சக்கர சைக்கிள்கள்.	சமூக நலத்துறை, வனத்துறை ..	4.50
(v) மரவேலி, முள்கம்பி வேலி.	வனத்துறை, சமூகக் காடு வளர்ப்புத் திட்டம்	1500
(vi) துருஏறாத உருக்கு திட்டம் முதலிய ல.	தகடுகள் காவல்துறை.	5.00

மேசை, நாற்காலி தயாரிப்புத் தொகுதி :

இத் தொகுதியைச் சேர்ந்த பிரிவுகள் வரையறுத்த வரையறுக்கப்படாத அளவுகளில் சிறப்பு வகை மேசை நாற்காலிகளைத் தயாரித்தது.

இத் தொகுதி நிறைவேற்றிய முக்கிய தேவை ஆணைகள் வருமாறு :—

		(ரூபாய் இலட்சத்தில்)
(i) புத்தக அலமாரிகள். ..	நூலக இயக்ககம்.	11.00
(ii) கதவுகள், சன்னல்கள்	பொதுப்பணித் துறை	10.00
(iii) S.S. கதவுகள், சன்னல்கள்	ஸ்டேன்லி மருத்துவ மனை ..	7.00

வார்ப்படத் தொழில் சாலைத் தொகுதி :

தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியத்திற்குத் தேவைப்படும் வார்ப்பட இருப்புக் குழாய்களை இத் தொகுதி பெருமளவில் தயாரித்தது. முந்தைய ஆண்டில் கிண்டியிலுள்ள டான்சியின் வார்ப்படத் தொழில் பிரிவு பம்பாயிலுள்ள கதர் குழுவின் உதவியுடன் சமையல் எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கு புதிய முறையில் மின்சாரத்தில் இயங்கும் செக்கினை உருவாக்கியுள்ளது. 1982—83 இல் இப் பிரிவு ரூ. 23.45 இலட்சம் மதிப்புள்ள 300 மின் செக்குகளைத் தயாரித்து சென்னை, தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்திற்கு விற்பனை செய்தது.

சிறப்பு நோக்கங்களுக்கான தொழிற் பிரிவுகள் :

ஊட்டியிலுள்ள கைக்கடிகாரப் பிரிவு எச்.எம்.டி. வழங்கிய உதிரிப் பாகங்களைக் கொண்டு 2,62,327 கைக்கடிகாரங்களைத் தயாரித்தது. ஆனால் உற்பத்தி இலக்கு 2,50,000 கைக் கடியாரங்களாகும். தும்கூர் எச்.எம்.டி. கைக்கடியாரத் தொழிற் சாலை - IV இன் கீழ் செயற்படும் 8 துணைப் பிரிவுகளில் இது மூன்றாவது இடத்தை வகிக்கிறது. இப் பிரிவை விரிவு படுத்து திட்டத்தின் ஒரு பகுதியாக அரசின் உத்தரவின்படி துணைப்பாகங்களைத் தயாரிக்கும் திட்டத்திற்கு கொள்கை யளவில் ஒப்புக் கொண்டது. அம்பத்தூரிலுள்ள 'டான்சி' (பளபளப்பாக்கும்) பிரிவு சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருள்களைத் தொடர்ந்து தயாரித்து வருகிறது. இவ் வாண்டில், உற்பத்தி கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது. இப்பிரிவை விரிவுபடுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக மருத் துவச் சிகிச்சைக்குத் தேவைப்படும் சாராவியைத் தயாரிக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. அரசிடமிருந்து ஆணை வந்த பின்னர் 1983-84ல் உற்பத்தியைத் தொடங்க கருதப் பட்டுள்ளது. புதிய வழி தயாரிப்பு முறைகளைக் கண்டு பிடிக் கும் பொருட்டு, சாலையில் அடையாளக் குறியிடுவதற்கான வர்ணங்கள் அரக்கு பிசின் தயாரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப் பட்டது. இனி அமைக்கப்படவிருக்கும் கூட்டுறவுப் பிரிவுகள் மூலமாக பெருமளவில் இந்நிறுவனம் உற்பத்தியை மேற் கொள்ளும் நிலையிலுள்ளது.

'டான்சி' தன் தொழிலாளர்கள் நலனில் தொடர்ந்து அக்கறை செலுத்தி வருகிறது. தொழில் உறவு நன்கு நிலவி வருகிறது. 1981–82 இல் தொழிலாளர்களுடன் செய்து கொண்ட ஊதிய உடன்பாடு 3 ஆண்டுகளுக்குச் செயலிலுள்ளது.

தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) :

தமிழக அரசின் பொறுப்பிலுள்ள தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிநிறுவனம் 1979 ஆம் ஆண்டு ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமாக (Private Limited) ஆரம்பிககப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள சிறுதொழில் நிறுவனங்களுக்கு உதவி செய்தலை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு 1971 ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக (Public Limited) மாற்றப்பட்டது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள திட்டங்கள் 'சிட்கோ'வால் நிறைவேற்றப்பட்டு வருபவைகளாகும்.

(அ) சிறுதொழில் நிறுவனங்களுக்கு அடிப்படை (Infrastructural) வசதிகளுக்கான ஏற்பாட்டில் சேர்த்துக் கொளளப்படுபவைகள் தொழில் பேட்டைகளில் (estates) தொழிற்கூடங்கள் மற்றும் முன்னேற்றமடைந்த நிலங்கள் பின்தங்கிய பகுதிகளிலும் கிராமப்புற (Rural) பகுதியிலும் சின்னஞ்சிறு தொழிற்களுக்கான (Tiny Sector industries கட்டி முடிக்கப்பட்ட கூடங்கள்.

(ஆ) சிறுதொழிற்களுக்கான விற்பனை உதவி.

(இ) மத்திய மாநில முதலீட்டு மானியம் அனுமதித்தல்.

(ஈ) முக்கிய மூலப்பொருட்கள் கிடைக்க வகை செய்தல் (Raw Materials).

(உ) வட்டி இல்லாத விற்பனை வரி கடன் அளித்தல்.

(ஊ) குறைந்த அழுத்த மின் கட்டண மானியம் (L.T. Power Tarriff Subsidy) அனுமதித்தல்.

(எ) வேலையற்ற படித்தோர்க்கு விளிம்புத்தொகை உதவி அனுமதித்தல் (Marginal money assistance).

(ஏ) நலிவுற்ற சிறுதொழில் நிறுவனங்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.

(ஐ) தொழில் முனைவோர்க்கு வழிகாட்டல் (Entrepreneurs guidance).

மாநில முதலீட்டு மூலதன மானிய உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை (பிப்ரவரி 1983 வரை) 376 நபர்கள் நன்மை அடையும் வகையில் 'சிட்கோ' ரூபாய் 57.30 இலட்சத்திற்கு மானிய அனுமதி கொடுத்துள்ளது.

	வருடம்.	உதவி செய்யப்பட்ட தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை.	தொகை (ரூபாய் இலட்சத்தில்).
	(1)	(2)	(3)
1980–81	..	104	6.09
1981–82		140	28.65
1982–83	.. ..	137	23.09

மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் ஏறத்தாழ 3,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறது.

வட்டி இல்லாத விற்பனை வரி கடன் அளித்தல், வேலை அற்ற படித்தோர்க்கு விளிம்புத் தொகை உதவி அனுமதித்தல், குறைந்த அழுத்த மின்சார மானிய நிதி உதவி அளித்தல் ஆகிய அனைத்தும் இந்த வருடம் தொடர்ந்து செயல்பட்டு வரும். இந்த ஒவ்வொரு திட்டத்தின் கீழும் நன்மையடையும் சிறு தொழில்களின் எண்ணிக்கையும் அவற்றிற்கு அளித்த அனுமதி தொகைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் பெயர்.	வருடம்.	அனுமதிக்கப்பட்ட தொகை. (ரூ. இலட்சத்தில்)	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
			நிறுவனங்கள் நன்மையடைந்துள்ளது.
வட்டி இல்லாத விற்பனை வரி	1980–81	5.46	6
	1981–82	15.11	17
	1982–83	25.95	45
வேலையற்ற படித்தவர்களுக்கு விளிப்புத் தொகை உதவி அளித்தல்	1980–81	14.88	89
	1981–82	15.84	105
	1982–83	25.73	152
குறைந்த அழுத்த மின்சார மானியம்	1980–81	0.29	20
	1981–82	1.29	179
	1982–83	5.29	765

நலிவுற்ற (sick) சிறுதொழிலகளுக்கு மறுவாழ்வுஅளித்தல் .

சிறுதொழில்கள் நலிவுற்று வீழ்ந்தால் அவைகளை காப்பதற்காக விளிம்புத் தொகை உதவி அனுமதித்தல் ஆரம்பிக்கப்பட்டது. அது நலிவுற்ற தொழில்களுக்கு புனர் வாழ்வு அளிக்கவும் செய்கிறது. இந்த திட்டம் கணிசமான அளவிற்கு முன்னேற்றமடைந்துள்ளது.

வருடம்.	உதவியின் தொகை. (ரூபாய் இலட்சத்தில்)
1970–80	0.23
1980–81	8.04
1981–82	11.47
1982–83	29.60

சிறு தொழில்களுக்கு விற்பனை உதவி ;

சிறு தொழில்களுக்கு விற்பனை உதவி அளிக்கும் திட்டம் 1978–79 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டது. இது இயங்கி இன்று 5 வருடங்கள் தான் ஆயினும் போதுமான அளவிற்கு முன்னேற்றமடைந்துளளதை கீழ்க்காணும் புள்ளி விபரங்கள் மெய்ப்பிக்கும்.

வருடம்.	பெறப்பட்ட ஆர்டர்.	நிறைவேற்றப் பட்ட ஆர்டர் மதிப்பு.	உதவி செய்யப் பட்ட தொழிற் களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
1978–79	26 30	26.30	14
1979–80	256.61	221.77	44
1980–81	287.19	177.20	96
1981–82	268.94	221.66	120
1982–83	798.00	494.58	191

வருடம்.	விற்பனை செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை.	திட்டத்தில் பயன் அடைந்த அமைப்புகள்.	விற்பனை உதவி திட்டத்தில் பதிவு பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை.
	(5)	(6)	(7)
1978–79	8	8	43
1979–80	721	15	106
1980–81	748	56	251
1981–82	952	79	257
1982–83	670	51	222

இலாபம் :

கடந்த ஐந்து ஆண்டுகளின் சிட்கோ வருமானவரிக்கு முன் அடைந்துள்ள இலாபங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

வருடம்.	இலாபம் (ரூபாய் இலட்சத்தில்).
(1)	(2)
1977–78	4.12
1978–79	17.77
1979 80	22.70
1980–81	23.00
1981–82	2.78
1982–83	12.75 (வழி வகையின் படி).

தமிழ் நாடு சர்க்கரைக் கழகம்.

தமிழகத்தில் பொதுத் துறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவும் பொருட்டு இந்திய நிறுமச் சட்டம் 1956-ன் படி, ''தமிழ் நாடு சர்க்கரைக் கழகம்'' 1974-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு செயல்படத் தொடங்கியது. இக்கழகம் தஞ்சாவூர், பெரம்பலூர், சங்கரன் கோவில், திருக்கோவிலூர் மற்றும் சிவகங்கை தாலூகாக்களில் புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கான உரிமங்களை பெற்றிருந்தது.

இக்கழகம் தஞ்சாவூரில் ஒன்றும், பெரம்பலூரில் ஒன்றுமாக இரு சர்க்கரை ஆலைகளை நிறுவியுள்ளது. தஞ்சாவூர் ஆலை—அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை என்றும், பெரம்பலூர் ஆலை ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை என்றும் பெயரிடப்பட்டுள்ளது. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும் ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை 1978-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும் கரும்பு அரவையைத் தொடங்கின. இனிமேல் புதிதாக நிறுவவிருக்கும் சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்படவேண்டும் என்ற அரசின் மாறுபட்ட கொள்கைக் கிணங்க உளுந்தூர் பேட்டை தாலூகாவிலுள்ள பெரியசெவலை கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள சர்க்கரை ஆலை கூட்டுறவுத் துறையில் நிறுவ உரிமம் மாற்றப் பட்டுள்ளது.

தமிழ் நாடு சர்க்கரைக் கழகம் உளுந்தூர்ப்பேட்டை கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிர்மாணிக்கும் பொறுப்பை ஏற்று குறிப்பிட்ட கால கெடுவான 1980-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் நிர்மாணித்து மேற்படி ஆலை தனது அரவையை 16—10—1980 அன்று துவக்கியது.

தற்சமயம் செங்கை மாவட்டம் திருத்தணி வட்டத்தில் நாள் ஒன்றுக்கு 1,250 டன் கரும்பு அரவை செய்யும் சர்க்கரை ஆலை ஒன்று நிறுவுவதற்கு மத்திய அரசு 1982-ம் ஆண்டு மார்ச் மாதம் உரிமம் வழங்கியுள்ளது. மேற்படி ஆலையை நிர்மாணிக்கும் பொறுப்பை மாநில அரசு தமிழ் நாடு சர்க்கரைக் கழகத்திடம் அளித்துள்ளது. 1984-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற் குள் மேற்படி ஆலையை முடிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சர்க்கரை ஆலைகள் செயல்திறன்கள் :

பொதுத் துறையில் இயங்கி வருகின்ற அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம், தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் ஜவஹர்லால்நேரு சர்க்கரை ஆலை, ஏரையூர், திருச்சி மாவட்டம் ஆகியவற்றின் 1982-83 ஆம் ஆண்டிற்கான செயல் திறன் விவரங்கள் பின்வருமாறு :

	அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை 1-10-1982 முதல் 31-3-1983 வரை.	ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை 1-10-1982 முதல் 31-3-1983 வரை.
(1)	(2)	(3)
1 கரும்பு அரவை (டன்)	1,39,716	1,27,831
2 சர்க்கரை உற்பத்தி (மூட்டை).	1,30,825	1,37,877
3 சர்க்கரை கட்டுமானம் (சத வீதம்).	9.45	10.88
4 மொத்த சர்க்கரைக் கட்டு மான இழப்பு (சதவீதம்).	1.99	2.04
5 செயல்திறன் (சதவீதம்)		
6 நடப்பு வருட இலாபம் (ரூபாய் இலட்சம்).	22.25	91.285

இதர நடவடிக்கைகள் : (காகித ஆலை) தொழிற்பட்டவை :

கூடுதலாக கிடைக்கும் கரும்பு சக்கையைக் கொண்டு நாளொன்றுக்கு 15 டன் உற்பத்தி திறன் கொண்ட சிறிய காகித ஆலை ஒன்றை மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை அருகில் நிறுவ இக்கழகம் பணிக்கப்பட்டுள்ளது. அரசின் பங்கு மூலதனமாக ரூ. 30 இலட்சம் 1979-80 ஆம் ஆண்டில் வழங்கப் பட்டுள்ளது.

தொழிற்பட்டறை:

தமிழ் நாடு சர்க்கரைக் கழகம், சர்க்கரை ஆலைகளுக்கு வேண்டிய கரும்பு அரவைக்கு பயன்படும் உருளைகளை சீர் ஆக்கவும், உதிரி உறுப்புகளை உற்பத்தி செய்யவும் தொழிற் பட்டறை ஒன்று நிறுவ உத்தேசித்துள்ளது. இதற்கான இடத்தை சென்னை பெருநகர் அபிவிருத்தி கழகம் மறைமலை நகரில் சுமார் 5.50 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள இடத்தை ஒதுக்கியுள்ளது. தமிழக அரசு ரூபாய் இருபது இலட்சம் வழிவகைக் கடனாக அளித்துள்ளது. மேற்கொண்டு வேலைகள் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கரும்புப் பண்ணை நிறுவனம் லிமிடெட்

நில உச்சவரம்பு சட்டம் 1961-ன்படி (Act 41 of 1971) உபரியாகக் கிடைத்த நிலங்களை நிர்வாகம் செய்ய தமிழ் நாடு கரும்புப் பண்ணை நிறுவனம் 1974-ல் நிறுவப்பட்டது. இந் நிறுவனத்திடம் தற்போது 4,051.74 ஏக்கர் நிலம் இருக்கின்றது இந்த நிலங்கள் மன்னார்குடி, திருவாரூர், திருத்துரைப்பூண்டி ஆகிய தாலுக்காக்களில் பரவிக்கிடக்கின்றன. அலுவலர் அல்லாத ஒரு நபரைத் தலைவராகக் கொண்ட ஒரு இயக்குநர்கள் குழுவினால் இக்கழகம் நிர்வாகம் செய்யப்படுகின்றது.

இந் நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடிகள் ஆகும். இது பங்குத் தொகை ஒன்று ரூ. 100 வீதம் இரண்டு லட்சம் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 31-3-1983 வரை இதற்கு தமிழ் நாடு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மூல தனம் ரூ. 27.50 லட்சங்களாகும். இந்த மூதலனம் முழுதும் குழாக் கிணறுகள் போடுவதற்கும், விவசாயக் கருவிகள் வாங்குவதற்கும் உழுவை இயந்திரம் மற்றும் ஆயில் இன்ஜின்கள் வாங்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அன்றாடச் செலவுகளுக்காக இக்கழகம் வடபாதிமங்கலம் பாரத வங்கியிலிருந்து. (State Bank of India தனது பயிர் மற்றும் இருப்புகளை வைத்து பணம் பெற்று வருகின்றது. இதனை ரூ. 60 லட்சம் வரை வங்கி வரையறுத்திருக்கின்றது. அரசும் இதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது. 31-3-1983 வரை ரூ. 18.79 லட்சங்கள் மேல் பற்றுத் தொகையாக (O.D.) பெற்றுள்ளது.

அரசு நீண்ட காலக் கடனாக ரூ. 15 லட்சமும், வழிவகை முன்பணமாக ரூ. 10 லட்சமும் வழங்கியது. இந்த வழிவகை முன்பணத்தை நீண்ட கால கடனாக மாற்றும்படி அரசை இக் கழகம் கோரியுள்ளது. இது அரசின் பரிசீலனையில் இருக் கின்றது. இது தவிர ரூ. 1.80 லட்சங்களை கடனாக பிப்ரவரி 1983-ல் இக்கழகம் அரசிடம் இருந்து பெற்றது. இத்தொகை நெல் போரடிக் களங்கள் கட்டவும், தார்பாய்கள் வாங்கவும் பயன்படுத்தப்பட இருக்கின்றது. இந்நிறுவனத்தின் கணக்கு ஆண்டு ஜூலை முதல் ஜூன் வரையாகும் 30-6-1982-ம் ஆண்டுக்கு இந்நிறுவனம் அடைந்த நிகர நஷ்டம் ரூ. 12.28 லட்சங் களாகும்.

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம்

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் நடப்பு ஆண்டில் மேற் கொண்ட நடவடிக்கைகள் பின் வருமாறு :—

1. நலிவுற்ற பஞ்சாலைகளை நிருவகித்தல்.
2. நான்கு விசைத்தறித் தொழில் தொகுதிகளை நடத்துதல்
3. ஏழு விசைத்தறித் தொழில் தொகுதிகளை அமைத்தல்.
4. கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழக ஆலைகளுக்கும் பருத்தி கொள்முதல் செய்தல்.
5. எல்லா கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழக ஆலைகளுக்கும் இயந்திரங்கள் வாங்குதல்.
6. கூட்டுறவு - தமிழ் நாடு பஞ்சாலைக் கழக ஆலை களுக்குத் தொழில் நுட்பப் பணிகள்.
7. இம் மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய் யும் விசைத்தறித் துணிகளை விற்பனை செய்தல்.

நலிவுற்ற பஞ்சாலைகளை நிருவகித்தல் :

காவேரி நூற்பு, நெசவு ஆலைக் கழகம்-

காவேரி நூற்பு, நெசவு ஆலை 4-1-1977-ஆம் நாளன்று எடுத்துக் கொள்ளப்பட்டு, 5-3-1977 ஆம் நாளன்று மீண்டும் திறக்கப்பட்டது. இந்த ஆலையில் 1,000 பணியாளர்கள் பணி புரிகின்றனர். 25,200 நூற்புக் கதிர்களைக் கொண்டு உற்பத்தி செய்யும் திறனுடையது.

சோமசுந்தரம் சூப்பர் நூற்பு ஆலை.

சோமசுந்தரம் சூப்பர் நூற்பு ஆலை 13,200 நூற்புக் கதிர்களைக் கொண்டது. 300 பணியாளர்களை வேலை கமர்த்தியுள்ளது இந்த ஆலை எடுத்துக்கொள்ளப்பட்ட நாளி லிருந்து ஆதாயத்துடன் செயல்பட்டு வருகிறது. மேற்சொன்ன ஆலைகளின் இலாப நட்ட விவரங்கள் பின்வருமாறு :—

	காவேரி நூற்பு நெசவு ஆலைக் கழகம்.	சோம சுந்தரம் சூப்பர் நூற்பு ஆலை.
(1)	(2)	(3)
நூற்பு கதிர்களின் நிறுவுத் திற னளவு.	31,200	31,260
உற்பத்தித் திறனளவு	25,200	13,260
மொத்த உற்பத்தி (இலட்சம் கிலோகிராமில்).	20.04	6.55
உற்பத்தியின் மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்).	445.53	170.42
மொத்த வியாபாரத் தொகை (ரூபாய் இலட்சத்தில்).	449.49	157.44
மொத்த லாபம்/நட்டம் (ரூபாய் இலட்சத்தில்).	(+)23.92	(+)13.38
தேய்மானம் (ரூபாய் இலட்சத்தில்)	1.89	3.24
கடன்களின் மீதான வட்டி (ரூபாய் இலட்சத்தில்)..	43.10	4.65.
நிகர லாபம்/நட்டம் (ரூபாய் இலட்சத்தில்).	(—)21.07	+)5.49

ஜெயலட்சுமி ஆலை, கோயம்புத்தூர்.

இந்த ஆலை 24,800 நூற்புக் கதிர்களைக் கொண்டது. இந்த ஆலையில் சுமார் 700 பணியாளர்கள் நியமிக்கப்பட் டுள்ளனர். ஓராண்டு காலமாக மூடப்பட்டிருந்த இந்த ஆலை, 8-9-1982 ஆம் நாளன்று கோயம்புத்தூர் மாவட்டாட்சித் தலைவரால் மீண்டும் திறக்கப்பட்டது. இந்த நாளிருந்து ஆதாய யத்துடன் செயல்பட்டு வருகிறது. நீண்ட காலமாக இந்த ஆலை மூடப்பட்டிருந்ததால், இதன் பணியாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். இதனால், 19-10-1982 ஆம் நாளன்று

ஒவ்வொருவருக்கும் முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 200 கொடுக்கப்பட்டது.

·4 விசைத்தறித் தொழில் தொகுதிகளை நடத்துதல்-

பின்வரும் மூன்று இடங்களில் கழகம் மூன்று விசைத்தறித் தொழில் தொகுதிகளை நடத்தி வருகிறது :—

1. அருப்புக்கோட்டை.
2. சிவகிரி.
3. ஜெயங்கொண்டான்.

பலதரப்பட்ட விசைத்தறித் துணிகளை உற்பத்தி செய்ய இந்தத் தொழிற்சாலைகள் 1981-82ஆம் ஆண்டு தொடங்கப் பட்டன. பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் நிறுவப்பட்ட ஒவ்வொரு தொழில் தொகுதியும் சுமார் 200 பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. இந்தத் தொழில் தொகுதிகளில் இலங்கை யிலிருந்து தாயகம் திரும்பிய 97 பேர்களுக்கு வேலையளிக்கப் பட்டது. ஒவ்வொரு தொழில் தொகுதியிலும் 96 விசைத்தறிகள் நிறுவப்பட்டு, மாதம் ஒன்றிற்கு ஏறக்குறைய 1.00 இலட்சம் மீட்டர் துணி உற்பத்தி செய்யப்படுகிறது. மேற்சொன்ன மூன்று தொழிற்சாலைகள் அல்லாமல் கூடுதலாக மதுரையில் ஒரு விசைத் தறித் தொழிற்சாலையைக் குத்தகை முறையில் இக்கழகம் நடத்தி வருகிறது. (கிருஷ்ணபுரம் விசைத்தறித் தொழிற்சாலை) மேற் சொன்ன 4 மையங்களிலும் விசைத்தறித் துணியின் ஆடைகள், படுக்கை விரிப்புக்கள், திரைச் சீலைகள் போன்ற அலங்காரத் துணிமணிகள் தயாரிக்கப்படுகின்றன. இதன் ஆண்டு மொத்த வியாபாரத் தொகை ஏறக்குறைய ரூபாய் 2.5 கோடியாகும். இத்தொழிற்சாலைகளின் செயல்படும் விவரங்கள் பின்வருமாறு:—

செயற்படும் நடைமுறை விவரங்கள்-

1. தொழில் நுட்பம்.	அருப்புக் கோட்டை	சிவகிரி.	ஜெயங் கொண் டான்	கிருஷ்ணா புரம்.
செயல்படும் விசைத் தறிகளின் எண்ணிக்கை	96	96	96	49
பணி செய்த நாட்களின் எண்ணிக்கை.	299	302	294	354
பயன்படுத்தப்பட்ட விசைத்தறிகள்.	63.41 சதவீதம்,	83.37 சதவீதம்.	81.52 சதவீதம்	89.39 சதவீதம்

1. தொழில் நுட்பம்.	அருப்புக் கோட்டை.	சிவகிரி.	ஜெயங் கொண் டான்.	திரு... புரம்.
எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மீட்டரில் (இலட்சத்தில்).	9.43	8.68	10.39	10.55
ஆன உற்பத்தி மீட்டரில் (இலட்சத்தில்).	6.58	6.32	7.95	7.43
நூல் உற்பத்தியின் சரா சரித் திறனளவு.	68.53 சதவீதம்	71.17 சதவீதம்.	72.07 சதவீதம்,	70.86 சதவீதம்.
2. நிதி நிலை (தற்காலிகம்)		(ரூபாய் இலட்சத்தில்)		
உற்பத்தியினுடைய விற்பனை மதிப்பு.	31.47	29.49	44.35	37.84
மொத்த வியாபாரத் தொகை.	22.07	21.83	38.44	21.81
பெரு மொத்த லாபம்/ நட்டம் (+)/(—).	(—)1.92	(—)1.32	(—)0.13	(+)0.28
தவணைக் கடன் மீதான வட்டி.	2.34	2.34	2.34	
நடைமுறை மூலதனத் தின் மீதான வட்டி.	0.71	0.71	0.71	0.23
தேய்மானம்	2.16	(—)2.16	2.16	
நிகர லாபம்/நட்டம் ..	—7.13	(—)6.55	(—)5.34	(+)0.05

எல்லா நூற்பு ஆலைகளுக்கும்—தமிழ்நாடு பஞ்சாலைகளுக்கும் பருத்தி கொள்முதல் செய்தல்.

பருத்திக் கொள்முதல் பிரிவு தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத் தின் கீழ் அமைக்கப்பட்டு, 1—8—1977 ஆம் நாளிலிருந்து செயற் படத் தொடங்கியுள்ளது. இது தற்போது, பருத்தி கொள்முதல் பிரிவின் அமைப்பாளரான, தமிழ்நாடு பஞ்சாலைக் கழக நிருவாக இயக்குநரின் மேற்பார்வையில் செயல்பட்டு வருகிறது. இந்தப் பிரிவு ஆண்டு ஒன்றுக்கு 1.5 இலட்சம் பருத்தி பேல்களைக் கொள்முதல் செய்கிறது.

இந்த ஆண்டு பருத்திக் கொள்முதல் பிரிவு 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்காகவும், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்துக் காகவும், ரூபாய் 39.81 கோடி மதிப்புள்ள 1,44,747 பருத்தி பேல்களைக் கொள்முதல் செய்துள்ளது.

மத்திய சோதனை ஆய்வுக் கூடம் ;

12 கூட்டுறவு நூற்பாலைகளுக்காகவும் இந்தக் கழகத்தின் நிருவாகத்தின் கீழ் உள்ள 2 ஆலைகளுக்காகவும் வாங்கப்பட்ட பருத்தியின் தரத்தையும் இந்த ஆலைகளில் உற்பத்தி செய்யப் பட்ட நூலின் தரத்தையும், பரிசோதனை செய்வதற்காக இக் கழகத்தில் மத்திய சோதனை ஆய்வுக் கூடமொன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. பருத்தியைச் சோதனை செய்வதற்காக இந்த ஆய்வுக் கூடத்தில் ஃபைப்ரோ கிராஃப் (Fibrograph) போர்ட், A. R. 'மைக்ரோனைய்ரே', 'மைக்ரோஸ்கோப்', ''பண்டில் ஸ்டெரிங்த் டெஸ்டர்'' டிராஃப் அனலைஸர், டெக்ஸ்டோ மீட்டர் போன்று இறக்குமதி செய்யப்பட்ட சாத னங்கள் உட்பட, பல நவீனச் சாதனங்களும் உள்ளன. இவற் றுடன் இந்த ஆய்வுக்கூடத்தில் நூலைச் சோதனை செய்யும் கருவி களும், நூலைப் பதப்படுத்தி மாதிரி எடுக்கும் கருவிகளும் உள்ளன. இந்தச் சோதனை ஆய்வுக் கூடத்திலுள்ள சாதனங்களின் மொத்த மதிப்பு சுமாராக ரூபாய் 15.00 இலட்சமாகும். இந்த ஆண்டில் ஏறக்குறைய 6,682 நூல் மாதிரிகளை இந்த ஆய்வுக் கூடம் பரிசோதனை செய்துள்ளது.

எல்லா கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கும், தமிழ்நாடு பஞ்சாலை களுக்கும் இயந்திரங்களைக் கொள் முதல் செய்தல்.

தமிழ்நாடு பஞ்சாலைகளுக்குத் தேவையான இயந்திரத்தைத் தெரிந்தெடுத்து குறைந்த விலையில் வாங்கும் பொருட்டு, கூட்டுறவு நூற்பாலைகள், தமிழ்நாடு பஞ்சாலைக் கழக நிரு வாகத்தின் கீழ் உள்ள அனைத்து ஆலைகளுக்கும் தேவையான இயந்திரத்தையும் உதரி பாகங்களையும் தெரிந்தெடுத்து வாங்கு வது தொடர்பான விவகாரங்கள் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத் தின் இயந்திரக் கொள்முதல் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நிருவாக இயக்குநரை அமைப்பாளராகக் கொண்ட குழு ஒன்றைக் கைத்தறி—துணித் தொழில்துறை இயக்குநர் அமைத்துள்ளார். துணித் தொழில் துறையிலுள்ள தொழில் நுட்ப வல்லுநர்கள்

பலர் இதில் உள்ளனர். இந்த ஆண்டில் இக்குழுவின் மூலம் வாங்கப்பட்ட இயந்திரங்களின் மொத்த மதிப்பு ரூபாய் 97.00 இலட்சம்.

இம்மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்த விசைத்தறித் துணியை விற்பனை செய்தல்.

இம்மாநிலத்திலுள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்த விசைத்தறித் துணியை, கைத்தறி துணித் தொழில் துறை இயக்குநர் பிறப்பித்த கட்டளையின்படி விற்பனை செய்யும் பொறுப்பை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் மேற்கொண்டுள்ளது. இந்த ஆண்டில் விசைத்தறித் துணியை இக்கழகம் பின்வருமாறு விற்பனை செய்யும்.

	உற்பத்தி. (மீட்டரில்).	மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்).
1. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத் தொழில் பிரிவுகள்.	6,00,000	30.00
2. கூட்டுறவுத் துறையின் கீழ் உள்ள புதிய விசைத் தறித் தொழில் தொகுதிகள்.	8,74,000	43.75
3. கூட்டுறவுச் சங்கங்கள்	10,00,000	50.00
மொத்தம்	24,74,000	123.75

தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம்.

பொதுத் துறையின் கீழ் தமிழ்நாடு சரிகை லிமிடெட் என்ற நிறுவனம் 6—12—1971 அன்று பதிவு செய்யப்பட்டு 23—1—1974 அன்று உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனம் தற்போது ஒரு மாதத்திற்கு 1,000 மார்க்குகள் உற்பத்தி செய்து, அவைகளை காஞ்சிபுரம், ஆரணி மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் உள்ள பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. இத் தொழிற்சாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தொகை ரூபாய் 20.00 இலட்சத்தில் 31-3-1983-ம்

தேதி முடிய பெற்றுள்ள மொத்த பங்குத் தொகை ரூபாய் 11.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பங்குத் தொகை யாவும் தமிழ்நாடு அரசு வசம் உள்ளது. தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்திற்கு கடனாக ரூபாய் 10.00 இலட்சம் வழங்கியுள்ளது. மேலும், காஞ்சிபுரத்தில் உள்ள பாரத ஸ்டேட் பாங்க் இந்நிறுவனத்திற்கு ரூபாய் 8.00 இலட்சம் காசுக் கடனாகக் வழங்கி உள்ளது.

1982-83-ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 10,563 மார்க்குகள் உற்பத்தி செய்து 10,506 மார்க்குகள் விற்பனை செய்யப்பட்டது. இதன் மதிப்பு ரூபாய் 107.28 இலட்சம் ஆகும். நடப்பாண்டில் இந்நிறுவனம் ரூபாய் 89.90 இலட்சம் மதிப்புள்ள பட்டு நூல், வெள்ளியிழை மற்றும் தங்கம் போன்ற மூலப்பொருள்களை வாங்கியுள்ளது.

அலுவலக ஊழியர்களுடன் சேர்ந்து மொத்தம் 77 பேர் பணி புரிகின்றனர்.

வேலைத்திறன் விவரம் :

இந்நிறுவனத்தின் இரண்டு வருடத்திற்கான வேலைத்திறன் பற்றிய விவரம் :

வருடம்.	மொத்த லாபம்.	வட்டி	தேய்மானம்	நிகர லாபம்/ நட்டம்.
		(ரூபாய் இலட்சத்தில்).		
1981-82	+5.02	4.08	0.72	(—)0.71*
1982-83 ..	+6.17	3.55	0.72	+ 1.90*

*தணிக்கை செய்யப்படாதவை.

அத்தியாயம் 13

செய்தி, சுற்றுலா மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை

அத்தியாயம் 13

செய்தி, சுற்றுலா மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை

செய்தி — மக்கள் தொடர்பு.

அரசின் திட்டங்களை உரிய வகையில் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு, செய்தி—மக்கள் தொடர்புத் துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வறிக்கையாண்டில் இத்துறை அரசுக்கும் பொதுமக்களுக்கும் ஓர் இணைப்புப் பாலமாக இருந்து, அரசின் கொள்கைகள்) திட்டங்கள், சாதனைகள் ஆகியவற்றை திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, பொருட்காட்சிகள், புகைப்படங்கள், காட்சிக் கருவிகள், அச்சிடப்பட்ட புத்தகங்கள், பாடல்கள், நாடகங்கள் முதலியவற்றின் மூலமாக பொதுமக்களுக்குத் தெரிவித்து வருகிறது. இத்திட்டத்தை எந்த அளவிற்கு பொதுமக்கள் வரவேற்கின்றனர் என்பதையும், அவர்களின் கருத்துக்களையும்' தேவைகளையும், கோரிக்கைகளையும் அறிந்து கொள்ள இத்தகையதோர் திட்டம் உதவுகிறது.

செய்தி—மக்கள் தொடர்பு அதிகாரிகள், மாவட்டங்களில் இத்துறைத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதைக் கவனிக்க தொடர்ந்து பொறுப்பு வகிக்கின்றனர். 16 செய்தி—மக்கள் தொடர்பு அதிகாரிகள் பின்வரும் கடமைகளையும், அலுவல் களையும் மாவட்டங்களில் கவனித்து வருகின்றனர்.

(i) மாவட்டத்தில் அனைத்து வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பிரச்சாரத்திற்கு ஏற்பாடு செய்தல்; கிராமங்களில் விழாக்கள், திரைப்படக்காட்சிகள், கூட்டங்கள், கருத்தரங்குகள் பாடல்கள், நாடகங்கள் ஆகிய பிரச்சாரங்களுக்காக ஏற்பாடு செய்தல்;

(ii) அரசின் திட்டங்கள், சாதனைகள் பற்றி மாவட்ட அளவில் தகவல் அளித்தல்;

(iii) மாவட்ட அளவில், பொருட்காட்சிகளை நடத்துதல்;

(iv) மத்திய, மாநில அரசு அலுவலகங்களின் விளம்பரப் பணியை ஒருங்கிணைத்தல்;

(v) பத்திரிகைத் தொடர்புகளை கவனித்தல், பத்திரிகை செய்தி வெளியிடுதல், நிருபர் கூட்டங்களைக் கூட்டுதல்

(vi) இயக்கங்கள், விழாக்கள் நடைபெற, மாவட்ட ஆட்சியருக்கும் மாவட்ட துறைத் தலைவர்கள் அனைவருக்கும் உதவி புரிதல்.

மாநகரிலும், மாநிலத்திலும் அரசு விழாக்களைப் புகைப் படம் எடுப்பதற்காக தலைமையிடத்தில் திறமையான புகைப் படப் பிரிவு செயல்பட்டு வருகிறது. மதுரை, திருச்சி, கோயம் புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள செய்தி, மக்கள், தொடர்பு அதிகாரிகள் அலுவலகத்தில் பணியாற்றுவதற்காக 4 உதவி புகைப்படக்காரர்கள் பதவிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மதுரை மற்றும் தென் மாவட்டங்களுக்கு, ஏற்பட்டு வரும் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மதுரையிலுள்ள செய்தி-மக்கள் தொடர்பு அதிகாரிகள் அலுவலகத்தில் உள்ள புகைப்படப் பிரிவில் கூடுதல் பணியாட்களை நியமிக்க அனுமதி அளித்ததன் மூலமும், புதிய கருவிகளை வாங்கியதன் மூலமும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் மூன்று தகவல் நிலையங்கள் (சென்னையில் ஒன்றும், மதுரையில் ஒன்றும், தஞ்சாவூரில் ஒன்றும்) உள்ளன. பொது மக்களின் படிப்பறிவு இல்லாதவர்களுக்கு, இப்பிரிவு கல்வி வசதிகளை அளிக்கிறது.

திரைப்படத் தயாரிப்பில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கவும், பின்வரும் பட்டயப் படிப்புகள் நடத்தவும், இந்தியாவிலுள்ள இரு நிறுவனங்களில், சென்னையிலுள்ள தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சிக் கல்லூரியும் ஒன்றாகும்.

தொடர் எண்ணும், பாடத்திட்டமும்,	கால அளவு ஆண்டுகள்	இடங்களின் எண்ணிக்கை
1. திரைப்படம் இயக்குதல் திரைக் கதை வசனம் எழுதுதல்.	3	10
2. திரைப்படவியல்	3	15
3. ஒளிப்பதிவு—ஒலிப்பதிவு பொறியியல்	3	10
4. திரைப்படம் கழுவுதல்	3	10
5. திரைப்படத் தொகுப்பு	2	10
6. நடிப்புக் கலை (சான்றிதழ் தகுதி)	1	10 (ஆடவரும் மகளிரும்)

இறுதியாண்டு பட்டயத் தேர்வுகளை சென்னை தொழில் நுட்ப கல்வி இயக்கத்தின் தேர்வுக் குழுத் தலைவர் நடத்து கிறார். தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில நினைவு அறக்கட்டளைகளிலிருந்து படிப்புதவித் தொகைகள் பயிற்சி உதவித் தொகைகள், பரிசுகள் ஆகியவை வழங்கப்படுகின்றன.

சென்னை, தமிழ்நாடு திரைப்பட தொலைக் காட்சிக் கல்லூரியில் இரு படப்பிடிப்புத் தளங்கள் உள்ளன ஒரு தளம், தமிழ்நாடு திரைபடத் தொலைக் காட்சிக் கல்லூரி மாணவர்களாலும், தமிழ்நாடு திரைப்படப் பிரிவாலும் பயன் படுத்தப்படுகிறது. மற்றொன்று, அரசு ஏற்பளிப்பு கட்டண வீதங்களில் தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு வாடகைக்கு விடுவதால் அரசுக்கு வருவாய் கிட்டுகிறது. மேலும் புகழ்பெற்ற தொழில் நுட்ப வல்லுநர்களிடம் மாணவர்கள் பயிற்சி பெற்று அவர்களிடம் பணியாற்ற இயலுகிறது. மேலும் தயாரிப்பாளர்கள் நிறுவிய அரங்குகள் மாணவர்களின் நடை முறைப் பயிற்சியை பெற கிடைக்கின்றன. தமிழ்நாடு திரைப் பட தொலைக் காட்சி நிலையத்திற்கு மொத்தம் ரூ.48,66,0(0 செலவிடப்பட்டது. இதன் மூலம் ரூ.49,000 வருவாய் கிட்டி யது.

சென்னை, தமிழ்நாடு திரைப்பட பிரிவு :

சென்னை, தமிழ்நாடு திரைப்படப் பிரிவு செய்திச் சுருள்-களையும், செய்திப் படங்களையும் (35 எம.எம். 16எம்.எம்.) தயாரித்தும். அரசு திரைப்படப் பிரிவு மூலமாக தமிழ்நாடு திரையரங்குகளிலும், மாவட்டங்களில் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அதிகாரிகள் மூலமாக, கிராமங்களில் வெளியிடுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் 12 செய்திச் சுருள்களும், 5 செய்திப் படமும் தயாரிக்கப்பட்டன. தமிழ்நாடு, திரைப்பட பிரிவிற்கு மொத்தம் ரூ. 32,57,362/- செலவிடப்பட்டது, இவற்றில, ரூ. 4,27,451.50 வருவாய்க் கிட்டியது.

காந்தி இல்லம்-

காந்தி இல்லம், தமிழ்நாடு அரசின் செய்தி சுற்றுலா (தமிழ் பண்பாட்டுத் துறையின் நிருவாகக்கட்டுப்பாட்டின்கீழ் செயல் படுகிறது, ஆண்டுதோறும் அக்டோபர், 2ஆம் நாள் நன

பெறும் காந்தி ஜெயந்தியும், சனவரி 30 ஆம் நாள் நடைபெறும் காந்தி நினைவு நாள் ஆகியவை மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்படுகின்றன. இந்த தினங்களில் பள்ளி கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து பிரார்த்தனை நடத்துகின்றனர். நூல் நூற்றலும் செய்கின்றனர். சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரும் இவ்விழாக்களில் பங்கு கொள்கின்றனர். காந்தி இல்லத்தில் ஒரு சிறிய நூலகம் உள்ளது. இந்நூலகத்தில் காந்தியின் வாழ்க்கை மற்றும் அவரது கொள்கைகள் ஆகியவை அடங்கிய புத்தகங்கள் உள்ளன. மாணவர்களும், மற்றவர்களும் இந்நூலகத்தை பயன் படுத்திக் கொள்கின்றனர். காந்தியின் வாழ்க்கைப் பற்றிய புகைப்படம், அந்நியர் ஆட்சியிலிருந்து நமது தாயகத்தை மீட்க அவர் ஆற்றிய பங்கு ஆகியவற்றை விளக்கும் புகைப் படங்கள் இவ்வில்லத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளன.

தமிழரசு:

தமிழரசு பத்திரிகை (தமிழ், ஆங்கிலம்) இத்துறையின் வெளியீடு ஆகும். இப்பத்திரிகை 1970 ஜூலையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் திங்கள் இருமுறை ஏடாக வெளியிடப்பட்டு பின்னர் ஆங்கிலப் பதிப்பு திங்கள் இதழாக மாற்றப்பட்டது. இப்பத்திரிகை அரசின் செய்திகளையும், கருத்துக்களையும் வெளியிடுவதுடன் அரசின் வளர்ச்சிப் பணிகள், சாதனைகள் ஆகியவற்றிற்கு முக்கியதுவம் அளிக்கிறது. தமிழ் திங்கள் இருமுறை ஏடுகளின் சராசரி 45,000 பிரதிகளாகும். திங்கள் ஒருமுறை வெளியாகும் ஆங்கிலப் பிரதிகளின் எண்ணிக்கை 3,700 பிரதிகளாகும். இப்பிரதிகள் மாவட்டங்களில் தனியார் முகவர்கள், சந்தாதாரர்கள், துறைகள் ஆகியவை மூலம் விற்கப்படுகின்றன. "தமிழரசு" பிரதிகள் அமைச்சர்களுக்கும், தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆங்கிலப்பிரதிகள். குடியரசுத் தலைவருக்கும் பிரதம அமைச்சர்களுக்கும் மத்திய அமைச்சர்களுக்கும் ஏனைய மாநில ஆளுநர்களுக்கும் செய்தித் துறை அமைச்சர்களுக்கும், தலைமைச் செயலாளர்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

ஆண்டுத்தோறும், பல்வேறு பிரிவுகளில் அரசின் சாதனைகள் குறித்த சிறப்பு வெளியீடுகள் சில சமயங்களில் வெளியிடப்படுகின்றன.

தமிழ்நாடு இந்தியப் பெரும் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு அவர்களின் கொள்கைக் கருத்துக்கள் குறித்து சிறப்பு வெளியீடுகள் வெளியிடப்படுகின்றன, செய்தி—மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் "தமிழரசு" பதிப்பாசிரியர். தமிழரசு அலுவலகம், தமிழரசு அச்சகம், சென்னை-2 தமிழரசு துணை இயக்குநரின் கட்டுபாட்டின்கீழ் செயல்படுகின்றன.

நினைவகங்கள் :

(1) சென்னை வள்ளுவர் கோட்டம்,

(2) சென்னை காமராஜ் இல்லம்,

(3) காமராஜ் இல்லம், விருதுநகர்

(4) சென்னை அண்ணா சதுக்கம்,

(5) கிண்டி இராஜாஜி நினைவகம்,

(6) காமராஜ் நினைவகம், கிண்டி,

(7) ஈரோடு பெரியார் அண்ணா நினைவகம், ஈரோடு,

(8) தருமபுரி மாவட்டத்தில் தொரப்பள்ளி இராஜாஜி இல்லம்

(9) தஞ்சாவூர் மாவட்டம் தில்லையாடி வள்ளியம்மை நினைவுச் சின்னம்,

(10) காஞ்சிபுரம் அண்ணா நினைவுச் சின்னம்,

(11) எட்டையபுரம் பாரதி மணிமண்டபம்,

(12) ஒட்டபிடாரம் வ.உ.சி. நினைவுச் சின்னம்,

(13) கன்னியாகுமரி காந்தி மண்டபம் ஆகியவை செய்தி—மக்கள் தொடர்புத் துறை நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் தொடர்ந்து இருந்து வருகின்றன.

விளம்பரங்கள் :

அரசு விளம்பரங்களை வெளியிடுவதற்காக ஏற்படுத்தப் பட்டுள்ள இத்துறை, 1982—83ஆம் ஆண்டில் செய்தித் தாள் களுக்கும், சஞ்சிகைகளுக்கும், மலர் முதலியவற்றிற்காக சுமார்

ரூ. 2,78,93,532 செலவில் சுமார் 58,714 விளம்பரங்கள் கொடுக்கப்பட்டன. 14 விளம்பர அமைப்புகளின் பணிகள் இச்செயல் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டன.

இராஜாஜி மண்டபம் :

சென்னையிலுள்ள இராஜாஜி மண்டபம் பல்வேறு விழாக்கள் மாநாடுகள், கூட்டங்கள் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் அமைப்புகளிடமிருந்து வாடகைக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. மாநில அரசு விழாக்களுக்கு இந்த மண்டபம் ஒதுக்கப்படுகிறது. சென்னை, மெரினா கடற்கரையிலுள்ள சீரணியரங்கம் பொதுவாக அரசும், பொது நிறுவனங்களும் திறந்தவெளி கூட்டங்களை நடத்துவதற்காக ஒதுக்கப்படுகிறது.

சென்னை மாநில செய்தி நிலையம் :

மாணவர்களின் தேவைகளை, குறிப்பாக பட்ட மேற்படிப்பு மாணவர்களின் தேவைகளை அதாவது பல்வேறு பொருள் குறித்த புத்தகங்கள், குறித்த கால வெளியீடுகள், சிறு வெளியீடுகள் ஆகிய புத்தகங்களை அளிப்பதுடன், தகவல்களை அளிப்பதில், பொது மக்களுக்கும், வெளி நாட்டினருக்கும், மகத்தான பணியாற்றி வருகிறது. அரசு வெளியீடுகளை விற்பனை செய்வதற்காக விற்பனைப் பிரிவு ஒன்று உள்ளது. மாநகரின் வெவ்வேறு பகுதிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. திரையிடப்படுவதற்காக பொது மக்களுக்கும் அரசு நிலையங்களுக்கும் அவை வாடகைக்கு கொடுக்கப்படுகின்றன. இந்நிலையத்தில், சிறார்களுக்காக நூலகப் பிரிவு ஒன்று உள்ளது.

சென்னை கலைவாணர் அரங்கம் :

சென்னை, கலைவானர் அரங்கம், எல்லா வசதிகளுடன் கூடிய சீர்வளி திரையரங்காக நவீனப்படுத்தப்பட்டுள்ளது. இது 29-1-1974-ஆம் நாளன்று மீண்டும் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த அரங்கின் இருக்கைகளின் எண்ணிக்கை 1,040 ஆகும். இந்த அரங்கில் திரைப்படக் காட்சிகள் திரையிடுவதுடன் பொதுமக்கள், கலை நிகழ்ச்சி நடத்துவதற்கும் வாடகைக்கு

விடப்படுகிறது. அரசு விழாக்களும் கலைவாணர் அரங்கத்தில் நடத்தப்படுகின்றன.

வேலூர் அண்ணா கலை அரங்கம் :

வேலூர் அண்ணா கலை அரங்கத்தில் தமிழ் திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. தனிப்பட்டவர்கள், நாடகங்கள், நாட்டியங்கள், மாநாடுகள் முதலியவை நடத்துவதற்கு குறைந்த வாடகைக்கு இக்கலையரங்கு விடப்படுகிறது. அரசு விழாக்களும் இதில் நடத்தப்படுகின்றன.

1972—73ஆம் ஆண்டில் இத்துறை, 24 முக்கிய அரசு விழாக்களை நடத்தியுள்ளன.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் :

தந்தை பெரியார் நூற்றாண்டு விழா கொண்ணடாட்டத்தின் தொடர்ச்சியாக, அவரது வாழ்க்கை வரலாற்றையும், கருத்துக்களையும் சித்தரிக்கும் ஒளி-ஒலிக் காட்சிகள் சென்னை, திருச்சிராபள்ளி, வேலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, ஈரோடு ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. பெரியாரின் கருத்துக்கள் அடங்கிய ''பெரியார் புரட்சி மொழிகள்'' என்ற நூல் மலிவு விலையில் வெளியிடப்பட்டது. பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவின் பரிந்துரையின் பேரில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு இரு புத்தகங்களை தயாரிப்பதில் அதாவது மூன்று தொகுதிகளில் பெரியாரின் வாழ்க்கை வரலாறு அடங்கிய நூல் ஒன்றும், சிறார்களுக்காக வரைப்படங்களுடன் கூடிய பெரியார் வாழ்க்கை வரலாறு அடங்கிய நூல் ஒன்றும் தயாரிப்பதில் ஈடுபட்டு வருகிறது.

தலைமைச் செயலகத்திலுள்ள இத்துறை அரசின் பிரதிநிதியாகும். அரசின் அறிவிப்புகள் அனைத்தும் இத்துறையின் மூலம் தான் செய்தித்தாள்களுக்கு வழங்கப்படுகின்றன. அரசின் முக்கிய விழாக்கள், கூட்டங்கள் ஆகியவற்றை இத்துறையின் நிழற்படம் எடுக்கும் பிரிவு கவனிக்கிறது. இந்த ஆண்டில் செய்தித்தாள்களுக்கு 1,350 செய்திகளும், 960 நிழற் படங்களும் வழங்கபபட்டுள்ளன.

சுற்றுலா.

சமூக பொருளாதார மேம்பாட்டை விரைவுபடுத்துவதில் சுற்றுலா முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. எனவே, இவ்வாண்டில் நமது மாநிலத்தில் சுற்றுலா மேம்பாட்டிற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் பெருகிவரும் தேவையை நிறைவு செய்கின்ற வகையில் வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மாமல்லபுரம் :

மாமல்லபுரத்தில் ஒரு தொகுதியில் ஆறு சுற்றுலாக் குடில்களைக் கட்டுவதற்காக ரூ. 5 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாமல்லபுரத்தில் சுற்றுலா அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 2.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்திய தொல்பொருள் ஆராய்ச்சி அலுவலகத்தின் ஒப்புதல் இன்னும் கிடைக்காத நிலையில் '' ஒளி-ஒலிக் கண்காட்சியினை '' அமைக்கும் திட்டத்திற்கான மூலதனச் செலவில் மாநில அரசின் பங்குத் தொகையில் முதல் தவணைத் தொகைக்காக ரூ. 10 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாமல்லபுரத்தில் அமைக்கக் கருதியுள்ள திறந்த வெளி அருங்காட்சியகத்தில் வைப்பதற்கான ஆய்வுப்பொருள்களை தெளிவு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழு அளித்துள்ள அறிக்கையை ஏற்கப்பட்டுள்ளதுடன் திறந்தவெளி அருங்காட்சியகத்தில் வைக்கக் கருதியுள்ள ஆய்வுப் பொருள் தெரிவுப் பட்டியலுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஏற்கனவே அனுமதியளிக்கப்பட்டுள்ள ரூ. 19.8 இலட்சத்துடன் மேலும் ரூ. 7.29 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம், மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய சுற்றுலா இடங்களை முறையே ரூ. 28 கோடி, 5.825 கோடி, ரூ. 16 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்த இத்துறை ஏற்கனவே பெருந்திட்டங்களை வகுத்துள்ளது.

திருச்சிராப்பள்ளி-

திருச்சிராப்பள்ளியில் இளைஞர் விடுதி கட்டுவதற்கு ரூ. 10 இலட்சமும், சுற்றுலா அலுவலகம் கட்டுவதற்கு ரூ. 2.50 இலட்சமும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

உதகமண்டலம் :

ஒரு முகவரமைப்பின் மூலம் ஊட்டியிலுள்ள சாரிங்கிராச்சிற்கும் தொட்டபெட்டாவிற்கும் இடையில் கயிற்று வழிப்பாதை இணைப்பு (Rope way) கொடுப்பதற்கான சாத்தியக் கூறு அறிக்கை ஒன்றினைத் தயாரிப்பதற்கும், அவ்வாறு தயாரிப்பதற்கு ஏற்படும் இடை நிகழ்வு செலவிற்கும் ரூ. 10,000 அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

மலைப்பகுதிமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சுற்றுலாத் துறையில் 19-2-1983 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1. சுற்றுலா இடங்களை மேம்படுத்துதல் :

(அ) தொட்டபெட்டா (ஆ) டால்பின் நோஸ் (இ) லேம்ப்ஸ்ராக் (ஈ) கொடைநாடு வியூ பாயிண்ட் ..	2,15,000
(2) சுற்றுலாப்பயணிகளின் வசதிக்காக உதகமண்டலத்தில் சிறு பேருந்து வசதி செய்து கொடுத்தல்.	2,75,000
(3) பழங்குடி இனத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு சுற்றுலா வழிக்காட்டி பயிற்சி அளித்தல்.	35,000
(4) தோடர்கள் பண்பாடு, அவர்களது வாழ்க்கை முறை ஆகியவற்றை விளக்கும் சிறு மடிப்பு புத்தகங்கள் ஏனைய விளம்பர ஏடுகளை அச்சடித்தல்.	1,00,000
(5) உதகமண்டலத்தில் ஏரிப்பூங்காவை பராமரித்தல்.	75,000
(6) முதுமலையில் படுக்கை வசதிக்கூடம், சிற்றுண்டி விடுதி ஆகியவற்றை கட்டுதல்.	3,000,00

ஏனைய திட்டங்கள் :

பிச்சாவரத்தில் சுற்றுலா பயணிகளின் பயனுக்காக 4 குடில்கள் கட்டவும் படகுகள் வாங்கவும் ரூ. 5 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டது.

தஞ்சாவூர், மதுரை விமான நிலையம், திருச்சிராப்பள்ளி விமான நிலையம் ஆகிய இடங்களில் சுற்றுலா தகவல் பெரும் (மையங்களை) இடங்களை தோற்றுவிக்குமாறு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. திருச்சி விமான நிலையத்திலும், மதுரை விமான நிலையத்திலும் ஏற்கனவே சுற்றுலா தகவல் மையங்கள் அமைக்கப்பட்டு விட்டன.

தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு இடங்களுக்கு வருகை தரும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் ஏனைய மாநிலங்களி விருந்து வரும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் உதவி புரிவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு சுற்றுலா பயணிகளுக்குரிய வழிக்காட்டிகளாக பயிற்சி அளிக்கும் திட்டம் .ஒன்றினைத் துறை மேற்கொண்டுள்ளது. இதற்காக ரூ. 70,250 அனுமதிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் சுற்றுலா முகாம் ஒன்றினை அமைப்பதற்காக முதற் கட்டமாக ரூ. 12,50,000 ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொருட்காட்சிகளும் திருவிழாக்களும் :

1983 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் அனைத்து சுற்றுலா மையங்களிலும் வருடாந்திர சுற்றுலா பொருட்காட்சிகளை சுற்றுலாத் துறை நடத்தியது. உதகமண்டலம், கொடைக் கானல், ஏற்காடு, ஏலகிரி, முதலிய மலைவாழ் இடங்களில் கோடை விழாக்களை நடத்துவதற்கென தனியாக அமைக்கப்பட்டுள்ள குழுக்களுக்கு துறை உதவியளித்தது. சுற்றுலாவினை ஊக்குவிக்கவும், கோடைக் காலங்களில் மலைவாழ்விடங்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான பொழுதுபோக்கு அளிக்கவும் மாநிலத்தின் மலைவாழ்விடங்களில் கோடைக் காலத்தில் கோடை விழா நடத்தப்படுகிறது.

அத்தியாயம்–14.

தொழிலாளர் நல—வேலை வாய்ப்புத்துறை

அத்தியாயம் 14.

தொழிலாளர் நல—வேலை வாய்ப்புத்துறை.

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

ஆய்வுக்குட்பட்ட இந்த வருடத்தில் சென்னை, மதுரை அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள், சென்னை, மதுரை, திருச்சியிலுள்ள தொழில் நுட்பப் பிரிவினர் களுக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகங்கள், சென்னை உடல் ஊனமுற்றோர் சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், அம்பத் தூர், திருவள்ளூர், மண்டபம், சங்கராபுரம், ஆலங்காயம், கரூர், பரமக்குடி, ஒசூர், விருதுநகர், மேட்டூர், ஆகிய இடங்களிலுள்ள பத்து துணை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் ஆகியவைகளைச் சேர்த்து மொத்தம் 40 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தொடர்ந்து இயங்கி வந்தன. மேலும், முன்பு இயங்கி வந்த மாநில வேலை நிலவரத் தகவல் பிரிவுகள் தொழில் நெறி வழிகாட்டும் பிரிவுகள் மற்றும் தொழில் தகவல் பிரிவுகள் ஆகி யவை இந்த ஆய்வுக் காலத்திலும் தொடர்ந்து இயங்கி வந்தன. மேலும், உதக மண்டலத்தில், இயங்கி வரும் பழங்குடி இனத்த வருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் அலுவலகம், இந்த ஆய்வுக் காலத்திலும் தொடர்ந்து இயங்கி வந்தது.

வேலை வாய்ப்பு அலுவலகங்களின் முக்கிய புள்ளி விவரங்கள் :

1982–83 உடன் முடிவடைந்த ஆண்டில் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் பதிவு செய்த நபர்களின் மொத்த எண்ணிக்கை 5,55,396 ஆகும். மொத்தம் 98,873 காலியிடங்கள் பதிவாளர்களைப் பரிந்துரை செய்வதற் காக, 23,310 வேலையளிப்போர்களால் அனைத்து வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளன. வேலை வாய்ப்பு அலுவலர்களால் பரிந்துரை செய்யப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டோர்களின் மொத்த எண்ணிக்கை 75,597. ஆண்டு இறுதியில் அனைத்து அலுவலகங்களின் உயிர்ப்பதிவேட்டில் இருந்த நபர்களின் மொத்த எண்ணிக்கை 14,16,582 ஆகும்.

தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம்

இந்த ஆய்வுக் காலத்தில் இந்த அலுவலகம் 11,130 தொழில் மற்றும் நிர்வாகத் திறன் கொண்ட மனுதாரர்களைப் பதிவு செய்து 3,374 பதிவுதாரர்களைப் பணியில் அமர்த்தியது. 31—3—1983-ல் இந்த அலுவலகத்தின் உயிர்ப்பதிவேட்டில் 25,067 பதிவுதாரர்கள் வேலைக்காக இருந்தனர்.

உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் :

சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகமும், மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அமைந்துள்ள ஊனமுற்றோர்க்கான சிறப்புப் பிரிவுகளும் ஊனமுற்ற பதிவுதாரர்களின் சேவைகளுக்காகவும், அவர்களின் மறுவாழ்வுக்காகவும் தொடர்ந்து இயங்கி வந்தன.

இந்த ஊனமுற்றோர்க்கான சிறப்புப் பிரிவுகளின் புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

வரிசை எண்ணும் அலுவலகத்தின் பெயர்.	பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை	பணியில் அமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கை.	31-3-1983 முடிய உயிர்ப்பதிவேட்டில் இருந்த நபர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
1 உடல் ஊனமுற்றோர் சிறப்பு அலுவலகம், சென்னை-35.	1,945	868	6,370
2 மதுரை	430	327	866
3 கோயம்புத்தூர்	364	134	1,680
4 சேலம்	241	83	855
5 திருச்சி	305	138	1,570

பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் :

பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழி காட்டும் நிலையங்கள், சென்னை, மதுரை மற்றும் அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் அந்தந்த பல்கலைக் கழகங்களின் பழைய மற்றும் தற்போதைய மாணவர்களின் தகவல் மற்றும் வழிகாட்டும் வசதிக்காகவும் மற்றும் தொழில், நிர்வாகத் துறைகளில் உயர் படிப்பு படித்தவர்களின் பெயர்களைப் பதிவு செய்வதற்காகவும், தொடர்ந்து இயங்கி வந்தன.

மேற்படி நிலையங்களின் இந்த ஆய்வு காலத்திய புள்ளி விவரங்கள் கீழ்வருமாறு :—

வரிசை எண்ணும், பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையத்தின் பெயரும்.	பதிவு செய்தோரின் எண்ணிக்கை.	பணியிலமர்த்தப் பட்டோர் எண்ணிக்கை.	31—3—1983 முடிய உயிர்ப் பதிவேட்டில் இருந்த உயிர்ப் நபர்களின் எண்ணிக்கை.
1. சென்னை	143	24	303
2. மதுரை	1,666	210	3,720
3. அண்ணாமலை நகர்	337	52	464

துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள்-

இந்தத் துணை வேலைவாய்ப்பு அலுவலகங்களின் சென்ற ஆண்டின் முக்கிய புள்ளி விவரங்கள் கீழ்வருமாறு :—

வரிசை எண்ணும், துணை வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பெயரும்.	பதிவு செய்தோர் எண்ணிக்கை.	பணியில் அமர்த்தப் பட்டோர் எண்ணிக்கை.	31—3—83 முடிய உயிர்ப் பதிவேட்டில் இருந்த நபர்களின் எண்ணிக்கை.
1. அம்பத்தூர் ..	8,972	310	34,181
2. திருவள்ளூர்	7,415	388	17,983
3. ஆலங்காயம்	10,555	540	20,709
4. சங்கராபுரம்..	9,555	1,068	30,147
5. கரூர்	8,828	514	22,602
6. ஓசூர்	6,259	712	9,351
7. மேட்டூர்	6,931	315	14,516
8. விருதுநகர்	11,134	801	21,408
9. பரமக்குடி	10,131	1,180	24,775

பணியாளர்கள் பயிற்சிப் பிரிவு :

இயக்ககத்தில் அமைந்துள்ள பணியாளர் பயிற்சிப் பிரிவு இந்த ஆய்வுக் காலத்திலும் தேசிய வேலைவாய்ப்புப் பணி குறித்த விதி மற்றும் நடைமுறைகள் பற்றி இத்துறையின் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் பணியினைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தது. 1—4—1982 முதல் 31—3—1983 வரையிலான காலத்தில் 4 பணியாளர் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு, அதில் 41 பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

கைவினைஞர் பயிற்சித் திட்டம் :

கைவினைஞர் பயிற்சித் திட்டத்திற்கான நடவடிக்கைகளில், வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் இணைந்து இயக்ககம் செயல் பட்டு வந்தது. கைவினைஞர் பயிற்சிக்கான வாய்ப்புகள் உள்ள நிறுவனங்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு, அதன் அடிப்படை யில் அந்நிறுவனங்களுக்கு தகுதியுள்ள பதிவுதாரர்களை பரிந்துரை செய்யுமாறு சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்துக்கு ஆணை வழங்கப்பட்டது. இந்த ஆய்வுக் காலத்தில் 11219 கைவி னைஞர் பயிற்சி நிலவரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவைகளின் 10370 கைவினைஞர் பயிற்சி இடங்கள் நிரப்பப்பட்டன.

தாழ்த்தப்பட்ட மலைவாழ் இனத்தவர்களுக்கான சிறப்புப் பிரிவின் நடவடிக்கைகள் :

இயக்கத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட/மலைவாழ் இனத்தவர் களுக்கான சிறப்புப் பிரிவு, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் மேற் காணும் இனத்தவர்களுக்குப் பணியிலமர்த்தும், பணிகளில் இணைந்து செயல்பட்டு வருகிறது. மாநில மற்றும் மத்திய அரசு துறையில் நிரப்பப்படாமல் காலியாக உள்ள மேற்காணும் இனத் தவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணி காலியடங்களை நிரப்புவதற் காக தனிப்பட்ட முயற்சிகளை இப்பிரிவு மேற்கொண்டது. மேலும் இப்பிரிவு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர்களுக்கான ஒதுக்கப்பட்ட காலியிடங்களை அம்மனுதாரர்களைக் கொண்டே நிரப்பும் வகையில் கீழ்க்கண்ட வேலையளிப்போருக்கு மனுதாரர் களின் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க நடவடிக்கை மேற் கொண்டது அவைகளின் விவரங்கள் கீழ்வருமாறு :—

வரிசை எண்ணும், நிறுவனங்களின் பெயர்.	பரிந்துரைக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட/பழங்குடி இனத்தவர்களின் எண்ணிக்கை.
(1) பாரத் ஹெவி எலக்ட்ரிக் கல்ஸ், திருச்சி.	கைவினைஞர் பயிற்சி சான்றிதழ் மற்றும் தொழிற்பயிற்சி நிலையச் சான்றிதழ் பெற்றுள்ள 13 பழங் குடியினத்தவர்கள்.

(2) பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ், திருச்சி.	தொழிற் பயிற்சி பெற்ற 16 தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் மற்றும் 36 பழங்குடியினத்தவர்கள்.
(3) தபால் தந்தித் துறை, மோட்டார் வாகனப் பிரிவு மதுரை.	ஓட்டுநர் தொழிற் பயிற்சி பெற்ற 262 தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் மற்றும் 32 பழங்குடியினத்தவர்கள்.

வேலையற்றோர் நிவாரணப் பணி திட்ட நடவடிக்கைகள் :

31-3-1983 முடிய வட்டாட்சியாளர்களுக்கு அனுப்பப்பட்ட மனுக்கள் மற்றும் நிவாரணம் வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு :—

வரிசை எண்ணும், வேலையற்றோர் நிவாரணம் பெறத் தகுதி வாய்ந்த இனங்கள்.	வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.	நிவாரணத் தொகை அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1. பட்டதாரிகள்/மேல்நிலைப் பட்டதாரிகள்	17,993	11,472
2. செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்	5,302	3,912
3. ஹையர் கிரேடு ஆசிரியர்கள் ...	23	10
4. உடற்பயிற்சி ஆசிரியர்கள் (மேல்நிலை/கீழ்நிலை).	1,027	749
5. தமிழ் மற்றும் இதர மொழி ஆசிரியர்கள்.	787	541
6. கைவினை ஆசிரியர்கள் ..	688	449
7. பொறியியல் டிப்ளமோ பெற்றவர்கள்.	123	53
மொத்தம்	25,943	17,186

கைவினைஞர் பயிற்சித் திட்டம் :

இம் மாநிலத்தில் தற்போது மகளிருக்கெனத் தனியாக இயங்கும் மூன்று தொழிற் பயிற்சி நிலையங்களையும் சேர்த்து மொத்தம் 13,588 இருக்கைகள் கொண்ட 35 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இத்தொழிற் பயிற்சி நிலையங்களில் 30 பொறியியல் தொழில் பிரிவுகளிலும் 12 பொறியியல் அல்லாத பிரிவுகளிலும் பயிற்சியளிக்கப்படுகிறது.

1982 ஆம் ஆண்டில் தொடங்கிய பயிற்சி ஆண்டில் 1,59,622 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மொத்தம் 8,264 பயிற்சியாளர்கள் சேர்க்கப்பட்டனர். 8,264 மாணவர்களின் வகை விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

வரிசை எண்ணும், வகை விவரமும்.	சேர்க்கப் பட்டவர்களின் எண்ணிக்கை.
1. பின்தங்கிய வகுப்பினர் ..	4,694
2. ஆதி திராவிடர் வகுப்பினர் ..	1,273
3. ஆதிவாசி வகுப்பினர்	81
4. அகதிகள்	56
5. முன்னாள் இராணுவத்தினர் ..	81
6. உடல் ஊனமுற்றோர்	146
7. இராணுவத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கும் போதே பயிற்சிக்கு அனுப்பப்பட்டவர்.	116
8. பெண்கள்	489
9. மற்றவர்கள்	1,328
மொத்தம்	8,264

தனியார் தொழிற் பள்ளிகள் இயங்குவதை குறித்த அறிக்கை-

தற்போது, இம் மாநிலத்தில் 92 தனியார் தொழிற் பள்ளிகள் இத்துறையால் அங்கீகரிக்கப்பட்டு இயங்குகின்றன. இத்தொழிற் பள்ளிகளில் மத்திய அரசு மாதிரி (NCVT Pattern) மற்றும் மாநில மாதிரியாக (State Parttern) இரு வகையிலும் பயிற்சி அளிக்கப்

படுகிறது. இத்தொழிற் பள்ளிகளில் பயிற்சிக்காகச் சேரும் மாண வர்கள் இத்துறையால் நிர்வகிக்கப்பட்டவாறு கல்வி மற்றும் வயதுத் தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் ஜூலைத் திங்களில், மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது. இப்பள்ளிகளில் சேர்க்கப்படும் அனுமதிக்கப்பட்ட மாணாக்கர் களின் எண்ணிக்கை 6,066 ஆகும். சுமார் 5,450 மாணாக்கர்கள் தற்போது இத்தொழிற் பள்ளிகளில் பொறியியல் மற்றும் பொறி யியல் அல்லாத 30 தொழிற் பிரிவுகளில் (பொறியியல் தொழிற் பிரிவுகள்-21 மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகள—9) பயிற்சி பெற்று வருகிறார்கள். இத்தொழிற் பிரிவுகளின் பயிற்சி காலம் ஒன்று முதல் ஐந்து ஆண்டுகள் ஆகும்.

இவ்வாண்டில் தொழிற் பள்ளிகளுக்குப் பராமரிப்பு மானிய மும் தளவாட மானியமும் ஆசிரியப் பயிற்சி மையங்களுக்கு முத லீட்டு மானியமும் தொழிற் பள்ளி மாணாக்கர்களுக்குத் தொழில் உபகாரச் சம்பளமும் ஆசிரியப் பயிற்சி மையங்களின் ஆசிரியப் பயிற்சியாளர்களுக்கு உதவிச் சம்பளமும் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டது :—

வரிசை எண்ணும் மானியமும்.	எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது.	வழங்கப்பட்ட தொகை.
1. பராமரிப்பு மானியம்.	50 தொழிற் பள்ளிகள்	ரூ. 6,13,320
2. தளவாட மானியம்	2 தொழிற் பள்ளிகள்	ரூ. 4,080
3. முதலீட்டு மானியம்	8 ஆசிரியப் பயிற்சி மையங்கள்.	ரூ. 13,150
4. தொழில் உபகாரச் சம்பளம்.	60 பயிற்சியாளர்கள்	ரூ. 23,434
5. உதவித் தொகை	54 ஆசிரியப் பயிற்சி யாளர்கள்.	
6. தமிழ்நாடு கல்வி நிதிகள் 92-ம் படி படிப்புக் கட்டணத் தொகை ஈடு செய்தல்.	3 தொழிற்பள்ளிகள்	ரூ. 11,462

தொழிலாளர் நலன்

தொழில் தகராறுகள் சட்டம் 1947 :

இந்த அறிக்கை ஆண்டில் (அதாவது 1—4—1982 முதல் 31-3-1983 ஆம் நாள் வரையில்) 1,385 தொழில் தகராறுகள், 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின், 12(3) ஆம் பிரிவின்படி, தொழில் துறையின் இணக்க அதிகாரிகளால் தீர்த்து வைக்கப்பட்டன.

நடுவர் தீர்ப்பு :

இரண்டு தொழில் தகராறுகள், நடுவர் தீர்ப்பிற்காக, தொழில் துறை ஆணையாளராலும், ஏனைய அதிகாரிகளாலும் அனுப்பி வைக்கப்பட்டன.

நீதி மன்றத் தீர்ப்பு :

1,016 தொழில் தகராறுகள் வழக்கு இணக்கத் தீர்ப்பிற்காக, சென்னைத் தொழில் நடுவர் மன்றத்திற்கும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நல நீதி மன்றங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

இந்த ஆண்டில், சென்னை, தொழில் நடுவர் மன்றத்தால், வழங்கப்பட்ட 966 தீர்ப்புக்களில், 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-A பிரிவின்படி தொழிலாளர்களால் தொழிலாளர் நல நீதி மன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தகராறுகள் குறித்து வழங்கப்பட்ட தீர்ப்புகளும் அடங்கும் இவையனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டன.

ஊதியத்தை உயர்த்துதல், ஊதியக் கொடை வழங்குதல், பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட/பணியறவு செய்யப்பட்டவர்களை பணியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளுதல் முதலியவை தொடர்பான 7,785 புகார்களை தொழிலாளர் நலத்துறையின் இணக்க அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் பேச்சு வார்த்தைகளை நடத்தி ஆய்வு செய்தனர். இணக்கத் தீர்ப்பு ஏற்பாட்டு முறை தோல்வியுள்ள சில தகராறுகள் பற்றிய அறிக்கைளும் மேற்கூறிய எண்ணிக்கையில் அடங்கும்.

வேலை நிறுத்தம்—கதவடைப்பு :

72,218 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட 183 பணி நிற்பாடு களால் 21,12,898 மனித உழைப்பு நாட்கள் இழக்கப்பட்டன· பொதுவாக, ஊதியக் கொடை வழங்குதல், ஊதியத்தை உயர்த்து தல், அகவிலைப்படி வழங்குதல், தொழிலாளர்களை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளாதது முதலிய கோரிக்கைகளால் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன.

இந்த ஆண்டில் வேலை நிறுத்தங்களும்-கதவடைப்புக்களும் முடிக்கப்பட்ட முறை (அதாவது 1-4-1982 முதல் 31-3-1983 ஆம் நாள் வரை) வருமாறு :—

(a) நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலம் உடன் படிக்கை.	42
(b) தாமாகவே முன்வந்து பணியை மேற்கொள்ளு தல்.	9
(c) அரசால்/தொழிலாளர் நலத்துறை அதிகாரி களால் நடத்தப்பட்ட இணக்கப் பேச்சு வார் தைகள் மூலம்.	116
(d) நடுவர் தீர்ப்பு ..	1
(e) தொழிற்சாலையை முழுமையாக மூடிவிடுதல்.	2
(f) இந்தக் கால அளவில் இறுதியில் நடை பெற்று வருகிற முடிவு முறைகள்.	13

1926 ஆம் ஆண்டு தொழிற் சங்கங்கள் சட்டம்-

தமிழ்நாடு மாநிலத்தில் 1-4-1982 ஆம் நாளன்றிருந்தவாறு 3,860 தொழிற் சங்கங்கள் இருந்தன. இந்தக் கால அளவில் 466 தொழிற் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 1 தொழிற் சங்கம் கலைக்கப்பட்டது; 443 தொழிற் சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டது. இந்தக் கால அளவில் 9 தொழிற் சங்கங் களை ரத்து செய்த ஆணைகள் நீக்கப்பட்டன. இக்கால அளவில் இறுதியில், இம் மாநிலத்தில் செயற்படும் தொழிற் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 3,891 ஆகும்.

தொழில் வேலை வாய்ப்புச் (நிலை ஆணைகள்) சட்டம் 1946 :

1-4-1982 ஆம் நாளிலிருந்து 31-3-1983 ஆம் நாள் வரையிலான கால அளவில், 57 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகள் சான்றளிக்கப்பட்டன.

தொழிற்சாலைகள் சட்டம் :

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் 11,471 தொழிற்சாலைகள் இருந்தன. இந்த ஆண்டில் 1,341 தொழிற்சாலைகள் சேர்க்கப் பட்டன. 930 தொழிற்சாலைகள் நீக்கப்பட்டன : 31-3-1983 ஆம் நாள் நிலவரப்படி தொழிற் சாலைகளின் மொத்தஎண்ணிக்கை 11,882 ஆக இருந்தது. இதன் தனித்தனி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

பிரிவு 2m (i) 11,242

பிரிவு 2m (ii) 640

வேலையில் அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 7,71,315.

இக்கால அளவில் 66,60,925.00 ரூபாய் உரிமக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

ஆய்வுகள் :

இந்த ஆண்டில் 24,678 ஆய்வுகள் ஆய்வாளர்களால் சிறப்பாக நடத்தப்பட்டன. இதில் சிறப்பு ஆய்வுகள் ஞாயிற்றுக் கிழமை ஆய்வுகள், திடீர் ஆய்வுகள், இரவு நேர ஆய்வுகள் ஆகியவை அனைத்துமடங்கும்.

வழக்குத் தொடருதல் :

1-4-82 ஆம் நாள் நிலவரப்படி 2,578 இனங்களில் வழக்குத் தொடராமல் நிலுவையாக இருந்தன. தொழிற்சாலை சட்டத்தையும், இது தொடர்பான சட்டங்களின் விதிகளையும் மீறியதாக 1982—83-ஆம் ஆண்டில் 7,695 வழக்குகள் தொடரப் பட்டன. ரூ. 3,33,305.00 அபராதம் வசூலித்துக் கொண்டு 7,644 வழக்குகள் ஒருவகை செய்யப்பட்டன. இந்தக் கால இறுதியில் 2,629 இனங்கள் முடிவு செய்யப்படாமல் இருந்தன.

மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் 1951 :

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் (அதாவது 1-4-1982-ஆம் நாள் நிலவரப்படி) 86,581 தொழிலாளர்களை வேலையில் அமர்த்தியுள்ள 439 மலைத் தோட்டங்கள் இருந்தன. இந்தக் கால அளவில் 18 புதிய மலைத் தோட்டங்கள் பதிவு செய்யப்

பட்டன. 4 மலைத் தோட்டங்கள் பதிவேடுகளிலிருந்து நீக்கப் பட்டன. இக்கால அளவின் இறுதியில் (அதாவது 31-3-1983 ஆம் நாள் நிலவரப்படி) 453 மலைத் தோட்டங்கள் இருந்தன. இவற்றில் 84,309 தொழிலாளர்கள் பணிபுரிந்தளர்.

வழக்குத் தொடருதல் :

1. இந்த ஆண்டு தொடக்கத்தில் வழக்குத் தொடராமல் நிலுவையாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை	39
2. இந்த ஆண்டில் வழக்குத் தொடர அனுமதி பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை	86
3. இந்த ஆண்டில் ஒருவகை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	101
4. இந்த ஆண்டு இறுதியில் வழக்குத் தொடராமல் நிலுவையாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை	24
5. அபராதமாக வசூலித்த தொகை	35,775.00

தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்—நிறுவனங்கள் சட்டம் :

1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள்—நிறுவனங்கள் சட்டத்தின் விதித்துறைகளும், இதன் கீழ் இயற்றியுள்ள விதிகளும், தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாநகராட்சிகளிலும், அனைத்து நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் இதற்கெனச் சிறப்பாக அறிவிக்கப்பட்ட சில பகுதிகளிலும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இச்சட்டத்தின் கீழ் வரும் கடைகள்—நிறுவனங்களின் எண்ணிக்கையும், இவற்றில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையும் வருமாறு :—

இச்சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை.	தொழிலாளர்களுடன்.	தொழிலாளர்கள் இல்லாமல்.	தொழிலாளர்களுடன் கூடிய நிறுவனங்களில் நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
2,71,343	68,334	2,03,009	2,06,801

வழக்குத் தொடருதல் :

மேற்சொன்ன சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளையும், இதன்கீழ் செய்யப்பட்ட விதிகளையும் மீறியதற்காக இந்த ஆண்டில் தொடரப்பட்ட வழக்குகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

1. இக்கால அளவின் தொடக்கத்தில் (அதாவது 1—4—1982-ஆம் நாளன்று) வழக்குத் தொடரப் படாமல் நிலுவையாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை	6,844
2. இக்கால அளவில் வழக்குத் தொடர அனுமதியளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை..	21,265
மொத்தம்	28,109
3. இந்த ஆண்டில் ஒருவகை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	20,381
4. இக்கால அளவு இறுதியில் (அதாவது 31-3-1983 ஆம் நாளன்று) வழக்குத் தொடரப்படாமல் நிலுவையாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை	7,728
5. அபராதமாக வசூலித்த தொகை ரூ.	7,80,085

தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு கடைகள்—நிறுவனங்கள் சட்டத்தின்படி செய்துக் கொண்ட மேல் முறையீடுகள் :

இக்கால அளவில் தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்—நிறுவனங்கள் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் தொழிலாளர் நலத் துறை துணை ஆணையாளரால் வரப் பெற்று, ஒருவகை செய்யப்பட்ட மேல் முறையீடுகளின் எண்ணிக்கை தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

1. 1—4—1982 ஆம் நாள் நிலவரப்படி நிலுவையாக உள்ள மேல் முறையீடுகளின் எண்ணிக்கை	124
2. 1—4—1982-ஆம் நாளிலிருந்து 31—3—1983-ஆம் நாள் வரையிலான கால அளவில் பெறப்பட்ட மேல் முறையீடுகளின் எண்ணிக்கை	236
3. மொத்தம்	360
4. இக்கால அளவில் ஒருவகை செய்யப்பட்ட மேல் முறையீடுகளின் எண்ணிக்கை	183
5. இக்கால அளவில் இறுதியல் நிலுவையாகவுள்ள மேல் முறையீடுகளின் எண்ணிக்கை ..	177

இந்த அறிக்கைக் கால அளவில் இச்சட்டத்தின் விதித்துறைகளினின்றும் ஒரு நிரந்தர விலக்களிப்பும், 32 தற்காலிக விலக்களிப்புகளும் வழங்கப்பட்டன.

மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம் 1961 :

1-4-1982 ஆம் நாளிலிருந்து 31—3—1983 ஆம் நாள் வரையிலான கால அளவில் ரூ. 2,796.05 பதிவுக் கட்டணமாகவும் ரூ. 72,236.61 பதிவுகளைப் புதுப்பித்ததற்கான கட்டணமாகவும் பெறப்பட்டது. ரூ. 777.50 திருத்தக் கட்டணமாகவும், பதிவுச் சான்றிதழை மாற்றிக் கொடுப்பதற்காக ரூ. 200 பெறப்பட்டது. பதிவுச் சான்றிதழின் நகல் வழங்கியதற்காக ரூ. 220 பெறப்பட்டது.

இந்த அறிக்கை ஆண்டின் தொடக்கக் காலத்தில் 1,644 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இருந்தன. இந்த ஆண்டில் 117 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. இந்த ஆண்டில், 100 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் நீக்கப்பட்டன. 31-3-1983 ஆம் நாள் நிலவரப்படி பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 1,661 ஆகும்.

வழக்குத் தொடருதல் :

1-4-1982-ஆம் நாளன்றிருந்தவாறு வழக்குத் தொடராமல் நிலுவையாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 141 ஆகும். இந்த ஆண்டு 455 வழக்குகளில் வழக்குத் தொடர அனுமதியளிக்கப்பட்டுள்ளன. 431 வழக்குகளுக்கு தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கு அபராதமாக ரூ. 62,160 வசூலிக்கப்பட்டது. 2 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 3 வழக்குகள் எச்சரித்து விடப்பட்டன. 3 வழக்குகளில் குற்றச் சாட்டு விடுவிக்கப்பட்டது. இக்கால அளவின் இறுதியில் 158 வழக்குகள் முடிவுராமல் இருந்தன.

31-3-1983 ஆம் நாளன்றிருந்தவாறு 25,948 நிறுவனங்கள் இருந்தன. இவற்றில் 10,391 நிறுவனங்கள் பணியாளர்களுடன் கூடியவையாகும். இந் நிறுவனங்களில் நியமிக்கப்பட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 68,870 ஆகும்.

குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் :

இந்தச் சட்டத்தின்படி இக்கால அளவில் ஆய்வகம் 1, 12,678 ஆய்வுகளை நடத்தியதாக அறிவித்தது. இச் சட்டத்தை மீறிய

தற்காக தொடரப்பட்ட வழக்குகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. இந்த ஆண்டுத் தொடக்கத்தில் வழக்குத் தொடரப்படாமல் நிலுவையாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை	1,121
2. இந்த ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	2,535
3. தண்டனையில் முடிந்த வழக்குகளின் எண்ணிக்கை	2,522
4. குற்றச்சாட்டு விடுவிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	9
5. திரும்பப் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	4
6. எச்சரித்து விடப்பட்ட ரத்து செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	9
7. இந்த ஆண்டு இறுதியில் நிலுவையாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை	1,112
8. வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ.	1,31,035

குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்ட தொழிலாளர் நல நீதி மன்றங்களின் நீதிபதிகள், இந்த அறிக்கைக் கால அளவில், குறைந்த அளவு ஊதியங்கள் வழங்கப்படாதது குறித்த 21 உரிமை கோரிக்கை மனுக்களை ஒருவகை செய்தனர்.

ஊதியங்கள் வழங்கல் சட்டம் 1936 :

1982 ஆம் ஆண்டு 38-ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம், இச்சட்டத்தில் குறிப்பிட்ட சில விதித்துறைகளை (25-ஏ பிரிவு நீங்கலாக) மத்திய அரசு திருத்தியது. இச்சட்டத்தின் 25-A பிரிவைத் தவிர இச்சட்டம், 15—10—1982 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது.

இச்சட்டத்தின்கீழ் 24,419 நிறுவனங்கள் வந்தன. இந்த ஆண்டில் இந்த நிறுவனங்களில் பணி புரிவோரும் இச்சட்டத்தின் கீழ் வருவோருமான தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 9,87,732 ஆகும். இந்த ஆண்டுத் தொடக்கத்தில் 172 உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான வழக்குகள் முடிவுராமல் இருந்தன. இந்த ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் அதிகாரிகளின் முன்னிலையில்

ஊதியம் வழங்கப்படாதது குறித்த 591 உரிமை கோரிக்கைக அதாவது, தொழிலாளர் இழப்பீட்டிற்கான கூடுதல் ஆணையர் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டன. இந்த ஆண்டில் 584 உரிமை கோரிக்கை மனுக்கள் ஒருவகை செய்யப்பட்டன. 31—3—1983 ஆம் நாள் நிலவரப்படி 179 உரிமை கோரிக்கை மனுக்கள் ஒருவகை செய்யப்படாமல் இருந்தன.

1—4—1982-ஆம் நாள் நிலவரப்படி 936 வழக்குகள் தொடரப்படாமல் நிலுவையாக இருந்தன. இந்த ஆண்டில்) 1,662 வழக்குகள் வரப்பெற்றன. மொத்தமிருந்த 2,598 வழக்குகளில், இந்த ஆண்டில் 1,720 வழக்குகள் ஒருவகை செய்யப்பட்டன. 878 வழக்குகள் ஒருவகை செய்யப்படாமல் இருந்தன. அபராதமாக ரூ. 65.900.00 வசூலிக்கப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள் இந்த ஆண்டில் 62,975 ஆய்வுகளைச் செய்தனர்.

எடைகள்—அளவைகள் சட்டம் 1958 :

1958 ஆம் ஆண்டு எடைகள்— அளவைகள் (செயற்படுத்தல்) சட்டத்தின் விதித்துறைகளின்கீழ் தர எடைகள், அளவைகள் சட்டத்தை , தமிழ் நாட்டில் செயற்படுத்தும், பணி, தொழிலாளர் நலத் துறையின், தொழிலாளர் நலத் துணை ஆணையர் பதவித் தரத்திலுள்ள சென்னை எடைகள்—அளவைகள் கட்டுப்பட்டாளரின் நிருவாகப் பொறுப்பின் கீழ், தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துறை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள ஆகியோரால் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எடைகள்— அளவைகள் சட்டத்தைத் திறம்படச் செயற்படுத்த வேண்டியது அவசியமாகும் என்று உணரப்பட்டது. எடைகள்—அளவைகளைப் பயன்படுத்துவதில் செய்யப்படும் முறை கேடுகளை அடியோடு ஒழிக்க, குறிப்பிட்ட காலத்திற் கொருமுறை ஆய்வு செய்தல், திடீர் ஆய்வுகள் செய்தல், கூட்டாகச் சென்று சோதனை இடுதல் ஆகியவற்றின் மூலம் தீவிர நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டுள்ளது. சரிபார்த்தல் மீண்டும் சரிபார்த்தல் ஆகியவற்றிற்குரிய கட்டணங்கள், உரிமைக் கட்டணங்கள் முதலியவற்றின் மூலம் துறையின் எடைகள்—அளவைகள் பிரிவு மொத்தம் ரூ. 54,75,959.95 வருவாய் ஈட்டியது.

STATE DEPARTMENT
CC No.

வழக்குத் தொடருதல்:

இக்காலத் தொடக்கத்தில் 10,998 வழக்குகள் முடிவுராமல் இருந்தன. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்—அளவைகள் (செயற்படுத்தல்) சட்டத்தின் விதித்துறைகளையும், அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளையும் மீறியதற்காக, இந்த ஆய்வுக் கால அளவில், 18,537 வழக்குகளைத் தொடர அனுமதியளிக்கப்பட்டது. மொத்தம் இருந்த வழக்குகள் 29,535-ல், 18,277 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. 101 வழக்குகள் குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டன. 73 வழக்குகள் எச்சரித்து விடப்பட்டன, 250 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 87 வழக்குகள் வேறு வகையில் ஒருவகை செய்யப்பட்டுள்ளன. இந்தக் கால இறுதியில் 10,757 வழக்குகள் முடிவுராமல் இருந்தன. அபராதமாக வசூலித்த தொகை ரூ. 9,88,515 ஆகும்.

உரிமங்கள் :

இந்த ஆண்டில், 50 உற்பத்தியாளர்களுக்கும், 175 வியாபாரிகளுக்கும், 157 பழுதுபார்ப்பவர்களுக்கும் ஆக 382 உரிமங்களை எடைகள்—அளவைகள் கட்டுப்பாட்டாளர் வழங்கினார். இந்த உரிமங்களில் புதிதாக வழங்கப்பட்ட உரிமங்களும், புதுப்பிக்கப்பட்ட உரிமங்களும் அடங்கும். இந்த ஆண்டில் 22 இனங்களில் ஏற்றுமதி வணிகத்தில் ஒருவகையான அளவீடுகள் குறிக்கப்பெற்ற எடை எந்திரத்தைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

விலைவாசி புள்ளி விவரம்

1982–83-க்கான விலைவாசி நிலவரம்.

தமிழ்நாடு மொத்த விலைக் குறியீட்டெண்கள் 1970–71-ஐ அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகின்றன. இந்தக் குறியீட்டெண் 177 பொருட்களையும் அவற்றின் 509 விலை விவரங்களையும் அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது. இக் குறியீட்டெண் கணக்கிட தேர்வு செய்யப்பட்ட 177 பொருட்களும்.

1. முதன்மைப் பொருட்கள்
2. எரிபொருள் மற்றும் மின்சக்தி மற்றும்
3. உற்பத்தி செய்யப்பட்டப் பொருள்கள்.

என மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு குறியீட்டெண் கணக்கிடப்படுகிறது.

தமிழ்நாட்டின் 1982–83ஆம் ஆண்டிற்கான மாதாந்திர மொத்த விலைவாசி குறியீட்டெண்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன :—

எண்ணும், குறியீட்டு எண்ணும்.	ஏப்ரல் 1982,	மே 1982,	ஜூன் 1982,	ஜூலை 1982,	ஆகஸ்டு 1982,	செப்டம்பர் 1982.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1. முதன்மை பொருட்கள்.	275.03	275.80	281.50	283.84	285.41	287.13
(அ) உணவுப் பொருட்கள்.	268.48	270.42	279.53	283.91	285.23	286.76
(ஆ) உணவல்லாத பொருட்கள்.	283.84	282.73	283.06	282.14	284.19	286.24
(இ) தாதுப் பொருட்கள்.	322.23	322.23	322.23	322.23	322.23	322.23
2. எரிபொருள் மற்றும் சக்தி.	325.43	325.66	325.66	325.66	325,66	325.66
3. உற்பத்திப் பொருட்கள்.	261,07	264.00	267.61	268.40	270.48	274.69
அனைத்துப் பொருட்கள்.	270.53	272.23	276,82	278.40	280.15	282.91

எண்ணும், குறியீட்டு எண்ணும்.	அக்டோபர் 1982.	நவம்பர் 1982,	டிசம்பர் 1982,	ஜனவரி 1983.	பிப்ரவரி 1983.	மார்ச் 1983.
(1)	(8)	(9)	(10)	(11).	(12)	(13)
1. முதன்மை பொருட்கள்.	290,57	292.49	291.78	291.16	296.65	298.52
(அ) உணவுப் பொருட்கள்.	291.64	294.42	290.75	286.27	296,68	300.27
(ஆ). உணவல்லாத பொருட்கள்.	287.50	288,03	292.21	297.91	295.54	294.67
(இ) தாதுப் பொருட்கள்.	322.23	322.23	322.23	322.23	322.23	322.23
2. எரி பொருள் மற்றும் சக்தி.	325.66	339.07	339.07	339.07	339.07	339.07
3. உற்பத்திப் பொருட்கள்.	275.28	277.64	278.16	279.67	280.74	280.09
அனைத்துப் பொருட்கள்.	284.98	287.47	287.32	287.66	291.03	291.73

நுகர்பொருள் குறியீட்டெண்கள் :

1948 ஆம் வருட குறைந்த பட்ச ஊதிய சட்டத்தின் பிரிவு 2(டி) யில் ஆணையிட்டபடி தொழிலாளர் பிரிவினருக்கான நுகர் பொருள் குறியீட்டு எண்கள், சென்னை, கடலூர், திருச்சிராப் பள்ளி, மற்றும் நாகர்கோவில் மையங்களுக்கு 1960 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு புள்ளி இயல் ஆணையரால் தொகுத்து வெளியிடப்படுகின்றன. மேலும் மதுரை, கோயம்புத்தூர் மற்றும் குன்னூர் மையங்களுக்கான நுகர்பொருள் குறியீட்டு, எண்கள், சிம்லா தொழிலாளர் செயலக இயக்குநரிடமிருந்து பெறப் பட்டு புள்ளி இயல் ஆணையரால் வெளியிடப்படுகின்றன.

தமிழ்நாட்டில் பல்வேறு நிலையங்களுக்கான நுகர்பொருள் குறியீட்டெண்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

(அடிப்படை ஆண்டு 1960—100)

மாதம்.	சென்னை.	கடலூர்.	திருச்சிராப் பள்ளி.	மதுரை.	கோயம் புத்தூர்.	நாகர் கோவில்.	குன்னூர்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1982—							
ஏப்ரல்	447	469	448	470	471	558	457
மே	444	469	446	473	476	553	465
ஜூன்	452	468	454	480	485	568	472
ஜூலை	464	479	474	502	482	584	478
ஆகஸ்டு	467	485	493	508	490	593	480
செப்டம்பர்	469	483	493	519	494	588	485
அக்டோபர்	477	494	503	523	499	591	484
நவம்பர்	485	520	528	534	500	610	490
டிசம்பர்	482	521	527	537	506	616	487
1983—							
சனவரி	489	522	523	534	510	620	488
பிப்ரவரி	509	547	547	548	541	658	535

மழை :

1982–83 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இயல்பான மழையை (1950 ஆம் ஆண்டுடன் முடிந்த 50 ஆண்டுகளின் சராசரி மழை யை விட 30.3 சதவீதம் குறைவாக மழை பெய்தது. அனைத்து மாவட்டங்களிலும் குறைவான மழையே பெய்தது.

தென் மேற்குப் பருவம் (ஜூன் 1982 முதல் செப்டம்பர் 1982 வரை).

இப்பருவ மழை பொய்த்து விட்டதால் தமிழ்நாட்டின் மழை இயல்பான மழையை விட 29.1 சதவீதம் குறைவாக இருந்தது. சென்னை மாவட்டத்திற்கு மட்டும் இயல்பான மழையை விட அதிக மழை கிடைத்தது. பிற மாவட்டங்களில் குறைவான மழையே பெய்தது.

வடகிழக்குப் பருவம் (அக்டோபர் 1982 முதல் டிசம்பர் 1982 வரை).

இப்பருவ மழையும் தவறி விட்டதால் தமிழ்நாட்டில் மழை இயல்பான மழையைவிட 21.5 சதவீதம் குறைவான மழை பெய்தது, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம் திருநெல்வேலி, நீலகிரி முதலிய மாவட்டங்களில் சாதாரணமாகப் பெய்யும் மழை பெய்தது. எஞ்சியுள்ள மாவட் டங்களுக்கு இயல்பான மழையை விடக் குறைவான மழை கிடைத்தது.

பயிர் நிலைமையும் வேளாண்மை உற்பத்தியும் 1982-83.

மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பயிர்களின் நிலை மை திருப்திகரமாக இல்லை. இஃது மாநிலத்தின் மழையின் மையை நன்கு விளக்குகின்றது. இம்மாநிலத்தின் மிக முக்கியப் பயிரான நெற்பயிரின் பரப்பளவு சென்ற ஆண்டுடன் ஒப்பிடுங் கால் 6.92 லட்சம் ஹெக்டேர்கள் அதாவது 28.1 விழுக்காடும்: தானிய உற்பத்தி ஏறக்குறைய 23,0 லட்சம் மெட்ரிக் டன்களும் குறைந்திருக்கின்றன. இது சென்ற ஆண்டு உற்பத்தியை விட 41.1 விழுக்காடுகள் குறைவைக் குறிக்கின்றன.

அயல்நாட்டு வாணிபம் :

1981-82-ம் ஆண்டில் 499 கோடி மதிப்புள்ள பொருட்கள் பல்வேறு அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 1,557 கோடி மதிப்புள்ள பொருட்கள் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதியாயின.

தமிழ்நாட்டின் மாநில வருவாய் :

தமிழ்நாட்டிற்கு கணிக்கப்பட்ட 1981-82 ஆம் ஆண்டுக்கான துரித மதிப்பீடு மற்றும் முந்தைய ஆண்டுகளின் மாநில வருவாய் மற்றும் தனி நபர் வருவாயை நோக்கும்பொழுது தமிழ்நாட்டின் பொருளாதார நிலை சமீப காலத்தில் வளர்ச்சியடைந்துள்ளது என கூறலாம். 1981-82 ஆம் ஆண்டுக்கான துரித மாநில வருவாய் மதிப்பீடு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் கணிக்கப்பட்ட மாநில வருவாய் விவரங்களில் செய்யப்பட்ட மாறுதல்களை வரையறுக்கப்பட்ட நிலையாக இரண்டு அட்டவணைகளில் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டு முக்கியமான இனங்களுக்கு. நடப்பு மற்றும் நிலையான விலைகளின் (1970-71-ம் ஆண்டு) விவரங்கள் வழங்கப்பட்டுள்ளது. 1981–82-ம் ஆண்டிற்கு தமிழ்நாட்டின் மொத்த நிகர வருமானத்தை நடப்பு விலைகளில் ரூ. 6,692 கோடியாக கணிக்கப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் இந்த வருமானம் ரூ. 5,754 கோடியாகும்.

தமிழ்நாட்டின் மொத்த நிகர வருவாய் நிலையான விலைகளில் 1981-82 ஆம் ஆண்டுக்கு ரூ. 3,252 கோடி எனவும் 1980-81 ஆம் ஆண்டுக்கு ரூ. 2,957 கோடி எனவும் கணிக்கப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டின் மொத்த நிகர வருவாய் சென்ற ஆண்டைக் காட்டிலும் 10 சதவீதம் கூடுதலாக அதாவது ரூ, 295 கோடி அதிகமாக உள்ளது.

அத்தியாயம் - 15.

சட்டத் துறை.

அத்தியாயம் 15.

சட்டத் துறை.

சட்டம் இயற்றுதல் :

1982 ஏப்ரல் 1ஆம் நாள் முதல் 1983 மார்ச்சு 31ஆம் நாள் வரையிலுமான கால அளவின்போது, 48 சட்டங்கள் வெளியிடப் பட்டன. அவற்றில் 8 சட்டங்கள் நிலைமுறைச் சட்டங்கள்; எஞ்சியவை, திருத்தச் சட்டங்களாகும். மேற்சொன்ன கால அளவின்போது 17 அவசரச் சட்டங்களும் சாற்றப்பட்டன.

1- 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1982).

1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1954) 2ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, தமிழ்நாடு மாநில எதிர்பாராச் செலவு நிதியானது 30 கோடி ரூபாய் அடங்கியதாகும். வரவு-செலவு நடவடிக்கைகளின் அளவு பெருகியிருப்பதாலும், தேவை எழுகின்ற போதெல்லாம் செய்யப்பட வேண்டியுள்ள வளர்ச்சியினச் செலவுக்கான தேவை பெருகியிருப்பதாலும், முப்பது கோடி ரூபாய் என்னுந்தொகையை ஐம்பது கோடி ரூபாய்க்கு உயர்த்துவது தேவையென்று கருதப்பட்டது.

2. இந்தச் சட்டம் மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைந்தது.

2- 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1982).

தமிழ்நாடு விற்பனை வரிக் குழு (கெய்வார் குழு), வணிகர்களைப் பதிவு செய்தல், காலங்கடந்த வரி செலுத்துகையின் பேரில் தண்டத் தொகை விதித்தல், பிணையம் கோருதல், தாமே முற்பட்டுத் திருத்தியமைத்தல் ஆகியவை குறித்துச் சில பரிந்துரைகளைச் செய்திருந்தது. அரசு மேற்சொன்ன பரிந்துரைகளை ஆராய்ந்து, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 1/1959) திருத்துவதென்று முடிவு செய்தது.

2. நீதிமன்றத் தீர்ப்புகளால் பின்னர் மாற்றப்பட்டுவிட்ட முந்திய தெளிவு விளக்கங்கள், பொருள் விளக்கங்களின் அடிப் படையில் வணிகர்கள் வரியை வசூலித்திராத அல்லது ஒரு குறைந்த விகிதத்தில் வரியை வசூலித்திருந்த சந்தர்ப்பங்களில், வரியை அல்லது வரியில் உள்ள வித்தியாசத்தை நிர்வாக ஆணை கள் மூலமாக அரசு கைவிட்டு வந்திருக்கிறது. சட்டத்தின் படி செலுத்தப்படவேண்டிய வரி, அல்லது தண்டத் தொகை அல்லது கட்டணத்தை ஓர் அறிவிக்கை மூலமாகக் கைவிட்டுவிட அரசுக்கு அதிகாரம் அளிப்பதற்காக, சட்டத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துவதென்று அரசு முடிவு செய்தது.

3. முதன்முறையாக வணிகம் தொடங்கக் கருதியுள்ள ஒரு வணிகரை, சட்டத்தின்படியுள்ள வரி நலன்களை அவர் பயன் படுத்திக்கொள்ள ஏதுவாக்கும் பொருட்டு அவரைப் பதிவு செய்து கொள்வதற்கு வகை செய்யவும், ஒரு வணிகருக்குச் சொந்த மாயிருந்த வணிகத்தை மரபுரிமையாக அடைகின்ற, உரிய வய தடையாதவரின் (minor) நலன்களை, அவரது காப்பாள ரின் பெயரில் பதிவுச் சான்றிதழை வழங்குவதன் மூலம் காக்க வும் வேண்டி, சட்டத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

4. சட்டத்தின்படி செலுத்தப்பட வேண்டிய வரியை முறை யாக வசூலிப்பதற்காகப் பிணையம் அல்லது கூடுதல் பிணையத் தை அளிப்பதற்கு வகை செய்து, சட்டத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. பிணையமானது வரிக் கட்டுப்பாட்டின் (Tax liability) அடிப்படையில் இருத்தல் வேண்டும்; மற்றும் அது மதிப்பிடப்பட்ட வரிக் கட்டுப்பாட்டில் ஐம்பது விழுக்காட்டிற்கு மேற்போதல் ஆகாது.

5. சட்டத்தின் 24 ஆம் பிரிவு விதிக்கப்பட்ட வரிக்கு மட்டு மல்லாமல், சட்டத்தின்படி செலுத்தப்பட வேண்டிய வரிக் கும் அது பொருந்தும் என்று வகை செய்ய, அப்பிரிவைத் திருத் துவதென்று அரசு முடிவு செய்தது. காலங்கடந்து வரி செலுத்து கைக்காக தண்டத்தொகை வீதத்தை 2 விழுக்காட்டிலிருந்து 1½ விழுக்காடாகக் குறைப்பதற்கும் வசூலிக்கப்பட்ட மிகை வரியைக் காலங்கடந்த திருப்பிச் செலுத்துகைக்கு வட்டி செலுத் துவதற்குமாக 24 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவைத் திருத்து

வதென்றும் அரசு மேலும் முடிவு செய்தது, இப்பிரிவு முழுவதிலும் பயன்படுத்தப்படும் பெயர் ஒரே சீராக இருப்பதற்காக வேண்டி, ''தண்டத்தொகை'' என்னும் சொல்லுக்குப் பதிலாக ''வட்டி'' என மாற்றுவதென்று முடிவு செய்யப்பட்டது. இதன் விளைவாக 25 ஆம் பிரிவையும் திருத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

6. தாமே முற்பட்டு திருத்தியமைப்பதை (Suo Motu revision) உரிய அதிகார அமைப்பினால் அல்லது மேல்முறையீட்டு அதிகார அமைப்பால் பதிவு செய்யப்பட்ட நடவடிக்கை ஆணையானது வருவாய் நலன்களுக்கு பாதகமாக இருக்கின்ற சந்தர்ப்பங்களில் மட்டுமே செய்தல் வேண்டும் என்றும் வணிக வரி ஆணையர் தாமே முற்பட்டு திருத்தியமைக்கும் அதிகாரத்தைச் செலுத்துவதானது துறைக்குப் பாதகமாகவுள்ள உயர்நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தின் முன் ஒரு மேல் முறையீடு நிலுவையிலிருப்பதன் விளைவாக காலாவதி ஆகாது என்றும் திட்டவட்டமாக வகை செய்வதற்காகச் சட்டத்தின் 34 ஆம் பிரிவு திருத்தப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்திருந்தது. அரசு, குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதென்றும் சட்டத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துவதென்றும் துணை ஆணையர் தாமே முற்பட்டு திருத்தியமைக்கும் அதிகாரத்தைச் செலுத்துவது தொடர்பாகச் சட்டத்தின் 32 ஆம் பிரிவுக்கும் அதுபோன்ற திருத்தங்களைச் செய்வதென்றும் அரசு முடிவு செய்தது.

7. வருவாய் நலன்களுக்குப் பாதகமாக இருக்கின்ற ஓர் ஆணைக்கு எதிராகத் தீர்ப்பாயத்தின் முன் (வரி) உயர்த்து மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு வரிவிதிப்பு அதிகாரி ஒரு வருக்கோ அல்லது அவரது சார்பாளருக்கோ ஏதுவாகும் வகையில் திட்டவட்டமான ஒரு வகைமுறையைச் செய்வது தேவை என்று காணப்பட்டது. அந்த நோக்கத்திற்காக சட்டத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துவதென்று அரசு முடிவு செய்தது.

8. இச்சட்டம் மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைந்தது.

3. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 23/1982):

மாநிலத்தின் வருவாயைப் பெருக்குவதற்காக வேண்டி 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) படி செலுத்தப்படவேண்டிய பலமுனை வரியை தற்போதுள்ள நான்கு விழுக்காட்டிலிருந்து ஐந்து விழுக்காடு என்று உயர்த்துவதற்காக மேற்சொன்ன சட்டத்தைத் திருத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. இதனோடுகூட பின்வருவனவற்றிற்காக 1982 மார்ச்சு 1 ஆம் நாள் முதற்கொண்டு மேற்சொன்ன சட்டத்தின் இணைப்புப் பட்டியல்களைத் திருத்தி மேற்சொன்ன சட்டத்தின் 59 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவிக்கைகளை அரசு பிறப்பித்தது:

(i) சமூகத்தின் செல்வம் மிக்க பிரிவினர்களால் முக்கியமாகப் பயன்படுத்தப்படும் கைத்தறிப் பட்டுத் துணிகளின் மீது 5 விழுக்காடு ஒருமுனை விற்பனை வரியை விதிக்கவும்;

(ii) மின் பொருள்கள், மின்கருவிகள், சாதனங்கள் துணைக் கருவிகள் ஆகியவற்றின் மீதான வரி வீதத்தை 9 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காட்டிற்கு உயர்த்தவும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட அயல் நாட்டு மது மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது ஆகியவற்றின் மீதான வரி வீதத்தை 25 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காட்டிற்கு உயர்த்தவும்:

(iv) எந்த வணிகச் சின்னத்தின் பெயரில் விற்பனை செய்யப்படுவதாயினும், பிஸ்கோத்துக்கள், சாக்லெட்டுகள், இனிப்புப் பண்ட வகைகள் (டாஃப்பீஸ்), தின்பண்டங்கள் முதலியவற்றின் மீதான வரி வீதத்தை 8 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காட்டிற்கு உயர்த்தவும்;

(v) விசையினால் இயக்கப்படும் யந்திரத் தொகுதியின் மீதான வரி வீதத்தை 6 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காட்டிற்கு உயர்த்தவும்;

(vi) சிமிட்டி மீதான வரி வீதத்தை 10 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காட்டிற்கு உயர்த்தவும்;

(vii) விசைத்தறிகளில் பயன்படுத்தப்படுவதற்காகக் கூம்பு உருவத்தில் விற்கப்படும் பருத்தி நூல் மற்றும் கலவைப் பருத்தி நூல் ஆகியவற்றின் மீதான வரி வீதத்தை 3 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காட்டிற்கு உயர்த்தவும்.

2. நெசவாளர்களிடமிருந்தும் வர்த்தகர்களிடமிருந்தும் வந்த முறையீடுகளை முன்னிட்டு கைத்தறிப்பட்டுத் | துணிகள் மீதான 5 விழுக்காடு ஒரு முனை வரிவிதிப்பை நீக்கிவிடுவதென அரசு முடிவு செய்தது. அதன்படியே மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவங்கொடுக்க முதலாவது இணைப்புப் பட்டியலில் 162 ஆம் இனத்தையும் மூன்றாவது இணைப்புப் பட்டியலில் 7 ஆம் இனத்தையும் திருத்தி மேற்சொன்ன சட்டத்தின் 59 ஆம் பிரிவுவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவிக்கைகள் பிறப்பிக்கப்பட்டன.

3. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தை நிர்வகித்ததில் ஈட்டிய பட்டறிவை முன்னிட்டு, மேற்சொன்ன சட்டத்தின் முதலாவது இணைப்புப் பட்டியலில் உள்ள சில பதிவுகளைத் திருத்துவதென்று முடிவு செய்யப் பட்டது. அதன்படியே பின்வருவனவற்றிற்காக மேற்சொன்ன சட்டத்தின் 59 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பல்வேறு தேதிகளில் அரசு அறிவிக்கைகளைப் பிறப்பித்தது.

(1) 1981 செப்டம்பர் 30 ஆம் நாள் முதற்கொண்டு முதலாவது இணைப்புப் பட்டியலில் 104 ஆம் பதிவின்கீழ் வாயு அளவுக் கருவிகளையும் தொழில் துறை வெப்ப அளவுக் கருவிகளையும் அத்தகைய அளவுக் கருவிகளின் பகுதிகளையும் துணைக் கருவிகளையும் சேர்த்துக் கொள்ளவும்;

(2) 1981 நவம்பர் 11ஆம் நாள் முதற்கொண்டு முதலாவது இணைப்புப் பட்டியலின் 74 ஆம் இனத்தின் கீழ் மூலரப்பரின் எல்லா வகைகளையம் தரங்களையும்; கொண்டு வரவும்;

(3) 1981 டிசம்பர் 30 ஆம் நாள் முதற்கொண்டு முதலாவது இணைப்புப் பட்டியலில் 8 ஆம் பதிவின் கீழ் நுண்ணோக்காடிகளையும் (Microscope) இரட்டைத் தொலை நுண்ணோக்காடிகளையும் (Binocular Microscope) கொண்டுவரவும்;

(4) 1981 டிசம்பர் 30 ஆம் நாள் முதற்கொண்டு முதலாவது இணைப்புப் பட்டியலின் 109 ஆம் பதிவின்கீழ் வருகின்ற துருவுறா எஃகுப் பொருள்களுக்குப் பொருந்துகின்ற வரி வீதம் குறித்த தெளிவுற்ற நிலையை அகற்றவும்;

(5) 1982 சனவரி 27 ஆம் நாள் முதற்கொண்டு முதலாவது இணைப்புப் பட்டியலில் 76 ஆம் பதிவின் கீழ் 'ஏலக்காய்' வரிவிதிப்பு முனைகளை மாநிலத்தில் முதல்முறையாக வாங்குவதென்கிற முனையில் இருந்து, மாநிலத்தில் முதன்முறையாக விற்பனை செய்தல் என்கிற முனைக்கு மாற்றவும்.

4. மேற்சொன்ன சட்டத்தின் 59 ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் மேற்சொன்ன அறிவிக்கைகளுக்குப் பதிலாக அமையும் சட்ட முன்வடிவொன்று சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது. மேற்சொன்ன சட்ட முன்வடிவு தமிழ்நாடு சட்டம் 23/1982 ஆக வெளியிடப்பட்டது.

5. இந்தச் சட்டம், மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைந்தது.

4. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1982).

சட்டப்பேரவையின் அவை முன்னவர், 1982 மார்ச்சு 29 ஆம் நாள் பின்வரும்படிக்கு அறிவிப்பொன்றை வெளியிட்டார். அதாவது, 1982 ஏப்ரல் 1 ஆம் நாள் முதற்கொண்டு;

(அ) அமைச்சர்கள், சட்டப்பேரவைத் தலைவர், சட்ட மேலவைத் தலைவர் ஆகியோரின் சம்பளம் மாதமொன்றுக்கு ரூ. 1,000 லிருந்து ரூ. 1,500-க்கு உயர்த்தப்படும்;

(ஆ) சட்டப் பேரவைத் துணைத் தலைவர், சட்ட மேலவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் சம்பளம் மாதமொன்றுக்கு ரூ. 750-லிருந்து ரூ. 1,200-க்கு உயர்த்தப்படும்;

(இ) சட்டப் பேரவையின் உறுப்பினர்கள், சட்ட மேலவையின் உறுப்பினர்கள் ஆகியோரின் சம்பளம் மாதமொன்றுக்கு ரூ. 250-லிருந்து ரூ. 300-க்கு உயர்த்தப்படும்.

(ஈ) இலவச இருப்பூர்தி (ரயில்) பயணச் சைச்சிட்டு களின் மதிப்பு, ஆண்டொன்றுக்கு ரூ. 2,500-லிருந்து ரூ. 3,000-க்கு உயர்த்தப்படும்; மற்றும் தொலை பேசிப் படித்தொகை மாதமொன்றுக்கு ரூ. 350-க்கு உயர்த்தப்படும். அதாவது உறுப்பி னர்கள் தங்கள் இருப்பிடங்களில் தொலை பேசிக் கருவிகளைப் பெற்றிருந்தாலும் இல்லையென்றாலும்;

(உ) பேருந்து மூலமாகப் பயணம் செய்ய, ஓர் இலவச மாற்றிக் கொடுக்க முடியாத அனுமதிச் சீட்டைப் பெறத் தகுதியுடைய ஒவ்வொரு உறுப்பினரும் தமது வாழ்க்கைத் துணை யோடு அல்லது வேறெந்தத் துணையோடும் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்.

எந்தக் கால அளவின்போது அரசியல் உதவித்தொகை (Political Pension) உள்ளிட்ட உதவித்தொகை (ஓய்வூதியம்) எதையேனும் ஒருவர், மாநில அரசு எதனிடமிருந்தோ அல்லது மைய அரசினிடமிருந்தோ பெற்றுவந்தாரோ அந்தக் கால அளவுக்கு அத்தகையவர், 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளம் வழங்கல் சட்டத்தின் 12-B பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவர் பெறுவதற்குத் தகுதியுடையவராகவுள்ள உதவித்தொகையைப் (ஓய்வூதியத்தைப்) பெறுவதற்கும், 1982 மார்ச்சு 9 ஆம் நாள் முதற்கொண்டு அனுமதிக்கப்படுவார் என்றும் அவை முன்னவர் அறிவித்தார்.

2. மேற்சொன்ன சட்டத்தின் 6-B பிரிவின் (2) ஆம் உட் பிரிவு, சட்டப்பேரவையிலுள்ள அரசு தலைமைக் கொறடா அல்லது சட்ட மேலவையிலுள்ள அரசு கொறடாவுக்கு 6-A பிரிவின் கீழ் வீட்டு வாடகை செலுத்தப்பட்டால் அவர் சென்னைமாநகரில் குடியிருக்கின்ற வீட்டிற்கு மாநில அரசின் செலவில் அறை கலன்கள் அளிக்கப்பட்டுப் பேணப்பட்டு வருவதோடு விதி களால் வகுத்தமைக்கப்படக் கூடிய வசதிகளும், அவ்வீட்டிற்கு வழங்கப்படுதல் வேண்டும் என்று மற்றவற்றிற்கிடையே வகை செய்கின்றது. அவர்கள், வாடகையில்லாமல் மாநில அரசால் அளிக்கப்பட்ட வீடொன்றில் குடியிருக்குங்கால், மேற்சொன்ன சட்டத்தின் 6-B பிரிவின் (1) ஆம் உட் பிரிவில் அதற்கு நேரிணையான வகைமுறை எதுவும் இல்லை.

3. எனவே, 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளம் வழங்கல் சட்டத்தின் 3, 4, 5, 6A, 6 B, 12, 12A, 12B ஆகிய பிரிவுகளைத் தக்கவாறு திருத்தக் கருதப்பட்டது.

4. இந்தச் சட்டம் மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைந்தது.

5. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1982).

1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் X/1939) பின்வருவனவற்றிற்காகத் திருத்துவதென்று முடிவு செய்யப்பட்டது :—

(i) இலவசச் சீட்டுகளின் மீது (Complimentary Tickets) கூடுதல் மேல்வரி உட்பட கேளிக்கை வரியை விதிக்க வகை செய்வதற்கும், அதனோடு தொடர்புடையவற்றிற்காக அதன் விளைவாகத் தேவைப்படும் மற்ற திருத்தத்திற்கு வகை செய் வதற்கும்;

(ii) அரங்குகளில் ஒரு வாரத்தின்போது காட்சி எதுவும் காட்டப்படாத நேர்வில், சட்டத்தின் 5 B பிரிவின் கீழ் செலுத்தப்படத்தக்க வரியைத் தள்ளிவிடுவதற்கு வகை செய்வதற்கும், மொத்த வசூல் இடவசதி குறித்து (Gross Collection Capacity) குறிப்பிடப்பெற்ற வரையறைகளை (நிபந்தனைகளை) மீறுகின்ற நேர்வில், அத்தகைய மீறுகை நிதியாண்டில் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட முறை நிகழுமாயின், மேற்சொன்ன பிரிவின் கீழ் கூட்டுவரி செலுத்து வதற்குள்ள விருப்பத் தேர்வை (Option) மறுப்பதற்கும்;

(iii) கேளிக்கையின் தொடர்பாகக் கடமை எதையேனும் புரிய வேண்டியிருக்கின்ற எவரையும், சீட்டு இல்லாமல் கேளிக்கை எதிலும் அனுமதிப்பதற்கு வகை செய்வதற்கும், அதனோடு தொடர்புடையவற்றிற்காக, அதன் விளைவாகத் தேவைப்படும் திருத்தங்களுக்கு வகை செய்வதற்கும்;

(iv) வரியைத் தந்திரமாகத் தவிர்த்தலுக்கு (ஏய்தலுக்கு) தண்டத்தொகையாக வசூலிக்கப்படவேண்டிய ஆறுமாதக் (குறைந்த அளவு) தொகையை குறிப்பிடுவதற்காக வேண்டி, சட்டத்தின் 7-B பிரிவைத் திருத்த;

(v) சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும் வரி தொடர்பாக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு அளித்துள்ள நிலமாற்றத்தைத் தன் எல்லைக்குள் கொண்டுவருவதற்காக வேண்டி வரியை முழுமையாக்குவது (Rounding off) முதலியவை பற்றிய சட்டத்தின் 10-E பிரிவினைத் திருத்த;

(vi) காலங்கடந்த வரி செலுத்துகைக்குத் தண்டத்தொகை விதிப்பதற்காகச் சட்டத்தில் ஒரு புதிய வகைமுறையைச் சேர்க்க;

(vii) கேளிக்கை இடம் ஏதொன்றில் பொறுப்பைப் பெற்றுள்ள மேலாளர் அல்லது ஆளர், குறிப்பிடப்பெற்ற அதிகார அமைப்பின் முன் முன்னிலையாவதற்கு அதிகாரமளிப்பதற்காக வகை செய்ய வேண்டிச் சட்டத்தில், ஒரு புதிய வகைமுறையைச் சேர்க்க;

(viii) சட்டத்தின் 5-A, 5-B ஆகிய பிரிவுகளின்கீழ் வகை செய்யப்பட்டுள்ள கூட்டுவரித் திட்டங்களின் எல்லைக்கும் வருகின்ற மிகையான இடவசதியை (Excess Accommodation) ஒரு குற்றமாக ஆக்குவதற்காக சட்டத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்த;

(ix) சட்டத்தின் இணைப்புப் பட்டியலின் திருத்தங்கள் தொடர்பாக சட்டத்தின் 16-A பிரிவின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட சில அறிவிக்கைகளை மாற்றியமைப்பதற்காக.

2. இச்சட்டம் மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைந்தது.

6. 1982-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்தமும் தனிவகை முறைகளும்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 26/1982).

1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 3 ஆம் பிரிவின்கீழ் நிறுவப்பட்ட பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் பெயரை, பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றைப் போன்று, எளிமையாக்குவதற்காக அண்ணா பல்கலைக் கழகம் என மாற்றுவதென்று அரசு முடிவு செய்தது. அதன்படியே 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச்

சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 30/1978) தக்கவாறு திருத்துவ தென்று முடிவு செய்யப்பட்டது.

இந்தச் சட்டம் மேற்சொன்ன முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைந்தது.

7. 1982-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (உள்ளூர் மேல்வரி மேல் கட்டணம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1982).

1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி (இரண்டாவது திருத்தமும் செல்லத்தக்கதாக்குதலும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1971) 3 ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு முன்பிருந்தவாறு 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XXXV /1958) 116 ஆம் பிரிவின் கீழ்; ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய மன்றமும் அரசினால் குறிப்பிடக்கூடிய உள்ளூர் மேல்வரி மேல்கட்டணத்தின் பெருமத்திற்கு (அதிக அளவுக்கு) (Maximum) உட்பட்டு, நிலம் எதன் மீதும் உள்ளூர் மேல்வரியுடன் கூட ஓர் உள்ளூர் மேல்வரி மேல் கட்டணத்தை விதிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. சென்னை உயர் நீதிமன்றம், 853/1969 என்ற எண்ணிட்ட நீதிப் பேராணை மனுவின் மீது தீர்ப்பளிக்கையில், சட்டத்தின் 116ஆவது பிரிவின் கீழ் உள்ளூர் மேல்வரி மேல் கட்டணத்தின் மீது ஓர் அதிக அளவு (Maximum) விதிப்பு வீதத்தைக் குறிப்பிடுகின்ற விதி எதுவும் இல்லாத நிலையில், உள்ளூர் மேல்வரி மேல் கட்டணத்தை விதிப்பதற்கு ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அதிகார வரம்பு கிடையாது என்று உரைத்தது. மேற்சொன்ன தீர்ப்பை முன்னிட்டு, அத்தகைய நிலம் தொடர்பாகச் செலுத்தப் படவேண்டிய, அதிக அளவு (Maximum) உள்ளூர் மேல்வரி மேல்கட்டணமானது நில வருவாயின் ஒவ்வொரு ரூபாயின் மீதும் ஒரு ரூபாய் ஐம்பது காசுகளும் என்று குறிப்பிட்டு, சட்டத்தின் 116 ஆவது பிரிவு தமிழ்நாடு சட்டம 12/1971 இன் 3 ஆவது பிரிவினால், தேவையான செல்லத்தக்கதாகும் வகைமுறையுடன் சேர்த்துத் திருத்தப்பட்டது; மேற்சொன்ன திருத்தம், 1971 ஆகஸ்டு 21 ஆம் நாள் முதற்கொண்டு செயலுக்கு கொண்டுவரப் பட்டது.

2. 280/1974 என்ற எண்ணிட்ட அடுத்த நீதிப் பேராணை மனு ஒன்றை முடிவு செய்கையில் மேற்சொன்ன திருத்தத் தேதிக்கு முன்பு, அதாவது 1971 ஆகஸ்டு 21 ஆம் நாளுக்கு முன்பு, உள்ளூர் மேல்வரி மேல்கட்டணத்தை முன்மேவு செயல் திறத்துடன் (with retrospective effect) விதிக்க இயல்வதற்குத் தமிழ்நாடு சட்டம் 12/1971 இன் 6 ஆம் பிரிவின் வகைமுறைகள் போதுமானவையன்று என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்தக் குறைபாட்டை, தமிழ்நாடு சட்டம் 12/1971 இன் 3 ஆம் பிரிவுக்கு முன்மேவு செல்திறம் (Retrospective effect) அளிப்பதன் மூலமாகவோ, அல்லது உள்ளூர் மேல்வரி மேல்கட்டண விதிப்புகள் விதிக்கப்பட்ட போது அந்தத் தேதியன்று 3 ஆம் பிரிவு செயலில் இருந்திருப்பதாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதாக மேற்சொன்ன சட்டத்தின் 6 ஆம் பிரிவிலேயே ஒரு புனைவை (Fiction)ப் பயன்படுத்துவதன் மூலமாகவோ, சரிப்படுத்தலாம் என்றும் உயர் நீதிமன்றம் மேலும் கருத்துரைத்தது. எனவே, 1971 ஆகஸ்டு 21 ஆம் நாளுக்கு முன்பு உள்ளூர் மேல்வரி, மேல்கட்டண விதிப்பையும் வசூலிப்பையும் செல்லத்தக்கதாகச் செய்யவேண்டி, 1960 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் நாள் முதற் கொண்டு தமிழ்நாடு சட்டம் 12/1971-ன் 3 ஆம் பிரிவுக்கு முன்மேவு செல்திறம் அளிக்கச் சட்டமியற்றுவதை மேற்கொள்வதென்று முடிவு செய்யப்பட்டது.

3. இந்தச் சட்டம் மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைந்தது.

8. 1982-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை நோய்ப் பூச்சிகள் மற்றும் நோய்கள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/1982).

1919 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை நோய்ப் பூச்சிகள் மற்றும் நோய்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 111/1919) பூச்சி, புழுக்கள், தாவர நோய்கள் தீங்கு விளைவிக்கும் களைச் செடிகள் ஆகியவை பரவுவதைத் தடுப்பதற்கு வகை செய்கின்றது. வகைமுறை அப்போது இருந்தபடி, அறிவிக்கை செய்யப்பட்ட ஒரு பகுதிக்குள், குறிப்பிடப்பட்ட காலத்திற்குள்ளாக, குறிப்பிட்ட தீர்வு (remedial) அல்லது தடுப்பு நடவடிக்கைகளை உடைமையாளர்(Occupier) செய்யவில்லையெனில், அரசே, சட்டத்தின் கீழ்க்

குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றியதற்குப் பிறகு அத்தகைய நடவடிக்கைகளை எடுத்து, ஏற்பட்ட செலவை உடைமையாளரிடமிருந்து, அதை ஒரு நில வருவாய் நிலுவையைப் போன்றதாக வசூலிக்கலாம். சட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முறைமைகளைக் கடைப்பிடித்ததற்குப் பிறகு உள்ளபடியே பூச்சி கட்டுப்பாடு நடவடிக்கைகளை அரசு எடுப்பதற்குள்ள நோய்ப்பூச்சி பரவி பயிர்களை அழித்துவிடும். உடனடியான தடுப்பு அல்லது தீர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ள அவசர நேர்வுகளில், அறிவிக்கை செய்யப்பட்ட பகுதியில் அத்தகைய நடவடிக்கைகள் நிறைவேற்றப்படச் செய்விப்பதற்கும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான செலவை, அதை ஒரு நில வருவாய் நிலுவையைப் போன்றதாக உடைமையாளரிடமிருந்து வசூலிப்பதற்கும் அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டியது தேவையென்று கருதப்பட்டது.

2. பூச்சி, புழுக்கள் அல்லது தாவர நோய்க்கு எதிராக குறிப்பிடப்பட்ட தீர்வு அல்லது தடுப்பு நடவடிக்கை எதையும் நிறைவேற்றுவதில், அழிக்கப்பட்ட மரங்கள் அல்லது செடிகள் பற்றிய மதிப்பீடொன்றை உடைமையாளரிடமிருந்து பெறுவதற்குப் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைக்கும் அத்தகை நேர்வுகளில் செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டை முடிவு செய்வதற்குமாக சட்டத்தின் 9 ஆம் பிரிவு வகை செய்கின்றது, ஒரு பயிர் நோயோ அல்லது பூச்சிப் புழுவோ, சிக்கனமான தாவரத் தடுப்பு நடவடிக்கைகள் கிடைக்காத, முக்கியமான பயிர்கள் விளையும் ஏராளமான பகுதிகளைப் பாதிக்கிற போது, அந்நோய் அல்லது நோய்ப்பூச்சி மற்ற பகுதிகளுக்குப் பரவுவதைத் தடுப்பதற்காக வேண்டி, பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தொற்றெல்லை ஒதுக்குப் பகுதியாக்குவதோ (cordon off) அல்லது தேவையாயின் பயிர்களை அழிப்பதோ விரும்பத்தக்கது என்று கருதப்பட்டது. 9 ஆம் பிரிவு மரங்கள், செடிகள் ஆகியவற்றின் அழிவுக்கு இழப்பீடு செலுத்துவதற்கு வகை செய்கின்றதே தவிர, பயிர்களின் அழிவுக்கு அன்று. எனவே, பயிர்களைப் பொறுத்த அளவிலுங்கூட இழப்பீடு செலுத்துவதற்கு வகை செய்வதற்காகச் சட்டத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்தக் கருதப்பட்டது.

3. சட்டத்தின் 2 ஆம் பிரிவில் '' உடைமையாளர் '' என்கிற சொல்லுக்கான பொருள்வரையறை, ஒரு நிறுமத்தைக் (company

குறிப்பிடுகிறது. சட்டத்தில் '' நிறுமம் '' என்ற சொல்லுக்குப் பொருள் வரையறை செய்வது தேவையென்று கருதப்பட்டது.

4. சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (f) கூறு, எந்த அதிகாரிக்கு மேல் முறையீடுகளைப் பொறுத்த அளவில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறையையும் வகுப்பதற்கு அரசுக்கு அதிகார மளிப்பதற்கு வகை செய்கின்றது. சட்டத்தின்கீழ் மேல்முறையீடு களுக்குக் கட்டணமொன்றை விதிப்பதற்கு அதிகாரத்தை மேற் கொள்ளக் கருதப்பட்டது.

5. மற்ற சட்டங்களின் அதே போன்றுள்ள வகைமுறைக்கு ஒத்திருக்கின்ற வகையில், நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள் தொடர்பான வகைமுறை ஒன்றும் இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டது.

6. விதிகளை வெளியிடுவதற்கும், விதிகள் அல்லது சட்டத்தின் கீழ்ச் செய்யப்படும் அல்லது பிறப்பிக்கப்படும் அறிவிக்கைகளின் தொடக்கத்திற்கும் சட்டமன்றத்தில் அந்த விதிகள் அல்லது அறிவிக்கைகளை வைப்பதற்கும் மேற்சொன்னவற்றின் விளை வாகச் சட்டத்தில் தேவைப்படும் சில முறையான மாற்றங்களை நிறைவேற்றுவதற்குமாக வகைமுறை ஒன்றைச் செய்வதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

7. இந்தச் சட்டம் மேற்படி நோக்கத்தை எய்த விழைந்தது.

9. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (அழித்தலையும் இழப்பையும் தடுத்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1982).

வேலை நிறுத்தங்கள் மற்றும் பிற கிளர்ச்சிகளின்போது பொது ஊர்திகளையும் மற்ற பொதுச் சொத்துக்களையும் எரித் தல் அல்லது மற்றப்படி சேதப்படுத்துதல் மற்றும் பயணம் செல்கின்ற பொதுமக்கள் முதலியோரின் மீது கற்களை வீசுதல் போன்ற அழிவுச் செயல்களை வீணர்கள் செய்வது கவனிக்கப் பட்டது. அத்தகைய அழிவுச் செயல்களைத் திறம்படத் தடுப் பதற்காக வேண்டி, சட்டத்தைக் கடுமை வாய்ந்ததாகச் செய்ய வேண்டியது தேவை என்று கருதப்பட்டது.

2. இந்தச் சட்டம் மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைந்தது.

10. 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகர் உரிமை வழக்கு நீதி மன்றம் மற்றும் மாகாணச் சிறு வழக்கு நீதி மன்றங்கள் (திருத்தம்) நீத்தறவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1982).

1916 ஆம் ஆண்டு சென்னை மாநகர் உரிமை வழக்கு நீதி மன்றம் மற்றும் மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1916) சென்னை சிறு வழக்குகள் நீதி மன்றத்தால் விசாரிக்கப்படத்தக்க சில உரிமை வழக்குகளைச் சென்னை மாநகர் உரிமை வழக்கு நீதி மன்றத்தில் தொடுப்பத்ற்கு வகை செய்வதோடு, 1882 ஆம் ஆண்டு மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் (மையச் சட்டம் XV/1882) 39 ஆம் பிரிவின் கீழ் சென்னை உயர்நீதி மன்றத்தால் சென்னை சிறு வழக்கு நீதிமன்றத்திலிருந்து எடுத்து விடப்பட்ட அத்தகைய தன்மை வாய்ந்த உரிமை வழக்குகளை சென்னை மாநகர் உரிமை வழக்கு நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்குச் சென்னை உயர்நீதி மன்றத்திற்கு இயலுமாறும் செல்கின்றது. வழக்குகளின் நிலுவைப் பளுவிலிருந்து சென்னை மாநகர் உரிமை வழக்கு நீதிமன்றத்திற்கு விடுதலை அளிக்க வேண்டி, சென்னை மாநகர் உரிமை வழக்கு நீதிமன்றம் இனிமேலும் சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றத்தால் விசாரிக்கப்படத்தக்க உரிமை வழக்குகளைப் பொறுத்த அளவில் அதிகார வரம்பு எதையும் செலுத்திடத் தேவையில்லை என்று கருதப்பட்டது. அதன்படியே மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் V/1916-ஐ நீத்தறவு செய்வது என்று முடிவு செய்யப்பட்டது.

2. இந்தச் சட்டம் மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவம் கொடுக்க விழைந்தது,

11. 1982 ஆம் ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1982)-

உரிய முத்திரை வில்லையைக் கொண்டிராத முறையாவணங்களைப்பற்றி, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரை வரிச் சட்டத்தின் (மையச் சட்டம் II/1899) IVஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டத்தின் 48 ஆம் பிரிவு அந்தச் சட்டத்தின் கீழ்ச் செலுத்தப்பட வேண்டிய தீர்வைகளை நில வருவாய் நிலுவையாக வசூலிப்பதற்கு வகை செய்கின்றது.

மேற்சொன்ன சட்டத்தின் கீழ், அந்தச் சட்டத்தின்படி ஆட்சித்தலைவரோ அல்லது ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டவரோ ஓர் ஆவணம் உரியவாறு முத்திரை வில்லை கொண்டிருக்கவில்லை என்பதாக அறிய வந்தால், முத்திரைத் தீர்வையில் ஏற்பட்டுள்ள பற்றாக் குறையை வசூலிப்பதற்காக அவரால் நடவடிக்கைகள் தொடங்கப்படும். ஆனால் அது போன்ற வகைமுறை எதுவும், அத்தகைய நேர்வுகளில் பதிவுக் கட்டணத்தில் உள்ள பற்றாக் குறையை வசூலிப்பதற்கு, 1908 ஆம் ஆண்டு பதிவு செய்தல் சட்டத்தில் (மையச் சட்டம் XVI/1908) இல்லை. எனவே, ஆவணம் எதையேனும் பொருத்த அளவில் கட்டணம் செலுத்தப்பட்டிராதபோதோ அல்லது போதாத அளவுக்குச் செலுத்தப்பட்டு இருக்கின்றபோதோ, செலுத்தப்படாத அல்லது பற்றாக் குறையான பதிவுக் கட்டணத்தை வசூலிப்பதற்கு வகை செய்வதற்காக, 1908 ஆம் ஆண்டு பதிவு செய்தல் சட்டத்தைத் தக்கவாறு திருத்தக் கருதப்பட்டது.

2. எவரது அதிகார வரம்பின் உள்ளூர் எல்லைகளுக்குள் ஒரு பத்திரம் அல்லது ஆவணத்தில் அடங்கியுள்ள நிலம் முழுவதும் அல்லது அதன் பகுதியேதேனும் அமைந்துள்ளதோ, தொடர்புடைய அந்தப் பதிவு செய்கின்ற அலுவலரின் புத்தக எண். 1-இல் உள்ள நிலத்திற்கு அல்லது நிலத்தில் உள்ள உரித்தம் (Interest) எதற்கேனும், அரசினால் செய்யப்பட்ட அளிப்பு அல்லது உரிமை மாற்றுதலுக்கு சான்றாக இருப்பதாகப் புலப்படுகின்ற அத்தகைய பத்திரம் அல்லது பிற ஆவணத்தின் படியொன்றைத் தாக்கல் செய்வதற்கும் மேற்சொன்ன பதிவுசெய்தல் சட்டத்தில் திட்டவட்டமான வகைமுறை எதுவும் இல்லை, எனவே மேற்படி நோக்கத்திற்காக மேற்சொன்ன பதிவு செய்தல் சட்டத்தைத் தக்கவாறு திருத்தக் கருதப்பட்டது.

3. இந்தச் சட்டம் மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைந்தது.

12. 1982 ஆம் ஆண்டு மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/1982).

சென்னை மாநகர் அல்லது மற்றப்பகுதிகளுக்குப் பொருந்துகின்ற 1887 ஆம் ஆண்டு மாகாணச் சிறுவழக்கு நீதிமன்றங்கள்

சட்டத்தின் (மையச் சட்டம் IX/1887) கீழ் அந்தச் சட்டத்தின் 24 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஆணைகளைப் பொறுத்த அளவில் மட்டுமே மாவட்ட நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்துகொள்வதற்கு வகைமுறை இருந்தது. சிறு வழக்குகள் நீதிமன்றம் ஒன்றின் மற்ற எல்லா ஆணைகளையும் தீர்ப்பாணைகளையும் பொறுத்த அளவில், மேல் முறையீட்டிற்கு வகைமுறை எதுவும் இல்லை ; குறையுற்ற ஒரு தரப்பினர் உயர் நீதி மன்றத்திடம் சீராய்வுக்கு மட்டுமே (Revision) மனுச் செய்து கொள்ள முடியும். உயர்நீதி மன்றத்தின் சீராய்வு அதிகார வரம்பை நாடுவதில் ஏற்படும் செலவுகள், வழக்கில் உள்ளடங்கியுள்ள தொகைக்குப் பெருமளவில் பொருந்தாததாக இருப்பதால், அது தரப்பினர்களுக்கு இடர்ப்பாட்டை விளை வித்தது என்று முறையீட்டுக் கொள்ளப்பட்டது. எனவே சீராய்வு அதிகார வரம்பை உயர்நீதி மன்றத்திற்குப் பதிலாக மாவட்ட நீதிமன்றத்திற்கு அளிப்பதற்காக வேண்டி, 1887 ஆம் ஆண்டு மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தை (மையச் சட்டம் X/1887) திருத்துவதென முடிவு செய்யப் பட்டது. உயர் நீதிமன்றத்தின் முன் நிலுவையிலுள்ள வழக்கு களை மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றவும் முடிவு செய்யப் பட்டது.

2. இந்தச் சட்டம் மேற்படி முடிவுக்குச் செய்வடிவங் கொடுக்க விழைந்தது.

13. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளிகள் (வேலை மற்றும் வேலை நிலைமைகளை முறைப்படுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/1982).

பீடித் தொழில், சாலை அமைத்தல், கட்டடப் பணிகள், உப்பளங்கள், கயிறு தொழில் முதலிய, தொழிலாளர் அமைப்புகள் ஏதும் இல்லாத தொழில்களில் உள்ள தொழிலாளிகளின் வாழ்க்கை நிலைகளை ஆராய மாநில அரசு குழு ஒன்றை அமைத்தது. வேலையின்மை அல்லது வேலை போதாமை (Under Employment) ஆகிய கேடுகளுக்கு எதிராக, அமைப்பு ஏதும் இல்லாத தொழில் துறைகளில் உள்ள தொழிலாளிகளைக் காப்பாற்றவும் அவர்களின் வேலை நிலைமையில் மற்ற சில மேம்பாடுகளை உறுதிப்படுத்தவும் வேண்டி தனியாக ஒரு

சட்டம் இயற்றலாம் என்று மற்றவற்றிற்கிடையே அக்குழு பரிந்துரைத்தது. மேற்சொன்ன குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒரு தனிச் சட்டத்தை இயற்றுவதென்று அரசு முடிவு செய்தது.

2. இந்தச் சட்டம் மேற்படி முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைந்தது.

14. 1982 ஆம் ஆண்டு வக்ஃபு (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 34/1982).

1959-ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (காலவரம்பு நீட்டிப்பு) சட்டம் (மையச் சட்டம் 29/1959) பொது வக்ஃபுகளின் பகுதியாக அமைந்துள்ள அசையாச் சொத்தின் உடைமையை மீட்பதற்கான உரிமை வழக்குகளுக்குச் சில நேர்வுகளில் காலவரம்புக் கால அளவை நீட்டித்தது. அது, பொது வக்ஃபுகளின் நிதியங்களையும் அத்தகைய வக்ஃபுகளின் வாடகைகள் மற்றும் இடைக்கால வருமானங்களையும் (mesne profits) வசூலிப்பதற்கான உரிமை வழக்குகளுக்கான கால வரம்புக் கால அளவை நீட்டிப்பதற்கு வகை செய்யவில்லை. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து, சமய, அறக் கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 109-ஆம் பிரிவைப் போன்று, காலவரம்புச் சட்டத்தின்கீழ் வக்ஃபு ஏதொன்றின் சொத்தை அல்லது நிதியங்களை எவரிடமேனும் அளிக்கப் பெறுவதை (Vesting)த் தடுக்கின்ற வகையில் 1954-ஆம் ஆண்டு வக்ஃபு சட்டத்தின் (மையச் சட்டம் 29/1954) வகைமுறை எதுவும் இல்லை. மேலும் 808/1967 என்ற எண்ணிட்ட இ.மே. (S. A.). இல் சென்னை உயர் நீதிமன்றம், மையச் சட்டம் 29/1959ன் 3-ஆம் பிரிவு, ஒரு வரம்புக்குட்பட்ட அளவுக்குத் தான் பொருந்தும் என்று அதாவது, அந்த வகைமுறையானது வழங்கிடத் தகுதி வாய்ந்த ஒருவர் 1947 ஆகஸ்டு 14-ஆம் நாளுக்குப் பிறகும் 1954 மே 7-ஆம் நாளுக்கு முன்பும் உடைமை அற்றவராக்கப்பட்டுள்ள அல்லது உடைமையை அவர் தொடராமல் விட்டுவிட்டுள்ள நேர்வுகளுக்கு அல்லது எதிர்வாதியின் உடைமை மேற்சொன்ன கால அளவின் போது எந்தச் சமயத்திலேனும் எதிரானதாக (Adverse) ஆகியுள்ள நேர்வுக்கு மட்டுமே பொருந்தும் என்று தீர்ப்பளித்தது. வக்ஃபு ஒரு

நிலையான கொந்தளிப்பாக இருப்பதால், அத்தகைய ஒரு நிலை வக்ஃபு சொத்தின் நலனுக்கு ஏற்றதாக இருக்காது எனவே காலவரம்புச் சட்டத்தின் கீழ் வக்ஃபு ஏதொன்றின் சொத்தையோ நிதியங்களையோ எவரிடமேனும் அளிக்கச் செய்வதை, அதாவது அத்தகைய சொத்து அல்லது நிதிகள் 1947 ஆகஸ்டு 14 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பு அத்தகையவரிடமோ அல்லது அவருடைய உரிமை முன்னவரிடமோ (Pred ces-sor in titl) அளிக்கப் பெற்றிருந்திராவிடில், தடை செய்கின்ற வகையிலும், வக்ஃபு ஏதொன்றின் சொத்து அல்லது நிதியங்களை மீட்பதற்கான உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை எதையும் பொறுத்த அளவில் கால வரம்புச் சட்டத்தை நீக்கிவைக்கின்ற வகையிலும் 1954 ஆம் ஆண்டு வக்ஃபுச் சட்டத்தில் (மையச் சட்டம் 29/1954) வகைமுறை ஒன்றைச் செய்வதென்று முடிவு செய்யப்பட்டது. பொது வக்ஃபுகளின் வாடகைகள், இடைக்கால வருமானங்கள் ஆகியவற்றை வசூலிப்பதற்கான காலவரம்புக் கால அளவைப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்க வகைமுறை ஒன்றைச் செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

2. மேலே கருதப்பட்ட 1954 ஆம் ஆண்டு வக்ஃபுச் சட்டத்தின் திருத்தத்தின் விளைவாக, 1959 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (காலவரம்பு நீட்டிப்புச்) சட்டம் (மையச் சட்டம் 29/1959 இந்த மாநிலத்தைப் பொறுத்த அளவில் எந்தப் பயனையும் விளைக்காது ; ஆகவே, இந்த மாநிலத்திற்குப் பொருந்துவதைப் பொறுத்த அளவில் மையச் சட்டம் 29/1959-ஐ நீத்தறவு செய்வதென்று முடிவு செய்யப்பட்டது. காலவரம் பின்படி காலாவதியாகிவிட்டன என்றோ அல்லது மையச் சட்டம் 29/1959 இன் 3 ஆம் பிரிவினுள் அடங்கவில்லை என்றோ கூறி நீதிமன்றங்களால் தள்ளுபடி செய்யப்பட்டிருந்த உரிமை வழக்குகளை அல்லது நடவடிக்கைகளைப் புதுப்பிப்பதற்கு இயலுகின்ற வகையில் வகைமுறையொன்றைச் செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

3. இந்தச் சட்டம் மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல் வடிவங் கொடுக்க விழைந்தது.

15. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1982).

1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்பு உடைமையாளர்கள் (Occupants) சொந்த உரிமை அளிப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 40/1971) 15-A பிரிவின்படி, அந்தச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் குடியிருப்பு அல்லது மேல் கட்டுமானம் எவரிடம் அளிக்கப்பெற்றிருந்ததோ அந்தக் குடியிருப்பு உடைமை யாளர் எவரும் மற்றும் அத்தகைய உடைமையாளரின் வாரிசு அல்லது சட்டச் சார்பாளர் எவரும், அதிகாரமளிக்கப் பட்ட அலுவலரின் முன் ஒப்பளிப்புடன் அல்லாமல், அத்தகைய குடியிருப்பு அல்லது மேல் கட்டுமானம் முழுவதையும் அல்லது அதன் பகுதி எதையும் மேற்சொன்ன சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து பத்தாண்டுக்கால அளவிற்குள்ளாக விற்பனை செய்தலோ, அடைமானம் வைத்தலோ, குத்தகைக்கு விடுதலோ அல்லது மற்றப்படி உரிமை மாற்றஞ் செய்தலோ ஆகாது; மற்றும் மேற்சொன்ன வகை முறையை மீறிச் செய்யப்படும் உரிமை மாற்றம் எதுவும் விழலாகிச் செல்லாததாகும்.

2. மேற்சொன்ன சட்டத்தின் 15-A பிரிவை மீறி உரிமை மாற்றல் செய்யப்பட்ட நேர்வுகள் நிகழ்ந்துள்ளன என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. குடியிருப்பு அல்லது மேல் கட்டுமானத்தின் உரிமை மாற்றல் விழலாகிச் செல்லாது போனால், பாத்தியதை (Tittle) யாவது உரிமை மாற்றியவரிடம், அதாவது குடியிருப்புதாரரிடமே இருந்துவிடு கின்றது. உரிமை மாற்றல் பெற்றவர் இரவல் பெயரில் (பினாமியாகக்) கூட உரிமை மாற்றலின் நலன்களை இன்னமும் அனுபவிக்க முடியும். காரணம், உரிமை மாற்றல் விழலாகிச் செல்லாததாயிற்று என்று அறிவிக்கப்பட்டிருந்தாலுங்கூட, பாத்தியதையாவது சொந்தக்காரரிடமே இன்னமும் எஞ்சி நின்றது ; உடைமையாளர் தொடர்ந்து நீடித்தால், அத்தகைய உடைமையாளர் நலனடைய வேண்டும் என்பது சட்டத்தின் நோக்கமாக இருக்காது. இதைத் தவிர்ப்பதற்காக வேண்டியும், அத்தகைய குடியிருப்பை வாங்க முயலும் எவருக்கும் அது தூண்டுதலாக இருக்கக் கூடாது என்பதற்குமாக, மேற்சொன்ன 15-A பிரிவில் அடங்கியுள்ள வகைமுறைகளை மீறிக் குடியிருப்பு அல்லது மேல் கட்டுமானம் எதையேனும் உரிமை மாற்றல் செய்

யும் நிகழ்வில், அத்தகைய குடியிருப்பு அல்லது மேல்கட்டுமானம் தண்டமாக எந்தவித வில்லங்கமுமின்றி அரசுக்குத் தண்ட இழப்பாகி அரசிடம் மேவி நிற்கும் என்னும்படிக்குச் சட்டத்தின் 15-A பிரிவைத் திருத்தக் கருதப்பட்டது.

3. குடியிருப்பு அல்லது மேல் கட்டுமானத்தின் சொந்த உரிமையை அளித்ததற்குப் பிறகு உழவர் அல்லது உழவுத் தொழிலாளர் எவரேனும் அத்தகைய குடியிருப்பு அல்லது மேல் கட்டுமானத்தை இரவல் பெயரில் (பினாமியில்) வைத்திருப்பதோடு, அதை வேறு எவரேனும் உடைமையில் கொண்டிருக்க அனுமதிப்பாராயின், அப்போது அத்தகைய குடியிருப்பு அல்லது கட்டுமானமும், தண்டமாகி, எந்தவித வில்லங்கமும் இன்றி, அரசுக்குத் தண்ட இழப்பாகி அதனிடம் மேவி நிற்கும் என்று செய்யவும் கருதப்பட்டது.

4. அரசுப் பணியாளர்களை '' அரசிதழ்ப் பதிவு பெற்ற அலுவலர்கள் '' என்றும் '' அரசிதழ்ப் பதிவுறா அலுவலர்கள் '' என்றும் வகைப்படுத்தியிருந்ததை நீக்கியதன் விளைவாக, '' அரசிதழ்ப் பதிவு பெற்ற அலுவலர் '' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக '' வட்டாட்சியரின் நிலைக்குக் கீழ்ப்படாத வருவாய்த்துறை அலுவலர் '' என்னும் சொற்றொடரைச் சேர்ப்பதற்காக வேண்டி, 1961 ஆம் ஆண்டு, தமிழ் நாடு குடியிருப்பு உடைமையாளர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாப்பு) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 39/1961) 2(4) ஆம் பிரிவு, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்பு உடைமையாளர்கள் (சொந்த உரிமை அளிப்புச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1971) 2(4)ஆம் பிரிவு, மற்றும் 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராமக் கைவினைஞர்கள் (குடியிருப்புச் சொந்த உரிமை அளிப்புச்) சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 38/1976) 4(1) ஆம் பிரிவு ஆகியவற்றைத் திருத்தக் கருதப்பட்டது.

5. மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 40/1971 மற்றும் குடியரசுத் தலைவரின் சட்டம் 38/1976 ஆகியவற்றின் முறையே 17(1) ஆம் பிரிவு மற்றும் 20(1) ஆம் பிரிவு ஆகியவற்றின்கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட ஓர் அறிவிக்கையை நீக்கிவிடவோ அல்லது திருத்தவோ அச்சட்டங்களில் வகைமுறைகள் எவையும் இல்லை.

எனவே, மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்களின் அந்தந்த வகை முறைகளின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகளை மாற்றி யமைக்கவோ நீக்கவோ அரசுக்கு அதிகாரமளித்து மேற்சொன்ன இரண்டு சட்டங்களிலும் வகை முறைகளைச் செய்யக் கருதப் பட்டது.

6. ஒப்படை அதிகாரத்தின் பேரில் சட்ட விதிகளை இயற்றுவதற்கான குழுவானது, தமிழ்நாடு சட்டம் 40/1971 இன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளை மாநிலச் சட்ட மன்றத்தின் முன் வைக்க மாநில அரசைக் கட்டாயப்படுத்த அந்தச் சட்டத்தில் வகைமுறைகள் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத் திருந்தது. இந்த நோக்கத்திற்காக, திருத்தச் சட்டத்தில் தேவையான வகைமுறை செய்யப்பட்டிருக்கின்றது.

7. இச்சட்டம் மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைந்தது.

16. 1982 ஆம் ஆண்டு தொழில் தகராறும் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 36/1982).

தொழில் அமைதி, பொது ஒழுங்கு மற்றும் சமூகத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களை வழங்குதல் மற்றும் பணிகளைச் செய்தல் ஆகியவற்றின் நலனை முன்னிட்டு தொழில் தகராறு 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மையச் சட்டம் XIV/1947) 10 (1) ஆம் பிரிவின் கீழ் நீதி மன்றங்களுக்கு அல்லது தீர்ப்பாயங்களுக்கு மேல்முடிவுக்கு அனுப்பப்படும் போது, அரசினால் குறிப்பிடக்கூடிய அத்தகைய கட்டு வரம்புகளையும் வரையரைகளையும் பின்பற்றுமாறு வேலை தருநர்களையோ (Employees) அல்லது தொழி லாளர்களையோ (Workmen) அல்லது இருவரை யுமோ கோருவதற்கும் நீதிமன்றங்கள் அல்லது தீர்ப்பாணங்கள் தங்கள் தீர்வங்களை (Awards) வழங்குகின்ற காலம் வரையிலும் பொதுப் பயன்பாட்டுப் பணி அமைப்பு எதையும் மூடவேண்டாம் என்று அத்தகைய பணி அமைப்பு எதையும் கோருவதற்கும் அரசு தேவையான அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டியது தேவையென்று கருதப்பட்டது. எனவே இது

குறித்துத் தேவையான அதிகாரத்தை அரசுக்கு அளிப்பதென முடிவு செய்யப்பட்டது :—

இந்தச் சட்டம் மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைந்தது.

17. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி (திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 37/1982).

மற்றவற்றிற்கிடையே, 1972-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 36/1972). ஆய்ந்த தொழிலாளர்ச் சட்டங்கள் பற்றிய குழு, மேற்சொன்ன சட்டத்தின் பல்வேறு வகைமுறைகளுக்குச் சில திருத்தங்களை யோசனை கூறியிருந்தது. அக் குழுவின் யோசனைகளின் அடிப்படையில், பின்வருவனவற்றிற்கு வகைசெய்வதற்காக அச் சட்டத்தைத் திருத்துவதென்று அரசு முடிவு செய்தது.

(1) மேற்சொன்ன சட்டத்தின் 2 (b) (i) பிரிவைத் திருத்துவதன்மூலம், ''தொழிலாளி'' என்னும் சொல்லுக்குரிய பொருள் வரையறையை மேலும் தெளிவாக்குவது.

(2) மேற்சொன்ன சட்டத்தின் 2 (b) (i) (b) பிரிவைத் திருத்துவதன்மூலம், மேற்பார்வைத் தகுதியில் (Supervising Capacity) வேலையிலுள்ளவர்களைப் பொறுத்த அளவில் ஊதிய வரம்பை ரூ. 750 லிருந்து ரூ.1,000க்கு உயர்த்துவது.

(3) பிரிவு 2 (d) (iv) மற்றும் (v) ஆகியவற்றைத் திருத்துவதன்மூலம், தற்போதுள்ள நிலைக்குமாறாக, ஐவர் அல்லது ஐவருக்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு வைத்துக் கொண்டுள்ள உணவு வழங்கும் நிறுவனங்கள், கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்குவது.

(4) பிரிவு 3 (2) (b) மற்றும் (c) ஆகியவற்றைத் திருத்துவதன்மூலமாக, நிறுவனங்களின் சான்றளிக்கப்பட்ட நிலையாணைகளின் கீழும் 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XXXVI/1947) 36 ஆம் பிரிவின்கீழ், வேலைக்கு வராமைக்காகச் செய்யப்பட்ட பிடித்தங்களுக்குமாக

தொழிலாளிகளிடம் இருந்து வேலை தருநர்களால் வசூலிக்கப்பட்ட தண்டத்தொகைகளை தொழிலாளர் நல நிதியில் வரவு வைப்பது

(5) 13 ஆம் பிரிவைத் திருத்துவதன் மூலமாக, கோரப்படாமற் கிடக்கும் தொகை குறித்து, நிறுவனத்தின் அறிவிப்புப் பலகையில் காட்சிக்கு வைக்குமாறும், தொழிலாளிகள் அவர்களது வாரிசுகள் மற்றும் அவர்களின் சட்டச் சார்பாளர்கள் முதலியவர்களிடமிருந்து ஆறு மாதக் காலத்திற்குள்ளாக, கோரிக்கைகளை வரவேற்றுத் தமிழ்நாடு அரசாங்க அரசிதழில் வெளியிடுமாறும் தொழிலாளர் நல வாரியத்தைக் கோருவது.

(6) 15-ஆம் பிரிவைத் திருத்துவதன் மூலமாக, தொழிலாளர்களின் பங்களிப்புத் தொகையை ரூ. 1-லிருந்து ரூ. 2 ஆகவும், வேலை தருநர்களின் பங்களிப்புத் தொகையை ரூ. 2-லிருந்து ரூ. 4 ஆகவும் உயர்த்துவதும், ஆண்டொன்றுக்கு அத்தகைய தொழிலாளிக்கு ரூ. 2 வீதம் அரசு பங்களிப்பு வழங்குவதற்கு வகை செய்வதும்.

(7) பிரிவு 17 (2) (j) மற்றும் (l) ஆகியவற்றைத் திருத்துவதன்மூலமாக, தொழிலாளர் நல நிதியில் உள்ள தொகையை மரணமடைந்த தொழிலாளர்களின் விதவைகள் தம் நல்வாழ்விற்காகவும் கல்வி வசதி அளிக்கும் நோக்கத்திற்காகவும் பயன்படுத்துவது.

(8) மேற்சொன்ன சட்டத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துவதன்மூலமாக நிதியை மேற்சொன்ன பிரிவில் சொல்லப்பட்டுள்ள நிறுவனங்களோடு கூட, மாநிலக் கூட்டுறவு வங்கியிலோ அல்லது ஏதேனும் மத்தியக் கூட்டுறவு வங்கியிலோ அல்லது மாநில அரசு அல்லது மைய அரசுக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டிற்குட்பட்ட ஏதேனும் நிறுவனத்திலோ வைப்பீடு செய்வதை அனுமதிப்பது.

2. இந்தச் சட்டம் மேற்சொன்ன முடிவுகளுக்குச் செய்வடிவங் கொடுக்க விழைந்தது.

18. 1982 ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மை தமிழ்நாடு திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 38/1982).

1932 ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தின் (மையச் சட்டம் IX-1932) 71 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, கூட்டாண்மை நிறுவனங்களின் பதிவாளருக்கு அனுப்பப் படும் ஆவணங்களுடன் செலுத்தப்படவேண்டிய அல்லது கூட்டாண்மை நிறுவனங்களின் பதிவாளரின் பாதுகாப்பில் உள்ள ஆவணங்களைப் பார்வையிடுவதற்காகவோ அல்லது கூட்டாண்மை நிறுவனங்களின் பதிவேட்டிலிருந்து படிகள் எடுப்பதற்கோ செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களை விதிகள் வாயிலாக விதிப்பதற்கு, மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றது. ஆனால் அத்தகைய கட்டணங்கள் I -ஆவது இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பெருமக் (அதிக அளவுக்) கட்டணங்களுக்கு மேற்படுதல் ஆகாது, கட்டணங் கள், 1965 ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்தச்) சட்டத்தால் (தமிழ்நாடு சட்டம் 35/1965) திருத்தியமைக்கப்பட்டபடி, பெரும் (அதிக அளவு) வீதங்களிலேயே விதிக்கப்பட்டன. மேற்சொன்ன மையச் சட்டத்தை கடந்த பதினாறு ஆண்டுகளாக நடைமுறைப்படுத்திய திலிருந்து, 1965 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டபடி பெரும் (அதிக அளவு) வீதங்களிலேயே கூட விதிக்கப்பட்ட கட்டணங்கள் மேற்சொன்ன சட்டத்தைச் செயற்படுத்துவதில் ஏற்படும் செலவுக்குப் பொருத்தமானதாக இல்லை என்பதை அது வெளிப்படுத்தியது.

2. கட்டணங்கள் வாயிலாக வரும் ஆண்டு வருமானத் திற்கும், ஏற்பட்டு வருகின்ற செலவுக்கும் இடையே உள்ள இடைவெளியை நிரப்புவதற்காக வேண்டி, இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும் (அதிக அளவு) கட்டணங்களைத் தக்கவாறு உயர்த்துவதென்று கருதப்பட்டது. அதன்படியே மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 35/1965- இனால் திருத்தப்பட்டபடியான மேற்சொன்ன மையச் சட்டம் IX/1932-ன் 1 ஆவது இணைப்புப் பட்டியலுக்குப் பதிலாகப் புதியதொரு இணைப்புப் பட்டியலைச் சேர்க்கக் கருதப்பட்டது.

3. இந்தச் சட்டம் மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைந்தது.

19- 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 39/1982)

1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின்கீழ் [பின்னர் 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்). திருத்தச் சட்டத்தால் (தமிழ்நாடு சட்டம் 6/1982) திருத்தப்பட்டபடி], ஊராட்சிகளின் அதிகாரங்களைச் செலுத்தி வரவும் பணிகளைப் புரிந்துவரவும், தனி அலுவலர்கள் 1979 செப்டம்பர் 12 ஆம் நாள் முதற்கொண்டு இரண்டு ஆண்டு ஒன்பது மாதக் காலத்திற்கு நியமிக்கப்பட்டனர். அவர்களது பதவிக்காலம் கடைசியாக 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்த அவசரச் சட்டத்தால் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/1982) 1982 செப்டம்பர் 11 ஆம் நாள் உட்பட அந்நாள் வரையிலும் நீட்டிக்கப்பட்டது. அந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாகச் சட்டமொன்று இயற்றப்பட்டது.

2. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XXXV/1958) வகைமுறைகளின்படி, ஊராட்சிகளின் எண்ணிக்கையை முடிவு செய்வதையும், இடங்களைப் பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் ஒதுக்குவதையும் எந்தக் கடைசி முன் சென்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் தொடர்பான புள்ளிவிவரங்கள் வெளியிடப் பட்டுள்ளனவோ அந்த மக்கள் தொகை கணக்கெடுப்பில் கண்டறியப்பட்டவாறான மக்கள் தொகைப் புள்ளிவிவரங் களின் அடிப்படையின்மீதும் மட்டுமே செய்ய வேண்டிய தாக இருக்கிறது. ஊராட்சிகள் தொடர்பான 1981 மக்கள் தொகை புள்ளிவிவரங்கள் 1982 இறுதியில்தான் பெரும் பாலும் வெளியிடப்படக்கூடும் என்பதாலும், அரசு 1981 மக்கள் தொகை புள்ளி விவரங்களின் அடிப்படையின் பேரில் இடங்களை ஒதுக்கீடு செய்வதென்றும் அதற்குப் பிறகு ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குமான சாதாரணத் தேர்தல்களை நடத்துவதென்றும் முடிவு செய் திருப்பதாலும், ஊராட்சிகளின் தனி அலுவலர்களின் பதவிக் கால அளவை மேலும் நீட்டிப்பது தேவையானதாக ஆயிற்று.

அதன்படியே இந்தத் தனி அலுவலர்களின் பதவிக்கால அளவை 1983 மார்ச்சு 11 ஆம் நாள் உள்ளடங்கலாக அந் நாள் வரையிலும் நீடிப்பதென அரசு முடிவு செய்தது.

3. இந்தச் சட்டம் மேற்சொன்ன தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/1982-க்குப் பதிலாக அமையவும் மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவங் கொடுக்கவும் விழைந்தது.

20- 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 40/1982)-

1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின் (குடியரசுத் தலை வரின் சட்டம் 5/1977) கீழ் (அதாவது. 1982 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டத்தால் (தமிழ்நாடு சட்டம் 7/1982) பின்னர் திருத்தப்பட்டபடி] 359 ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அதி காரங்களைச் செலுத்தி வரவும், பணிகளைப் புரிந்து வரவும் 1977 பிப்ரவரி 1 ஆம் நாளன்றும் அது முதற் கொண்டும் ஐந்து ஆண்டு ஐந்து மாதக் காலத்திற்குத் தனி அலுவலர்கள் நியமிக்கப் பட்டனர். அவர்களது பதவிக் காலம் 1982 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்த அவசரச் சட்டத்தால (தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/1982) கடைசியாக 1982 செப்டம்பர் 30 ஆம் நாள் உள்பட அந்நாள் வரையிலும் நீட்டிக்கப்பட்டது. மேற் சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாகச் சட்டமொன்று இயற் றப்பட்டது.

2. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XXXV/1958) வகை முறைகளின்படி ஊராட்சிகளின் எண்ணிக்கையை முடிவு செய்வதையும் இடங் களைப் பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்த வர்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் ஒதுக்குவதையும் எந்தக் கடைசி முன் சென்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் தொடர் பான புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளனவோ அந்த

மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் கண்டறியப்பட்டவாறான மக்கள் தொகை புள்ளி விவரங்களின் அடிப்படையின் மீது மட்டுமே செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஊராட்சிகளின் தொடர்பான 1981 மக்கள் தொகை புள்ளி விவரங்கள் 1982 இறுதியில்தான் பெரும்பாலும் வெளியிடப்படக் கூடும் என்பதாலும் அரசு 1981 மக்கள் தொகை புள்ளி விவரங்களின் அடிப்படையின் பேரில் இடங்களை ஒதுக்கீடு செய்வதென்றும் அதற்குப் பிறகு ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குமாக சாதாரணத் தேர்தல்களை நடத்துவதென்றும் முடிவு செய்திருப்பதாலும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தனி அலுவலர்களின் பதவிக் கால அளவை மேலும் நீட்டிப்பது தேவையானதாக ஆயிற்று. அதன்படியே இந்தத் தனி அலுவலர்களின் பதவிக் கால அளவை 1983 மார்ச்சு 31 ஆம் நாள் உள்ளடங்கலாக அந்நாள் வரையிலும் நீட்டிப்பதென அரசு முடிவு செய்தது.

3. இந்தச் சட்டம் மேற்சொன்ன தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/1982-க்குப்பதிலாக அமையவும் மேற்சொன்ன முடிவுக்குச் செயல் வடிவங் கொடுக்கவும் விழைந்தது.

21- 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தச் சட்டம்) (தமிழ்நாடு சட்டம் 41/1982)-

கலைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றமொன்று 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XXXV/1958) 155 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் படி கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக்கு மேற்படாத ஒரு தேதி முதற் கொண்டு மாற்றியமைக்கப்பட வேண்டும். 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டத்தால் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/1982) கடைசியாகத் திருத்தப்பட்டபடி மேற்சொன்ன பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (b) கூறிய வரம்புரையின்கீழ் உள்ள அதிகாரங்களின் துணையைப் பயன் கொண்டு கலைக்கப்பட்ட 15 ஊராட்சி ஒன்றிய மன்றங்களை மாற்றியமைக்கும் தேதி தள்ளி வைக்கப்பட்டது. அவை 1982 அக்டோபர் 1 ஆம் நாளன்று மாற்றியமைக்கப்பட வேண்டியவையாய் இருந்தன. மேற்சொன்ன தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/1982 க்குப் பதிலாகச் சட்டமொன்று இயற்றப்பட்டது.

2. ஊராட்சிகளைப் பொறுத்த 1981 ஆம் ஆண்டு மக்கள தொகைக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங்கள் இந்திய அரசின் மக்கள் தொகை கணக் கெடுப்புத் துறையினால் வெளியிடப் படுகின்றபோது அப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் ஊராட் சிகளின் எண்ணிக்கையை முடிவு செய்வதென்றும் பட்டியல் சாதி கள் பட்டியல் பழங் குடிகளைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் இடங்களை ஒதுக்குவதென்றும் அதற்குப் பிறகு ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கும் சாதாரண தேர்தல்களை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டதால் 359 ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தனி அலுவலர்களின் பத விக் கால அளவை 1982 செப்டம்பர் 30 ஆம் நாளுக்கு அப்பால் ஆறு மாதங்களுக்கு நீட்டிப்பதென்றும் அரசினால் முடிவு செய் யப்பட்டது. எனவே மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றிய மன்றங்களையும் மாற்றியமைக்கும் தேதி ஒரே காலத்தில் நிகழ் வதற்காக வேண்டி மேற்சொன்ன 15 ஊராட்சி ஒன்றிய மன் றங்களை மாற்றியமைக்கும் தேதியையும் மேலும் தள்ளிப் போட வேண்டியது தேவையாயிற்று. அதன் படியே அந்த 15 ஊராட்சி ஒன்றிய மன்றங்களை மாற்றியமைக்கும் தேதி ஐந்து ஆண்டு எட்டு மாதங்களுக்கு மேற் போகாத ஒரு மொத்தக் கால அள வுக்கு தள்ளிப் போடுவதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கின்ற வகையில் மேற்சொன்ன 155 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் (b) கூறின் வரம்புரையைத் திருத்துவதென்று அரசு முடிவு செய் தது.

3. இந்தச் சட்டம் மேற்சொன்ன தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/1982 க்குப் பதிலாக அமையவும் மேற் சொன்ன முடிவுக்குச் செயல் வடிவங் கொடுக்கவும் விழைந்தது.

22. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு பருவிலக்கு (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 42/1982)-

1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் X/1937) அப்போது இருந்தபடி அதன் 20-A பிரிவின் கீழ் அந்தச் சட்டத்தின்படி ஓர் உரிமமோ அல்லது அனுமதிச் சீட்டோ வழங்குவதற்கான விண்ணப்பமொன்றைப் பரிசீலனை செய்கையில் அத்தகைய உரிமம் அல்லது நேர்வுக் கேற்ப அனுமதிச் சீட்டை வழங்குவதற்குத் தகுதி வாய்ந்த

அதிகாரி பின்வரும் பொருள்களைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும் ; அதாவது :—

(அ) உரிமம் அல்லது நேர்வுக்கேற்ப அனுமதிச் சீட்டை வழங்குவதற்கு விண்ணப்பதாரருக்குள்ள பொருத்தமுடைமை (தகுதி) ;

(ஆ) விண்ணப்பதாரர் சட்டத்தின் வகை முறைகளுக்கும் அதன் கீழ்ச் செய்யப்படும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுபவராக இருப்பாரா ; மற்றும்

(இ) குறிப்பிடக் கூடிய மற்ற பொருள்கள்.

'' பொருத்தமுடைமை (Suitability) அல்லது பொருத்தமான (Suitable) '' என்கிற சொல்லை அது பயன்படுத்தப் படுகின்ற தறுவாயை வைத்து சட்டத்தின் குறிக்கோளையும் எய்த விழையப்படும் நோக்கத்தையும் கருத்தில் கொண்டு நோக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்திருந்தது ஆயினும் பொருத்தமுடைமையைத் தீர்மானிப்பதில் தகுதி வாய்ந்த அதிகாரி பின்வரும் கூறுகளைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும் என்கிற நிலையை விளம்புகை (d claration) வாயிலாகத் தெளிவு படுத்துவது உகந்தது என்று கருதப்பட்டது.

(அ) விண்ணப்பதாரரின் பெறுமானத் (Sclvercy) தன்மை ;

(ஆ) விண்ணப்பதாரர் 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம், X/1937) வகைமுறைகளில் எதையேனும் அல்லது அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதையேனும் மீறியுள்ளாரா அல்லது 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937) வகை முறைகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் அல்லது அனுமதிச் சீட்டு ஏதொன்றின் வரைக்கட்டு மற்றும் கூட்டு வரம்புகளில் எதையேனும் அல்லது அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதி எதையேனும் மீறிய குற்றத்தைப் புரிந்துள்ளாரா :

(இ) விண்ணப்பதாரர் 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937)-ன் கீழ் பிடியாணையின்றி கைது செய்தற் குறியதும் பிணையில் விடக் கூடாததுமான குற்றம் எதையேனும் செய்ததற்காகவோ அல்லது 1930 ஆம் ஆண்டு கேடு பயக்கும் (அபாயகரமான) மருந்துகள்

சட்டத்தின் (மையச் சட்டம் 11/1930) கீழோ அல்லது 1958 ஆம் ஆண்டு வர்த்தகம் மற்றும் வணிகச் சரக்குக் குறிகள் சட்டத்தின் (மையச் சட்டம் 43/1958) கிழோ அல்லது இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுப்பின் (மையச் சட்டம் XLV/1860) 482 முதல் 489 வரையிலுமுள்ள பிரிவுகளின் கீழோ வருகின்ற குற்றம் எதையேனும் செய்ததாகவோ குற்றத் தீர்ப்புத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளவரா ;

(ஈ) எந்த நோக்கத்திற்காக 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937) கீழ் உரிமம் அல்லது அனுமதிச் சீட்டு நாடப் படுகிறதோ அந்த நோக்கத்திற்கு உரிய கவனத்தைத்தான் செலுத்துவதினின்றும் பெரும்பாலும் தன்னைத் தடுக்கக்கூடிய வேறு ஏதேனும் தொழிலை விண்ணப்பதாரர் நடத்தி வருகின்றாரா ;

(உ) விண்ணப்பதாரர் 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் X/1937) அல்லது அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளின் கீழ் மாநில அரசுக்குச் சேர வேண்டிய தொகை எதையேனும் அல்லது மாநில அரசுக்குச் சேர வேண்டிய வரிகள் அல்லது மற்ற தொகைகள் எதையேனும் செலுத்தத் தவறியவராக இருந்தாரா :

(ஊ) எந்த நோக்கத்திற்காக 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937) கீழ் உரிமம் அல்லது அனுமதிச் சீட்டு நாடப்படுகின்றதோ அந்த நோக்கத்திற்குத் தொடர்பான மற்ற எந்தப் பொருள்களும் பின்பற்றத் தக்க இந்த வழி முறைகள் தாம் 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த அதிகாரியால் விண்ணப்பதாரர் ஒருவரின் பொருத்தமுடைமை (Suitability) யைத் தீர்மானிப்பதற்கான அடிப்படையாக எப்போதுமே இருந்து வந்திருக்கின்றன என்றாலுங்கூட சட்டத்திற்குத் தக்க திருத்த மொன்றைச் செய்வதன் மூலமாக அந்த வழி முறையைச் சட்ட மன்றமே விளம்புவது உகந்தது என்று கருதப்பட்டது. அதன் விளைவாகத் தேவைப்பட்ட சில திருத்தங்களும் செய்யப் பட்டன.

இந்தச் சட்டம் மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைந்தது.

23- 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1982).

தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலுள்ள சில ஊராட்சிப் பேரூர்களின் தகுதிநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் விளைவாக, 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X 1939) 16-A பிரிவின் (1)-ஆம் உட்பிரிவின் கீழ், மேற்சொன்ன சட்டத்தின் II-ஆம் இணைப்புப்பட்டியலைத் திருத்தி அறிவிக்கைகளை அரசு பிறப்பித்தது. மேற்சொன்ன 16-A பிரிவின் (2)-ஆம் உட்பிரிவின்கீழ், அந்த அறிவிக்கைகளுக்குப் பதிலாக சட்டமுன் வடிவொன்று சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது. மேற்சொன்ன சட்டமுன்வடிவு தமிழ்நாடு சட்டம் 43/1982 ஆக வெளியிடப்பட்டது.

2. இச்சட்டம் மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைந்தது.

24- 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 44/1982).

1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் II/1954) 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, தமிழ்நாடு மாநிலத்தின் எதிர்பாராச் செலவு நிதி, ஐம்பது கோடி ரூபாய் அடங்கியதாகும். மாநில அரசு முதல் 10 வயது வரை உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு உணவளிப்பதற்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் மற்ற பிற எதிர்பாராத செலவினங்களுக்காகவும் கணிசமான அளவுக்குச் செலவு செய்ய வேண்டியிருந்ததால், மேற்சொன்ன தொகையைத் தற்காலிகமாக ஐம்பது கோடி ரூபாயிலிருந்து நூறு கோடி ரூபாயாக உயர்த்துவது தேவையென்று கருதப்பட்டது. மேற்சொன்ன நோக்கத்தை எய்துவதற்காக, 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/1982), ஆளுநரால் சாற்றப்பட்டது.

2. இந்தச் சட்டம் மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைந்தது.

25. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 45/1982).

பட்டியல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976) 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ்த் தனி அலுவலர்கள் நியமிக்கப் பட்டனர். அவர்களது நியமனக் கால அளவு பின்னர் அவ்வப் போது நீட்டிக்கப்பட்டு வந்தது. சில தனி அலுவலர்களின் பதவிக்கால அளவு 1982 ஜூன் 9ஆம் நாளன்று முடிவடைந்து விட்டது.

2. கூட்டுறவுச் சங்கங்கள்.தொடர்பான சட்டத்தை நீத்தறவு செய்துப் புதிதாகச் சட்டமியற்றுவதற்காக அகல் விரிவான ஒரு சட்டத்தை அதாவது 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டமுன் வடிவை அரசு கொண்டுவந்தது. இது சட்டப் பேரவையின் தெரிவுக் (பொறுக்குக்) குழுவினால் அறிவிக்கப்பட்டவாறு, அப்போது சட்டப் பேரவையின் நிலுவையில் இருந்தது. எனவே, தனி அலுவலர்களின் பதவிக் கால அளவை மேலும் ஆறு மாத காலத்திற்கு நீட்டிப்பதென்று அரசு முடிவு செய்தது. அதன்படியே, 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/1982), ஆளுநரால் சாற்றப்பட்டது.

3. 1980ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமுன்வடிவு அப்போது சட்டப் பேரவையின் பரிசீலனையில் இருந்ததாலும், அதைச் சட்டமாக இயற்றி அதைச் செயல்படுத்த இன்னும் கொஞ்சம் காலம் ஆகுமாதலாலும், தனி அலுவலர்களின் பதவிக் கால அளவை ஆறு மாதங்களுக்குப் பதிலாக மேலும் ஓராண்டுக் கால அளவிற்கு, மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் சாற்றப்பட்டவாறு, நீட்டிப்பதென்று அரசு முடிவு செய்தது.

4. இந்தச் சட்டம் மேற்சொன்ன அறிவிக்கையோடு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைந்தது

26. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காவது திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 46/1982).

1982—83 ஆம் ஆண்டு வரவு-செலவு (நிதிநிலை) அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பின் விளைவாக, 1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 3ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ்ச் செலுத்தப் பட வேண்டிய பலமுனை வரியின் வீதமானது 1982 மார்ச்சு 1 ஆம் நாள் முதற் கொண்டு 4 விழுக்காட்டிலிருந்து 5 விழுக் காட்டிற்கு உயர்த்தப்பட்டது. மேற்சொன்ன சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வரியைச் செலுத்துகின்றவர் களும், ஆண்டொன்றுக்கான விற்பனை அளவு ரூபாய் 50,000க்குக் குறையாமலும் ஆனால் ரூபாய் 1,00,000க்கு மேற்படா மலும் உள்ளவர்களுமான வணிகர்கள், மேற்சொன்ன சட் டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ்க் குறிப்பிடப்பட்ட கூட்டு வீதங் களில் (Compounded Rates) வரியைச் செலுத்தலாம். பல முனை வரியின் வீதம் 4 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டதன் விளைவாக, 7 ஆம் பிரிவின் கீழ்க் குறிப் பிடப்பட்ட கூட்டு வீதங்கள் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் 1/ஆம் நாள் முதற்கொண்டு அதாவது 1982—83 ஆம் நிதியாண்டின் தொடக்கத்திலிருந்து திருத்தியமைக்கப்பட வேண்டியிருந்தது. அதன்படியே, 1982 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி (நான்காவது திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/1982) 1982 ஜூலை 24 ஆம் நாளன்று ஆளுநரால் சாற்றப்பட்டது.

2. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 1/1959) நிர்வகித்ததில் ஈட்டிய பட்டறிவின் துணைக்கொண்டு பார்த்ததில், மேற்சொன்ன சட் டத்தின் முதலாவது இணைப்பு பட்டியலிலுள்ள சில பதிவுகளைத் திருத்தக் கருதப்பட்டது. அதன்படியே, பின் வருவனவற்றிற் காக, மேற்சொன்ன சட்டத்தின் 59 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், பல்வேறு தேதிகளில் அரசு அறிவிக்கைகளைப் பிறப்பித்தது :—

(1) சிமிட்டிக்குப் பதிலாக அமையும் பொருள்களின் மீதுங் கூட ஒருமுனை விற்பனை வரியை விதிப்பதற்காக, சட்டத்தின் முதலாவது இணைப்புப்பட்டியலில் உள்ள 34ஆவது பதிவை

அப்பதிவின் கீழ் சிமிட்டிக்கு 12 விழுக்காடு என்பதற்காக 1982 ஜூலை 1 ஆம் நாள் முதற்கொண்டு விரிவுபடுத்த.

(2) 4 விழுக்காடு ஒருமுனை வரிக்கு உட்பட்ட தாவர எண்ணெய்கள் தொடர்பான முதலாவது இணைப்புப் பட்டியலிலுள்ள 78 ஆம் பதிவை 1982 ஜூலை 1 ஆம் நாள் முதற்கொண்டு விட்டுவிடவும், அதைப் பலமுனையின் கீழ்க் கொண்டுவரவும்,

(3) குறிப்பிட்ட செய்முறைகள் எவற்றிற்கு இணங்கவும் தயாரிக்கப்படாத '' அசவங்கள் மற்றும் அரிஸ்டங்கள் '' ஆகியவற்றைச் சட்டத்தின் முதலாவது இணைப்புப் பட்டியலிலுள்ள 135 ஆம் பதிவின் எல்லைக்குள் சேர்த்துக் கொள்வதற்காக, அப்பதிவை 1982 அக்டோபர் 1 ஆம் நாள் முதற்கொண்டு திருத்த.

(4) 8 விழுக்காடு ஒருமுனை வரிக்கு உட்பட்ட '' சாயங்கள் மற்றும் வேதியல் (இரசாயனப்) பொருள்கள் '' தொடர்பான, சட்டத்தின் முதலாவது இணைப்புப் பட்டியலிலுள்ள 138 ஆம் பதிவை 1982 ஜூலை 1 ஆம் நாள் முதற்கொண்டு விட்டுவிடவும், வர்த்தகம் திசைமாற்றப்படுவதைத் தடுக்கவும் வேதியியல் (இரசாயனப்) பொருள்களைத் தயாரிக்கின்ற சிறிய அலகுகளின் இடர்ப்பாட்டைத் தவிர்க்கவும் வேண்டி, அதைப் பலமுனையின்கீழ்க்கொண்டு வரவும்.

(5) 8 விழுக்காடு ஒருமுனை விதிப்பின்கீழ், தைடோடும் இயந்திரங்களைக் கொண்டு வருவதற்காகச் சட்டத்தின் முதலாவது இணைப்புப் பட்டியலில் 162 என்று ஒரு புதிய பதிவை 1982 அக்டோபர் 1 ஆம் நாள் முதற்கொண்டு சேர்க்க.

(6) ஏய்ப்புக்குள்ள வாய்ப்பைக் குறைப்பதற்காக வேண்டி '' வேர்க்கடலை '' மீதான வரிவிதிப்பு முனையை, முதல்முறை வாங்குதல் முனையிலிருந்து, முதல் முறை விற்பனை வரி முனைக்கு மாற்றுவதற்காக, சட்டத்தின் இரண்டாவது இணைப்புப் பட்டியலிலுள்ள 6 ஆம் பதிவை 1982 ஜூலை 1 ஆம் நாள் முதற்கொண்டு திருத்த.

3. மேற்சொன்ன சட்டத்தின் 59 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ், மேற்சொன்ன அறிவிக்கைகளுக்குப் பதிலாகச் சட்டமன்றத்தில் சட்டமுன்வடிவொன்று அறிமுகப்படுத்தப் பட்டது.

4, இச்சட்டம் மேற்சொன்ன அவசர கூட்டத்திற்குப் பதிலாகவும், மேற்சொன்ன சட்டத்தின் 59 ஆம் பிரிவில் (1)-ம் உட்பிரிவின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகளுக்குப் பதிலாகவும் அமைய விழைந்தது.

27. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனைக் குழுக்கள் (திருத்தமும் தனிவகை முறைகளும்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 47/1982).

1978 ஜூன் 6 ஆம் நாளன்று செயற்பாட்டுக்கு வந்த, 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்கள் (திருத்தமும் தனிவகை முறைகளும்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 33/1978) 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், விற்பனைக் குழுக்களின் அதிகாரங்களைச் செலுத்திவரவும் பணிகளைப் புரிந்துவரவும் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர் அவ்வாறு நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்கால அளவு 1982 ஜூன் 5 ஆம் நாளன்று முடிவடைந்துவிட்டது. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்கள் சட்டத்திற்கு (தமிழ்நாடு சட்டம் 23/1959) அதிலும் குறுப்பாக, மேற்கு வங்காளம், அசாம், இமாசலப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நடைமுறை யில் உள்ளது போன்று விற்பனைக் குழுவின் அமைவு மற்றும் உருவாக்கம் ஆகியவை தொடர்பான அச்சட்டத்தின் வகைமுறை களுக்கு விரிவான திருத்தங்களைச் செய்ய அரசு அப்போது கருதி யது. இந்தச் சூழ்நிலைகளில், விற்பனைக் குழுக்களின் தனி அலு வலர்களின் பதவிக்கால அளவை மேலும் ஆறு மாதக் கால அள வுக்கு நீட்டிக்க அரசு முடிவு செய்தது, அதன்படியே, 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக் கள் (திருத்தமும் தனிவகை முறைகளும்) திருத்த அவசரச் சட்ட மானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/1982) ஆளுநரால் சாற் றப்பட்டது.

2. இந்தச் சட்டம் மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைந்தது.

28. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்றுப்பெற்ற அங்கீகரிக்கப்பட்ட தனியார்ப் பள்ளிகள் ((முறைப்படுத்துதல்) மற்றும தனியார்க் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 48/1982).

சில தனியார்ப் பள்ளிகள் மற்றும் தனியார் கல்லூரிகளின நிருவாகங்கள் அத்தகைய கல்வி நிறுவனங்களின் அலுவல்களில் முறைகேடுகளில் ஈடுபடுவதும் அவை இந்த நிறுவனங்களில், கல்வி பயிற்றப்படுவதைப் பாதிப்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. சில நிருவாகங்கள் அத்தகைய நிறுவனங்களுக்குப் பொருந்துகிற சட்டங்களின் வகைமுறைகள்) விதிகள் ஆகியவற்றை மீறி, அக்கல்வி நிறுவனங்களை மூடிவிடு கின்ற இறுதி நோக்கத்துடன் வகுப்புகளையும் பாடத் திட்டங் களையும் மூடியுள்ளனர் என்பதாகத் தகவல்கள் அரசுக்கு வந்துள்ளன. முறையற்ற வகையில் மேற்சொன்னவாறு வகுப்பு களையும், பாடத்திட்டங்களையும் மூடிவிடுவதால், இந்நிறு வனங்களில் வேலை பார்த்துவரும் ஆசிரியர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் அது தேவையற்ற இடர்ப்பாட்டினை ஏற் படுத்தியுள்ளது. முறைகேடுகளுடன் நடத்தப்பட்டுள்ள அத்த கைய கல்வி நிறுவனங்கள், அவற்றினிடம் எதிர்பார்க்கப்படும் மேன்மைத் தரங்களில் தாழ்ந்துபோகவோ அல்லது பொது அமைப்புப் பாங்கைப் பின்பற்ற மறுப்பதையோ அனுமதிக்கப் படமுடியாது. 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்புபெற்ற (அங்கீ கரிக்கப்பட்ட) தனியார்ப் பள்ளிகள் முறைப்படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1974) மற்றும் 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார்க் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) சட்டம் (குடியரசுத் தலைவரின் சட்டம் 19/1976) ஆகியவற்றில் உள்ள வகைமுறைகள் முறைகேடுகளில் ஈடுபட்டு ஒழுங்கீனங்களையும், தவறுகளையும் மற்றும் மேற்சொன்ன சட்டங்களின் வகை முறைகள் மற்றும் அவற்றின்கீழ்ச் செய்யப்பட்ட விதிகள் ஆகிய வற்றை மீறல்களையும் இழைக்கின்ற அத்தகைய நிருவாகங் களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குப் போதுமானவையாக இல்லை என்பது அரசின் கருத்து. எனவே, கல்வின் நலனை முன்னிட்டும் கல்வித் தரங்களைப் பேணிக் காப்பதற்குமாக, முறைப்படுத்துகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது தேவை யென்று அரசு கருதியது.

3. முறைகேடு, தவறுகை அல்லது ஒழுங்கீனங்களுக்கு நிருவாகம் பொறுப்பாளியாக இருந்திருந்தாலோ, அல்லது சட்டத்தினால் அல்லது சட்டத்தின்படி அல்லது அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதி அல்லது கட்டளை அல்லது பிறப்பிக்கப்பட்ட உத்தரவினால் அல்லது உத்தரவின்படி அதனிடம் விதிக்கப்பட்ட கடமைகளில் எதையேனும் ஆற்றவோ அல்லது ஒப்படைக்கப்பட்ட பணிகளில் எதையேனும் புரியவோ அந்நிறுவனம் புறக்கணித்திருந்தாலோ அத்தகைய நிருவாகத்தால் முறையீடு செய்துகொள்ளப்படுவதற்கு வாய்ப்பொன்றை வழங்கியதற்குப் பிறகு அந்நிருவாகத்தைத் தற்காலிகமாக நீக்கிவைக்கவும், அந்நிறுவனத்தை நிருவகிப்பதற்காக ஓராண்டுக் கால அளவுக்கு அல்லது நிருவாகம் மாற்றியமைக்கப்படுகின்ற வரையிலும் இவற்றில் எது பிந்தியதோ அது வரையிலும், தனி அலுவலர் ஒருவரை நியமிக்கவும் அரசுக்கு அதிகாரம் அளிக்கின்ற வகையில் மேற்சொன்ன சட்டங்களைத் திருத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. ஆயினும், எந்த நேர்விலும் அந்நிருவாகத்தைத் தற்காலிகமாக நீக்கிவைக்கும் பெருமக் (அதிக அளவுக்) கால அளவானது, நிருவாகம் மாற்றியமைக்கப்பட்டாலும் இல்லையென்றாலும், இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படுதல் ஆகாது என்று திட்டவட்டமாக வகை செய்யப்பட்டது. இந்தக் கலவி நிறுவனங்களின் தவறுகளுக்கு அல்லது ஒழுங்கீனங்களுக்கு மேலாளர் மட்டுமே பொறுப்பாளி என்பதாக அரசு நிறைவுறக் கண்டால், அம் மேலாளர் மீது நிருவாகம் நடவடிக்கை எடுப்பதற்கு நிருவாகத்திற்கு உத்தரவொன்றைப் பிறப்பிப்பதற்கும் அரசு அதிகாரத்தை மேற்கொண்டது. ஒரு கல்வி நிறுவனத்தின் மேலாளராக இருப்பதற்குத் தகுதியற்றவர் என்று ஒருவரை அறிவிக்க, அதாவது தனது முறையீட்டைச் செய்து கொள்வதற்கு அவருக்கு வாய்ப்பொன்றை வழங்கியதற்குப் பிறகு (அதற்குரிய காரணங்களை எழுத்து மூலமாகப் பதிவு செய்து) அவ்வாறு அறிவிக்க, அரசுக்கு அதிகாரமளிக்கின்ற வகையில் வகைமுறை செய்யப்பட்டது.

தலைமை நீதிபதியால் அதன்பொருட்டு நியமிக்கப்படும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் இருவர் அடங்கிய ஒரு தனி தீர்ப்பாயத்திற்கு மேல்முறையீட்டொன்றைச் செய்துகொள்ள நிருவாகத்திற்கு இயலும் வகையிலும் வகைமுறை செய்யப்பட்டது. தனியார்க் கல்லூரி எதனின் நிருவாகத்தையும் மேற்கொள்ளும் பெருமக் (அதிக அளவுக்) கால அளவை பத்தாண்டுகளிலிருந்து

ஆறு ஆண்டுகளாகக் குறைப்பதற்காக வேண்டி, 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார்க் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 30 (3) ஆம் பிரிவைத் திருத்த, இவ்வாய்ப்பு பயன் படுத்திக் கொள்ளப்பட்டது. இதன் விளைவாகத் தேவைப் பட்ட மற்ற சில திருத்தங்களும் செய்யப்பட்டன. கருதியுள்ள சட்டத்தின் வகைமுறைகளுக்கு, நடப்புக் கல்வி ஆண்டின் தொடக்கத்திற்கு ஓராண்டுக்கு முன்பிருந்தே, அதாவது 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாளன்றும் அந்நாள் முதற் கொண்டும் முன்மேவு செல்திறம் (Retrospective effect) அளிக்கவும் கருதப்பட்டது.

4. இச்சட்டம் மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைந் தது.

29. 1982 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத் (திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டப் 49, 1982).

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1981—82 ஆம் கல்வி ஆண்டிலிருந்தே பி.ஏ., பி.எசி., பி.காம்., ஆகிய பட்டப் படிப்பு களை மூடிவிட்டது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இப்பட் டப் படிப்புகளை மூடிவிட்டதன் விளைவாக, தென் ஆற்காடு மாவட்டத்தின் அண்ணாமலை நகரிலும், சிதம்பரம் வட்டத் திலும் அவற்றைச் சுற்றிலும் உள்ள மாணவர்கள் இப்பட்டப் படிப்புகளில் சேர முடியாமல்போய் அவர்களுக்குத் தகாத இடர்ப் பாடு விளைந்துள்ளது. இந்த மாணவர்களின் அவசரக் கல்வித் தேவைகளைக் கருதியதற்குப் பிறகு, 1982—83 ஆம் கல்வியாண்டி லிருந்து அந்தப் பகுதியில் ஓர் அரசு கலைக் கல்லூரியைத் திறப்ப தென்றும் அதைச் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைப்ப தென்றும் (ஏனெனில் தகுதியுள்ள அரசு கலைக் கல்லூரியை ஓர் அலகு (Unitary) வகையினதாகவுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கமுடியாது) முடிவொன்றை எடுத்தது. மேற்சொன்ன கலைக் கல்லூரியை, அண்ணாமலை நகரிலுள்ள பட்டமளிப்பு மண்டபத்திலிருந்து பத்து மைல் சுற்றளவுக்குள் உள்ளதாக அமைந்துள்ள சிதம்பரம் நகரிலுள்ள நகராட்சி மருத்துவ மனையில் தற்போது உள்ள கட்டிடத்தில் அமைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

2. 1982 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1929) 4 ஆம் பிரிவு, அண்ணாமலை நகரிலுள்ள பட்டமளிப்பு மண்டபத்திலிருந்து பத்துமைல் சுற்று வட்டாரத்திற்குள் அமைந்துள்ள கல்லூரி எதையும் வேறெந்தப் பல்கலைக் கழகத்துடனும் இணைப்பதற்கு ஒரு தடையாக இருக்கும். சிதம்பரத்தில் அமைக்கக் கருதியுள்ள கலைக் கல்லூரி மேற்சொன்ன எல்லைக்குள் நிறுவப்படுவதாக இருந்ததால், மேற்சொன்ன தடையை அகற்றுவதற்காகவேண்டி, 1928 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தில் 4 ஆம் பிரிவைத் திருத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. மேற்சொன்ன கருத்துருவுக்குச் செயல் வடிவங் கொடுக்க, 1982 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத் (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1982) 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாளன்று ஆளுநரால் சாற்றப்பட்டது.

3. இச்சட்டம் மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைந்தது.

30. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 50/1982).

அடகு பிடிப்பவர்கள், பணம் கடன்கொடுப்பவர்கள், மற்றும் நிறுவன அமைப்பாக இல்லாத கடன் கொடுக்கின்ற மற்ற ஆதாரங்களின் கடுவட்டி (Usurious) பழக்கங்கள் காரணமாகப் பெருங்கடன் சுமையினால் அவதியுறுகின்ற கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகச் சட்டமொன்றை இயற்றுவதென்று அரசு முடிவு செய்தது. கிராம மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் வாழ்கின்றவர்களும் ஆண்டுக் குடும்ப வருமானம் நாலாயிரத்து எண்ணூறு ரூபாய்க்கு மேற்படாதவர்களுமானவர்களால்பட்டவையும், அத்தகைய அடகு பிடிப்பவர்களுக்கும் பணம் கடன் கொடுப்பவர்களுக்கும் மற்றும் நிறுவன அமைப்பாக இல்லாத கடன் கொடுக்கின்ற மற்ற ஆதாரங்களுக்கு கொடுக்கப்பட வேண்டியிருந்தவையுமான கடன்கள். முற்றிலும் தீர்க்கப்பட்டவையாகக் கருதப்படும். அதன்படியே, 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு

கடன் நிவாரண அவசர சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 9/1982) ஆளுநரால் சாற்றப்பட்டது.

2. இந்தச் சட்டம் மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைந்தது.

31. 1982-ஆம் ஆண்டு தமிழ்நாடு பணம் கடன் கொடுப்பவர்கள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 51/1982)-

1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணம் கடன்கொடுப்பவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XXVI/1957) 14 ஆம் பிரிவு அச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமம்எதையும்அந்தப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக நீக்கிவிட, உரிமம் வழங்கும் அதிகாரிக்கு அதிகாரமளிக்கின்றது. ஆயினும், அந்தச் சட்டம், உரிமத்தை நீக்கிவிடுவதற்குமுன் அதற்கிடையே உரிமத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைக்க, உரிம வழங்கும் அதிகாரிக்குத் திட்டவட்டமாக அதிகாரம் அளிக்க வில்லை. எனவே, உரிமத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்தற்கும் கூட, உரிமம் வழங்கும் அதிகாரிக்கு அதிகாரத்தை அளிக்க மேற்சொன்ன சட்டத்தில் திட்டவட்டமாக வகை முறையைச் செய்யக் கருதப்பட்டது. மேற்படி நோக்கத்தை எய்துவதற்காக சட்டத்தில், அதன் விளைவாகத் தேவைப்பட்ட சில திருத்தங்களைச் செய்யவும் கருதப்பட்டது.

2. இந்தச் சட்டம் மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைந்தது.

32. 1982-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கீடு (எண். 3) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 52/1982).

இந்தச் சட்டம், பின்வருவனவற்றிற்காகத் தேவைப்படும் பணங்களை மாநிலத் திரள் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்பின் 20-ஆம் உறுப்பின் (1)-ஆம் கூறுடன் இணைத்து, 205 ஆம் உறுப்பையொட்டி நிறைவேற்றப் பட்டது :—

(அ) 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாளன்று தொடங்கிய நிதியாண்டுக்கான மாநில அரசின் செலவினத்திற்காகத் தமிழ்நாடு சட்டப் பேரவையினால் செய்யப்பட்ட துணை மானிய அளிப்புகள் ; மற்றும்

(ஆ) அந்தக் கால அளவுக்கு மாநிலத்தின் திரள் நிதியத்தின் மீது பொறுப்பேற்ற (Charged) துணைச் செலவினம்.

33. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/1983).

பின்வருவனவற்றிற்காக 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் X/1939) திருத்துவதென்று முடிவு செய்யப்பட்டது :—

(i) மேற்சொன்ன சட்டத்தின் 5-A மற்றும் 5-B ஆகிய பிரிவுகளில் வகை செய்யப்பட்டவாறான கூட்டுவரித் திட்டத்தை, தெளிவு நிலை மற்றும் முதல்நிலை மாநகராட்சிகளுக்கும் நகரியங்களுக்கும் விரிவுபடுத்த ;

(ii) சட்டத்தின் 5-B பிரிவின் கீழ் விதிக்கப்படவேண்டிய கூட்டுவரி வீதங்களை சில நேர்வுகளில் திருத்தியமைக்க ;

(iii) அவற்றின் விளைவாக எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் மேற்சொன்ன சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய அதன்படியே, 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (மூன்றாவது திருத்த) அவசரச் சட்டமானது, மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவங் கொடுப்பதற்காக ஆளுநரால் சாற்றப்பட்டது.

2. இந்தச் சட்டம் மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைந்தது.

34. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1983).

மாநிலங்களுக்கிடையே மது கள்ளக் கடத்தலைத் தடுக்கவும், ஆயத்தீர்வை மற்றும் வணிக வரிகளின் கீழ் ஏற்படும் வருவாய் இழப்பைத் தடுக்கவும் வேண்டி, பின்வரும் நோக்கங்களுக்காக 1937 ஆம் ஆண்டு தமிழ் நாடுமதுவிலக்குச் சட்டத்தைத் (தமிழ் நாடு சட்டம் X/1937) திருத்துவது தேவையென்று கருதப்பட்டது :—

(அ) மேற்சொன்ன சட்டத்தின்கீழ் தேவைப்படுகிறவாறு ஓர் உரிமமோ அல்லது அனுமதிச் சீட்டோ பெறாமல், மதுவை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், போக்கு வரத்து

அல்லது கடந்து செல்லுதலைத் தடுக்க அல்லது சோதனை யிடவேண்டி சோதனைச் சாவடி அல்லது தடை எல்லையை நிறுவுதலுக்கும் மதுவை ஆய்வு செய்வதற்கும், மேற்சொன்ன சட்டத்தின் கீழ்க் குற்றங்கள் இழைக்கப்படுவதில் ஈடுபட்டுள்ள சொத்தைப் பறிமுதல் செய்வதற்கும் வகைசெய்யவும்; மற்றும்

(ஆ) 'கடந்து செல்லுதல்' (Transit) என்கிற சொல்லுக்குத் துல்லியமாகப் பொருள் வரையறை செய்யவும்,

2. தனித்த அல்லது மற்ற சிறப்புரிமை எதையேனும் வழங்குவதற்கு மறுபயனாகச் செலுத்தப்படவேண்டிய தொகை அல்லது கட்டணம் எதையும் அல்லது தயாரிப்பு முதலியவற்றிற்கான அல்லது அத்தகைய சிறப்புரிமை அல்லது உரிமம் வழங்குவதற்கான கட்டணத்தை வசூலிப்பதற்கான நடவடிக்கை எதையும் பொறுத்த அளவில் உறுத்துக் கட்டளையோ (Injunction) அல்லது இடைக்கால நிறுத்திவைப்பு ஆணையையோ வழங்க நீதிமன்றங்களுக்கு இயலுமாறு செய்யப்படக்கூடாது என்பது தேவையானதென்றும் கருதப்பட்டது.

3. அதன்படியே 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) அவசரச்சட்டமானது (தமிழ்நாடு அவசரச்சட்டம் 13/1982) ஆளுநரால் சாற்றப்பட்டது.

4. 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937) 21-ஏ பிரிவு, அனுமதிச் சீட்டு வைத்திருப்பவர்களுக்கு அயல்நாட்டு மது விற்பனைகளின் மீது விற்பனை வரியை விதிப்பதற்கு வகைசெய்கின்றது. ஆயினும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) கீழ், 1972 பிப்ரவரி 22 ஆம் நாளன்றும் அந்நாள் முதற்கொண்டும் எல்லாவகையான அயல் நாட்டு மதுவகைகளின் மீதும் விற்பனை வரி விதிக்கப்பட்டது. ஆகவே, மேற்சொன்ன சட்டத்தில் 21-ஏ பிரிவை இருத்தி வைத்திருக்கத் தேவையில்லை எனறும் மேற்சொன்ன 21-ஏ பிரிவை விட்டுவிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

5. இந்தச் சட்டம் மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமையவும் மேற்சொன்ன நோக்கத்தை எய்தவும் விழைந்தது.

35. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளை பொருள் விற்பனைக் குழுக்கள் (திருத்தச் சட்டம்) (தமிழ்நாடு சட்டம் 3/1983).

1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 6 ஆம் நாளன்று செயற்பாட்டிற்கு வந்த 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்கள் (திருத்தமும் தனிவகைமுறைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1978) 5-ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ், விற்பனைக்குழுக்களின் அதிகாரங்களைச் செலுத்திவரவும் பணிகளைப் புரிந்து வரவும் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். அவ்வாறு நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக் கால அளவு 1982 டிசம்பர் 5 ஆம் நாளன்று முடிவடைந்துவிட்டது. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்கள் சட்டத்திற்கும் (தமிழ்நாடு சட்டம் 23/1959) அதிலும் குறிப்பாக, விற்பனைக் குழுக்களின் அமைவு மற்றும் உருவாக்கம் ஆகியவை தொடர்பானவகைமுறைகளுக்கு விரிவான திருத்தங்களைக் கொண்டுவர அரசு கருதியது கருதியுள்ள சட்டத்தின் பல்வேறு கூறுகளுக்கு இறுதி வடிவங் கொடுப்பதற்கு இன்னும் கொஞ்சங் காலம் ஆகும் என்று கருதப்பட்டது. இந்தச் சூழ்நிலைகளில், விற்பனைக் குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக் கால அளவை மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிப்பதென்று அரசு முடிவு செய்தது. அதன்படியே 1982ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்கள் (திருத்தமும் தனிவகைமுறைகளும்) இரண்டாவது திருத்த அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 14/1982) ஆளுநரால் சாற்றப்பட்டது.

2. இந்தச் சட்டம் மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைந்தது.

36. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளை பொருள் விற்பனைக் குழுக்கள் (திருத்தச் சட்டம்) (தமிழ்நாடு சட்டம் 4/1983).

அரசு முதல்முறையாக 1978 நவம்பர்த் திங்களின்போது புதுக்கோட்டை விற்பனைக் குழுவை நிறுவியது, அது, புதிதாக உருவாக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம் அடங்கிய, அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிக்காக, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு

வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 8 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (1) ஆம் கூறின்கீழ் ஓராண்டுக் கால அளவிற்கு நிறுவப்பட்டது. பின்னர் மேற்சொன்ன விற்பனைக் குழுவின் தற்போதைய உறுப்பினர்கள் அனைவரது பதவிக்கால அளவையும், 1982 டிசம்பர் 5 ஆம் நாள் முடிய மேலும் மூன்று ஆண்டுக் கால அளவிற்கு அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்தது.

2. அரசு, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்கள் சட்டத்திற்கும் (தமிழ்நாடு சட்டம் 23/1959) அதிலும் குறிப்பாக, விற்பனைக் குழுக்களின் அமைவு, மற்றும் உருவாக்கம் ஆகியவை தொடர்பான அதன் வகைமுறைகளுக்கும் விரிவான திருத்தங்களைக் கொண்டுவரக் கருதிவந்தது. கருதியுள்ள சட்டத்தின் பல்வேறு கூறுகளுக்கு இறுதி வடிவங்கொடுப்பதற்கு இன்னும் கொஞ்சம் காலம் ஆகக் கூடும். எனவே, 1982 டிசம்பர் 6 ஆம் நாளன்றும் அந்நாள் முதற்கொண்டும் மேலும் ஓராண்டுக் கால அளவுக்குப் புதுக்கோட்டை விற்பனைக் குழுவின் உறுப்பினர்களின் பதவிக் கால அளவை நீட்டிப்பதென்று அரசு முடிவு செய்தது. அதன்படியே 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்கள் (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/1983), ஆளுநரால் சாற்றப்பட்டது.

3. இந்தச் சட்டம் மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைந்தது.

37. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் (தகவின்மை தடுப்பு) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1983).

1967 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் (தகவின்மை தடுப்புச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1967) 2 ஆம் பிரிவின்படி, அச்சட்டத்தின் இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளில் எதுவும், சட்டமன்றத்தின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்காக அல்லது ஓர் உறுப்பினராக இருப்பதற்காக, அதை வகிப்பவரைத் தகுதியற்றவராக்குதலோ அல்லது எப்போதேனும் தகுதியற்றவராக்கியிருப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது. ஆதாயம் நல்கும் பதவிகள் பற்றிய கூட்டுக்

குழு அதன் ஐந்தாவது நாடாளுமன்ற—பதினான்காவது மற்றும் ட்தினைந்தாவது அறிக்கைகளில் செய்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில், மேற்சொன்ன இணைப்புப் பட்டியலில் பின் வரும் ஐந்து அமைப்புக்களிலும் உள்ள சில பதவிகளைச் சேர்த்துக்கொள்வதென்று அரசு முடிவு செய்தது :—

(i) மாநில வஃபு வாரியம்;

(ii) பல்வேறு தொழில்களில் வேலைவாய்ப்புக்கான குறைம (குறைந்த அளவு) ஊதியங்கள் ஆலோசனைக் குழு;

(iii) பத்திரிகை ஏற்பளிப்புக் குழு.

(iv) கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கான மாநிலமட்ட ஆலோசனைக் குழு;

(v) மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம்.

மேற்சொன்ன இணைப்புப்பட்டியலில், வேறு சில வாரியங்களிலும் நிறுவனங்களிலுமுள்ள சில பதவிகளைச் சேர்த்துக்கொள்ளவும் அரசு முடிவு செய்தது.

2. மேலும், ஆதாயம் நல்கும் பதவிகள் பற்றிய கூட்டுக் குழு, அதன் ஐந்தாவது நாடாளுமன்ற—ஆறாவது அறிக்கையில் தெரிவித்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்சொன்ன இணைப்புப் பட்டியலின் 11 ஆம் இனத்தில் உள்ள (28) ஆம் துணை இனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு பண்டசாலைக் கழகம் தொடர்பான பதிவை விட்டுவிடுவதென்றும் அரசு முடிவு செய்தது.

3. இந்தச் சட்டம் மேற்சொன்ன நோக்கங்களை எய்துகின்றது.

38. 1983 ஆம் ஆண்டு செரீப் நியமனத்திற்கு வகை செய்கின்ற உரிமைப் பட்டயம் (தமிழ்நாடு திருத்தச் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 6/1983).

சென்னையிலுள்ள செரீப், ஆயிரத்து எண்ணூறாம் ஆண்டு டிசம்பர் இருபத்தாறாம் நாள் தேதியிட்ட உரிமைப் பட்டயத்தின்படி நியமிக்கப்படுகின்றார்; அவர் ஓராண்டுக் காலத்திற்குப் பதவி வகிப்பார். அவரே செரீப்பாக மேலும் ஓராண்டுக் காலத்திற்குத் தொடர்ந்து இருக்கலாம் என்று பொது நலன

முன்னிட்டு உத்தரவிட அரசு அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டியது தேவை என்று கருதப்பட்டது. எனவே, மேற்சொன்ன உரிமைப் பட்டயத்தில் உள்ள தொடர்புடைய கூறினைத் தக்கவாறு திருத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. அதன்படியே, 1982 ஆம் ஆண்டு செரிப் நியமனத்திற்கு வகைசெய்கின்ற, உரிமைப் பட்டயம் (தமிழ்நாடு திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 15/1982), மேற்சொன்ன நோக்கத்திற்குச் செயல்வடிவங்கொடுப்பதற்காக ஆளுநரால் சாற்றப்பட்டது.

2. இந்தச் சட்டம் மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைகின்றது.

39. 1983 ஆம் ஆண்டு பச்சையப்பர் அறக்கட்டளை (நிருவாகத்தை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 7/1983).

பச்சையப்பர் அறக்கட்டளையின் நிருவாகத்தை மேற்கொள்வதற்கும் அதனுடன் தொடர்புடையவற்றிற்கும் வகைசெய்ய வேண்டி, 1981 ஆம் ஆண்டு பச்சையப்பர் அறக்கட்டளை (நிருவாகத்தை மேற்கொள்ளுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1981) இயற்றப்பட்டது. இச் சட்டத்திற்கு 1980 டிசம்பர் 22 ஆம் நாளிலிருந்து செயல் வடிவம் கொடுக்கப்பட்டது. மேற்சொன்ன சட்டத்தின் 3 ஆம் பிரிவின்படி, பச்சையப்பர் அறக்கட்டளையின் நிருவாகம், அது பச்சையப்பர் அறக்கட்டளைத் திட்டத்தின் கீழ் எந்த அளவிற்கு அறங்காவலர்க் குழுவிடம் அளிக்கப்பெற்றிருந்ததோ அந்த அளவிற்கு, அரசிடம் இரண்டாண்டுக் கால அளவிற்கு அளிக்கப்பட்டு நிற்கும், மற்றும் அறங்காவலர்க் குழுவினால் செலுத்தப்பட்டும் புரியப்பட்டும் வந்த அதிகாரங்களும் கடமைகளும் பணிகளும் மேற்சொன்ன கால அளவுக்கு அரசால் நேரடியாகவோ அல்லது அந்தப் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிருவாகக் குழு மூலமாகவோ செலுத்தப்பட்டும், புரியப்பட்டும் வரும், அரசு அதிகாரிகள் அடங்கிய அலுவல்முறைக்குழு, நிருவாகக் குழுவாக அமையும்.

2. மேற்சொன்ன அலுவல்முறைக் குழு, காலமுறைதோறும் கூடிவந்திருக்கின்றது. அது, அறக்கட்டளையின் நிருவாகத்தையும் மேற்சொன்ன அறக்கட்டளையால் நிருவகிக்கப்பட்டுவரும் எல்லாக் கல்லூரிகளையும் மற்ற கல்வி நிறுவனங்களையும் சீர் படுத்தியிருக்கின்றது. மேற்சொன்ன 3 ஆம் பிரிவு பச்சையப்பர் அறக்கட்டளையின் நிருவாகம் அரசிடம் இரண்டாண்டுக் கால அளவுக்கு மட்டுமே அளிக்கப் பெறுவதற்கு வகைசெய்தது. மேற்சொன்ன இரண்டாண்டுக் கால அளவு 1982 டிசம்பர் 21 ஆம் நாளன்று முடிவடைந்துவிட்டது. அறக்கட்டளை தொடர்பான பொருள்களை செய்வதற்கும் மேற்சொன்ன அறக்கட்டளையால் நிருவகிக்கப் படும் பல்வேறு கல்வி நிறுவனங்களின் நிருவாகத்தை மேலும் மேம்பாடு செய்வதற்கு மாக, மேற்சொன்ன அறக்கட்டளையின் நிருவாக உரிமை அர சிடம் அளிக்கப் பெற்றுள்ள கால அளவை மேலும் ஓராண்டுக் கால அளவுக்கு நீட்டிப்பது தேவையென்று கருதப்பட்டது. மேற் சொன்ன அறக்கட்டளையின் நிருவாக உரிமை அளிக்கப் பெற் றுள்ள கால அளவை மேலும் ஓராண்டுக் கால அளவுக்கு நீட்டிப்ப தற்காக, 1981 ஆம் ஆண்டு பச்சையப்பர் அறக்கட்டளை (நிரு வாகத்தை மேற்கொள்ளுதல்) சட்டத்தின் 3, 8 ஆகிய பிரிவுக களைத் திருத்தக் கருதப்பட்டது. அதன்படியே, 1982 ஆம் ஆண்டு பச்சையப்பர் அறக்கட்டளை (நிருவாகத்தை மேற் கொள்ளுதல்) திருத்த அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அசவரச் சட்டம் 16/1982) ஆளுநரால் சாற்றப்பட்டது.

3. இந்தச் சட்டம் மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்கு பதிலாக அமைய விழைந்தது.

40. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலில் மீன் பிடித்தலை முறைப் படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 8, 1983).

அரசமைப்பின் உறுப்பு 39 (b) மற்றும், (c), அரசு குறிப்பாக. சமூகத்தின் பொருள் வள ஆதாரங்களின் உடைமையும் கட்டுப் பாடும் பொது நலத்திற்கு மிகச் சிறந்த வகையில் உதவியாக இருக்கும் வண்ணம் பகிர்வு செய்யப்படுவதையும், பொருளியல் அமைப்பு முறையின் செயற்பாடு, பொது மக்களுக்குக் கேடு உண் டாக்கும் வகையில் செல்வமும் உற்பத்திச் சாதனங்களும், ஒரு சிலரிடத்தில் குவிகின்ற விளைவை ஏற்படுத்தாமலிருப்பதையும் உறுதிப் படுத்திக் கொள்வதை நோக்கித் தனது கொள்கையை

நெறிப்படுத்த வேண்டும் என்று வகை செய்கின்றது. மீனைப் பாதுகாக்கவும் கடலில் அறிவியல் அடிப்படையில் மீன் பிடித்தலை முறைப்படுத்தவும் வேண்டியும், மேற்சொன்ன உறுப்பு 39 (b) மற்றும் (c) ஆகியவற்றில் விதிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளுக்குச் செயல்வடிவங் கொடுக்கின்ற வகையிலும், அரசு, ஒரு தனிச் சட்டத்தை இயற்றுவதை மேற்கொள்வதென்று முடிவு செய்தது.

2. மேலும், தங்கள் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பான பகுதி குறித்து, மீன்பிடி கலங்களை இயக்குவோருக்கும், மீன் பிடிக்கும் தொழிலில் பரம்பரையாக ஈடுபட்டு வருபவர்களுக்கும் இடையே பூசல்கள் அடிக்கடி இந்த மாநிலத்தின் நிகழ்கின்றன இந்தப் பூசல்கள் தமிழ்நாட்டின் கடற்கரையோர மாவட்டங்களில் உள்ள சில ஆழ்கடல் மீன்பிடிப்புப் பகுதிகளில், அதிலும் குறிப்பாக இறால் மீன்பிடிக்கும் காலங்களில் மிக அதிகமாவே ஏற்படுகின்றன. பரம்பரை மீனவர்களின் முக்கியமானஎதிர்ப்புகள் என்னவெனில், இதுவரை அவர்கள் அனுபவித்து வந்த உரிமை, அதாவது கடற்கரையோர நீரிலிருந்து இறால் மற்றும் நியாயமாக பிற மீன்களை பிடித்து வந்த உரிமை அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது, என்பது ஒரு புறமிருக்க, மிகத் தேர்ந்த மீன்பிடி கலங்களின் போட்டி காரணமாக அவர்களது விலையுயர்ந்த வலைகளும் மீன்பிடி கலங்களின் பெரும் பைவலையிட்டு மீன் பிடிக்கும் நடவடிக்கைகளால் அடிக்கடி சேதப்படுத்தப்படுகின்றன என்பதாகும். இயந்திரத்தால் இயக்கப்படும் மீன்பிடி கலங்கள் தடையின்றி நடமாடுவதால் தங்கள் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுவதோடு கணிசமான நிதியிழப்பும் ஏற்படுமோ என்றும் பரம்பரை மீனவர்கள் அஞ்சினர். மீன் பிடிகலங்களை இயக்குவோருக்கும் பரம்பரை மீனவர்களுக்கும் இடையே ஏற்படும் கலவரங்களை தடுப்பதற்காக வேண்டியும், தமிழ்நாடு மாநில கடற்கரை யோரம் முழுவதிலும் அல்லது ஒரு குறிப்பிடப்பட்ட பகுதிநெடுகிலும் கடலில் மீன்பிடி கலங்களைக் கொண்டு மீன் பிடிக்கப்படுவதை முறைப்படுத்த இந்திய அரசு அனுப்பிவைத்த மாதிரி கடல் மீன் பிடிப்பு முறைப்படுத்தல் சட்டமுன்வடிவைப் போன்ற வகையில் தனிச்சட்டத்தை இயற்றுவதென்று அரசு முடிவு செய்தது, அதன்படியே, 1983 ஆம் ஆண்டு தமிழ் நாடு கடலில் மீன்பிடித்தலை முறைப்படுத்தல் அவசரச் சட்டமானது (தமிழ்நாடுஅவசரச் சட்டம் 2/1983) ஆளுநரால் சாற்றப்பட்டது

3. இந்த சட்டம் மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைந்தது.

41. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 9/1983).

1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 60/1979) கீழ் (அது பின்னர் திருத்தப்பட்டபடி), ஊராட்சிகளின் அதிகாரங்களைச் செலுத்தி வரவும் பணிகளைப் புரிந்து வரவும் 1979 செப்டம்பர் 12 ஆம் நாளன்றும் அந்நாள் முதற்கொண்டும் மூன்றாண்டுகள் ஆறு மாத கால அளவிற்குத் தனி அலுவலர்கள் நியமிக்கப் பட்டனர். அவர்களது பதவிக் காலம், 1983 மார்ச் 11 ஆம் நாளன்று முடிவடைவதாக இருந்தது.

2. ஊராட்சித் தேர்தல்களில் பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடியைச் சேர்ந்தவர்களுக்கும், மற்றும் பெண்களுக்கும், ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்கள் மற்றும் ஊராட்சி களின் தலைவர்கள் பதவியை ஒதுக்கீடு செய்தது செல்லும் என்று தீர்ப்புரைத்துள்ள 1982 ஏப்ரல் 16 ஆம் நாளிட்ட சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக ஓர் உரிமை வழக்கு மேல் முறையீடு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 1982 நவம்பர் 26 ஆம் நாள் நடந்த அனைத்துக் கட்சித் தலைவர் கள் கூட்டத்தின்போது, அவ்வுரிமை வழக்கு மேல்முறையீட்டை அவசரமாக முடிவு செய்யுமாறு உச்ச நீதிமன்றத்தைக் கேட்டு கொள்ள வேண்டும் என்றும், விரைவுப் படுத்தக்கோரும் மனு (Expedition petition) ஒன்றைத் தாக்கல் செய்ய வேண் டும் என்றும் தேர்தல்கள் அவ்வுரிமை வழக்கு மேல்முறையீடு முடிவு செய்யப்பட்ட உடனேயே நடத்தப்பட வேண்டும் என்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் கருத்தை ஒருமித்த வகையில் தெரிவித்தனர். அதன்படியே அரசும், மேற்சொன்ன மேல்முறையீட்டை முடிவு செய்வதற்காக விரைவாகத் தேதி ஒன்றைக் குறிப்பிடக்கோரி, விரைவுப்படுத்தும் மனு ஒன்றையும் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

3. இதற்கிடையே, 1981 ஆம் ஆண்டு ஊராட்சி வாரியான மக்கள் தொகை கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களின் அடிப்படை

யில் எண்ணிக்கையை மறுநிர்ணயம் செய்யவும், வார்டுகளுக்கு (தொகுதிகளுக்கு) எல்லை வரையறுக்கவும் இடங்களைப் பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1983 சனவரி 1 ஆம் நாளை அடிப்படைத் தகுதி தேதியாகக் கொண்டு வாக்காளர் பட்டியலை திருத்தியமைக்கும் பணியை, ஊராட்சிகளில் உள்ள தொகுதிகளுக்கு (வார்டுகளுக்கு) எல்லை வரையறுத்ததற்குப் பிறகு, மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்குமான தேர்தலை, இந்த ஏற்பாடுகளைச் செய்ததற்குப் பிறகு நடத்த வேண்டியதாக இருந்தது. எனவே தனி அலுவலர்களின் பதவிக்கால அளவை 1983 மார்ச் 11 ஆம் நாளுக்கு அப்பால் மேலும் ஆறுமாத கால அளவுக்கு நீட்டிப்பது தேவையானதாக ஆயிற்று. அதன் படியே, இந்தத் தனி அலுவலர்களின் பதவிக் கால அளவை 1983 செப்டம்பர் 11 ஆம் நாள் உள்ளடங்கலாக அந்நாள் வரையிலும் நீட்டித்து, 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 60/1979) திருத்துவதென்று அரசு முடிவு செய்தது.

4. இந்தச் சட்டம் மேற்சொன்ன நோக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைந்தது.

42. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1983).

1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின் குடியரசுத் தலைவரின் சட்டம் 5/1977) கீழ் (பின்னர் திருத்தப்பட்டபடி) ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அதிகாரங்களைச் செலுத்தி வரவும் பணிகளைப் புரிந்து வரவும் 1977 பிப்ரவரி 1 ஆம் நாளன்றும் அந்நாள் முதற்கொண்டும் ஆறு ஆண்டு இரண்டு மாதக் காலத்திற்குத் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களது பதவிக் கால அளவு 1983 மார்ச்சு 31 ஆம் நாளன்று முடிவடைவதாக இருந்தது.

2. ஊராட்சித் தேர்தல்களில், ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்கள் மற்றும் ஊராட்சிகளின் தலைவர்கள்

பதவியை, பட்டியல்சாதிகள், பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் ஒதுக்கியது செல்லும் என்று தீர்ப்பளித்துள்ள 1982 ஏப்ரல் 16 ஆம் நாளிட்ட சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக, ஓர் உரிமை வழக்கு மேல்முறையீடு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 1982 நவம்பர் 26 ஆம் நாளன்று நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது, அவ்வுரிமை வழக்கு மேல்முறையீட்டை அவசரமாக முடிவுசெய்யுமாறு உச்ச நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றும், அதற்காக விரைவுப்படுத்தக்கோரும் மனு ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அவ்வுரிமை வழக்கு மேல்முறையீடு முடிவு செய்யப்பட்டதற்குப் பிறகு, உடனடியாகத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் கருத்தை ஒருமித்த வகையில் தெரிவித்தனர், அதன்படியே அரசும், மேற்சொன்ன முறையீட்டை முடிவு செய்ய விரைவாகத் தேதி ஒன்றைக் குறிப்பிட வேண்டி, விரைவுப்படுத்தக் கோரும் மனு ஒன்றைத் உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

3. இதற்கிடையில் 1981 ஆம் ஆண்டு ஊராட்சி வாரியான மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் ஊராட்சிகளின் எண்ணிக்கையை மறு நிர்ணயம் செய்யவும் தொகுதிகளுக்கு (வார்டுகளுக்கு) எல்லை வரையறுக்கவும், இடங்களைப் பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் ஒதுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஊராட்சிகளில் உள்ள தொகுதிகளுக்கு (வார்டுகளுக்கு) எல்லை வரையறுக்கும் பணி முடிவடைந்ததற்குப் பிறகு, 1983 சனவரி 1 ஆம் தேதியை அடிப்படைத் தகுதி தேதியாகக் கொண்டு, வாக்காளர்ப் பட்டியல்களைத் திருத்தி யமைக்கும் பணி மேற்கொள்ளப்படும், இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டதற்குப் பிறகு ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குமான தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ளது. எனவே ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தனி அலுவலர் பதவியில் கால அளவை 1983 மார்ச்சு 31 ஆம் நாளுக்கு அப்பால் மேலும் ஆறு மாதக் காலத்திற்கு நீட்டிப்பது தேவையாக ஆயிற்று, அதன்படியே, இந்தத் தனி அலுவலர்களின் பதவிக் கால அளவை 1983 செப்டம்பர் 30 ஆம் நாள் உட்பட அந்நாள் வரையிலும் நீட்டித்து, 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி

அலுவலர்கள் நியமனச்) சட்டத்தை (குடியரசுத் தலைவரின் சட்டம் 5/1977) திருத்துவதென்று அரசு முடிவு செய்தது.

4. இந்தச் சட்டம் மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவங் கொடுக்க விழைந்தது.

43. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1983).

கலைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றமொன்று, 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XXXV/1958) 155-ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி கலைக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக்குப் பிற்படாத ஒரு தேதி முதற்கொண்டு மாற்றியமைக்கப்படவேண்டும். 1982-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்தச்) சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டபடி, மேற்சொன்ன பிரிவின் (1)-ஆம் உட்பிரிவின் (b) கூறின் வரம்புரையின் கீழுள்ள அதிகாரங்களைப் பயன்கொண்டு, கலைக்கப்பட்ட 15 ஊராட்சி ஒன்றிய மன்றங்களை மாற்றியமைக்கும் தேதி, அவ்வப்போது தள்ளி வைக்கப்பட்டு வந்தது ; அவை 1983 ஏப்ரல் 1-ஆம் நாளன்று மாற்றியமைக்கப்பட வேண்டியவையாய் இருந்தன.

2. 1983 மார்ச்சு 31-ஆம் நாளுக்கு அப்பால் ஆறு மாதங்களுக்கு 359 ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தனி அலுவலர்களின் பதவிக் கால அளவை நீட்டிப்பதென்று அரசு முடிவு செய்தது. எனவே, மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய மன்றங்களையும், மாற்றியமைக்கும் தேதி ஒரே காலத்தில் நிகழ்வதற்காக வேண்டி, மேற்சொன்ன 15 ஊராட்சி ஒன்றிய மன்றங்களை மாற்றியமைக்கும் தேதியையும் மேற்கொண்டு தள்ளி வைப்பது தேவையாக இருந்தது. அதன்படியே, இந்த 15 ஊராட்சி ஒன்றிய மன்றங்களையும் மாற்றியமைக்கும் தேதியை ஆறு ஆண்டு இரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு மொத்தக் கால அளவுக்குத் தள்ளிவைக்க அரசுக்கு அதிகாரமளித்து, மேற்சொன்ன 155-ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (b) கூறின் வரம்புரையைத் திருத்துவதென்று அரசு முடிவு செய்தது.

3. இந்தச் சட்டம் மேற்சொன்ன முடிவுக்குச் செயல் வடிவங் கொடுக்க விழைந்தது.

44. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி மன்றங்கள் தனி அலுவலர்கள் நியமனத் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/1983).

1976-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 28/1976) கீழ் (பின்னர் திருத்தப்பட்டபடி) எல்லா நகராட்சி மன்றங்களுக்கும் 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தால் (தமிழ்நாடு சட்டம் V/1920) அல்லது அதன் கீழ் நிறுவப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட நகராட்சி மன்றங்கள், தலைவர்கள் மற்றும் குழுக்கள் ஆகியவற்றின் அதிகாரங்களைச் செலுத்திவரவும் பணிகளைப் புரிந்து வரவும் 1976 ஜூலை 1-ஆம் நாளன்றும் அந்நாள் முதற்கொண்டு ஆறு ஆண்டு ஒன்பது மாதக் காலத்திற்குத் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். அந்த தனி அலுவலர்களின் பதவிக் கால அளவு 1983 மார்ச்சு 31-ஆம் நாளன்று முடிவடைந்துவிட்டது.

2. நகராட்சிகளிலும், மாநகராட்சி மன்றங்களிலும் பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் இடங்களை ஒதுக்குவதை அறிமுகப்படுத்துவதற்குள்ள சாத்தியக் கூறினை ஆராய்வதற்காக வேண்டி, ஊராட்சிகளுக்கான சாதாரணத் தேர்தல்களை முதலில் நடத்தலாம் என்றும், அதற்குப் பிறகு நகராட்சிகளுக்கும், மாநகராட்சி மன்றங்களுக்கும் தேர்தல்களை நடத்துவதென்றும் கொள்கை முடிவொன்றை அரசு எடுத்தது. ஊராட்சிகளின் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்கள் பதவியை, பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்தவர்களுக்கும், மற்றும் பெண்களுக்கும் ஒதுக்குவது செல்லுமென்று கூறிச் சென்னை உயர்நீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பை எதிர்த்து உரிமை வழக்கு மேல்முறையீடொன்று, தற்போது உச்ச நீதி மன்றத்தின்முன் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கை முடிவு செய்வதற்கு விரைவாக ஒரு தேதியைக் குறிப்பிடுமாறு கோரி உச்ச நீதிமன்றத்தில் விரைவு படுத்தக் கோரும் மனு ஒன்றை அரசு தாக்கல் செய்துள்ளது. இது ஒரு புறமிருக்க, நகராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு முன்பு, தற்போதுள்ள வாக்காளர் பட்டியல்களை, 1983 சனவரி 1-ஆம் தேதியை அடிப்படைத் தகுதித் தேதியாகக் கொண்டு இன்றை நாள் நிலைவரை தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. இதற்குக் குறைந்தது நான்கு மாதங்கள்

ஆகும். எனவே, 1983 மார்ச்சு 31 ஆம் நாளுக்கு முன்னர் நகராட்சிகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு இயலாது. எனவே, இந்நகராட்சி மன்றங்களின் தனி அலுவலர்களின் பதவிக் கால அளவை 1983 மார்ச்சு 31 ஆம் நாளுக்கு அப்பாலும் நீட்டிப்பது தேவையாகியுள்ளது.

3. அதன்படியே, 1983 மார்ச்சு 31-ஆம் நாளுக்கு அப்பால் மேலும் ஓராண்டுக்குக் காலத்திற்கு எல்லா நகராட்சி மன்றங்களின் தனி அலுவலர்களின் பதவிக் கால அளவையும் மேற்கொண்டு நீட்டிப்பதென்றும் அவ்வாறு நீட்டிக்கப்பட்ட கால அளவை சாதாரணத் தேர்தல்களை அதற்கும் முன்னதாகவே நடத்துவதற்கு இயலுமாயின், ஆறு மாதங்களுக்கு மேற்படாத கால அளவுக்குக் குறைப்பது என்று தற்போதிருக்கின்ற வகைமுறையை அப்படியே இருத்தி வைத்துக்கொண்டு, மேற்சொன்ன நோக்கத்திற்காக 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி மன்றங்கள் (தனி அலுவலர் நியமனச்) சட்டத்தை (குடியரசுத் தலைவரின் சட்டம் 28/1976) திருத்துவதென்றும் அரசு முடிவு செய்தது.

இச்சட்டம் மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைந்தது.

45. 1983ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றத் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/1983).

1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) (பின்னர் திருத்தப்பட்டபடி) 55B பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், சென்னை மாநகராட்சி மன்றத்திற்குத் தேர்தல்களை நடத்துவதற்குச் சென்னை மாநகராட்சி தனி அலுவலர் ஏற்பாடுகள் செய்ய வேண்டிய காலஅளவு 1974 நவம்பர் 30 ஆம் நாளிலிருந்து எட்டு ஆண்டு ஆறு மாதங்களாக நிர்ணயிக்கப்பட்டது. மேற்சொன்ன கால அளவு 1983 மே 30ஆம் நாளன்று முடிவடைந்துவிட்டது.

2. நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும், பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் இடங்களை ஒதுக்குவதை அறிமுகப்படுத்துவதற்

குள்ள சாத்தியக் கூறினை ஆராய வேண்டி, ஊராட்சிகளுக்கான சாதாரணத் தேர்தல்களை முதலில் நடத்தலாம் என்றும், அதற்குப் பிறகு நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்குமான தேர்தல்களை நடத்துவதென்றும் கொள்கை முடிவொன்றை அரசு எடுத்தது. ஊராட்சிகளின் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்கள் பதவியைப் பட்டியல் சாதிகள் பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்தவர்களுக்கும், மற்றும் பெண்களுக்கும் ஒதுக்குவது செல்லும் என்று கூறிச் சென்னை உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை எதிர்த்து, ஓர் உரிமை வழக்கு மேல் முறையீடு தற்போது உச்ச நீதிமன்றத்தின் முன் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கை முடிவு செய்வதற்கு விரைவாக ஒரு தேதியை நிர்ணயிக்குமாறு கோரி, உச்ச நீதிமன்றத்தில் விரைவு படுத்தக் கோரும் மனு ஒன்றை அரசு தாக்கல் செய்தது. இது ஒரு புறமிருக்க, சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு முன்னர், 1983 சனவரி 1 ஆம் நாளை அடிப்படைத் தகுதித் தேதியாகக் கொண்டு, வீடு வீடாகச் கணக்கெடுத்து வாக்காளர்ப் படடியல்களைத் தயாரிக்க வேண்டியுள்ளது. இதற்குக் குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும். ஆகையால் 1983 மே 30 ஆம் நாளுக்கு முன்பாக சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல்களை நடத்துவது இயலாததாக இருந்தது. எனவே, சென்னை மாநகராட்சியின் தனி அலுவலர், சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல்களை எந்தக் கால அளவுக்குள் நடத்தியாக வேண்டுமோ அந்தக் கால அளவை 1983 மே 30 ஆம் நாளுக்கு அப்பால் நீட்டிப்பது தேவையாக ஆயிற்று.

3. அதன்படியே மேற்சொன்ன கால அளவை 1983 மே 30-ஆம் நாளுக்கு அப்பால் ஓராண்டுக்குக் காலத்திற்கு மேலும் நீட்டிப்பதென்றும் அவ்வாறு நீட்டிக்கப்பட்ட கால அளவை, சாதாரணத் தேர்தல்களை அதற்கும் முன்னதாகவே நடத்த இயலுமாயின், ஆறு மாதங்களுக்கு மேற்படாத கால அளவுக்குக் குறைப்பது என்று தற்போதிருக்கின்ற வகைமுறையை அப்படியே இருத்தி வைத்துக்கொண்டு, மேற்சொன்ன நோக்கத்திற்காக 1919ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் IV/1919) திருத்துவதென்றும் அரசு முடிவு செய்தது.

4. இச்சட்டம் மேற்சொன்ன முடிவுக்குச் செயல் வடிவங் கொடுக்க விழைந்தது.

46. 1983ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1983).

கோயம்புத்தூர் மாநகராட்சி 1981 மே 1-ஆம் நாள் முதல் அமைத்துருவாக்கப்பட்டது. 1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) VII ஆம் இணைப்புப் பட்டியலிலுள்ள 4-ஆம் விதியின் கீழ், தனி அலுவலர் ஒருவர் அவரது நியமனத் தேதியிலிருந்து, அதாவது 1981 ஜூன் 12-ஆம் நாளிலிருந்து இரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளாக ஒரு நாளில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவிக்கு வருவதற்காக வேண்டி, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும், மேற்சொன்ன சட்டத்தினால் அல்லது அதன்கீழ் நிறுவப்பட்ட அல்லது அமைத்துருவாக்கப்பட்ட மாநகராட்சி, மேயர் மற்றும் குழுக்களின் அதிகாரங்களைச் செலுத்தவும் பணிகளைப் புரியவும் நியமிக்கப்பட்டார். இந்தக் கால அளவு 1983 ஜூன் 11 ஆம் நாளன்று முடிவடைந்துவிட்டது.

2. நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் இடங்களை ஒதுக்குவதை அறிமுகப்படுத்துவதற்குள்ள சாத்தியக் கூறினை ஆராய வேண்டி ஊராட்சிகளுக்கான சாதாரணத் தேர்தல்களை முதலில் நடத்தலாம் என்றும், அதற்குப் பிறகு நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்குமான தேர்தல்களை நடத்துவதென்றும் கொள்கை முடிவு ஒன்றை அரசு எடுத்தது. ஊராட்சிகளின் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்கள் பதவியை, பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் ஒதுக்குவது செல்லும் என்று கூறிச் சென்னை உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை எதிர்த்து, உரிமை வழக்கு மேல்முறையீட்டொன்று தற்போது உச்ச நீதிமன்றத்தின் முன் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கை முடிவு செய்வதற்கு விரைவாக ஒரு தேதியை நிர்ணயிக்குமாறு கோரி உச்ச நீதிமன்றத்தின் விரைவுபடுத்தக் கோரும் மனு ஒன்றை அரசு தாக்கல் செய்துள்ளது. இது ஒருபுறமிருக்க, கோயம்புத்தூர் மாநகராட்சிக்குத் தேர்தல்களை நடத்துவதற்கு முன்னர் மாநகராட்சி எல்லைகள் தொகுதிகளாக (வார்டுகளாக) எல்லை வரையறுக்கப்பட வேண்டியுள்ளது,

வாக்காளர்ப் பட்டியல்கள் 1983 சனவரி 1 ஆம் நாளை அடிப்படைத் தகுதித் தேதியாகக் கொண்டு, வீடு வீடாகக் கணக்கெடுத்துப் புதிதாகத் தயாரிக்கப்பட வேண்டியுள்ளன. இதற்குக் குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும். ஆகையால் 1983 ஜூன் 11ஆம் நாளுக்கு முன்னர் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குத் தேர்தல்களை நடத்த இயலாமல் இருந்தது. எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சித் தனி அலுவலரின் பதவிக் கால அளவை 1983 ஜூன் 11ஆம் நாளுக்கு அப்பால் நீட்டிப்பது தேவையானதாக ஆயிற்று.

3. அதன்படியே, கோயம்புத்தூர் மாநகராட்சித் தனி அலுவலரின் பதவிக் கால அளவை 1983 ஜூன் 11 ஆம் நாளுக்கு அப்பால் மேலும் ஓராண்டு காலத்திற்கு மேலும் நீட்டிப்பதென்றும், அவ்வாறு நீட்டிக்கப்பட்ட கால அளவை அதற்கும் முன்னரே சாதாரணத் தேர்தல்களை நடத்த இயலுமாயின் ஆறு மாதங்களுக்கு மேற்படாத கால அளவுக்குக் குறைப்பது என்று தற்போது இருக்கின்ற வகைமுறையை அப்படியே இருத்திவைத்துக்கொண்டு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) VII ஆம் இணைப்புப் பட்டியலைத் திருத்தவும் அரசு முடிவு செய்தது.

4. இச்சட்டம் மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவங் கொடுக்க விழைந்தது.

47. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கீடு (முன்னனி மானியம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1983).

இந்தச் சட்டம், பின்வருவனவற்றிற்காகத் தேவைப்படும் சில தொகைகளை மாநிலத்தின் திரள் நிதியத்திலிருந்து எடுப்பதற்கும் அத்தொகைகளை ஒதுக்கீடு செய்வதற்கும் வகை செய்ய அரசமைப்பின் 206 ஆம் உறுப்பையொட்டி இயற்றப்பட்டிருக்கின்றது:

(அ) 1983-84ஆம் நிதியாண்டின் ஒரு பகுதிக்கு மாநில அரசின் மதிப்பிட்ட செலவினத்தைப் பொறுத்த அளவில், தமிழ்நாடு சட்டப் பேரவையினால் முன்கூட்டியே அளிக்கப்பட்ட மானியங்கள் ; மற்றும்

(ஆ) அந்த நிதியாண்டின் அதே பகுதிக்கு மேற்சொன்ன நிதியினால் பொறுப்பேற்கப்பட்ட (charged) செலவினம்,

1983ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கீடு சட்டம் (தமிழ்நாடு சட்டம் *16/1983*),

இந்தச் சட்டம், பின்வருவனவற்றிற்காகத் தேவைப்படும் பணத்தை மாநிலத்தின் திரள் நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்வதற்கு வகை செய்ய, அரசமைப்பின் 204ஆம் உறுப்பின் (1)ஆம் கூறுடன் இணைத்து 205ஆம் உறுப்பையொட்டி இயற்றப்பட்டு இருக்கின்றது.

(அ) 1982 ஏப்ரல் 1ஆம் நாளன்று தொடங்கிய நிதி யாண்டிற்கு மாநில அரசின் செலவினத்திற்காகத் தமிழ்நாடு சட்டப் பேரவையினால் அளிக்கப்பட்ட துணை மானியங்கள்; மற்றும்.

(ஆ) இந்தக் கால அளவிற்கு மாநில திரள் நிதியம் பொறுப் பேற்றுக்கொண்ட துணைச் செலவினம்.

அத்தியாயம் 16.

பணியாளர் மற்றும் நிர்வாகம் சீர்திருத்தத்துறை

அத்தியாயம் 16

பணியாளர் மற்றும் நிர்வாகம் சீர்திருத்தத்துறை

சிவில் பணிப் பயிற்சி.

இம் மாநிலத்தில் பயிற்சித் திட்டங்களனைத்தையும் நெறி முறைப்படுத்தி, மேற்பார்வையிட்டு, அவை குறித்து கட்டுப் பாட்டு அதிகாரம் வகிப்பதற்காக 1973ஆம் ஆண்டில் தனிப் பட்ட பயிற்சிப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. இப்பயிற்சிப் பிரிவு, பணியாளர் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறையின் அரசு பயிற்சி ஆணையாளர்—செயளாலரின் தலைமையில் உள்ளது.

அண்ணா நிருவாகப் பயிற்சி நிறுவனம்.

தேசிய வாழ்க்கையில் அனைத்து துறையினருக்கும் நிருவாகம் குறித்து கல்வி புகட்ட, 1979ஆம் ஆண்டு ஜூலையில் அண்ணா நிருவாகப் பயிற்சி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இந்த நிறுவனத்தின் ஆசிரியர்கள், மின்சக்தி, பாசனம், போக்கு வரத்து, வேளாண்மை போன்ற முக்கிய துறைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு பெங்களூர், இந்திய நிருவாகப் பயிற்சி நிறுவனத்தில் நிருவாகம் குறித்து தனிப் பயிற்சி அளிக்கப்பட்டது. நிருவாகப் பயிற்சி வாய்ப்பு அனைத்து அரசுத் துறைகளிலும் மாநில அரசு பொதுத்துறை நிறுவனங்களிலும் பரவலாக இருப்பதற்கும், அண்ணா நிரு வாகப் பயிற்சி நிறுவனம், அதன் நடவடிக்கைகளை விரைவு படுத்துவதற்கும், இந்நிறுவனம் இந்தியாவில் உள்ள புகழ்பெற்ற பயிற்சி நிறுவனங்கள் வரிசையில் ஒரு தன்னாட்சி நிறுவனமாக மாற்றப்பட்டது. அண்ணா நிருவாகப் பயிற்சி நிறுவனச் சங்கம், 1-4-1981 முதல் தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு செய்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1975) கீழ் பதிவு செய்யப்பட்டது. அண்ணா நிருவாகப் பயிற்சி நிறுவனச் சங்கத்தின் தலைவர் கல்வி அமைச்சர் ஆவார். பின்வரும் 7 அதிகாரிகள் இதன் தெரிவுக்குழு உறுப்பினர் களாக நியமிக்கப்பட்டுள்ளனர் :—

(i) தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர்.

(ii) அரசு ஆணையாளர், செயலாளர், நிதித்துறை.

(iii) அரசு ஆணையாளர், செயலாளர், பணியாளர்—நிர்வாகச் சீர்திருத்த (பயிற்சி) துறை.

(iv) துணை வேந்தர், அண்ணா தொழில் நுட்பப் பல் கலைக் கழகம்.

(v) துணை வேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழகம், கோயம்புத்தூர்.

(vi) தலைவர், தமிழ்நாடு மின் வாரியம்.

(vii) இயக்குநர், அண்ணா நிருவாகப் பயிற்சி நிறுவனம்'

அலுவல் முறையில் உறுப்பினர் ;

இதுவரை அண்ணா நிருவாகப் பயிற்சி நிறுவனம், 56 பயிற்சித் திட்டங்களை நடத்தியுள்ளது. இதில் மாநில அரசு அலுவலகங்கள், மத்திய அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்களிலிருந்து 1,428 அலுவலர்கள் பங்கு கொண்டனர். 1982-83ஆம் ஆண்டில், அண்ணா நிருவாகப் பயிற்சி நிறுவனம் நிருவாகம் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளில் பல்வேறு ஆலோசனைப் பணிகளையும் ஆராய்ச்சியையும் மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனம் இந்திய, வெளிநாட்டு பல்கலைக் கழகங்களின் ஒத்துழைப்புடன் மூன்று கருத்தரங்குகளை நடத்தியுள்ளது.

சிவில் பணிப்பயிற்சி நிறுவனம்.

பவானி சாகரில் அமைக்கப்பட்டுள்ள சிவில் பணிப் பயிற்சி நிறுவனம் பின்வரும் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது :—

(i) தமிழ்நாடு எழுத்துப்பணி/தமிழ்நாடு நிதித்துறை எழுத்துப்பணியில் நேரடியாக நியமிக்கப்பட்ட இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள் ஆகியோருக்கு இரண்டு திங்கள் அடிப்படைப் பயிற்சி.

(ii) ஆணைநிறைவேற்று, நிர்வாகப் பணிகளை ஆற்றுபவர்களும், பொதுமக்களுடன் இடைவிடாது தொடர்புக் கொண்டிருப்பவர்களுமான மாநில அரசுப் பணி அலுவலர்களுக்கு இரண்டு திங்கள் அடிப்படைப் பயிற்சி வகுப்பு-A.

(iii) ஆணைநிறைவேற்று, நிருவாகப் பணிகள் ஆற்றாவிடினும், சிறு அலுவலகங்களை நடத்திக்கொண்டு, செலவு செய்யும், தணிக்கைகுட்படும், பணியாளர்களை நிருவகிக்கும்

மாநில அரசுப் பணி அலுவலர்களுக்கு மூன்று வாரங்களில் அடிப்படைப் பயிற்சி வகுப்பு—B.

(iv) துணை வட்டாட்சியர்களுக்கு நான்கு வாரங்களில் பணியிருப்புப் பயிற்சி.

(v) வணிகவரிகள் துறையின் இளநிலை உதவியாளர் களுக்கு இரு வாரங்களில் நினைவுகூர் பயிற்சி.

(vi) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணைக் கழகம் 1977, 1981 ஆம் ஆண்டுகளில் நடத்திய சிறப்புத் தகுதித் தேர்வில் வெற்றிபெற்று தமிழ் நாடு எழுத்துப் பணி, தமிழ்நாடு நிதித்துறை எழுத்துப் பணிகளில் உள்ள இளநிலைப் பணியாளர் களுக்கு 28 வேலை நாட்களுக்கு நினைவு கூர் பயிற்சி.

(vii) சத்துணவு திட்ட அலுவலர்களுக்குப் பயிற்சி வகுப்பு.

சிவில் பணிப் பயிற்சி நிறுவனம், இதுவரை அடிப்படைப் பயிற்சிகளில் 9,727 இளநிலை உதவியாளர்களுக்கும், அடிப்படைப் பயிற்சி வகுப்பு A-யில் 395 அதிகாரிகளுக்கும், அடிப்படைப் பயிற்சி வகுப்பு B-யில் 712 அதிகாரிகளுக்கும், வணிக வரிகள் துறை அதிகாரிகளுக்கான நினைவு கூர் பயிற்சியில் 463 அதிகாரி களுக்கும், 390 துணை வட்டாட்சியாளர்களுக்கும், வணிகவரித் துறையைச் சார்ந்த 156 இளநிலை உதவியாளர்கள் உதவி யாளர்களுக்கும் (வணிகவரிகள் துறைக்குமட்டுமான நினைவு கூர் பயிற்சியில்) 36 சத்துணவுத் திட்ட அதிகாரிகளுக்கும் பயிற்சி அளித்துள்ளது.

தலைமைச் செயலக இளநிலை உதவியாளர்கள், நேரடியாக நியமிக்கப்பட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கு 2 திங்கள் கால அளவு அடிப்படைப் பயிற்சியையும், தலைமைச் செயலக தட்டச்சர், சுருக்கெழுத்தர் ஆகியோருக்குக் குறுகிய கால அடிப்படைப் பயிற்சியையும் பணியாளர் நிர்வாகச் சீர்திருத்தத் துறை (பயிற்சி) தலைமைச் செயலகப் பயிற்சி நிலையத்தில் நடத்தி வருகிறது.

திட்டப் பணிகளின்கீழ் பல்வேறு பயிற்சி நிறுவனங்களில் மத்திய அரசு, பணியாளர் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நடத்தும் பல்வேறு பயிற்சி வகுப்புகள், திட்டங்கள், கருத்தரங்கு கள், பயிற்சி வகுப்புகள் முதலியவற்றிற்கும், சிறப்பு

வகைப் பயிற்சி நிறுவனங்கள் நடத்தும் பயிற்சி வகுப்புகளுக்கும் பணியாளர்-நிர்வாகச் சீர்த்திருத்தத் (பயிற்சி) துறை அதிகாரிகளை அனுப்புகிறது. ஆறு மாத காலத்திற்கு கணக்கு வைத்து வருவதில் பயிற்சி அளிப்பதற்காக, இத்துறை தலைமைச் செயலக பிரிவு அலுவலர்களை அனுப்புகிறது.

இத்துறையின் பணிகளில் அதிகாரிகளை வெளிநாட்டுப் பயிற்சிக்கு முகமையில் அனுப்புவதும் அடங்கும். இத்துறை, தமிழ்நாட்டில், இ.ஆ.ப. அதிகாரிகளில் தகுதிகாண் பருவத்தினருக்கான களப் பயிற்சிகளையும் மேற்கொள்கிறது.

தமிழ்நாடு சிவில் பணிகளின் கூட்டுக் குழு

பொதுப் பணியில் திறமையினை அதிகரிக்கச் செய்யவும், பணியாளர்களின் நலனைக் கருதி அவர்களின் குறைகளைக் கவனிக்கவும், சார்நிலை பணிகளின் (Subordinate Services) பிரதிநிதிகளுடைய பல்வேறு கருத்துக்கள், அலுவலர்கள் ஆகியவைகளை ஒருமுகப்படுத்தவும் கருதி, சிவில் பணியாளர்களை பாதிக்கும் விஷயங்களில், சிவில் பணியாளர்களின் பொதுக் குழு வேலை வாய்ப்பளிப்போம் எனும் முறையில் அரசு ஆகிய இருவர் இடையேயும் அதிக பட்ச கூட்டுறவினை நிலவச் செய்வதே இக் குழுவின் நோக்கமாகும்.

பணியாளர்களின் பணி நிலைகளைப் பாதிக்கும் எல்லா விஷயங்களும் குழுவின் பார்வைக்கு உட்பட்டதாகும். குழுவின் பரிந்துரைகள் தகுந்த நடவடக்கைக்காக அரசிற்கு தெரிவிக்கப்படுகின்றன. அப்பரிந்துரையின்மீது அரசின் இறுதி முடிவுகள் குழுவிற்கு அறிவிக்கப்படுகின்றது. குழு அதன் கூட்ட நடவடிக்கைகளை பதிவுசெய்து வைக்கின்றது.

1—4—1982 முதல் 31—3—1983 வரையில் தமிழ்நாடு சிவில் பணிகளின் கூட்டுக் குழு இரண்டு முறை கூடியுள்ளது அக் கூட்டங்களில் 30 பொருள்களைப் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு.

அறிக்கையாண்டில் மாநிலப் பணியாளர் தொகுதியில் 21 வகையான தொழில் நுட்பப் பிரிவில் உட்படுத்தப்பட்ட பதவிகளில் விளம்பரப்படுத்தப்பட்ட 1,774 காலியிடங்களுக்கு குழு நேரடித் தேர்வு நடத்தியது. தேர்வுக் குழு விளம்பரப்படுத்திய 1,774 காலியிடங்களுக்கு 939 வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகப் பணியில், ஒரு ஆங்கில அறிக்கை சேகரிப்பாளர் (English Reporter) பதவிக்கு, தகுதி வாய்ந்த வேட்பாளர் ஒருவரும் இல்லை. தமிழ்நாடு மருத்துவப் பணியில், அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் நிலையத்தில் உள்ள ஒரு (Senior Cytopathologist) பதவிக்கு, ஒரு வேட்பாளரை நேர்முகத் தேர்விற்கு அனுமதித்தும், அவர் நேர்முகத் தேர்விற்கு வரவில்லை. தமிழ்நாடு கருவூலம் மற்றும் கணக்கியல் பணியில், விளம்பரப்படுத்தப்பட்ட ஆறு முதுநிலை கணக்கு அலுவலர் பதவிக்கான காலியிடங்களுக்கு, நான்கு வேட்பாளர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ்நாடு மருத்துவப் பணியில் அரசு மருத்துவ நிலையங்களில் பணி புரிய, ஆறு (Speech Th rapist) காலியிடங்களுக்கு, நான்கு வேட்பாளர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர் தமிழ்நாடு பொதுத் துறையில் காவல் துறை வானொலி பிரிவில் விளம்பரப்படுத்தப்பட்ட இரண்டு தொழில் நுட்ப அலுவலர் பதவிக்கு ஒரு வேட்பாளரே தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ்நாடு மருத்துவப் பணியில் இந்திய மருத்துவப் பிரிவில் விளம்பரப்படுத்தப்பட்ட 109 உதவி மருத்துவ அலுவலர் பதவிக்கான காலியிடங்களுக்கு, 94 வேட்பாளர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ்நாடு வாகன பராமரிப்புத் துறையில் விளம்பரப்படுத்தப்பட்ட நான்கு மோட்டார் வண்டி பொறியாளர் (Automobile Engineer) பதவிகளுக்கான காலியிடங்களுக்கு மூன்று வேட்பாளர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ்நாடு பொதுப் பணித் துறையில், உதவிப் பொறியாளர் (இயந்திரவியல்) பதவிக்கு விளம்பரப்படுத்தப்பட்ட 29 காலியிடங்களுக்கு 28 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒரு விண்ணப்பதாரர் நேர்முகத் தேர்விற்கு ஆஜராகவில்லை. தமிழ்நாடு கால்நடை பராமரிப்புப் பணியில் அறிவிக்கப்பட்ட 617 உதவி கால் நடை மருத்துவர் பதவிகளுக்கு, 208 விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ்

நாடு நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறையில் அறிவிக்கப் பட்ட 370 உதவிப் பொறியாளர் (சிவில்) காலியிடங்களுக்கு 304 விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ் நாடு பொறியியல் பணியில், பொதுப் பணித் துறையில் உதவிப் பொறியாளர் (சிவில்) பதவிக்கு அறிவிக்கப்பட்ட 492 காலி யிடங்களுக்கு, 165 விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பொதுப் பணித்துறையில், உதவிப் பொறியாளர் (மின்சாரம்) பதவிக்கு அறிவிக்கப்பட்ட 57 காலியிடங்களுக்கு, 47 விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலே குறிப்பிட்ட பதவிகளில் தேர்ந்தெடுக்கப்படாத காலியிடங்கள், தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதாரர்கள் இல்லாததாலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பழங்குடியினர் களுக்கும் ஒதுக்கப்பட்ட காலியிடங்களுக்கு விண்ணப்ப தாரர்கள் இல்லாததாலும் நிரப்பப்பட முடியவில்லை.

மேலும், சார்நிலைப் பணியில் நேரடியாக பணியாளர்கள் நியமிக்கும் பொருட்டு 16 வகையான தொழில் நுட்ப பிரிவில் 649 காலியிடங்கட்கு, 599 விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தமிழ்நாடு போக்குவரத்துத் துறையில் இரண்டாம் நிலை வாகன ஆய்வாளர்கள் பதவிக்கான, 50 காலியிடங்கட்கு 40 விண்ணப்பதாரர்கள் தேர்ர்தெடுக்கப்பட்டனர். தாழ்த்தப் பட்டவர்களுக்கும், பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்ட 12 காலியிடங்கட்கு தகுதியான மதிப்பெண்களை பெற்றிருந்த இருவர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ்நாடு தொழில் சார் நிலை பணியில், தொழில் ஆய்வர் மற்றும முதல் நிலை மேலாள் பதவிக்கு அறிவிக்கப்பட்ட 20 இடங்களுக்கு 18 விண் ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 4 இடங்களுக்கு இருவர் மட்டுமே விண்ணப்பித்திருந்தனர். தமிழ்நாடு கல்வித் துறையில் உடற்பயிற்சி இயக்குநர் பதவிக்கு 36 காலியிடங்கட்கு 35 விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தாழ்த்தப் பட்ட மற்றும் பழங்குடியினர் ஒதுக்கப்பட்ட 6 இடங்களுக்கு 5 ண்ணப்பதாரர்களே இருந்தமையால் அவர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ் நாடு மருத்துவர் சார்நிலைப் பணியில், புள்ளி விவர பணியாளர் பதவிக்கு அறிவிக்கப்பட்ட 4 காலியிடங்கட்கு, 3 விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்

பட்டனர். மேற் சொன்ன பதவிக்கு, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினரில் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர் எவரும் இலர். தமிழ்நாடு கல்வி சார் நிலைப் பணியில், பள்ளி கல்வித் துறையில் மொழி பண்டிதர் (Language Pandit) பதவிக்கு அறிவிக்கப்பட்ட 487 காலியிடங்கட்கு, 451 விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்தப் பதவிக்கு, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 104 காலியிடங்களில், 68 விண்ணப்பதாரர்கள் மட்டும் இருந்ததால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1981–82 ஆம் ஆண்டுக்கான தொகுதி 1-ல் உட்படுத்தப் பட்ட 3 வகையான தொழில் நுட்பமில்லாத பதவிகளுக்கு 10 நபர்களை இக்குழு 1982 ஆம் ஆண்டு தேர்வு செய்தது. மேலும் 1982 ஆம் ஆண்டு மற்றுமொரு தொகுதி 1-ல் உட்படுத்தப்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பங்களை வரவேற்று உள்ளது. தொகுதி IIக்கான எழுத்துத் தேர்வை 20—5—1982 முதல் 10—6—1982 முடிய இக்குழு நடத்தியது. 6,256 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்து இருந்ததில், 1,067 நபர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். நேர்முகத் தேர்வு 17—2—1983 முதல் 7—3—1983 முடிய நடைபெற்றது. தொகுதி III க்கான எழுத்துத் தேர்வை 19—4—1982 முதல் 29—4—1982 முடிய இக்குழு நடத்தியது. 3,058 விண்ணப்பதாரர்கள், இத்தேர்விற்கு விண்ணப்பித்திருந்தனர். 1982 டிசம்பர் முதல் 1983 பிப்ரவரி வரை நடைபெற்ற நேர்முகத் தேர்விற்கு 382 நபர்கள் அனுமதிக்கப்பட்டனர். தொகுதி IV-ல் உட்படுத்தப்பட்ட பதவிகளுக்கு இக்குழு பிப்ரவரி 1983-ல் எழுத்துத் தேர்வை நடத்தியது. 2,93,154 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்து இருந்ததில் 2,92,504 நபர்கள் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். 13—2—1983 அன்று தேர்வு நடைபெற்றது. வினாத்தாள்கள் முன் கூட்டியே வெளியாகிவிட்டதால், அந்தத் தேர்வு ரத்து செய்யப்பட்டது. அதற்கான அடுத்தத் தேர்வு 1983 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொகுதி V-ல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இயக்குநர் மற்றும் அலுவலால் நிலைச் சீர்திருத்த இணை ஆணையர் அலுவலகத்திற்கும், சிவில் சப்ளை ஆணையர் அலுவலகத்திற்கும், உதவியாளர் பதவிக்காக இக்குழு தேர்வு நடத்தியது. 1,552 விண்ணப்பு

தாரர்கள் எழுத்துத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டு, 10 நபர்கள் எழுத்துத் தேர்வு மூலம் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொகுதி V 1983 க்கு உள்ள பதவிகளுக்கு, இக்குழு விண்ணப்பங் களை வரவேற்று தேர்வு நடத்த உள்ளது. தொகுதி VI-ல் தமிழ்நாடு வனத்துறை சார் நிலை பணியில் வன வேலை கற்பவர் (Forest Apprentice) பணிக்கு இக்குழு எழுத்துத் தேர்வு நடத்தியது. 160 விண்ணப்பதாரர்கள் நேர் முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டு 29 விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மேலும் இக்குழு தொகுதி VII மற்றும் VIII-ல் உட் படுத்தப்பட்ட முறையே நிர்வாக அதிகாரி நிலை, I, II, III, மற்றும் IV நியமனங்கட்கு எழுத்துத் தேர்வு நடத்தியது. தொகுதி VII-ல் 77 விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்விற்கு அனுமதிக்கப்பட்டு 17 நபர்களும், தொகுதி VIII-ல் 38 விண் ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டு 6 விண்ணப்பதாரர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொகுதி X-ல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், 'வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் பண்டகக் காப்பாளர் பதவிகளுக்கு இக்குழு 385 விண்ணப்பதாரர்களுக்கு எழுத்துத் தேர்வு நடத்தி, 3 விண்ணப்பதாரர்களை எழுத்துத் தேர்வு மூலம் மட்டுமே தேர்ந்தெடுத்தது.

1982 ஆம் ஆண்டு பின்வரும பூர்வாங்க எழுத்துத் தேர்வுகளை அதன் தொடர்புடைய பதவிகட்காக நியமன நேர்முகத் தேர்வுக் காக பெறப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையை குறைக்கும் பொருட்டு நடத்ியது.

தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில் உதவி புள்ளி விவர ஆராய்ச்சியாளர் பதவி.

தமிழ்நாடு பொது சுகாதார சார்நிலைப்பள்ளியில் பூச்சி யியல் உதவி அறிஞர் பதவி.

தமிழ்நாடு மருத்துவத்துறையில் அரசு மருத்துவ மனை களில் ஊட்ட உணவு விற்பன்னர் பதவி (Dietician).

தமிழ்நாடு மீன்வள சார்நிலைப் பணியில் ஆய்வக உதவி யாளர் பதவி;

தமிழ்நாடு மருத்துவ சார்நிலைப் பணியில் புள்ளி விவர பணியாளர் பதவி.

தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில், புள்ளி விவரப் பணியாளர் பதவி துறைக்கு புள்ளி விவர ஆய்வர் பதவி.

இக்குழுவால் தனி மற்றும் துறைத் தேர்வுகள் 1982 ஆம் ஆண்டு மே மற்றும் நவம்பர் திங்களில் நடத்தப்பெற்றன. இத் தேர்வுகளில் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை முறையே—

	மே 1982.	நவம்பர் 1982.
(1)	(2)	(3)
தனித்தேர்வுகள்	19,595	21,525
துறைத் தேர்வுகள் ..	11,530	13,520

மாவட்ட உதவி ஆட்சியாளர்கள், காவல்துறை அலுவலர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்கள் ஆகியவர்கட்கான அரையாண்டுத் தேர்வுகள் மற்றும் மொழித் தேர்வுகள் 1982-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் மற்றும் 1983-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நடைபெற்றன. இத் தேர்வுகளில் பங்கு கொண்ட விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை ஒவ்வொரு தேர்வுக்கும் 48. இக்குழு 1983-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் டேராடுனிலுள்ள இராஷ்டிரிய இந்திய இராணுவக் கல்லூரியில் சேர தகுதிக்கான தேர்வுகளை நடத்தியது. இத்தேர்வுகளில் விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 42-ம் எழுதியவர்களின் எண்ணிக்கை 29-ம் ஆகும். மேலே கூறப்பட்ட தேர்வு 1982 ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்படவில்லை. இத்தேர்வுகளின்றி தமிழை தாய் மொழியாக பெறாத மாவட்ட உதவி ஆட்சியாளர்கள், காவல்துறை அலுவலர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்கட்கான 1982-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் தேர்வு நடத்தப்பெற்றது. 5 விண்ணபதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பித்திருந்தும், ஒருவரும் ஆஜராகவில்லை.

சம்பந்தப்பட்ட சார்நிலைப் பணியிலிருந்து அரசுப்பணிக்கு பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலமும் அமர்த்தப்பட்ட

36 ஆதாரக் குறிப்புகளை இக்குழு பரிசீலித்து தகுதியும் பொருத்தமும் வாய்ந்தவர்கள் பட்டியலைத் தயாரித்தது. அரசின் பல்வகைத் துறைகளில், சார்நிலைப்பணியில் தற்காலிக நியமனங்களில் இருக்கும் 1,308 நபர்கள் மூன்று மாதங்களுக்கு மேல் நீடிக்க தேர்வாணைக்குழு ஒப்புதலை அளித்தது. 27 நபர்களின் தற்காலிக நியமனங்களை 24 மாதத்திற்கு மேல் நீடிந்ததிற்கும் மற்றும் 17 நபர்களின் தற்காலிக நியமனங்கள் 30 மாதம் மற்றும் அதற்கு மேலும் தொடர்ந்ததற்கும் இக்குழு இசைவு அளித்தது. அநேகத் துறையில் சம்பந்தப்பட்ட நியமன அதிகாரிகள் தற்காலிக நியமனங்கள் 3 மாதத்திற்கு மேல் நீடிப்பிற்கு ஒரு வருடம் ஆனபிறகும், தேர்வாணைக் குழுவின் இசைவை பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை என்று தெரியவந்தது.

மாநிலப் பணியில் தற்காலிக நியமனங்களில் இருக்கும் 458 அதிகாரிகள் 3 மாதங்களுக்கு மேலும், 235 அதிகாரிகள் ஒரு வருடத்திற்கு மேலும், 195 அதிகாரிகள் 18 மாதங்களுக்கு மேலும், 386 அதிகாரிகள் 24 மாதங்களுக்கு மேலும் தற்காலிக நியமனங்களை நீடிக்க, குழு இசைவு அளித்தது. 122 மேல் முறையீட்டு மனுக்கள், 54 மறு ஆய்வு அல்லது சீராய்வு மனுக்கள், மற்றும் 104 ஒழுங்கு நடவடிக்கைக்கான செயற்குறிப்பு மனுக்கள் ஆகிய வழக்குகளில் இக்குழு அரசுக்கு ஆலோசனையை வழங்கியது. 17 நபர்களின் பிறந்த தேதி மாற்றம் சம்பந்தமாக இக்குழு அரசு மற்றும் துறைத் தலைவர்களால் கலந்தாலோசிக்கப் பட்டது. தமிழ்நாடு அரசு தேர்வாணைக்குழு விதி முறைகள் 1954, 16 (பி) பிற்பகுதியின்படி தமிழ்நாடு மாநில அரசுப் பணியில் உள்ளடங்கிய பதவிகளில் 5 நபர்களை முறையாக நியமிக்கவும், தமிழ்நாடு சார்நிலைப்பணியில் உள்ளடங்கிய பதவிகளில் 37 நபர்களை நியமிக்கவும், தமிழ்நாடு அமைச்சுப் பணி உள்ளடங்கிய பதவிகளில் 327 நபர்களை நியமிக்கவும் இக்குழு ஒப்புதலை வழங்கியது. மாநில அரசுப் பணியில் உள்ளடங்கிய ஒரு பதவியில் 2 நபர்களின் நியமனத்திற்கும், தமிழ்நாடு சார்நிலைப் பணியில் உள்ளடங்கிய பதவியில் 17 நபர்களின் நியமனத்திற்கும், தமிழ்நாடு அமைச்சுப்பணியில் உள்ளடங்கிய பதவிகளில் 24 நபர்களின் நியமனத்திற்கும் ஒப்புதலை வழங்க இக்குழு மறுத்துவிட்டது.

ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்

ஆணையர் மற்றும் துணை ஆணையர் விசாரணை செய்யும் துறை விசாரணைகளின் விவரம் பின்வருமாறு :—

ஆணையர் விசாரணைக்குட்பட்டவர்கள் :

(i) லஞ்ச ஒழிப்புத்துறையினரால் புலனாய்வு செய்யப்பட்டு கண்காணிப்பு ஆணையரால் பரிந்துரை செய்யப்பட்ட அனைத்து மாநிலப்பணி (அ, ஆ பிரிவு) அலுவலர்களின் லஞ்ச சம்பந்தப்பட்ட விசாரணைகள்.

(ii) அரசினரின் முன் அனுமதி பெற்று, துறையினரே கண்டுபிடித்து அரசினரின் (மாநிலப்பணி அ, ஆ பிரிவு) அலுவலர்களின் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை விசாரணைகள்.

(iii) அரசினரின் சார்புப்பணி அலுவலர்கள் (இ, ஈ பிரிவினர்) மாநிலப்பணி (அ, ஆ பிரிவு) அலுவலர்களோடு கூட்டாக சம்பந்தப்பட்ட மேற்கூறிய (i)-ல் மற்றும் (ii)-ல் கண்ட விசாரணைகள்.

துணை ஆணையரின் விசாரணைக்குட்பட்டவைகள் :

(1) லஞ்ச ஒழிப்புத்துறையினரால் புலனாய்வு செய்யப்பட்டு கண்காணிப்பு ஆணையரால் பரிந்துரை செய்யப்பட்ட அனைத்து அரசுச் சார்புப்பணி (இ, ஈ பிரிவு) அலுவலர்களின் லஞ்ச சம்பந்தப்பட்ட விசாரணைகள், அரசினரின் முன் அனுமதி பெற்று அரசினரின் சார்புப்பணி (இ, ஈ பிரிவு) அலுவலர்களின் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை விசாரணைகள்.

நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் (வகைபாடு—கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதி எண். 17-A-ன் படி எந்த ஒரு தமிழ்நாடு அரசு சிப்பந்தியின் மேல் விதி எண்-17 (b) (1)-ன் படி துறையினரின் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தகுதிபடைத்த அலுவலர்களால் ஒப்படைக்கப்பட்ட விசாரணைகளை ஆணையரோ அல்லது துணை ஆணையரோ விசாரணை செய்து வருகிறார்கள்.

1981—82 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முடிவுறா துறை விசாரணைகள், புதிதாக கிடைக்கப்பெற்றவை, முடிவு செய்யப்

பட்டவைகள் (ஆணையர் மற்றும் துணை ஆணையர் அவர்களால்) விவரம் பின்வருமாறு :—

	ஆணையர்.	துணை ஆணையர்.
(1)	(2)	(3)
1–4–82-ல் முடிவுறா விசாரணைகள் ..	124	185
1982–83-ல் கிடைக்கப்பெற்றவை (1–4–82 முதல் 31–3–83 வரை) ..	65	36
மொத்த எண்ணிக்கை	189	221
முடிவு செய்யப்பட்டவைகள்	46	42
1–4–1983-ல் முடிவுறா விசாரணைகள்.	143	179

ஊழல்தடுப்பு கண்காணிப்புத் துறை

இத்துறை 1982-83 ஆம் ஆண்டில் மேற்கொண்ட பணிகளைப் பற்றிய சுருக்கமான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

1. இவ்வாண்டு இத்துறைக்கு வந்த குற்றச்சாட்டு மனுக்களின் எண்ணிக்கை.	2293
(அ) தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு கண்காணிப்புக் குழு மூலமாக வந்த மனுக்கள்.	83
(ஆ) தமிழ்நாடு அரசு துறை தலைமை அலுவலகங்களின் மூலமாக வந்த மனுக்கள்.	111
(இ) இத்துறைக்கு நேரடியாக வந்த மனுக்கள் ..	2,099
மொத்தம்	2,293

முன் விசாரணைகள் :

(அ) 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாள் அன்று முடிவாகாத நிலையிலுள்ள முன் விசாரணைகளின் எண்ணிக்கை.	174
(ஆ) இவ்வாண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட முன் விசாரணைகள்.	321
(இ) மொத்தம்	495
(ஈ) இவ்வாண்டில் முடிக்கப்பெற்ற முன் விசாரணைகள்—	321
(1) விரிவான விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டவை.	111
(2) தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டவைகள்.	98
(3) விசாரணைகள் கைவிடப்பட்டவை	112
மொத்தம்	321
(உ) 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் அன்று முடிவாகாத நிலையில் உள்ள விசாரணைகளின் எண்ணிக்கை.	174

விரிவான விசாரணைகள் :

(அ) 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் அன்று முடிவாகாத நிலையில் உள்ள விசாரணைகளின் எண்ணிக்கை.	249
(ஆ) இவ்வாண்டு எடுத்துக் கொள்ளப்பட்ட விரிவான விசாரணைகள்.	185
(இ) மொத்தம்	434
(ஈ) இவ்வாண்டில் முடிக்கப் பெற்ற விரிவான விசாரணைகள் —	164
(1) வழக்கு பதிவு செய்யப்பட்டவைகள் ..	2
(2) தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்பட்ட முடிவான அறிக்கையின் எண்ணிக்கை.	146
(3) விசாரணை கைவிடப்பட்டவைகள்	16
மொத்தம்	164

(உ) 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் அன்று முடிவாகாத நிலையில் உள்ள விசாரணைகளின் எண்ணிக்கை.	270

கண்ணி வைத்து பிடிக்காத வழக்குகள் :

(அ) 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாள் அன்று முடிவாகாத நிலையில் உள்ள வழக்குகள்.	27
(ஆ) இவ்வாண்டு புதிதாக கண்ணி வைத்து பிடிக்காத வழக்குகள்.	16
(இ) மொத்தம்	43
(ஈ) இவ்வாண்டு முடிக்கப்பெற்ற வழக்குகள் ..	12
(1) நீதி மன்றத்தில் குற்ற வழக்கு தொடரப்பட்டவைகள்.	..
(2) துறைகளில் தக்க நடவடிக்கை எடுக்க அனுப்பப்பட்டவைகள்.	9
(3) வழக்கு தொடர அனுமதிக்காக நிலுவையில் உள்ள வழக்குகள்.	2
(4) விசாரணை கைவிடப்பட்டவைகள்	1
மொத்தம்	12
(உ) 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் அன்று முடிவாகாத நிலையில் உள்ள வழக்குகள்.	31

கண்ணி வைத்து பிடித்த வழக்குகள் :

(அ) 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல்நாள் அன்று முடிவாகாத நிலையில் உள்ள வழக்குகள்.	9
(ஆ) இவ்வாண்டு புதிதாக பதிவு செய்த வழக்குகள்.	25
(இ) மொத்தம் ..	34
(ஈ) இவ்வாண்டு முடிக்கப்பெற்ற வழக்குகள் —	20
(1) குற்ற வழக்கு தொடரப்பட்டவைகள் ..	5
(2) தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டவைகள்.	7
(3) வழக்கு தொடர அனுமதி நிலையில் உளள வழக்குகள்.	5
(4) விசாரணை கைவிடப்பட்டவைகள்	3
மொத்தம்	20

(உ) 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1931 ஆம் நாள் அன்று முடிவாகாத நிலையில் உள்ள வழக்குகள்.	14

நீதி மன்றத்தில் உள்ள வழக்குகள் :

(அ) நீதிமன்றத்தில் 1—4—81 அன்று நிலுவையில் உள்ள வழக்குகள்.	50
(ஆ) நீதிமன்றத்தில் குற்ற வழக்கு தொடரப்பட்டவைகள்.	8
(இ) மொத்த வழக்குகள்	58
(ஈ) மொத்தம் முடிவான வழக்குகளின் எண்ணிக்கை —	13
(1) தண்டனை வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	7
(2) தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	6
மொத்தம்	13

(உ) நீதிமன்றத்தில் 31-3-1983 அன்று நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை.	45

தீர்ப்பாயத்தில் உள்ள விசாரணைகள் :

(அ) தீர்ப்பாயத்தில் 1—4—1982 அன்று நிலுவையில் மேலும் இறுதி ஆணை பிறப்பிக்காமல் இருக்கும் விசாரணைகளின் எண்ணிக்கை.	197
(ஆ) தீர்ப்பாயத்திற்கு புதிதாக இவ்வாண்டு அனுப்பப்பட்ட விசாரணைகள் ..	29
(இ) மொத்தம் விசாரணையில் உள்ளவைகள்	226
(ஈ) தீர்ப்பாயத்தில் மொத்தம் முடிவான விசாரணைகள்	26
(i) தண்டனை விதிக்கப்பட்ட விசாரணைகள்	19
(ii) தள்ளுபடி செய்யப்பட்டவைகள்	7
மொத்தம்	26

(உ) தீர்ப்பாயத்தில் 31—3—1983 அன்று நிலுவை யில் உள்ள விசாரணைகள். 200

துறைகளில் ஒழுங்குமுறை நடவடிக்கைக்காக நிலுவையில் உள்ளவைகள் :

(அ) 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல்நாள் அன்று முடிவாகாது நிலுவையில் உள்ளவைகள்.	395
(ஆ) துறைகளுக்கு இவ்வாண்டு அனுப்பப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை.	115
(இ) மொத்த விசாரணைகளின் எண்ணிக்கை ..	510
(ஈ) மொத்தம் முடிவான விசாரணைகளின் எண்ணிக்கை.	70
(1) தண்டனை வழங்கப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை.	60
(2) தள்ளுபடி செய்யப்பட்டவைகள்..	10
மொத்தம்	70
(உ) துறைகளின் 31—3—1983 அன்று நிலுவையில் உள்ள விசாரணைகள்.	440

நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தண்டனைகள் :

	நபர்களின் எண்ணிக்கை.
(அ) சிறைத்தண்டனை	5
(ஆ) அபராத பணமும் சிறைத்தண்டனையும் ..	16

துறைகளில் வழங்கப்பட்ட தண்டனைகளின் விவரம்.

(அ) வேலையிலிருந்து விலக்கப்பட்டவர்கள்	8
(ஆ) வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் ..	12
(இ) பதவி குறைப்பு பெற்றவர்கள்	3
(ஈ) ஊதியக் குறைப்பு பெற்றவர்கள்	6
(உ) ஊதிய உயர்வு தள்ளி வைக்கப்பட்டவர்கள்.	49
(ஊ) கண்டனம் தவிர சில தண்டனைகள் அளிக்கப்பட்டவர்கள்.	24
(எ) கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டவர்கள்	1

அத்தியாயம் 17

திட்டம் மற்றும் அபிவிருத்தித் துறை

அத்தியாயம்-17.

திட்டம் மற்றும் அபிருத்தித்துறை.

மதிப்பீடு—செய்முறை ஆராய்ச்சித்துறை :

மதிப்பீடு-செய்முறை ஆராய்ச்சித் துறை ஒரு தனித் துறை யாக அமைக்கப்பட்டு ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்துள்ளன. பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்பட்ட ஆராய்ச்சித் திட்டப் பணிகளை மதிப்பிடுவதே இத்துறையின் முக்கியப் பணியாகும். அரசல்லாத ஏனையோர் வழங்கும் நிதி உதவி மூலம் செயல் படுத்தப்படும் திட்டப் பணிகளையும் மதிப்பீடு செய்கிறது. இத் துறை வரி ஆராய்ச்சிப் பணியையும் மேற்கொள்கிறது; ''தமிழ் நாடு ஒரு பொருளாதார மதிப்பீடு'' ''தமிழ்நாடு மாநில வரவு-செலவுத்திட்டத்தின் பொருளாதார செயல்பாடு குறித்த வகைப்பாடு'' ஆகிய இரு ஆண்டுப் பதிப்புக்களை வெளியிட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட்டு முடிக்கப் பட்ட பணிகளின் விவரம் வருமாறு :—

நடப்பாண்டில் இத்துறை பின்வரும் மதிப்பீட்டாய்வுப் பணி களைச் செய்து முடித்துள்ளது :—

(i) கால் நடை வளர்ப்பு மும்முரத் திட்டம்.

(ii) ஆதி திராவிடர்/பழங்குடி வணிகர்களுக்கு சிறுதொழில் செய்யக் கடன் வழங்கும் திட்டம்.

(iii) ஆதிதிராவிடர்/பழங்குடி மாணவர்கள் இந்திய அர சுப் பணிகளுக்கான தேர்வு எழுதுவதற்காகப் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் ஏற்படுத்தல்.

இவற்றைத் தவிர, நடப்பாண்டில் சில சிறப்பு ஆய்வுப் பணி களும் செய்து முடிக்கப்பட்டன:

(i) சாராவியை அடிப்படைப் பொருளாகக் கொண்டு செயல் படுகிற ரசாயன தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட எரி சாராயத்தின் மீதான விற்பனைக் கட்டணம் செலுத்துவ திலிருந்து விலக்களித்தல் ;

(ii) தருமபுரி மாவட்டத்தில் முதலமைச்சரின் குழந்தைகள் நண்பகல் சத்துணவுத் திட்டம் ;

(iii) மேல்நிலைப் பள்ளிக் கல்வியை விரிவாக்கும் முறை கள்;

(iv) 'டிரைசெம்' திட்டம்.

பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் :

இத்துறை, உலக வங்கியின் உதவியுடன் நடத்தப்படும் பயிற்சி வழித் தொடர்புத் திட்டப் பணிகளான பயிற்சி வழித் தொடர்புத் திட்டம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் ஆகிய திட்டங்களைத் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது. கோயம்புத்தூர், செங்கல்பட்டு, தருமபுரி, மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில், பயிற்சி வழிதொடர்புத் திட்டத்தின் முதல் கட்டப்பணி செயல்பாடு குறித்த அடிப்படை ஆய்வு அறிக்கை தயாரிக்கப் பட்டு விட்டது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் தொடர்பாக மதுரை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் அடிப்படைப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. முன்னோடி, கட்டுப்பாட்டு வட்டங்களைப் பற்றிய மதிப்பீட்டுப் பணியும் செய்து முடிக்கப் பட்டுள்ளது. சத்துணவு பற்றிய மாதாந்திர முன்னேற்ற அறிக்கையைத் தயாரிக்கும் பொறுப்பு இத்துறையைச் சேர்ந்ததாகும்.

மதுரை, அடிப்படை ஆய்வு அலுவலகம் :

தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தின்கீழ் துறை இயக்குநர் ஒருவரின் தலைமையின் கீழ் தனிப்பட்ட அலுவலகம் ஒன்று மதுரையில் நிறுவப்பட்டுள்ளது. மதுரை அலுவலகம் பின்வரும் களப்பணிகளை நடப்பாண்டில் முடித்துள்ளது :—

1. மதுரை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் களப்பணி சம்பந்தப்பட்ட அடிப்படை ஆய்வுப் பணி ;

2. கொட்டாம்பட்டி முன்னோடித் திட்டத்தின் களப்பணி மதிப்பீடு ;

3. சிறப்பு ஆய்வுகள் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட களப் பணிகள்.

இலக்கிடப்பட்ட வயதிற்குட்பட்ட குழந்தைகள் எடை பார்க்கப் பட்டனர். இலக்கிடப்பட்ட வயதிற்குட்பட்ட குழந்தைகளின் விவரம் சேகரிக்கப்பட்டது. இத்திட்டத்தில் பங்கேற்காத குழந்தைகளின் விவரம் சேகரிக்கப்பட்டது.

மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பதற்கான இரண்டாம் கட்ட ஆய்வின்போது, சத்துணவு பணியாளர்கள், பலநோக்கு சுகாதார பார்வையாளர்கள் ஆகியோரிடம் பேட்டி காணப்பட்

டது. சுகாதாரத் தொண்டு துணை நிலையங்களிலிருந்து ஊட்டக் குறைவான குழந்தைகளின் நிலை குறித்தும், தாய்மையுற்ற மகளிரை கவனிப்பதற்காகவுள்ள வசதிகள் முதலியன பற்றியும் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன. இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்ட மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை குறித்தும் இத்துறை மதிப்பீடு செய்தது. பின்வரும் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டிற்கான திட்டம் தயாரித்தல், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் பற்றிய இடைக்கால அறிக்கை தயாரித்தல்.

31—12—1982 ஆம் நாள் முடிய, 1982—83-ல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றிய ஆரம்ப அறிக்கை தயாரித்தல். நீலகிரியில் (சுகாதார ஆய்வு) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சமூக முன்னேற்றத் திட்டம்.

புதுடில்லி, நகர-நாட்டுப்புற திட்டக்குழு தாயரித்த மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் பற்றிய வட்டார திட்டம் குறித்து கருத்துத் தெரிவிக்கப்பட்டது. புதுடில்லி, நகர-நாட்டுப்புற திட்டக் குழு தயாரித்த ''மேலோட்ட வளர்ச்சித் திட்டம்'' (Outline Development Plan) பற்றி கருத்து தெரிவிக்கப்பட்டது.

1982—83-ல் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றி குறித்த காலத்திற்கொரு முறை ஆய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டது. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் பற்றி நகர-நாட்டுப்புறத் திட்டக் குழு தயாரித்த பகுதிவாரியான அறிக்கைகள் மீது கருத்து தெரிவிக்கப்பட்டது. மேற்கு மலைத் தொடர் பகுதியில் நீர் நிலைகள் பற்றிய திட்டம் தீட்டும் தொடக்கப்பணிகள், மேற்குமலைத் தொடர் பகுதியில் '' மண்வளப் பாதுகாப்பு '' பற்றிய திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது.

தற்போது தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் சத்துணவுத் திட்டம் பற்றி குறிப்பு தயாரிக்கப்பட்டது.

பின்தங்கிய பகுதிகள் மேம்பாடு பற்றி தேசியக் குழு தாயரித்த அறிக்கை மீது கருத்து தெரிவிக்கப்பட்டது.

மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகவரமைப்பிற்கு செய்யப்படும் பணிகளுக்கான பணிக்கட்டணம் வரையறுப்பது குறித்து மதிப்பீடு செய்தல் ;

தமிழ்நாட்டிற்கு நகர்வாரி அடிப்படையில் மத்திய அரசு வழங்கும் நிதி உதவி பற்றிய சுருக்கக் குறிப்பு, சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் பற்றிய மதிப்பீடு, கோழி வளர்ப்பு நிலையங்கள் பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு, தற்போது இப்பணி நடைபெற்று வருகிறது. தென் ஆர்க்காடு, பெரியார் மாவட்டங்களில், கொத்தடிமைகள் பற்றிய ஒருங்கிணைந்த மதிப்பீட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

மாநிலத் திட்டக் குழு.

மாநிலத் திட்டக் குழுவின் பணிகளைச் சீரமைக்கும் பொருட்டும், ஐந்தாண்டுத் திட்டங்களையும் ஆண்டுத் திட்டங்களையும் அமைப்பதற்காக, இக்குழு பயனுள்ள ஓர் அமைப்பாகச் செயல்படும் பொருட்டு அதன் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டும் தமிழ்நாடு அரசு, 1–11–1980 முதல் மாநிலத் திட்டக்குழுவை மீண்டும் அமைப்பதென முடிவு செய்துள்ளது. மீண்டும் அமைக்கப்பட்ட இக்குழுவின் உறுப்பினர்கள் வருமாறு :—

தலைவர்—மாண்புமிகு முதலமைச்சர்.

துணைத் தலைவர்—முழுநேர-அரசு சார்பற்ற உறுப்பினர்.

முழுநேர உறுப்பினர்கள்—இருவர்.

பகுதிநேர உறுப்பினர்கள்—ஒன்பது பேர்.

மாநிலத் திட்டக் குழுவில், அரசுத் தலைமைச் செயலாளர் பதவித் தரத்தில், முழுநேரத் தலைவர் பதவியை (தற்காலிகமானது) அரசு ஏற்படுத்தியது. அதன்படி, திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., மாநிலத் திட்டக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். பின்னர், அரசு 1–11–1982 முதல், மாநிலத்

திட்டக் குழுவை மாற்றி அமைத்தது. அதில் இடம் பெற்றிருந்த உறுப்பினர்கள் வருமாறு ;—

தலைவர்—அரசு அலுவலர்.

துணைத் தலைவர்—அரசு அலுவலரல்லாதவர்.

முழுநேர உறுப்பினர்கள்—இருவர்.

பகுதிநேர உறுப்பினர்கள்—பன்னிருவர்.

உறுப்பினர்-செயலாளர்—ஒருவர்.

மாநிலத் திட்டக் குழு, 1982–83 ஆம் ஆண்டு இறுதி வரையில், காலமுறைப்படி மாதாந்திரக் கூட்டங்களை நடத்தி, அதன் உறுப்பினர்களும் பிரிவுகளும் கவனித்து வந்த, பெரிய முக்கியமான பிரச்சினைகள் பற்றி விவாதித்தது.

மாநிலத் திட்டக் குழு, இவை தவிர, பின்வரும் பணிகளையும் மேற்கொண்டுள்ளது :—

1. தமிழ்நாடு ஆறாம் ஐந்தாண்டுத் திட்டப்பணி (1980–85) குறித்த ஆங்கில அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டு, அச்சிடப்பட்டு, 1982 செப்டம்பரில் வெளியிடப்பட்டது. இதன் தமிழ் அறிக்கை தயாரிக்கப்பட்டு அச்சிடுவதற்காக அனுப்பப்பட்டது.

2. 1983–84 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டுத் திட்ட வரைவு (தொகுதி I & II), தயாரித்து முடிக்கப்பட்டு அச்சிடப்பட்டு, பின்னர் அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மத்திய திட்டக் குழு, மத்திய அரசு ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டது.

இருபது அம்சத் திட்டத்தின் கீழ் திட்ட வகையிலும் நிதி வகையிலும் அடைந்த சாதனைகள் பற்றிய விவரம் சேகரிக்கப்பட்டு, தனியாக ஒரு சிறு புத்தக வடிவில் வெளியிடப்பட்டது.

முதன்முறையாக, ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைக்கால மதிப்பீடாக ஆண்டுத் திட்ட வரைவு சேர்க்கப்பட்டுள்ளது.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான (1985–90) கோட்பாடுகளை வகுப்பது தொடர்பாக, '' வேளாண்மை '', ''தொழில்கள் '', ''கல்வி'' ஆகியவை குறித்த செயற் குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றுக்கான ஆய்வு வரம்புகள் வகுக்கப்பட்டன.

பள்ளி, கல்லூரி, மருத்துவ சிகிச்சை-ஆராய்ச்சிக் கட்டிடங்கள் முதலியவற்றுக்கு எளிய, செலவு குறைவான வடிவமைப்புகளைப் பின்பற்றுவது பற்றி விவாதிக்கும் பொருட்டு, மாநிலத் திட்டக் குழுவில் உயர் அதிகாரக் கூட்டமொன்று நடைபெற்றது ; பின்னர் இது தொடர்பான செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

தென்மேற்குப் பருவ மழையை நல்ல முறையில் பயன்படுத்துவது பற்றி ஆய்வு செய்ய செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது. சோதனை முறையில் ஆராய்ச்சி நடத்துவதற்கென்று பொள்ளாச்சி தெரிந்தெடுக்கப்பட்டது. 1982 நவம்பர் திங்களில் ஒரு நாள் கருத்தரங்கும் நடைபெற்றது.

அரசு பிறப்பித்த உத்தரவைத் தொடர்ந்து, பல்வேறு வளர்ச்சித் துறைகள், தன்னாட்சி நிறுவனங்கள்/கழகங்கள் தொடர்பான ஆண்டுத் திட்டத்தை (1981–82), மாநிலத் திட்டக் குழு ஆய்வு செய்துள்ளது. கூட்டங்கள் பற்றிய விவரக் குறிப்புகள் அரசுக்கும், பிற துறைத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டன ; இத்துறைகள் தொடர்பான திட்டப் பணிகளைச் செயலாக்குவதில் ஏற்படும் இடையூறுகளையும், தடைகளையும் களைய ஆலோசனைகளும் கூறப்பட்டன.

தமிழ்நாடு மாநில அறிவியல்-தொழில் நுட்பவியல் மன்றம் ஒன்றை அரசு அமைக்கக் கருதியுள்ளது. இம்மன்றம் தொடர்பான குறிப்புகளும் விதிகளும் தயாரிக்கப்பட்டு, கல்வி-அறிவியல், தொழில் நுட்பவியல் துறைக்கு அனுப்பப்பட்டது.

தமிழகத்தில் ''புள்ளிவிவரத் தொகுப்பு வங்கி'' அமைப்பது தொடர்பாக, திட்டத் துறைகளைப் பொறுத்தமட்டில், தகவல் அளிக்கும் முறை, புள்ளி விவரத் தொகுப்பிற்கான அடிப்படைக் கூறுகள் ஆகியவை பற்றிய குறிப்பு ஒன்று தயாரிக்கப்பட்டது.

மாநிலத் திட்டக்குழுக் கூட்டமொன்றில், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், மருத்துவக் கல்விக்காக அரசுக்கு ஏற்படும் செலவில் ஒரு பகுதியை, மருத்துவப் பட்டதாரிகளுக்கு வேலை கிடைத்த பின்னர் அவர்களிடமிருந்து வசூலிக்கலாமென்று கருத்துத் தெரிவித்தார். இது பற்றி ஆய்வு செய்யப்பட்டு, இதனைச் செயலாக்கும் பொருட்டு, காலமுறைப்படிக்கான நடைமுறை வகுக்கப்பட்டன. இது தொடர்பாக, மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்களின் கருத்துகளும், மேலே குறிப்பிடப்பட்ட கால முறைப்படி அமைந்த நடைமுறையும், இச்செயற் குறிப்பு குறித்துத் தக்க முடிவெடுக்கும் பொருட்டு திட்டமிடுதல்-வளர்ச்சித் துறைக்கு அனுப்பப்பட்டன.

தமிழ்நாட்டில் நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து குறித்து குறிப்புத் தயாரிக்கப்பட்டது; அதில், மாநில போக்குவரத்துக் கழகங்களின் சாதனைகள், நிதி நிலைகள், சாதனைகள் மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், விபத்துக்களைக் குறைப்பதற்குமேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள், 1976 முதல் 1982 வரையான கால அளவில் அரசு போக்குவரத்துக் கழகங்களின் குறிப்பிட்ட சில சாதனைகள் ஆகிய விவரங்கள் அடங்கியுள்ளன.

இம் மாநிலத்தில் போக்குவரத்துக் கழகங்கள் குறித்த முக்கியமான கொள்கைகள், சாலைப் பாதுகாப்பு ஆகியவை குறித்து விவாதிப்பதற்கு சிறப்புக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்காக அக்கூட்டத்தின் குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டது.

தாவர எண்ணெய்களின் புதிய வாயில்கள்-உணவு **எண்ணெய்**களின் தேவையை ஈடு செய்ய தமிழ்நாட்டில் உள்ள மக்கள் தொகைகளைக் கண்டறிதல் என்பது குறித்து விவாதிக்க கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரை, வேளாண்மை, கூட்டுறவு, உணவு, தொழில் ஆகிய துறைகள் பரிசீலிப்பதற்காக அரசுக்கு அனுப்பப்பட்டது.

எண்ணெய் வளங்கள் குறித்த பொருளாதார விளைவு பற்றி எண்ணெய்-இயற்கை வாயு குழுவின் மூலம் வேதாரண்யம் பகுதியில் ஆய்வு மேற்கொள்ள மாநிலத் திட்டக் குழுவின் ஒரு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது; இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மின் அனுப்புகையில் ஏற்படும் இழப்புகள் என்பது குறித்து தமிழ்நாடு மின்வாரிய அதிகாரிகளுடன் நடைபெற்றக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. முடிவு தெரிவிக்கப்பட்டது.

கரிம வாயு தொழில்நுட்பம் குறித்து மத்தியத் திட்டக் குழுவின் ஆலோசகர், டாக்டர் பி. ஆர். நாகர் என்பவருடன் விவாதிக்கப்பட்டது ; இவ்விவாதத்தின் முடிவு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் புதிய புதுப்பிக்கத்தக்க எரி வாயில்கள் தொடர்பாக மாநிலத் திட்டக் குழு ஆற்றியுள்ள பணி'' என்பது குறித்து ஒரு கட்டுரை தயாரிக்கப் பட்டது.

தமிழ்நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் பொருள்கள் கொண்டு செல்லப்படுவது குறித்த ஆய்வு இவ்வாண்டும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநிலத் திட்டக் குழுவில் தயாரிக்கப்பட்ட திட்டமிடல் தொடர்பான தொழில்நுட்பச் சொற்கள் குறித்த ஆட்சிச் சொல், அகராதி இறுதி உருபெற்றது.

மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர் திருமதி சரோஜினி வரதப்பன் கேட்டுக்கொண்டதன் பேரில், பூவிருந்தவல்லி வட்டாரத்தில் மாதர் சங்கங்கள் செயல்படுவது குறித்து அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது; இது குறித்து மாநிலத் திட்டக் குழு வின் 18-வது கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இந்த அறிக்கை மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைகளுடன் சமூக நலத்துறை ஆய்வு செய்வதற்காக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இம்மாநில நில பயன்பாட்டு வாரியத்திற்குப் பொருந்தக் கூடிய கொள்கைகள், வழிகாட்டிக் குறிப்புகள் குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஒப்புதலுக்காக அரசுக்கு அனுப்பப்பட்டது.

சுதர்சன் மேம்பாட்டு ஆலோசகர், இருவகைப் பயன்பாட்டு நிறுவனங்களை அமைப்பதற்கான செயற்குறிப்புகள் குறித்து குறிப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அதாவது பொதுப் பணித் துறைக்கு பதில் அனுப்பப்பட்டது.

தமிழ்நாட்டிற்கு, நபர் வாரியான மத்திய அரசின் நிதி உதவி என்பது குறித்து குறிப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப் பப்பட்டது.

திட்டக் காலத்தில் அடைந்த சாதனை குறித்த விவரங் களுடனும் 6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அதற்கான செலவுகள் குறித்த விவரங்களுடனும் கிராமப்புற குடிநீர் வழங்கல் என்பது குறித்த குறிப்பு தயாரிக்கப்பட்டது.

1983 சனவரியில் திட்டப் பணிகள் குறித்து நேரடியாக ஆய்வு செய்வதற்கு மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்கள் பூவிருந்த வல்லி வட்டாரத்தைச் சென்று பார்த்தனர்.

1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பிற்பகுதியில் நைனிடால் என்ற இடத்தில் நடைபெற்ற வட்டார மேம்பாட்டு முக்கிய அம்சங்கள் திட்ட ஒத்துழைப்பு ஆகியவை குறித்த தேசிய மாநாட்டில், மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் கலந்து கொண்டு மாநாட்டில் நன்றிஉரை நிகழ்த்தினார்.

மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடத்திய மாவட்ட மனிதத் திறன் திட்டமிடல், வேலைவாய்ப் பைப் பெருக்குதல் குழுவின் கூட்ட விவாதத்தில் மாநிலத் திட்டக் குழுவின் அரசு சார்புள்ள பிரதிநிதி பங்கு கொண்டார்.

அத்தியாயம் 18

மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை.

Libra.
Acc No.
Date

அத்தியாயம் 18.

மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை

தமிழ்நாட்டில் மதுவிலக்கும் ஆயத்தீர்வையும் :

மதுவிலக்கு தற்காலிகமாக ரத்து செய்திருந்த காலத்தைத் தவிர மற்றைய காலங்களில், மதுவிலக்குக் கொள்கையினை தமிழ்நாடு தீவிரமாகச் செயலாற்றியிருக்கிறது. மதுவிலக்குக் கொள்கையில் தமிழ்நாடு முழு நம்பிக்கை வைத்திருக்கிறது. மதுவிலக்குச் சட்டத்தை தமிழ்நாடு கைவிடாது. மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்தியமைப்பதன் வாயிலாகக் கிடைக்கும் பணத்தை சமூக விரோதிகள் சுரண்டுவதற்கு இடம் கொடுக்காமல் அரசே பெறமுடியும் என்று கருதுகிறது. எனவே தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 10/1937) பின்வரும் திருத்தங்கள் செய்து, 1981–82 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டன. இதன்படி 25 வயதுக்கு மேற்பட்டவர் மட்டுமே மது அருந்த இது தொடர்பாக உள்ள நடைமுறைப் படி அனுமதிக்கப்படுகின்றனர். அனுமதி பெற்ற கடைகளில் புட்டிகளில் அடைக்கப்பட்ட சாராயம் மட்டுமே விற்பனைக்கு அனுமதிக்கப்படுகிறது. விற்க அனுமதி பெற்றவர்கள் மட்டுமே மதுபானங்கள் விற்க அனுமதிக்கப்படுகின்றனர். கள்ளச் சாராயம் வடித்தல், அனுமதியின்றி மதுபானம் விற்றல், மதுபானம் அருந்துதல் தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறி குற்றம் செய்பவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுகின்றனர். ஆயத்தீர்வை விதித்து வசூலிக்க விதிகள் இயற்றப்பட்டுள்ளன. ஆண்டு ஒன்றுக்கு கள் அருந்த ரூ. 2-ம், சாராயம் அருந்த ரூ. 5-ம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானம் அருந்த ரூ. 25-ம் அனுமதி கட்டணமாகும். விண்ணப்பங்களைப் பரிசீலிக்க அனுமதி வழங்க வட்ட ஆயத்தீர்வை துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

1982–83 ஆம் ஆண்டுக்கு அறிக்கையிடப்பட்ட 5,164 சாராயக் கடைகளில் 5,024 கடைகள் மட்டுமே இயங்கின. 1982–83 ஆம் ஆண்டுக்கு அறிக்கையிடப்பட்ட 9,583 கள்ளுக் கடைகளில் 9,304 கடைகள் செயல்பட்டன. மேலும், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள் சில்லறையில் விற்பனை செய்ய

1,206 மதுபானக் கடைகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. 1982-83 ஆண்டுக்காக, அனுமதி புதுப்பிக்காத கடைகளைத் தவிர்த்து, தடை ஆணையின்கீழ் உரிமங்கள் ரத்து செய்யப்பட்ட கடைகளும் ஆக 1,091 கடைகள் 1982-83 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்பட்டு வந்தன.

மதுவிலக்கு—ஆயத்துறை ஆணையாளர் மாநில மதுவிலக்கு ஆயத்துறையில் தலைவராதலால், அவ்வப்போது திருத்தப்பட்ட தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின்கீழும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படியும் பிறப்பிக்கப்பட்ட அறிக்கைகளின்படியும், தனக்குள்ள பல்வேறு அதிகாரங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

சென்னையில் உள்ள தலைமையகத்தில், மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறை ஆணையாளருக்கு உதவியாக, நான்கு இணை ஆணையாளர்கள் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் மாநில முழுவதும் அதிகார வரம்பு உள்ளது. கணக்குப் பணியைக் கவனிக்க தலைமைக் கணக்கு அலுவலர் ஒருவரும் அவருக்கு துணையாக இருக்கிறார். முதுநிலை கால முறை சம்பள விதத்தில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி ஒருவர் இணை ஆணையாளராக உள்ளார். மற்றவர்கள் மாவட்ட வருவாய் அதிகாரிகள் பதவித் தரத்தில் உள்ளனர். முதன்மை கணக்கு அதிகாரி, கருவூலம் மற்றும் கணக்குத் துறையில் இரண்டாம் வகுப்பு அதிகாரி பதவித் தரத்தில் பணியாற்றுகிறார். அவர்கள், வடிசாலைகள், சாராயக் கலவைத் தொழிற்சாலை, ஆயத் தீர்வைக்குட்பட்ட மது வகைத் தொழிற்சாலைகள் ஆல்கஹால் அடிப்படையிலான பெரிய தொழிற்சாலைகள், ஆயத்-தீர்வைக்குட்பட்ட கிடங்குகள் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது விற்பனை நிலையங்களை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்கின்றனர்.

மாவட்ட அளவில், மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறை நிருவாகம், மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. மாவட்டத்திற்கு ஒருவர் வீதப் 22 உதவி ஆணையாளர்களும், 6 பெரிய மாவட்டங்களில் மாவட்டம் ஒன்றுக்கு ஒரு கூடுதல் உதவி ஆணையாளரும் செயல்படுகின்றனர்.

வட்ட அளவில், வட்டாட்சியர் பதவித் தரத்தில், ஒரு வட்ட ஆயத்தீர்வை துறை அலுவலரும், இரண்டு ஆயத்தீர்வைத் துறை ஆய்வாளர்களும், அவர்களுக்கு உதவியாகப் பணியாளர்களும் உள்ளனர். அவர்கள் மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறை பணிகளுக்குப் பொறுப்புடையவராவர்.

கருப்பஞ்சாற்று கசண்டுக் கட்டுப்பாடு :

மாநிலத்திலுள்ள 21 சர்க்கரை ஆலைகள் கரும்பஞ் சாற்றுக் கசண்டின் துணைப் பொருளாக உற்பத்தி செய்கின்றன. சர்க்கரை ஆலைகளிலிருந்து கருப்பஞ்சாற்றுக் கசண்டு வழங்குவதைக் கட்டுப்படுத்தவும், கண்காணிக்கவும், சர்க்கரை ஆலை ஒவ்வொன்றுக்கும் ஒருவர் வீதம் வட்டாட்சியர் பதவித் தரத்தில் ''பண்டேஜ் '' அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இணை ஆணையாளர்களுக்கு உதவியாக வடிசாலை அதிகாரிகள் ஆயத்தீர்வைக்கு உட்பட்ட பொருள்கள் ஆய்வு அதிகாரிகள், சர்க்கரை ஆலைகளில் '' பண்டேஜ் '' அதிகாரிகள் (Bondage officers) ஆயத்தீர்வை மேற்பார்வை அதிகாரிகள் ஆகியோர் உள்ளனர். வடிசாலை அதிகாரிகள் துணை ஆட்சியர் பதவித் தரத்தில் பணிபுரிகின்றனர். மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானங்களில் ஆயத்தீர்வைக்குட்பட்ட மது வகைக் கிடங்குகளுக்கு வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் பதவித் தரத்தில் உள்ள ஆயத்தீர்வை மேற்பார்வை அதிகாரிகள் பொறுப்பு வகிக்கின்றனர்.

வடிசாலைகள் :

1982–83 ஆம் ஆண்டுக் காலத்தில் மாநிலத்தில் 8 வடிசாலைகள் இயங்கி வந்தன. வடிசாலை அதிகாரிகள் மாவட்ட வருவாய் அதிகாரி பதவித் தரத்தில் ஒரு வடிசாலைக்கு ஒருவரும், மற்ற வடிசாலைக்கு துணை ஆட்சியர் பதவித் தரத்திலும், தேவையான அதிகாரிகளுடன் மேற்பார்வைப் பொறுப்பினை ஏற்கின்றனர். டிசம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து அடுத்த ஆண்டில் நவம்பர் திங்கள் முடிய உள்ள ஓராண்டுக் காலத்தினை '' ஆல்கஹால் '' கணக்கு ஆண்டாகக் கொண்டு கருப்பஞ் சாற்றுக் கசண்டு மற்றும்

சாராய உற்பத்தி ஆகியவை கணக்ிடப்படுகின்றன. ''ஆல்கஹால்'' கணக்கு ஆண்டில் அவற்றின் உற்பத்தி வருமாறு:—

வரிசை எண்ணும் வடிசாலையின் பெயரும்.	உற்பத்தித் திறன்.	1982—83-ல் 1—4—1982 இருந்து 31—3—1983ஆம் நாள் வரை ஆல்கஹால் உற்பத்தி.
(1)	(2)	(3)
	(இலட்சம் லிட்டரில்)	
1. திருச்சி டிஸ்டில்லரீஸ் கெமிக் கல்ஸ், லிமிடட், திருச்சி-4 ..	136.00	97.0
2. ஈ. ஐ. டி. பாரி(1) லிமிடெட்	76.00	75.88
3. சக்தி சுகர்ஸ் ..	180.00	167.25
4. அரவிந்த் டிஸ்டில்லரி	132.00	77.32
5. ஓரியன் கெமிகல்ஸ்	25.50	14.56
6. எஸ். ஏ. ஐ. எல்.	13.50	14.46
7. கோயம்புத்தூர் ஆல்கஹால் கெமிக்கல்ஸ் லிமிடெட் ..	120.00	68.98
8. செம்பிளாஸ்ட்	148.50	1.68
மொத்தம்	831.50	517.21

ஆயத்தீர்வை வருவாய் :

1980-81 ஆம் ஆண்டிலிருந்து 1982-83 ஆம் ஆண்டு வரை முக்கிய ஆதாரங்களின் வாயிலாகக் கிடைத்த வருவாய் வருமாறு:—

வரிசை எண்ணும் விவரமும்.	1980—81	1981—82	1982—83
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்)		
1. நாட்டுச் சாராவி (சாராயம்)	5.76	6,879.35	10,605.31
2. புளிக்கவைத்த கள்	0.30	2,157.55	2,728.47

வரிசை எண்ணும் விவரம்.	1980–81	1981–82	1981–82
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்)	
3. மால்ட் மது (பீர்) ..	70.40	180.65	156.82
4. வெளி நாட்டு மது வகைகள் சாராவி	823.32	1,206.83	1,370.87
5. வணிகப்பயனுக்குரிய இயல்பு மாற்றுப்பட்ட சாராயி, மருந்து கலந்த மது.	120.27	164.86	142.90
6. அபின், ஆல்கஹால், முதலியன அடங்கிய மருந்துப் பொருள், ஒப் பனைப் பொருள் தயா ரிப்புகள்.	175.28	196.66	254.55
7. அபின், கஞ்சா, ஏனைய மருந்துப் பொருள்கள்.	0.49	0.59	0.46
8. ஏனைய வருவாய்கள்	58.73	230.17	90.67
9. அபராதம், பறிமுதல் செய்யப்பட்டவை	0.51	19.32	9.78
10. பணிகள், பணிக் கட் டணங்கள்.	1.42	2.58	1.07
மொத்தம்	1,256.48	11,038.56	15,360.90
கழிக்க—திருப்பிக் கொடுத்த தொகை (—) ..			147.95
நிகர வருவாய்			15,212.95

அத்தியாயம் 19

பொருத்துறை.

அத்தியாயம் 19.

பொதுத் துறை

கர்நாடக உதவி தொகை :

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களை கர்நாடக உதவித் தொகை சம்பள அளிப்பு அலுவலராகப் பணியாற்றுகிறார் இந்த உதவித் தொகை ஆற்காடு நவாப் அவர்களின் சந்ததியர். களுக்கு வழங்கப்படுகிறது. இங்கு 123 நிலை உதவிப் பணம் மற்றும் 7 நிலையில்லா உதவிப் பணம் பெறுபவர்கள் உள்ளார் கள். இந்த தலைப்பின் கீழ் 31—3—1983 வரையிலான ஒரு ஆண்டிற்கு ரூ. 1,41,311.23 செலுத்தப்பட்டது. முழு செலவும் மத்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு அமைப்பு :

மாநில மாவட்ட, வட்ட, நகர அளவில் மக்கட் தொகை பற்றிய, சில அடிப்படை விவரங்களை அளிக்கும் 1981 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பில் தொடக்கப் புள்ளி விவரச் சுருக்கம் ஜுன் திங்களில் முடிக்கப்பட்டது ஆதி திராவிடர், பழங்குடியினர் தொடர்பாக இது போன்ற புள்ளி விவரங்களும் தொகுத்து முடிக்கப்பட்டுள்ளன. 1981 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பு வெளியீட்டில் '' பாகம் II-B '' ஆக இருக்கும் இத் தொகுதி இந்த ஆண்டில் அச்சிடப்படுவதற்காக அச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அடுத்த வெளியீடான 1983 ஆம் ஆண்டில் அறிக்கை I-ம் (இதில் ஆதி திராவிடர், பழங் குடியியினரின் தொடக்கப் புள்ளி விவரச் சுருக்கம் பட்டுமே இருக் கும்) அச்சிடுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப் படையில் மாவட்ட, வட்ட, நகர அளவில் மக்கள் தொகை ஆதி திராவிடர், பழங்குடியினர் பற்றிய புள்ளி விவரங்களைக் கொண் டுள்ள '' 1982 ஆம் ஆண்டு அறிக்கை I-முடிவான மொத்த மக்கள் தொகை'' என்றசிறு வெளியீடு புள்ளி விவரம் சேகரிப்பவர்களின் உடனடித் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு 1982 ஆகஸ்ட் திங்களில் வெளியிடப்பட்டது.

கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கிராம/நகர வார்டு அளவிலான புள்ளி விவரங்களை அளிக்கும் கிராமங்கள்/நகரங்களுக்கான தொடக்கப் புள்ளி விவரச் சுருக்கங்களும் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளன. இவை 1981-ம் ஆண்டு மாவட்ட மக்கள் தொகை புள்ளி விவரக் கையேட்டில் வெளியிடப்பட உள்ளன. இதில் 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை புள்ளி விவரங்களைத் தவிர, கிராம, நகர விவரச் சுவடியும் அடங்கும்.

ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் மக்கள் தொகை புள்ளி விவரங்களைச் சேகரித்து, விரிவாகப் பரிசீலித்து பொதுவான மக்கள் தொகை அட்டவணைகளைத் தயாரிப்பதற்காக 20 சத வீத மாதிரிகள் சேகரிக்கும் பணி 9 வட்டார புள்ளி விவரத் தொகுப்பு அலுவகங்களில் மேற் கொள்ளப்பட்டு முடிக்கப் பட்டது. வட்டார அலுவலகங்கள் அனைத்தும் 1982 மே திங்களில் மூடப்பட்டன.

புள்ளி விவரங்களை நேரடியாகப் பதிவு செய்யும் நிலையம் ஒன்று 16 அலுவலகங்களுடன் 1982 ஜுன் திங்களில் செயல் படத் தொடங்கியுள்ளது. புள்ளி விவரங்களைத் தனித்தனியே பிரித்து பதிவு செய்து மக்கள் தொகை அட்டவணைகளுக்குக் குறியீட்டெண் குறிப்பிடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. புள்ளி விவரங்களைத் தொகுத்து பரிசீலிக்கும் பணியை விரைவு படுத்தும் நோக்குடன், இப்பிரிவு 1982 நவம்பர் திங்களிலிருந்து இரண்டு முறை மாற்றுப் பணியில் செயல்படத் தொடங்கியது.

முதலமைச்சரின் சிறப்பு அலுவலகம்.

பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக 1977 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட முதலமைச்சர் சிறப்பு அலுவலகம் தற் போது இரண்டு பிரிவுகளுடன் சார்புச் செயலகம் தகுதி கொண்ட ஒரு தனி அலுவலரின் கீழ் செயல்பட்டு வருகிறது. குறைகள் அடங்கிய மனுக்கள் எந்த அதிகாரிகளால் தீர்க்கப்பட வேண்டுமோ, அவர்களுக்கு தனி அலுவலர் அவர்களால் அனுப்பப் படுகிறது. இதற்காக தனி அலுவலர் அவர்கள் எந்த அரசு அதிகாரியையும் தொடர்பு கொள்ளலாம்.

அறிக்கையாண்டில் 1,63,098 மனுக்கள் முதலமைச்சர் சிறப்பு அலுவலகத்தில் பெறப்பட்டன. மேற் குறிப்பிட்ட மனுக்களின் எண்ணிக்கையில் முதலமைச்சர் அவர்கள் பல மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்தபோது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களும் அடங்கும். அவசியமாகத் தீர்க்கப்பட வேண்டிய குறைகள் அடங்கிய மனுக்கள் தனிப்பதிவேட்டில் பதிவு செய்யப் பட்டு, அக்குறைகள் அடங்கிய மனுக்கள் மீது உரிய அதிகாரிக ளிடமிருந்து முடிவான பதில்கள் வரும் வரை அவ்வதிகாரிகளுக்கு நினைவூட்டுக் கடிதங்கள் அவ்வப்போது அனுப்பப்படுகின்றன. குறைகள் நிவர்த்தி செய்த விவரங்கள் அடங்கிய பதிவேட்டில் மக்கள் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்ட விவரங்கள் குறிக்கப் பட்டு வருகின்றன. 1982 ஏப்ரல் திங்களிலிருந்து 1983 மார்ச்சுத் திங்கள் முடிய அவ்விதம் குறிப்பிடத் தக்க குறைகள் இவ்வலுவல கத்தின் மூலம் தீர்க்கப்பட்டவை 1,332 ஆகும்.

முறையீட்டுப் பிரிவு

பொது மக்களுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும் உள்ள குறை களைப் பரிவோடு கவனித்து அவற்றை நிவர்த்தி செய்ய தனி அமைப்பு இருக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கருதித் தலைமைச் செயலகத்திலும், துறைத் தலைமையிடங்களிலும் முறையீட்டுப் பிரிவு' ஒன்றை ஏற்படுத்த, அரசு ஆணை பிறப்பித்தது.

அரசுப் பணியாளர்களிடமிருந்து கீழ்க்காணும் முறையீடுகள் பொதுவாக இப்பிரிவிற்கு வருகின்றன :—

(அ) சம்பளம், ஓய்வூதியம், படிகள் கொடுக்கப்படவில்லை அல்லது கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதாகக் கூறும் முறை யீடுகள் ;

(ஆ) பதவிகளில் பணியை உறுதி செய்யாமல் நீண்ட காலத்திற்குத் தற்காலிகமாகவே பணியாற்ற அனுமதிப்பதாகக் கூறும் முறையீடுகள்;

(இ) சம்பளம் நிர்ணயம் பற்றிய முறையீடுகள்;

(ஈ) ஓய்வூதியத்தை முடிவு செய்வதிலும் அல்லது ஆண்டு தோறும் ஊதிய உயர்வு வழங்குவதிலும் தாமதம் ஏற்படுவதாகக் கூறும் முறையீடுகள்;

(உ) மாற்றல்கோரி வரும் வேண்டுகோள்கள், அடிக்கடி மாற்றுவதாகக் கூறும் முறையீடுகள்;

(ஊ) பயணப்படி, பொது வருங்கால வைப்பு நிதி முதலிய வற்றைக் கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதாகக் கூறும் முறை யீடுகள்.

பொது மக்களிடமிருந்தும் மனுக்கள் இப்பிரிவுக்கு வருகின் றன. பட்டாக்கள் வழங்குப் படியும், புறம்போக்கு நிலங்களை யும் வீட்டுமனைகளையும் ஒதுக்கித் தரும்படியும், உயிருக்குப் பாதுகாப்பு அளிக்கும்படியும், வேலைவாய்ப்புக் கோரியும், நிதி உதவி கோரியும், தியாகிகள் ஓய்வூதியம் கோரியும் முறையீடுகள் வருகின்றன.

அரசுப் பணியாளர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் ஆளுநர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் முகவரியிட்டு வருகின்ற புகார்கள் தவிர, தலைமைச் செயலாளருக்கும், மத்திய அமைச்சர் களுக்கும், தலைமை அமைச்சருக்கும் குடியரசுத் தலைவருக்கும் முகவரியிட்டு வருகின்ற புகார்களைப் பொதுத் துறையிலுள்ள முறையீடுகள் மற்றும் முன்பணம் பிரிவு கவனிக்கிறது. அந்தப் புகார்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி அவை தலை மைச் செயலகத்துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

பொதுவாக அரசுப் பணியாளர்களும், பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களும், இறந்துவிட்ட அரசுப் பணியாளர்களின் குடும்பத் தினருக்கும் பொது மக்களுக்கும் சட்டப்படி தங்களுக்குச் சேர வேண்டியவற்றை வாங்கித் தருவதில் அல்லது அவர்களின் குறை களை உடனுக்குடன் களைவதில் இப்பிரிவு ஒரு கர்த்தாவாக செயல்பட்டு வருகிறது.

1982-83-ல் இக்குழுவிற்கு எத்தனை மனுக்கள் வந்தன. எத்தனை மனுக்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைக் கீழ்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம் :—

வந்த மனுக்கள்.	மேல் நடவடிக்கை எடுத்து முடிக் கப்பட்ட மனுக்கள்.
18,263	18,263

முன்னாள் படைவீரர் நலத்துறை.

தமிழ் நாடு முன்னாள் படைவீரர் நல இயக்ககம் முன்னாள் படைவீரர் மற்றும் பணியிலுள்ளோர் குடும்ப நலன்களைப் பேணுவதுடன் போரில் விழுப்புண் பெற்றுள்ளோர் மற்றும் உயிர்த் தியாகம் செய்தோர் கைம் பெண்களின் புனர் அமைப்பிற்கெனவும் பாடுபட்டு வருகிறது.

முன்னாள் படைவீரர் தொகுப்பு நிதியும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலநிதியும் இந்த இயக்கத்தால் நிறுவகிக்கப்படுகின்றன.

முன்னாள் படைவீரர் தொகுப்பு நிதி :

இந்நிதி மேதகு தமிழ்நாடு ஆளுநரை தலைவராகக் கொண்ட மேலாண்மைக்குழு ஒன்றால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியிலிருந்து முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோரின் தேவைக்கேற்ப கடனுதவி, கல்வி உபகாரச் சம்பளம் போன்ற உதவிகள் வழங்கப்படுவதுடன் போரில் உயிரிழந்தோர் கைம் பெண்களுக்கு வருடாந்திர வாழ்க்கைச் செலவு மானியம் போன்ற இன்னோரன்ன நிதியுதவிகளும் வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட காலத்தில் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்ட நிதியுதவி குறித்து விபரங்கள் அடியிற்குறிப்பிடப்பட்டுள்ளது :

வரிசை எண்ணும் வழங்கப்பட்ட உதவி குறித்த விபரம்.	பயன் பெற்றோர் எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)
		ரூ. பை.
1 வங்கிக் கடன் வட்டி நிதியுதவி திட்டத்தின் கீழ் ..	77	23,920.66
2 கல்வி உபகாரச் சம்பளம் மற்றும் பயிற்சி உதவிப் பணம்.. ..	1,197	2,55;006.35
3 கைம்பெண்களுக்கு வீடு கட்ட மானியம் ..	1	2,500.00
4 1971-ம் ஆண்டில் நடந்த இந்திய பாகிஸ்தான் போரில் உயிரிழந்தோர் ஊனமுற்றோர் பள்ளிச் சிறார்களுக்கு சீருடை மற்றும் புத்தகப்படி	55	11,835.00

வரிசை எண்ணும் வழங்கப் பட்ட உதவி குறித்த விபரம்.	பயன் பெற்றோர் எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)
		ரூ. ஈ.ப.
5 வருடாந்திர வாழ்க்கைச் செலவு மானியம்	35	18,000.00
6 வருடாந்திர வாழ்க்கைச் சேலவுப்படி	135	80,400.00
7 போரில் உயிர் நீத்தோர் ஊனமுற்றோர் கைம்பெண்களின் பெண்மகவிற்கு திருமண மானியம்	1	1,500.00
8 படையிலிருந்து விலகுவதற்கு முன்னரும் விலகிய பின்னரும் அளிக்கப்படும் பயிற்சி ..	5	5,600.00
9 கைம்பெண்களின் பெண்மகவிற்கு திருமண மானியம் ..	214	1,07,000.00
10 1-1.1964-க்கு முன் படையிலிருந்து விலகிப் பணி ஒய்வூதியம் பெற்ற பின்னர் இறந்துவிட்ட முன்னாள் படைவீரர்களின் விதவைகளுக்கான ஒய்வூதியம் ..	720	3,98,195.60
11 பல்வகை ..	1	813.22
12 1-1-1964-க்கு முன்பாக படையிலிருந்து ஒய்வு பெற்று பின்பு இறந்துபோன படைவீரர்களின் விதவைகட்கு புடவைகள் அன்பளிப்பு	703	35,150.00
	3,144	9,39,920.83

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி :

தமிழ் நாட்டில் உள்ள முனனாள் படைவீரர்-அவரைச் சார்தோர் மறு வாழ்வுத் திட்டங்களுக்கென இந்நிதி பயன் படுத்தப்படுகிறது. ஆண்டுதோறும் டிசம்பர் 7-ம் நாள் கொண்டா

டப்படும் கொடிநாள் வசூல் தொகையை இந்நிதியின் மூலதன மாகும். 31-3-1983 முடிய நாளைய கணக்குப்படி இந்நிதியின். மூலதனம் காலக்கெடு வைப்புத் தொகையாக ரூ. 53,98,332.50ம் மற்றும் கையிருப்புத் தொகையாக ரூ. 1,14,545.42-ம் ஆகும். 31-3-1983 நாளையக் கணக்குப்படி 1981-ஆம் ஆண்டிற்கான கொடிநாள் வசூல் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ. 15 இலட்சம் மற்றும் 1982-ஆம் ஆண்டிற்கான கொடிநாள் வசூல் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ள 17 லட்சத்தில் முறையே ரூ. 17,88,580.70 மற்றும் ரூ. 1,92,359.34 வசூல் செய்யப் பட்டுள்ளது.

இந்நிதி தமிழ்நாடு அரசு பொது (பணியாளர்)த்துறை இணைச் செயலாளர் தலைமையில் அரசால் அமைக்கப்பட்ட குழு ஒன்றினால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இவ்வறிக்கைக் குட்பட்ட காலத்திற்குள் இந்நிதியிலிருந்து முன்னாள் படைவீரர் புனர்வாழ்வுக்கென வழங்கப்பட்ட பல்வேறு நிதியுதவி குறித்து விபரங்கள் சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

வரிசை எண்ணும் வழங்கப்பட்ட நிதியுதவி குறித்த விபரம்.	பயன் பெற்றோர் எண்ணிக்கை.	வழங்கப் பட்ட தொகை.
(1)	(2)	(3)
		ரூ. பை.
1 எவ்வித வருவாய் வாய்ப்புமின்றி வறுமையில உழலும் முன்னாள் படைவீரர் கைம்பெண்களுக்கு வாழ்க்கைச் செலவிற்கென மாதாந்திர மானியம்	938	4,35,742.85
2 ஊனமுற்ற முன்னாள் படைவீரர் மற்றும் கைம்பெண்கள் புனர் வாழ்விற்கென சிறுதொழில்/ வியாபாரம் செய்தல் பொருட்டு மொத்த மானியங்கள் ..	23	1. . .22.77
3. எலும்புருக்கி/தொழுநோயால் வாடும் முன்னாள் படைவீரருக்கு சம்பந்தப்பட்ட மருத்துவ மனைகளில் தங்கி சிகிச்சை பெறும் காலத்திற்குக் கைச் செலவுப்பணம்.	282	594.20

வரிசை எண்ணும் வழங்கப்பட்ட நிதியுதவி குறித்த விபரம்.	பயன் பெற்றோர் எண்ணிக்கை.	வழங்கப் பட்ட தொகை.
(1)	(2)	(3)
		ரூ. பை.
4 மிகவும் வறுமையிலுள்ள முன்னாள் படைவீரர் அவரைச் சார்ந்தோர் உடனடி துயர் துடைக்கும் பொருட்டு மாவட்ட முப்படை வீரர் வாரியங்களாலும், இயக்கத்தாலும் வழங்கப்பட்ட உடனடி நிவாரணத் தொகை ..	2,202	97,185.00
5 முன்னாள் படைவீரர் பெண்மகவு திருமணத்திற்கு மானியம் ..	426	2,12,100.00
6 இறக்கும் முன்னாள் படைவீரர் ஈமச் சடங்கிற்கு மானியம் ..	444	66,320.00
7 வெள்ளம், புயல் தீ போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்/ அவர்தம் கைம்பெண்களுக்கு நிவாரண உதவி.	2	300.00
8 பள்ளிகள்/கல்லூரிகளில் பயிலும் முன்னாள் படைவீரரின் சிறாருக்கு கல்வி உபகாரச் சம்பளம் ..	2,736	2,64,903.00
9 மாவட்ட முப்படை வீரர் வாரியங்களில் இயங்கி வரும் தையற் பயிலகங்களில் முன்னாள் படைவீரர் அவரைச் சார்ந்த பெண்களுக்கும் கைம்பெண்களுக்கும் பயிற்சி		2,10,066.14
10. தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி நிலையங்கள்		16,551.90
11 அச்சு மற்றும் புத்தக கட்டுதல் பிரிவு		55,717.40
12 விதவைகள் மற்றும் முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்பட்ட வயோதிக ஓய்வூதியம்	83	32,208.10

13 5–2–1983-ல் சென்னை ராஜபவனத்தில் நடைபெற்ற கொடி நாள் விழாவில் முன்னாள் படைவீரர்/விதவைகளுக்கு வழங்கப்பட்ட வேட்டி/சேலைகள் ..	56	2,800.00
14 தொழுநோயால் அவதியுறும் முன்னாள் படை வீரருக்கு சிறப்பு மருத்துவ வசதி செய்தல் ..	1	724.0
15 தொழுநோயால் அவதியுறும் முன்னாள் படைவீரருக்கு மாதாந்திர நிதியுதவி ..	1	618.60
	7,194	14,30,453.92

இவற்றிற்கு மேலாக மாவட்டங்களில் இயங்கி வரும் முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநரின் அலுவலங்களின் முன்னாள் படை அவரைச் சார்ந்தோருக்கு இராணுவ மத்திய நல நிதி, இந்திய செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பல்வேறு படைப் பிரிவு நிதிகளிலிருந்து 2,582 முன்னாள் படைவீரர்களுக்கு குடும்ப நலனுக்காக ரூ. 6,75,786.20 யினை மானியமாகப் பெற்றுத் தந்துள்ளன.

முப்படைக்கும் ஆள் தேர்வு :

முன்னாள் படைவீரர் நலத்துறை 1982–83 ஆம் ஆண்டில் ஒவ்வொன்றும் 100 இளைஞர்களைக் கொண்ட 3 பயிற்சி முகாம்களைத் துவக்கியது. இவ்விளைஞர்களுக்கு படையில் சேருவதற்கென தேர்வில் வெற்றி பெறுவதற்கு என சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியளிக்கப்பட்ட 300 இளைஞர்கள் 251 பேர் (83.66 விழுக்காடு) வெவ்வேறு படைப்பிரிவுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மேலும், தேர்வு செய்யப்பட்ட ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கான பிரத்யேகப் பயிற்சி முகாம் 12 மாவட்டங்களில் இத்துறையினரால் நடத்தப்பட்டது. பயிற்சி அளிக்கப்பட்ட 1065 ஆதி திராவிட இளைஞர்களில் 610 பேர் (57.28 விழுக்காடு) வெவ்வேறு படைப்பிரிவில சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

முன்னாள் படைவீரர்க்கான தனி வேலை வாய்ப்புப் பிரிவு.

முன்னாள் படைவீரர் நல இயக்குநர் மற்றும் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநரின் அலுவலங்களில், முன்னாள் படைவீரர்களுக்கான தனி வேலைவாய்ப்புப் பிரிவு 1–4–1982 முதல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இவ்வேலை வாய்ப்பு பிரிவுகளில் 31–3–1983 முடிய 10,116 முன்னாள் படைவீரர்கள் தங்களது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். 1–4–1982 முதல் 31–3–1983 முடிய உள்ள காலத்தில் 1,490 முன்னாள் படைவீரர்கள், மத்திய, மாநில அலுவலகங்கள் அரசு நிறுவனங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் முன்னாள் படைவீரர்களுக்கென ஒதுக்கப்பட்ட காலி இடங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தொழுநோயால் அவதியுறும் முன்னாள் படைவீரர்களுக்கு வாராந்திர நிதி உதவி :

1982–83 வருடத்தில் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திலிருந்து மாதம் ரூ. 50 விதம மருத்துவ பிற்காப்பு நலநிதியாக 36 மாதங்களுக்கும் பெற்று முடித்த தொழுநோயால் அவதியுறும் முன்னாள் படைவீரர்களுக்கு அவர்தம் ஆயுட்காலம் முழுவதும் முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து மாதம் ரூ. 50 வீதம் நிதியுதவி வழங்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தல்கள்.

பெரியகுளம் பாராளுமன்ற தொகுதிக்கு வாக்காளர் பட்டியல் தயாரித்தல் :

25. பெரியகுளம் பாராளுமன்றத் தொகுதியிலிருந்து 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இடைத்தேர்தல் நடக்கும் முன், அத்தொகுதியின் வாக்காளர் பட்டியல் 1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 23 வது பிரிவின்படி சரி செய்யப்பட்டது. வாக்காளர் பட்டியலில் புதிதாகப் பெயர்கள் சேர்க்க 12,700 மனுக்கள் பெறப்பட்டது. 131. பெரியகுளம்

132. தேனி, 133. போடிநாயக்கனூர், 134. கம்பம், 135 ஆண்டிப்பட்டி மற்றும் 136. சேடப்பட்டி ஆகிய சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள் அடங்கிய மேற்சொன்ன பாராளு மன்றத் தொகுதியின் வாக்காளர் எண்ணிக்கை, 1—2—1982 நாளன்று 7,66,027 ஆகும். மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 22 மற்றும் 23 பிரிவுகளின்படி, திருத்தங்கள் மற்றும் சேர்ப்புகள் செய்தபின், அத்தொகுதியின் வாக்காளர் எண்ணிக்கை 25—8—1982 அன்று 7,75,656 ஆகும்.

நாடாளுமன்ற மக்களவை உறுப்பினரான திரு கம்பம் என். நடராஜன் அவர்களின் மறைவினால் உண்டான காலியிடத்தை நிரப்புவதற்காக, 25. பெரியகுளம் மக்களவை தொகுதியில் உள்ள வாக்காளர்களை ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கக் கோரும் இந்தியத் தேர்தல் ஆணைக் குழுவின் அறிவிக்கையை தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் 25—8—1982 அன்று வெளியிடப்பட்டது. இத் தேர்தலின் கால அட்டவணை பின்வருமாறு:—

1.	தேர்தல் மனுக்கள் தாக்கல் செய்யப்படும் ஆரம்ப நாள்.	25—8—1982 (புதன் கிழமை)
2.	தேர்தல் மனுக்களை தாக்கல் செய்ய இறுதி நாள்.	1—9—1982 (புதன் கிழமை)
3.	தேர்தல் மனுக்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் நாள்.	2—9—1982 (வியாழக் கிழமை).
4.	தேர்தல் மனுக்களை திரும்பப் பெற்றுக்கொள்ள இறுதி நாள்,	4—9—1982 (சனிக்கிழமை)
5.	தேர்தல் நடைபெறும் நாள்.	26—9—1982 (ஞாயிற்றுக் கிழமை).
6.	தேர்தல் முடியும் இறுதி நாள்.	4—10—1982 (திங்கட்

வாக்குப் பதிவு காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலில் 4 நபர்கள் தேர்தல் மனுக்களை தாக்கல் செய்தனர். பரிசீலனையின் பொழுது, இவற்றில் 3 நபர்களின் தேர்தல் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. தேர்தல் மனுக்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளும் இறுதி நாளன்று 15 நபர்கள் தங்களின் தேர்தல் மனுக்களை திரும்பப் பெற்றுக் கொண்ட, பின்னர்

மொத்தம் 25 வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிட்டனர். இந்தியத் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவிக்கையான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் 18—9—1982 அன்று மறுவெளியீடு செய்யப்பட்டது. 26—9—1982 அன்று வாக்குப் பதிவு நடைபெற்றது. இத்தொகுதியில் உள்ள 7,75,656 வாக்காளர்களில், 5,13,815 வாக்காளர்கள் வாக்களித்தனர். 27—9—1982 அன்று வாக்குகள் எண்ணும் பணி துவக்கப் பட்டு அன்றிரவே தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது. அதிக வாக்குகள் பெற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வேட்பாளர் திரு எஸ்.டி.கே. ஜக்கய்யன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. தி.மு.கவைச் சேர்ந்த வேட்பாளரைத் தவிர்த்து. ஏனைய 23 வேட்பாளர்களும் தங்களின் ஜாமீன் தொகையை இழந்தனர்.

மாநிலங்களவைக்கு இடைத் தேர்தல் :

மாநிலங்களவை உறுப்பினரான திரு இரா. மோகனரங்கம் அவர்கள தம்முடைய உறுப்பினர். பதவியை இழந்ததால் தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையில் காலி இடம் ஒன்று ஏற்பட்டது.

மேற்கண்ட காலியிடத்தை நிரப்ப கீழ்வரும் தேர்தல் நிகழ்ச்சி நிரலை இந்தியத் தேர்தல் ஆணைக்குழு நிர்ணயித்தது:

1.	தேர்தல் மனுக்கள் தாக்கல் செய்யப்படும் ஆரம்பநாள்.	21—1—1983 (வெள்ளிக் கிழமை).
2.	தேர்தல் மனுக்களை தாக்கல் செய்ய இறுதி நாள்.	28—1—1983 (வெள்ளிக் கிழமை).
3.	தேர்தல் மனுக்களை பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளும் நாள்.	29—1—1983 (சனிக்கிழமை)
4.	தேர்தல் மனுக்களை திரும்பப் பெற்றுககொள்ள இறுதி நாள்.	31—1—1983 (திங்கட் கிழமை)
5	தேர்தல் நடைபெறும் நாள்.	7—2—1983 (திங்கட்கிழமை)
6	தேர்தல் முடிவுறும் இறுதி நாள்.	11—2—1983 (வெள்ளிக் கிழமை).

மேற்கண்ட இந்தியத் தேர்தல் ஆணைக் குழுவின் தேர்தல் நிகழ்ச்சி நிரல் குறித்த அறிவிக்கையை தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் 21—1—1983 அன்று மறுவெளியீடு செய்யப்பட்டது.

திரு. இரா. மோகனரங்கம் அவர்கள் மட்டும் தேர்தல் மனு செய்திருந்தபடியால், இத்தேர்தலில் போட்டி இல்லை. தேர்தல் மனுக்களை திரும்பப் பெற்றுக் கொள்ளும் இறுதி நாளான 31—1—1983 அன்று திரு. இரா. மோகனரங்கம் அவர்கள் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

திருச்செந்தூர் சட்டமன்ற பேரவைத் தொகுதிக்கு இடைத்தேர்தல்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினரான திரு. எஸ். கேசவஆதித்தன் அவர்களின் மறைவினால் உண்டான காலியிடத்தை நிரப்புவதற்காக, 225. திருச்செந்தூர் சட்ட மன்ற பேரவை தொகுதியில் உள்ள வாக்காளர்களை, ஓர் உறுப்பினரை தேர்ந்தெடுக்கும்படி கோரும் இந்தியத் தேர்தல் ஆணைக் குழுவின் அறிவிக்கையை தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் 28—1—1983 அன்று வெளியிடப்பட்டது.

இத் தேர்தலின் நிகழ்ச்சி நிரல் பின்வருமாறு:—

1. தேர்தல் மனுக்கள் தாக்கல் செய்யப்படும் ஆரம்பநாள்,	28—1—1983 (வெள்ளிக் கிழமை)
2. தேர்தல் மனுக்களை தாக்கல் செய்ய இறுதி நாள்	4—2—1983 (வெள்ளிக் கிழமை)
3. தேர்தல் மனுக்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் நாள்	5—2—1983 (சனிக்கிழமை)
4. தேர்தல் மனுக்களை திரும்பப் பெற்றுக்கொள்ள இறுதி நாள்,	7—2—1983 (திங்கட்கிழமை)
5. தேர்தல் நடைபெறும் நாள்.	27—2—83 (ஞாயிற்றுக் கிழமை)
6. தேர்தல் முடிவுறும் நாள்	3—3—1973 (வியாழக் கிழமை)

வாக்குப் பதிவு காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. சில அரசியல் கட்சிகள்

திருச்செந்தூரில் நடைபெறவிருந்த திருவிழாவை முன்னிட்டு தேர்தல் நாளை தள்ளிவைக்குமாறு வேண்டுகோள் விடுத்தன, இக்கோரிக்கைகளுக்கிணங்க, தேர்தல் நடைபெறும் நாள் 27—2—1983 லிருந்து 1—3—1983–க்கு மாற்றிவைக்கப் பட்டது. அவ்வாறு 27—2—1983-லிருந்து 1—3—1983–க்கு தேர்தல் நாள் மாற்றியமைக்கப்பட்ட இந்தியத் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவிக்கையை தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் 7—2—1983 அன்று வெளியிடப்பட்டது. இத் தேர்தலில், 43 நபர்கள் தேர்தல் மனுக்கள் தாக்கல் செய்தி ருந்தனர். பரிசீலனையின்பொழுது, அவற்றில் இரண்டு நபர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டது. தேர்தல் மனுக் கள் திரும்பப் பெற்றுக் கொள்ளும் இறுதிநாளன்று, 17 நபர்கள் தங்களின் தேர்தல் மனுக்களை திரும்பப் பெற்றுக் கொண்ட பின்னர், மொத்தம் 24 வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டி யிட்டனர். இத்தேர்தலின் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் 8—2—1983 அன்று வெளியிடப்பட்டது. 1—3—1983 அன்று வாக்குப் பதிவு நடைபெற்றது. இத்தொகுதியில் உள்ள 1,32,741 வாக்காளர்களில், 82,525 வாக்காளர்கள் வாக்க ளித்தனர். 2—3—1983 அன்று வாக்குகள் எண்ணப்பட்டன, அதிக வாக்குகள் பெற்ற அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வேட்பாளரான திரு. ஆர். அமிர்தராஜ் அவர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டதாக 3—3—1983 அன்று அறிவிக்கப்பட்டது தி.மு.க. வைச் சேர்ந்த வேட்பாளரைத் தவிர்த்து ஏனைய 22 வேட்பாளர்களும் தங்களின் ஜாமீன் தொகையை இழந்தனர். திரு ஆர். அமிர்தராஜ் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவிக்கையை தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் 4—3—1983 அன்று வெளியிடப் பட்டது,

தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்கு இடைத் தேர்தல் :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட திரு. ப.உ. சண்முகம் அவர்கள் தம்முடைய உறுப்பினர். பதவியை துறந்ததால் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் காலியிடம் ஒன்று ஏற்பட்டது.

இந்தக் காலியிடத்தை நிரப்ப இந்திய தேர்தல் ஆணைக்குழு பின்வரும் தேர்தல் நிகழ்ச்சி நிரலை நிர்ணயித்தது:

1 தேர்தல்மனுக்கள் தாக்கல் செய்யப்படும் ஆரம்ப நாள்.	16—2—83	(புதன்கிழமை)
2. தேர்தல் மனுக்களை தாக்கல் செய்ய இறுதி நாள்,	23—2—83	(புதன்கிழமை)
3. தேர்தல்மனுக்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் நாள்.	24—2—83	(வியாழக் கிழமை).
4. தேர்தல் மனுக்களை திரும்பப் பெற்றுக் கொள்ள இறுதி நாள்.	26—2—83	(சனிக்கிழமை)
5. தேர்தல் நடைபெறும் நாள்.	7—3—83	(திங்கட்கிழமை)
6. தேர்தல் முடிவுறும் நாள்.	10—3—83	(வியாழக் கிழமை),

இந்தியத் தேர்தல் ஆணைக்குழுவின் மேற்குறித்தத் தேர்தல் அறிவிக்கையை தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் 16—2—1983 அன்று வெளியிடப்பட்டது. திரு. வலம்புரி ஜான் அவர்கள் மட்டுமே தேர்தல் மனு தாக்கல் செய்திருந்தார். தேர்தல் மனுக்கள் திரும்ப பெற்றுக்கொள்ளும் இறுதி நாளான 26—2—1983 அன்று, திரு.வலம்புரி ஜான் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. திரு. வலம்புரி ஜான் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவிக்கையை தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் 23—2—1983 அன்று வெளியிடப்பட்டது.

பிரதேச ராணுவம்

110. காலாட்படை கோயம்புத்தூர் கூட்டுப்பயிற்சி :

இராணுவ நடவடிக்கை நோக்கில் அமைந்துள்ள பயிற்சி குறித்து வரையறுக்கப்பட்டுள்ள தனி முக்கியத்துவத்துடன்

சதர்ன் கமாண்டு, பிரதேச இராணுவத் தலைமையிடம் பிறப்பித்த பயிற்சி கட்டளைகளின் அடிப்படையில் 1982—83 ஆம் ஆண்டுக்கான பயிற்சி இராணுவத்தில் உள்ளவர்களுக்கு அளிக்கப்பட்டது. முழுவதும் செயல் வீரராகத் திகழும் வரையில் தகுதிவாய்ந்த முறையில் பிரதேச படையினங்களை உருவாக்குவது; ஒப்படைக்கப்பட்ட பணிகளை குறுகிய கால அறிவிப்பில் வெற்றிகரமாக நிறைவேற்றும் மிகச் சிறந்த நிலை துணைப் பிரிவுகளாகவும் போர் புரிவதற்கு ஆயத்த நிலையில் இருக்கும் துணைப் பிரிவுகளாகவும் மேம்படுத்துவது. ஆகியவையே இப்பயிற்சியின் நோக்கங்களாகும்.

ராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் படைப்பயிற்சியும் :

இவ்வாண்டில் இருதொகுதிகளாக மொத்தம் 193 ஆட்கள் இராணுவத்தில் சேர்க்கப் பட்டனர். பிரதேச இராணுவ இயக்குநர் அலுவலகம் வரையறுத்த பயிற்சித் திட்டத்தின்படி இராணுவத்தில் புதிதாக சேர்ந்தோருக்குத் தொடர்ந்து 12 வாரப் படைப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பிரிவில் புதிதாகப் பதவியேற்ற ''கமிஷன்'' அதிகாரிக்கும் முதலில் ஒரு மாதத்திற்குப் படைப்பயிற்சியும் பின்னர் இரண்டு மாதத்திற்கு ஆண்டுப் பயிற்சியும் அளிக்கப்பட்டன. இவ்வாறு, இராணுவத்தில் சேர்ந்தோர் அனைவருக்கும் நல்ல தரமான படைப் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஆண்டு பயிற்சி முகாம் :

1982—83 ஆம் ஆண்டுப் பயிற்சி முகாம் 1—11—1982 முதல் 4—1—1983 வரையில் நடத்தப்பட்டது. 7 அதிகாரிகளும் 29 இளநிலை கமிஷன் அதிகாரிகளும், (JCO) ஏனைய பதவித் தரத்தில் உள்ளோர் 594 பேரும் இந்தப் பயிற்சி முகாமில்கலந்து கொண்டனர். ஆண்டுப் பயிற்சி முகாமில் கடைசி இருவாரக் கால அளவு, துணைப் பிரிவு அளவில் இராணுவ நடவடிக்கை நோக்கில் அமைந்த கூட்டுப் பயிற்சிக் கென்றே ஒதுக்கப்பட்டது.

பிரதேச ராணுவ தினம் :

பிரதேச இராணுவத்தின் 33 ஆம் ஆண்டு விழா 19—11—1982, 20—11—1982, 21—11—1982 ஆகிய தேதிகளில் கோயம்புத்தூரில் சிறப்பாக நடைபெற்றது. 19—11—1982 ஆம் நாளன்று முகாம் கோவிலில் காலை பூசையுடன் இவ்விழா தொடங்கியது. பின்னர், சிறப்பு சைனிக் சம்மேளனங்களும், விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன பிறகு, திரைப்படக் காட்சி காட்டப்பட்டது. இந்தப் படைப் பிரிவில் உள்ள எல்லா தரத்தினரும், பெருமிதத்துடனும், செயலாற்றலுடனும் நிகழ்ச்சிகளில்கலந்து கொண்டனர். தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 20—11—1982 ஆம் நாளன்று நடைபெற்ற பிரதேச இராணுவ தின அணிவகுப்பைப் பார்வையிட்டு, மரியாதை ஏற்றுக்கொள்வதாயிருந்தார். இருப்பினும், எதிர்பாராச் சூழ்நிலையின் காரணமாக, அவர் அணிவகுப்பைப் பார்வையிட முடியவில்லை. அதற்காக, சிறப்புச் செய்தி ஒன்றை அவர் அனுப்பி வைத்தார்; எல்லா தரத்தினர் முன்பு அச்செய்தி வாசிக்கப்பட்டது.

திறமைப் போட்டிகள் :

ஆண்டுப் பயிற்சி முகாமில், பல்வேறு பிரிவுகளுக்கிடையே திறமைப் போட்டிகள் நடத்தப்பட்டன; பயிற்சி, கல்வி, மனமகிழ்வு நிகழ்ச்சிகள், செலவில் சிக்கனம் ஆகியவற்றில் போட்டிகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெற்றவர்களுக்குத் தக்க பரிசுகள்/கேடயங்கள் வழங்கப்பட்டன. பல்வேறு படைப் பிரிவுகளிடையே நடைபெற்றப் போட்டிகளில் இப்பிரிவின் சாதனை பாராட்டத்தக்க தாகும். துப்பாக்கிப்படைப்பிரிவு பல்வேறு காலாட் படைப் பிரிவுகளிடையே நடைபெற்ற துப்பாக்கி சுடும் போட்டிகளில் கலந்துகொண்டு, அதில் முதலாவது இடத்தைப் பெறமுடிந்தது. மேலும் இந்த துப்பாக்கிப் படைப் பிரிவு இந்திய கடற்படை ஆண்டு ''மஸ்கெட்ரி'' வகை துப்பாக்கிச் சுடும் போட்டியிலும் பங்கு கொண்டு 1982–83 ஆம் ஆண்டுக்கான கேடயத்தைப் பெற்றது.

அதிகாரிகள், இளநிலை கமிஷன் அதிகாரிகள், ஏனைய நிலை அதிகாரிகள் ஆகியோரின் சீர்மிகு.பணிவுடனும் உயரிய ஒழுங்குணர்வுடனும் 1982-83-ல் இப்பிரிவு .செயல்படத் தொடங்கியது. தனிப்பட்டவர்களின் தரத்தையும் கூட்டுப் பயிற்சியின் தரத்தையும் மேலும் உயர்த்துவதில் உரிய கவனம் செலுத்தப்பட்டது. ஒப்படைக்கப்பட்ட பணியினைக் குறுகிய கால அறிவிப்பில் துணைப் பிரிவுகள் நிறைவேற்ற இயலும் வகையில், வீரர் தம் திறமைகளை வளர்ப்பதே இப்பயிற்சியின் நோக்கமாகும். இப்பயிற்சி இராணுவ நடவடிக்கை நோக்கில் அமைந்த . பயிற்சியாகும். பிரதேச இராணுவ தினத்தை கொண்டாடுவதிலும் போட்டி விளையாட்டுகள் நடத்துவதிலும் உரிய கவனம் செலுத்தப்பட்டது.

இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பும் படைப்பயிற்சியும் :

திருச்சிராப்பள்ளி படைப் பிரிவிற்கு ஆட் தேர்வு செய்யும் அலுலவகம், 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட், அக்டோபர் ஆகிய மாதங்களில் இப்பிரிவிக்கென 125 பேரைத் தேர்ந்தெடுத்தது. புதிதாக இராணுவத்தில் சேர்க்கப்பட்டோருக்கு 15—10—1982 முதல் 14—11—1982 வரையில், அதாவது, 30 நாட்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டது.' இதற்குப் பிறகு, இரண்டு மாதங்களுக்கு ஆண்டுப் பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்பட்டது; இவ்வாறாக அவர்களுக்கு மொத்தத்தில் மூன்று மாதங்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஆண்டுப் பயிற்சி :

1982—83 ஆம் ஆண்டுப் பயிற்சி முகாம், 15—11—1982 முதல் 17—1—1983 வரையில் திருச்சிராப்பள்ளி காஜாமலை படைப்பயிற்சி சரகப் பகுதிகளில் ஒரே அணியாக நடைபெற்றது. அக்கால அளவில், பிரதேச இராணுவம் தொடர்பாக நான்கு நாட்களுக்கு நடைபெற்ற விழாவும் அடங்கும்,.பயிற்சி, படிப்படியாகவும், முறையாகவும் அளிக்கப்பட்டது.

சமாளிக்கும் திறன் குறி தவறாது துப்பாக்கிச் சுடும் திறன் போட்டிகள்:

சமாளிக்கும் திறன்-குறி தவறாது துப்பாக்கிச் சுடும் திறன் போட்டிகள் நடத்தப்பட்டன; .பூனா, .''சதர்ன் கமான்ட்'' பிரதேச இராணுவத் தலைமையிடத் தளபதி (கமாண்டர்), இப்போட்டிகளைப் பார்வையிட்டார்.

பிரதேச ராணுவ தின கொண்டாட்டங்கள் :

6. பிரதேச இராணுவத் தினக் கொண்டாட்டங்கள் பற்றிய தகவல்கள், செய்தித் தாள்கள் மூலமாகவும் அனைத்திந்திய வானொலியின் மூலமாகவும் பரவலாக விளம்பரம் செய்யப் பட்டன. இக்கொண்டாட்டங்களில் பின்வரும் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன;

படைப்பிரிவு ஆலயத்தில் பூசை.

சைலிக் சம்மேளனம்.

மிக முக்கியவர்கள் வருகை.

கொடி அணிவகுப்பு.

புளு டைமன்ட் இசைக்குழுவின் இசைவிருந்து.

திருச்சிராப்பள்ளி வாசிகள் நல்கிய வரவேற்பு. உணவு கூடத்தில் விருந்து.

பாதுகாப்புப் பணிப்படையில் ஆட்களைச் சேர்த்தல் :

இந்தப் பிரிவில் உள்ள 48 அதிகாரிகள் 1982 ஜனவரி முதல் மேற்சொன்ன பாதுகாப்புப் பணிப்படையில் சேர்க்கப்பட்டனர்.

மொழி பெயர்ப்புத் துறை.

தலைமைச் செயலகத் துறைகளும் பிற துறைகளும் ஆட்சி மொழிக் கொள்கையைத் தீவிரமாகச் செயற்படுத்தி வந்த போதி லும், மொழி பெயர்ப்புப் பணிகள் இந்த அறிக்கையாண்டி லும்குறையாமல் வந்து குவிந்தன. குறிப்பாக, பொதுக் கணக் காய்வுக் குழு, பொது நிறுவனக் குழுவின் அறிக்கைகளும், சுற் றோட்டக் குறிப்புகளும் மொழி பெயர்ப்புக்காக ஆண்டு முழு வதும் வந்த வண்ணமிருந்தன. "காபிபோசா." சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட "காவலில் வைப்பதற்கான ஆணைகள்" நூற்றுக் கணக்கில் மொழி பெயர்ப்புக்காக இத்துறைக்கு அனு ப்பப்பட்டன. இந்தப் பணி மந்தணம் வாய்ந்த, காலக்கெடு வரையறுக்கப்பட்ட பணியாயமைந்தது.

அறிவிக்கைகள், சட்ட முன்வடிவுக்கள், சட்டங்கள் அவசரச் சட்டங்கள் விதிகள், விதிமுறைகள், ஆகியவற்றை மொழி பெயர்க்கும் பணியும் இத் துறையின் தலையாய பணியாக இருந்தது. இந்த ஆண்டில் ஏராளமான சட்டமுன்வடிகள் மொழி பெயர்க்கப்பட்டன. சட்ட முன் வடிவுகளின் ஆங்கிலம், தமிழ்ப்படிகள் வழக்கம்போல் ஒரே சமயத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. இராமமூர்த்தி கமிஷன் அறிக்கையும் காதர் கமிஷன் அறிக்கையும் விசாரணைக் கமிஷன் அறிக்கைகளில் முக்கியமாக மொழி பெயர்க் கப்பட்டவையாகும். தமிழ்நாடு மின்வாரியத்தின் வரவு-செலவு திட்ட அறிக்கையையும் மாநில அரசு நிறுவனங்கள் கழகங்கள் அனுப்பிய கோப்புகள் பலவற்றையும் இத்துறை இவ்வாண்டில் மொழி பெயர்த்தது.

மகளிர் பல்கலைக் கழகம் குறித்த வல்லுநர் குழு அறிக்கை, தமிழ் நாட்டிலுள்ள கிராம அலுவலர்கள் குறித்த உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பு, மண்டல் கமிஷன் பரிந்துரைகள் போன்ற.பல முதன்மைமையான அறிக்கைகள் மொழி பெயர்க்கப்பட்டன.

மலையாளத்திலும் இந்தியிலும் மொழி பெயர்க்க வேண்டிய மனுக்களும் அறிவிக்கைகளும் இந்த ஆண்டிலும் குறையாது தொடர்ந்து வரப்பெற்றன. மலையாள மொழி பெயர்ப்பு உதவி யாளர் பகுதி நேரப் பதவி மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. வரை யறுக்கப்பட்ட ஊதியத்தில் முன்னாள் மொழி பெயர்ப்பு உதவி யாளரை அப்பதவியில் முதற்கண் ஆறு திங்களுக்கு நியமிக்க அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

அத்தியாயம் 20

பொதுப்பணித்துறை.

அத்தியாயம் 20-

பொதுபணித் துறை

கொதிகலன்கள் :

தமிழ்நாடு மாநிலத்தில் கடந்த ஆண்டுகளில் நடந்தபடி இவ்வாண்டும் இந்திய கொதிகலச் சட்டம் 1923-ன்படி 6 நீராவி கொதிகல ஆய்வாளர்கள் மற்றும் ஒரு துணைத் தலைமைக் கொதிகல ஆய்வாளரின் உதவியுடன் தலைமைக் கொதிகல ஆய் வாளர் அவர்கள் ஆட்சி புரிந்துள்ளார்.

1982-83 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்படு பட்டியலின்படி தமிழ்நாட்டிலுள்ள மொத்த கொதிகலன்கள் மற்றும் எக்னாமைசர்களின் எண்ணிக்கை 1768 ஆகும். இவற்றில் 1544 கொதி கலன்கள் மற்றும் எக்னாமைசர்கள் நிலையைப் பொறுத்து இயங்குவதற்கு இத்துறையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சில கொதிகலன்கள் பழுது பார்க்க வேண்டியுள்ளதாலும் மற்றும் சில வணிக சூழ்நிலையைப் பொறுத்தும் இயங்காமல், இருக்கிறது, பழுது பார்க்கப்படவேண்டிய கொதிகலன்களை உரிய வட்டக் கொதிகல ஆய்வாளரும், தலைமைக் .கொதிகல ஆய்வாளரும் பழுது பார்ப்பதற்கு முன்பும், பழுது பார்த்தப் பின்பும் ஆய்வு.செய்கிறார்கள்.

கொதிகலன்களைப் பழுது பார்ப்பதற்கு கொதிகலதரமுள்ள பொருட்களையே உபயோகப்படுத்த வேண்டுமென வலி யுறுத்தப்படுகின்றன மற்றும் இந்திய கொதிகலன் விதிகள் 1950-ல் நியமித்துள்ளபடி வேலையின் தரத்திற்கும், பொது நல பாதுகாப்பின் அடிப்படைக் கொண்டு கொதிகலன்களில் மாற்றுப் படுத்தப்படும் அனைத்து பொருட்களுக்கும் உரிய சோதனை சான்றிதழ்கள் (டெஸ்ட் சர்டிபிகேட்) படிவம் 3-ஏ, 3-பி, 3-சி மற்றும் எஃகு தயாரிப்பாளர்கள் வழங்கும் படிவம் 4 சான்றி தழ்கள் உடன் பணிப்பிற்கு அனுப்பப்பட வேண்டுமென வலி யுறுத்தப்படுகின்றன. கொதிகலனைப் பழுது பார்க்க, தயாரிக்க, நீராவி குழாய்களை அமைத்தல் மற்றும் குழாய்களை (வால்வுகள்) தயாரிக்க உபயோகப்படுத்தப்படும் பற்ற வைப்பவர்களின் (வெல் டர்) வேலை திறனை கோட்பாடு துறையிலும் செயல்முறை யிலும் பரிசோதிக்கப்படுகிறது.

2. இந்தியக் கொதிகல விதி 7-ன்படி பதிவு செய்யப்பட்ட கொதிகலன்களின் விவரமும், பிற மாநிலத்திலிருந்து கொண்டு வரப்பட்ட கொதிகலன்களும் மற்றும் வெளி மாநிலத்திற்கு அனுப் பப்பட்ட கொதிகலன்களின் எண்ணிக்கையும் கீழ் வருமாறு: —

சென்ற ஆண்டு முடிவில் உள்ள மொத்த கொதி கலன் மற்றும் எக்னாமைசர்களின் எண்ணிக்கை,	1,698
சேர்க்க : இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்ட கொதிகலன்களின் மொத்த எண்ணிக்கை :	45
பிற மாநிலத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கொதி கலன்களின் எண்ணிக்கை.	57
மொத்தம்	1,800
கழிக்க : பிற மாநிலத்திற்குகொண்டு செல்லப்பட்ட கொதிகலன்களின் எண்ணிக்கை.	32
எனவே 1982-83 ஆம் ஆண்டின் இறுதியில் செயற் படு பட்டியலின்படி தமிழ்நாட்டிலுள்ள மொத்த கொதிகலன்கள் மற்றும் எக்னாமைசர்களின் எண் ணிக்கை.	1,768

விபத்து :

இவ்வாண்டில் விபத்துக்கள் ஏதும் ஏற்படவில்லை .

இத்துறையில் பற்ற வைப்பவர்களுக்கு (Welders) கோட்பாடு துறையிலும் செயல்முறையிலும் சோதனைகள் நடத்தப்பட்டு இந்திய கொதிகல விதிகளுக்கு உட்பட்ட சான்றிதழ்கள் வழங்கப் பட்ட எண்ணிக்கை 281 ஆகும்.

இவ்வாண்டு கொதிகல இயக்கப் பொறியாளர் தேர்வு நடை பெறவில்லை. ஆனால் கொதிகல பணியாளர் தேர்வு நடத்தப்பட 88 முதல்நிலைச் சான்றுகளும் 214—2-ம் நிலைச் சான்றுகளும் 300—3-ம் நிலைச் சான்றுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இத்துறையில் 1982-83-ல் வசூலிக்கப்பட்ட மொத்த கட்ட ணம் ரூ. 18,79,213,00.

இத்துறையில் இவ்வாண்டில் செலவழிக்கப்பட்ட மொத்த தொகை ரூ. 10,72,000.00.

மின் ஆய்வுத்துறை :

கீழ்க்கண்டுள்ளவைகள் மின் ஆயுதத்துறைப் பணிகளின் சிறப்பியல்புகளாகும் :

வருவாய் :

அ. தமிழ்நாடு மின்சார (நுகர்வு வரி) சட்டம் 1962-ன் கீழ் வசூலிக்கப்பட்ட வரி விவரம் :

	ரூபாய் இலட்சத்தில்
1. தமிழ்நாடு மின்வாரியத்தின் மின்சக்தி விற்பனை மூலமாக.	189.38
2. மின் உரிமங்கள் மூலமாக	2.01
3. மின் சக்தியை உற்பத்தி செய்து நுகர்வு மூலமாக.	174.84
ஆ. 1956 ஆம் ஆண்டு இந்திய மின் விதிகளின் படி வசூலான கட்டணத் தொகை.	46.58
1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார தீர்வைச் சட்டத்தின்படி தீர்வை வசூல் தொகை.	43.59
மொத்தம்	456 40

(ரூபாய். இலட்சங்களில்.)

செலவினம் :

அ. 245—கணக்குத் தலைப்பில்	33.58
ஆ. 245. கணக்குத் தலைப்பில் ..	2.13
இ. வசூல் பணிக்கான கட்டணத் தொகை (தமிழ்நாடு மின் வாரியம்).	0.744

1962 ஆம் ஆண்டு தமிழ் நாடு மின்சார நுகர்வு வரிச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்.

அ. தமிழ்நாடு மின் வாரிய வருவாய் பிரிவுகள் மட்டும் திட்ட அலுவலகங்கள்.	7
ஆ. மின் வழங்கும் உரிமம் பெற்ற நிறுவனங்கள்.	3
இ. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு தீர்வைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள	6

மொத்தத் திரையரங்குகள்.

அ. குளிர்சாதன வசதியுள்ள நிலையான திரையரங்குகள்.	60
ஆ. குளிர்சாதன வசதியற்ற நிலையான திரையரங்குகள்.	978
இ. பகுதி நிரந்தரம் திரையரங்குகள்	175
ஈ. இடம் பெயர் திரையரங்குகள்	991
உ. திறந்த வெளி திரையரங்கம்	5

மின்சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பான விவரங்கள் :

அ. புதியதாக வழங்கப்பட்டவை

ஆ. புதுப்பிக்கப்பட்டவை ..

திரைப்பட கருவி இயக்குநர் உரிமம்

தொடர்பான விவரங்கள் :

அ. புதியதாக வழங்கப்பட்டவை ..	371
ஆ. புதுப்பிக்கப்பட்டவை	857
இ. இரண்டாம்படியாக வழங்கப்பட்டவை	25

இந்திய மின் விதிகள் 1956 மற்றும் இந்திய மின் சட்டம் 1910 ஆகியவைகளின்படி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் :

அ. துணை மின் நிலையங்கள் (Sub-Stations) ..	122
ஆ. மின் மாற்றிகள் (மின்வாரியம் உரிமதாரர்).	15,807
இ. விதிகள் 63 மற்றும் 64-ன் கீழ்	261
ஈ. விதி 46-ன் கீழ்	984
உ. மின் வழித் தடங்கள்	1,859
ஊ. மின்னாக்கி ..	28
எ. ஒளியுமிழ் விளக்குகள்	331
ஏ. ஒளிக்கதிர்	44
ஐ. பிரிவு 30-ன் கீழ்	19
ஒ. இந்திய மின்சாரச் சட்டப் பிரிவு 5-ன் கீழ் ஆய்வு	93 43
ஓ. மற்றவை ..	36
ஔ. மின் விபத்துப் புலனாய்வு	116

தமிழ்நாடு திரையரங்க விதிகளின்படி திரையரங்க ஆய்வுகள் :

அ. நிலையான திரையரங்குகள்	1,272.
ஆ. இடம் பெயர் திரையரங்குகள்	1,257
இ. பகுதி நிரந்தரம் திரையரங்குகள்	165
ஈ. 16/33 எம்.எம். திரைப்படக் கருவிகள்	33
உ. திறந்த வெளி திரையரங்குகள்	3
31—3—1983-ல் மொத்த உயர் மின் அழுத்த நுகர் வாளர்கள்.	1,934

உயர் அழுத்தமின் தடங்கள் மற்ற மின் செயல்முறை அமைப்புகள் ஆகியவற்றிற்கான ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக விவ ரங்கள் :

அ. ஒப்புதல் வழங்கப்பட்ட செயல்முறை அமைப்புகள்.	1,009
ஆ. ஒப்புதல் வழங்கப்பட்ட உயர் அழுத்த மின் தடங்கள்.	23
இ. புதியதாக வழங்கப்பட்ட மற்றும் மறு உயிர்ப்பு வழங்கப்பட்ட அனுமதிகள்.	58
ஈ. வழங்கப்பட்ட பாதுகாப்புச் சான்றிதழ்கள் ..	652
உ. ஒப்புதல் வழங்கப்பட்ட சோதனைச் சான்றி தழ்கள்.	214
ஊ. நகராட்சி மின் நிறுவனங்களுக்கு இந்திய மின் சட்டப் பிரிவு 27-ன் படி வழங்கப்பட்ட ஒப் பளிப்புகள்.	75 250
எ. வழங்கப்பட்ட மின்னாச்சி அனுமதிகள்	250
ஏ. வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்பளிப்புகள்	100

அரசு மின்சார தரநிலைய ஆய்வுக் கூடத்தில் மேற்கொள்ளப் பட்ட சோதனைகள் :

அ. சோதனை செய்யப்பட்ட ஆர்.எஸ்.எஸ். மீட்டர்கள்.	972
ஆ. சோதனை செய்யப்பட்ட தீயணைப்புக் கருவிகள்.	1,065
இ. உயர் அழுத்த மற்றும் இதரக் கருவிகளின் ஆய்வுகள்.	2,244

மின்சார விபத்துகள் :

1982—83 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உயிரிழப்பு மொத்த மின் விபத்துக்கள் (விவர அறிக்கை இணைக்கப் பட்டுள்ளது).

உயிரிழப்பு	176
உயிரிழப்பு இல்லாதவை	80

மின் வாரியம் வழங்கும் வாரியம்.	புதியதாக வழங்கப் பட்டவை.	புதுப்பித்து வழங்கப் பட்டவை.
அ. இ.எ. ஒப்பந்தக்காரர் மின் உரிமங்கள்.	34	132
ஆ. இ.பி. ஒப்பந்தக்காரர் மின் உரிமங்கள்.	355	1,826
இ. மேற்பார்வையாளர் தகுதிச் சான்றிதழ்கள்.	431	1,177
ஈ. மின் கம்பியாளர் தகுதி சான்றிதழ்கள்.	1,262	6,030

நில நீர் இயக்ககம்.

ஐக்கிய நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியால் தமிழ் நாட்டில் முதன்முதலாக முறையான ஆற்றுப்பகுதி வாரியாக விஞ்ஞான ரீதியாக, 1966—72 ஆம் வருடங்களில் கீழ்க்கண்ட நான்கு படிவுப்பாறை பகுதிகளில் நிலநீர் ஆய்வு துவங்கியது

(அ) சென்னையும் அதன் சுற்றுப்புறமும்

(ஆ) பாலாற்றுப் பகுதி

(இ) நெய்வேலிப் பகுதி மற்றும்

(ஈ) காவிரி ஆற்றுப் பகுதி

தமிழகத்தில் கிடைக்கும் நிலநீரை அளவிட்டு அதை முறையான வழியில் பயன்படுத்துவது எப்படி என்பதை முக்கிய குறிக்கோளாகக்கொண்டு, இதற்குமுன் ஐக்கிய நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் பெறப்பட்ட பயிற்சியின் வாயிலாக, தமிழகத்தில் 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நில நீர்த்துறை துவங்கப்பட்டது.

1981–82 மற்றும் 1982–83 வரைக்கான குறியீடு மற்றும் சாதனை.

வரிசை எண்ணும் வேலை விபரமும்.	1981-82		1982-83	
	குறியீடு.	சாதனை.	குறியீடு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)	(5)
1. நீர்வடி நிலம் ..	13	13	13	13
2. விண் நிழற்படி ஆய்வு .. .. நில அமைப்பியல் (ச. கி. மீ.).	33,000	33,418	25,100	13,800 19,250
3. நிலவியல் ஆய்வு (கிராமங்கள்)	2,400	1,640	3,210	2,693
4. புவி இயற்பியல் ஆய்வு (கிராமங்கள்) ..	2,400	1,507	3,210	2,501
5. (அ) கிராமவாரி புள்ளி விபரங்கள் சேகரித்தல்/கிராமங்கள்.	3.080	2,047	2,040	2,162
(ஆ) நடப்புக் கால வரை எடுத்தவை (கிராமங்கள்).	520	179	1,560	2,206
6. (அ) நில நீர் எடுப்பு (கிராமங்கள்)	3,080	1,979	2,040	2,132
(ஆ) நடப்பு காலவரை எடுத்தவை (கிராமங்கள்).	520	192	1560	2,230
7. துரப்பணம்	100	385	102	199
8. துளைக்கிணற்றில் நீர் இறைவைச் சோதனை	40	161	40	99
9. நீர் மட்ட அளவு ஆய்வு	1,803	1,927	1,803	1,990
10. நீர்த்தன்மை பகுப்பு ஆய்வு	3,500	3,934	3,500	4,044

நிழற்படி ஆய்வு ;

குறிப்பிட்ட நடைமுறை ஆண்டில் செயற்கைக்கோள் நிழற்படிவம் மற்றும் விண் நிழற்படங்களின் உதவியுடன் 33,050 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு ஆய்வுகள் செய்யப்பட்டன. நிலப் பாகுபாட்டு படங்கள் (நில உபயோக தாவர படங்களில் நீரியல் முக்கியத்துவம் உள்ளவை) விண் நிழற்படங்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்டு நிலநீர் கோட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இத்தகைய படங்கள் முகவை மாவட்டத்தில் (இராமநாதபுரம் மாவட்டத்தின்) சில பகுதிகளுக்கும், திருநெல்வேலி மாவட்டத்தின் சில பகுதிகளுக்கும் தயாரிக்கப்பட்டு அம்மாவட்ட நிலநீர் கோட்டங்களுக்கு ஆய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

செயற்கைக்கோள் நிழற்படி ஆய்வுகள் ;

முன்னோடி ஆய்வுக்குப் படங்கள் தயாரிக்க ஆகாய புகைப் படங்கள் மிகவும் உதவியாக இருக்கின்றன. செயற்கைக் கோள் நில புகைப்படங்களின் உதவியால் மாவட்டங்களின் நில அமைப்பும் புவியியல் படங்கள் இவ்வாண்டில் வட ஆற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதிக்கும், தென் ஆற்காடு மற்றும் சேலம் மாவட்டங்களுக்கும் தயாரிக்கப்பட்டன. ஆகாயத்தில் மிக உயரமான இடத்திலின்றும் கிடைக்கும் அகன்ற பார்வையினால் கடினப் பாறைப் பகுதிகளில் நில நீரின் இருப்பு, ஓட்டம் முதலியவற்றை நிர்ணயிக்கும் நிலப் பிளவுகள், பெரிய வெடிப்புகள் போன்றவற்றை கண்டுபிடிக்க முடிகிறது. கடினப் பாறைப் பகுதிகளில் கிணறு தோண்ட சாதகமான இடங்களைக் கண்டுபிடிக்க இவைகள் பெரிதும் உதவும்.

இயந்திரம் மற்றும் சாதனங்களின் பராமரிப்பு :

நிலநீர் துறையில் 33 துளைப் பொறிகள்; 20 காற்றழுத்த இயந்திரங்கள், 96 போக்குவரத்து வாகனங்கள் மற்றும் சில துணை இயந்திரங்கள் ஆகியவை நிலநீரின் ஆய்விற்கான துரப்பணப் பணிகளிலும் வறட்சி நிவாரணப் பணிகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன, 252 குழாய்க் கிணறுகள் போடப்பட்டன

சீரான பராமரிப்பின் காரணமாக பெரும்பாலான கனரக இயந்திரங்களாக துரப்பணக் கருவிகள் மற்றும் காற்று அழுத்த இயந்திரங்கள் ஆகியவகைள் பணிபுரிய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவ்வாண்டு 23 துளைப் பொறிகளுக்கு வரை வில் பழுதுகள் பார்க்கப்பட்டு இயக்கப்பட்டன. மேலும், இவ்வாண்டு இயந்திரங்களின் இயக்கம், பராமரிப்பு வகையிலும் குழாய்கள் வகையிலும், தேவையான உதிரிப் பாகங்கள் புதிய துளைக் கருவிகள், இதர தளவாடங்கள் வாங்கிய வகை யிலும் மொத்தம் சுமார் ரூபாய் 7.8 இலட்சம் அளவில் செலவிடப் பட்டது,

தொழில்களுக்கு நீர் வழங்குதல் ;

மீஞ்சூர், பஞ்சட்டி, தாமரைப்பாக்கம் என்ற மூன்று நீர் வழங்கும் பகுதிகளையும், அவைகளுடைய சொத்துக்களையும் செலவினங்களையும் சென்னை பெருநகர் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாற்றப்பட்டு விட்டது,

நிலத்தடி நீர் வழங்கும் நீர் படிவங்களை பராமரித்தல் :

கல்பாக்கத்தில் உள்ள சென்னை அணுமின் நிலையத் திட்டத்திற்கு நீர் வழங்கும் பாலாற்று கிணற்று பகுதிகளை 1982–83 ஆம் நிதி யாண்டில், பராமரிப்புக்கான செலவு ரூ. 6.25 இலட்சங்கள் ஆகும்.

பாசனம்

1982-83-ஆம் ஆண்டில் மாநிலத்திலுள்ள பல்வேறு நீர்த்தேக்கங்களிலிருந்து பாசனத்திற்கு நீர் விடப்பட்ட நாள், நீர் நிறுத்தப்பட்ட நாள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தொடர் எண்ணும், பாசனத் திட்ட நீர்த்தேக்கத்தின் பெயரும்.	பாசனத்திற்கு நீர் விடப்பட்ட நாள்.	நீர் நிறுத்தப்பட்ட நாள்.
(1)	(2)	(3)
1. மேட்டூர் நீர்த்தேக்கம்	21–6–1982	28–1–1983
2. மேட்டூர் கால்வாய்த் திட்டம்		
3. புள்ளம்பாடி திட்டம் ..	திறந்து விடப்படவில்லை.	
4. புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாய் திட்டம் ..		
5. பவானிசாகர் முதன்மைக் கால்வாய்		
முதல் முறை	25–8–1982	15–1–1983
இரண்டாவது முறை	திறந்து விடப்படவில்லை.	
6. அமராவதி கால்வாய்	1–12–1982	4–3–1983
7. கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம்	27–9–1982	15–3–1983
8. (அ) சாத்தனூர் இடதுகரைக்கால்வாய்	3–1–983	15–5–1983
(ஆ) சாத்தனூர் வலதுகரைக் கால்வாய்	திறந்து விடப்பட வில்லை.	

9. பெரியார் பாசனத் திட்டம் :		
ஒருபோகம் பயிராகும பகுதி	18–11–1982	15–2–1983
இருபோகம் பயிராகும் பகுதி	9–7–1982	15–2–1983
10. வைகை நீர்த்தேக்கம் :		
(அ) திருமங்கலம் முதன்மைக் கால்வாய்	26–11–1982	15–2–1983
(ஆ) பெரியாறு புதிய விரிவாக்கப்பகுதி ..	திறந்துவிடப்படவில்லை.	
11. மணிமுத்தாறு நீர்த்தேக்கம்	20–12–1982	12–2–1983
12. கோதையாறு பாசனத் திட்டம்	1–6–1982	28–2–1983
13. பட்டணங்கால்	1–6–1982	28–2–1983
14. இராதாபுரம் கால்வாய்	26–6–1982	26–10–1983
15. கன்னியாகுமரி கிளைக்கால்வாய்	1–6–1982	10–2–1983

பாங்கான பகுதித் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் பாலாற்றின் குறுக்கே ஒரு நீர்தேக்கம் கட்டுதல் ;

தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மாரப்பட்டி, கிராமத்தின் அருகே பொன்னையாற்றின் கிளை நதியான பாம்பாற்றின் குறுக்கே 238 மில்லியன் கன அடி கொள்ளளவுத் திறன் கொண்ட நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுவதற்கும், 31.23 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் வெட்டுவதற்கும் இத்திட்டம் வகைசெய்கிறது. தருமபுரி மாவட்டத்தில் பாசன வசதியில்லாத பின்தங்கிய பகுதிகளில் 4,000 ஏக்கர் நிலம் இத்திட்டத்தால் பயன்பெறும், இத்திட்டம் தற்போதைய செலவு மதிப்பீடு ரூ. 307 இலட்சம் ஆகும். மண்ணணை, கல்லட்டு அணை ஆகியவை சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளும் முடிக்கப் பட்டுவிட்டன. கால்வாய் வெட்டும் பணியிலும் 0.30 கி.மீ. நீளம் தவிர ஏனையவை முடிக்கப்பட்டுள்ளன. 1983 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் இத்திட்டத்தை முடிக்கக் கருதப்பட்டுள்ளது, இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை மொத்தம் ரூ. 306.35 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது,

கேளவரப்பள்ளி நீர்த் தேக்கம் ;

தருமபுரி மாவட்டம், ஒசூர் வட்டம், கேளரப்பள்ளி கிராமத் திற்கருகில் பொன்னியாற்றின் குறுக்கே 481 மில்லியன் கன அடி. கொள்ளளவுத் திறன் கொண்ட நீர்த்தேக்கம் ஒன்றை கட்டுவ தற்கும், இடது பக்கத்தில் 30.50 கி.மீ. நீளமுள்ள கால்வாயை யும், வலது பக்கத்தில் 22.58 கி.மீ. நீளமுள்ள கால்வாயையும் வெட்டுவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின் மூலம் புதிதாக 8,000 ஏக்கர் புன்செய் நிலங்கள் பயனடையும்: 1,083 ஏக்கர் நிலங்களுக்கு நிலையான பாசனம் அளிக்கப்படும். மேலும், ஒசூரிலுள்ள '' சிப் ாட் '' தொழிற்பேட்டைக்கு நாளொன்றுக்கு 2 மில்லியன் காலன் நீர் வழங்கப்படும். இத் திட்டத்திற்கு ரூ. 606.65 இலட்சம் செலவாகும் என்று மதிப் பிடப்பட்டுள்ளது. 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் இத் திட்டம் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டது நிலம் கையகப்படுத்துவது தொடர்பான தகராறில் உயர் நீதிமன்றம் தடை விதித்திருப்பதால் 19.11 –1979லிருந்து இப்பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இப்பணி நிறுத்தி வைக்கப்படுவதற்கு முன்னால் மண்ணணைப் பணி அநேகமாக முடிந்து விட்டது.

கல்லணைப் பகுதியில் 73 சதவீதமும் கால்வாய் வெட்டும் பணியில் 47 சதவீதமும் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்து 1983 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் வரை ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 267.43 இலட்சம் ஆகும்.

தருமபுரி மாவட்டம், பாலக்காடு வட்டம், தும்பல ஹள்ளி, கிராமத்தின் அருகே புலப்பட்டியாற்றின் குறுக்கே நீர்த் தேக்கம் கட்டுதல் :

புலப்பட்டியாற்றின் குறுக்கே 131 மில்லியன் கனஅடி கொள் ளளவுள்ள ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கும், இடது பக்கத்தில் ஒரு கால்வாயும் (8.77 கி.மீ.) வலது பக்கத்தில் ஒரு கால்வாயும் (4.55 கி.மீ.) வெட்டுவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது இத்திட்டத்தால் 2,154 ஏக்கர் தரிசு நிலங்கள் விளை நிலங் ளாக்கப்படுவதோடு இடைப்பட்ட 96 ஏக்கர் நிலங்களையும் இணைத்து 326 ஏக்கர் நிலங்களுக்கு நிலையான பாசனம் அளிக்கப்படும். அண்மையில் மதிப்பிட்டுள்ளபடி இத்திட்டச் செலவு ரூ. 205 இலட்சமாகும். மண்ணணைப் பணியின் 98 சதவீதமும் கல்லணைப் பணியின் 99 சதவீதமும் முடி வடைந்துள்ளன. இடது பக்கத்தில் கால்வாய் வெட்டும் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வலது பக்கத்தில் 8.57 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. 1983ஆம் ஆண்டு சூலைத் திங்களுக்குள் இத்திட்டத்தினை முடித்துவிடத் திட்ட மிட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 211,81 இலட்சமாகும்.

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், முள்ளிக்காடு கிராமத்தின் அருகே வாணியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல்.

418 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கும், இடது பக்கத்தில் 17.75 கி.மீ. நீளத்திற்கும் வலது பக்கத்தில் 12.45 கி. மீ. நீளத்திற்கும் இரு கால்வாய் வெட்டுவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது. இதன் மூலம் 8,550 ஏக்கர் தரிசு நிலங்கள் பாசனம் பெறுவதோடு 1,852 ஏக்கர் நிலங்களுக்கு நிலையான பாசனம் கிடைக்கும். அண்மை யில் மதிப்பிட்டுள்ளபடி இத்திட்டச் செலவு ரூ. 1,270 இலட்ச மாகும். மண்ணணைப் பணியின் 50 சதவீதமும் உபரி நீர் செல்வதற்கான பொறி மதகுப் பணியில் 84 சதவீதமும்

முடிவடைந்துள்ளன. இடது பக்கத்தில் 10 கி.மீ. நீளத்திற்கும் வலது பக்கத்தில் 9.60 கி. மீ. நீளத்திற்கும் கால்வாய் வெட்டும் பணி முடிவடைந்துள்ளது. 1985 ஆம் ஆண்டு சனவரித் திங்களுக்குள் இத்திட்டத்தை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 591.15 இலட்சமாகும்.

வெம்பக்கோட்டை நீர்த் தேக்கத் திட்டம் :

இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் வட்டம், வெம்பக் கோட்டை கிராமத்தின் அருகே வைப்பாற்றின் குறுக்கே 398 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் அமைப்ப தற்கும் 15.90 கி.மீ., 16.40 கி.மீ. ஆகிய நீளங்களில் முறையே இடது பக்க முதன்மைக் கால்வாய், வலது பக்க முதன்மைக் கால்வாய் ஆகியவற்றை வெட்டுவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தால், 3,278 எக்டேர் தரிசு நிலங்கள் பாசனம் பெறும். இத்திட்டத்திற்கு ரூ. 467 இலட்சம் செல வாகுமென்று மதிப்பிடப்பட்டது. மண்ணணையில் 80 சத வீதமும் கல்லணைப் பணியில் 79 சதவீதமும் முடிவடைந்து விட்டன. இடது பக்கம் 8.30 கி.மீ. நீளத்திற்கும், வலது பக்கம் 8.95 கி.மீ. நீளத்திற்கும் முதன்மைக் கால்வாய் வெட்டும் பணி முடிவடைந்துவிட்டன. இத்திட்டம் தொடங்கப்பட்டதி லிருந்து இதுவரை ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 314.63 இலட்சமாகும்.

குல்லூர் சந்தை நீர்த் தேக்கத் திட்டம் :

இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டை வட்டம், குல்லூர் சந்தை கிராமத்தில் அருகே விருதுப்பட்டி ஓடையின் குறுக்கே 127 மில்லியன் கன அடி கொள்ளளவுடைய நீர்த் தேக்கம் அமைப்பதற்கும், 6.40 கி.மீ. 3.50 கி.மீ. ஆகிய நீளங்களில் முறையே இடது பக்க முதன்மைக் கால்வாய், வலது பக்க முதன்மைக் கால்வாய் ஆகியவற்றை வெட்டுவதற்கும் இத் திட்டம் வகை செய்கிறது. 1170 எக்டேர் தரிசு நிலங்கள் இத்திட்டத்தால் புதிதாகப் பயனடையும். அண்மையில் மதிப் பிட்டுள்ளபடி இத்திட்டச் செலவு ரூ. 254 இலட்சமாகும். மண்ணணையின் 81 சதவீதமும் கல்லணைப் பணியில் 26 சத வீதமும் முடிவடைந்துள்ளன. 4.65 கி.மீ. நீளத்திற்கு இடது பக்க

முதன்மைக் கால்வாய், 0.70 கி.மீ. நீளத்திற்கு வலது பகக முதன்மைக் கால்வாய் ஆகியவை வெட்டும் பணி முடிவடைந்து விட்டது. குறுக்குக் கல்லணைப் பணியின் பெரும்பகுதி முடிவடைந்து விட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 143.76 இலட்சமாகும்.

வைகை ஆற்றுப் படுகையிலிருந்து வரும் வெள்ள நீரை குண்டாறு கிரிதமல் ஆற்றுப் படுகையில் திருப்பி விடுதல்,

வைகையை கிரிதமல், பரலயாறு ஆகியவற்றோடு இணைக்கும் வகையில் முறையே விரகனூர் பொறி மதகின் மீது ஒன்றும் பார்த்திடஊர் பொறி மதகின் மீது இன்னொன்றும் ஆக இரு இணைப்புக் கால்வாய்கள் வெட்டுவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. கிரிதமல் ஆற்றுப்படுகைக்குச் செல்லும் இணைப்புக் கால்வாய் ஒரு தடவைக்கு 1,000 கன அடி நீர் செல்லும் திறன் கொண்டது. கிரிதமல் ஆற்றுப்படுகையின் கீழ் 10,424 ஏக்கர் நிலங்களுக்கு பாசனமளிக்கும் 55 ஏரிகளுக்கு இக்கால்வாய் நீர் கொண்டு செல்கிறது. பரலயாற்றுக்குச் செல்லும் இணைப்புக் கால்வாய் 1,500 கன அடி நீர் செல்லும் திறனுடையது. குண்டாற்றுப் படுகையின் கீழ் 14,902 ஏக்கர் நிலங்களுக்கு பாசனமளிக்கும் 66 ஏரிகளுக்கு இக்கால்வாய் நீர் வழங்குகிறது. அண்மையில் மதிப்பிட்டுள்ளபடி இத்திட்டத்திற்காகும் செலவு ரூ. 148.50 இலட்சம். கிரிதமல் இணைப்புக் கால்வாய் 4 கி.மீ. நீளத்திற்கும் பரலயாறு இணைப்புக் கால்வாய் 0.23 கி.மீ. நீளத்திற்கும் வெட்டப்பட்டுள்ளன. இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 82.40 இலட்சம் ஆகும்.

நாகர்வதி நீர்த்தேக்கத் திட்டம் :

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டத்தைச் சேர்ந்த எரப்பட்டி கிராமத்தில் நாகாவதி ஆற்றின் குறுக்கே 164 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் அமைப்பதற்கும் இடது பக்கம் 15.70 கி.மீ. நீளத்திற்கும், வலது பக்கம் 18.98 கி.மீ. நீளத்திற்கும் முதன்மைக் கால்வாய் வெட்டுவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டம் தரிசாகவுள்ள 807 எக்டேர் நிலங்களை புதிதாகப் பாசன வசதியளித்து இருபோக விளைச்சல் நடைபெற்று பயனடைவதற்கு வகை செய்யும். அண்மையில் மதிப்

பிட்டுள்ளபடி இத்திட்டத்திற்காகும் செலவு ரூ. 359 இலட்சம். மண்ணணையில் 4 சதவீதமும், கல்லணைப் பணியில் 16 சத வீதமும் முடிவடைந்துள்ளன. 3.50 கி.மீ. நீளத்திற்கு இடது பக்க முதன்மைக் கால்வாயும், 3.15 கி.மீ. நீளத்திற்கு வலதுபக்க முதன்மைக் கால்வாயும், வெட்டப்பட்டுள்ளன. இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 69.95 இலட்சம் ஆகும்.

ஈச்சம்பாடி அணைக்கட்டுத் திட்டம் :

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் பொன்னி யாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. இரு கால்வாய்கள், (அதாவது இடது பக்க முதன்மைக் கால்வாய் 23.15 கி.மீ. நீளம், வலதுபக்கக் கால்வாய் 28.68 கி.மீ. நீளம்) மூலம் பாசனம் வழங்கக் கருதப் பட்டுள்ளது. இத்திட்டத்தால் புதிதாக 2,530 எக்டேர் புன் செய்ப் பயிர் பாசனம் பெறும். அண்மையில் மதிப்பிட்டுள்ளபடி இத்திட்டத்திற்காகும் செலவு, ரூ. 394 இலட்சம். அணைக்கட்டுப் பணியில் 66 சதவீதமும் இடது பக்க முதன்மைக் கால்வாய் வலது பக்க முதன்மைக் கால்வாய் முறையே 14.50 கி.மீ. நீளமும், 21.50 கி.மீ. நீளமும் முடிவடைந்துள்ளன. 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களுக்குள் இத்திட்டத்தை முடிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இது வரை ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 144.71 இலட்சம் ஆகும்.

தொப்பையாறு நீர்தேக்கத் திட்டம்

தர்மபுரி மாவட்டம், தருமபுரி வட்டத்தைச் சேர்ந்த தொப்பை யாறு கிராமத்தின் அருகில், 298 மில்லியன் கன அடி கொள்ளள வுள்ள நீர்த்தேக்கம் அமைப்பதற்கும், இடது பக்க முதன்மைக் கால்வாய், வலதுபக்க முதன்மைக் கால்வாய் ஆகியவை முறையே 24.20 கி.மீ., 16.47 கி.மீ. நீளத்திற்கு வெட்டுவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது. அண்மையில் மதிப்பிட்டுள்ளபடி இத்திட்டத் திற்காகும் செலவு ரூ. 596 இலட்சம். இருபோகம் விளையும் 2,157 எக்டேர் புன்செய் நிலங்களுக்கு புதிதாகப் பாசன வசதி யளிக்க இத்திட்டம் முனைகிறது.

மண்ணணையில் 51 சதவீதமும் கல்லணைப் பணியில் 18 சதவீதமும் முடிவடைந்துள்ளன. இடது பக்க முதன்மைக் கால்வாய், வலது பக்க முதன்மைக் கால்வாய் ஆகியவை 4.90 கி. மீ. 4. கி.மீ. நீளத்திற்கு வெட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் இத்திட்டத்தை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 170.66 இலட்சம் ஆகும்.

உப்பாறு நீர்த்தேக்கத் திட்டம் :

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்தில் திருப்பத்தூர் கிராமத்தின் அருகில் 80 மில்லியன் கன அடி கொள்ளளவு திறன் கொண்ட நீர்த்தேக்கம் ஒன்றை உப்பாற்றின் குறுக்கில் கட்டவும், இடது பக்கம் 4.85 கி.மீ. நீளத்திற்கு முக்கியக் கால்வாய் வெட்டவும், வலது பக்கம் 8.66 கி.மீ. நீளத்திற்கு முக்கியக் கால்வாய் வெட்டவும் இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தினால் புதிதாக 1,785 ஏக்கர் புன்செய் ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெறும். அண்மையில் மதிப்பிட்டுள்ளபடி இத்திட்டத்திற்காகும் செலவு ரூ. 140.00 இலட்சம். மண்ணணையில் 95 சதவீதமும், கல்லணை பணியில் 92 சதவீதமும் நிறைவடைந்துள்ளன. 4.64 கி.மீ. நீளத்திற்கு இடது முதன்மைக் கால்வாயும், 7.70 கி.மீ. நீளத்திற்கு வலது முதன்மைக கால்வாயும் வெட்டப்பட்டுள்ளன. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதற்கு மொத்தம் ரூ. 85.81 இலட்சம் செலவு ஆகியுளளது.

சித்தமல்லி நீர்த் தேக்கத் திட்டம் :

திருச்சி மாவட்டம், உடையார் பாளையம் வட்டத்தில் சித்தமல்லி ஓடையின் குறுக்கே 227 மில்லியன் கன அடி கொள்ளளவு திறன் கொண்ட நீர்த்தேக்கம் ஒன்றை அமைக்கவும் 9.80 கி.மீ. நீளத்திற்கு கால்வாய் வெட்டவும் இத்திட்டம் வகை செய்கிறது இத்திட்டத்தின் மூலம் புதிதாக 3,897 ஏக்கர் புன்செய் ஆயக்கட்டு நிலங்களும் ஏற்கனவே பாசன வசதி பெறும் 84 ஏக்கர் நன்செய் ஆயக்கட்டு நிலங்களும், புதிதாக 333 ஏக்கர் நன்செய் ஆயக்கட்டு நிலங்களும் பாசன வசதி பெறும். அண்மையில் மதிப்பிட்டபடி இத்திட்டத்திற்காகும் செலவு ரூ. 450.00 இலட்சம். மண்ணணையில் 12 சதவீதம் முடிவடைந்துள்ளது. கல்லணைக்கான அடித்தளப் பணி நடந்தேறி வருகின்றது. 3.10 கி.மீ. நீளத்திற்குக்

கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தை 1985 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களுக்குள் நிறைவு செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. ஆரம்பத்திலிருந்து இதுவரை இதற்கு மொத்தம் ரூ. 108.48 இலட்சம் செலவாயிற்று.

சூளகிரி சின்னாறு நீர்த்தேக்கத் திட்டம் :

தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டத்தில் பொன்னியாறு ஆற்று படுகையில் சூளகிரி சின்னாற்றின் குறுக்கே 81 மில்லியன் கன அடி கொள்ளளவு திறன் கொண்ட நீர்த்தேக்கம் கட்ட 2.36 கி.மீ. நீளத்திற்கு இடது பக்கத்தில் கால்வாய் ஒன்று வெட்டவும், 8.80 கி.மீ. நீளத்திற்கு வலது பக்கத்தில் கால்வாய் ஒன்று வெட்ட வும் இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தினால் புதிதாக 871 ஏக்கர் புன்செய் நிலங்கள் இரு போகம் சாகுபடி செய்ய பாசன வசதி பெறும் அண்மையில் மதிப்பிட்ட படி இத்திட்டத்திற்காகும் செலவு ரூ. 187.00 இலட்சம் மண் ணணையில் 59 சதவிகிதமும், கல்லணைப் பணியில் 45 சதவிகிதமும் முடிவடைந்துள்ளன. 6.00 கி.மீ. நீளத்திற்கு வலது பக்கக் காலவாய் வெட்டப்பட்டுள்ளது. தொடக்கத்திலிருந்து இது வரை. மொத்தம் ரூ. 75.63 இலட்சம் செலவாயிற்று.

நொய்யல் நீர்த்தேக்கத் திட்டம் :

பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டத்தில் நொய்யல் ஆற்றின் குறுக்கே தடுப்பு அணை ஒன்று அமைக்கவும். பருவ மழை நீரை நொய்யல் ஆற்றில் திருப்பி விடவும், 11.50 கி.மீ நீளமுள்ள கிளைக் கால்வாய மூலமாக கீழ் பவானித் திட்ட ஆயக் கட்டு நிலங்களிலிருந்து நீரைத் திருப்பி, திருச்சி மாவட்டம் கரூர் வட்டத்தில் ஆத்துப்பாளையம் அருகே கட்டத்திட்டமிட்டுள்ளன. மண் நீர்தேக்கத்தில் நிரப்பவும் இத்திட்டம் வகை செய்கிறது. இந்த நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு திறன் 235 மில்லியன் கன அடி ஆகும். 30.78 கி.மீ. நீளத்திற்கு காரை பூசப்பட்ட முதன்மைக் கால்வாய் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் திருச்சி மாவட்டம், கரூர் வட்டத்தில் உள்ள 9625 ஏக்கர் புன்செய் நிலங்கள் பயன்பெறும். அண்மையில் மதிப்பிட்டபடி இத்திட்டத்திற்காகும் செலவு ரூ. 1,281.97 இலட் சம். இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் நிறை வேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 1985 ஆம் ஆண்டு திங்களுக்குள் நிறைவுசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

வெள்ளக்கரை அமைக்கும் பணியில் 66 சதவீதமும், ஆத்துப் பாளையம் நீர்தேக்க வேலையில் 1 சதவீதமும் நிறைவடைந் துள்ளன. தடுப்பு அணை, கால்வாய் வெட்டும் பணிக்கான தொடக்க வேலைகள் நிறைவேறி வருகின்றன. இத்திட்டத் தொடக்கத்திலிருந்து இதுவரை ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 195.10 இலட்சம் ஆகும்.

தருமபுரி மாவட்டத்தில் கேசரிகுல்லி ஹள்ளா ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுதல்

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் திருமளவாடி என்ற ஊரில் பெல்லுஹல்லி அருகே கேசரிகுல்லி ஹள்ளா ஆற்றின் குறுக்கே 134 மில்லியன் கன அடி கொள்ளளவு திறன் கொண்ட நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டவும், இடது பக்க முதன்மைக் கால் வாய் (9.35 கி.மீ) வலது பக்கம் முதன்மைக் கால்வாய் (5.20 கி.மீ.) வெட்டவும் இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தி னால் 4,000 ஏக்கர் புதிய புன்செய் நிலங்கள் பாசனவசதி பெறும் இத்திடத்திற்காகும் செலவு ரூ. 306.90 இலட்சம். மண்ணணை யில் 16 சதவிகிதமும், எஞ்சிய பணிகளில் 1 சதவிதமும் முடி வடைந்துள்ளன. இடது பக்கக் கால்வாய் 1 கி.மீ. தூரத் திற்கு வெட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டிருக்கி கிறது. ஆரம்பத்திலிருந்து இதுவரை மொத்தம் ரூ. 59.36 இலட்சம் செலவு ஆகியுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் வட்டம், கொலவார்பட்டி என்ற ஊரின் அருகில் அர்ஜீனா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுதல்—

இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் வட்டம், கொலவார் பட்டி என்ற ஊரின் அருகில் அர்ஜீனா நதியின் குறுக்கே 178 மில்லியன் கன அடி கொள்ளளவு திறன் கொண்ட நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்ட இத்திட்டம் வகை செய்கிறது. 6,500 ஏக்கர் புன்செய் நிலங்கள் (முதல் சாகுபடி 2,500 ஏக்கர்கள், இரண்டா வது சாகுபடி 4,500 ஏக்கர்கள்) இத்திட்டத்தினால் பாசன வசதி பெறும். மேலும், 245 ஏக்கர் நன்செய் நிலங்களுக்கு நிலையான பாசனம் அளிப்பதும் 86.96 ஏக்கர் நன்செய் நிலங்களுக்கு புதிய பாசனம் அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். 2.70 கி.மீ. நீளமுள்ள கிளை வாய்க்காலுடன் 8,804 கி. தூரம்

வாய்க்கால் மூலம் பாசனம் அளிக்கப்படும். 1982 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இப்பணி நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான அண்மை மதிப்பீடு ரூ. 704 இலட்சம் ஆகும். ஆரம்பத்திலிருந்து இதுவரை மொத்தம் ரூ. 44.09 இலட்சம் செலவாகியுள்ளது.

சேலம் மாவட்டம் குறிச்சி என்ற ஊரில் அருகில் அனைமடுவு ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுதல்.

சேலம் மாவட்டம், சேலம் வட்டத்தில் குறிச்சி என்ற ஊரின் அருகில் அனைமடுவு ஆற்றின் குறுக்கே 267 மில்லியன் கன அடி கொள்ளளவு திறன் கொண்ட நீர்தேக்கம் ஒன்றைக் கட்டவும், 6.90 கி.மீ. தூரத்திற்கு இடது பக்கம் கால்வாய் வெட்டவும், 15.04 கி.மீ. தூரத்திற்கு வலது பக்கக் கால்வாய் வெட்டவும் இத்திட்டம் வகை செய்கிறது. 5,234 ஏக்கர் புன்செய் நிலங்கள் முதல் சாகுபடியின் கீழும், 1,753 ஏக்கர் நிலங்கள் இரண்டாது சாகுபடியின் கீழும், இத்திட்டத்தினால் பாசனம் பெறும். இத்திட்டத்திற்கு ரூ. 609.40 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1982 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இத்திட்டம் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. வெள்ளக்கால், மண்ணனை கால்வாய் வெட்டுதல் போன்ற தொடக்க வேலைகள் நிறைவேறி வருகின்றன. ஆரம்பத்திலிருந்து இதுவரை மொத்தம் ரூ. 42.00 இலட்சம் செலவாகியுள்ளது,

இராமநாதபுரம் மாவட்டம், விருதுநகர் வட்டம், அணைகுட்டம் என்ற ஊரின் அருகில் அர்ஜுனா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுதல்.

இராமநாதபுரம் மாவட்டம், விருதுநகர் வட்டம். அணைக்குட்டம் என்ற ஊரின் அருகில் அர்ஜுனா நதியின் குறுக்கே, 127.20 மில்லியன் கன அடி கொள்ளளவுத் திறன் கொண்ட நீர்த்தேக்கம் ஒன்று கட்ட இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தினால், புதிதாக 4,500 ஏக்கர் புன்செய் ஆயக்கட்டு நிலங்கள், (முதல் சாகுபடி 1,500 ஏக்கர் நிலங்கள் இரண்டாவது சாகுபடி 3,000 ஏக்கர் நிலங்கள்) பாசன வசதி பெறும். 5.10 கி.மீ. நீளத்திற்கு வலது பக்கக் கால்வாய் வெட்டவும் வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 303.60 இலட்சம் ஆகும். இத்திட்டம் 1982-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. தொடக்க வேலைகள் நிறைவேறி வருகின்றன. ஆரம்பத்திலிருந்து இதுவரை மொத்தம் ரூ. 8.86 இலட்சம் செலவாகியுள்ளது.

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், பாப்பநாயக்கன்பட்டி என்ற ஊரின் அருகில் கரியகோயில் ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுதல்.

கரிய கோயில் ஆற்றின் குறுக்கே 190 மில்லியன் கன அடி கொள்ளளவுத் திறன் கொண்ட நீர்தேக்கம் ஒன்று கட்டவும், வலப்பக்கம் 10.10 கி.மீ. நீளத்திற்கு முதன்மைக் கால்வாய் வெட்டவும், இடப்பக்கம் 10.84 கி.மீ. நீளத்திற்கு முதன்மைக் கால்வாய் வெட்டவும் இத்திட்டம் வகை செய்கிறது. முதல் சாகுபடி காலத்தில் 3.000 ஏக்கர் நிலங்களுக்கும், இரண்டாவது சாகுபடி காலத்தில் 3,600 ஏக்கர் நிலங்களுக்கும், பாசனமளிப்பதுடன் தாழ்வான ஆயக்க்கட்டுப் பகுதியான 96 ஏக்கர் நிலங்கள் நிலையான பாசன வசதி பெறவும் இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 630.00 இலட்சம் ஆகும். இத்திட்டம் 1982 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறைவேற்ற எடுத்துகொள்ளப்பட்டுள்ளது. மண்ணணை, கல்லணை கால்வாய் வெட்டுதல். போன்றவற்றின் தொடக்க வேலைகள் நிறைவேறி வருகின்றன. ஆரம்பத்திலிருந்து இதுவரை மொத்தம் ரூ. 52.00 இலட்சம் செலவாகியுளளது.

மதுரை மாவட்டம், பழனி வட்டத்தில், குதிரையாற்றில் குறுக்கே நீர்தேக்கம் கட்டுதல்.

மதுரை மாவட்டம், பழனி வட்டம், பாப்பன்பட்டி என்ற ஊரின் அருகில் குதிரையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்று கட்ட இத்திட்டம் வகை செய்கிறது. இந்த நீர்த்தேக்கத்தின் கொள்ளவுத் திறன் 252 மில்லியன் கன அடி ஆகும். வலப்பக்கத்தில் உள்ள காறை பூசப்பட்ட முக்கியக் கால்வாயை 8.58 கி.மீ. நீளத்திற்கு அமைக்கக் கருதப்

பட்டிருக்கிறது. இக்கால்வாய் மூலம் புதிதாக 3,250 ஏக்கர் புன்செய் நிலங்களுக்குப் பாசனமளிக்கவும், 400 ஏக்கர் நன்செய் நிலங்களுக்குப் பாசனமளிக்கவும் 202 ஏக்கர் நன்செய் ஆயக்கட்டு நிலங்களை புதிதாகப் பாசனத்தின் கீழ்க் கொண்டு வரவும் 2, 200 ஏக்கர் நனசெய் ஆயக்கட்டு நிலங்களுக்கு நிலையாகப் பாசனமளிக்கவும் கருதியிருக்கிறது. இத்திட்டம் 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மண்ணணை, வெள்ளக்கால், கால்வாய் வெட்டுதல் ஆகிய வற்றுக்கான தொடக்க வேலைகள் நடந்தேறி வருகின்றன. ஆரம்பத்திலிருந்து இதுவரை மொத்தம் ரூ. 36.54 இலட்சம் செலவாகியுள்ளது.

மதுரை மாவட்டம், பெரிய குளம் வட்டத்தில் வராக நதி சோத்துப்பாறை நீர்த் தேக்கம்) யின் குறுக்கே நீர்தேக்கம் கட்டுதல்.

100 மில்லியன் கன அடி கொள்ளளவுத் திறன் கொண்ட நீர்தேக்கம் ஒன்றை அமைக்கவும், வலப்பக்கம் 7.02 கி.மீ, நீளத்திற்கு முதன்மைக் கால்வாய் வெட்டவும் இத்திட்டம் வகை செய்கிறது. புதிதாக 1,000 ஏக்கர் புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்கவும், புதிதாக 67 ஏக்கர் நன்செய் நிலங்களைப் பாசனத்தின் கீழ்க் கொண்டுவரவும் 1,825 ஏக்கர் நன்செய் நிலங்கள் நிலையாகப் பாசன வசதி பெறவும் இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்திற்காக மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 870.10 இலட்சம் ஆகும். தொடக்க வேலைகள் நிறைவேறி வருகின்றன. ஆரம்பத்திலிருந்து இதுவரை மொத்தம் ரூ. 33.71 இலட்சம் செலவாகியுள்ளது.

பொதுப்பணித்துறை (கட்டிப்பிரிவு)

மாநில அரசின் பல்வேறு துறைகளின் தேவைகளுக்கு ஏற்ப திட்டம் தீட்டி வடிவமைத்து கட்டிடங்கள் கட்டுவது மற்றும் கட்டிடங்களைப் பேணி வருதல், கட்டிடப்பிரிவின் முக்கிய பொறுப்பாகும். மருத்துவம், கல்வி, வருவாய்,

வணிகவியல், சமூகநலம், காவல்துறை, வேளாண்மை, கால்நடை போன்ற துறையினருக்கும், நகராட்சி மற்றும் காதி வாரியம், அரசு சார்பு நிறுவனம் ஆகியவைகளின், தேவைக்கு ஏற்ப கட்டிடம் கட்டுதல் போன்ற பணிகள் இத்துறையினையே சார்ந்ததாகும். மேற்படி அரசு கட்டிடப் பணிகளுக்காக 1982—83ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்ட தொகை ரூபாய் 3,415.01 லட்சம். 1982-83ஆம் ஆண்டில் இத்துறை திட்டங்களுக்காக கட்டிடங்கள் கட்டும் பணியில் செலவிடப்பட்ட தொகை ரூ. 2,347.41 லட்சம்.

மருத்துவத்துறை.

மருத்துவத் துறைக்கு 1982—83-ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,295.20 லட்சம். 1982—83-ல் இத்துறைக்காக செல விடப்பட்ட தொகை ரூ. 793.21 லட்சம் (மேற்கூறிய தொகை, குடும்ப நலத்திட்டம், மருத்துவக் கல்வி, பொது சுகாதாரம் போன்றவைகளில் கட்டிடம் கட்டும் பணிகளுக்கும் சேர்த்து).

கலவித்துறை.

மாநிலத்தில் பல்வேறு பகுதிகளும் பயன்பெறும் வகையில் பல்வேறு இடங்களில் கல்லூரி மற்றும் கல்விக் கூடங்கள் கட்டித்தரும் வகையில் 1982—83ஆம் ஆண்டில் ரூ. 222 லட்சம் அரசினரால் அனுமதியளிக்கப்பட்டு வேலை முன்னேற்றமாக நடைபெற்று வருகிறது. 10+2+3 முறை கல்வித் திட்டத்தின்படியும் மாநிலத்தில் உள்ள 630 உயர் நிலைப்பள்ளிகளில் ஒரு வகுப்பறையும் ஒரு சோதனை சாலையும் அமைக்க ரூ. 1,083.5 லட்சம் அரசினரால் அனுமதியளிக்கப்பட்டு அவைகளில் 5 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. இத்துறைக்காக அரசினரால் 1982—83ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 407.84 லட்சம். செலவிடப்பட்ட தொகை ரூ. 408.34 லட்சம்.

வேளாண்மைத்துறை.

விளைபொருள் உற்பத்தியை கருத்தில்கொண்டு வேளாண்மையில் மிக விரைவாக புதிய உத்தியை மேற் கொள்ள வேண்டியுள்ளது. எனவே இதற்குத் தேவையான

வசதிகளை கிராமப் புறங்களில் படிப்படியாக செய்ய வேண்டியிருக்கிறது. ஆகையால் அவைகள் விதை சேகரிப்பு நிலையம், விதைப் பக்குவப்படுத்தும் நிலையம், கதிரடி தளம், குடியிருப்புகள் முதலிய பலவித கட்டிடங்களை வேளாண்மைத் துறைக்காக கட்டுவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. 1982—83 ஆம் ஆண்டு இத்துறைக்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 22.21 லட்சம்.

கால்நடை பராமரிப்புத் துறை :

தமிழ்நாட்டில் கால்நடைகளின் தரத்தையும் ஆரோக்கியத்தையும் வளர்ப்பதற்காகவும் பால்வளத்தைப் பெருக்கவும், கோழியினங்களுக்கு நல்ல வசதி செய்து தரவும் கீழே கொடுக்கப்பட்டுள்ள பணிகள் 1982—83-ல் எடுத்துக்கொள்ளப் பட்டது.

கால்நடை மருந்தகங்கள் கட்டுதல், செக்கை நோய் தடுப்பு கட்டிடம் கட்டுதல் (ஹைபர் ப்ரொடக்ஷன் புரோகிராம் கட்டிடம் கட்டுதல்) அறுவை சிகிச்சை நிலையம் கட்டுதல், ஒதுக்கப்பிரிவு நிலையம் கட்டுதல் போன்ற பணிகளாகும்.

1982—83-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டதொகை. 44.41 லட்சம்.

செலவிடப்பட்ட தொகை 28.87 லட்சம்.

சமூக நலத் துறை :

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் தமிழ்நாட்டில் ஒன்பது மாவட்டங்களில் உள்ள 170 யூனியன்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் தலையாய பணி மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் தாய்மையடைந்த பெண்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கும் சத்துணவு அளிப்பதாகும். இது தவிர பணிக்கான பணியாளர் இல்லங்கள் கட்டவும் கிராமப்புற சுகாதார பயிற்சி நிலையங்கள் கட்டவும் தீர்மானிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கீழ்க்கண்ட பணிகள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன :

	தொகை (ரூபாய் இலட்சங் களில்)
(1) 51 இடங்களில் கிராமப்புற சுகாதார பயிற்சி நிலையங்கள் கட்டுதல்.	144.33
(2) 9 இடங்களில் செவிலியர் பயிற்சி நிலையங்களுக்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டவும், புதிய பயிற்சி நிலையங்கள் கட்டுதல்.	99.48
(3) மகளிர் சுகாதாரப்பணி பார்வையாளர் பயிற்சி நிலையம் ஒன்று மதுரையில் கட்டுதல்	28.80
மொத்தம்	272.61

பொதுப்பணித் துறை :

ஆய்வு மாளிகை, ஒய்வு விடுதி, சுற்றுலா மாளிகை, பொதுப் பணித்துறை கோட்ட அலுவலகம், உபகோட்ட அலுவலகம், பொதுப்பணித் துறையினருக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் போன்ற பணிகளைத் தவிர வேறு துறையினருக்கும் இத்துறை கட்டிடங்கள் கட்டித் தருகின்றது.

1982—83-ல் நிதி ஒதுக்கீடு தொகை ரூ. 654.86 லட்சம். செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 771.52 லட்சம் (மேற் கூறிய தொகை மேலே கூறப்பட்டுள்ள பணிகளுடன் வணிக வரித்துறை, வருவாய்த்துறை, நீதித்துறை, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைகளுக்கு கட்டிடங்கள் கட்டித்தருவதும் சேர்ந்ததாகும்).

வணிகவரித் துறை :

கீழ்க்கண்ட வணிகவரித் துறைக்கான வேலைகள் முடியும் நிலையில் உள்ளது:—

(1) ரூ. 4.70 லட்சத்தில் பாளையங்கோட்டையில் கூடுதலாக மாடிகட்டும் வேலை பணி.

(2) ரூ. 4.45 லட்சத்தில் வேலூரில் கூடுதலாக மாடி கட்டும் வேலை.

(3) பூவிருந்தவல்லியில் மேஜர் செக் போஸ்ட் கட்டும் வேலை.

(4) ரூ. 2.65 இலட்சத்தில் ஓசூரில் செக் போஸ்ட் கட்டும் வேலை.

வருவாய்த் துறை ;

1982-83 ல் பெரம்பூரிலும், நுங்கம்பாக்கத்திலும் வட்டாட்சி அலுவலகங்கள் கட்டுவதற்காக ரூ. 15.00, ரூ. 17.40 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியது. 1981—82 ல் 8 இடங்களில் வருவாய்த்துறைக்காகவும், வட்டாட்சி அலுவலகங்கள் கட்டுவதற்காகவும், ரூ. 236.27 இலட்சத்தில் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

கீழே குறிப்பிட்ட வேலைகள் முடியும் தருவாயில் உள்ளது. —

(1) செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்தில் வருவாய்த் துறை அலுவலகம் கட்டுதல்.

(2) சேலம் மாவட்டம் சங்கரியில் வருவாய்த் துறை அலுவலகம் கட்டுதல்.

(3) இராமநாதபுரம் மாவட்டம் ராஜபாளையத்தில் வருவாய்த்துறை அலுவலகம் கட்டுதல்.

மேலும், ரூ. 10.00 இலட்சத்தில் வட்டாட்சி அலுவலகம் கட்டுவதற்கும், ரூ. 1·00 இலட்சத்தில் கோயம்புத்தூர், திருச்சி, இராமநாதபுரம் ஆகிய மாவட்ட ஆட்சி அலுவலகத்தில் சைக்கிள் ஷெட் கட்டுவதற்கும், ரூ. 3.50 இலட்சத்தில் வருவாய்த்துறை அலுவலகத்திற்காக கழிப்பிடம் கட்டுவதற்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

வட்டாட்சியாளர் குடியிருப்புகள் ;

1980—81இல் அரசு ரூ. 9.75 இலட்சத்தில் 13 வட்டாட்சியாளர் குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதில், திருவிடைமருதூர் வேலை தவிர மற்ற 12 வேலைகள் முடிந்துள்ளது.

பிர்க்கா வருவாய்த்துறை ஆய்வாளர் குடியிருப்பு கட்டுதல் :

1980—81 இல் 225 இடங்களிலும், 1981—82 இல் 200 இடங்களிலும், 1982—83 இல் 100 இடங்களிலும் வருவாய்த் துறை ஆய்வாளருக்காக குடியிருப்பு கட்ட தீர்மானித்தது. அதில், 256 குடியிருப்புகள் வேலைகள் முடிந்து வருவாய்த் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

காவல்துறை :

1982—83 ஆம் வருடத்தில் மொத்தம் 119 குடியிருப்புகள் காவல் துறையினருக்காக ஒன்பது இடங்களில் கட்டி முடிக்கப் பட்டது. மேலும், காவல் துறையினருக்காக 1982—83 ஆம் வருடத்தில் குடியிருப்புகள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

வேலைக்கான மொத்த மதிப்பீடு : ரூ. 867.414 இலட்சங்கள்.

நீதித் துறை :

ரூ. 16.94 இலட்சத்திற்கு காஞ்சிபுரம் சார்பு நீதி மன்றத் திற்கு கூடுதல் கட்டிடங்கள அமைக்கவும், இரு சார்பு நீதிபதிகள், இரு மாவட்ட முன்சீபுகள் ஆகியோருக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டவும் அரசு ஒப்புதல் அளித்தது. ரூ. 13.50 இலட்சத்திற்கு தூத்துக்குடியில் குற்றவியல் நீதி மன்றங்களுக்கு கட்டிடம் கட்ட அரசு ஒப்புதல் அளித்தது. பாளையங்கோட்டையில் குற்றவியல் உரிமையியல் நீதி மன்றங்களுக்காக தனித்தனி கட்டிடங்களை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உயர்ந்த பகுதியில் கட்டுவதற்கு ரூ. 54.00 இலட்சத்திற்கு அரசு அனுமதி ழெங்கப்பட்டது. ரூ. 34.10 இலட்சத்திற்கு திண்டுக்கல்லில் ஒருங்கிணைந்த நீதி மன்றம் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மணப்பாறையில் ரூ. 5.80 இலட்சம் செலவில் இரண்டாம் நிலைக் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. செங் கற்பட்டில் கீழ்மட்ட நீதிமன்றங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்ட ரூ. 77.20 இலட்சம் அரசால் அனுமதி வழங்கப்பட்டது. சென்னை உயர்நீதி மன்றத்தில் 49 கூடுதல் வழக்கறிஞர்கள் அறைகள் கட்டுவதற்காக ரூ. 20.30 இலட்சம் அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இயக்கூர்தி பராமரிப்பு நிறுவனம். —

நிறைவுபெற்ற வேலைகள். —

	(ரூபாய் இலட்சத்தில்.)
1 கடலூரில் அரசு வட்டார உந்து வண்டிப் பட்டறை கட்டுதல்.	9.17

கருவூலம் மற்றும் கணக்குத்துறை. —

வேலையின் பெயர்.	மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்.)
1 திருமயத்தில் சார்நிலைக் கருவூலம் அலுவலகம் கட்டுதல்.	2.70
2 நீலகிரி மாவட்டத்தின் குன்னூரில் சார்நிலைக் கருவூலம் அலுவலகம் கட்டுதல்.	1.76
3 காஞ்சிபுரத்தில் சார்நிலைக் கருவூலம் அலுவலகம் கட்டுதல்.	1.67
4 பெரியார் மாவட்டம் கோபியில் சார் நிலைக் கருவூலம் அலுவலகம் கட்டுதல்.	1.33

தற்போது இருக்கும் சிறைச்சாலையில் அதிகமாகி வரும் கைதிகளுக்கு போதிய இடமின்மையால் 20,000 கைதிகள் அதிகமாக தங்குவதற்கு ஏற்ப கூடுதலாக கட்டிடம் கட்டுவதற்கும் மற்றும் போதுமான சுகாதார வசதிகள் செய்து தருவதற்கும் அரசு முடிவு எடுத்துள்ளது. மேற்கண்ட முடிவின்படி ஏழாவது நிதிக் குழுவில் அறிக்கையின்படியும், முன்கட்ட வேலையாக சென்னை, திருச்சி, சேலம், திருச்சி, பாளையங்கோட்டை ஆகிய மத்திய சிறைகளுக்கும் வேலூர், செங்கல்பட்டு, கடலூர் ஆகிய துணைச் சிறைச்சாலைகளுக்கும் கூடுதல் கட்டிடம் கட்டவும், போதிய சுகாதார வசதி செய்து தரவும், மற்றும் மத்திய சிறை, வேலூர் மதுரையில் குடியிருப்பு கட்டிடங்கள் கட்டவும் 2.92 கோடி வழங்கியுள்ளது.

மதுரை, வேலூர், சேலம் ஆகிய மத்திய சிறைச்சாலையில் உள்ள வேலைகள் அனைத்தும் முடிக்கப் பெற்று கட்டிடங்கள் சிறைத்துறை வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டது. மத்திய சிறை (சென்னை), செங்கை மாவட்டம் புழலில் மாற்றம் செய்ய அரசினரால் தீர்மானித்து, முதல் கட்டமாக கட்டிடங்கள் கட்ட, ரூ 78.00 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வேலைகள் நல்ல முன்னேற்றத்தில் இருக்கின்றன. கோயம்புத்தூர் மத்திய சிறையில் இரண்டாம் நிலை காவலர்களுக்கு 12 குடியிருப்புகள் கட்ட ரூ. 4.65 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இதில் உள்ள கட்டிட வேலைகள் முற்றுப் பெற்று விட்டன. சைதாப்பேட்டையில் மாநில சிறைத்துறை தலைமை அதிகாரியின் அலுவலக கட்டிடங்கள் கட்டுவதற்காக அரசு ரூ. 22.33 இலட்சம் அனுமதித்துள்ளது.

புயல் மற்றும் வெள்ளப் பாதுகாப்பு இல்லங்ககள் கட்டுதல்:

புயல் மற்றும் வெள்ளப் பாதுகாப்பு இல்லங்கள் 32 இடங்களில் கட்டுவதற்கு ஆட்சி ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. ஆத்தங்கரையில், புயல் பாதுகாப்பு இல்லம் கட்டும் பணி தவிர அனைத்துப் பணிகளும் முடிவுற்றன. மேற்கூறிய பணியும் முடிவுறும் தருவாயில் உள்ளது. 50 இடங்களில் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டுவதற்கு இரண்டாவது கட்டமாக ரூ. 3.00 இலட்சத்திற்கு அரசு ஆட்சி ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. மேற் குறிப்பிட்டுள்ள 50 வேலைகளில் 37 வேலைகள் முடிவுற்றன. மீதமுள்ள பணிகள் நடந்து வருகின்றன. மேலே குறிப்பிட்டுள்ள பணிகளைத் தவிர இன்னும் 20 இடங்களில், புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டுவதற்கு, இரண்டாவது கட்டமாக ரூ. 3.90 இலட்சத்திற்கு அரசு ஆட்சி ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. மேற் கூறியுள்ள 20 வேலைகளில், 8 வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தவிர, இன்னும் 8 இடங்களில் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டுவதற்கு ரூ. 3.90 இலட்சத்திற்கும் 6 இடங்கள் ரூ. 4.87 இலட்சத்திற்கும் அரசு ஆட்சி ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

வைப்புத் தொகை பணிகள். —

பொதுப் பணித்துறையால், முனிசிபாலிடி, பஞ்சாயத்து யூனியன், மத்திய மாநிலத்தில் நகர் மற்றும் ஊரக ஒருங்கிணைப்பு வளர்ச்சித் திட்டம், தொழிலாளர் நலத்துறை தமிழ்

நாடு பாட நூல் நிறுவனம், மாஜி ராணுவத்தினர் நலத்துறை பிராந்திய சேம நல நிதித்துறை, வேளாண்மை பொருள் விற்பனைக் குழு ஆகிய துறைகளுக்கான வேலைகளை அவர்கள் சார்பாக எடுத்து செய்து முடித்துள்ளது.

தமிழ்நாடு மின்வாரியம்

தமிழ்நாடு மின் வாரியம், தமிழ்நாடு அரசின் மின்சாரத் துறைக்கு அடுத்தபடியாக 1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் கீழ் 1—7—1957 அன்று சட்டப்படிக்கான ஓர் அமைப்பாக ஏற்படுத்தப்பட்டது. மின்வாரியம் அமைக்கப்பட்டதிலிருந்து இது 26 ஆம் ஆண்டாகும். மின் வாரியம் அமைவதற்கு முந்தைய கால அளவைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் இது 56 ஆம் ஆண்டாகும்.

1982 ஏப்ரலில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் மூன்றாவது 210 மெகா வாட் உற்பத்திப் பிரிவைத் தொடங்கியதன் மூலம், தமிழ்நாடு மின் தொகுப்பின் மொத்த நிறுவன உற்பத்தித் திறன் 3,139 மெகா வாட்டாக உயர்ந்தது.

(புனல் மின் நிலையம் : 1,369 மெகாவாட், மத்திய அரசுத் துறையின் கீழ் உள்ள நெய்வேலி அனல் மின் நிலையத்தின் 600 மெகா வாட் நீங்கலாக அனல் மின் நிலையத்தின் திறன் 1,170 மெகா வாட்) 1981 ஏப்ரலில் பேசின் பிரிட்ஜ் மின் உற்பத்தி நிலையத்தில் 30 மெகா வாட் பிரிவு ஒன்று உற்பத்தி செய்யாததால் நிறுவனத் திறன் 3,109 மெகா வாட்டாகக் கணக்கிடப்பட வேண்டும்.

மின்சக்தித் தேவை. —

கிராமப்புற இணைப்புகளுக்கு பகுதி நேர கட்டுப்பாடு இருக்கும்பொழுது நீர் மின் நிலையாட்களில் பாதி பாசனத்துடன் இணைந்து செயல்படுவதால் பாசனம் அல்லாத காலங்களில், அதாவது கோடை காலத்தில் நீர் மின் நிலையங்களின் உற்பத்தி திறன் சுமார் 600 மெகாவாட் மட்டுமே ஆகும்.

1982 ஜூலை 3 ஆம் நாளில் பதிவு செய்தவாறு தமிழ் நாடு மின் தொகுப்பின் உச்சத் தேவை 1,832.06 மெகா வாட்டாகும். அனல் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கிடைக்கும் மின் சக்தி மூலம் ஓரளவும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திடமிருந்தும் அண்டை மாநிலங்களிலிருந்தும் வாங்கப்படும் மின் சக்தி மூலம் ஓரளவும் மின் சக்தித் தேவை ஈடு செய்யப்பட்டது. 9—7—1982 அன்று பதிவு செய்தவாறு உச்ச மின் தேவை 1,888 மெகா வாட்டாகும்.

மின்சக்தி இழப்பு.—

உரிமம் பெற்றவர்கள், ஏனைய மாநிலங்கள் புதுச்சேரி உட்பட பயனீட்டாளர்களுக்கு விற்கப்பட்ட மின் சக்தியின் அளவு 8,587 மில்லியன் யூனிட்டாகும். மின் கம்பிப் பாதையில் ஏற்பட்ட இழப்பு 18.80 சதவீதமாகும்

மின்சக்தி விற்பனை.—

இந்த ஆண்டில் பயனீட்டாளர்களுக்கு விற்கப்பட்ட மின் சக்தி 8,587 மில்லியன் யூனிட்டாகும். இவற்றில் 3,493 மில்லியன் யூனிட் உயரழுத்த மின் சக்திக்கும், 5,094 மில்லியன் யூனிட் குறைவழுத்த மின் சக்திக்கும் ஆகும். தொழிற்சாலைகள் 3,650 மில்லியன் யூனிட்டும், வேளாண்மைத்துறை 2,700 மில்லியன் யூனிட்டும், வீட்டுப் பயனீட்டால் 900 மில்லியன் யூனிட்டும், வணிகர்கள் 650 மில்லியன் யூனிட்டும், உரிமதாரர்கள் 236 மில்லியன் யூனிட்டும், புதுச்சேரி உட்பட பிற மாநிலங்கள் 182 மில்லியன் யூனிட்டும், துறைப் பணிகள், கட்டிட நீர் வழங்கு பணிகள், பொது விளக்கு வசதி ஆகியவற்றிற்காக 269 மில்லியன் யூனிட்டுமாக மின் சக்தி பயன்படுத்தப்பட்டது.

நபர்வாரி பயன்பாடு (தற்காலிகமாக).—

1981—82 இல் ஒரு நபர் பயன்படுத்தும் மின் சக்தி அளவு 190 யூனிட்டாக இருந்தது. 1982—83 இல் இது 193 யூனிட் ஆகும்.

மின் பயனீட்டாளர்கள்.—

இந்த ஆண்டில் 3.35 இலட்சம் பேருக்குப் புதிதாக மின் இணைப்பு வழங்கப்பட்டது. ஆக 1982-83 இறுதியில் மொத்தம் 51.10 இலட்சம் மின் பயனீட்டாளர்கள் இருந்தனர். இதில், 5.07 இலட்சம் குடிசைகளுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பும் அடங்கும். 1-3-1983 அன்றுள்ளவாறு வாரியம் மின்சக்தி இணைப்பு கொடுத்த மொத்த அளவு 8,000 மெகா வாட் ஆகும்.

மின் இணைப்பு கொடுக்கப்பட்ட மின்கம்பிப் பாதைகள்.—

543 கி. மீ. கூடுதல் உயர் அழுத்த மின் கம்பிகளை, 2,519 கி.மீ. உயர் அழுத்த மின் கம்பிகள், 6,208 கி.மீ. குறைவழுத்த மின் கம்பிகள் ஆகியவற்றிற்கு 1982-83 இல் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. ஆக ஆண்டின் இறுதியில் மொத்தம் 35,213 கி.மீ. கூடுதல் உயரழுத்த மின் கம்பிகளுக்கும், 2,70,196 கி.மீ. குறைவழுத்த மின் கம்பிகளுக்கும் மின் இணைப்பு கொடுக்கப் பட்டது.

மின் சக்தி வழங்கப்பட்ட துணை மின் நிலையங்கள்.—

இந்த ஆண்டில் 22 புதிய துணை மின் நிலையங்கள் தொடங் கப்பட்டன. 31-3-1983 அன்றுள்ளவாறு இம்மாநிலத்தில் 411 கூடுதல் உயரழுத்த துணை மின் நிலையங்கள் இருந்தன.

மின்சக்தி வழங்கப்பட்ட பங்கீட்டு மின்னழுத்த மாற்றிகள் :

இந்த ஆண்டில் 362959KVA பங்கீட்டு மின்னழுத்த மாற்றி களுக்கு மின் திறனுடன் 3515 இணைப்பு வழங்கப்பட்டது. 31—3—1983 அன்றுள்ளவாறு 5901084 KVA திறனுடன் 59439 பங்கீட்டு மின்னழுத்த மாற்றிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது.

கிராமப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குதல் :

தெரு விளக்குகள் ஏனைய வசதிகளை அளிப்பதன் மூலம் 1982-83-இல் 25 கிராமங்களுக்கும் 19 சிற்றூர்களுக்கும் மின் சக்தி வழங்கப்பட்டது. ஆண்டு இறுதியில் 63562 நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்களுக்கு மின்சக்தி வழங்கப்பட்டது. 159 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்

பட்டது. 31—3—1983 அன்றுள்ளவாறு மொத்தம் 26,023 குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது 31—3—1983 அன்றுள்ளவாறு புதிதாகத் தோன்றிய 86 ஆதி திராவிட குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை. இந்த ஆண்டில் 19,497 விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. 31—3—1983 அன்றுள்ளவாறு மொத்தம் 9,65,017 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது.

நிதி :

1982-83 ஆம் ஆண்டுக்கான நிதி விவரங்கள் அதாவது பெரு மொத்த வருவாய் ரெவின்யூ கணக்கில் செலவு மூலதனச் செலவு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	(ரூபாய் கோடியில்.)
பெரு மொத்த வருவாய் (அரசு உதவித்தொகை நீங்கலாக)	320.43
ரெவின்யூ கணக்கில் செலவுகள் (சேம வட்டிச் செலவுகளுக்குத் தொகை ஒதுக்கும் முன்னர்)	370.75
மூலதனச் செலவு ..	243.38
31—3—1983 அன்றுள்ளவாறு வாரியத்தின் மொத்த மூலதனச் செலவு	1,635.83

குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம் :

தமிழ்நாடு அரசின் அறிவுரையின் பேரில் வாரியம் கிராம ஊராட்சிகளில் உள்ள குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தை 1979 ஜூலையில் தொடங்கியது. 1983 மார்ச் இறுதிக்குள் 5.07 இலட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது.

மின்சக்தி நிலையம் :

மின் தொகுப்பின் உற்பத்தித் திறன் 3,109 மெகாவாட்டாக இருந்தபோதிலும் 1832 மெகாவாட்டுக்கு மேல் ஏற்பட்ட மின்சக்தித் தேவையை 1983-இல் ஈடு செய்ய முடியவில்லை. ஏனெனில், அக்கால அளவில் புனல் மின்சக்தி உற்பத்தித்திறன் 1,369 மெகாவாட்டாக இருப்பதற்கு மாறாக புனல் உற்பத்தி

500 முதல் 700 மெகாவாட்டாகத்தான் இருந்தது. கோதையாறு I, II, பெரியாறு, சர்க்கார்பதி, சோலையாறு I, II, பாபநாசம், மேட்டுர் ஆளியாறு போன்ற பல புனல் மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தி பாசன காலத்தோடு இணைக்கப்பட்டுள்ளமையாலும் 1983 ஜனவரி முதல் பாசனத்திற்கு நீர் விடுவது படிப்படியாக நிறுத்தப்பட்டதாலும் கோடை காலத்தில் புனல் மின் உற்பத்தி 600 முதல் 800 மெகாவாட் குறைந்தது. 1982-83-இல் உற்பத்தி செய்யப்பட்ட 3,345 மில்லியன் யூனிட் புனல் மின்சக்தி 1981—82-இல் உற்பத்தி செய்யப்பட்ட 4,658 மில்லியன் யூனிட் புனல் மின்சக்தியை விட 28 சதவீதம் குறைவு பெருகிவரும் மின்சக்தித் தேவையை நிறைவு செய்யபோதிய மின் உற்பத்தி இல்லாததால் 1—4—1982 முதல் 30—6—1982 வரையிலும் 3—10—1982 முதல் 31—3—1983 வரையிலும் மின்வெட்டு அமுல் செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் அதிக அளவில் வேளாண்மை பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுத்ததிலும் கிராமங்களில் குடிசைகளுக்கு மின்சக்தி வழங்குவதிலும் தமிழ்நாடு மின்வாரியம் இந்தியாவிலேயே முதன்மையாக விளங்குகிறது. தமிழ்நாடு மின் தொகுப்பின் உற்பத்தித் திறன் அதாவது 3,109 மெகாவாட் தென்னிந்தியாவின் மிக அதிகமானதும் இந்தியாவிலேயே மகாராஷ்டிரத்திற்கும் உத்திரப்பிரதேசத்திற்கும் அடுத்தபடியாகவும் உள்ளது.

அத்தியாயம் 21

வருவாய்த் துறை

அத்தியாயம் 21

வருவாய்த்துறை.

வேளாண்மை வருமான வரி.

1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1955) சென்னை வேளாண்மை வருமான வரி ஆணையாளரால் தொடர்ந்து நிருவகிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாண்டில் வரியிணக்க ஏற்பாட்டின் மூலமும் விவரக் கணக்குகளின் அடிப்படையிலும் செய்யப்பட்ட வரிவிதிப்புகளின் மொத்த எண்ணிக்கை 34,921 ஆகும். இதில் 33,636 இனங்கள் முடிக்கப்பட்டு இவ்வறிக்கையாண்டில் 1285 இனங்கள் முடிக்கப்படாமல் எஞ்சியுள்ளன. இவற்றோடு இந்த ஆண்டில் வரி இணக்கத்தின் பேரிலும் விவரக் கணக்குகளின் அடிப்படையிலும் செய்யப்பட்ட 800 வேளாண்மை வருமான வரி விதிப்பு இனங்களும் முடிக்கப்பட்டு 473 இனங்கள் எஞ்சியுள்ளன.

கேட்பு, வசூல், நிலுவை :—

பாக்கித் தொகை உட்பட மொத்த கேட்புத் தொகை ரூபாய் 549.97 இலட்சத்தில் இவ்வாண்டு இறுதி வரை ரூபாய் 297.21 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

நிலமற்ற ஏழைகளுக்கு நிலங்களை ஒப்படை செய்தல்.

நிலமற்றவர்களுக்கும் ஏழைகளுக்கும் R.S.O. 15 ஆம் விதியின்படி (பழைய B.S.O.) பயிரிடத்தக்க தரிசு நிலங்கள் ஒப்படை செய்யப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டம் தவிர பிற மாவட்டங்களில் நிலமற்ற ஏழை ஒருவருக்கு இலவசமாக ஒப்படை செய்யத்தக்க நிலத்தின் உயரளவுப்பரப்பு அவர் ஏற்கெனவே நிலம் வைத்திருப்பின், அந்நிலம் உட்பட மொத்தம் புன்செய் நிலமாயின் 3 ஏக்கர் அல்லது நன்செய் நிலமாயின் $1\frac{1}{2}$ ஏக்கர் ஆகும். இவ்வொதுக்கீடு 1 ஏக்கர் நன்செய் நிலம் 2 ஏக்கர் புன்செய் நிலத்திற்குச் சமம் என்கிற அடிப்படையில் செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த

மட்டில், நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யத்தக்க உய ரளவு நிலம் புன்செய் என்றால் 1 ஏக்கரும் நன்செய் என்றால் 0.50 ஏக்கரும் ஆகும்.

அந்த ஆண்டில் ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் ஏனையோருக்கும் ஒப்படை செய்யப்பட்ட நிலத்தின் அளவு வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரம் வருமாறு :—

1—4—1982 முதல்
31—3—1983 ஆம் நாள்
வரையிலான கால அளவில்.

	ஒப்படை செய்யப்பட்ட நிலத்தின் அளவு.		வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை.
(1)	(2)		(3)
	ஏக்கர்	சென்ட்	
1 ஆதி திராவிடர்	1,846	89	1,510
2 பழங்குடியினர்	311	44	218
3 ஏனையோர்	12,292	27	10,470
மொத்தம்	14,450	60	12,198

4. நத்தங்களிலும், ஆட்சேபகரமற்ற பிற புறம்போக்கு நிலங் களிலும் வீடுகளைக் கட்டுவதன் வாயிலாக நில ஆக்கிரமிப்பு செய்வதை முறைப்படுத்துதல் :—

R.S.O. 21-இன்படி வீடற்ற ஏழைகளுக்கு, இம்மாநிலத்தில் சென்னை, மதுரை ஆகிய மாநகர்கள், கோயம்புத்தூர், திருச்சி ராப்பள்ளி ஆகிய நகரங்கள் ஆகியவற்றில் 750 சதுர அடிவரை யிலும், பிறபகுதிகளில் 0.03 சென்ட் வரையிலும் இலவசமாக வீட்டுமனைகள் பபடை செயயபபடுகின்றன,

நத்தங்களிலும் (கிராம மனை), பிற புறம்போக்கு நிலங்களிலும் வீடுகளைக் கட்டுவதன் வாயிலாகச் செய்துள்ள ஆட்சேபகரமற்ற நில.ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துவதன் மூலம் பெருமளவுக்கு வீடுகட்டும் மனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன, சென்னை மாநகரப்பகுதி, சென்னை மாநகர் எல்லைப் பகுதிமாயிலிருந்து 20 மைல் சுற்றளவிற்குள் உள்ள பகுதி, மதுரை நகர்ப்பகுதி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களின் எல்லைப்பகுதி ஆகியவற்றுக்குள் உள்ள அரசு நிலங்களை ஒப்படை செய்தல், குத்தகைக்கு விடுதல் ஆகிய நடவடிக்கைகளுக்கு அரசு 1971 ஆம் ஆண்டில் தடை விதித்தது. குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் வீட்டுவசதித் திட்டத்திற்கு அரசு நிலங்கள் அனைத்தும் கிடைக்கச் செய்வதற்கு வசதியாக இத்தடை விதிக்கப்பட்டது. குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் ஒப்புதலைப் பெறவேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டு 30—6—1972 ஆம் நாளன்று இருந்தவாறான ஆட்சேபகரமற்ற ஆக்கிரமிப்புகளைப் பொறுத்த மட்டில் இத்தடையானது 1973 ஆம் ஆண்டில் தளர்த்தப்பட்டது. எனினும், இத்தகைய இனங்களில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகாரமன்றத்தின் ஒப்புதலையும் பெறவேண்டும்.

சென்னை, மதுரை ஆகிய மாநகர்கள், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய .பெரும் முக்கிய நகராட்சிப் பகுதிகள், பிற பகுதிகள், ஆகியவற்றில், மாநில நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலையைச் சேர்ந்த நிலப்பகுதி உட்பட, வருவாய்த்துறையைச் சேர்ந்த நிலமாயினும் அல்லது பொதுப்பணித்துறையைச் சேர்ந்த நிலமாயினும் 30—6—1977 ஆம் நாளன்று இருந்தவாறு வீடற்ற ஏழைகள் குடிசைகளை அமைத்து நில ஆக்கிரமிப்பு செய்துள்ளவற்றை அகற்றக்கூடாது என்றும், அவை விதிகளின்படி முறைப்படுத்தப்படவேண்டுமென்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது, எனினும், அரசு கையகப்படுத்தியுள்ள பட்டா நிலங்களிலும் அரசுத் துறைகள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், சென்னை மாநகராட்சி போன்றவற்றின் குறிப்பிட்ட திட்டங்களுக்குத் தேவைப்படுகின்ற அரசு நிலங்களிலும் வீடற்ற ஏழைகள் செய்துள்ள ஆக்கிரமிப்புகளுக்கு இந்த ஆணை பொருந்தாது,

வீடுகளைக் கட்டியதன் வாயிலாக செய்துள்ள ஆட்சேபகர மற்ற ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தும் திட்டமானது நன் முறையில் நடந்தேறி வருகின்றது. வீட்டுமனை ஒப்படைப்பு பணிகளை விரைவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்படும் இடங் களிலெல்லாம் அவ்வப்போது அம்மாவட்டங்களுக்கென தனிப் பணியாளர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. வீடு கட்டு வதன் வாயிலாக நில ஆக்கிரமிப்பு செய்து செயல்படுத்தும் திட் டத்திற்காக .செங்கற்பட்டு மாவட்டத்தின் புறப்பகுதியில் ஒரே ஒரு பிரிவு மட்டும் .செயல்பட்டு வருகின்றது. 1—4—1982 முதல் 31—3—1983 ஆம் நாள் வரையில் ஆதி திராவிடர்கள்/ பழங்குடியினர் மற்றும் ஏனையோருக்கு வழங்கப்பட்ட வீட்டு மனைப்பட்டாக்களின் எண்ணிக்கை குறித்த விவர அறிக்கைக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆதி திராவிடர்	55,760
பழங்குடியினர்	1,933
ஏனையோர்	92,151
மொத்தம்	1,49,844

மேற்சொன்ன தனிப்பணியாளர்கள் நீங்கலாக, குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் வாயிலாக, நிபந்தனையின் பேரில், வீட்டு மனைகளை ஒப்படை செய்யும் உலக வங்கித்திட்டத்துடன் தொடர்புடைய பணிகளைக் கவனிக்கும் பொருட்டு டிபுடி கலெக்டர் ஒருவருடன் தேவையான தனிப்பணியாளர்களை நிய மிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது இப்பணியாளர்கள் 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலிருந்து பணியாற்றி வருகின் றனர், இவர்கள் 125 குடிசைப்பகுதிகளை மாற்றியமைக்குங் பணிகளைக் கவனித்துள்ளனர். 31—3—1983 ஆம் நாள் வரை யில் 32,816 இனங்களைப் பொறுத்தமட்டில், நிலம் ஒப்படை பெறுவதற்குத் தகுதியுடையவர்களின் பட்டியல், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. பணி முன்னேற்றமானது, நில நிருவாகத்துறையின் நுணுகிய திங்கள் மறு ஆய்வுகள் மூலம் மறு ஆய்வு செய்யப்படுகின்றது.

வறட்சி நிவாரணப்பணி

வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் சிலபகுதிகளில் 1981 ஆம் ஆண்டில் போதிய அளவிற்கு மழை பெய்யவில்லை. மேற்சொன்ன மாவட்டங்களில் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க, தற்போதுள்ள பொதுக் குடிநீர்க் கிணறுகளை ஆழப் படுத்துவதற்காக அரசு ரூ. 5 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியது. பொதுக்குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தும் பணியை மேற்கொள்வதற்காக, திருச்சிராப்பள்ளி, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் அரசு, ரூ. 10 இலட்சம் வழங்க அனுமதி வழங்கியது. மேலும், திருநெல்வேலி மாவட்டத்திற்குக் கூடுதலாக ரூ. 1 இலட்சம் ஒதுக்கியது. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் பொதுக் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக, 1982 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் வரை, ரூ. 16 இலட்சம் வழங்க அரசு அனுமதி வழங்கியது.

1982 ஆம் ஆண்டில் போதிய அளவு மழை பெய்யாததாலும் 1981-82 ஆம் ஆண்டுகளில் குறைவான மழை காரணமாக, வறண்டு போன, அல்லது வறண்டு போகும் நிலையிலுள்ள பிற திறந்த கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூ. 100 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியது. கடலோரப் பகுதிகளில் உறை கிணறுகள், சிறு கிணறுகள் கட்டுவதற்காக, ரூ. 10 இலட்சம் வழங்க அரசு அனுமதி வழங்கியது. மேலும், குடிநீர் வாயில்கள் இல்லாத, குடிநீர் வழங்கல் திட்டம் செயல்படுத்தப் படாத இடங்களுக்குக் குடிநீர் எடுத்துச் சென்று வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் லாரிகள், டிராக்டர்கள், வண்டிகள் ஆகியவற்றிற்கு வழங்கப்படவேண்டிய வாடகைக் கட்டணத்திற்காக அரசு ரூ. 5 இலட்சம் வழங்கியது. 1982–83 ஆம் ஆண்டில், கிராமப் பகுதி குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 40 கோடி ரூபாயில், தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம், எத்தன்மையினராயிருப்பினும் குடியிருப்புகளடங்கிய பகுதிகள் தன்னிறைவுத் திட்டப் பணி படிப்படியாக செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட பகுதியாயிருப்பினும் அவற்றை கருத்தில் கொள்ளாது பின்வரும் வகைப் பணி

களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று அரசு ஆணைப் பிறப்பித்தது.

(i) மாவட்டத்தில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையுள்ள குடியிருப்புப் பகுதிகள் அனைத்திற்கும் ;

(ii) குடிநீர் வழங்கப்படுவது இடர்பாடாகவுள்ள அனைத்து பேரூராட்சிகள் ;

(iii) குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள அனைத்து நகராட்சிகள் ;

1982—83 ஆம் ஆண்டில், 146 பேரூராட்சிகளில், தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகச் செலவிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த ரூ. 5 கோடி ரூபாயை, பேரூராட்சிகளில், கைபம்புகள் போடுவதற்காகச் செலவிடப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று, மேலும் அரசு ஆணை பிறப்பித்தது.

1982 ஆம் ஆண்டில், பல மாவட்டங்களில், பருவமழை பொய்த்ததன் விளைவாகப் பெருமளவில் பாதிக்கப்பட்டன, எனவே, மாவட்டங்களில் குடிநீர் வழங்கல் திட்டத்தை மேற்கொள்ளவும், வேலைவாய்ப்பளிக்கக்கூடிய பணிகளை மேற்கொள்ளவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயற்குறிப்புக்களை அனுப்பியுள்ளனர். வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசிடம் நிதிஉதவி கோரி அக்கோரிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசு அனுமதி வழங்கிய மொத்தத் தொகை, வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒவ்வோர் இனத்திற்கும் செலவிட வேண்டிய உச்ச அளவுத் தொகை குறித்து மத்திய அரசு வரையறை செய்துள்ள தொகை ஆகிய விவரங்கள் வருமாறு :—

தொடர் எண், திட்டப்பணியின் பெயர்.	இந்திய அரசு வரையறை செய்துள்ள உச்ச அளவுத்தொகை.	மாநில அரசின் ஒதுக்கீடு.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
(1) ஏரிக்கரைகளில் புதிய கிணறுகள் தோண்டுவதற்காக	106.00	330.00

தொடர் எண், திட்டபணியின் பெயர். (1)	இந்திய அரசு வரையறை செய்துள்ள உச்ச அளவுத்தொகை (2)	மாநில அரசின் ஒதுக்கீடு. (3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
(2) திறந்த நிலையில் உள்ள பொதுக் குடிநீர்க்கிணறு களை ஆழப்படுத்துவதற்காக	155.00	341.00
(3) லாரிகள் மூலம் குடிநீர் எடுத்துச் சென்று வழங்குவதற்காக	116.00	166.00
(4) ஊருணிகள், குளங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ..	419.00	419.00
(5) நீர்க்கசிவுக் குட்டைகளை அமைத்தல்	268,00	268.00
(6) மண்சாலைகள அமைத்தல்	225.00	250·00
(7) 50 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டுப் பகுதிகளை கொண்ட பாசன ஏரி களை மேம்படுத்தல் ..	1,603.00	500.00
(8) 50 ஏக்கருக்கும் அதிகமான ஆயக்கட்டுப் பகுதி களைக் கொண்ட பாசன ஏரிகளை மேம்படுத்துதல்	...	1,103.00
(9) தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூலம் துளைக் கிணறுகள் தோண்டுதல் ..	2,016.00	2,046.00
(10) கால்நடை ளைர்ப்புத் துறை.	300.00	300.00
(11) நகராட்சிகள், பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கலை மேம்படுத்தல் ..	150.00	170.00

தொடர் எண், திட்டபணியின் பெயர்.	இந்திய அரசு வரையறை செய்துள்ள உச்ச அளவுத்தொகை.	மாநில அரசின் ஒதுக்கீடு.
(1)	(2)	(3)
(12) தனியாக நீர்வழங்கல் குழாய்களை அமைத்தல்.	145.00	250.00
(13) பெருநகர் குடிநீர் வழங்கல்.	489.00	780.25
(14) காடு வளர்ப்பு	150.00	150.00
(15) பொதுச்சுகாதாரம்	230.00	230.00
(16) விவசாய இடு பொருட்கள்	464.00	464.00
இதர பணிகள் :		
(17) தனியார் பாசன கிணறுகளை ஆழப்படுத்த ..		500.00
(18) தஞ்சாவூர் மாவட்டத்தில் 5,000 வடிமுனை குழாய் கிணறுகள் அமைத்தல் ..		750.00
	6,836.00	9,017.25

நிலச் சீர்திருத்தம்

தமிழ் நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டம்.

(சட்டம்எண். 58/1961) (திருத்தப்பட்டவாறு) பயிரிடு நிலங்கள் வைத்து வருவதற்கு உச்ச வரம்பு விதித்து, உச்ச வரம்பிற்குள் கூடுதலாக இருக்கும் உபரி நிலங்களுக்கு இழப்பீடு கொடுத்து

அவற்றைக் கையகப்படுத்த இச்சட்டம் வகை செய்கிறது. ஒருவர் எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாம் என்று உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 'நபர்' என்பதில் தனிநபர் அல்லது குடும்பம், நிறுவனம், சங்கம், தனி நபர்க் கழகம், வர்த்தக நிறுவனம் அல்லது பொறுப்புக் கழகம் ஆகியவை அடங்கும். ஒரு குடும்பம் என்பதில் கணவன் அல்லது மனைவி, உரிய வயதடையாத மகன்கள், திருமணமாகாத மகள்கள், ஆண் சந்ததியில் வயது வராத பேரப் பிள்ளைகளும், மணமாகாத பேத்திகளும் (அவர்களின் தாய், தந்தை இறந்திருக்க வேண்டும்) அடங்குவர் என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டம், உரிய வயதடைந்த மகன்கள், திருமணமான மகள்கள், பாகப் பிரிவினை செய்து கொண்ட மகன்கள், பேரப்பிள்ளைகள் ஆகியோரையும், விருப்பத்துடன் நிலம் மாற்றிக் கொடுக்கப்பட்ட திருமணமாகாத மகள்கள், திருமணமாகாத பேத்தியும் அல்லது பாகப் பிரிவினை செய்து கொண்டவர்களையும் குடும்பம் என்ற பொருள் விளக்கத்திலிருந்து நீக்குகிறது. 5 அல்லது அதற்குக் குறைவான நபர்களைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு அனுமதிக்கத்தக்க மொத்த உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்களாகும். ஒரு குடும்பத்தில் ஐவருக்கும் மேற்பட்டவர்கள் இருந்தால் அவ்வாறு ஐவருக்கும் மேற்பட்டுள்ள ஒவ்வொருவருக்கும் மொத்த உச்ச வரம்பிற்கு உட்பட்டு கூடுதலாக ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். இச்சட்டம் செயலுக்கு வரும் நாளில் ஒரு பெண் தன் பேரில் சொந்தமாக வைத்துள்ள நிலம் அவருக்கு வழங்கப்பட்ட சீதன நிலமாகக் கருதப்படுகிறது. குடும்பத்தில் உச்சவரம்பு நிலத்துடன் ஒரு பெண் உயரளவு 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்தை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்.

மூலச் சட்டத்தின் கீழ் (சட்டம் 58/1961) 'நபர்' ஒருவருக்கான உச்சவரம்பு, சீதனம் பெற்ற வகையில் கூடுதலாக வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட நிலம் கூடுதலாக உள்ள நபர்களுக்காக வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட நிலம் ஆகியவை உட்பட மொத்த உச்சவரம்பு அளவு 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதற்கு உட்பட்டு 30 ஸ்டாண்டர்டு ஏக்கராக இருந்தது. அவ்வப்போது இந்த உச்சவரம்பு அளவு குறைக்கப்பட்டது. ஒரு

நபருக்கு தற்போது உச்சவரம்பு அளவு, மொத்த உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதற்கு உட்பட்டு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்களாகும்.

பொறுப்புக் கழகங்களுக்குத் தொடக்கத்தில் இச்சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் பொறுப்புக் கழகங்கள், பொதுப் பொறுப்புக் கழகங்கள், தனியார் பொறுப்புக் கழகங்கள் என்றும் பொதுப் பொறுப்பு கழகங்கள், பொது நோக்குடைய சமயப் பொறுப்பு கழகங்கள், பொது நோக்குடைய அற அல்லது கல்விப் பொறுப்புக் கழகங்கள் என்றும் வகைப்படுத்தப்பட்டன. தனியார் பொறுப்புக் கழகத்திற்கு சொந்தமான நிலங்கள், இப்பொறுப்புக் கழகத்தினால் பயனடையும் நபர்களுக்குச் சொந்தமான நிலங்களாகக் கருதப்பட்டன. பொது நோக்குடைய கல்வி சமயப் பொறுப்புக் கழகங்களிடம் அல்லது சமய நிறுவனங்களிடம் அன்று இருந்த நிலங்கள் .இச்சட்டம் செயல்படுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. பொது நோக்குடைய கல்வி, அற பொறுப்புக் கழகங்களைப் பொறுத்தமட்டில், 5 முதல் 40 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் வரை வெவ்வேறு அளவிலான உச்சவரம்பு அளவு வரையரைக்கப்பட்டுள்ளது. பயிரிடு குத்தகைதாரர் ஒருவர் 5 ஏக்கர் நிலம் வரை வைத்துக் கொள்ள இச்சட்டம் வகை செய்கிறது. இந்த உச்சவரம்பு அளவிற்குக் கூடுதலாகப் பயிரிடு குத்தகைதாரரிடம் உள்ள நிலத்தை அங்கீகாரம் பெற்ற அதிகாரி கையகப்படுத்தி, அந்த நிலத்தை நிலமற்றவர்களுக்குக் குத்தகைக்குப் பங்கிட்டளிக்க வேண்டும். ‘பயிரிடு குத்தகைதாரர்’ என்பதில் நிலத்தைத் தன் வசம் வைத்துள்ள குத்தகைதாரரும் அடங்குவார்.

உச்சவரம்புச் சட்டத்தில் ‘விலக்கு’ என்பது மிக முக்கியமான கூறாகும். 1951 ஆம் ஆண்டு முதல் இதில் அடிக்கடி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மேற்சொன்ன பாராக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நோக்கு அறநிலையங்கள் அறப் பொறுப்புக் கழகங்களின் ஆளுகையில் உள்ள நிலங்கள் முழுமைக்கு தொடர்ந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. பின்வரும் இனங்களில் இச்சட்டத்தின் கீழ் முன்னர் விலக்களித்துப் பின்னர்

இச்சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாக அவ்வாறு விலக்களிக்கப்பட்டதிலிருந்து அவை நீக்கிவிடப்பட்டன

(i) ஆலைகள் பயனுக்காக கரும்பு விளைவிக்கப்படும் நிலம்;

(ii) மேய்ச்சலுக்கென்றே பயன்படுத்தப்பட்ட நிலம் :

(iii) மலைப் பகுதியிலுள்ள நிலம்.

(iv) பால்பண்ணை, கால்நடை இனப்பெருக்கப் பண்ணைக்காகவென்றே பயன்படுத்தப்பட்ட நிலம்.

மலைத் தோட்டங்கள், விறகு மரங்கள், பழத் தோட்டங்கள் முதலியவற்றிற்காகப் பயன்படுத்தப்பட்ட நிலங்கள், அவ்வாறு தொடர்ந்து பயன்படுத்தப்படும் கால அளவு வரை அவற்றிற்கு விலக்களிக்கப்படுகிறது. மேற்சொன்னவை தவிர, நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்கள் வைத்துள்ள நிலம், பூதானமாக வழங்கப்பட்ட நிலம் அல்லது இராணுவத்தினர் புரிந்த வீரச் செயல்களுக்கு விருதுகளாக வழங்கப்பட்ட நிலம் ஆகியவை விலக்களிக்கப்படுகின்றன. நிலச் சீர்திருத்தங்கள் குறித்து தேசிய வழிகாட்டிக் குறிப்புகளுக்கேற்ப இருக்க, சீதன நிலம், உரிய வயதடையாதோருக்கான சொத்துக்கள் ஆகியவற்றிற்கும் பழத்தோட்டங்கள், தோப்புகள், விறகுமரங்கள் ஆகியவற்றிற்கும் விலக்களிக்க இச்சட்டத்தில் அவசியமான திருத்தங்கள் செய்யக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நில நடுவர் மன்றத்தை அமைப்பதற்குத் தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு 11 ஆம் சட்டத்தின் மூலம் அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் 3 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்க வகை செய்யும் தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த இரண்டாம் திருத்தச் சட்டத்தின் (சட்டம் 8/80)94– ஆம் பிரிவின் விதித்துறைகள் 3 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்திற்கு பதிலாக, 3 சாதாரண ஏக்கர் புன்செய் நிலம் அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலத்தை வைத்துக்கொள்ள இயலும் வகையில் மாற்றப்பட்டுள்ளன. உயரளவு நிலத்தை, தற்போதுள்ள 5 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 3 சாதாரண ஏக்கர் புன்செய் நிலம் அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலம் என்று குறைத்து தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை விநியோகம் செய்தல்) விதிகள் தகுந்தவாறு திருத்தப்பட்டுள்ளன.

உபரி நிலங்களாகக் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு அந்த நிலங்களின் மொத்த விளைச்சலிலிருந்து கிடைக்கும் ஆண்டு நிகர வருவாயின் அடிப்படையில் முன்பு இழப்பீட்டுத் தொகை வழங்கப் பட்டது. 11/1979 ஆம் சட்டத்தின்கீழ், செலுத்தத்தக்க நிலவரி அடிப்படையில் இத்தொகை நிர்ணயிக்கப்படுகிறது. இதனால், ஒப்படை பெற்றவர்கள் செலுத்தும் கிரயத் தொகை குறைகிறது.

இச்சட்டத்தின்கீழ், 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் வரையில் அடைந்த முன்னேற்றம் வருமாறு :—

	ஏக்கர்.
உபரியாக அறிக்கையிடப்பட்ட நிலங்கள் ..	1,53,628
அனுபோகத்தில் எடுத்துக் கொள்வதற்கு முன்னர் தடை விதிக்கப்பட்ட நிலப்பரப்பு ..	10,382
ஒப்படை செய்வதற்காக உள்ள நிலப்பரப்பு ..	1,43,246
அனுபோகத்தில் எடுத்துக்கொண்ட பின்னர் தடை விதிக்கப்பட்ட நிலப்பரப்பு	13,659
அறிவிப்பு, விசாரணை ஆகியவற்றின்கீழ் வரும் நிலப்பரப்பு	14,538
தகுதிவாய்ந்தவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள்	1,02,508
தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலப்பரப்பு	4,041
13 ஆம் விதியின்கீழ் ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பு	8,500
ஆதி திராவிடர்களுக்கு ஒப்படை செய்யப் பட்ட நிலப்பரப்பும், அவ்விதம் ஒப்படை செய்ததால் பயனடைந்தோர் எண்ணிக்கையும்	37,509
	33,942 பேர்.
பழங்குடியினருக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலப் பரப்பும், அவ்விதம் ஒப்படை செய்ததால் பயனடைந்தோர் எண்ணிக்கையும்	18 ஏக்கர்.
	26 பேர்.
ஏனையோருக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலப் பரப்பும், அவ்விதம் ஒப்படை செய்ததால் பயனடைந்தோர் எண்ணிக்கையும்	64,981 ஏக்கர்.
	45,701 பேர்.

தஞ்சாவூர் 1952 ஆம் ஆண்டு பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1950-52-ல் உழவர் நிலைமை நன்றாக இல்லை. நில உரிமையாளர்கள், குத்தகைதாரர்கள் பண்ணைத் தொழிலாளர்கள் ஆகியோருக்கிடையே நல்லுறவு இல்லை ; இதனால் தகராறுகள் எழுந்தன. பண்ணைத் தொழிலாளிகள், அவர்களுடைய ஊதியத்தை அதிகரிக்குமாறும், பணி நிலைமையை மேம்படுத்துமாறும் கோரிக்கை விடுத்தனர். இவ்விருதரப்பினரின் தலைவர்களும், அரசு அதிகாரிகளும் கலந்து பேசினர்; இதன் காரணமாக, ''மாயவரம் ஒப்பந்தங்கள்'' என்னும் உடன்பாடு ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் விதித்துறைக்ளைச் சேர்த்து அரசு, 1952 ஆம் ஆண்டு தஞ்சாவூர் பயிரிடு குத்தகைதாரர்கள்—பண்ணையாள் பாதுகாப்பு அவசர, சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/1952) அதிகார முறையில் வெளியிட்டது. பின்னர் இது ரத்து செய்யப்பட்டு 1952 ஆம் ஆண்டு தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் 14/1952) கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பண்ணையாட்களுக்குக் கொடுக்க வேண்டிய ஊதியங்களை நிர்ணயித்து முறைப்படுத்துவதற்கும் சமரச அதிகாரிகள் நிவாரண நடவடிக்கைகளை எடுப்பதற்கும் வகை செய்கிறது. இதற்கு சிவில் நீதிமன்ற அதிகார வரம்பு நீக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்திற்குப் புறத்தேயும் இச்சட்டத்தைச் செயலாக்க இயலும் வகையில் 1956 ஆம் ஆண்டு 25 ஆம் திருத்தச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. இச்சட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தில் 23—8—1952 ,அன்று செயலுக்கு வந்தது. பின்னர், இச்சட்டம் 1—7—1959 முதல் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம், கடலூர் வட்டங்களில் செயலுக்கு வந்தது.

தமிழ் நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உருவான உழவர் பிரச்சினை பிற பகுதிகளுக்கும் பரவியது. ஆகவே சமூக நலனைக் காக்கும் வகையில் பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு அவர்கள் பயிரிடும் கால அளவிற்குப் பாதுகாப்பு அளிக்கவும், வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும் இச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பயிரிடும்

குத்தகைதாரர் ஒருவர், குத்தகைத் தொகையைச் சரிவரச் செலுத்தி வந்து, நிலம் அல்லது நிலத்தில் விளைந்துள்ள பயிருக்கு எவ்விதச் சேதமும் விளைவிக்காமல், வேளாண்மைக்கல்லாது பிறகாரியங்களுக்காக அந்நிலத்தைப் பயன்படுத்தாமல் அல்லது நில உரிமையாளரின் உரிமையை மறுக்காது இருப்பின் அக்குத்தகைதாரரை வெளியேற்ற முடியாது. இச்சட்டத்தின் கீழ் வருகின்ற தகராறுகள், வருவாய் நீதிமன்றங்களால் தீர்க்கப்படுகின்றன. வருவாய் நீதிமன்றங்கள் 22—3—1983 பிற்பகலுடன் கலைக்கப்பட்டதன் விளைவாக அப்போது நிலுவையில் இருந்த வழக்குகள், சம்பந்தப்பட்ட கோட்டாட்சித் தலைவராலோ அதிகாரம் பெற்ற அதிகாரி (Authorised officer) யாலோ பரிசீலிக்கப்படுகின்றன.

இம்மாநிலத்தில், வறட்சியும், வெள்ளமும் சீரற்ற பருவ நிலையும் காணப்பட்டதால், பயிரிடும் குத்தகைதாரர்கள், நில உரிமையாளர்களுக்குச் செலுத்த வேண்டிய குத்தகை தொகைகளைச் செலுத்த இயலவில்லை. அவர்கள் குத்தகை பாக்கித் தொகையைச் செலுத்துவதற்கு முன்னர், அவர்கள் தங்களுடைய நிதிநிலையைச் சீராக்குவதற்குப் போதிய அவகாசம் அளிக்க வேண்டியது அவசியம் என்று கருதப்பட்டது. அதன்படி, குத்தகைத் தொகையைச் செலுத்தாததற்காக வெளியேற்றப்படும் குத்தகைதாரருக்கு 1976 முதல் தவணைக் கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. இச்சலுகை 30—6—1981 வரை செயலில் இருந்தது. குத்தகை செலுத்தாத பயிரிடும் குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பு அளிக்கும் வகையில், அரசு தற்போது 1983 ஆம் ஆண்டு 15—1—1984 வரை தவணை நீட்டிப்பு அளிக்கும் சட்ட முன்வடிவு ஒன்றைக் கொண்டு வந்துள்ளது. இச்சட்ட முன்வரைவுக்கு, இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவு பெற வேண்டியுள்ளது.

தமிழ் நாடு 1956 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) சட்டம்—

குத்தகைதாரர்கள் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையை முறைப்படுத்தவும், தகராறுகளைத் தீர்க்கவும் இயலும் வகையில் பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரவேண்டியது அவசியமாயிற்று. ஆகவே

இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. நன்செய்நிலம், இறவைப் பாசனத்தால் பாசனம் அளிக்கப்படும் நன்செய் நிலம், பிறவகை நிலம் ஆகியவற்றுக்கு நியாய வார உச்சவரம்பு நிர்ணயிக்கப் பட்டது. நில உரிமையாளர், 17/1980 ஆம் சட்டத்தால் திருத்தப்பட்ட 24/1956 ஆம் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட மொத்த உற்பத்தியில் 25 சதவீதத்தை நியாய வாரமாகப் (தானியம்) பெறுதற்குத் தகுதியுடையவராவார். குத்தகைதாரர் நிலத்தைப் பயிரிடுவதற்காகும் செலவை ஏற்கையில், நில உரிமையாளர் நிலவரி, நிலத்திற்குச் செலுத்த வேண்டிய பிற தொகை ஆகியவற்றைச் செலுத்துகிறார். இது தொடர்பாக எழும் தகராறுகளைத் தீர்த்து வைக்க தனியாக நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வருவாய் நீதிமன்றங்கள் 22—3—1983 பிற்பகலுடன் கலைக்கப்பட்டு விட்டதால், அப்போது நிலுவை யிலிருந்த வழக்குகள் கோட்டாட்சித் தலைவராலோ அதிகாரம் பெற்ற அதிகாரி (Authorised Officer) யாலோ பரிசீலிக்கப் படுகிறது.

1958 ஆம் ஆண்டு கைஏர் வாரச், மாட்டு வாரச் சட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை, முசிறி, கரூர் திருச்சிராப்பள்ளி, லால்குடி, வட்டங்களுக்கு இச்சட்டம் பொருந்தும். இது 1—4—1959 முதல் செயலுக்கு வந்தது. இச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறு கைஏர் வாரதார்களுக்கும், 'மாட்டு வாரதார்களுக்கும்' இச்சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) சட்டம் :

அற நிலையங்களுக்கும், பொதுப்பொறுப்புக்கழகங்களுக்கும் சொந்தமாக பயிரிடு நிலங்கள் ஏராளமாக உள்ளன. நிலச் சீர் திருத்தத்தின் ஒரு பகுதியாக, நிறுவனங்களும், பொறுப்புக் கழகங்களும் நேரடியாகச் சாகுபடி செய்வதற்காக, அவை 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் வைத்திருக்கலாம் என்று இச்சட்டத் தின் மூலம் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயிரிடும் குத்தகைதாரர் ஒருவர் ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மிகையாக நிலம் வைத்திருக்க இயலாது. பொய்யாகக் குத்தகைக்கு

விடுவதைக் கலைவதே இச்சட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு பொறுப்புக் கழகத்தைப் பொறுத்த மட்டிலும், குத்தகைகளை நுணுக்கமாகச் சரிபார்க்கும் பணிநடைபெற்று வருகிறது. 62,051 குத்தகைதாரர்கள், 1,42,017.52 ஏக்கர் நிலங்கள் கொண்ட 9,122 பொறுப்புக் கழகங்கள் 31—3—1983 வரையில் சரி பார்க்கப்பட்டுள்ளன. அனுமதி அளிக்கப்பட்ட அதிகாரிகளும், கோட்டாட்சியர்களும், குத்தகைதாரர்கள் வைத்திருக்கும் உபரி நிலங்களை அல்லது பிறருக்காக பினாமியாக வைத்திருக்கும் நிலங்களைக் கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றனர். 16 பொறுப்புக் கழகங்களுக்குச் சொந்தமான 102 குத்தகை தாரர்கள் பயிரிட்டு வந்த 267.27 ஏக்கர் நிலம் நிலமற்றவர்களுக்கு விநியோகம் செய்வதற்காக எடுத்துக் கொள் ளப்பட்டது.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு) சட்டம் 28—1961.

இச்சட்டம், 31—3—1959 அன்றுள்ளபடி, குடியிருப்பு அனுபோகதாரர்கள், அவர்கள் வசிக்கும் குடியிருப்புகளிலிருந்து நிலஉரிமையாளர்களால் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது. இச்சட்டத்தின் 3 (1) பிரிவின்படி, குடியிருப்பு அனுபோக உரிமம் பெற்றுள்ள ஒருவரை அக்குடியிருப்பிலிருந்து வெளியேற்ற முடியாது; அவ்வாறு வெளியேற்ற வேண்டுமெனில் மேற்படிச் சட்டத்தில் அதற்கு வகைசெய்யப்பட்டிருக்க வேண் டும், இச்சட்டத்தின் செல்திறன் கால அளவு முதற்கண் மூன் றாண்டுகளாக இருந்தது; பின்னர் 29—11—1973 வரையில் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டது. பின்னர், அரசு, இச் சட்டத்தை மீண்டும் இயற்றுவதென்றும், அதற்கு முன்னர் ஒரு நாளிலிருந்து, அதாவது, 29—11—1973 ஆம் நாளிலிருந்து செயல்வடிவம் கொடுப்பதென்றும் முடிவு செய்தது; அதன்படி, 23/1975 ஆம் சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ் நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேடுகள் சட்டம்.

பயிரிடு குத்தகைதாரர்களின் நலனைப் பாதுகாக்க குத்தகை தாரர் உரிமைகள் குறித்த முழுமையான பதிவேடு ஒன்றை

தயாரித்து வைத்து வருவதற்கு இச்சட்டம் வகை செய்கிறது. பரவலாக விளம்பரம் வெளியிட்டு விசாரணை செய்து, பார்வையிட்டு, கேட்டறிந்த பின்னர் குத்தகைதாரர் உரிமைகள் குறித்த பதிவேடு தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது. 31—3—1983 வரை 4,39,074 குத்தகைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 6,36,002 ஏக்கர் பரப்பு குத்தகையின் கீழ் உள்ளது.

தமிழ் நாடு குடியிருப்பு அனுபோகதாரர் (உடைமை உரிமை வழங்கல்) சட்டம், தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு கிராமக் கைவினைஞர்கள் (குடியிருப்பு உடைமை உரிமை வழங்கல் சட்டம்)—

விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள் ஆகியோருக்கு உடைமை உரிமை வழங்குவதற்கு இச்சட்டம் வகை செய்கிறது. வில்லங்கம் ஏதும் இல்லாத பண்ணை நிலங்கள் ஒதுக்கப்படுகின்றன. அரசு இழப்பீடு அளிக்கிறது. இம்மனையை பத்து ஆண்டுகளுக்கு வேறொருவர் பெயருக்கு மாற்றுவது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யும் உரிமை மாற்றம் செல்திறனற்றது என அறிவிக்கப்பட்டாலும், உரிமை குடியிருப்புதாரரிடமே உள்ளது. இதனைத் தவிர்க்க சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது அதன்படி, அவ்வாறு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்தால், ஓர் அறிவிக்கை மூலம் அக்குடியிருப்பு அல்லது மேல் கட்டிடம் அபராதமாக அரசுக்குப் பறிமுதல் ஆகி வில்லங்கம் ஏதுமின்றி அரசிடம் நிலைபெற்றிருக்கும். 31—3—1983 வரை 1,79,947 பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 99,196 பேர் ஆதி திராவிடர் பழங்குடியினர்; 48,777 பேர் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், 31,974 பேர் ஏனையோர் ஆவர். தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கிராமக் கைவினைஞர்கள் (உடைமை உரிமை வழங்கல்) சட்டத்தின் கீழ் இது போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின் கீழ் 31-3-1983 வரை 355 பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது, இவர்களில் 23 பேர் ஆதி திராவிடர் வகுப்பையும், 15 பேர் பழங்குடியினர் வகுப்பையும், 203 பேர் பிற்பட்ட வகுப்பையும் 114 பேர் ஏனைய வகுப்பையும் சேர்ந்தவர்களாவர். தற்போது சட்டம் 17 (1) அல்லது 20 (1)இன் கீழ் வெளியிடப்பட்டுள்ள அறிவிக்கையை திருத்தவோ நீக்கம் செய்யவோ அரசுக்கு அதிகாரம் அளிக்கச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியச் சட்டம் (19/1969).

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடி, திருத்துறைப் பூண்டி, மயிலாடுதுறை, சீர்காழி, நாகப்பட்டினம், வேதாரண்யம், நீடாமங்கலம், குடவாசல், தாரங்கம்பாடி ஆகிய 11 கிழக்கு வட்டங்களில் நெல் பயிரிடுவதற்கு மட்டும் இச்சட்டம் பொருந்தும். நியாய ஊதியம் வழங்குவதற்கும், நியாய ஊதியத்தை முன்னர் திருத்தியமைக்கப்பட்ட நாளிலிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்குள் மறு ஆய்வு செய்து திருத்தியமைக் கவும் இச்சட்டம் வகை செய்கிறது. வேளாண்மைத் தொழி லாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஊதிய வீதங்களை அரசு அவ்வப்போது திருத்தி அமைத்துள்ளது. பின்வரும் வீதங் கள் தற்போது செயலிலுள்ளன.

வயது வந்தோர்.

உழுதல், விதைத்தல், நாற்று நடுதல், பண்படுத்தல், சிரமமத் தல், நிலங்களையும், கால்வாய்களையும் பராமரித்தல், விதைப் பதற்கும், நாற்றுநடுதற்கும், நிலத்தைத் தயார் செய்தல், மனிதர்கள் மூலமாக இடுபொருள் அல்லது உற்பத்திப் பொருள் களைக் கொண்டு செல்லுதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள வர்களுக்கு 7 லிட்டர் நெல்லும் நாளொன்றுக்கு ரூ. 2.80வும் அல்லது நாளொன்றுக்கு ரூ. 9.00 ம்.

நாற்றுநடுதல், களையெடுத்தல் அல்லது இதில் குறிப்பிடப் படாத ஏனைய வேளாண்மைப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்கு 6 லிட்டர் நெல்லும் நாளொன்றுக்கு ரூ. 1.80வும் அல்லது நாளொன்றுக்கு ரூ. 7.00ம்.

எல்லா வேளாண்மைப் பணிகள்

4. லிட்டர் நெல்லும், நாளொன்றுக்கு. 1.50வும் அல்லது நாளொன்றுக்கு ரூ. 5.00 ம்.

விளக்கம் :

(1) உழுதலில் வேளாண்மைப் பணியாளர்களே உழவு மாடு களையும், ஏரையும் கொண்டு உழுவது அடங்காது.

(2) உழுதலைத் தவிர ஏனைய எல்லாப் பணிகளுக்கும் பணி நேரம் நாளொன்றுக்கு ஏழு மணியுமாகும். உழுதலுக்கு நாளொறுக்கு ஐந்து மணியாகும்.

(3) இரவில் பணிபுரிபவர்களுக்கு கூடுதலாக 40 சதவீத ஊதியம் கொடுக்கப்பட வேண்டும்.

தமிழ் நாடு 1958 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியச் சட்டம்.

இச்சட்டம் தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர் நியாய ஊதிய சட்டம் செயலி லுள்ளது.

வேளாண்மைப் பணிகளிலும் துணைப் பணிகளிலும் வேலைக் கான ஊதிய வீதங்கள் 1976 மார்ச்சில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டன. முறையான வருவாய்ப் பணியாளர் களுடன் அரசு நியமித்த தனிப் பணியாளர்கள் வேளாண்மைத் துறையில் இச்சட்டத்தைச் செயற்படுத்தும் பணியைக் கவனித்து வருகின்றனர். இச்சட்டத்தின் கீழ் தகராறுகளை அல்லது கோரிக்கைகளை இது தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட தனிப் பணியாளர்களும், முறையான பணியாளர்களும் விசாரித்து முடிவு செய்கின்றனர். வேளாண் தொழிலில் பணியாற்றுவோருக்கான குறைந்தளவு ஊதிய வீதங்களை கடைசியாக அரசு திருத்தி யமைத்தது. அந்த ஊதிய வீதம் வருமாறு ;:

	ரூ.	காசு.
(1) உழவு மாடுகளையும், ஏரையும் தாமே கொண்டு வந்து உழுகின்ற பணியாளர் ஒரு வருக்கு நாளொன்றுக்கு.	12	00
(2) ஏரின்றி, உழவு மாடுகளின்றி வந்து உழுகின்ற ஒரு பணியாளருக்கு நாளொன்றுக்கு.	7	00

(3) நெற்பயிர் அறுவடை செய்யும் பணியாளர் ஒருவருக்கு நாளொன்றுக்கு.	7	00 அல்லது மொத்த விளைச்சலில், 8 இல் ஒரு பங்கில் பணியாளரின் பங்கின் மதிப்பு இவற்றில் எது அதிகமோ அது.
(4) நெற்பயிரைத் தவிர ஏனைய பயிர்களை அறுவடை செய்யும் பணியாளர் ஒருவருக்கு நாளொன்றுக்கு.	7	00
(5) நாற்று நடும் அல்லது களைப் பறிக்கும் பணியாளர் ஒருவருக்கு நாளொன்றுக்கு.	5	00
(6) கரைகளையும், வயல்களையும் ஒழுங்குபடுத்துதல், மரம் ஏறுதல் முதலிய பணிகள் உட்பட ஏனைய வேளாண்மைப் பணிகளில் ஈடுபடுகின்ற பணியாளர் ஒருவருக்கு நாளொன்றுக்கு.	7	00

இந்த வீதங்கள் 15—9—1979 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன.

நிலவரி வருவாய்

நிலவரி வருவாயின் கீழ் பசலி 1392 (1—7—1982 முதல் 30—6—1983 வரை) ஆண்டுக்கான கேட்பு, வசூல் நிலுவை ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

	கேட்பு.	வசூல்.	நிலுவைத் தொகை.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
பாக்கி	4,621.12	593·41	4,027.71
நடப்பு பாக்கி	1,971.34	471.01	1,500.33
மொத்தம்	6,592.46	1,064.42	5,528.04

மனு நீதி திட்டம் :

மனு நீதித் திட்டம் 1969-ம் ஆண்டு முதற்கொண்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது. அரசு அலுவலர்கள் கிராமங்களுக்குச் சென்று மக்கள் குறைகளைக் கேட்டறிந்து இயன்றவரையில் விரைவாக அவர்கள் குறைகளைக் களைய வகை செய்வதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்படி வருவாய்த்துறை, நில அளவைத் துறை, ஊராட்சி வளர்ச்சித்துறை, வேளாண்மைத் துறை, பொதுப் பணித்துறை, ஆகிய துறைகளின் அலுவலர்கள், வருவாய்த் துறையைச் சேர்ந்த துணை வட்டாட்சியர் நிலைக்குக் குறை யாத பதவி வகிக்கும் அலுவலர் ஒருவர் தலைமையில் ஒவ்வொரு மாதமும் 5-ம் தேதி அல்லது 6-ம் தேதி அன்று ஒவ்வொரு பிர்க்காவிலும் ஒரு கிராமத்திற்குச் சென்று மக்களிடமிருந்து மனுக் களைப் பெற்று இயன்ற வரையில அவர்களுக்கு உதவி புரி கின்றனர். இத்துணை வட்டாட்சியர் அந்த அலுவலர் குழுவின் இணைப்பாளராகச் செயல்படுகிறார். அலுவலர்கள் வருகை குறித்து கிராம மக்களுக்கு முன் கூட்டியே தகவல் அறிவிக்கப் படுகிறது. மக்களின் குறை கேட்க வரும் அலுவலர்கள், அக் குறைகள் தொடர்பான நிவாரண நடவடிக்கைகளை இயன்ற வரையில் அந்த இடத்திலேயே மேற்கொள்ள ஆவன செய் கின்றனர். மனுக்களை அந்த இடத்திலேயே விசாரணை செய்து முடிவெடுக்க இயலாத இடங்களில், துணை வட்டாட்சியர், அது தொடர்பான தொடர் நடவடிக்கைகளை எடுத்து மக்கள் குறைகளை களைகிறார்.

இதே போன்று, ஒவ்வொரு வட்டமும் மண்டல அலுவலர் என்று அழைக்கப்படும் அரசிதழ்பெற்ற அலுவலரின் பொறுப்பில் வைக்கப்படுகிறது. மண்டல அலுவலர்கள் ஒவ்வொரு மாதமும் அந்தந்த வட்டாட்சி அலுவலகங்களில் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி மாதாந்திர அறிக்கைகளை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்புகின்றனர். மாவட்ட ஆட்சியரும், ஒவ்வொரு மாதமும் கோட்டத் தலைமையிடத்திற்குச் சென்று, மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, கோட்ட நிலையில் மனு நீதித் திட்டம் செயல்படும் முறையை ஆய்வு செய்கிறார். இதே போன்று,

மாவட்ட வருவாய் அலுவலரும் ஒவ்வொரு மாதமும் கோட்டத் தலைமையிடத்திற்குச்சென்று, மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று கோட்ட நிலையில் மனுக்கள் முடிவுசெய்யப்படுவதில் உள்ள முன்னேற்றத்தை ஆய்வு செய்கிறார். கோட்ட அலுவலர்கள் வாரத்தில் குறிப்பிட்ட ஒரு நாளில் வட்டத் தலைமையிடத்திற்கு குறிப்பிட்ட முறைப்படி சென்று மக்களிடமிருந்து மனுக்களைப் பெறுகின்றனர். மனுநீதித் திட்டம் தொடர்பான விரிவான திட்டம் ஒன்றை ஆண்டு தொடக்கத்திலேயே தயாரித்து சம்பந்தப்பட்ட எல்லா அலுவலர்களுக்கும் கிராமங்களுக்கும் அனுப்புமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

மக்களின் உண்மையான குறைகளைக் கண்டறிந்து அவற்றைக் களைய மனு நீதித் திட்டம் உதவுகிறது. மக்களுக்காக குறிப்பாகக் கிராம மக்களுக்காக அரசு நிறைவேற்றிவரும் பல்வேறு திட்டங்களை மக்களுக்கு எடுத்துரைக்கவும் நல்லதொரு வாய்ப்பினை இத்திட்டம் நல்குகிறது.

1982-83-ம் ஆண்டு மனு நீதித் திட்டத்தின் செயல்பாடு குறித்த விவரப் பட்டியல்.

வருட ஆரம்பத்தில் நிலுவையிலிருந்த மனுக்கள்.	இந்த ஆண்டில் வரப்பெற்ற மனுக்கள்.	மொத்தம்.	இந்த ஆண்டில் முடிவு பெற்ற மனுக்களின் எண்ணிக்கை.	ஆண்டு இறுதியில் நிலுவை.	விழுக்காடு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
19,360	96,090	1,15,450	1,00,070	15,380	86

பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்புவோர் மறுவாழ்வு.

பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோர் :

பர்மாவில் இராணுவ ஆட்சிப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து அவர்களது அரசுடைமையாக்கும் கொள்கை காரணமாக, அதிகமான இந்திய வம்சா வழியினர் நிரந்தர குடியிருப்பு கோரி, பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு வருகிறார்கள். 1982 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய மொத்தமாக 1,44,283 பேர் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியுள்ளார்கள்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் :

1964, 1974 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட இரு இலங்கை-இந்திய ஒப்பந்தங்களின்படி, 1—11—1964 முதல் 6 இலட்சம் இந்திய வம்சா வழியினர் அவர்கள் குடும்பத்தில் இயல்பாக ஏற்படும் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்புடன் இந்தியாவுக்கு வரவேண்டியுள்ளனர். 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய மொத்தமாக 4,09,754 பேர் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புயுள்ளனர்.

வியட்நாமிலிருந்து தாயகம் திரும்பியோர் :

1975 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து வியட்நாமில் உள்ள இந்திய வம்சா வழியினரில் சிலரும் (இந்திய பயணச் சான்றிதழ் வைத்திருப்போர்) வியட்நாமிலுள்ள இந்திய தூதரகத்தினால் வழங்கப்பட்ட அவசர கால சான்றிதழ்களை வைத்திருப்போரும் தாயகம் வந்துள்ளார்கள். இது வரையில் 2,055 உறுப்பினர்களைக் கொண்ட 501 குடும்பத்தினர் வியட்நாமிலிருந்து தாயகம் வந்துள்ளார்கள்.

தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிப்பதை ஒரு தேசிய பிரச்சினையாகக் கருதி, மத்திய அரசாங்கம், இவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுவதற்கான திட்டங்களுக்கு ஏற்படும் முழு செலவினங்களுக்கும் பொறுப்பேற்று இத்தொகையினை கடனாகவும் மானியமாகவும் அளிக்கிறது.

தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிப்பதற்கென அரசினரால் பல்வேறு திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தாயகம் திரும்புவோரை இருவகையாக பிரிக்கலாம். சிலர் இந்தியாவில் பற்றுக்கோடு உள்ளவர்கள், இவர்களுக்கு இந்தியாவில் நில உடைமைகள் இருக்கலாம் அல்லது உறவினர்கள் இருக்கலாம். இரண்டாவது வகையினர் இந்தியாவில் பற்றுக்கோடு அற்றவர்கள். இவர்களுக்கு உற்றார் உறவினர்களும் கிடையாது. இறங்கு துறையை வந்தடைந்ததும் முதலாவது வகையினர் தங்கள் சொந்த ஊர்களுக்கோ அல்லது அவர்கள் குடியமர்த்தப்படும் இடங்களுக்கோ நேரடியாக அனுப்பப்படுகிறார்கள். இரண்டாவது வகையினர் அரசு செலவில் இடைக்கால முகாம்களில் தங்குவதற்கு, அனுமதிக்கப்படுகிறார்கள். தமிழ் நாட்டில் மொத்தமாக மூன்று இடைக்கால முகாம்கள் உள்ளன. இவை செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கும்மிடிபூண்டியிலும் திருச்சி மாவட்டத்தில் கோட்டப்பட்டு என்ற இடத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் என்ற இடத்திலும் அமைக்கப்பட்டுள்ளன.

பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு அளிக்கப்பட்ட மறுவாழ்வு பற்றிய புள்ளி விவரம்.	குடும்பங்கள்.
(1)	(2)
1. கப்பல் வருகைகளின் மொத்த எண்ணிக்கை.	125
2. பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் எண்ணிக்கை.	1,44,283 பேர்
3. இவர்களில் பட்டுக்கோட.ற்ற குடும்பங்களின் எண்ணிக்கை.	92,161
4. வணிகக் கடன் வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை	42,703
5. வணிகக் கடனாக வழங்கப்பட்ட மொத்தத் தொகை	576.90 இலட்சம்

பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு அளிக்கப்பட்ட மறுவாழ்வு பற்றிய புள்ளி விவரம்.	குடும்பங்கள்.
(1)	(2)
6. வேலை வாய்ப்பு, அளிக்கப்பட்டவர்கள் மற்றும் தற்செயல் தொழிலாளர்களாக அமர்த்தப் பட்டவர்கள்	5,339 பேர்
7. (அ) வேளாண்மைத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டவர்கள் எண்ணிக்கை	1,320
(ஆ) தாயகம் திரும்பியோரை வேளாண்மைத் திட்டங்கள் குடியமர்த்துவதற்காக	52 இலட்சம்
8. (அ) மறுவாழ்வுத் துறையின் கண்காணிப்பில் உள்ள நிலக் குடியிருப்பு திட்டத்தில் குடியமர்த்தப் பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை	375
(ஆ) காலம் '8' அ-வில் குறிப்பிட்டுள்ள நிலக் காலனித் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு செலவிடப்பட்டுள்ள தொகை.	23.86 இலட்சம்
9. கல்விச் சலுகை அளிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை.	1,932 பேர்
10. தாயகம் திரும்பியோருக்காக ஒதுக்கப்பட்ட மொத்த பங்குகள்/கடைகள்	432
11. தாயகம் திரும்பியோருக்கு பங்குகள் / கடைகள் கட்டுவதற்காக ஊராட்சி மன்றங்களுக்கு அளிக்ப்பட்ட கடன் தொகை.	ரூ. 6,49,374.00
12. (அ) வீட்டு வசதிக் கடன் அளிக்கப் பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை	19,517
ஆ) வீட்டு வசதிக் கடனாக அளிக்கப்பட்ட கடன் தொகை.	465.13 இலட்சம்

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு அளிக்கப்பட்ட மறுவாழ்வு பற்றிய புள்ளி விவரம்.

	குடும்பங்கள்.	உறுப்பினர்கள்.
(1)	(2)	(3)
1. குடும்பங்கள்/ உறுப்பினர்கள் வருகை	1,02,572	4,09,754
2. வணிகக் கடன் அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை.	66,379	
3. வணிகக் கடனாக வழங்கப்பட்ட மொத்தத் தொகை		ரூ. 1,796.14 இலட்சம்
4. வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டோரின் எண்ணிக்கை.	6,191	
5. நிலக்குடியிருப்புத் திட்டம்—		
(அ) நிலக் குடியிருப்புத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை	2,161	..
(ஆ) நிலக் குடியிருப்புத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டோருக்கு செலவழிக்கப்பட்ட தொகை	ரூ. 533.58 இலட்சம்	(இதில் தனியாரிடமிருந்து வாங்கிய நிலங்கள் தாயகம் திரும்பியோருக்குச் சொந்தமான நிலங்கள் உப தொழில்கள் ஆகியவற்றிற்கான செலவுகள் அடங்கும்.)
6. நீலகிரி தேயிலைத் தோட்டத் தொழில் திட்டம்—		
(அ) தேயிலைப் பயிர் செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு		1,462.05 ஹெக்டேர்
ஆ) தொழிலாளர்களாக வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை	2,264	

(1)	குடும்பங்கள். (2)	உறுப்பினர்கள். (3)
7. கன்னியாகுமரி மாவட்ட ரப்பர் பயிரிடும் திட்டம்—		
(அ) ரப்பர் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு	..	804.40 ஹெக்டேர்
(ஆ) தொழிலாளர்களாக வேலைக்கு அமர்த்தப் பட்டோர்களின் எண்ணிக்கை	250	.. ..
8. ஆணை மலை, சின்கோனா பயிர் செய்கை திட்டத்தில் குடியமர்த் தப்பட்டோரின் எண்ணிக்கை	125	.. ..
9. கல்விச் சலுகை வழங் கப்பட்டோர்கள் எண்ணிக்கை	689	.. ..
10. வீட்டு வசதிக் கடன் வழங்கப்பட்டோரின் எண்ணிக்கை	29,368	
11. தாயகம் திரும்பியோருக்கு வீட்டு வசதிகள் வழங்கும் திட்டம்		1,180.68 இலட்சம்
12. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வீட்டு மனைகள் வாங்குவதற்காக அளிக்கப் பட்டத் தொகை (31—3—1983)	..	ரூ. 6,12,249.00
13. கூட்டுறவு நூற் பாலையில் வேலைக்கு அமர்த் தப்பட்டவர்களின் எண்ணிக்கை	2,360	.. ..

(1)	குடும்பங்கள். (2)	உறுப்பினர்கள். (3)
14. அந்தமானில் கச்சல் ரப்பர் பயிர் செய்கைத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை	68	
15. அகதிகள் குழந்தைகளுக்கான சிறப்பு தங்குமிட வசதி—மாத்தூர் —		
ஒப்பளிப்பான எண்ணிக்கை	1,000	
உள்ளபடி எண்ணிக்கை	666	

நகர்ப்புற நிலவரி

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1963 ஜூலை 1 ஆம் நாளிலிருந்து முதன் முதலில் சென்னை மாநகரில் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966 ஆக, ஜூலை 1, 1963 லிருந்த காலம் உட்படக் கொண்டு மாற்றம் செய்யப்பட்டது. பின்பு இச் சட்டம் 1971-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தால் (சட்டம் 30/71) திருத்தப் பெற்றது. இச் சட்டம் மதுரை, திருச்சி சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகரங்களுக்கும் 1-7-1971லிருந்து நீடிக்கப்பட்டது. அடிப்படை வரி விகிதம் ஒரு கிரவுண்டுக்கு உள்ளாக நிலம் வைத்திருப்பவர்களுடைய நிலங்களுக்கு வரிவிலக்கு ஆகியவைகள் அறிமுகம் செய்யப்பட்டு 1–7–1972 லிருந்து அமுலுக்கு வந்தன. பின்னர், மேலும் இச்சட்டம் 1972-ல் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1972 (சட்டம் 19/73) ஆல் திருத்தம் பெற்றது. இச்சட்டத்தினால் குறைந்த அங்காடி மதிப்புள்ள நிலத்திற்கு, ஒரு நிலதாரருக்கு சொந்தமான மொத்த நிலத்திலிருந்து 2 மனை நிலத்திற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. இது 1-7-1972லிருந்து அமுல்படுத்தப்பட்டது சொந்த உபயோகத்திற்கு உபயோகிக்கும் நிலதாரர்களுக்கு

வழங்கப்பட்ட வரிச்சலுகை 25 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. வரிவிலக்கு உதவி, அரசால் அங்கீகரிக்கப்பட்ட சமய, அற சம்பந்தமான நிறுவனங்களின் நிலங்களுக்கும் இந்த சட்டத்தினால் வழங்கப்பட்டது. தமிழ் நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1975 (சட்டம் 49/75) சட்டம் ஆக சென்னை புறநகர் பகுதிகளில் சென்னை நகரின் எல்லை யிலிருந்து 16 கிலோ மீட்டர் தூரம் உள்ள பகுதிக்கு இச்சட்டம் நீடிக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டது. 1971, ஜூலை 1-ஆம் நாள் அன்றிலிருந்து அங்காடி மதிப்பு, நகர்ப்புற நிலவரியை கணக்கிடுவதற்கு அடிப்படையாகக் பின்பற்றப்பட்டது. அடிப் படை வரி விகிதம் திருத்தியமைக்கப்பட்டது. குடியிருப்புக்குப் பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்கள் குடியிருப்புக்கல்லாமல் வேறு காரியங்களுக்கு பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்கள் ஆகியவற்றுக்கிடையே வேறுபாட்டை ஏற்படுத்த அவற்றுக்கு வெவ்வேறு விகிதங்களில் வரி விதிக்கப்பட்டன. 1975-ல் நகர்ப்புற நிலவரி சட்டம் திருத்தப்பட்டதன் விளைவாக நகர்ப்புற நிலவரி உயர்ந்ததை எதிர்த்து தனிப்பட்டவர் களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் ஏராளமான முறை யீடுகள் வந்தன. இதனால், அரசு, தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்தும் வரும் முறையீடுகளை ஆராய்வதற்கு ஒரு குழு அமைத்தது. இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பலவித சலுகைகளை அரசு அளித்தது.

கீழ்க்காணும் சலுகைகள் அரசால் அளிக்கப்பட்டன :—

1. அரசுக்கு தனிப்பட்ட விண்ணப்பத்தின்பேரில் கல்வி, அற, சமய சம்பந்தமான நிறுவனங்கள் காலி நிலம் மற்றும் கட்டிடங்கள் உள்ள நிலம், அதன் மூலம் வரும் வருவாய் அந்த நிறுவன சம்பந்தமான காரியங்களுக்கே பயன்படுத்தப்பட்டால் நிலவரியிலிருந்து முழு விலக்கு பெறலாம்.

2. சமுதாய மனமகிழ் மன்றங்கள் மற்றும் நிறுவனங் களுக்குச் சொந்தமான காலி நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் உள்ள நிலங்களுக்கும் 50 விழுக்காடு நிலவரி குறைக்கப்பட்டது

3. திரைப்பட பிடிப்பு நிலையங்களுக்குச் சொந்தமான காலி நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் உள்ள நிலங்களுக்கும் 50 விழுக்காடு நிலவரி குறைக்கப்பட்டது.

4. தமிழ்நாடு குடிசை குடியிருப்பு ஒழிப்புச் சட்டம் 1977, பிரிவு 3 (பி)ன் கீழ் குடிசை குடியிருப்பாக அறிவிக்கப்பட்ட எல்லா நிலங்களுக்கும் தொடர்ந்து குடியிருப்பு பகுதிகளாக யிருந்தால் அவைகள் வரி விதிக்கப்படாத இனங்களாகக் கொள்ளப்பட்டது.

5. எல்லா திரைப்பட அரங்குகளுக்கும் 10 விழுக்காடு நிலவரியிலிருந்து தள்ளுபடி தரப்பட்டது.

6. சங்கீதம், நாடகம் மற்றும் இதர கலை நிகழ்ச்சிகள் நடத்தும் சபாக்களுக்கு 50 விழுக்காடு நிலவரி குறைக்கப்பட்டது.

7. நிலதாரர் தனக்குச் சொந்தமான கட்டிடத்தை தன் சொந்த குடியிருப்புக்கு உபயோகப்படுத்தினால் அவருக்கு விதிக்கப்படும் நிலவரியிலிருந்து 50 விழுக்காடு நிலவரி குறைத்து சலுகை அளிக்கப்பட்டது.

8. சென்னை நகரில் 1975-ம் சட்டத்தின் கீழ் 1—7-71-ல் தீர்மானிக்கப்பட்ட அங்காடி மதிப்பு 1963-ல் இருந்த அங்காடி மதிப்பை விட இரண்டு மடங்குக்கு மேல் இருக்குமேயானால் அதை இரண்டு மடங்குக்கு வரையறுக்கப்பட்டது.

9. குடியிருப்புக்குப் பயன்படுத்தப்படும் நகர்ப்புற நிலங்கள், குடியிருப்புக்கல்லாமல் வேறு காரியங்களுக்குப் பயன் படுத்தப்படும் நகர்ப்புற நிலங்கள் ஆகியவற்றுக்கிடையே 1975-ம் ஆண்டு சட்டத்தினால் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட வேறுபாடு நீக்கப்பட்டது.

10. அரசு பசலி 1385லிருந்து சிறுதொழில் நிறுவனங்கள் செலுத்தும் நகர்ப்புற நிலவரியில் 25 விழுக்காடு ஏனைய தொழில்களைப் பொறுத்த வரையில் 10 விழுக்காடு குறைந்துள்ளது.

மேலும் அரசு, இந்து, சமய, அறக்கட்டளைகள், இஸ்லாமிய அறக்கட்டளை வாரியங்கள், கிறிஸ்துவ அறநிலையங்கள் ஆகிய வற்றுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் மத்திய, மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் மற்றும் இடைநிலைக் கல்விக்கான மத்திய வாரியங்கள் ஆகியவற்றால் அங்கீகாரம்

பெற்ற கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு விதிவிலக்கு வழங்கும் அதிகாரம் முன்னாள் வருவாய் வாரி யத்துக்கும் தற்போது ஆணையர் (நில சீர்திருத்தம்) அவர் களுக்கும் வழங்கியுள்ளது. 1—12—82லிருந்து ஆணையர் (நில சீர்திருத்தம்) அவர்கள் வருவாய் வாரியம் நகர்ப்புற நிலவரி மற்றும் உச்சவரம்புக்குரிய பொறுப்புகளை வகிக்கிறார்.

மேலும் அரசு, எந்தவகையான நிலங்களுக்கும் எந்த வகையான தனிப்பட்டவருக்கும் முந்தைய காலம் முதலோ அல்லது அப்போதைய காலத்திலிருந்தோ அவர்கள் இடர்ப்பாடு கள் காரணமாக நிலவரி கட்ட முடியாத நிலையில் இருப்ப தாகத் தீர்மானித்தால், வரியைக் குறைப்பதற்கோ அல்லது விலக்கு அளிப்பதற்கும் பிரிவு 27 சட்டப்படி முடியும்.

நகர்ப்புற நிலவரி விதிப்புப் பணியின் முன்னேற்றம் :

1982-83-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி விதிப்புக் குறித்த விவரங்கள் வருமாறு :—

விவரங்கள்.	முதற் சட்டம் 1966.	திருத்தச் சட்டம் 1971.	திருத்தச் சட்டம் 1972.	திருத்தச் சட்டம் 1975.
(1)	(2)	(3)	(4)	(5)
1. 31-3-82-ல் நிலுவையிலுள்ள வரி விதிப்பு இனங்களின் எண்ணிக்கை ..				4,064
2. நிலமாற்றம் காரண மாக மறுவிதிப்பு விதிக்க 1982-83-ல் பெறப் பட்ட விண்ணப் கள் ..				1,618
				5,682
3. வரிவிதிப்பு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட வற்றின் எண்ணிக்கை				3,598
4. 31-3-83-ல் நிலுவை				2,084

மேல் முறையீடுகள் :

பிரிவு 20, தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966-ன் படி ஆணையர்கள் பிறப்பித்த வரிவிதிப்பு ஆணைகளை எதிர்த்து நகர்ப்புற நிலவரி தீர்ப்பாயத்துக்கு முன் நிலதாரர்கள் மேல் முறையீடு செய்யலாம். அவ்வாறு மேல் முறையீடு செய்யப்பட்ட இனங்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு :—

ஆண்டு முதலில் நிலுவையிலிருந்து மேல் முறையீடுகளின் எண்ணிக்கை	1,693
இவ்வாண்டு பெறப்பட்ட மேல் முறையீடுகள்	604
	2,297
இவ்வாண்டில் பைசலானவை ..	1,517
இவ்வாண்டு முடிவில் நிலுவையிலுள்ள மேல் முறையீடுகள்	780

சீராய்வு :

பிரிவு 20 சட்டத்தின் கீழ் தீர்ப்பாயத்துக்கு தாக்கல் செய்யப்படாத சீராய்வு மனுக்கள், பிரிவு 30 (1) நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966-ன் படி ஆணையர் (நிலச் சீர்திருத்தம்) அவர்களால் பரிசீலிக்கப்படுகின்றன. இவ்வாண்டுவரை பெறப்பட்ட சீராய்வு மனுக்களின் எண்ணிக்கை, இவ்வாண்டு மட்டும் பெறப்பட்ட 518 சீராய்வு மனுக்களின் எண்ணிக்கையோடு மொத்தம் 831 ஆகிறது. 619 இனங்கள் இவற்றுள் இவ்வாண்டு பைசலாகின்றன. 1-3-83-ல் 212 மனுக்கள் நிலுவையில் உள்ளன.

நிலவரி கேட்பு, வசூல், நிலுவை விவரங்கள் :

நிலுவையையும் சேர்த்து மொத்த கேட்பு ரூ. 4,296.55 இலட்சம் ஆகிறது. இதில் ரூ. 2,708.41 இலட்சம் 31-3-83 வரை வசூல் செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற நில உச்ச வரம்பு.

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்ச வரம்பு கட்டுதல் மேலும் முறைப்படுத்துதல்) சட்டம் 1976 (குடியரசுத் தலைவர் சட்டம்) தமிழ் நகர்ப் பகுதிகளைப் பயன்படுத்துவதை முறைப்படுத்தி முறையாக மேம்படுத்தவும் ஒரு சிலரிடமே காலி நிலங்கள் குவிந்து அதனால் ஊக வாணிகம் நடப்பதைத் தடுத்து தனிப்பட்ட ஒருவர் வைத்துள்ள நிலங்களுக்கு உச்சவரம்பு விதிப்பதன் மூலமும் நியாயமான அளவிற்கு அதிகமாக நகர்ப் பகுதி நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பதைத் தடை செய்வதன் மூலம் நகர்ப்புற நிலங்களையும் நகரமயமாகும் பகுதிகளில் உள்ள நிலங்களையும் அனைவருக்கும் பிரித்துக் கொடுக்க இச்சட்டம் இயற்றப்பட்டது. கீழ்க்கண்ட நகரங்களிலும் மற்றும் அவைகளைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இச்சட்டம் முதலில் அமுல் படுத்தப்பட்டது.

நகரமைப்புகளின் பெயர்.	சுற்றியுள்ள பரப்பு.
1. சென்னை	8 கி.மீ.
2. சேலம்	5 கி.மீ.
3. கோவை	5 கி.மீ.
4. மதுரை	5 கி.மீ.
5. திருச்சி ..	5 கி.மீ.
6. திருநெல்வேலி	1 கி.மீ.

ஒரு நபர் வைத்திருக்கக்கூடிய காலி நிலத்தின் உச்சவரம்பு சென்னை நகர்ப்புற கூட்டுப்பகுதியில் 500 ச.மீ. காலி நிலமும் மற்றும் சேலம், கோயம்புத்தூர் மதுரை திருச்சி நகர்ப்புற கூட்டுப் பகுதிகளில் 1,500 ச.மீ. காலி நிலமும் திருநெல்வேலி நகர்ப்புறக் கூட்டுப்பகுதியில் 2,000 ச.மீ. காலி நிலமும் ஆகும்.

பிரிவு 6 (1)—ன் கீழ் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டிய காலம் 3—8—1976-லிருந்து மூன்று மாதங்கள் வரை முதலில் அனுமதிக்கப்பட்டது. ஆனால் பிறகு இக்கால வரையறை 31—3—1978 வரை நீட்டிக்கப்பட்டது. இதற்கிடையில் பொது மக்கள் அடைந்த இடர்பாடுகள் குறித்து அரசுக்கும் வருவாய் வாரியத்துக்கும் வந்த எண்ணற்ற மேல் முறையீடுகள் அரசின்

கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு மாநில அமைப்புகளில் 1977-ல் இச்சட்டத்தில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. தமிழக அரசாங்கம் 1978 மார்ச் இச்சட்டத்தில் திருத்தம் செய்து மசோதா இயற்றியது. இது குடியரசுத் தலைவரால் 14—5—1978 அன்று ஒப்புக்கொள்ளப்பட்டது (சட்டம் 24/78)

புதிய சட்டம் 3—8—1976—லிருந்து கீழ்க்கண்ட மாற்றங்களுடன் செயலுக்கு வந்தது.

சென்னை நகர்ப்புற கூட்டுப் பகுதிகளின் பரப்பு 1,400 ச.கி. மீட்டரிலிருந்து 575 ச.கி. மீட்டராக குறைக்கப்பட்டது. ஏனைய நகர்ப்புற கூட்டுப்பகுதிகளைப் பொறுத்த வரையில் நகர்ப்புற பகுதியை நீக்கி முதற்கண் இருந்த பரப்பில் சுமார் மூன்றில் ஒரு பங்கு குறைக்கப்பட்டது.

கட்டிடம் அமைந்துள்ள பரப்பு 500 ச.மீ. என்ற ஒரே படித்தான வீதத்தில் அனுமதிக்கப்படுகிறது. 3—8—1976-க்கு முன்பு அந்நாளன்று குடியிருப்புடன் கட்டப்பட்டுள்ள அல்லது கட்டப்பட்டு வருகிற கட்டிடத்தைச் சுற்றிலும் குடியிருப்புடன் கட்ட உத்தேசித்துள்ள கட்டிடத்திற்கான வரைபடத்திற்கும் பொருத்தமான அதிகார மன்றம் ஒப்புதல் அளித்திருந்தால் அக்கட்டிடத்தைச் சுற்றிலும் 500 ச.மீ கூடுதலாக காலியிடம் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

வேளாண்மை நிலங்கள் முழுவதும் இச்சட்டத்தின் செயல் வாம்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. பெருந்திட்டத்தில் வேளாண்மைப் பணிகளுக்கல்லாதவை என்று காட்டப்பட்டிருந்தாலும் கூட நடைமுறையில் வேளாண்மை பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் நிலங்களுக்கு இச்சட்டம் பொருந்தாது. ஆனால் வேளாண்மையல்லாத பணிகளுக்கு மாற்றப்படும் நிலங்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.

ஒரு குடும்பம், ஒரு தொழில் நிறுவனம் வைத்திருக்கும் நிலததிற்கான உச்சவரம்பு தளர்த்தப்பட்டன.

சிலர் வைத்துள்ள நிலங்களுக்கான மனைப்பிரிவு வரைப்படங்களுக்கு 3—8—1976—க்கு முன்னர் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தால் அவர்கள் மிகையாக உள்ள காலி நிலத்தை

STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
Acc. No.
Date

சொந்தமான வீடு இல்லாத அல்லது உபரி காலி நிலம் சொந்தமாக வைத்திராத ஏனையோருக்கு விற்பதற்காக வைத்துக் கொள்ள சில நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கையகப்படுத்தப்படும் நிலத்திற்கு அளிக்கப்படும் தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

தகராறுகள் ஏற்படும் இனங்களில் கையகப்படுத்தப்படும் நிலத்திற்கு அளிக்கப்படும் தொகையை முழுமையாகவோ அல்லது அத்தொகையின் ஒரு பகுதியையோ அளிப்பது குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் உரிமை இயல் நீதிமன்றங்களுக்கு சட்டத்தில் அளிக்கப்பட்டது.

இச்சட்டத்தின் விதிமுறைகள், சமய, அற, நிறுவனங்கள் வைத்திருக்கும் மிகையான காலி நிலங்களை விற்பனை, அடைமானம், அன்பளிப்பு, குத்தகை அல்லது பிற வகையில் வேறு எவருக்கும உரிமை மாற்றம் செய்ய அரசிடமிருந்து அனுமதி பெறவேண்டும். இவ்வனுமதி பெறப்படாவிட்டால் அந்த விற்பனை இல்லா நிலையதாகக் கொள்ளப்படும். இதனால் நடைமுறையில் சில தொந்தரவுகள் ஏற்பட்டதால் சட்டம் 14/79-ல் இந்த சார் பிரிவு நீக்கப்பட்டது. திருத்திய சட்டத்தின் விதித் துறைகள் பொது அறப் பொறுப்பு கழகங்கள் அல்லது சமயப் பொறுப்புக் கழகங்கள் வைத்திருக்கும் மிகையான காலி நிலங்களுக்குப் பொருந்தா. ஆனால் இக்காலி நிலங்களை விற்பனை, அடைமானம், அன்பளிப்பு குத்தகை அல்லது பிற வகையில் வேறு எவருக்கும் உரிமை மாற்றம் செய்து கொடுப்பதற்கு தடை விதிக்கிறது.

இடர்பாடுகள் ஏற்பட்ட விவசாயிகள் மற்றும் தனிப்பட்டவர்களைக் குறித்த பழைய சட்டத்திலிருந்து பிரிவுகள் 25, 26 மற்றும் 27 நீக்கம் செய்யப்பட்டு புதிய பிரிவு 27 அறிமுகம் செய்யப்பட்டது. இதில் பதிவு செய்வதற்கான பத்திரங்களை தாக்கல் செய்யும்போது உரிமை மாற்றம் செய்து கொடுப்பவரும் செய்து கொடுக்கப் பெறுபவரும் விவர அறிக்கை ஒன்றை சார் பதிவாளரிடம் தாக்கல் செய்தபின் பத்திர பதிவு செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் 6 (1)/7(1) பிரிவுகளின்படி 16,349 அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றுள் 13,254 அறிக்கைகள் முடிவு செய்யப்பட்டுவிட்டன. இதில் 873 இனங்களில் தனி நபர் மற்றும் தொழிற்சாலைகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டும், 12,381 இனங்கள் உச்சவரம்பிற்குட்பட்டதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளன. நில உச்ச வரம்பு சட்டத்தின் கீழ் அதிகப்படியான உபரி நிலம் 395,5 இலட்சம் ஹெக்டேர்கள் ஆகும். 1,594.63 ஹெக்டேர் பரப்பு கொண்டுள்ள 1132 இனங்களில் பிரிவு 9 (1)-ன் கீழ் வரைவு அறிக்கைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 523.25 ஹெக்டேர் பரப்பு கொண்டுள்ள 424 இனங்களில் பிரிவு 11 (1)-ம் பிரிவின்படி அறிக்கைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 334.33 ஹெக்டேர் பரப்பு கொண்டுள்ள 303 இனங்கள் தொடர்பாக இச்சட்டத்தின் 11 (3)-ம் பிரிவின்படி தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த 303 இனங்களில் 299.49 ஹெக்டேர் பரப்புள்ள 220 இனங்களில் சுவாதீனம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பிரிவு 12-ன் கீழ் 7.41 இலட்சம் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்காக இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

மேல் முறையீடுகள் :

இச்சட்டத்தின்கீழ் ஆணையர் (நில சீர்திருத்தம்) அவர்கள் மேல் முறையீடு குறித்த அதிகாரி ஆகிறார். இந்த ஆண்டு கடந்த ஆண்டு நிலுவையிலிருந்து 86 இனங்களையும் சேர்த்து மொத்தம் 497 மேல் முறையீடு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 340 மேல் முறையீடுகள் முடிவு செய்யப்பட்டு 157 இனங்கள் நிலுவையில் உள்ளன.

இந்த ஆண்டு வரை 453 இனங்களில், இடர்பாடுகள் குறித்து விலக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட தனி நபர்களுக்கும் 412 இனங்களில் தொழில் நிறுவனங்களுக்கும் 8 இனங்களில் பொதுமக்கள் நலன் கருதியும் அரசு விதிவிலக்களித்துள்ளது.

நிர்வாகச் செலவு :

இச்சட்டத்தை நிறைவேற்ற பணியாளர்களுக்கான கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு வழங்கப்பட்ட தொகை உட்பட

ரூ. 32.55 இலட்சம் ஆகும். கடந்த ஆண்டு பணியாளர் செலவு ரூ. 27.79 இலட்சம் ஆகும். அகவிலைப்படி வழங்கினதாலும் ஊதிய உயர்வினாலும் செலவுத் தொகை அதிகரித்துளளது.

அத்தியாயம் 22

ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை

அத்தியாயம் 22

ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை

பூமிதானமும் கிராம தானமும்

1954 ஆம் ஆண்டு ஆச்சாரிய வினோபாவே அவர்களால் பெறப்பட்ட தான நிலங்களை முறைப்படுத்துவதற்காக தமிழ் நாடு பூமிதான வாரியம் 1959 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைவர் தவத்திரு சுவாமி வித்தியானந்த சரஸ்வதி அவர்கள்.

15,950 நபர்களால் கொடையாக வழங்கப்பட்ட 24,221 ஏக்கர் நிலங்களை முறைப்படி வாரியத்தால் ஏற்கப்பட்டு சட்ட உரிமையாக்கப்பட்டுள்ளது. இந்த நிலங்கள் 15,461 நில மில்லா ஏழைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் 9,711 ஆதி திராவிட மக்களும் அடங்குவர். இந்த ஆண்டில் 21.42 ஏக்கர் நிலங்கள் கொடையாக ஏற்கப்பட்டுள்ளன. இந்த நிலங் கள் சட்ட ரீதியாக முறைப்படுத்தப்பட்டு பின்னர் தகுதியான ஏழைமக்களுக்கு வழங்கப்படும்.

கிராமதானம்:

தமிழ்நாட்டில் இதுவரை 1,854 கிராமங்கள் கிராம தான கிராமங்களாகமாறியுள்ளன. இதன் மூலம் 96,819 ஏக்கர் நிலங்கள் கிராமதானத்தில் பெறப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் 93 கிராமங்கள் கிராமதானமாக ஏற்கப்பட்டு இதில் 4,842 ஏக்கர் நிலம் பெறப்பட்டுள்ளது.

பூமிதான கிராமதான வளர்ச்சிப் பணிகள்:

வாழ்க்கையில் அடித்தளத்தில் உள்ள பூமிதான கிராமங்களை முன்னேற்றி அவர்களுக்கு வாழ்க்கைத்தரத்தையும் பொருளா தார முன்னேற்றத்தையும் அளித்த பூமிதான வாரியம் வளர்ச் சிப் பணிகள் மேற்கொண்டுள்ளது. இந்தப் பணிகளுக்கு பூமிதான வாரியத்தில் போதுமான நிதி வசதியில்லாததால் சர்வோதய அமைப்பில் உள்ள சர்வசேவா பண்ணைக் குழுமம் மேயர் அறக்கட்டளை மற்றும் தமிழ்நாடு சர்வோதய மண்டல் ஆகிய தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்தி வளர்ச்சிப் பணி களை வாரியம் மேற்கொண்டுள்ளது. சர்வசேவாப்

பண்ணைக் குழுமம்: இந்த நிறுவனம் 32 கிராமங்களில் உள்ள 4,887.53 ஏக்கர் பூமிதான நிலங்களை அபிவிருத்தி செய்ய எடுத்துக்கொண்டு இதுவரை ரூ. 1,51,41,141 செலவு செய்துள்ளது. இதனால் 3,261 குடும்பங்கள் பயனடைந்து வருகின்றனர். மேயர் அறக்கட்டளைகள்: இந்த நிலம் 9 கிராமங்களில் உள்ள 675.00 ஏக்கர் நிலங்களை அபிவிருத்தி செய்ய எடுத்துக்கொண்டு இதுவரை ரூ. 90,18,206.00 செலவு செய்துள்ளது. இதனால் 942 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. தமிழ்நாடு சர்வோதய மண்டல்: இந்த நிறுவனம் 2 கிராமங்களில் உள்ள 47.47 பூமிதான நிலங்களை அபிவிருத்தி செய்ய எடுத்துக்கொண்டு 4,29,255 ரூபாய் செலவு செய்துள்ளது. இதனால் 23 குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் 31 கிராம தான சர்வோதய கூட்டுறவு சங்கங்களும் தஞ்சை மாவட்டத்தில் 1 கிராமதான சர்வோதய கூட்டுறவு சங்கமும் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. மேற்படி 32 சங்கங்களில் 3,557 நபர்கள் உறுப்பினராகச் சேர்ந்து ரூ. 32,876.46 பங்குத்தொகையாக செலுத்தியுள்ளனர். ஆண்டு ஆரம்ப காலத்தில் ரூ. 1,20,495 வங்கிக் கடன்களில் நிலுவையாக இருந்தது. நடப்பு ஆண்டில் ரூ. 1,16,888 குறுகிய காலக்கடனாகவும் மத்திய காலக் கடனாகவும் மத்திய கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வங்கிக் கடனில் அசலில் ரூ. 80,579 வசூல் செய்து 31–3–1983-ல் தேதி முடிய இருசால் செய்தது போக ரூ. 1,56,804 நிலுவையாக உள்ளது. தமிழ்நாடு சர்வோதய மண்டல் மற்றும் சர்வ சேவா பண்ணையின் மூலம் கிராமதான மற்றும் பூமிதான நிலங்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 20 திட்டங்கள் தயார் செய்து 31—3—1982-ம் தேதி முடிய ஒப்படைக்கப்பட்டது. இதில் சென்ற வருடம் 13 திட்டங்களுக்கு ரூ. 54,63,342 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தது. நடப்பு ஆண்டில 31—3—1983-ம் தேதி முடிய இரண்டு திட்டங்களுக்கு 7,50,180 முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. சென்ற ஆண்டிற்கும் நடப்பு ஆண்டிற்கும் சேர்த்து 14 திட்டங்களுக்கு ரூ. 10,60,920. 31—3—1983—ம் தேதி முடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் ரூ. 8,33,886.50 மானியமாக மீதியுள்ள மானியத் தொகை அரசிடமிருந்து 31—3—1983 முடிய பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி

வரவு-செலவு :

திருத்த மதிப்பீட்டில் ரூ. 25.62 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால், 1982—83-ல் ரூ. 29.32 கோடி செலவிடப்பட்டது.

1982—83 ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ. 26.58 கோடியாகும். ஆனால், திருத்த மதிப்பீட்டில் ரூ. 25.52 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1982—83-ல் கிடைத்த மொத்த வருவாயும். செலவும் ரூ. 2.74 கோடி பற்றாக்குறையைக் காட்டுகிறது. திருத்த மதிப்பீட்டிற் கிணங்க, ரூ. 1.10 கோடி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது.

தொடக்கக் கல்வி நிதி :

வரவு-செலவு :

1982—83 ஆம் ஆண்டில் ஆன செலவு ரூ. 5.81 கோடியாகும். ஆனால், திருத்த மதிப்பீட்டில் ரூ. 5.78 கோடி மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டது.

1982—83-ல் கிடைத்த வருவாய் ரூ. 4.41 கோடியாகும். ஆனால் திருத்த மதிப்பீட்டில் ரூ. 3.90 கோடி மட்டுமே எதிர்பார்க்கப்பட்டது. 1982—83-ல் கிடைத்த மொத்த வருவாயும் செலவும் ரூ. 1.40 கோடி பற்றாக்குறை ஏற்பட்டதை காட்டுகிறது. ஆனால் 1982—83 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ. 1.87 கோடி பற்றாக்குறை ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

குழந்தைகள் நலத்திட்டம் :

40 குழந்தைகள் நல நிலையங்கள் இருந்தன. இவற்றில் 37 நிலையங்களில் 410 படுக்கைகள் அடங்கிய மகப்பேறு வார்டுகள் மாநகரம் முழுவதும் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்ட 3 துணை நிலையங்கள் ஆகியவை தாய்—சேய் ஆகியோருக்கானத் தேவைகளை நிறைவு செய்தன. 1982—83 ஆம் ஆண்டில் இந் நிலையங்களில் 24,454 பேருக்கு மகப்பேறு பார்க்கப்பட்டது. மகளிருக்கு இலவசமாகவே மருத்துவம் செய்யப்பட்டது.

பேறு காலத்திற்கு முந்திய சிகிச்சைகள் ஒவ்வொரு வாரத்திலும் 3 நாட்களில் கருவுற்ற மகளிருக்கு பரிசோதனை செய்து அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மேற்சொன்ன எல்லா நிலையங்களிலும் தடுப்பூசிகள் போடும் பணி மேற்கொள்ளப்பட்டன. குழந்தைகள் நலத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று மேற்சொன்னவர்களைப் பார்வையிடும் பணியை இத் திட்டத்தோடு ஒருங்கிணைந்த நடவடிக்கையாக மேற்கொள்கின்றனர்.

நகராட்சிக் குழுத்துறை :

சென்னை மாநகராட்சிக்குழுச் சட்டத்தின் (MC—MC) 44B பிரிவின் கீழ் (வரிவிதிப்பு, மேல்முறையீட்டு குழுக்கள் நீங்கலாக) மாநகராட்சி மேயர், மாநகராட்சிக் குழு, பல்வேறு குழுக்கள் ஆகியோரின் பணிகளை மேற்கொள்வதற்காக மாநில அரசு தனி அதிகாரி ஒருவரை நியமித்தது.

1-4-1982 முதல் 31-3-1983 வரையிலான கால அளவில் வரிவிதிப்பு, மேல்முறையீட்டுக் குழுவிடம் 1,183 மேல் முறையீடுகள் வரப்பெற்றன. இவற்றுள், 591 மேல்முறையீடுகள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவை முடித்துவைக்கப்பட்டுள்ளன.

இயந்திரப் பொறியியல் துறை :

சென்னை மாநகராட்சியின் பல்வேறு துறைகளிலுள்ள மோட்டார் வண்டிகள் அனைத்தும், ' B, D, டிப்போக்களில் உள்ள பெரிய லாரி நிலையங்களில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சியிடம் சுமார் 391 வண்டிகள் உள்ளன. 1982—83-ல் பொதுப் பணிக்களரியில் ரூ. 33,78,061.10 மதிப்புள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டன

இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அச்சகத்தில் மாநகராட்சிக்குத் தேவைப்படும் அனைத்து வகையான அலுவலகச் சாதனங்கள் அச்சடித்தல், எழுது-பொருள் தயாரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணியின் மதிப்பு ஆண்டொன்றிற்கு ரூ. 7 இலட்சமாகும். பொதுப் பண்டக சாலையில், 1982--83-ல் மொத்த ரூ. 51,73,788.88 மதிப்புள்ள பொருள்கள் வழங்கப்பட்டன.

ரூ. 51,30,219.90 மதிப்புள்ள பொருள்கள் வழங்கப்பட்டன.

சுகாதாரத்துறை :

1982—83-ல், 2,333 பேருக்குக் காலரா நோய் கண்டது. இவர்களில் 24 பேர் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. 1,86,174 பேருக்குக் காலரா நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டது. 1982—83 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு, இறப்பு பற்றிய விவரம் பின் வருமாறு :—

பிறப்புகளின் எண்ணிக்கை ..	97,351
இறப்புகளின் எண்ணிக்கை ..	26,064
குழந்தைப் பருவத்திலேயே இறந்தவர்களின் எண்ணிக்கை.	7,604

சிறிய அளவிலான உடல் நலக் குறைவுகளுக்காக அரசு மருத்துவ மனைகளுக்குச் சென்று நீண்ட வரிசைகளில் நிற்க இயலாத வறிய மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக மாநகராட்சி 69 மருந்தகங்களை நடத்தி வருகிறது.

மாவட்ட அலுவலகம் (வடக்கு) :

1982—83 ஆம் ஆண்டில் 727 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் தெருக்களைச் சுத்தப்படுத்தும் பணியில் 3,581 துப்புரவுப் பணியாளர்கள் நாள்தோறும் ஈடுபட்டு 750 டன் என்ற வீதத்தில் குப்பைகளை நாள்தோறும் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த சாலைகள் தெருக்கள் ஆகியவற்றிலிருந்து அகற்றினர். வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு கோட்டங்களில் மொத்தம் 443 பொதுக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டன. இவற்றுள் 41 கழிப்பிடங்கள் கட்டணக் கழிப்பிடங்களாக அறிவிக்கப்பட்டு, வறிய நிலையில் உள்ள தனியாருக்கு ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு குத்தகைத் தொகையாக ரூ. 5,80,220 வசூலிக்கப்பட்டது.

நெரிசல் மிக்க ஜார்ஜ் டவுன் பகுதியில் இரவு நேரத் துப்புரவுப் பணி 1-7-1979-ல் முதன் முதலில் தொடங்கப்பட்டது. இப்பணியில் 198 துப்புரவுப் பணியாளர்களும் 17 துப்புரவுப் பணி ஆய்வாளர்களும் 2 துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்களும் ஈடுபட்டுள்ளனர் ; 18 லாரிகள் இப்பணிக்காகப் பயன்படுத்தப் படுகின்றன.

1982 ஆம் ஆண்டில் ராஜாஜி சாலையும் ரிசர்வ் வங்கியிலிருந்து வானொலி நிலையம் வரையிலான காமராஜர் சாலையும் '' தூய்மைப் பகுதியாக '' அறிவிக்கப்பட்டன ; மேலும் அப்பகுதியை ஒவ்வொரு நாளும் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை '' தூய்மைப் பகுதியாக '' வைத்துவரத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கிணங்க இப்பகுதி 1–2–1982 முதல் பராமரித்து வரப்படுகிறது. மேற்சொன்ன பகுதியை எப்பொழுதும் தூய்மையாக வைத்து வரும் பொருட்டு இருமுறை மாற்றுப் பணிமுறையில் 54 துப்புரவுப் பணியாளர்கள் துப்புரவுப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

1,08,970 சதுர மீட்டர் அளவிற்கு புதிய வடிவமைப்புடன் புதிதாக சிமிட்டிக் கற்கலவையிடப்பட்ட சாலை அமைக்கப்பட்டு புதிதாகத் தார்சாலை போடப்பட்டது. இப்பணிகளுக்காக மொத்தம் ரூ. 54,48,500 செலவிடப்பட்டது. 1982—83 ஆம் ஆண்டில் 1,08,781 சதுர மீட்டர் பரப்புள்ள பழுதடைந்த சாலைகளில் ஆங்காங்கே பகுதிகளில் புதிதாக ஒட்டுப்போடும் பணிக்காக ரூ. 43,51,240 செலவிடப்பட்டது.

கல்வித்துறை :

சென்னை மாநகரில் பள்ளி செல்லும் வயதடைந்த குழந்தைகள் அனைவருக்கும் தொடக்கப் பள்ளிக் கல்வியை இலவசமாக வழங்க வேண்டுமென்ற கொள்கையை சென்னை மாநகராட்சி செயல்படுத்தி வருகிறது. இம்மாநகரின் மூலை முடுக்குகளில் எல்லாம் மொத்தம் 375 தொடக்க நடுநிலைப் பள்ளிகளை இம்மாநகராட்சி நடத்தி வருகிறது. இவ்வாண்டில் 4,524 பயிற்சிபெற்ற ஆசிரியர்களிடம் 1.70 இலட்சம் சிறுவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

374 பள்ளிகளைச் சேர்ந்த 1,00,255 சிறுவர்களுக்கு உணவளிப்பதற்குத் தேவையான உணவைத் தயாரிக்கும் பொருட்டு 336 சமயற்கூடங்கள் இயங்கி வருகின்றன.

அரசு விடுமுறையாக அறிவித்துள்ள நாட்கள் தவிர ஆண்டு முழுவதிலும் உள்ள ஏனைய நாட்களில் நண்பகல் சத்துணவு வழங்கப்படுகிறது ; அரசு விடுமுறையென அறிவிக்கும் நாளன்று ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட உணவு, விடுமுறைக்கு முந்திய நாளன்றே வழங்கப்பட்டுவிடுகிறது.

தொடக்க இடைநிலைக் கல்விக்காக அறிக்கை ஆண்டில் சென்னை மாநகராட்சியில் ஏற்பட்ட வரவு–செலவு விவரம் வருமாறு :—

	வரவு.	செலவு.
	(ரூபாய் இலட்சத்தில்.)	
தொடக்கக் கல்வி	660.79	649.12
இடைநிலை-மேல் நிலைக் கல்வி	73.78	180.82
	734.57	829.94

மாவட்ட அலுவலகம் (தெற்கு) :

இப்பகுதியில் மொத்தம் 369 பொதுக் கழிப்பிடங்கள் உள்ளன ; இவற்றுள் 38 கட்டணக் கழிப்பிடங்களாகும். இவை ரூ. 64,000-த்திற்கு குத்தகைக்குவிடப்பட்டன. கட்டணக் கழிப்பிடங்கள் ஒப்பந்தக்காரர்களால் நல்லமுறையில் நடத்தப் பட்டு வருகின்றன. பொதுக் கழிப்பிடங்கள் முறையாகப் பழுது பார்க்கப்பட்டு நல்லமுறையில் வைத்து வரப்படுகின்றன. இப் பணிக்காக 1982–83-ல் ரூ. 1.11 இலட்சம் செலவிடப்பட்டது. தெற்கு மாவட்டத்தில், ரூ. 95.05 இலட்சம் செலவில் முக்கிய சாலைகளைப் பழுதுபார்க்கும் பணியும், இரவுத் துப்புரவுப் பணியும் 1982-83 ஆம் ஆண்டிலும், முறையாக மேற்கொள்ளப் பட்டன. இவற்றை தவிர, பல பள்ளிக் கட்டிடங்கள், குழந்தைகள்நல நிலையங்கள், மருந்தகங்கள், சலவைத்துறைகள், இடுகாடுகள் முதலியவற்றிற்கு ரூ. 94,000 செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மின்வசதித் துறை :

1982–83 ஆம் ஆண்டில், மாநகரில் பல்வேறு பகுதிகளில் புதிதாகச் சாலை விளக்குக் கம்பங்கள் 1'155 நிறுவப்பட்டன். மாநகரின் பல்வேறு பகுதிகளில், வெவ்வேறு அளவுகளில் 51—5 கிலோ மீட்டர் தொலைவிற்கு புதைவடக் கம்பிகள் போடப்பட்டன.

மின்சக்தியின் மூலம் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்கவும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டும், 197 விளக்குக் கம்பங்களில் (Fuse) மின்காப்புப் பெட்டிகள் உயர்ந்த இடத்தில் பொருத்தப்பட்டன.

20 வாட்ஸ் குழல் விளக்குகள் 298, 4X40 வாட்ஸ் குழல் விளக்குகளாக மாற்றப்பட்டன.

1982–83-ல், சாலை விளக்குகளை மேம்படுத்தும் பணியின் ஒரு பகுதியாக, சாதாரணமாகப் பொருத்தப்பட்டிருந்த 4X40 வாட்ஸ் குழல் விளக்குகள் 10 (மெர்க்குரி ஆவி) MD/SV (சோடியம் ஆவி) விளக்குகளாக மாற்றப்பட்டன.

மாநகராட்சி சாலை விளக்குகள், சென்னை மாநகராட்சி தெருவிளக்குகள் பராமரிப்பு அமைப்பின் பொறுப்பில் விடப் பட்டுள்ளது. இவ்வமைப்பில் 54 உயரழுத்த மின்சக்தி துணை நிலையங்கள் செயல்படுகின்றன.

துருப்பிடித்த 150 விளக்குக் கம்பங்கள் விபத்துக்கள் ஏற் படாமல் தடுக்கும் பொருட்டு எடுத்து விடப்பட்டன; பின்னர், அவற்றுள் 95 விளக்குக் கம்பங்கள் பழுது பார்க்கப்பட்டு, எந்த இடத்திலிருந்து அவை எடுக்கப்பட்டனவோ. அதே இடத்தில் மீண்டும் நிறுவப்பட்டன. தெருவிளக்குகள் பராமரிப்புப் பணியின் ஒரு பகுதியாக இவ்வாண்டில் 2,439 விளக்குக் கம்பங்களுக்கு வண்ணம் பூசப்பட்டது.

மழைநீர் வடிகால் பணிப்பிரிவு :

ஒருங்கிணைந்த நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்ட ஏற்பாட்டின் கீழ் ஒதுக்கியுள்ள நிதியிலிருந்து (I C D Funds) மேற்கொள்ளப் பட்ட 6 பணிகள் நடைபெற்று வருகின்றன. பொதுக் கடன் நிதி ஏற்பாட்டின்கீழ் ஒதுக்கியுள்ள நிதியிலிருந்து (மழை நீர் வடிகால் கிளைக் குழாய்கள் 33 அமைக்கும் பணி, வெள்ள நீர் வடிகால் குழாய்கள் 1, அமைக்கும் பணி) மேற்கொள்ளப்பட்ட 34 பணிகள் இவ்வாண்டின் தொடக்கத்தில் நடை பெற்று வந்தன. இவற்றுள் மழை நீர் வடிகால் குழாய்கள் 17 அமைக்கும் பணி இவ்வாண்டில் முடிவடைந்துவிட்டது. மழைநீர் வடிகால் குழாய் கள் 7அமைக்கும் பணி புதிய திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளன; மேலும், 41 தெருக்களில் பழுது பார்க்கும் பணி யும், பொதுக் கடன் நிதி ஏற்பாட்டின்படி ஒதுக்கியுள்ள நிதி யிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய திட்டப்பணி களுக்காகவும், பழுதுபார்ப்புப் பணிகளுக்காகவும் அரசு கடன் மானியமாக ரூ. 42.51 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட 7 புதிய திட்டப் பணிகளுள் 1 வெள்ளநீர் வடிகால் குழாய் அமைக்கும் பணி முடிவடைந்து விட்டது. 41 தெருக்களில் மேற் கொள்ளப்பட்ட பழுது பார்ப்புப் பணிகளில் 11 பணிகள் முடிவடைந்துவிட்டன.

இவ்வாண்டில் மொத்தம் சுமார் 9 கிலோ மீட்டர் தொலைவிற்கு மழை நீர் வடிகால் குழாய் அமைக்கப்பட்டது. மொத்தம் 2 வெள்ள நீர் வடிகால் குழாய்கள் கட்டிமுடிக்கப்பட்டன. ரூபாய் 45.00 இலட்சம் மதிப்புள்ள மழைநீர் வடிகால் குழாய்கள் அமைக்கும் பணியை இத்துறை நிறைவேற்றியது. மாநகரின் வெவ்வேறு பகுதிகளில், ரூ. 37.00 இலட்சம் செலவில் 120 குழந்தைகள் நண்பகல் சத்துணவு நிலையங்களை இத்துறை கட்டி முடித்துள்ளது.

குடும்ப நலத்திட்டங்கள் :

குடும்ப நலத்துறையில் 1982–83 ஆம் ஆண்டின் இலக்கு, சாதனை ஆகியவற்றின் விவரம் வருமாறு :—

முறை.	இலக்கு	சாதனை.	சாதனையின் சதவீதம்.
கருத்தடை அறுவை சிகிச்சை—	32,200		
வாசெக்டமி		1,493	
டியூபெக்டமி		29,437	
		30,930	96.0
கருத்தடை வளையம் பொருத்துதல்.	8,800	8,713	99.0
பழைய முறையிலான கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்துவோர்.	13,200		
கருத்தடை மாத்திரை உட்கொள்வோர்.	2,400	731	30.4

கட்டிடங்கள் துறை :

ரூ. 6.80 இலட்சம் செலவில் இரு சவப் பரிசோதனை கூடங்களைக் கட்டும் பணியையும் ரூ. 12.38 இலட்சம் செலவில் 22 வகுப்பறைகள் கட்டும் பணியையும், மாநகராட்சிப் பள்ளி களில் மேம்பாட்டுப் பணிகளையும் ரூ., 1.72 இலட்சம் செலவில் மருந்தகம் ஒன்றைக் கட்டும் பணியையும், ரூ. 0.66 இலட்சம் செலவில் ஆய்வுக்கூடம் ஒன்றைக் கட்டும் பணியையும் ரூ. 0.97 இலட்சம் செலவில் இடுகாடுகளை மேம்படுத்தும் பணி யையும், ரூ. 0.61 இலட்சம் செலவில் மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டும் பணியையும், ரூ. 1.02 இலட்சம் செலவில் கோட்ட அலுவலகக் கட்டிடம் ஒன்றைக் கட்டும் பணியையும், ரூ. 2.19 இலட்சம் செலவில் சலவைத் துறைகள் கட்டும் பணியையும், ரூ. 19,000 செலவில் 6 கழிப் பிட வசதிகளுடன் கூடிய பொதுக் கழிப்பிடங்கள் கட்டும் பணி யையும், இத்துறை மேற்கொண்டது. மேலும், ரூ. 40.00 இலட்சம் செலவில் முதலகூமச்சரின் குழந்தைகள் நண்பகல் உண வுக் கூடங்களைக் கட்டும் பணியையும் இத்துறை மேற்கொண்டு அவற்றைக் கட்டி முடித்துள்ளது.

மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சியில், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் கள் 65 பேரும், நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் 9 பேரும் உள்ளனர். இவ்வாண்டில் மாநகராட்சி மன்றம் 13 சாதாரணக் கூட்டங்களையும், 12 அவசரக் கூட்டங்களையும், 7 தனிக் கூட் டங்களையும் நடத்தி 775 பொருட்களைக் குறித்து விவாதித்தது:

(ஏ) மக்கள் நலத்துறை பணியாளர்களால் கவனிக் கப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை (மகப்பேறு மற்றும் குழந்தை பராமரிப்பு).	10,832
(பி) பதிவு செய்யப்பட்ட ஆண்டிநேட்டல் எண்ணிக்கை.	16,899
(சி) பரிசோதனை செய்யப்பட்ட இரத்த மாதிரி களின் எண்ணிக்கை.	9,631
(டி) பாசிடிவ் இனங்களின் எண்ணிக்கை	217

(இ) பாசிடிவ் இனங்களைத் தவிர்த்துஉள்ள மற்ற இனங்களின் எண்ணிக்கை.	166
(எப்) பிரசவத்தின் போது ஏற்பட்ட இறப்பின் எண்ணிக்கை.	இல்லை.
(ஜி) பிறந்த குழந்தை இறப்பு எண்ணிக்கை	29
(எச்) மூன்று ஆண்டிஜெனண்ட் ஊசிகள் போடப்பட்ட எண்ணிக்கை	24,154 (முதல் தடவை) 20,091 (2-வது தடவை) 18,714 (3-வது தடவை)
பூஸ்டர்	6,839

தெரு விளக்கு :

1982-83 ஆம் ஆண்டு இறுதியில் இம்மாநகரில் உள்ள மின் விளக்குகள் விவரப்பட்டியல்—

சோடியம் ஆவி விளக்குகள் ..	1,152
மெர்குரி ஆவி விளக்குகள் ..	1,838
குழல் விளக்குகள்	11,640
இதர விளக்குகள்	1,382
மாநகராட்சி எல்லையில் மின் வாரியத்தால் பராமரிக்கப்படுபவை.	3,700

1982-83 ஆம் வருடத்தில் 712 இடங்களில் குழல் விளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றப்பட்டன.

மாநகராட்சி பள்ளிகளும் சத்துணவுத் திட்டமும் :

மாநகராட்சி நிர்வாகத்தில் 8 மேல்நிலைப்பள்ளிகள் உள்ளன. இதில் 5 பெண்களுக்கு, 3 ஆண்களுக்கு 12 உயர் நிலைப்பள்ளிகளில் 7 பெண்களுக்கு 5 ஆண்களுக்கும் உள்ளன.

ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் 72-ம் உள்ளன. மாணவர்கள் 8 மேல்நிலை மற்றும் 12 உயர்நிலைப் பள்ளிகளில் ..	13,371
மாணவர்கள் 72 ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில்	28,916

மாநகராட்சியின் பராமரிப்பிலுள்ள 72 ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் 25,000 மாணவர்களுக்கு முதலமைச்சரின் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

சாலைகள் பற்றிய விவரங்கள் :

1982-83 ஆம் ஆண்டு இறுதியில் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் பின்வருமாறு :—

	சாலையின் மொத்த நீளம். (கி.மீ.).
1. சிமிண்ட் கான்க்கிரிட் தளம் உள்ளது	4.190
2. தார் ரோடு	187.486
3. மெட்டல் ரோடு WMB	106.865
4. கிராவல் ரோடு	87.106
5. கருங்கல் தளம் அல்லது சிமின்ட் சிலாப் பரவிய ரோடு.	47.538
மொத்தம்	433.185

குடிநீர் வடிகால் பிரிவு :

1. குடிநீர் குழாய் கசிவு சரிசெய்யப்பட்டவை	4,860
2. பள்ளத்திலுள்ள குழாய்களை தரை மட்டத்திற்கு உயர்த்தியது.	273
3. குடிநீர் வீட்டிணைப்புகள் புதிதாக கொடுத்தவை.	1,714
4. பாதாளச் சாக்கடை, சாக்கடை வீட்டிணைப்புகள் புதிதாகக் கொடுத்தவை.	127
5. பாதாளச் சாக்கடை ஆழ்துளை கிணறுகள் உயர்த்தப்பட்டவை.	198
6. பாதாளச் சாக்கடைக் குழாய்களில் நீக்கப்பட்ட அடைப்புகள்.	31,125

குடிநீர் மற்றும் கிணற்று நீர்குழாய்கள் இல்லாத தெருக்களுக்கு குழாய்கள் பதிக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட குழுக்களின் ஒப்புதலுடன் ஒப்பந்தம் மூலம் வேலை செய்யப்படுகிறது. இவ்வாறு 1982—83—ல் செய்யப்பட்ட வேலைகள் மொத்தம் 201 ஆகும். மதுரை மாநகரில் வடபகுதியில் பாதாள சாக்கடைத்திட்டம் ரூ. 190 லட்சம் செலவில் அமைக்கப்பட்டு செயல்படத் துவங்கியது.

மதுரை மாநகரின் தென் பகுதிகளில் சேருகின்ற கழிவுநீர் அவணியாபுரம் கழிவுநீர் பண்ணைக்கு பம்பிங் செய்தது போக மீதமுள்ள உபகழிவு நீரை வட பகுதியில் புதிதாக செயலுக்கு கொண்டு வரப்பட்டுள்ள பாதாள சாக்கடைத் திட்டத்துடன் சேர்க்கும் திட்டம் ரூ. 7.97 இலட்சம் செலவில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி—1982-83 வரி மற்றும் உரிமம் தொகை :
கேட்பு, வசூல், நிலுவை விபரம்.

(தொகைகள் லட்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன).

வரிசை எண்.	வரி மற்றும் உரிமம் பற்றிய விவரம்.	கேட்பு.	வசூல்.	நிலுவை.
(1)	(2)	(3)	(4)	(5)
	வரி—			
1	வீட்டு வரி	527.00	229.00	298.00
2	தொழிற்வரி	38.00	28.00	10.00
3	விளம்பரவரி ..	3.18	3.18	
4	யாத்திரீகர் வரி	0.29	0.29	...
5	தண்ணீர் வரி.. ..	51.00	32.00	19.00
6	பிராணிகள் மற்றும் வண்டிவாகனாதி வரி.	0.49	0.49	..
	மொத்தம்	619.96	292.96	327.00

வனப் பஞ்சாயத்து

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் செயலுக்கு வந்ததனையடுத்து, காப்பு வனமாக இல்லாத காடுகள் அனைத்தும், மேற்சொன்ன சட்டத்தின் 72 ஆம் பிரிவின் கீழ் அந்தந்த ஊராட்சிகளிடம் நிலைபெற்றுள்ளன. இருந்துவரும் வனப் பஞ்சாயத்தை இறுதி செய்து விட்டு, நிலங்களை சம்பந்தப் பட்ட ஊராட்சிகளுக்கு மாற்றுவதற்கான பிரச்சினை எழாது என்று அரசு கருதியுள்ளது.

மதுரை மாவட்டத்தில் மட்டும் கீழே குறிப்பிட்டுள்ளபடி, ஐந்து வனப் பஞ்சாயத்துக்கள் இருந்தன:—

வனப் பஞ்சாயத்துக்களின் பெயர். (1)	பரப்பு. (2) ஏக். செ.
1 கொல்லப்பட்டி—வேடசந்தூர் வட்டம்	291.02
2 செங்குறிச்சி—திண்டுக்கல்	1,178.42
3 பள்ளப்பட்டி—மேலூர் வட்டம்	1,359.83
4 மூங்கில்பட்டி—நத்தம் வட்டம்	553.01
5 புதூர்—நத்தம் வட்டம்	167.90
மொத்தம்	3,550.18

நகராட்சி நிர்வாகம்.

1982-83 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் 8 நகரியங்கள் உள்பட மொத்தம் 106 நகராட்சிகள் இருந்தன. நகராட்சிகள் அனைத்தும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஆளுகைக்கு உட்பட்டு செயல்படுகின்றன. மேலும் நிர்வாக பணியில் இயக்குநருக்கு உதவியாக இணை இயக்குநர் (நிர்வாகம்), இணை இயக்குநர் (திட்டம்), இணை இயக்குநர் (கல்வி) மற்றும் கண்காணிப்புப் பொறியாளரும் செயல்பட்டு வருகின்றனர். மண்டலங்களின் அளவில் ஐந்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்களும் ஐந்து மண்டல நகராட்சிப் பொறியாளர்களும் செயல்பட்டு வருகின்றார்கள். இவர்கள் முதல்நிலை நகராட்சிகள் வரையில் ஆய்வு மற்றும் கண்காணிப்பு அதிகாரிகள் ஆவார்கள்.

நிர்வாகம் :

நகராட்சிகளின் நிர்வாக அதிகாரியாக ஆணையர் செயல்பட்டு வருகின்றனர். அவருக்கு நிர்வாகத்தில் துணை புரிய நகராட்சி பொறியர், நகர் நல அதிகாரி மற்றும் நகர் திட்ட அலுவலர் ஆகியோர் உள்ளனர்.

நகராட்சிகள் மற்றும் நகரிய குழுக்களின் மொத்த வருமானம் ரூ. 71.16 கோடிகளாகும். அதில் 31.59 கோடிகள் நிர்வாகத்திற்கு செலவிடப்பட்டது.

முக்கிய வருமானம் :

நகராட்சிகளிலும், நகரியங்களிலும் கீழ்கண்ட இனங்களில் முக்கிய வருமானம் கிடைக்கின்றது :—

(1) சொத்து வரி
(2) தொழில் வரி
(3) கேளிக்கை வரி மற்றும் கேளிக்கை வரிகளின் மீதான தண்டவரி
(4) முத்திரை காகிதத்தின் மீதான தண்டவரி
(5) பயன்தரத் தக்க இனங்களின் வருவாய்

அரசு கடன்களும் மானியங்களும்

நகராட்சிகள் பலவழிகளில் முன்னேற்றம் பெற அரசு கடன் மான்யம் மற்றும் முன்பணம் போன்ற வழிகளில் நகராட்சிகளுக்கு நிதி உதவி செய்கின்றது.

1982-83 நிதியாண்டில், நகராட்சிகளுக்கு கடன், மான்யம் மற்றும் முன்பணம் போன்ற வழிகளில் கீழ்கண்டவாறு அரசு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது :—

கடன் :		(ரூபாய் இலட்சத்தில்)
1	நகராட்சி சாலைகளின் வேலைகள் (முழுக்கடன்)	30.00
2	புழுதியில்லா மேல்பரப்பு சாலைகள் போட (பாதிக்கடன்).	15.00
3	வறட்சி நிவாரணம்	18.47
4	வழிவகை முன்பணம்	7.00
5	சுழற்சி நிதி (Revording fund) தனியார் சாலை களுக்காக.	8.19
6	ஒருங்கிணைந்த நகர்புற முன்னேற்ற திட்டங்கள் சம்பந்தமான வேலைகள் (மாநில திட்டம்).	124.78
7	ஒருங்கிணைந்த நகர்புற முன்னேற்ற திட்டங்கள் சம்பந்தமான வேலைகள் (மத்திய அரசு திட்டம்).	219.36
8	குறுகிய கால கடன் ..	1.50
9	தன்னிறைவுத் திட்டம்	80.00

மான்யங்கள் :	(ரூபாய் இலட்சத்தில்.)
1 புழுதியில்லாத மேல் பரப்பு சாலைகள் போட..	15.00
2 ஒருங்கிணைந்த குடிசைமாற்று திட்டங்கள்	50.00
3 வெள்ள நிவாரண பணிகள்	1.89
4 சாலைகள் பராமரிக்கப்பட்ட முன் மானியங்கள் (Adhoc).	12.00
5 நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடத்திற்காக.	25.00
6 நகராட்சி துவக்கப்பள்ளி கட்டிடங்களுக்காக ..	20.00
7 கொடைக்கானல் ஏரியினை பராமரிக்க தொடர் மானியம்.	0.05
8 வறட்சி நிவாரணப் பணிகள்	22.88
9 தன்னிறைவுத் திட்டம்	420.00
10 சுங்க இழப்பிற்கு ஈடுசெய்தல்	14.66
11 வண்டிவாகன உரிமையினை தொகை இழப்பிற்கு ஈடுசெய்தல்.	1.92
12 ஒருங்கிணைந்த பிற்பட்டத் தொகுதி முன்னேற்றத்திற்காக.	25.00

பொதுப் பணிகள்

1982-83 ஆம் ஆண்டின் சாலைகள், கட்டிடங்கள், பேருந்து நிலையங்கள், அங்காடிகள், பூங்காக்கள், பொது கழிப்பிடங்கள் மற்றும் குடிநீர் விநியோகம் வடிகால்கள் ஆகிய இனங்களுக்காக செலவிடப்பட்ட தொகையில் பின்வருமாறு கொடுக்கப் பட்டுள்ளது:—

முக்கியப் பணிகள் :	(ரூபாய் இலட்சத்தில்.)
1 சாலைகள் மற்றும் அணைகள் கட்டுவதற்கு	222.74
2. கட்டிடங்கள்—	
(அ) நிர்வாகம்	22.74
(ஆ) பல்வகை	68.92
(இ) உயர்நிலைப் பள்ளிகள் ..	44.85
(ஈ) துவக்கப் பள்ளிகள்	108.67
(உ) அங்காடி மற்றும் வண்டிப்பேட்டைகள்	111.46
(ஊ) குடிநீர் விநியோகம்	111.75
(எ) வடிகால்	43.86
(ஏ) ஏனைய சிறிய வேலைகள் ..	176.81

ஏறக்குறைய ஆண்டுதோறும் எல்லா நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் பொது மக்களுக்கு நிறைந்த அளவில் நன்மைகளும் வசதிகளும் செய்ய செலவு செய்யப்படுகின்றன.

தெரு விளக்குகள் :

எல்லா நகராட்சிகளிலும் நகரியங்களிலும் மின் விளக்குகள் பயன்பட்டு வருகின்றன. நகராட்சிகளிலும், நகரியங்களிலும் மொத்தம் 1,56,783 மின் விளக்குகள் (குழல் விளக்குகள், பாதரச விளக்குகள், சோடிய ஆவி விளக்குகள் உள்பட) பாராமரிக்கப் பட்டன. 1982-83ஆம் ஆண்டில் இத் தலைப்பில் முதலீடு செய் தது உள்பட ரூ. 143.43 லட்சம் செலவிடப்பட்டது.

முக்கிய புள்ளி விவரங்கள் :

1982-83 ஆம் ஆண்டில் 3,33,657 பிறப்புகளும், 44,758 இறப்புகளும் பதிவு செய்யப்பட்டன.

பொது சுகாதார நடவடிக்கைகளும், அதற்கான செலவினங்களும் :

குப்பைகளை அகற்றுவது மற்றும் திறந்த வடிகால்களை சுத்தம் செய்வது, சிறப்பான சுகாதாரத்தை பொது மக்களுக்கு அளிப்பது நகராட்சி மற்றும் நகரியங்களின் கடைமையாகும். இதைப் போன்ற பொது மக்களுக்கு பொது கழிப்பிடங்களை நிறைந்த அளவில் கட்டித் தரவேண்டுவது முக்கியமாகும். எனவே, நவீன கட்டண கழிப்பிடங்கள் நிறைய நகராட்சிகளில் அமைக்கப் பட்டு வருகின்றன. இதுவரை, கட்டண கழிப்பிடங்கள் 119 கட்டப்பட்டுள்ளன. இதைத் தவிர நகர் நல பணியாளர்கள், நகர் நல அதிகாரிகள், சுகாதார ஆய்வாளர்கள் ஆகியோர்களின் நேரடி கண்காணிப்பில் சாலைகளையும், பொது மற்றும் தனி யார் கழிப்பிடங்களையும் சுத்தப்படுத்துதல் ஆகிய பணிகளை செய்து வருகின்றனர். நகராட்சி நலத்துறைகளால் பிரசவ விடுதி மற்றும் குழந்தைகள் நல விடுதிகளையும் பராமரிக்கப் பட்டு வருகின்றன. மொத்தம் 485 சான்றிதழ் பெற்ற நக ராட்சி மகப்பேரு உதவியாளர்கள் உள்ளனர். அவர்களால் 1982–83 ஆம் ஆண்டில் 58,744 பிரசவங்கள் பார்க்கப்பட்டன.

'' உள் நகர திட்டம் இடம் '' என்ற திட்டத்தின் கீழ் 920 விரிவான திட்டங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இவற் றில் 250 திட்டங்கள் இதுவரையில் அங்கிகாரம் செய்யப்பட் டுள்ளது.

அரசும், நகர மற்றும் ஊரக அமைப்புத் திட்டச் சட்டத்தின் படி 3 '' மாஸ்டர் பிளான் '' களை இவ்வருடத்தில் கோபி செட்டிபாளையம், நாமக்கல் மற்றும் இராஜபாளையம் நகராட்சிகளில் மேற் கொள்ளுவதற்காக அங்கீகாரம் அளித்துள்ளது.

கல்வி, துவக்கக் கல்வி :

1982–83 ஆம் ஆண்டில் நகராட்சி துவக்கப் பள்ளிகள், உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகள் மொத்த எண்ணிக்கை கீழ் வருமாறு கொடுக்கப் பட்டுள்ளது :—

1. நகராட்சி துவக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை	1,026
2. 31—3—1983 முடிய உள்ள மாணவ மாணவிகளின் எண்ணிக்கை	3,15,812
3. உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை..	29
4. மாணவ மாணவிகள் எண்ணிக்கை	19,974
5. மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை	33
6. மாணவ மாணவியர் எண்ணிக்கை	41,765

1982–83 ஆம் ஆண்டில் நகராட்சி மற்றும் நகரிய பள்ளிகளில் பணிபுரியும் மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 11,211 ஆகும்.

பொது வருவாய் :

1982–83 ஆம் ஆண்டின் எல்லா நகராட்சி மற்றும் நகரியங்களின் மொத்த வருமானம் வரியினத்தில் ரூ. 1,722.85 லட்சமும் வரியில்லா இனத்தில் ரூ. 1,041.13 இலட்சமும் வசூலிக்கப்பட்டது.

முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டம் :

ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் 3,15,812 மாணவர்களில் தினம் 1.70 லட்சம் மாணவர்கள் சத்துணவு அருந்துகிறார்கள்.

நகராட்சித் தேர்தல்.

ஊராட்சித் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டவுடன் நகராட்சித் தேர்தல்களை நடத்தலாமென அரசு முதலில் முடிவு செய்திருந்தது. எனினும், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கும் பெண்களுக்கும் தனியிட ஒதுக்கீடுகள் செய்ததை எதிர்த்து டெல்லி உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளதால், ஊராட்சித் தேர்தலைகளை நடத்த முடியவில்லை. எனவே நகராட்சித் தேர்தல்களையாவது உடனடியாக நடத்தலாமா என்பது பற்றி விவாதிக்க 1983 மார்ச்சில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கேற்றவாறு 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கும், 15 சதவீதம் பெண்களுக்கும் நகராட்சி வார்டுகள் மற்றும் தலைவர் பதவிகளில் தனியிட ஒதுக்கீடுகள் செய்து, நகராட்சித் தேர்தல்களை ஜூலை-ஆகஸ்டு 1983-ல் நடத்தி முடிக்க அரசு தீர்மானித்துள்ளது.

ஊராட்சி வளர்ச்சி.

கிராம ரீதியாக ஊராட்சிகளாகவும், வட்டார ரீதியாக ஊராட்சி ஒன்றியங்களாகவும் அமைத்து 1958-ம் ஆண்டு ஊராட்சிச் சட்டம் இயற்றப்பட்டது. ஊராட்சி ஒன்றியமானது ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளின் இணையமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்கள் அங்கத்தினர்களாக இருந்து தங்களில் ஒருவரை ஊராட்சி ஒன்றிய உதவிப் பெருந் தலைவராக தேர்ந்தெடுக்கின்றனர். இருப்பினும் ஊராட்சி ஒன்றியத்தின் பெருந் தலைவர், அவ்வூராட்சி ஒன்றியத்திலுள்ள வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

நடை முறையில் உள்ள நிர்வாகம் :

ஊரக வளர்ச்சித் திட்டம் பொறுப்பிலுள்ள ஊரக வளர்ச்சி இயக்குநரே, மாநில அளவில் சமுதாய முன்னேற்றம் மற்றும் பஞ்சாயத்து ராஜ்ய நிறுவனங்கள் செயல் நிறைத் திட்டங்கள் இயக்கவும், அவற்றை கண்காணிக்கவும் பொறுப்பாகிறார்

அவர் மாநில அளவில் அனைத்து வளர்ச்சித் துறைகளில் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார். மாநில, மாவட்ட, வட்டார மற்றும் கிராம ரீதியாக நிர்வாக விதிமுறைகள் கீழ்க்கண்டவாறு உள்ளன :—

1. மாநில அளவில் ஊரக வளர்ச்சி இயக்ககம்
2. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரகம்
3. கோட்ட அளவில் கோட்ட வளர்ச்சி அலுவலகம்
4. வட்டார அளவில் வட்டார வளர்ச்சி அலுவலகம் (ஊராட்சி ஒன்றியம்).
5. கிராம அளவில் ஊராட்சி.

தமிழ் நாட்டில் 12,584 கிராமப் பஞ்சாயத்துக்கள் உள்ளடங்கிய 378 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.

378 ஊராட்சி ஒன்றியங்களின் பொதுக் கணக்கு வரவு-செலவு முறையே ரூ. 4,718.35 லட்சங்கள் மற்றும் ரூ. 3,824.65 லட்சங்களாகும். சராசரியாக ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் பொதுக் கணக்கு வரவு-செலவு முறையே ரூ. 12.48 லட்சங்கள் மற்றும் ரூ. 10.12 லட்சங்களாகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் பல வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக தங்களது செந்த நிதி திரட்டுவது மட்டுமன்றி பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காக மானிய உதவியும் பெறுகின்றன.

வேளாண்மை :

1982-83 ஆம் ஆண்டில் பல்வேறு வேளாண்மைத் திட்டங்களைச்செயல்படுத்துவதற்காக அரசு ரூ. 45 லட்சங்களை ஒதுக்கீடு செய்துள்ளது. 46 வேளாண்மைக் கிடங்குகள் கட்டுவதற்காக ரூ. 27.60 லட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கதிரடிக்கும் களம் கட்டுவதற்காக அரசு 4.09 லட்சங்கள் ஒதுக்கீடு செய்துள்ளது. 20 கதிரடிக்கும் களங்கள் கட்டப்பட்டன. மேலும் சேலம் மற்றும் தர்மபுரி மவட்டங்களில் முசுக்கொட்டை பூச்சி வளர்ப்பிற்காக ரூ. 7.61 லட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதொகை செலவு செய்பட்டுள்ளது.

கால் நடைப் பராமரிப்புத் திட்டம் :

1982–83 ஆம் ஆண்டில் கால் நடை பராமரிப்புத் திட்டத்திற்காக ரூ. 12.00 லட்சங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத் தொகை கீழ்க்கண்ட பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

	(ரூபாய் லட்சத்தில்.)
1. சென்ற ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்ட 12 கால் நடை மருந்தகங்களை முடித்திடல்	2.70
2. இவ்வாண்டு 16 புதிய கால் நடை மருந்தகம் கட்டிடங்கள் கட்ட	9.30
3. சென்ற ஆண்டு எடுக்கப்பட்ட கால்நடை மருத்துவர்களின் குடியிருப்புக் கட்டிடங்களை கட்டி முடிக்க ... ... —	2.39

மீன் வளம் :

1982-83 ஆம் ஆண்டு செங்கற்பட்டு, மதுரை, தஞ்சாவூர், மற்றும் கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில் தீவிர மீன் வளர்ப்பு திட்டங்களுக்கென ரூ. 3.00 லட்சங்கள் அரசு மானியமாக அளிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர வேளாண்மை திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.45.00 லட்சத்திலிருந்து ரூ. 5.70 லட்சங்கள் இத்திட்டத்திற்கென பிரித்தளிக்கப்பட்டுள்ளது இதனால் நடப்பாண்டில் இத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 8.70 லட்சங்கள் ஆகும்.

சமூகக் கல்வி :

1982–83-ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் சமூக கல்வித் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ரூ. 9.00 லட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. சமூக கல்வித் திட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்துவதற்கான இத் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டம் :

இத்திட்டத்தின் மூன்றாவது கட்டத்தின் (1982—83) இலக்கு சாதனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (31—3—1983 முடிய.)

வேலைகளின் இனம்.	செயல் இலக்கு.	நிதி இலக்கு.	சாதனை.	செலவினம்
(1)	(2)	(3)	(4)	(5)
		(ரூபாய் லட்சத்தில்)		(ரூபாய் லட்சத்தில்)
1. இணைப்பு சாலைகள்	5,836.46 கி.மீ.	2,086.55	5,491.6 கி.மீ.	1,845.44
2. சிறு பாலங்கள்	14,214 எண்ணிக்கை	1,968.70	12,694 எண்ணிக்கை	1754.345
3. ஊரக மருந்தகங்கள்	215 எண்ணிக்கை	139.75	151 எண்ணிக்கை	136.255
4. தாய் சேய் நல விடுதி	467 எண்ணிக்கை	280.05	323 எண்ணிக்கை	273.34
5. பள்ளிக் கட்டிடங்கள்	2,377 எண்ணிக்கை	1,510.94	1,601 எண்ணிக்கை	1,457.24
	5,836.46 கி. மீகள்.	5,985.99	5,491.6 கி.மீகள்.	5,466.62
	17,273 எண்ணிக்கை		14,769 எண்ணிக்கை	

வேலையற்ற கிராமப் புற ஆண்/பெண் மக்கள் இந்தப் பணிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றனர். அவர்களுக்கு இத் திட்டத்தின்கீழ் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 1 கிலோ அரிசியும் ரூ. 5.12 பணமாகவும் வழங்கப்படுகிறது. அதாவது விவசாயிக் கூலிகள்

தினசரி குறைந்த பட்சம் ரூ. 7 கூலியாகப் பெற வேண்டும் 1982—83ஆம் ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் 57,313 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதில் 45,608 பணிகள் செய்து முடிக்கப்பட்டன. செய்து முடிக்கப்பட்ட வேலையின் மதிப்பு ரூ. 4267.88 இலட்சங்கள். இதற்காக 25,819 மெ. டன். அரிசியும் ரூ.3782.58 லட்சம் நிதியாகவும் வழங்கப்பட்டுள்ளது.

திருத்தியமைக்கப்பட்ட ஊட்டச் சத்துணவுத் திடடம் :

செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம் 1962- 63-ம் ஆண்டிலிருந்து மத்திய அரசு மற்றும் '' யூனிசெப் '' நிறுவன நிதி உதவியுடன் தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தமிழகத்தில் மொத்தம் 75 வட்டாரங்களில் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தை மத்திய அரசு தன் பொறுப்பிலிருந்து 1—4—1979 முதல் மாநில அரசுக்கு மாற்றியுள்ளது. 1980ஆம் ஆண்டிலிருந்து '' யூனிசெப் '' நிறுவனமும் தங்களது நிதி உதவியை நிறுத்திவிட்டது.

சமூகத்திலுள்ள நலிவடைந்த இளஞ்சிறார்கள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியவர்களின் சத்துணவுத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1981-82 லிருந்து முந்திய திட்டத்தின் செயலாக்கத்தின் மூலமாக கிடைத்த அனுபவத்தைக் கொண்டு இத்திட்டத்தை திருத்தியமைக்க அரசு முடிவெடுத்தது. திருத்தியமைக்கப்பட்ட ஊட்டச் சத்துணவுத் திட்டம் கீழ்க்கண்டவாறு மூன்று பிரதான அம்சங்களைக் கொண்டது.

1. ஊட்டச் சத்துக் கல்வி அளித்தல்
2. பொதுச் சுகாதாரம் பேணல்; மற்றும்
3. பயிற்சி.

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நண்பகல் சத்துணவுத் திட்டம் 1—7—1982 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டதின் காரணமாக ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின்கீழ் துவக்கப்பட்ட அனைத்து குழந்தைகள் நல நிலையங்களும் முதலமைச்சரின் நண்பகல் சத்துணவுத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டதால், திருத்தியமைக்கப்பட்ட ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின்கீழ் நடைபெற்று வந்த அனைத்துச் செயல்களும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன.

வரித் தண்டல் :

தமிழகத்தில் மொத்தம் 12,584 கிராமப் பஞ்சாயத்துக்கள் உள்ளன. தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1958 பிரிவு 119(1)-ன் படி ஒவ்வொரு ஊராட்சியிலும் வீட்டுவரி, தொழில்வரி, மற்றும் வாகன வரி வசூலிக்கப்படுகின்றன.

1982-83-ஆம் ஆண்டிற்குரிய வரித் தண்டல் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

	(ரூபாய் லட்சத்தில்)
வீட்டு வரி ..	218.70
தொழில் வரி	19.29
வாகன வரி	11.35

ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் குடும்பத்தில் ஈமச் சடங்கு நடத்துவதற்கான உதவித் தொகை வழங்கும் திட்டம்

1982-83-ஆம் ஆண்டில் ரூ. 62,15,200 இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 124,304 குடும்பங்கள் பயன்டைந்துள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம்.

தமிழ்நாட்டில், (சென்னை மாநகர் நீங்கலாக), நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் குடிநீர் வழங்கல் வடிகால் திட்டங்களை ஆய்வு செய்து நிறைவேற்றுவதற்காக, 1971 ஆம் ஆண்டில் தமிழக அரசு தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியத்தை அமைத்துள்ளது. முன்னாள் பொதுச் சுகாதாரப் பொறியியல்-நகராட்சிப் பணிகள் துறை மேற்கொண்ட பணிகளை வாரியம் நிறைவேற்றி வருகிறது.

தலைமை அமைச்சரின் புதிய 20 அம்ச திட்டமும், மாநில அரசின் தன்னிறைவுத் திட்டமும்.

தலைமை அமைச்சரின் திருத்தி அமைக்கப்பட்ட 20 அம்ச திட்டத்தின் 8 ஆம் அம்சத் திட்டம், பிரச்சினைக்குரிய கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க வகை செய்வதைக் குறிக்கின்றது. இத் திட்டத்தின் கீழ், குடிநீர் வசதியில்லாதவை எனக் கண்டறியப் பட்ட கிராமங்களுக்கு, ஆண்டு முழுவதும் குறைந்தது ஒரு நீர் நிலையிலிருந்தாவது பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு வகை செய்ய முயற்சி மேற்கொள்ளப்படும். பிரச்சினைக்குரிய கிராமங்கள் என்பதற்கு இந்திய அரசு அளித்துள்ள விளக்கம் ஏறக்குறைய மாநில அரசின் விளக்கத்தை ஒத்துள்ளது. எனவே, 1-லிருந்து 5 வரையிலான வகையைச் சேர்ந்த குடியிருப்புகள். பிரச்சினைக்குரிய குடியிருப்புகளாகக் கருதப்படுகின்றன. கிராமக் குடியிருப்புகளிலுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், சாலை, மருத்துவ வசதி முதலியவற்றில் தன்னிறைவு பெற மாநில அரசு மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளது. இந்த நோக்கத்தை எய்துவதற்காக, மாநிலம் முழுவதிலும் தன்னிறைவுத் திட்டத்தைப் படிப்படியாகச் செயல்படுத்த மாநில அரசு அறிவித்தது. 1980–81 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் முதல் கட்டத்தில் 69 ஒன்றியங்களிலும், 1981–82 ஆம் ஆண்டில் II ஆம் கட்டத்தில் 150 ஒன்றியங்களிலும், 1982–83 ஆம் ஆண்டில் III ஆம் கட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள 159 ஒன்றியங்களிலும் பணிகளை முடிப்பதற்கான ஒரு திட்டத்தை மாநில அரசு தெரிவித்தது. குடிநீர் பிரச்சினையுள்ள எல்லா குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப் பட்டது. வாரியம் அனைத்துக் திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது.

தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியத்தின் சாதனைகள் !

1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் 1, 2 ஆம் வகை குடியிருப்புகளுக்கும், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், I, II, III என்ற நிலைகளில் மறுவகை செய்யப்பட்ட குடியிருப்புகள் புதிய குடியிருப்புகள் ஆகிய இவ்விரண்டு குடியிருப்புகளுக்கும்

குடிநீர் வழங்கியதில் தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியத்தின் சாதனைகள் பின்வருமாறு :—

விவரம்.	பயனடைந்த குடியிருப்புகள்.	பயனடைந்தோரின் எண்ணிக்கை.	ஏற்பட்ட செலவு.
(1)	(2)	(3)	(4)
		(இலட்சத்தில்.)	(ரூபாய் இலட்சத்தில்.)
(ஏ) 1, 2 ஆம் வகை குடியிருப்புகளுக்கான குடிநீர் வழங்கும் திட்டம் —			
(1) குறைந்த அளவு தேவைத் திட்டம்.	3,208	11·9.135	2604.163
(2) கிராம வளர்ச்சி விரைவுத் திட்டம்.	2,181	8·1085	14·75.374
மொத்தம் (ஏ)	5,389	20.0220	4079.537
(பி) தன்னிறைவுத் திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் 69 ஒன்றியங்களிலுள்ள 3-லிருந்து 5 ஆம் வகை வரையிலான குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் :—			
1. (ஏ) குறைந்த அளவு தேவைத் திட்டம் (நிலவிய நிலையின்படி).	1,809	6.8830	1598.832
(பி) குறைந்த அளவு தேவைத் திட்டம் (மறுவகை செய்யப்பட்டது).	366	1.3295	294.878
2. கிராம வளர்ச்சி விரைவுத் திட்டம்.	178	0.6775	168.027
மொத்தம் (பி)	2,353	8.8900	2061.73

விவரம்.	பயனடைந்த குடியிருப்புகள்.	பயனடைந்தோரின் எண்ணிக்கை.	ஏற்பட்ட செலவு.
(1)	(2)	(3)	(4)
		(இலட்சத்தில்.)	(ரூபாய் இலட்சத்தில்.)
(சி) தன்னிறைவுத் திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் 150 ஒன்றியங்களிலுள்ள 3-லிருந்து 5 ஆம் வகை வரையிலான குடியிருப்புகளுக்குக்குடிநீர் வழங்கும் திட்டம் —			
(1) குறைந்த அளவு தேவைத் திட்டம்			84.129
(எ) (நிலவிய நிலையின் படி).			
(பி) குறைந்த அளவு தேவைத் திட்டம் (மறு வகை செய்யப்பட்டது).	1,888	6.8580	763.022
(2) கிராம வளர்ச்சி விரைவுத் திட்டம்.	2,652	9.8470	2515.510
மொத்தம் (சி) ..	4,540	16.7050	3362.661

விவரம்.	முடிக்கப் பட்ட குடியிருப்புகள்.	பயன் அடைந்தோரின் எண்ணிக்கை. (இலட்சத்தில்.)	ஏற்பட்ட செலவு. (ரூபாய் இலட்சத்தில்.)
(1)	(2)	(3)	(4)
(டி) தன்னிறைவுத் திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் 3-லிருந்து 5 ஆம் வகை வரையிலான ஒன்றியங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்—			
1 (ஏ) குறைந்த தேவைத் திட்டம் (நிலவிய நிலையின்படி).	1,034	3.6190	440.058
(பி) குறைந்த அளவு தேவைத் திட்டம் (மறுவகை செய்யப் பட்டது).	328	1.1480	42.697
2 கிராம வளர்ச்சி விரைவுத் திட்டம்.	65	0.2275	35.418
மொத்தம் (டி) ..	1,427	4,9945	518.173
பெருமொத்தம் : (ஏ)—(பி)—(சி)—(டி)	13,709	50.6115	10022.108

1982–83 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியத்தின்சாதனைகள் :

கிராம குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பணியை தமிழ் நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம், மாநில-மத்திய அரசின் நிதி உதவியுடன் குறைந்த அளவு தேவைத் திட்டம், கிராம வளர்ச்சி விரைவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் தனது பணியாளரமைப்பை முடுக்கிவிட்டு செயல்படுத்தியது. 1982–83 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம் குடிநீர் இல்லாத பிரச்சினைக்குரிய

குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கியதில் எய்திய சாதனைகளைப் பின்வரும் அட்டவணையிலிருந்து அறியலாம் :

விவரம்.	முடிக்கப் பட்ட குடியிருப்புகள்.	பயன டைந்தோரின் எண்ணிக்கை.	ஏற்பட்ட செலவு.
(1)	(2)	(3)	(4)
		(இலட்சத்தில்.)	(ரூபாய் இலட்சத்தில்.)
(ஏ) 1, 2 ஆம் வகைக் குடியிருப்புகளுக்குச் குடிநீர் வழங்கல் :			
1. குறைந்த அளவு தேவைத் திட்டம்.	121	0.4235	173.023
2. கிராம வளர்ச்சி விரைவுத் திட்டம்.	31	0.1085	37.694
மொத்தம் (ஏ) ...	152	0.5320	210.717
(பி) தன்னிறைவுத் திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் 69 ஒன்றியங்களிலுள்ள 3-லிருந்து 5 ஆம் வகை வரையிலான குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கல்.:			
(1) (எ) குறைந்த அளவு தேவைத் திட்டம் (நிலவிய நிலையின்படி).	158	0.5530	216.952
(பி) குறைந்த அளவு தேவைத் திட்டம் (மறுவகை செய்யப் பட்டது).	217	0.7595	86.888
(2) கிராம வளர்ச்சி விரைவுத் திட்டம்.	5	0.0175	16.877
மொத்தம் (பி) ..	380	1.3300	320.717

விவரம்.	முடிக்கப் பட்ட குடியிருப்புகள்.	பயன் அடைந்தோரின் எண்ணிக்கை. (இலட்சத்தில்.)	ஏற்பட்ட செலவு, (ரூபாய் இலட்சத்தில்.)
(1)	(2)	(3)	(4)
(சி) தன்னிறைவுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 150 ஒன்றியங்களிலுள்ள, 3-லிருந்து 5 வகை வரையிலான குடியிருப்பு களுக்குக் குடிநீர் வழங்கல் :			
(1) (ஏ) குறைந்த அளவு தேவைத் திட்டம் (நிலவிய நிலையின்படி)			
(பி) குறைந்த அளவு தேவைத் திட்டம் (மறுவகை செய்யப் பட்டது).	1,148	4.0180	356.002
(2) கிராம வளர்ச்சி விரைவுத் திட்டம்.	962	3.3670	1046.119
மொத்தம் (சி) ..	2.110	7.3850	1402.121
(டி) தன்னிறைவுத் திட்டத்தின் III ஆம் கட்டத்தின் கீழ் 159 ஒன்றியங்களிலுள்ள, 3-லிருந்து 5 வகை வரையிலான குடியிருப்பு களுக்குக் குடிநீர் வழங்கல் :	1,034	3.6190	440.058
(1) (ஏ) குறைந்த அளவு தேவைத் திட்டம் (நிலவிய நிலையின்படி)			
(பி) குறைந்த அளவு தேவைத் திட்டம் (மறுவகை செய்யப் பட்டது).	328	1.1480	42.697
(2) கிராம வளர்ச்சி விரைவுத் திட்டம்.	65	0.2275	35.418
மொத்தம் (டி)	1,427	4.9945	518.173
பெரு மொத்தம் : (ஏ) (பி) (சி) (டி)	4,069	14.2415	2451.728

வறட்சி துயர்தணிப்புத் திட்டம் :

1982-83-ஆம் ஆண்டில், பருவ மழை பொய்த்ததால் மாநிலம் முழுவதும் வறட்சி நிலவியது. இப்பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக அரசு உடனடி துயர்தணிப்பு நடவடிக்கையாக கைப்பம்புகளுடன் கூடிய 21,000 ஆழ் துளைக் கிணறுகளை வெட்ட முடிவு செய்தது. தொடக்கத்தில் குறிப்பாக ஒதுக்கீடு ஏதும் செய்யவில்லை என்றாலும், வறட்சிப் பாங்கான பகுதிகளுக்குப் பயனளிக்கும் வகையில் முன்னுரிமை அளிக்கப்பட்டது 1982-83 ஆம் ஆண்டில் கிராமப் பகுதிகளிலும், நகரப்பகுதிகளிலும் வெட்டத் திட்டமிட்ட 21,000 ஆழ் துளைக் கிணறுகளும் 9,688 கிணறுகள், தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியத்தால் 1982—83 இல் ரூ. 24.22 கோடி செலவில் வெட்டப்பட்டு உள்ளன.

அத்தியாயம்—23

சமுக நலத்துறை

அத்தியாயம் 13

சமூக நலத்துறை

ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலன் :

பள்ளிகள் :

ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்தைப்போற்றி வரும் இத்துறை 947 ஆதி திராவிடர் பள்ளிகளை நடத்தி வருகிறது. இவற்றுள் 8 மேல்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் 26 ஆகவும், நடுநிலைப் பள்ளிகள் 71 என்ற எண்ணிக்கையில் 842 பள்ளிகள் தொடக்கப்பள்ளிகளாகவும் உள்ளது. இத்தொடக்கப்பள்ளிகளில் 100 பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகளாகச் செயற்படுகின்றன. ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும், மாணவ, மாணவியரைப் பற்றிய விவரம் பின்வருமாறு :—

மாணவர்கள்	95,721
மாணவியர்கள் ..	82,272
மொத்தம்	1,77,993

ஊக்கப் பரிசுகள் :

ஆதி திராவிடர் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் பின்வரும் ஊக்கப் பரிசுகள் வழங்கப் படுகின்றன.

(1) ஒவ்வோர் ஆண்டும் மிக அதிக சதவீதத்தில் மாணவர் வருகையை முறையாகக் காட்டுகிற தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றின் தலைமை ஆசிரியர்களுக்கு முறையே ரூபாய் 25, ரூபாய் 15, ரூபாய் 10, மதிப்புள்ள வெள்ளிப் பதக்கங்கள் வழங்கப்படும்.

(2) ஒவ்வோர் மாவட்டத்திலும் முறையே ஐந்தாம் வகுப்பு எட்டாம் வகுப்புத் தேர்வுகளில் மிக அதிக சதவீதத்தில் மாணவர்கள் வெற்றிபெறும் தொடக்க, நடுநிலைப் பள்ளிகள், ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 200 மதிப்புள்ள வெள்ளிக் கேடயம் பரிசாக வழங்

கப்படும். ஆதி திராவிடர் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் முறையே ஐந்தாம் எட்டாம் வகுப்புகளில் மிக அதிக சதவீத மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சிபெறும் சிறந்த மாணவ, மாணவி யருக்கு முறையே ரூபாய் 15, ரூபாய் 10 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கங்கள் பரிசாக வழங்கப்படும்.

(3) ஆதி திராவிடர் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் மிக அதிக நாட்கள் பள்ளிக்கு வந்த முதன்மையான மாணவர் மூவருக்கு ரூபாய் 25, ரூபாய் 15, ரூபாய் 10 மதிப்புள்ள துணிகள் பரிசாக வழங்கப்படும்; ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளி களில் பயிலும் மாணவர்களைப் பொறுத்தவரையில் இப்பரிசு கள் மாணவர் மூவருக்கு முறையே ரூபாய் 35, ரூபாய் 25, ரூபாய் 15 மதிப்புள்ள துணிகளாக வழங்கப்படும்.

(4) மாவட்ட அளவில் ஒவ்வோர் ஆண்டில் பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் மிக அதிகமான சதவீத மதிப்பெண் பெற்ற முதல் ஆதி திராவிட மாணவர் மூவருக்கும் மாணவியர் மூவருக்கும் முறையே ரூபாய் 150, ரூபாய் 100, ரூபாய் 50 மதிப்புள்ள அஞ்சலகச் சேமிப்புக் கணக்கு வைப்பாகப் பரிசு வழங்கப்படும். மாநில அளவில், ஒவ்வோர் ஆண்டும் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் மிக அதிகமான சதவீத மதிப்பெண் பெற்ற முதல் ஆதி திராவிட மாணவர், மாணவியர் இருவருக்கு முறையே ரூபாய் 500, ரூபாய் 250 மதிப்புள்ள அஞ்சலகச் சேமிப்புக் கணக்கு வைப்பாகப் பரிசு வழங்கப்படும்.

(5) பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் மிக அதிகமான மதிப் பெண்கள் பெற்று வெற்றிபெற்ற சிறந்த ஆதி திராவிடர் நலப் பள்ளிக்கு ரூபாய் 200 மதிப்புள்ள வெள்ளிக்கேடயம் பரிசாக வழங்கப்படும். மேலும், அப்பள்ளித் தலைமை ஆசிரியருக்கும் ரூபாய் 50 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கம் வழங்கப்படும்.

(6) ஆதி திராவிடர் நலப்பள்ளிகளில் ஒவ்வொரு பள்ளி மாணவருக்கும் (1) நன்னடத்தை (2) கல்வி நீங்கலான ஏனைய பணிகள் தரப்படும். விளையாட்டு முதலிய நல்லியல்புகளுக்காக ரூபாய் 15 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கம் வழங்கப்படும், ஆசிரி யர் குழுவொன்றினால் இம்மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் மாவட்ட அளவில், எட்டாம் வகுப்பில் மிக அதிகமான சதவீத மதிப்பெண் பெற்ற முதல் மாணவர் இருவருக்கு முறையே ரூபாய் 15, ரூபாய் 10 மதிப்புள்ள புத்தகங்கள் வழங்கப்படும்.

மாணவியருக்கு உடைமைகள் :

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளிலோ இத்துறை நடத்தும் அரசினர் மாணவர் இல்லங்களிலோ தங்கிப் படிக்கும் எல்லா மாணவியருக்கும் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் ஒவ்வொரு கல்வியாண்டின் தொடக்கத்திலும் இரண்டு இணை உடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

பல்வேறு வயதுத் தொகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் உடைகளின் மதிப்பு :

வயதுத் தொகுதி.	வழங்கப்படும் இரண்டு இணை உடைகளுக்கு வரையறுக்கப் பட்ட உயரளவு விலை.
(1)	(2).
	ரூபாய்.
(1) 5 வயதிலிருந்து 9 வயது வரையில்	18
(2) 9 வயதிலிருந்து 11 வயது வரையில்	18
(3) 12 வயதிலிருந்து 14 வயது வரையில்	30
(4) 15 வயதும் மேலும். .	40

மாணவர்களுக்கு உடைகள் :

ஆதி திராவிடர் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் தொடக்கத்திலிருந்து 8 ஆம் வகுப்பு வரையிலும் எல்லா மாணவர்களுக்கும் இத்துறையின் அரசினர் மாணவர் இல்லங்களில் தங்கிப்படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இரண்டு இணை உடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இணை உடையின் விலை ரூபாய 10 ஆகும்

பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள், எழுது பலகைகள் வழங்குதல்.

ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலப்பள்ளிகளில் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள், எழுதுபலகைகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலும் மாணவர் அனைவருக்கும் எழுதுபலகைகள் வழங்கப்படுகின்றன. III முதல் 10 ஆம் வகுப்பு வரையிலும் மாணவர்களுக்கு குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன. 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையில்

பயிலும் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன். 1982—83 ஆம் ஆண்டில் பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள் எழுதுபலகைகள் ஆகியவற்றை வழங்குவதற்காக ரூபாய் 35.52 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பள்ளிகளில் மேம்பாடு

1982—83 ஆம் ஆண்டில் பழங்குடியினர் தங்கிப்படிக்கும் அரசினர் தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்டன. 1982—83 ஆம் ஆண்டில் அரசினர் பழங்குடியினர் தங்கிப்படிக்கும் தொடக்கப் பள்ளிகள் மூன்று, நடுநிலைப் பள்ளிகளாகவும், இரு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டன. 1982—83 ஆம் கல்வியாண்டில் ஒரு ஆதி திராவிடர் நலத் தொடக்கப் பள்ளியும், 9 ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியும், 4 ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியும், அடுத்த உயர்நிலைக்கு உயர்த்தப்பட்டன. ஆதி திராவிடர் நலப்பள்ளிகளுக்கும், அரசினர் பழங்குடியினர் தங்கிப் படிக்கும் பள்ளிகளுக்கும் பல்வேறு தரங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டனர்.

மாண்புமிகு முதலமைச்சரின் நண்பகல் சத்துணவுத் திட்டம்

1—7—1982 ஆம் நாளுக்கு முன்னர் ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலப்பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமே நாளொன்றுக்கு 22 பைசா செலவில் மதிய உணவு வழங்கப்பட்டு வந்தது. 1—7—1982 ஆம் நாளிலிருந்து சென்னை மாநகரம் நீங்கலாக மற்ற இடங்களில் ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் 5 முதல் 9 வயதுத் தொகுதியிலுள்ள மாணவர்கள் அனைவருக்கும் நாளொன்றுக்கு 0.45 பைசா செலவில் நண்பகல் உணவு வழங்கும் புதிய சத்துணவுத் திட்டத்தை அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்தது. பின்னர், இத்திட்டமானது 10 முதல் 14 வயதுவரையிலுள்ள வயதுத் தொகுதியினருக்கும் நீட்டிக்கப்பட்டது. 15—9—1982 ஆம் நாளிலிருந்து சென்னை மாநகரமும் இத் திட்டத்தில் இடம் பெறலாயிற்று. மொத்தம் செலவிடப்படும் 45 பைசாவில் உணவுப் பொருள் வழங்குதுறை, கூட்டுறவுச் சங்கம் வழங்கும் அரிசி, எண்ணெய், பருப்பு ஆகியவற்றிற்காக 34 பைசா செலவிடப்படுகின்றது. மீதமுள்ள 11 பைசாவானது காய்கறிகள், துணைப்பொருள்கள், விறகு ஆகியவற்றிற்காக செலவிடப்படுகின்றன. நண்பகல் சத்துணவானது 1,070 மையங்

களில் வழங்கப்படுகின்றன. இதனால், ஆதி திராவிடர்-பழங் குடியினர் நலப்பள்ளிகள் உட்பட வனத்துறையால் நடத்தப்படும் 14 பள்ளிகளில் பயிலும் 1,72,636 மாணவர்களும் பயனடை கின்றனர்.

ஆதி திராவிடர்களுக்குரிய அரசினர் மாணவ இல்லங்கள் :

இம்மாநிலத்தில் ஆதி திராவிட மாணவர்களுக்காக 675 அரசினர் மாணவர் இல்லங்கள் உள்ளன. இவற்றில் தங்கிப் பயில அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 42,978 ஆகும் கல்லூரி மாணவர்களுக்கான 38 மாணவர் இல்லங்களும், தொழிற் கல்வி மாணவர்களுக்கான 6 மாணவர் இல்லங்களும் இதில் அடங் கும். மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தவும், தேர்வுகளில் சிறப்புற்றுத் திகழ் பவர்களுக்குப் பயிற்சிந்தரவும் கல்வி புகட்டவும், 948 பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் உள்ளனர். இவர்கள் நீங்கலாக, சென்னை, திருநெல்வேலி, சேலத்திலுள்ள அரசினர் கல்லூரி மாணவர் இல்லங்களில் (ஒவ்வொன்றுக்கும் ஒன்று வீதம்) 5 பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் உள்ளனர். சென்னை மாநகரிலுள்ள அனைத்து உயர்நிலைப் பள்ளி அரசு மாணவர் இல்லங்களில் உணவுக கட்டணத்தை திங்களொன்றுக்கு ரூபாய் 45-லிருந்து ரூபாய் 60 ஆகவும் கல்லூரி, தொழிற்கல்வி மாணவர் இல்லங் களுக்கு திங்களொன்றுக்கு ரூபாய் 80-லிருந்து ரூபாய் 95 ஆகவும் புறநகர்ப்பகுதிகளிலுள்ள கல்லூரி, தொழிற்கல்வி மாணவர்களுக் கான உணவுக் கட்டணத்தை திங்களொன்றுக்கு ரூபாய் 65-லிருந்து ரூபாய்.80 ஆகவும் அரசு உயர்த்தியுள்ளது.

தன்னிறைவுத் திட்டம் :

சென்னை மாநகரம் நீங்கலாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 வளர்ச்சி வட்டாரங்கள் வீதம் இம்மாநிலத்தில் மொத்தம் 69 வளர்ச்சி வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டம் தொடங்கப் பட்டது. 1980—81 ஆம் நிதியாண்டிற்குள் தெரிந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டத்தைச் செயற் படுத்துவதென அரசு தீர்மானித்துள்ளது. ஊரக வளர்ச்சி- உள்ளாட்சித் துறை அதிகாரிகளால் தெரிந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி

வட்டாரங்களில் பின்வரும் இன்றியமையாத அடிப்படை வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன :—

1. குடிநீர் வசதிகள் செய்து கொடுத்தல்.

2. இணைப்புச் சாலைகள் அமைத்தல்.

3. சிறு பாலங்கள்.

4. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும், இடுகாடுகளுக்கும் நடைபாதை அமைத்தல்.

5. சிறு பாசனச் சங்கங்களை மேம்படுத்துதல்.

6. கிராம மருந்தகங்கள் அமைத்தல்.

7. மகப்பேறு, குழந்தை நலன் பாதுகாத்தல்.

8. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்.

9. ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குதல் (கிராம வீட்டு வசதித் திட்டம்).

10. வீடுகளுக்கு மின்னிணைப்பு வழங்குதல்

இத்துறை 1982—83 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்திற்காக ரூபாய் 74.03 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும், இலவசமாக வீட்டுமனைகளை வழங்குதல்.

ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் இலவசமாக வீட்டுமனைகளை ஒதுக்குவதற்காக தனியார் நிலங்களைக் கையகப்படுத்தும் திட்டம் 1982—83 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டது. 6,377 ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு இலவசமாக வீட்டுமனைகளை ஒதுக்குவதற்காக மாவட்டங்களில் 1982—83 ஆம் ஆண்டில் மொத்தம் 593.53 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 31—3—1983 ஆம் நாள் வரையில் ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு வழங்குவதற்காக 4,00,228 வீட்டுமனைகளை வாங்குவதற்காக மொத்தம் 25,236.87 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதற்காக இதுவரையிலும் ரூபாய் 1,158.29 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் — பழங்குடியினருக்கான பொது வீட்டு வசதி திட்டம்.

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் செயற்படுத்த வேண்டிய வீட்டுவசதித் திட்டம் தொடர்பாக 1982–83 ஆண்டு அரசு பின்வருமாறு ஆணை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதிக் கழகம் வழங்கும் நிதி உதவியைப் பெறுபவர்களே கட்டிடப்பகுதி 201 சதுர அடி அளவினைக்கொண்டு வீடுகளைக் கட்ட வேண்டும். தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதிக் கழகம், தகுதி உதவி பெறுவோரின் பங்குத் தொகையும் சேர்த்து 4,000 ரூபாயாக அமையும். ஆனு மதிக்கப்பட்ட வீட்டுவசதித் திட்டத்தின் வடிவமைப்பில் அமைய வேண்டும்.

ஏற்கெனவே, பட்டா வழங்கப்பட்டதும் கையகப்படுத்தப் பட்ட அல்லது ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டு மனைகளில் மட் டுமே வீடுகளைக் கட்ட வேண்டும். தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதிக்காகவும் வழங்கும் நிதி உதவி, அக்கழகத்தில் பொரு ளாதார, வளர்ச்சி நிதி உதவி பெறுவோர்க்கு பிரிவின் மாவட்ட அதிகாரிகள் மூலம் வழங்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதிக் கழகத்தின் பொறி யியற் பிரிவுப் பயனாளர்களுக்குத் தேவைப்படும் தொழில் நுட்ப மேற்பார்வை, ஏனைய உதவிகளை வழங்க வேண்டும்

பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம்:

பழங்குடியினர் பகுதி துணைத்திட்டம் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து பழங்குடியினர் வளர்ச்சி நடவடிக்கைகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. பழங்குடியினர் பகுதி துணைத்திட்டமானது 1976 ஆம் ஆண்டிலிருந்து ஒன்பது ஒருங் கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சிப் பகுதிகளில் செயற்படுத்தப் படுகின்றது. சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை, ஏர் . காடு, கல்வராயன் மலை, அறநூற்று மலை, பச்சைமலை, வட ஆற்காட்டிலுள்ள சவ்வாது மலை, தென் ஆற்காட்டிலுள்ள கல் ராயனமலை, தருமபுரியிலுள்ள சித்தேரி மலை, திருச்சிராப் பள்ளியிலுள்ள பச்சைமலை ஆகியவையாகும். பழங்குடியினர் பகுதி துணைத் திட்டத்தின்கீழ் மொத்தம் 1,45,146 (1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி) பழங்குடி

யினர் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர். பழங்குடியினர் பகுதி துணைத் திட்டத்தின்படி 1980–85 ஆம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செலவிடப்பட்ட தொகையின் அளவு ரூ.2,167 இலட்சமாகும். 1980–81 ஆம் ஆண்டின் திட்ட முதலீடு ரூ.345.25 இலட்சம். 1981–82 ஆம் ஆண்டிற்கான திட்ட முதலீடு ரூ. 3,920.65 இலட்சம் ; 1982–83 ஆம் ஆண்டிற்கான திட்ட முதலீடு ரூ. 451,36 இலட்சம் என்றதாக உள்ளன. 1981–82 ஆம் ஆண்டின் செலவு ரூ. 367.25 இலட்சமாகும்.

சிறப்பு உள்ளடக்கத் திட்டம் :

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மொத்தமுள்ள 18 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களில் 9 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேல் மீட்டு வருவதற்காக 1980–85 ஆம் ஐந்தாண்டிற்கான ஆதி திராவிடர் நல சிறப்புக்கூறு திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு தயாரித்துள்ளது. 1980–85 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர் வளர்ச்சிச் செயல்முறைகளின் அடிப்படையில் இத்திட்டம் அமைந்துள்ளது. இம்மாநிலத்தில் 1980_81 ஆம் ஆண்டிலிருந்தே இத்திட்டம் செயற்பட்டு வருகின்றது. 1·60 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேலே மீட்டு வருவதும், 1982–83 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளுடன் குடிநீர் வசதி, பள்ளிக்கூட வசதி, துப்புரவு நலஉதவி, மின் இணைப்பு வழங்குதல், முக்கிய கிராமங்களுக்கு அணுகு சாலைகளை அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதும் 1982–83 ஆம் ஆண்டிற்கான இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டிலுள்ள ஆதி-திராவிடர் மேம்பாட்டிற்காக பல்வேறு துறைகள் மேற்கொண்டுள்ள முயற்சிகளும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. 1980—85 ஆம் ஆண்டளவில் சிறப்பு உள்ளடக்கம் என்னும் இத்திட்ட மதிப்பீட்டின் அளவு ரூ. 535 கோடியாகும்.

முதியோர் உதவித் தொகை :

பிழைப்புக்கு வழியின்றியும், உற்றார் உறவினரின்றியும் அல்லியுறும் முதியவர்களின் துயர் துடைத்து சமூகத்தில் பாது

காப்பளிக்க 1—4—1962 ஆம் ஆண்டு முதல் முதியோர்க்கு உதவித்தொகைத் திட்டத்தை அரசு கொண்டுவந்தது.

முதியோருக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், இம்மாநிலத்தில் பின்வரும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன :—

(a) முதியோர் உதவித் தொகை (சாதாரணமானவர்கள்);

(b) உடல் ஊனமுற்று ஆதரவற்றிருக்கும் முதியோருக்கு உதவித் தொகை ;

(c) ஆதரவற்ற விதவைகளுக்கு முதியோர் உதவித் தொகை ;

(d) ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு முதியோர் உதவித் தொகை.

முதியோர் உதவித் தொகை : (சாதாரணமானவர்கள்)

இத்திட்டம் 1962 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. 65-ம் அதற்கு மேற்பட்டு வயதடைந்தும் ஆதரவற்றும் இருப்பவர்கள் இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறுவதற்குத் தகுதியுடையவர்கள். 31—3—1983 அன்றுள்ளபடி இத்திட்டத்தின்கீழ் 1,10,063 பேர்களுக்கு உதவித் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்ற முதியோருக்கு உதவித் தொகை

கண்பார்வையின்மை, தொழுநோய், மனநோய், பக்கவாதம் அல்லது கைகால் இழப்பு காரணமாகப் பிழைப்பு நடத்த இயலாத ஆதரவற்ற 60 வயதுடையவர்களும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களும் 1962 முதல் இந்த உதவித் தொகை பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர். அரசு, 1974-ல் இந்த வயது வரம்பை 60-லிருந்து 55ஆகக் குறைத்துள்ளது. 1975 ஆம் ஆண்டு முதல் அரசு இந்த வயது வரம்பை மேற்கொண்டும் 45 ஆகக் குறைத்துள்ளது. அதன்படி 45 வயதுள்ள, 45 வயதுக்கு மேற்பட்ட, உடல் ஊனமுற்றவர்கள் இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் எனினும், முற்றிலும்

பார்வையிழந்தவர்களுக்கு வயது வரம்பேதுமில்லை. உடல் ஊனமுற்றவர்களிடமிருந்து வந்த விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் பொருட்டு, மாவட்ட ஆட்சியர், மாவட்ட மருத்துவ அதிகாரி, மாவட்ட சமூக நல அதிகாரி ஆகியோரை உறுப்பினர்களாகக்கொண்டு அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் குழு ஒன்றை அமைத்துள்ளது ; வயது குறித்த விதிகளைக் கருத்திற் கொள்ளாமல், அந்தந்த நபருக்குள்ள துன்பத்தைக் கருதிப் பார்த்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்குகிறது. 31—3—1983 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 13,373 ஆகும்.

விதவையருக்கு முதியோர் உதவித் தொகை

ஆதரவற்ற விதவையருக்கும் 1975 ஆம் ஆண்டில் அரசு இத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை அளித்தது. தொடக்கத்தில் 50 வயது என வயது வரம்பு வரையறுக்கப்பட்டிருந்தது; இது பின்னர் 1978 முதல் 40 வயதாகக் குறைக்கப்பட்டது. அதன்படி 40 வயதுள்ள, 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற விதவையர் இந்த உதவித்தொகை பெறுவதற்குத் தகுதியுடையவர்கள். 31—3—1983 அன்றுள்ளபடி இத்திட்டத்தின்கீழ் 45,903 பேர்களுக்கு உதவித்தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

வேளாண் தொழிலாளருக்கு முதியோர் உதவித் தொகை

ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும் 15–3–1981 முதல், முதியோர் உதவித்தொகை அளிக்கப்பட்டு வருகிறது. 60 வயதுள்ள அதற்கு மேற்பட்ட ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெறுவதற்குத் தகுதியுடையவர்கள். 31—3—1983 அன்றுள்ளபடி இத்திட்டத்தின்கீழ் 30,000 பேர்களுக்கு உதவித்தொகை அனுமதிக்கப் பட்டுள்ளது.

உதவித் தொகை அளவு :

இத்திட்டம் தொடங்கியது முதல், திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 வழங்கப்பட்டது. பின்னர் 1—4—1979 முதல் இது திங்கள் ஒன்றுக்கு 25 ரூபாயாக அதிகரிக்கப்பட்டது. மீண்டும் 1—4—1982 முதல் திங்கள் ஒன்றுக்கு 35 ரூபாயாக அதிகரிக்கப் பட்டது.

இந்த உதவித் தொகை வழங்குவதோடு, முதியோர் உதவித் தொகை பெறும் ஒவ்வொருவருக்கும், ஆண்டுக்கு இருமுறை, அதாவது, சுதந்திர தினத்தன்றும், பொங்கல் பண்டிகை அன்றும் ஒரு புடவையும்/வேட்டியும் வழங்கப்படுகிறது. முதியோர் உதவித்தொகை பெறுவோருக்கு, இலவசமாக உடை வழங்கும் இத் திட்டம், 1979 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று முதற்கண் கொண்டுவரப்பட்டது. மேலும், இந்த உதவித் தொகை பெறுவோருக்கு, நபர் ஒருவருக்கு, வாரம் ஒன்றுக்கு, ஒரு கிலோகிராம் நேர்த்திரக அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. '' ஹூப்பார் திட்டம் '' (WHOAP FAR Scheme) எனப்படும் இத்திட்டம் 1—11—1980 முதல் செயலாக்கப்படுகிறது. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின்கீழ் 15—1—1983 முதல் முதியோர் களுக்கும் சத்துணவு வழங்கப்படுகிறது. இது தொடர்பான பிற செலவு நீங்கலாக உணவுக்காகும் செலவு 90 காசாகும். குழந்தை நல நிலையங்களில் முதியோர்களுக்கு உணவு அளிக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் மதிய உணவு பெறும் முதி யோர்கள் மேலே குறிப்பிட்ட ''ஹூப்பார் திட்டத்தின் '' கீழ் வாரமொன்றுக்கு ½ கிலோ அரிசி பெறத் தகுதியானவர்களாவர். மதிய உணவு பெறாத அல்லது பெற இயலாத மற்றவர்கள் தற் போதுள்ளவாறு ஒரு கிலோ அரிசி பெறத் தகுதியுடையவர் களாவர். இதனுடன் இணைக்கப்பட்ட விவர அட்டவணையில் காட்டப்பட்டவாறு சுமார் 1,59,850 பேர் மதிய உணவு பெறு கிறார்கள். 31—3—1983 ஆம் நாள் நிலவரப்படி நான்கு வகை களின் கீழ் அனுமதிக்கப்பட்ட முதியோர்களின் எண்ணிக்கை 1.99 இலட்சமாகும். தற்போதுள்ளவர்களின் எண்ணிக்கை 1.97 இலட்சமாகும்.

1982–83 (1983 ஜனவரி வரை) இல் மேற்சொன்ன திட்டங் களைச் செயற்படுத்துவதற்காக ஏற்பட்ட செலவு பற்றிய விவரம் வருமாறு :—

	ரூ.
(1) முதியோர் உதவித் தொகை (சாதாரணமானவர்கள்) ..	3,59,36,317.11
(2) முதியோர் உதவித்தொகை (உடல் ஊனமுற்றோர், ஆதர வற்ற விதவைகள்)	1,89,67,707.40

	ரூ.
(3) முதியோர் உதவித்தொகை (வேளாண்மைத் தொழிலாளர்கள்)	99,64,606.80
(4) 1982 சுதந்திர தினத்தன்று வேட்டி/புடவை வழங்கியது.	31,32,786.15
(5) 1983 பொங்கல் அன்று வேட்டி/புடவை வழங்கியது..	37,54,482.05
(6) ''ஹூபார்'' திட்டத்தின் கீழ் முதியோர்களுக்கு இலவச அரிசி வழங்கியது ..	10,51,599.85
(7) 1982—83-ல் அனுமதிக்கப்பட்டு முந்தைய நிகழ்ச்சிகளின் போது வழங்கப்பட்ட உடைகளுக்கான உதவித் தொகை முதலியவை குறித்து நிறுத்தி வைக்கப்பட்ட தொகை	27,72,164.90

சமூக நலன்

குழந்தை நல நிலையங்கள் :

1962லிருந்து இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் குழந்தை நலத்திட்டம் கிராமப்புற மகளிருக்கும் அவர்களின் 2 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் பயனளிக்கிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருக்கின்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் தற்போது முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தை தமிழ்நாடு அரசு 1—7—1982 லிருந்து செயல்படுத்தி வருகிறது.

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் தொண்டு நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே தமிழ்நாடு அரசு, தொண்டு நிறுவனங்களுக்கு, ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு 50 காசுகள் வீதம் ஆண்டு முழுவதற்கும் உதவி அளித்துள்ளது. இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு, தொண்டு நிறுவனங்களுக்கு 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 0.55 இலட்சத்திற்கு அனுமதியளித்தது.

இத்தொண்டு நிறுவனங்களின் மூலம் மொத்தம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

	திட்ட இலக்கு.	
	இலக்கு.	சாதனை.
1982—83	இல்லை	2,400
	நிதி தொடர்பானஇலக்கு.	
	இலக்கு.	சாதனை.
	(இலட்சத்தில்.)	
	8.69	0.55

குழந்தைகளுக்கு மதிய உணவு அளிப்பதுடன் கூடுதலாக கிராமப் பகுதிகளில் 2 முதல் 4 வரை வயதுடைய குழந்தைகளுக்கு மொழி வளர்ச்சிக்காக தமிழ் ஆங்கிலத்தைக் கற்பிக்கவும் அடிப்படை கணிதவியலைப் புரிந்து கொள்ளவும் ஆக்கப்பூர்வமான பணிகளைக் கற்றுக் கொடுக்கவும் சுகாதாரப் பழக்க வழக்கங்களை உடல் மன வளர்ச்சிக்காக ஏற்படுத்தவும் தமிழ்நாடு அரசு, பாலர் பள்ளிகள் தொடங்கும் திட்டம் ஒன்றையும் வகுத்துள்ளது. முதல் நடவடிக்கையாக, 1982—83 இல் அரசு சமூக நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 4,343 பாலர் பள்ளிகளைத் தொடங்க ஆணையிட்டுள்ளது. பாலர் பள்ளிகளில், கல்விச் சாதனங்கள், படவிளக்கங்கள் கொண்ட புத்தகங்கள், வரைபடங்கள் மாதிரிகள், பிரமிட் அமைப்புகள் வெளிப்புறமாக அளவெடுக்கும் கருவிகள், சிலேட்டுகளில் வரைதல் கணிதவியல், கோளவடிவங்கள் ஆகியவற்றின் மூலமாகவும், தமிழ் ஆங்கிலத்திலும், குழந்தைகளுக்கு கற்பிக்கப்படும், இச்சாதனங்கள் ஒவ்வொரு பாலர் பள்ளிகளுக்கும் ரூ. 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐநூறுக்கு மட்டும்) செலவில் வாங்கப்படும்.

இத்தகைய பாலர் பள்ளிகளை மேற்பார்வையிட்டு நெறிமுறைப் படுத்தும் பொறுப்பு பள்ளிக் கல்வித்துறையைச் சேர்ந்ததாகும். பள்ளிக் கல்வித்துறை இயக்குநரைத் தலைவராகக் கொண்ட தனிக்குழு, இந்தப் பாலர் பள்ளிகளுக்கான பாடத்திட்டங்களையும் வகுத்தது.

பாலர் பள்ளித் தொடங்குவோருக்குப் பயிற்சி அளிப்பதற்காக் இம்மாநிலத்தின் வெவ்வெறு பகுதிகளில் செயல்படுகின்ற 31 கல்வி-சமூக நல நிறுவனங்களிலிருந்து முக்கியமானவர்கள் 46 பேரை, பள்ளிக் கல்வி இயக்குநர் தேர்ந்தெடுத்து, கோயம் புத்தூரிலுள்ள ஸ்ரீஅவிநாசிலிங்கம் மனையியல் மகளிர் கல்லூரியில் 21 நாட்கள் பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சியை முடித்த பின்னர், அவர்கள் தங்களுடைய நிறுவனங்களில், பாலர் பள்ளித் தொடங்குவோருக்கு ஒரு திங்கள் பயிற்சி அளித்துள் ளனர்.

இன்றுவரை நர்சரி பள்ளி தொடங்கியோர் 4140 பேர் களுக்கு பாலர் பள்ளிப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

வருங்காலத்தில் மாநிலம் முழுவதும் பல பாலர் பள்ளிகள் படிப்படியாகத் தொடங்கப்படும்.

திட்ட இலக்கு.		நிதி இலக்கு.	
1982—83			
இலக்கு	சாதனை.	இலக்கு.	சாதனை.
4,343	4,140		ரூ. 5,85,712

1982—83 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் இப்புதிய திட்டத்திற்கு ரூ. 10.39 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் பால்வாடி பள்ளிகள் :

1976 ஆம் ஆண்டிலிருந்து தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, திருச்சி ஆகிய மாவட்டங்களில் பழங்குடி யினர் துணைத் திட்டத்தின் கீழ், 169 பால்வாடி பள்ளிகள் செயல்பட்டு வந்தன. தென் ஆர்க்காடு, மதுரை, கன்னியாகுமரி, நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார், சேலம் மாவட்டங்களில் ஆதிவாசிகள் நலத்திட்டத்தின் கீழ் 1976லிருந்து செயல்பட்டு வந்த 47 பால்வாடி பள்ளிகள் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்துடன் 1—7—1982லிருந்து இணைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் (கிராமப்பகுதி) :

2+ முதல் 4+ வயது வரையுள்ள குழந்தைகளுக்கு பள்ளி செல்வதற்கு முன்பே கல்வியளிப்பதற்கும், ஆரோக்கியத்தைக் கவனிப்பதற்கும், குறைந்த ஊட்டமுள்ள உணவுப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கும் தமிழ்நாட்டில், 1—7—1982 லிருந்து மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவுத்திட்டம் கொண்டு வரப்பட்டது. தற்போது கிராமப்பகுதிகளில் மொத்தம் 22,910 குழந்தை நல நிலையங்கள் இயங்கி வருகின்றன. நமது மாநிலத்தின் கிராமப் பகுதிகளில் நாள் ஒன்றுக்கு 2 + முதல் 4 + வரையிலான வயதுடைய பயனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 19.5 இலட்சம் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ், 68,738 மகளிருக்கு வேலை வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் குழந்தை நல அமைப்பாளர்களாகவும், குழந்தை நல உதவியாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். 22,910 குழந்தை நல அமைப்பாளர்களில், 4,561 பேர் ஆதி திராவிடர் பழங்குடியினர், 851 பேர்கள் விதவைகள், 642 பேர் ஆதரவற்ற மகளிர் ஆவர். இதே போன்று 45,818 குழந்தை நல உதவியாளர்களில், 8,919 பேர் ஆதி திராவிடர் பழங்குடியினர், 7,442 பேர் விதவைகள், 1,498 பேர் ஆதரவற்றவர்கள் ஆவர்.

இத்திட்டம் 3 முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது :

(i) சத்துணவு (ii) பள்ளிப்படிப்பிற்கு முந்தைய கல்வி (iii) நல்வாழ்வு.

(i) சத்துணவு :

இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்குக் கீழ்காணும் விதத்தில் சமைக்கப்பட்ட உணவு வழங்கப்படுகிறது :

	கிராம்.
அரிசி	80
பருப்பு	10
எண்ணெய் ..	5
காய்கறிகளும், சுவையூட்டும் பொருள்களும்.	50

ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு ஒரு சாப்பாட்டிற்கு ஆகும் செலவு 42 காசுகள். நிலையம் ஒன்றுக்கு சமையல் சாதனங்கள் ரூ.2,000 என்ற செலவில் அனைத்து குழந்தை நல நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. குழந்தை நல நிலையத்தில் எரிபொருள் செலவைக் குறைப்பதற்காக உலர் புல் காற்று புகாப்பெட்டியை (Hay Box) பயன்படுத்துவதற்குக் குழந்தை நல அமைப்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பாலர் பள்ளிக் கல்வி :

இந்நோக்கத்திற்காகச் சிறப்புப் பயிற்சி பெற்ற குழந்தை நல அமைப்பாளர்கள் மூலம் குழந்தைகளுக்குப் பாலர் பள்ளிக் கல்வி அளிக்கப்படுகிறது. அவர்களுக்குச் சுகாதாரப் பழக்க வழக்கங்கள் பற்றியும் கற்பிக்கப்படுகிறது. கல்விச் சாதனங்கள் தொகுதி ஒன்று ரூ. 600 என்ற செலவில் அனைத்து குழந்தைகள் நல நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 4,140 குழந்தை நல நிலையங்களில், நல்ல முறையில் குழந்தைகளுக்குக் கற்பிப்பதற்காக, குழந்தை நல அமைப்பாளர்களுக்கும், பாலர் பள்ளிப் பயிற்சி சிறப்பான முறையில் அளிக்கப்படுகிறது.

பள்ளிகளில் சேர்க்கப்படுதல் :

1983 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாளன்றுள்ளவாறு, 5 வயதடைந்த 4.56 இலட்சம் குழந்தைகளுக்கு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திலிருந்து சத்துணவு வழங்குவது நிறுத்தப்பட்டது. 5.77 இலட்சம் புதிய குழந்தைகள் அத்திட்டத்தில் சேர்க்கப்பட்டனர்.

குழந்தை நல அமைப்பாளர்களுக்குப் பயிற்ச்சி :

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு, கிராம-நகர்ப்பகுதிகளிலுள்ள சத்துணவுக் கூடங்களில் ரூ. 49,40,740 (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சத்து

நாற்பதாயிரத்தி எழுநூற்று நாற்பது மட்டும்) செலவில், 23,900 குழந்தை நல அமைப்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இச்செலவு முதலில் மாநில நிதியிலிருந்து செய்யப்படும். பின்னர். ''யூனிசெப்''(UNICEF) நிறுவனம் காலாண்டுக்கொரு முறை அப்பயிற்சிக்காகும் செலவை ஏற்றுக் கொள்கிறது. மூல செயற்குறிப்பின்படி இப்பயிற்சித் திட்டம் ஓர் ஆண்டு காலத்தில் முடிக்கப்படும் (5—12—1982 லிருந்து 4—12—1983 வரை) குழந்தை நல அமைப்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, 100 பெண் பயிற்றுநர்கள் பதவிக்கு அரசு அனுமதியளித்துள்ளது. இப்பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பெண் பயிற்றுநர்களும், குழந்தை நல அமைப்பாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான பாடத்திட்டத்தில் நன்கு தேர்ச்சியடையும் வகையில், கோயம்புத்தூரிலுள்ள ஸ்ரீஅவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் ஒரு திங்கள் பயிற்சிக்கு (5—11—1982 முதல் 4—12—1982 வரை) அனுப்பப்பட்டனர். இத்தகைய பயிற்சிக்குப் பிறகு குழந்தை நல அமைப்பாளர்களுக்கு அவர்களின் வட்டாரத்தில் பயிற்சி அளிப்பதற்காகப் பல்வேறு வட்டாரங்களின் தலைமையிடங்களில் நியமிக்கப்பட்டனர். குழந்தை நல அமைப்பாளர் ஒவ்வொருவருக்கும் பெண் பயிற்றுநர்கள் மூலம் 35 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சித் திட்டம் 8 தொகுதிகளாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. இதுவரையில் 6 தொகுதிகளுக்கான பயிற்சி முடிந்துள்ளது. இந்த 6 தொகுதிகள் மூலம் இதுவரையில் 11,600 குழந்தை நல அமைப்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 12—9—1983லிருந்து ஏழாவது தொகுதிக்கான பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் (நகர்ப்பகுதி),

2+வயதிலிருந்து 4+வயது வரையுள்ள குழந்தைகளுக்கான முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் 15—9—1982 லிருந்து மாநிலத்தின் நகர்ப்புறப் பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சிகளிலும், புதுக்கோட்டை நகராட்சியிலும், முந்தைய திட்டமான மாற்றியமைக்கப்பட்ட சிறப்பு சத்துணவுத் திட்டமும், ஏனைய நகராட்சிகளில் இருந்த சிறப்பு சத்துணவுத் திட்டமும் 15—9—1982இல்

முதலமைச்சரின் நகர்ப்பகுதி சத்துணவுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

கிராம நகர்ப்பகுதியிலுள்ள நிலையங்களுக்கான இத்திட்டம் முழுவதற்கும் ரூ. 2,104.25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 90 நகராட்சிகளிலும், 8 நகரியங்களிலும் 4944 சத்துணவு நிலையங்கள் தொடங்கப்பட்டன. 15—9—82 லிருந்து செயலுக்கு வந்த இத்திட்டத்தின் கீழ் கிராம-நகர்ப்பகுதி களிலுள்ள ஏழைக் குழந்தைகளுக்கும் கீழ்க்கண்ட விகிதத்தில் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

	கிராம்.
அரிசி	80
பருப்பு	10
எண்ணெய்	7
காய்கறிகளும், சுவையூட்டும் பொருள்களும்	50

காய்கறிகளுடன் சாம்பார் சாதம், கிச்சடி முதலிய உணவுகள் வழங்கப்படும் வாரத்தின் ஒவ்வொரு நாளும் தயாரிக்கப்படும் உணவு பற்றி பட்டியல் தயாரிக்கப்படும் அரசு விடுமுறை நாட்களைத் தவிர ஓராண்டின் அனைத்து நாட்களிலும் குழந்தைகளுக்கு உணவளிக்கப்படும். கிராமப்பகுதி சத்துணவு நிலையங்களில் 4944 அமைப்பாளர்களும், 9888 குழந்தை நல உதவியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நகராட்சிகளின் நகர்ப்புறப்பகுதிகளிலும், சென்னை மாநகரத்திலும் உள்ள சத்துணவு நிலையங்களை மேற்பார்வையிடுவதற்கு அரசு உயர்மட்டக் குழுவை அமைத்துள்ளது. துறை அதிகாரிகள் முழுமையான ஆய்வை நடத்தி வருகின்றனர். இத்திட்டத்தால் பயனடைந்தவர்கள் பற்றிய ஆண்டு வாரியான விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

பயனடைந்தவர்களின் பட்டியல்.

தொடர் எண், மாவட்டம்.	பயனடைந்தவர்களின் எண்ணிக்கை.
மாநகராட்சி :	
1 சென்னை	86,700
2 கோயம்புத்தூர்	25,700
3 மதுரை	25,667
நகராட்சிகள் :	
4 செங்கல்பட்டு	37,333
5 வட ஆர்க்காடு	31,200
6 தென் ஆர்க்காடு	16,759
7 தருமபுரி	3,400
8 சேலம்	23,132
9 பெரியார்	63,897
10 கோயம்புத்தூர்	9,600
11 நீலகிரி	11,158
12 மதுரை ..	20.160
13 திருச்சி	15,010
14 தஞ்சாவூர் ..	13,932
15 புதுக்கோட்டை ..	3,400
16 இராமநாதபுரம்	19.660
17 திருநெல்வேலி	22,115
18 கன்னியாகுமரி	6,328

பல்பொடி வழங்கல்.

கிராமப் பகுதி மக்களுக்கு இலவசமாக பல்பொடி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல் படுத்தும் பொறுப்பை சென்னை பல்மருத்துவக் கல்லூரியின் முதல்வருக்கு அரசு அளித்துள்ளது. சிட்கோ (SIDCO) நிறு வனத்தால் பல்பொடி வழங்கப்படுகிறது. 21,127 கிராமப்பகுதி சத்துணவு நிலையங்களிலுள்ள 2+வயது முதல் 4+வயதுடைய குழந்தைகளுக்கு சென்னை, சமூக நல இயக்குநர் மூலம் பல்பொடி வழங்கப்படுகிறது.

முதியோர் உதவித்தொகை பெறுவோருக்கான முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்.

''முதியோர் உதவித்தொகை பெறுவோருக்கான முதலமைச் சரின் சத்துணவுத் திட்டம்'' எனப்படும் இந்தப் புதிய திட்டத்தை 15—1—1983லிருந்து அரசு செயல்படுத்தியது. எதிர்பாரா நிதியிலிருந்து இத்திட்டத்திற்கு ரூ. 90 லட்சம் அனுமதியளிக்கப் பட்டது.

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் நீடிக்கப்பட்டுள்ள முதியோர் உதவித்தொகை பெறுவோர்களுக்கு நாளொன்றுக்கு ஒருவருக்கு காய்கறி முதலியவற்றிற்காக 10 காசுகள் விதம் அத் தொகையில் அளிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் அடிப்படையில் 31—3—1983 வரையிலான காலத்திற்கு ரூ. 8,48,000 (ரூபாய் எட்டு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரம் மட்டும்) ஒதுக்கப்பட்டது. இது பேரேடு V-இல் கணக்கு வைப்பதற்காக மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் வழங்கப்பட்டது. இதே போல் சென்னை சமூக நல இயக்குநர் ரூ. 1,52,000-ஐப் பெற்று குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட அதிகாரியிடம் (CDPO) வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுப் பணித்திட்டம்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுப் பணித்திட்டம் (ICDS) தமிழ்நாட்டில் சென்னை, தள்ளி, நிலக்கோட்டை ஆகிய மூன்று இடங்களில் 1975-76இல் தொண்டு வரப்பட்டது. இத்தகைய மூன்று திட்டங்களில் ஏனைய இரு திட்டங்களும் கிராமப் பகுதித் திட்டங்களாகும்.

1982-83 ஆம் ஆண்டில், இந்திய அரசு 27-க்கு மேற்பட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுப் பணித் திட்டங்களுக்கு (ஐ.சி.டி.எஸ்.) அனுமதியளித்துள்ளது. ஒரு இலட்சமும் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இத்தகைய இடங்களில் முன்னரே செயல்பட்டு வந்த மாற்றியமைக்கப்பட்ட சிறப்புச் சத்துணவுத் திட்டம்/சிறப்புச் சத்துணவுத் திட்ட நிலையங்கள் செயலற்றுப்போயின. அவை ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுப் பணித்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்தகைய 27 திட்டங்களும், 3 பெரிய மாநகராட்சிகளிலும், 8 நகராட்சிகளிலும், 15—9—1982லிருந்து செயல்படத் தொடங்கின.

ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுப் பணித் திட்டங்கள் மூலம் பின்வரும் பணிகள் முனைப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகள், (1) ஊட்டச் சத்துணவுத் திட்டம், (2) பாலர் பள்ளிக் கல்வி, (3) உடல் நலச் சோதனை, (4) மருத்துவ மேல்கருத்து அறி பணிகள், (5) நோய்த்தடை பணி, (6) வயது வந்த மகளிருக்குத் தொழிற் கல்வி அளித்தல். 30 ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுப் பணித்திட்டங்களின் கீழ், மொத்தமாக 2,969 அங்காடிகள் செயல்படுகின்றன. இவற்றின் மூலம் 2.12 இலட்சம் பேர் பயனடைகின்றனர். கருவுற்ற-பாலூட்டும் தாய்மார்களும் 6 திங்கள் முதல் 6 ஆண்டு வரையிலான குழந்தைகளும் இத்திட்டத்தின் மூலம் பயனடைகின்றனர். பல்வேறு கணக்குத் தலைப்புக்களின்கீழ் ஆன செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

திட்டத்தின் பெயர்.	1982-83 ஆம் ஆண்டில் செய்த செலவு.
(1)	(2)
	(ரூபாய் இலட்சத்தில்.)
குழந்தை மேம்பாட்டு ஒருங்கிணைந்த பணிகள்	87.19
கூடுதல் சத்துணவு	62.56
கூடுதலாக நியமிக்கப்பட்ட ஆயாக்களுக்கு தொகை அளித்தல் ..	10.55

உலக வங்கி நிதி உதவியுடன் சென்னை நகர மேம்பாட்டுத் திட்டம் கீழ் தாய், சேய் நலப் பணித் திட்டம்.

உலக வங்கி நிதி உதவியுடன் சென்னை நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தாய் சேய் நலப் பணித்திட்டம் என்பது, 6 மாதம் முதல் 3 வயது வரையும், 3 வயது முதல் 5 வயது வரையும் உள்ள குழந்தைகளுக்கும், கருவுற்ற, பாலூட்டும் தாயமார்களுக்கும் நலம் பயப்பதற்கான ஒருங்கிணைந்த முனைப்புத் திட்டமாகும். இந்த ஒருங்கிணைந்த திட்டத்தின் வாயிலாக கூடுதல் சத்துணவு, மருத்துவப் பரிசோதனை, நோயாளிகளை பெரிய மருத்துவ மனைகளுக்கு அனுப்பி வைத்தல், உடலோம்பல்-சத்துணவு பற்றி அறிவுறுத்தல் முறைசாராக் கல்வி ஆகியவற்றை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ் மொத்தம் குழந்தை நல நிலையங்கள் 129 நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குழந்தை நல நிலையமும், குழந்தை நல அமைப்பாளர் ஒருவராலும், குழந்தை நல உதவியாளர்கள் இருவராலும், நிருவகிக்கப்படுகின்றன. நடமாடும் மருந்தகங்கள் மருத்துவத் துணைப் பணியாளர்களோடு மருத்துவ அதிகாரிகள் மூவர் சென்று குழந்தைகளின் உடல் நலத்தைக் கவனிக்கின்றனர்.

'கேர்' நிறுவனம் துணைச் சத்துணவு வழங்கி வந்தது. பின்னர், 15—9—1982 லிருந்து இதற்குப் பதிலாக முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சரின் நண்பகல் சத்துணவுத் திட்டம் ;

வேலை வாய்ப்பகத்தால் அனுப்பப்பட்ட பி.எஸ்.சி. (மனையியல்) கல்வித் தகுதி உள்ள பெண் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு, 100 பேர் பயிற்சியாசிரியைகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். அவர்கள், கோயம்புத்தூர், அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் கல்லூரியில் 5—11—1982 முதல் 4—12—1982 வரை ஒரு மாதம் பயிற்சி பெறுவதற்காக அனுமதிக்கப்பட்டனர். 88 விண்ணப்பதாரர்கள் பயிற்சியை முடித்துவிட்டனர். இப்பயிற்சித் தொடர்பாக ஏற்பட்ட செலவு ரூ. 39,629.22-ஐ 'யூனிசெப்' நிறுவனம் ஏற்றுக்கொண்டது.

கோயம்புத்தூர், தருமபுரி, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள குழந்தை நல நிலையங்களுக்கு வழங்கு வதற்காக 'டான்சி' நிறுவனம் 2,400 எடைகள் அளவைகளை வழங்கியது. எடைகள், அளவைகள் தொடர்பாக ஏற்பட்ட செலவு ரூ. 5,68,800-ஐ 'யூனிசெப்' நிறுவனம் ஏற்றுக் கொண்டது.

உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், உலகவங்கி நிதி உதவியுடன் செயல்படும் திட்டமாகும். இத்திட்டம், 1980-85லிருந்து ஐந்தாண்டுகளில் (1980-85) படிப்படியாக நிறை வேற்றப்படுவதன் பேரில் வளர்ச்சி வட்டார அடிப்படையில் தமிழ் நாட்டில், மதுரை, இராமநாதபுரம், செங்கற்பட்டு, வடஆற்காடு, திருநெல்வேலி, புதுக்கோட்டை ஆகிய ஆறு மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இது பற்றிய விவரம் வருமாறு:—

முதலாண்டு	ஒரு வளர்ச்சி வட்டாரம்.
இரண்டாம் ஆண்டு	33 வளர்ச்சி வட்டாரங்கள்.
மூன்றாம் ஆண்டு	45 வளர்ச்சி வட்டாரங்கள்.
நான்காம் ஆண்டு	51 வளர்ச்சி வட்டாரங்கள்.
ஐந்தாம் ஆண்டு	43 வளர்ச்சி வட்டாரங்கள்.

இத்திட்டம், மக்கள் நல்வாழ்வுத் துறையின் ஒத்துழைப்புடன் சமூக நலத்துறையால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. சத் துணவு வழங்கும் திட்டத்தின் பல்வேறு கூறுகளையும் செயற் படுத்துவதற்குச் சமூக நலத்துறை இயக்குநர் பொறுப்பு வகிக்கிறார்.

குறைந்தளவு வருமானம் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 6 மாதம் முதல் 3 வயது வரையுள்ள குழந்தைகளிடையேயும் கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்களிடையேயும், ஊட்டச் சத்துக்

குறை ஏற்படுவதைத் தடுப்பதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

ஆதரவற்ற குழந்தைகள் நலத் திட்டம் :

பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மூலமாக ஆதர வற்ற குழந்தைகளின் பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும் மத்திய அரசு ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டம் குடில் முறையை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு குடிலிலும் 25 குழந்தைகள் உள்ளனர். 31—3—1979 வரை, மத்திய அரசு இது குறித்த செலவில் 90 சதவிதத்தை மானியமாக அளித்தது. 1—4—1979லிருந்து செலவில் 45 சதவீதத்தை மாநில அரசும், 45 சதவீதத்தை மத்திய அரசும், எஞ்சிய 10 சதவீதத்தை நிறுவனமும் ஏற்கின்றன. குழந்தைகளின் இட வசதிக்காக கட்டிட மானியமாக ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ரூ. 1,67,700 (வலுவூட்டப்பட்ட சிமிட்டி கற்கலவையினால் போடப்பட்ட மேற்கூரையுடன்) அல்லது ரூ. 1,18,500 (ஏ.சி. தகடுகள் போடப்பட்ட மேற்கூரையுடன்) கொடுக்கப்படுகிறது.

1982-83 ஆம் ஆண்டில், 131 தொண்டு நிறுவனங்கள் ரூ. 88,43,472 செலவிட்டுள்ளன.

அனாதை இல்லங்கள் :

சமூக நலத்துறை, 5 முதல் 18 வயது வரையுள்ள சிறுவர் களுக்காக, சென்னை மாநகர், மதுரை, கன்னியாகுமரி, சேலம் ஆகிய இடங்களில் அனாதை இல்லங்கள் நான்கினை நடத்தி வருகிறது. ஒவ்வொரு அனாதை இல்லத்திலும் அனுமதிக்கப் படும் குழந்தைகளின் எண்ணிக்கை 250 ஆகும். இக்குழந்தை களுக்கு உணவு, உறைவிடம், உடைகள், மருத்துவ வசதி, மேம் பாட்டுக் கல்வி ஆகியவை அளிக்கப்படுகின்றன. குழந்தைகளுக்கு ஐந்தாம் வகுப்பு வரை அனாதை இல்லத்திலேயே கற்றுக் கொடுக் கப்படுகிறது. ஐந்தாம் வகுப்புக்கு மேல் அவர்கள் அரசினர் பள்ளிகளுக்கும், மாநகராட்சிப் பள்ளிகளுக்கும் அனுப்பப்படு

கின்றனர். 1982-83 ஆம் ஆண்டின நிதி இலக்கு, திட்ட இலக்கு, சாதனை ஆகியவை குறித்த விவ்ரம் வருமாறு :—

நிதி		திட்ட		
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.	
(1)	(2)	(3)	(4)	
ரூ.	ரூ.			
8,38,000	7,75,422	4 அனாதை இல்லங்கள்.	4 அனாதை இல்லங்கள்.	
		1,000 குழந்தைகள்.	சென்னை	277
			மதுரை	245
			கன்னியாகுமரி	180
			சேலம்	215
				867

மகளிர் நலன் :

பணி இல்லங்கள் :

இத் துறை, 18 முதல் 40 வயது வரையுள்ள ஏழை விதவைகள், கைவிடப்பட்ட மனைவிகள், ஆதரவற்ற மகளிர் ஆகியோருக்காகத் தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய ஐந்து இடங்களில் பணி இல்லங்களை நடத்தி வருகிறது. இத் துறை, அவர்களுக்கு எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு (புதிய முறை) குறுகிய காலப் பயிற்சி ஆகியவற்றில் பயிற்சி அளிக்கிறது. கல்வி அளிப்பது தவிர, செயலகப் பணிக் கல்வி வகுப்பும் தையல் பயிற்சி அளிப்பதற்காக கைவினைப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளன. உடைகள் தயாரித்தல், பூத்தையல் வேலையிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆங்கிலத்திலும் பயிற்சி அளித்து அரசினர் தொழில் நுட்பத் தேர்வுக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். அவ்வில்லத்தில் தங்கியிருப்பவர்கள் உயரளவு மூன்றாண்டுக் காலத்திற்குந் தங்கள் இரு குழந்தைகளுடன் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். அவர்கள் பணி இல்லங்களில் தங்கியிருக்கும்போது, மகளிருக்குப் பயிற்சி உதவித் தொகையாக மாதமொன்றுக்கு ரூ. 50-ம், குழந்தைகளுக்கு

ரூ. 36-ம் அளிக்கப்படுகின்றன. இது தவிர உடைகள் வாங்குவதற்காக ஒரு மகளிருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 60-ம், ஒரு குழந்தைக்கு ரூ. 35-ம் என்ற வீதத்தில் அளிக்கப்படுகிறது. அங்கு தங்கியிருப்பவர்களின் குழந்தைகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகம், குறிப்பேடு வாங்குவதற்காக ஆண்டொன்றுக்கு ரூ. 40-ம், ஒன்பதாம் வகுப்பு பத்தாம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 60-ம் உதவித்தொகையாக அளிக்கப்படுகின்றன. ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகம் வாங்குவதற்கு உதவித்தொகையாக ஆண்டொன்றுக்குரூ. 15-ம் அளிக்கப்படுகிறது.

நிதி-திட்ட இலக்குச் சாதனைகள் பற்றிய விவரம் வருமாறு :—

நிதி இலக்கு.		திட்ட இலக்கு.	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)
ரூ.	ரூ.		
14,18,200	13,66,572	630/250 880	451/139 590

பணிபுரியும் மகளிர் தங்குமில்லம் :

குறைந்த நடுத்தர வருமானப் பிரிவைச் சேர்ந்த பணிபுரியும் பெண்களுக்கு உணவு-உறைவிட வசதிகளை வழங்குவதற்காக பணிபுரியும் மகளிர் இல்லங்களைச் சமூக நலத் துறை நடத்துகிறது. இம் மாநிலத்தில் பணிபுரியும் மகளிர் இல்லங்கள் 6 உள்ளன. எழும்பூரிலுள்ள பணிபுரியும் மகளிர் இல்லம் பணிபுரியும் 35 மகளிருக்கு உணவு-உறைவிடம் வசதிகளை வழங்குகின்றது. பணிபுரியும் மகளிருக்கான ஏனைய 5 இல்லங்களில் கிண்டி (சென்னை), திருச்சிராப்பள்ளி, மதுரை, தூத்துக்குடி, ஓசூர் ஆகிய இல்லங்கள் ஒவ்வொன்றும் 50 பணிபுரியும் மகளிரைக் கொண்டுள்ளன. இந்த வசதிகளைப் பெறும் பணிபுரியும் மொத்த மகளிரின் எண்ணிக்கை 285 ஆகும்.

இந்த இல்லங்களில் பணியாற்றும் கண்காணிப்பாளர், இரண்டு சமையல்காரர்கள், ஒரு காவலர், ஒரு அடிப்படைப் பணியாளர்,

பெருக்குபவர் ஒருவர் ஆகியோரது ஊதியம் இல்லத்தின் வாடகைத் தொகை ஆகியவற்றிற்கான செலவு இங்கு தங்கியிருப்போரால் பங்கீட்டு அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. வாடகைக் கட்டணமும் மின் கட்டணமும் இங்கு தங்கியிருப்பவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன.

நிதி-திட்ட இலக்கு, சாதனை ஆகியவை குறித்த விவரம் வருமாறு :—

நிதி இலக்கு.		திட்ட இலக்கு.	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)
ரூ.	ரூ.		
2,99,000	2,74,000	285	177

மகளிர் மன்றம் :

சமூக-பொருளாதார தடைகளைத் தகர்த்தெறிந்து கிராமப் பகுதிகளில் வாழும் பெண்களை ஒருங்கிணைப்பதற்காக மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது செயல்படும் மகளிர் மன்றங்களின் மொத்த எண்ணிக்கை 11,250 ஆகும். மகளிர் மன்றங்களின் பல்வேறு நல நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திற்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 4,000 வழங்கப்படுகிறது. மகளிர் மன்றங்களின் அமைப்பாளருக்கு காலாண்டு ஒன்றிற்கு ரூ. 15 மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது.

நிதி இலக்கு.		திட்ட இலக்கு.	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)
ரூ.	ரூ.		
1,50,400	13,63,000	376 வளர்ச்சி வட்டாரங்கள்.	376 வளர்ச்சி வட்டாரங்கள்.
		10,900 மகளிர் மன்றங்கள்.	10,900 மகளிர் மன்றங்கள்.

விதவைகளின் புனர் வாழ்விற்கான திட்டங்கள் :

விதவைகளின் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்களையும் குறிப்பேடுகளையும் இலவசமாக வழங்குதல் :

ஆண்டொன்றுக்கு ரூ.3,000-க்கும் குறைவான வருவாய் உள்ள விதவைக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் பயனுறு வகையில் தொடக்கப் பள்ளியில் பயிலும் ஒருவருக்கு ரூ. 15-ம், நடுத்தரப் பள்ளியில் பயிலும் ஒருவருக்கு ரூ. 40-ம், உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர் ஒருவருக்கு ரூ. 60 என்ற வீதத்தில் இலவசமாக பாடப் புத்தகங்களையும், குறிப்பேடுகளையும் வழங்கும் திட்டம் 1978–79 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் ரூ. 1.01 இலட்சம் ஒதுக்கப்பட்டு, இத் திட்டம் தொடர்ந்து செயல்படுகின்றது. இத் திட்டம் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் 1,000 குழந்தைகள் பயனுறும் வகையில், குழந்தை ஒன்றிற்கு ரூ. 100 என்ற விதத்தில் ரூ. 1 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதி திட்ட இலக்குகள், சாதனைகள் குறித்த விவரம் :—

நிதி இலக்கு.		திட்ட இலக்கு.	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)
ரூ. 2,01,000	ரூ. 1,96,000	4,000	4,534

ஆதரவற்ற விதவைகளின் பெண்களுக்குத் திருமணம் புரிய உதவுதல் :

ஆண்டொன்றுக்கு 3,000-க்கும் குறைவான வருவாய் உள்ள விதவைகள், 18–30 வயதுள்ள தங்களது பெண்களுக்குத் திருமணம் செய்வது தொடர்பாக ஏற்படும் செலவைச் செய்வதற்காக 1981–82 ஆம் ஆண்டிலிருந்து திட்டம் ஒன்றிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விதவையின் மகளுடைய திருமணத்திற்கும் ரூ. 1,000 என்ற விதத்தில் 100 விதவையின் மகளிருக்கு இத்திட்டத்தின்கீழ் உதவி செய்யப்படுகிறது. விதவையின் ஒரு மகள் (மணப்பெண்) மட்டுமே இந்த உதவிக்கு தகுதியுடையவராவார். சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில் சமூக நலத் துறை இயக்குநராலும், மாவட்டத்தைப் பொறுத்த

மட்டில் மாவட்ட ஆட்சித் தலைவராலும் உதவி பெறுவதற்கான விதவையின் மகளிர். தெரிந்தெடுக்கப்படுவர். 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதி திட்ட இலக்குகள், சாதனைகள் குறித்த விவரம் வருமாறு :—

நிதி இலக்கு.		திட்ட இலக்கு.	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
10,00,000	9,70,000	1,000	970

வழிகாட்டிக் குறிப்புகளை அளிக்கும் அமைப்பு-சென்னை மாநகர்:

சென்னை மாநகர் மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் வழிகாட்டிக் குறிப்புகளை அளிக்கும் அமைப்புகள் சமூக நலத்துறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலிருந்து இந்த அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. ஆயுள் ஈட்டுறுதிப் பயன்கள், வருங்கால வைப்பு நிதிப் பயன்களை ஆகியவற்றைப் பெறச் செய்வது, கல்வி-வேலை வாய்ப்புகள் குறித்து ஆலோசனை வழங்குவது, விதவைகள் தங்கள் குழந்தைகளைச் சேர்ப்பது குறித்து கல்வி நிறுவனங்கள் மூலம் வழிகாட்டிக் குறிப்புகளை அளிப்பது போன்ற இந்த உதவிகளை விதவைப் பெண்களுக்கு அளிப்பதே இந்த அமைப்புகளின் நோக்கமாகும்.

ஊதியத்தின் அடிப்படையில் தங்களுக்குப் பொருத்தமான வேலை வாய்ப்பைப் பெறவே பெண்கள் இந்த அமைப்புகளை அணுகுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக அல்லது ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். வேலை வாய்ப்பின்மை குறித்த பிரச்சினையின் கடுந்தன்மையைக் கருத்தில் கொண்டும், ஆடவர், பெண்டிர், வேலைத் தேவைகளுக்கு வேலை வாய்ப்பகங்கள் ஏற்கனவே வகை செய்து விடுவதாலும், இந்த 4 அமைப்புகள், இந்த அமைப்புகளை அணுகும் ஏழைப்பெண்டிருக்கு அதிலும் குறிப்பாக கைம்பெண்கள், திக்கற்றோர், கைவிடப் பட்டோர் ஆகியோருக்கு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளி லிருந்து கடன் உதவியைப் பெற்றுத் தருவதன் மூலம் அவர்களுக்கு சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் பணியில் ஈடுபட்டுள்ளன. ஆண்டொன்றிற்கு 4 சதவீதம் என்ற வட்டி வீதத்தில் ரூ. 200 முதல் ரூ. 1,000 வரை சிறு அளவில் கடன்கள் வழங்கப்

படுவதால், இந்த பெண்டிர் தங்களுடைய வாழ்க்கைப் பிழைப் பிற்கு வருமானத்தைத் தேடிக் கொள்ளவும், இந்தக் கடன் தொகையைத் திரும்பச் செலுத்தவும் இயலுகிறது.

1979 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டு மார்ச்சு வரையி லான ஆண்டுகளில், சுய வேலை வாய்ப்பு மூலம் இந்த வழி காட்டிக் குறிப்புகள் வழங்கும் அமைப்புகள், பல்வேறு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து ரூ. 23.00 இலட்சம் வரை கடன் உதவியைப் பெற்றுத் தந்து, 10,983 நலிந்த பிரிவைச் சேர்ந்த பெண்களுக்கு உதவி புரிந்துள்ளன.

மகளிருக்கான ஏனைய தொழில் நுட்பப் பயிற்சித் திட்டம் :

(அ) தட்டச்சு :

தட்டச்சுத் தொழில் நுட்பப் பயிற்சி பெறுவதற்காக, ஆண்டொன்றுக்கு ரூ. 3,000-க்கும் குறைவான வருவாய் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 16—30 வயதுள்ள 1,000 ஏழைப் பெண்களுக்கு, 10 மாதத்திற்கு மாதம் ஒன்றுக்கு ஒருவருக்கு ரூ. 15 என்ற வீதத்தில் பயிற்சி உதவித் தொகை வழங்கப் படுகின்றது. 1982–83-ஆம் ஆண்டிற்கான இலக்குகள், சாதனைகள் குறித்த விவரம் வருமாறு :—

நிதி இலக்கு.		திட்ட இலக்கு.	
இலக்கு	சாதனை.	இலக்கு.	சாதனை.
ரூ.1.50 இலட்சம்.	ரூ.1.20 இலட்சம்	1,000	973

(ஆ) வணிகக் கணக்கு வைப்பு முறையில் பயிற்சி அளித்தல் :

ஆண்டொன்றுக்கு ரூ. 3,000-க்கும் குறைவான வருவாய் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த 16–30 வயதிலுள்ள ஒவ்வொரு மாணவர்களுக்கும் வணிகக் கணக்கு வைப்பு முறையில்பயிற்சி அளிப்பதற்காக ஆறு மாதங்களுக்கு ரூ. 165 பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. 1982–83-ஆம் ஆண்டிற்கான இலக்குகள் சாதனைகள் குறித்த விவரம் வருமாறு :—

நிதி		திட்ட	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
ரூ.1.65இ]லட்சம்.	0.82 இலட்சம்.	1,000	682

சுருக்கெழுத்துப் பயிற்சி அளித்தல் :

இந்த ஆண்டிலிருந்து மொத்தம் ரூ. 1.10 இலட்சம் செலவில் ஆண்டொன்றிற்கு 500 பெண்களுக்குச் சுருக்கெழுத்துப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றிற்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த சுருக்கெழுத்துப் பயிற்சி பெறுவதற்காக, ஆண்டொன்றிற்கு ரூ. 3,000-க்கும் குறைவான வருவாய் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த 16-30 வயதிலுள்ள ஒவ்வொரு மாணவர்களுக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 220 பயிற்சி உதவித்தொகை வழங்கப்படும்

1982-83 ஆம் ஆண்டிற்கான இலக்குகள், சாதனைகள் குறித்த விவரம் வருமாறு:

நிதி.		திட்டம்.	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
ரூ. 1.10 இலட்சம்	0.37 இலட்சம்.	500	480

உற்பத்தி — பயிற்சி நிலையங்கள் :

உற்பத்திப் பயிற்சி நிலையங்கள், மற்றும் உற்பத்திப் பிரிவுகள் இத்துறையினால் நடத்தப்படுகின்றன. இந்த நிலையங்கள், 18 முதல் 35 வயதுடைய கிராமப்புற, நகர்ப்புற விதவையருக்கு ஓராண்டு தொழிற்பயிற்சி அளித்து வருகின்றன: தையல், கம்பிளி ஆடை நெய்தல், பனை ஓலை முடைதல், பாய் முடைதல், தரை விரிப்பு நெய்தல், மூங்கில் மற்றும் பிரம்பு முதலியவற்றால் பொருள்கள் செய்தல் போன்றவற்றில் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அப்பயிற்சி அவர்களுடைய குடும்ப வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கான வேலைவாய்ப்பினைப் பெற உதவும். பயிற்சிக் காலத்தின் போது பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ.30 உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகை அவர்களின் பயணச் செலவுக்கும், பிற செலவுகளுக்கும் பயன்படுகிறது.

ஓராண்டுத் தையற்பயிற்சி முடித்த பயிற்சியாளர்கள் ஆண்டுதோறும் டிசம்பர் திங்களில் நடைபெறும் அரசு தொழில் நுட்பத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். இத்தேர்வில் தேர்ச்சி பெற்றோர் அரசு நிறுவனங்களில் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

சமூக நலத்துறையின் கீழ், தற்போது 53 உற்பத்தி தொழிற் பயிற்சி நிலையங்களும், 4 உற்பத்திப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. அதற்காக 1983—84 ஆம் ஆண்டுக்கு ரூ. 16.76 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையங்களில் ஆண்டுதோறும் மகளிர் சுமார் 900 பேர் பயிற்சி பெறுகின்றனர். மேற்சொன்ன பயிற்சி நிலையங்களில் 4 நெசவு பயிற்சி நிலையங்கள் பழங்குடியினர் துணைத் திட்டப் பகுதிகளில் உள்ள மகளிர் பயன்பெறும் பொருட்டுச் செயல் பட்டு வருகின்றன. வடஆற்காடு மாவட்டம் அத்திப்பேட்டை, சேலம் மாவட்டம் கொல்லி மலை, கல்ராயன் மலை, ஏர்க்காடு ஆகிய நான்கு இடங்களில் இந்தப் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

சமூக நலம் பணிக்கிளைகள்:

சமூக நலத்துறையின் நலப்பணி 1947 ஆம் ஆண்டில் தொடங்கியதிலிருந்து சமூகநலப் பணிக்கிளைகள் இயங்கி வருகின்றன. மாநிலம் முழுவதும் 50 சமூக நலப் பணிக்கிளைகள் உள்ளன. அமைப்பாளர்கள் இப்பணிக்கிளைகளுக்குப் பொறுப்பு வகிக்கின்றனர். அவர்கள் இரண்டரை முதல் 5 வயதுடைய சிறார்க்கு சாலையில் முன் அடிப்படை வகுப்புக்களை நடத்துகின்றர். அந்த அமைப்பாளர்கள் மகளிர் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து சத்துணவு, சுகாதார நலம் பேணல் போன்றவற்றையும், இல்லங்களை அழகுபடுத்தும் கலை, தையல் பயிற்சி, பாய் முடைதல், பூ வேலைப்பாடு, கூடை முடைதல், இலைத் தட்டு செய்தல் முதலிய பயன்மிகு கைவினைத் தொழில்களையும், அவர்களுக்குக் கற்பிக்கின்றனர். முதியோர் கல்வி, சமையல் செய்து காட்டல் போன்றவை கூட இக்கிளைகளின் செயல்களாகும் இப்பணிக் கிளைகளின் உறுப்பினர்கள் ஆடைகள் தைத்து குடும்ப வருவாயைப் பெருக்கி கொள்கின்றனர். இந்த சமூக நலப் பணிக்கிளைகள் அனைத்தும் நகராட்சிப் பகுதிகளுக்குள் அமைந்துள்ளன. இப்பணிக்கிளை ஒவ்வொன்றுக்கும் ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக ரூ. 15,000 செலவிடப்படுகிறது.

விதவை மறுமணம்:

இத்திட்டம் விதவையருக்கு மறுவாழ்வு அளிக்கிறது.
7 ஆண்டு வைப்புத் தொகையாக செலுத்தப்படுகிற

ரூ. 5,000 மதிப்புள்ள தேசிய சேமிப்புச் சான்றிதழ்கள் வழங்குவதன் மூலம் விதவையர் திருமணத்திற்கு ஊக்கமளிக்கப்படுகிறது. இத்திட்டம் 18 முதல் 30 வயதுடைய ஆதரவற்ற விதவையர்க்கு மட்டுமே உரிய திட்டமாகும். (மண முறிவு பெற்ற மகளிர் மணவாழ்வைத் துறந்த மகளிர் இத்திட்டத்தில் சேரார்) இத்திட்டம் 1975–1976 ஆம் ஆண்டு காலத்தில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 1981–82 ஆம் ஆண்டுவரை 894 தம்பதியர் பயன் பெற்றுள்ளனர்.

1982–83 ஆம் ஆண்டிற்கான திட்ட இலக்கு, நிதி இலக்கு, சாதனங்கள் வருமாறு:—

திட்ட		நிதி	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை
100 தம்பதியர்	100 தம்பதியர்	ரூ. 5.00 இலட்சம்	ரூ. 5.00 இலட்சம்.

தையல் இயந்திரம் வழங்கல் :

ஆதரவற்ற விதவையர், சமூகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மகளிர், உடல் ஊனமுற்ற மகளிர், 20 முதல் 40 வயதுடைய உடல் ஊனமுற்ற ஆடவர் ஆகியோருக்கு இத்திட்டத்தின் கீழ் தையல் எந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1975–76-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 1981–82-ஆம் ஆண்டு வரை 7,500 பேர் பயனடைந்துள்ளனர்.

	நிதி		திட்ட	
ஆண்டு.	இலக்கு.	சாதனை	இலக்கு.	சாதனை.
1982–83	ரூ. 6.18 இலட்சம்.	ரூ. 6.18 இலட்சம்	1,000	1,000

அரசினர் காப்பு இல்லம் :

பிச்சைக்காரர் புதுவாழ்வு இல்லம் மேல்பாக்கத்தில் 5–2–1954 -ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. இந்த இல்லத்தில் 770 ஆண்களும், 180 பெண்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது 140 பேர் உள்ளனர். தங்குமிடம், உணவு மற்றும் உடைகள் போன்ற வசதிகள் அவர்களுக்கு இலவசமாகத் தரப் படுகின்றன. அங்கு தங்கியிருப்போருக்கு அவசர மருத்துவ வசதிக்கும் மற்றும் சிறிய நோய்களைக் குணப்படுத்துவதற்கும் இல்ல வளாகத்திற்கும், படுக்கை வசதி கொண்ட மருத்துவப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. முழு நேர மருத்துவ அலுவலர் அங்கு பணியாற்றுகிறார்.

மாவட்ட சமூக நல அதிகாரி, மாவட்ட மருத்துவ அதிகாரி, மாவட்ட ஆட்சியர், கோட்ட வளர்ச்சி அதிகாரி இதர சமூக நலப் பணியாளர்கள் இந்த இல்லத்தை குறிப்பிட்ட காலந் தோறும் மேற்பார்வையிடுகின்றனர்.

1981–82-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், இந்த இல்லத்தினை முழுமையாகப் பராமரிப்பதற்காக ரூ. 7.76 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

திட்ட			நிதி.	
ஆண்டு.	இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
1982–83	950		ரூ. 7.611 இலட்சம்.	ரூ. 7.94 இலட்சம்.

உடல் ஊனமுற்றோர் நலத் திட்டங்கள் :

(1) படிப்பு உதவித் தொகை :

1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் உடல் ஊனமுற்ற மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. இதனைச் சமூக நல இயக்ககம் செயற் படுத்தி வருகிறது. உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு 1982–83 ஆம் ஆண்டில் படிப்புதவித் தொகை வழங்க ரூ. 2.00 இலட்சம் அனுமதி அளித்தது. பாட நூல்கள், குறிப்பேடுகள் ஆகியவை வாங்குவதற்காக மாணவர் ஒவ்வொருவருக்கும் ரூ. 25 வீதம் வழங்க இத்தொகை அனுமதிக்கப்பட்டது. 1982–83 ஆண்டில் இத்திட்டத்தின் கீழ், 8,000 மாணவர்கள் பயனடைந் தனர்.

(2) உடல் ஊனமுற்ற சிறாருக்கு பயணச் சலுகை :

உடல் ஊனமுற்ற சிறார் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தவிர) கட்டணமின்றிப் பயணம் செய்யும் பொருட்டு, இலவச பேருந்து அனுமதி சீட்டுக்களை வழங்க அரசு உத்தரவிட்டது. இவர்கள் இதன் மூலம் தாங்கள் வசிக்கும் இடங்களிலிருந்து பள்ளிக்கூடம், மருத்துவமனை ஆகிய வற்றுக்குச் சென்று திரும்பலாம். இதனால் அரசுப் போக்கு வரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் இழப்புத் தொகையை சமூக நலத்துறை ஈடுசெய்யும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த இழப்பினை ஈடு செய்ய நிதி உதவி வேண்டி, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்கள் தேவையான செயற்குறிப்புக்களை சமூக நலத்துறையின் மூலம் அரசுக்கு அனுப்பியுள்ளனர். இத்திட்டத்தினால் 1982-83-ஆம் ஆண்டில் 5,037 பேர் பயனடைந்தனர். ரூ. 2.05 இலட்சம் இதற்காக செலவிடப்பட்டது.

உடல் ஊனமுற்ற மாணவருக்கு மத்திய அரசு படிப்புதவித் தொகை.

இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு உடல் ஊனமுற்ற மாணவருக்குப் படிப்புதவித்தொகை வழங்கி வருகிறது. 9ஆம் வகுப்பிலிருந்தும், அதற்கு மேலும் பயிலும் 14-40 வயதுடைய மாணவர்கள், கலை/தொழிற் கல்விக்கும் தொழிற் சாலைகளில் பயிற்சி பெறுவோருக்கும் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. பயிலும் பாடத்தைப் பொறுத்து, இந்த உதவித்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 40 லிருந்து ரூ. 125 வரை வேறுபடுகிறது. ஆண்டுதோறும் 1,000 மாணவர் இவ்வாறு உதவித்தொகை பெறுகின்றனர். 1,387 உடல் ஊனமுற்றோர்க்கு 1981-82ஆம் ஆண்டில் இந்தப் படிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டது. இதற்காக ரூ. 7.19 இலட்சம் செலவிடப்பட்டது. 1982-83ஆம் ஆண்டில் இந்தப்படிப்புதவித் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 60 லிருந்து ரூ. 170 வரை உயர்த்தப்பட்டு, இதற்கான வயது வரம்பும் நீக்கப்பட்டுள்ளது. 1982-83ஆம் ஆண்டில் ரூ. 12.89 இலட்சம் 1,810 உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு வழங்கப் பட்டது.

நலத்திட்டங்கள்

தமிழ்நாட்டில் உள்ள ஊனமுற்றோரின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும், அவர்களுடைய பிரச்சினைகளைக் களையவும், பல்வேறு நலத்திட்டங்களை தமிழ்நாடு அரசு நிறைவேற்றியுள்ளது. இவர்கள் வாழ்வில் முழு நம்பிக்கை பெறவும், பொருளாதார வகையில் சுயமாக வாழ உதவும், கல்வி, தொழில்முறைக் கல்விப்பயிற்சி, சுய வேலைவாய்ப்பு, சம்பள வேலை வாய்ப்புபோன்ற பல்வேறு நலத்திட்டங்களை அரசு செயல்படுத்துகின்றது. உடல் ஊனமுற்றோர் நலத் திட்டங்களுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கிடு ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. இதற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு 1980-81ஆம் ஆண்டில் ரு. 65 இலட்சமாக இருந்தது. 1981–82ஆம் ஆண்டில் ரூ. 125 இலட்சமாக உயர்ந்தது. 1982–83ஆம் ஆண்டில் ரூ. 109.79 இலட்சம் வழங்கப்பட்டது. 1981–82-ஆம் ஆண்டு உலக உடல் ஊனமுற்றோர் ஆண்டு ஆதலால், 43,400 ஊன முற்றோர் மறுவாழ்வுபெற உதவி அளிக்கப்பட்டது. 1982–83ஆம் ஆண்டில் செயற்படுத்திய சிறப்புத் திட்டங்களும், தற்போது செயற்படுத்தி வரும் திட்டங்களும் வருமாறு ;

உடல் ஊனமுற்றோருக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி;

நவீன பயிற்சி—உற்பத்தி பட்டரை :

செங்கற்பட்டு மாவட்டம், முட்டுக்காடு என்னுமிடத்தில் உடல் ஊனமுற்றோருக்கான நவீனப் பயிற்சி-உற்பத்திப் பட்டறை 1975ஆம் ஆண்டில் ரூ. 30 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது. எஃகு இரும்புச் சட்டங்கள் இணைக்கவும், தயாரிக்கவும் ஊனமுற்றோர் 77 பேருக்குப் பயிற்சி தரப்ப படுகிறது.

1980ஆம் ஆண்டிலிருந்து இப்பயிற்சி நிலையம் உற்பத்தி நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு பயிற்சி பெற்ற ஊனமுற்றோர் பலர் அரசு நிறுவனங்களிலும், தொழில்

நிறுவனங்களிலும் தக்க பணிகளில் வேலைக்கமர்த்தப் பட்டுள்ளனர்.

ஆண்டு.	திட்ட. இலக்கு.	திட்ட. சாதனை.	நிதி. இலக்கு.	நிதி. சாதனை.
			(ரூபாய் இலட்சத்தில்)	
1982–83 ..			17.18	11.95

ஸ்ரீசேவா மந்திர் நிலையத்தில் பயிற்சி.

சென்னை-17 இல் உள்ள ஸ்ரீ சேவா மந்திர் பயிற்சி நிலையத்தில் தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆடைகள் தயாரித்தல், பூ வேலைப்பாடு, பொம்மை செய்தல், உணவு செய்முறைப்படுத்தல் போன்றவற்றில் உடல் ஊனமுற்ற மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதற்காகப் பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும், மாதம் ஒன்றுக்கு ரூ. 75 வீதம் அரசு உதவித்தொகை வழங்குகிறது.

ஆண்டு.	திட்டம். இலக்கு.	திட்டம். சாதனை.	நிதி. இலக்கு.	நிதி. சாதனை.
			ரூ.	ரூ.
1982–83 ..	25	9	9,00€	8,000

பார்வையிழந்தோருக்கான அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கிண்டி.

கிண்டியில் உள்ள இப்பயிற்சி நிலையத்தில் சிறு பொறியியல் தொழிற் பிரிவுகளில் வயது வந்த பார்வையிழந்தோருக்கு 1967 ஆம் ஆண்டு மேத்திங்கள் முதல் நாளிலிருந்து பயிற்சியளிக்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், பொதுக்கல்வித் தகுதி பெற்ற வயது வந்த பார்வையற்றோருக்கு சிறு பொறியியற் தொழிற் பிரிவுகளில் 6 திங்கள் காலத்திற்குச் சிறப்புப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு இலவச உணவும்,

தங்குமிடமும் கொடுக்கப்படுகின்றன. 1967–1982–ஆம் ஆண்டுக் காலத்தில் 453 பேர் பயிற்சி பெற்றனர். இவர்களில் 248 பேர் பணியிலமர்த்தப்பட்டுள்ளனர். 1982–83 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை அரசினர் தொழிற் பயிற்சி நிலையப் பிரிவுகளாக மாற்ற உத்தரவிட்டது. இப்பிரிவுகளில் பின்வரும் 3 தொழில்களில் பயிற்சி அளிக்கப் படுகிறது :

(1) பொருத்துபவர்—அடிப்படை எந்திரம் இயக்குபவர்.
(2) புத்தகம் கட்டுதல்.
(3) கம்பி சுற்றுபவர்.

இதற்காக, 1982–83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1.46 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு.	திட்ட இலக்கு.	திட்ட சாதனை.	நிதி இலக்கு.	நிதி சாதனை.
(1)	(2)	(3)	(4)	(5)
			(ரூபாய் இலட்சத்தில்).	
1982–83	30	22	1·761	2.66

உடல் ஊனமுற்றோர் வேலை வாய்ப்பு :
உடல் ஊனமுற்றோர் சிறு கடைகள் (Bunk Stall)
வைப்பதற்கு உதவி :

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் உடல் ஊனமுற்றோர், சிறு கடைகள் (Bunk Stall) அமைப்பதற்கு உதவி செய்யப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் ரூ. 250 லிருந்து ரூ. 500 வரை அரசு உதவித்தொகையும், வங்கிகளும் கடனுதவி அளிக்கின்றன. சிறு கடைகள் வைப்பதற்கு தகுந்த இடங்களும் அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. இது வரை 632 சிறு கடைகள் அமைத்து கொடுக்கப் பட்டுள்ளன. இதற்காக 1982–83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் ரூ. 0.94 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு.	திட்டம் இலக்கு.	திட்டம் சாதனை.	நிதி இலக்கு.	நிதி சாதனை
(1)	(2)	(3)	(4)	(5)
			(ரூபாய் இலட்சத்தில்).	
1982–83	88	136	0.94	0.64

பயிற்சி பெற்ற ஊனமுற்றோரை தொழில் பழகுநராக அமர்த்துதல் :

தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பெயரைப் பதிவுசெய்து வேலைக்காகக் காத்திருக்கும் பயிற்சிபெற்ற உடல் ஊனமுற்றோர் சுமார் 1,500 பேர் உள்ளனர். பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு இவர்கள் ஓராண்டு தொழில் பழகிய பின் தொழில் பழகுநராக அனுப்பப் படுகின்றனர். தொழில் பழகும் காலத்தில் அரசு அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 150 வீதம் உதவித் தொகை கொடுக்கிறது. தொழில் பழகியபின் அவர்கள் தொழிற்சாலைகளில் அமர்த்தப்படுவர். இதற்காக, 1982—83ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டில் ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு.	திட்டம்.		நிதி.	
	இலக்கு.	சாதனை.	இலக்கு	சாதனை
(1)	(2)	(3)	(4)	(5)
			(ரூபாய் இலட்சத்தில்.)	
1982–83	300	240	3.00	3.00

பணிப்பட்டறையில் பயிற்சி— நெசவுக் கூட்டுறவுச் சங்கம் :

1981-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் பூவிருந்தமல்லி யில் உள்ள பார்வையிழந்தோருக்கான அரசினர் உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் பார்வையிழந்தோர் நெசவுக் கூட்டுறவுச் சங்கம் பணிப்பட்டறை நிறுவப்பட்டது. வெட்டுக்காயம் கட்டும் துணிகள், படுக்கை விரிப்புகள், துண்டுகள் முதலான மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் துணிகளை நெய் வதற்கு இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற பின்னர் இவர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர் களாகச் சேர்ந்து தானே வருவாய் ஈட்டுவர். மூன்று தொகுதியினர் இப்பயிற்சியை முடித்துள்ளனர். தற்போது நான்காவது தொகுதியினர் பயிற்சி பெறுகின்றனர். இது

வரை பார்வையிழந்தோர் 77 பேர் இப்பயிற்சியினைப் பெற்றுள்ளனர்.

ஆண்டு.	திட்ட		நிதி	
	இலக்கு.	சாதனை	இலக்கு.	சாதனை
(1)	(2)	(3)	(4)	(5)
			(ரூபாய் இலட்சத்தில்)	
1982–83	60	60	84,000	48,000

தொழிலகத்துடன் இணைந்த பார்வையிழந்த மகளிர் மறுவாழ்வு இல்லம்-

பார்வையிழந்த மகளிருக்கு விடுதி வசதிகளுடன் கூடிய மறுவாழ்வு இல்லம் 1978 ஆம் ஆண்டு முதல் சென்னையில் செயல்பட்டு வருகிறது.

40 வயதுக்கு உட்பட்ட வறிய, அநாதை, பார்வையற்ற பெண்கள் கல்வித் தகுதி பற்றிக் கருதிப் பாராமல் இவ்வில்லத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு, நெசவு, சாக்கட்டி தயாரிப்பு முதலான பல்வேறு தொழில்களில் ஆறு மாத காலத்திற்கு பயிற்சியளிக்கப்பட்ட பிறகு அவர்கள் வீட்டிலேயே வேலை வாய்ப்புக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. குறிப்பிட்டதொரு வீதத்தில் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. அவர்களுக்குப் பயிற்சிக்கால மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இவ்வகையில் 1982–83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 1.76 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதுபற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு.	திட்ட		நிதி.	
	இலக்கு.	சாதனை	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)	(5)
			(ரூபாய் இலட்சத்தில்)	
1982–83	40	23	1.76	1.82

வட்டாரப் புது வாழ்வு நிலையங்கள் :

வட்டாரப் புதுவாழ்வு நிலையத்தில் பணிகள் எண்ணற்றவை வெவ்வேறானவை; பல்வேறு தன்மையன; இந்நிலையம் மூன்று நான்கு மாவட்டங்கள் அடங்கிய கலப்பணி அலுவலகமாக செயல்படும். கிராமப்புற நகர்புற உடல் ஊனமுற்றோருக்கு மருத்துவ, வாழ்க்கைத் தொழில், பொருளாதார, சமூக உதவி போன்ற புதுவாழ்வு உதவிக்கு இந்நிலையம் வகை செய்கிறது.

கிண்டியில் உள்ள மத்திய அரசு உடல் ஊனமுற்றோர் வாழ்க்கைத் தொழில் புதுவாழ்வு நிலையத்தைப் போன்ற வட்டாரப் புதுவாழ்வு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கிண்டியில் உள்ள புதுவாழ்வு நிலையத்தைப் போன்றுதான் இந் நிலையமும் பணிபுரிந்து வருகிறது.

ஒவ்வொரு வட்டாரப் புதுவாழ்வு நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

சென்னை.	தஞ்சாவூர்	கோயம்-புத்தூர்.	வேலூர்.	மதுரை.
(1)	(2)	(3)	(4)	(5)
சென்னை	தஞ்சாவூர்	கோயம்-புத்தூர்	வட-ஆர்க்காடு	மதுரை
செங்கல்-பட்டு.	திருச்சிராப்பள்ளி	சேலம்	தருமபுரி	இராம-நாதபுரம்
	புதுக்கோட்டை	ஈரோடு	தென் ஆர்க்காடு	திருநெல்வேலி
		நீலகிரி		கன்னியாகுமரி.

மதுரையில் உள்ள வட்டாரப் புதுவாழ்வு நிலையம், 1980 மார்ச்சில் தொடங்கப்பட்டது. ஏனைய நான்கு நிலையங்களும், உலக உடல் ஊனமுற்றோர் ஆண்டான 1981–82-ல் தொடங்கப்பட்டன.

மதிப்பீட்டுக்காகவும் உதவி ஏற்பாட்டிற்காகவும் ஒவ்வொரு வட்டாரப் புதுவாழ்வு நிலையத்திலும் மாதமொன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 20 உடல் ஊனமுற்றோர் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

ஆண்டு.	திட்டம்.		நிதி.	
	இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)	(5)
			(ரூபாய் இலட்சத்தில்.)	
1982-83	1,200	1,200	11.32	8.97

உடல் ஊனமுற்றோர் அமைக்கவிருக்கும் சிறு தொழிற்சாலைகளுக்கு மாநில அரசு உதவித்தொகை வழங்குதல்.

சுய வேலை வாய்ப்பு ஏற்பாடுகளுக்காக, வங்கிகள் மூலம் கடன் உதவி பெற்று சிறு தொழிற்சாலைகள் அமைக்க, அரசு உதவித்தொகை வழங்குவதன் மூலம் உடல் ஊனமுற்றோர் பலருடைய பொருளாதார முன்னேற்றத்திற்குத் தனி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உடல் ஊனமுற்ற ஒருவருக்கு, உயர்ந்த பட்சம் 1,000 ரூபாய் என்ற வரையறைக்கு உட்பட்டு வங்கிகள் வழங்குகின்ற கடன் தொகைக்கு சமமானதொரு தொகையினை மாநில அரசு உதவித் தொகையாக வழங்குகிறது.

மேற்சொன்ன நோக்கத்திற்காக, 1981–82-ல் 9,231 பேருக்கு 25 இலட்சம் ரூபாய் உதவித்தொகைதாக வழங்கப் பட்டது. 1982–83,ஆம் ஆண்டு இத்திட்டம் தொடர்ந்தது. 1982–83 வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது; அதன் விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

ஆண்டு.	திட்டம்.		நிதி.	
	இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)	(5)
			(ரூபாய் இலட்சத்தில்.)	
1982–83 ..	1,000	1,240	10	10

உடல் ஊனமுற்றோருக்கு உதவி சாதனங்கள் வழங்குதல் :

முடமான வறியவர்க்கு இலவசமாக மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன. 1982-83-ல் 135 மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்கப்பட்டன. 1981-82 உடல் ஊனமுற்றோர் ஆண்டில், வாத நோயாளிகளுக்குச் சக்கர நாற்காலிகள் 100 இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. அதே போன்று, 1982-83-ல் சக்கர நாற்காலிகள் 100 வழங்கப்பட்டுள்ளன. பெற்றோரின்/காப்பாளரின் மாத வருமானம் 500 ரூபாய்க்கு மேற்படாதுள்ள கேட்புச் சக்தி குறையுள்ள பள்ளி மாணவர்களுக்குக் கேட்புக் கருவிகள் வழங்கப்படுகின்றன. 1982-83-ல் கேட்புக் கருவிகள் 142 வழங்கப்பட்டன.

	திட்டம்.		நிதி.	
	இலக்கு	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)	(5)
1982—83 ஆம் ஆண்டு —				
மூன்று சக்கர சைக்கிள்கள்.	135	135		
சக்கர நாற்காலிகள்.	100	100		..
கேட்புக் கருவிகள்	142	142		5.45 இலட்சம்.

தொண்டு நிறுவனங்களுக்கு உதவி மான்யம் :

இளம் பிள்ளை வாதம், மூளை அழற்சி, மன வளர்ச்சிக் குறைவு, செவிடு, ஊமை, குருடு, முடம், பெரு வியாதி ஆகிய பாதிப்புகள் உள்ள 8—14 வயதுக் குழந்தைகளைப் பராமரிக்க குழந்தைஒன்றுக்கு, மாதம் ஒன்றுக்கு 30 ரூபாய் வீதம், தொண்டு நிறுவனத்திற்கு பராமரிப்பு மானியம் வழங்கப்படுகிறது. இதற்கென 1982—83 வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் 0.65 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அது குறித்த விவரம் வருமாறு :—

திட்டம்.		நிதி.	
இலக்கு.	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
1982—83 ஆம் ஆண்டு — 10 நிறுவனங்கள்.		0.65	0.61

தனிப் பள்ளிகள் :

பார்வையற்றோர்— காது கேளாதவர் தனிப் பள்ளிகளின் நிருவாகக் கட்டுப்பாட்டு அதிகாரம், பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து சமூக நலத்துறை இயக்குநருக்கு மாற்றப்பட்டுள்ளது. அதன்படி இத்தனிப் பள்ளிகள், 1979 டிசம்பரிலிருந்து சமூக நலத்துறை இயக்குநரின் நிருவாகப் பொறுப்பின் கீழ் வந்துள்ளன. 1982—83 இல் இத்தகைய பள்ளிகள் மூன்று தொடங்கப்பட்டன. இப்பள்ளிகளின் எண்ணிக்கை தற்போது 52 ஆக உயர்ந்துள்ளது. உதவி இயக்குநர் நிலையில் மேற்பார்வையாளர் ஒருவர், இயக்குநர் அலுவலகத்தில் இம் மாநிலத்திலுள்ள இத்தகைய தனிப் பள்ளிகளின் மேற்பார்வையாளராகச் செயல்பட்டு வருகிறார்.

இம் மாநிலத்தில் செயல் படக்கூடிய இத்தகைய பள்ளிகளின் விவரம் வருமாறு :—

	அரசுப் பள்ளிகள்.	மானியம் பெறும் பள்ளிகள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1 பார்வையற்றோர் பள்ளி	12	9	21
2 காது கேளாதோர் பள்ளி ...	9	12	21
3 தொழு நோயால் பாதிக்கப்பட்டோர் பள்ளி.		1	1
4 மன வளர்ச்சி குன்றியோர் பள்ளி.		2	2
5 ஆசிரியர் பயிற்சி ப்பள்ளி	1	2	3
6 உறுப்பிழந்தோர் பள்ளி	1	1	2
7 ஏனைய நிறுவனங்கள். —			
(1) சிறுரகப் பொறியியல் தொழிற்சாலை. (2) வட்டார பிரெய்ல் அச்சகம்.	2		2
8 மானியம் பெறாத அங்கீகாரம் பெற்ற பள்ளிகள்.	1	1	2
	26	28	54

மேற்சொன்ன பள்ளிகள் மட்டுமின்றி, இளம்பிள்ளை வாதம், மூளை அழற்சி நோய் முதலியவற்றால் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனை, ஊன முற்றோர் வார்டுகளில் நீண்டகால சிகிச்சை பெற்று வரும் குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிக்கும் பொருட்டு, கீழ்க்காணும் மருத்துவ மனைகளில் சில பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.—

1. அரசு பொது மருத்துவ மனை, சென்னை.

2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.

3. அரசு குழந்தைகள் நல மருத்துவமனை, சென்னை.

4. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.

5. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.

6. மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, மதுரை.

7. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, திருநெல்வேலி.

8. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை கோயம்புத்தூர்.

இப்பள்ளிகள், அனைத்தும், இம் மருத்துவமனைகளின் முதல்வர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

உடல் ஊனமுற்றோர் ஆண்டான 1981—82 இல் 1 முதல் 5 வகுப்பு வரையில் தருமபுரி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் குருடர்களுக்காக 2 புதிய பள்ளிகளும், ஈரோடு, விருதுநகர், ஆகிய இடங்களில் செவிடர்களுக்காக 2 புதிய பள்ளிகளும் மதுரையில் கடுமையாக உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்காக ஒரு பள்ளியும் தொடங்கப்பட்டன.

தமிழ்நாடு சமூக நல வாரியம் :

தொண்டு நிறுவனங்கள், தாங்கள் மேற்கொண்டு வரும் பணிகளை மேம்படுத்தவும், பிரிவுபடுத்தவும், வலுப்படுத்தவும் மற்றும் புதிய பணிகள் முதலியவற்றைத் தொடங்கவும் சோதனை செய்து பார்க்கவும் இந்த சமூக நல வாரியம், நிதியுதவியை தொழில் நுட்ப உதவிகளையும் வழங்குகிறது.

இவ்வாரியத்தின் மானிய உதவித் திட்டங்கள் மகளிர், குழந்தைகள், முதியோர் ஏலாமையுற்றோர், உடல் ஊனமுற்றோர் ஆகியோரது நற்பணிக்காகப் பெரிதும் பாடுபடுகின்றன.

தமிழ்நாடு மாநில சமூக நல வாரியம் மற்ற வாரியங்கள் போல் அல்லாது, 1961 ஆம் ஆண்டில் சமூக நல இயக்குநர் அலுவலகத்துடன் இணைந்து ஒரு புதிய முறையில் செயல்படுகிறது. இதனால், அரசு, வாரியம், தொண்டு நிறுவனங்கள் ஆகிய இவற்றுக்கிடையே முறையான ஒத்திசைவு ஏற்படவும் ஒன்றையொன்று புரிந்துக் கொள்ளவும் ஏதுவாகிறது.

தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் திட்டங்களின் விவரம் வருமாறு :—

ஆண்டு மானியம்—திட்டக்கால மானியம் :

பதிவு செய்து கொண்ட தொண்டு நல நிலையங்களுக்கு, பாலவாடிகள், குழந்தைகள், ஊனமுற்றோர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், குடும்ப நலப் பணிகள், கைவினைத் திட்டம், மறு வாழ்வுத் திட்டம், குழந்தைகள் மருந்தகம், முதலியவற்றை நடத்துவதற்கு 50 சதவிகித இணை மானிய அடிப்படையில் ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது. இதற்கு ஆண்டு மானியத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் உயரளவுத் தொகை ரூ. 5,000 என்றும், திட்டக் கால மானியத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் உயரளவுத் தொகை ரூ. 10,000 என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆண்டு மானியம் என்பதன் கீழ், ரூ. 4.60 இலட்சம் மானியத்தைக் கொண்டு சுமார் 294 நிறுவனங்களைச் சேர்ந்த 11,855 பேர் உதவி பெற்றுள்ளார்கள். 1982–83 ஆம் ஆண்டில் திட்டக் கால மானியம் என்பதன் கீழ் அனுமதிக்கப்பட்ட ரூ. 2.78 இலட்சம் மானியத்தைக் கொண்டு 33 நிறுவனங்களைச் சேர்ந்த 2,040 பேர்கள் பயனடைந்துள்ளார்கள்.

மகிழ மண்டல் (மனமகிழ் மன்றம்)

இது, உள்ளூர் மகளிர் மன்றங்களின் நலஞ் விரும்பும் விரிவாக்கத் திட்டம் தொடர்பான ஓர் கிராமியத் திட்டமாகும். இதன் 75 சதவிகித செலவை வாரியம் ஏற்றுக் கொள்கிறது. இதன் 17 நிறுவனங்கள் 35 கிராமங்களில் தனது 35 மையங்களை

நடத்துகின்றன. பால்வாடி, சத்துணவு, சமூகக் கல்வி, கைவினை ஆகியன இத் திட்டத்தின் முக்கியப் பணிகளாகும். இத் திட்டத்திற்காக 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 1.13 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இதனால் 935 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

சத்துணவுத் திட்டம் :

ஒரு குழந்தையின் அடிப்படைத் தேவையைக் கருதி பால்வாடியிலுள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்க இத் திட்டம் விழைகிறது. பால்வாடிகளை நடத்தி வருகிற நிறுவனங்களுக்கு ஒரு குழந்தைக்கு 30 காசு என்கிற வீதத்தில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. 178 நிறுவனங்களின் மூலமாக சுமார் 4,835 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

1982—83 ஆம் ஆண்டில் இதற்காக ரூ. 4.79 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் காப்பகத் திட்டம் :

வேலை செய்யும் பெண்களுக்கும் நோயுற்ற மகளிருக்கும் உதவியளிக்கும் பொருட்டு குழந்தைகள் காப்பகம் தொடங்கும் நிறுவனங்களுக்கு உதவியளிக்கப்படுகிறது. பச்சிளம் குழந்தைகளைக் காலையில் இந்தக் காப்பகத்தில் விட்டு விட்டு வேலை முடித்து வீட்டுக்குச் செல்கிற போது திரும்ப குழந்தையை எடுத்துக் கொண்டு செல்கின்றனர். குழந்தைகளைப் பாதுகாத்துக் கொள்வதில் தனிப் பயிற்சி பெற்ற பணியாளர்கள் அக்குழந்தைகளுக்கு உணவளித்துக் கவனித்துக் கொள்கிறார்கள். சுமார் 552 குழந்தைக் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் 9 550 குழந்தைகள் கவனிக்கப்பட்டு வருகிறார்கள். 1982—83 ஆம் ஆண்டிற்கு ரூ. 34.45 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைத் தொழிற் பயிற்சி திட்டம் :

வேலை வாய்ப்பு அவசியமாக உள்ள, தகுதியுள்ள 16 லிருந்து 30 வயதுக்கு உட்பட்ட மகளிர்க்கு வேலைவாய்ப்பை உருவாக்கியளிக்கும் வகையில் தொண்டு நிறுவனங்களின் மூலமாக வாழ்க்கைத்தொழில் பயிற்சித் திட்டங்களைத் தொடங்குவதற்குச்

சமூக நல வாரியம் நிதியுதவியையும் தொழில் நுட்ப உத்தியையும் அளிக்கிறது. வேலை வாய்ப்புத் திறனைத் தெரிவு செய்து செயற்படுத்தப்படும் பயிற்சித் திட்டங்களில் பெண்கள் தங்களது கல்வித்தகுதி முதலியவற்றிற்கேற்ப பொருத்தமான பயிற்சியைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். இத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் ஊசி வேலை, உடை தைத்தல், அரசுத் தேர்வு, பூ வேலை, சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கு வைப்புப் பயிற்சி, வணிக நிருவாகப்பயிற்சி, அச்சுப்படி படித்தல், அச்சுக் கோர்த்தல் புத்தகம் கட்டுதல் போன்ற அச்சகப் பயிற்சி, செவிலியர் உதவிப் பயிற்சி, இல்லப் பாதுகாப்பாளர் பயிற்சி, வானொலிப் பெட்டி பழுது பார்த்தல், தொலைக் காட்சிப் பெட்டி பராமரிப்புப் பயிற்சி, குழந்தைகள் காப்பகம்-பாலர் பள்ளிப் பயிற்சி: நிழற் படப் பயிற்சி போன்ற 100-க்கு மேற்பட்ட பயிற்சி வகுப்புகள் பெண்களுக்காக நடத்தப்படுகிறது. மேற்கண்ட திட்டங்களில் பெரும்பாலானவை வேலை வாய்ப்புக் கிடைக்கக் கூடியவையாகும். அவை அரசால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சித் திட்டங்களாகும். இத்திட்டம் 1978–79 ஆம் ஆண்டிலிருந்து செயல் படத் தொடங்கியது. இதுவரையில் இத் திட்டத்தால் 2,500 பெண்கள் பயனடைந்துள்ளனர். 1982–83 ஆம் ஆண்டில் வெவ்வேறு பயிற்சி வகுப்புகளைக் கொண்ட 76 நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ. 14.49 இலட்சம் மானிய உதவி அளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் 1,580 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

சமூக பொருளாதாரத் திட்டம் :

சமூக பொருளாதாரத் திட்டமென்று அழைக்கப்படும் மத்திய சமூக நல வாரியத்தின் சமூகப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் கல்வி கற்க விருப்பமில்லாத ஆனால் வாழ்க்கைத் தொழில் அடிப்படையிலான பயிற்சி திறன் பெற்ற பெண்கள், தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அல்லது தங்களது குடும்ப வருமானத்திற்கு உதவியாக ஊதியம் ஈட்டும் ஒரு தொழில் உருவாக்கிக் கொடுக்கப்படுகிறது. உற்பத்தித் தொழில் பிரிவுகள் சிறு தொழில்கள், பெருந்தொழில்களுக்குத் தேவைப்படுகிற துணைத் தொழில் பிரிவுகள் கைவினைத் தொழில் பிரிவுகள்: வேளாண் தொழில் பிரிவுகள் (பாற் பண்ணைத் திட்டம்) சுய வேலை வாய்ப்புத் திட்டம் (தையல் கைத்தறி நெசவு) முதலிய

வற்றை அமைத்துக் கொள்ள மத்திய சமூக நல வாரியம் மானியம் வழங்குகின்றது.

இயந்திரத் தளவாடங்கள் வாங்குவதற்கும், நடைமுதல் மூல தனத்திற்கும் இந்நிறுவனங்கள் நிதியுதவி அளிப்பதோடல்லாமல், பெண்களுக்கு வணிகத்தில் தேர்ச்சி பெற உதவும் வகையில் வணிகத்தில் குறுகிய கால பயிற்சியளிக்கவும் நிதியுதவி அளிக்கிறது.

இத்திட்டம், சிறு தொழில் பிரிவுகள், பாற் பண்ணைப் பிரிவுகள், சுய வேலை வாய்ப்புத் தொழிற் பிரிவுகள், துணைத்தொழில் பிரிவுகளைக் கொண்டதாகும். சிறு தொழில் பிரிவுகளின் கீழ் தமிழ் நாட்டில் வெவ்வேறு தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 47 தொழிற் பிரிவுகள் உள்ளன. இவற்றின் மொத்த முதலீடு ரூ. 19.50 இலட்சமாகும். இதனால் 1981—82 ஆம் ஆண்டு வரையில் 660 பெண்கள் பயனடைந்துள்ளனர். 1982—83 ஆம் ஆண்டில் 30 பெண்களுக்குப் பயனளிக்கும் வகையில் ரூ. 4.53 இலட்சம் மானியத்தைக் கொண்டு 5 தொழிற் பிரிவுகளைத் தொடங்க இசைவளிக்கப்பட்டது.

பாற்பண்ணைத் திட்டத்தின் கீழ், 534 பிரிவுகளுக்கும் இசைவளிக்கப்பட்டுள்ளன. இதனால் இதுவரையில் 3,042 பெண்கள் பயனடைந்துள்ளனர். இது ஒரு வட்டி இல்லா கடன்-மானியத் திட்டமாகும். 1982—83 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 7.30 இலட்சம் தொகையைக் கொண்டு 35 பிரிவுகளுக்கு இசைவளிக்கப்பட்டுள்ளன. இதனால் 373 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 530 பெண்கள் பயனடையும் 53 தொழிற் பிரிவுகளுக்கு இசைவளிக்கப்பட்டுள்ளன. 1982—83 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 40,000 தொகையைக் கொண்டு 40 பெண்கள் பயன் பெறும் 4 தொழிற் பிரிவுகளுக்கு இசைவளிக்கப்பட்டுள்ளன.

பிற்பட்டோர் நலத்துறை :

பள்ளிகளைப் பராமரித்தல் : (கள்ளர் சீர்திருத்தங்கள் உட்பட)

இம்மாநிலத்தில் குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப் பட்டோருக்காக 277 பள்ளிகள் இத்துறையின் மூலம் நடத்தப் படுகின்றன. மொத்தப் பள்ளிகளும் எண்ணிக்கைகளும் அவற்றில் படிக்கும் மாணவர்களைப் பற்றிய விவரங்களும் கீழே தரப் பட்டுள்ளன :

வ.எண்.	பள்ளிகளின் எண்ணிக்கை.	மாணவர் களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1. ஆரம்பப் பள்ளிகள்	231	33,013
2. உயர் துவக்கப் பள்ளிகள்	36	13,869
3. உயர் நிலைப் பள்ளிகள்	8	1,955
4. மேல் நிலைப் பள்ளிகள்	2	1,576
	277	50,413

1982–83-ல் இந்தப் பள்ளிகளில் படித்த மொத்த மாணவர் களின் எண்ணிக்கை 50,413. மதுரை மாவட்டத்தில் கள்ளர் சீரமைப்பில், தனி துணை ஆட்சியரின் மேற்பார்வையில் இந்த மேற்காணும் 277 பள்ளிகளில் 248 பள்ளிகள் பிரமலை கள்ளர் மாணவர்களுக்கென இயங்கி வருகின்றன. அவற்றில் 45,235 மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

விடுதிகளையும், உணவு இல்லங்களையும் பராமரித்தல் :

இந்த குறிப்பிட்ட ஆண்டில் பிற்பட்டோருக்காக 375 விடுதிகளும், குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டோருக்காக 65 இல்லங்களும் நடத்தப்பட்டு வருகின்றது. இவற்றில் முறையே 21,028 மாணவர்களும் 5,684 மாணவியர்களும் தங்கி வருகிறார்கள்.

இந்த பிற்பட்டோர் உணவு விடுதிகளிலும், குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டோருக்கான உணவு இல்லங்களிலும் கீழ்க்கண்ட விகிதாச்சாரப்படி மாணவர்கள் சேர்க்கப் படுகிறார்கள்.

	பிற்பட்டோர் விடுதிகள்.	குற்றப்பட்டியலிருந்து நீக்கப் பட்டோர் உணவு இல்லங்கள்.
(1)	(2)	(3)
1. பிற்பட்டோர்	65 சதவீதம்	குற்றப்பட்டியலிருந்து நீக்கப் பட்டோர் 60 சதவீதம்.
2. தாழ்த்தப்பட்டோர்	25 சதவீதம் ..	பிற்பட்டோர் 10 சதவீதம்.
3. முன்னேறிய வகுப்பினர்	10 சதவீதம் ..	தாழ்த்தப் பட்டோர் 25 சதவீதம்
		முன்னேறிய வகுப்பினர் 5 சதவீதம்

விடுதிகளில் மாணவர்களைச் சேர்க்க வருட வருமானம் ரூ. 5,000/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மதிய உணவு :

மதுரை மாவட்டத்தில் உள்ள குற்றப் பட்டியலிரு நீக்கப்பட்டோர் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் அனைவருக்கும் மாணவர் ஒவ்வொருவருக்கும் 20 பைசா என்ற அளவில் வழங்கப்பட்டு வருகின்றன. 10–3–75-ந் தேதி முதல் ''கேர்'' உணவும் வழங்கப்பட்டு வருகின்றது. வருடத்தில் 100 நாட்களுக்கு 'கேர்' உணவும் மீதி 120 நாட்களுக்கு பிற்பட்டோர் நலத் துறை செலவில் உணவும் 30–6–82 முடிய வழங்கப்பட்டது. 1–7–82 முதல் முதல்வர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. 5 முதல் 9 வயது வரையில் 1 முதல் 14வது வரையிலும் உள்ள மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கப்படுகிறது. ஆண்டு முழுவதும் குறிப்பிட்ட விடுமுறை நாள் தவிர இவ்வுணவு வழங்கப்

படுகிறது. 1982—83-ல் இந்த வகையில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 21.26 இலட்சங்களாகும்'

சீருடைகள் :

பிற்பட்டோர் பள்ளி மாணவ மாணவியர் விடுதிகளிலும் குற்றப்பட்டியிலிருந்து நீக்கப்பட்டோருக்குரிய இல்லங்களில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் 2 செட் சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் கள்ளர் மற்றும் குற்றப் பட்டியிலிருந்து நீக்கப்பட்டோர்களுக்கான பள்ளிகளில் 8-வது வகுப்பு வரை படிக்கும் மாணவர் மாணவியர்களுக்கும் சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றது. இது தீபாவளிக்கு ஒரு செட் சீருடையும், பொங்கலுக்கு ஒரு செட் சீருடையுமாக வழங்கப்படுகின்றது. இதற்காக 1982—83-ல் செலவழிக்கப் பட்ட தொகை ரூ. 33.55 இலட்சமாகும். இத்துறை கள்ளர் பள்ளிகளில் பயிலும் ஒன்று முதல் 3 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகளுக்கு எழுது பலகைகளும், பாட புத்தகங் களும் 4 முதல் 10-ம் வகுப்புவரை புத்தகங்களும் நோட்டுப் புத்த கங்களும், சிலேட்டுகளும் இனாமாக வழங்கப்பட்டு வரு கின்றது. இதற்காக 1982—83-ம் ஆண்டு செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 6.03 இலட்சமாகும்.

உணவு மான்யங்கள் :

பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 5,000 க்கு உட் பட்ட தனியார் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு அவர்களின் உணவுக்காக ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 35- வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இத் தொகை கீழ்க்கண்டவாறு 1981—82 முதல் உயர்த்தப் பட்டுள்ளது :—

	தற்போதைய தொகை (மாதம் ஒன்றுக்கு)	திருத்திய தொகை (மாதம் ஒன்றுக்கு)
(1)	(2)	(3)
சென்னை நகரம், மாவட்டத் தலைநகர், தாலுகா தலை நகரங்களில் இருக்கும் விடுதி களுக்கு	ரூ. 35	ரூ 45-
பிற இடங்களில் உள்ள விடுதி களுக்கு	ரூ. 35	ரூ. 40-

1982,–1983 ல் வழங்கப்பட்ட உணவு மான்யங்கள் பின்வருமாறு :

	விடுதிகளின் எண்ணிக்கை.	உணவு மானியம் நிர்ணயம் செய்தது.	செலவழிக்கப் பட்ட தொகை
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்)	
1. பிற்பட்டோருக்கு ..	43	2:536	8.44
2. குற்றப்பட்டியிலிருந்து நீக்கப்பட்டோருக்கு	4	87	0.11
	47	2,623	8.55

மாநில உதவித் தொகைகள் :

பெற்றோரின் வருட வருமானம் ரூ. 5,000-க்கு அதிகப் படாமல் உள்ள பிற்பட்ட குற்றப்பட்டியிலிருந்து நீக்கப் பட்ட மாணவர்களுக்கு கல்லூரிப் படிப்புகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றன. பள்ளிப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகைக்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப் பட்ட பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. கல்வித்துறையில் நிர்ணயம் செய்யப்பட்ட சிறப்புக் கட்டணமும், தேர்வுக்கட்டணம் முறையே பள்ளி களுக்கும் அரசுத் தேர்வு இயக்குநருக்கும் இத்துறையின் மூல மாக வழங்கப்படுகின்றன.

1982–1983ஆம் ஆண்டு வழங்கப்பட்ட உதவித் தொகைகள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

	பள்ளிப்படிப்பு மாணவர்கள்.	கல்லூரிப் படிப்பு மாணவர்கள்.
(1)	(2)	(3)
1 பிற்பட்டோர்கள் ..	1,23,000	1,18,000
2. குற்றப்பட்டியிலிருந்து நீக்கப்பட்டோர் ..	1,90,000	7,800
மொத்தம்	3,13,000	1,25,800

	மதிப்பீடு.	
	செலவழிக்கப்பட்ட	தொகை இலட்சத்தில்
	பள்ளிப்படிப்பு.	கல்லூரி படிப்பு.
	(4)	(5)
1. பிற்பட்டோர்கள்	30.59	298.59
2. குற்றப்பட்டியிலிருந்து நீக்கப்பட்டோர் ..	19.95	23.87
மொத்தம்	50.54	322.46

பிற்பட்டோருக்கு இலவசத் தொழில் கருவிகள் :

சவரத் தொழிலாளர்களுக்கும் சலவைத் தொழிலாளர்களுக்கும் தங்களது தொழிலை மேற்படுத்தும் பொருட்டு இலவசத் தொழிற் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சலவைத் தொழிலாளர்களுக்கு ரூ. 350/- மதிப்பிலும், சவரத் தொழிலாளர்களுக்கு ரூ. 95/- மதிப்பிலும் கருவிகள் வழங்கப் பட்டு வருகின்றன. 1979—80-ல் கல் உடைக்கும் போயர் களுக்கு ரூ. 150/- மதிப்பில் இலவசத் தொழிற் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1982—1983 இல் பயனடைந்தவர்களின் விவரங்கள் கீழ்வருமாறு :

தொழிற் கருவி	பயனடைந்தோர்.	செலவழிக்கப் பட்ட தொகை,
(1)	(2)	(3)
		ரூபாய்.
1. சவரத் தொழிற்கருவி	3,000	3,00,690.00
2. சலவைத் தொழிற்கருவி	4,445	16,41,326.25
3. போயர் தொழிற்கருவி	500	75,000.00
	7,945	20,17,006.2

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்கு இலவச தொழில் கருவிகள் :

பொதுநோக்கு பொறியியல் பட்டறையில் பயின்று வெற்றி பெற்றுவரும் குற்றப்பட்டியிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்குச் சொந்தமாக தொழில் செய்யும் பொருட்டு கீழ்க்கண்ட தொழிலுக்கு இலவசக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1982–83-ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை 0.09 இலட்சம்.

தொழிலின் பெயர்.	ஒரு செட்டுக்கு வழங்கப்படும் தொகை. ரூபாய்.
(1)	(2)
1. கருமார் தொழிற் கருவி	6.00
2. பிட்டர் தொழிற் கருவி	900
3. தசரத் தொழிற் கருவி	200

விவசாயம் :

குற்றப் பட்டியிலிருந்து நீக்கப்பட்ட மக்களுக்கு கிணறு வெட்ட ரூ. 2,500/- மானியமாக மூன்று தவணைகளில் வழங்கப்பட்டு வருகின்றது. 1982–83-க்கு பாசன கிணறுகளீ வெட்ட ரூ. 0.91 வழங்கப்பட்டது.

குடிசைத் தொழில்கள் :

மதுரை மாவட்டம், செக்கானூரரணியிலும், ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரிலும், நெல்லை மாவட்டம் வீரகேரளம் புதூரிலும், மூன்று பொதுநோக்கு பொறியியல் பட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றன. குமரி மாவட்டத்தில் தக்கலையில் ஒருபிரம்பு பயிற்சி நிலையமும், குழித்துறையில் ஒரு தும்பு பயிற்சி நிலையமும் நடத்தப்பட்டு வருகிறது தென்னாற்காடு மாவட்டம் அஜீஸ் நகரில் ஒரு தச்சுக்கூடமும் ஒரு நெசவு கூடமும் நடத்தப்படுகின்றது.

கீழ்க்கண்ட மாவட்டங்களில் 7 தையற் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

1.	மதுரை மாவட்டம் ..	உசிலம்பட்டி மற்றும் கம்பம்
2.	ராமநாதபுரம் மாவட்டம்	கடலாடி.
3.	நெல்லை மாவட்டம்	குலவணிகபுரம் மற்றும் தேவர் குலம்.
4.	தென்னாற்காடு மாவட்டம்	அஜீஸ் நகர் குடியிருப்பு
5.	குமரி மாவட்டம ..	கிருஷ்ணன் கோயில் நாகர் கோயில்.

தனிப் பயிற்சி நிலையம் :

மாவட்ட குற்றப் பட்டியிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்கு அகில இந்திய அளவில் நடத்தப்படும் ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ்., தேர்வுகளுக்கு நல்ல பயிற்சி அளிக்கும் வகையில் இப்பயிற்சி நிலையம் பணிபுரிந்து வருகின்றது. 1982—83-ம் ஆண்டில் 43 மாணவர்கள் தேர்வு எழுதியதில் 8 மாணவர்கள் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்திய ஆரம்பத் தேர்வில் தேர்ச்சி பெற்றனர்.

கள்ளர் சீரமைப்பு :

மதுரை மாவட்டத்தில் கள்ளர் சீரமைப்பு பிரிவுக்கு ஒரு தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) நியமிக்கப்பட்டு அவர் நிர்வாகத்தின் கீழ் இது இயங்கி வருகிறது. கள்ளர் சீரமைப்பில் இயங்கி வரும் பள்ளிகள் மற்றும் உணவு இல்லங்களின் எண்ணிக்கையும் அவைகளில் மாணவர்களின் சேர்க்கையும் கீழே தரப்பட்டுள்ளன :

	பள்ளியின் எண்ணிக்கை.	மாணவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1. ஆரம்பப்பள்ளிகள் ...	208	29,497
2. உயர் துவக்கப் பள்ளிகள் ..	30	12,207
3. உயர் நிலைப் பள்ளிகள் ...	8	1,955
4. மேல்நிலைப் பள்ளிகள் ..	2	1,576
	248	45,235

இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குச் சிறப்புக் கட்டணம் இத்துறையால் வழங்கப்படுகின்றது. கள்ளர் பள்ளிகளுக்காக தனியாக மாவட்ட ஸ்கவுட் சங்கம் ஒன்று மதுரை மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது. இந்த கள்ளர் பள்ளிகளில் 554 சாரணப் பிரிவுகள் அங்கம் வகிக்கின்றன. கள்ளர் சீரமைப்பில் உள்ள மொத்தம் 32 உணவு இல்லங்களில் 3,730 மாணவர்கள் தங்கிக் கல்வி பயிலுகின்றனர். 1982—83-க்கு கள்ளர் சீரமைப்பில் பல திட்டங்களுக்கும் 213.12 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

அஜிஸ் நகர் குடியிருப்பு

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள அஜீஸ்நகர் குடியிருப்புக்கு தாசில்தார் தகுதியில் ஒரு மேலாளர் நியமிக்கப்பட்டு அவரது நிர்வாகத்தில் இக்குடியிருப்பு நடைபெற்று வருகின்றது. இந்தக் குடியிருப்பில் உள்ள மக்களுக்கு முக்கியத் தொழில் விவசாயம். இவர்களுக்காக விவசாய நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டு விவசாயம் செய்ய ஊக்குவிக்கப்பட்டனர். இவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு வழங்கும் பொருட்டு அங்கு ஒரு தச்சுக்கூடமும், நெசவுக் கூடமும் நடத்தப்பட்டு வருகின்றது. இவைகள் தவிர இந்தக் குடியிருப்பில் 5 குழந்தைகள் காப்பகங்கள் நல்ல முறையில் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது. 20 மாணவிகளுக்கு ஒரு தையற் பள்ளியும் நிறுவப்பட்டுள்ளது. 1982—83-ல் இத்திட்டங்களுக்குச் செலவு செய்யப்பட்ட தொகை வருமாறு :

திட்டத்தின் பெயர்.	செலவழிக்கப் பட்ட தொகை.
(1)	(2)
	(ரூ. லட்சம்)
1. தச்சு நெசவுக் கூடங்கள் — — —	0.15
2. 5 குழந்தைகள் சங்கங்கள் — — —	0.14
3. தையற் கல்வி	0.21

இந்தக் குடியிருப்பில் 315 மாணவர்களைக் கொண்ட ஆரம்பப் பள்ளி ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது. இந்தக் குடி

யிருப்பில் நடத்தி வந்த உயர்நிலைப் பள்ளி கல்வித்துறைக்கு 13—6—76-ல் மாற்றப்பட்டது. ஆரம்பப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவும் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் சிலேட்டுகளும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. வருடத்திற்கு இரண்டு செட் சீருடையும், இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. இக்குடியிருப்பு மக்களிடம் ஏற்படும் சில சச்சரவுகளை கிராமப் பஞ்சாயத்து தீர்த்து வைத்து வருகின்றது.

அத்தியாயம் 24

போக்குவரத்துத் துறை

TAMIL NADU STATE DEPARTMENT OF ...
LIBRARY.
Acc No ...
Date ...
MADRAS-28.

அத்தியாயம் 24.

நெடுஞ்சாலை-ஊரகப் பணித் துறை.

தமிழகத்திலுள்ள அனைத்துச் சாலைகளின் பராமரிப்பு மற்றும் அமைப்பு, சாலை அமைப்பிற்கு முன்னோடியாக தேவைப் படும் திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்பு என்பன போன்ற பணிகளை இத்துறை பொறுப்பேற்று செயல்படுத்தி வருகின்றது. தவிரவும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் மேற் கொள்ளப்படும் சாலை வளர்ச்சி பணிகளுக்கு இத்துறை தொழில் நுட்ப ஆலோசனையை வழங்கி வருகின்றது. ஒதுக்கப்பட்ட நிதி வசதியை அனுசரித்து சாலை வளர்ச்சி பணிகள் நன்கு திட்டமிடப்பட்டு அவைகள் யாவும் நன்றாக செயல்படுத்தப் பட்டு.வருவதுடன் மற்றும் அவைகள் யாவும் நன்றாக பராமரிக்கப் பட்டு வருகின்றன.

தமிழ்நாடு 'மாநில நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறை' கீழே கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு வகைகளைச் சேர்ந்த சாலைகளை பராமரித்து வருகின்றது. அச்சாலைகளின் நீளம் 1—4—1982 ஆம் நாள் நிலவரப்படி கீழ் வருமாறு :—

	நீளம் கிலோ மீட்டரில்.
(அ) தேசிய நெடுஞ்சாலைகள் (நகர் பகுதி)	139
(ஆ) மாநில நெடுஞ்சாலைகள்	1,814
(இ) மாவட்டப் பெருஞ்சாலைகள்	14,028
(ஈ) மாவட்ட இதர சாலைகள்	19,765
மொத்தம்	35,746

தேசிய நெடுஞ்சாலைகள் (நகர்ப் பகுதி)

ரூ. 38.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஆறு பணிகள் தாம்பரம், ஆம்பூர், திண்டிவனம், திருநெல்வேலி, பாளையங் கோட்டை மற்றும் நாமக்கல் ஆகிய நகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்வதற்காக 1982-83 ஆம் ஆண்டின் பகுதி 2 திட்டத்

தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அப்பணிகள் செயலாக்கத்தில் பல்வேறு நிலைகளில் உள்ளன. 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 32.83 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மாநில நெடுஞ்சாலைகள்

1982-83 ஆம் ஆண்டில் ரூ. 80.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஆறு பணிகளுக்கு பகுதி-2 திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் பல்வேறு நிலைகளில் செயற்படுத்தப்படுகின்றன. ரூ. 36.00 இலட்சம் செலவில், தஞ்சாவூர் மாவட்டத்தில் இப்பகுதி மக்களின் நீண்ட நாள் தேவையை நிறைவு செய்யும் பெரம்பலூர்-மானாமதுரை சாலையில் 58/4 கிலோ மீட்டரில் பாலத்தை அகலப்படுத்தும் பணி குறிப்பிடதக்கதாகும். 1982-83-ல் இத்திட்டத்தின் கீழ் ரூ. 174.01 இலட்சம் செலவிடப்பட்டது.

மாவட்ட பெருஞ்சாலைகள்

1982-83 ஆம் ஆண்டிற்கு ரூ. 577.00 இலட்சம் செலவில் 25 பணிகள் பகுதி-2 திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்படுகின்றன 1982-83 ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 219.61 இலட்சம் செலவிடப்பட்டது.

இதர மாவட்ட சாலைகள் :

1982-83-க்கு ரூ. 473.00 இலட்சம் செலவாகக்கூடிய 18 பணிகளுக்கு பகுதி-2 திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. நிறைவேற்றப்பட்டு வரும் இப்பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. நடப்பாண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 192.74 இலட்சம் செலவிடப்பட்டது.

இதர சாலைகள் திட்டம் :

1982-83-ம் ஆண்டிற்காக, 26 பணிகளுக்கு ரூ. 580.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 270.65 இலட்சம் செலவிடப்பட்டது.

வனப் பகுதியில் மலைப் பகுதியின் சாலை மேம்பாட்டுத் திட்டம்:

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் வனப்பகுதி எல்லைக்குள் செல்லும் சாலைகளையும் மேம்பாடு செய்ய தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இதுவரை, இத்திட்டத்தின் கீழ் ஆறு பணிகளுக்கு ரூ. 399.40 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி அளிக்கப் பட்டது. அவற்றில் ரூ. 59.40 இலட்சம் செலவிலான 3 பணிகள் வனத்துறையின் நிதிகளைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ரூ. 340 இலட்சம் செலவிலான எஞ்சியுள்ள 3 பணிகள், நெடுஞ்சாலைகள் துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளை கொண்டு நிறைவேற்றப்படுகின்றன. அனுமதிக்கப்பட்ட அப் பணிகள் வெவ்வேறு முன்னேற்ற நிலைகளில் உள்ளன. 1980-81 ஆம் ஆண்டிலும் 1981-82 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்காக முறையே ரூ. 32·00 லட்சமும் ரூ. 42.85 லட்சமும் செலவிடப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 38.35 இலட்சம் செலவிடப்பட்டது.

துறைமுகத் துறை :

தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறையின் ஆட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருவது தமிழ்நாடு துறைமுகத் துறை. கடலூர், நாகப்பட்டினம் ஆகிய இரண்டு இடைநிலைத் துறைமுகங்களும், இராமேசுவரம், பாம்பன், கீழக்கரை, குளச்சல், கன்னியாகுமரி, ஆகிய ஐந்து சிறு துறைமுகங்களும் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள மாநிலத் துறைமுக அலுவலர் அவர்கள் துறைத் தலைவர் ஆவார். மேற்கூறப்பட்ட இடைநிலை மற்றும் சிறு துறைமுகங்களின் பராமரிப்புடன் மீன்பிடி துறைமுகங்களைக் கட்டும் பணியையும் 1983 பிப்ரவரி மாதம் வரை அரசு ஆணைப் படி ஏற்று நடத்தி வந்தது. 1983 மார்ச் மாதம் முதல் அனைத்து மீன்பிடித் துறைமுகக் கட்டுமானப் பகுதி பணிகளும் மீன்துறை அலுவலகத்திடம் மாற்றம் செய்து ஒப்படைக்கப்பட்டன.

வானிலை :

கடலூர் துறைமுகம் :

ஆண்டு முழுவதும் வழக்கமான பருவநிலை மாறுதல்களுடன் இருந்தது. கடுமையான விளைவு ஏதுமில்லை.

நாகப்பட்டினம் துறைமுகம் :

நவம்பர் 1982 முதல் டிசம்பர் 1982 வரை உள்ள மாதங்களைத்தவிர மற்ற மாதம் முழுவதும் பருவ நிலை சாதாரணமாக இருந்தது.

ராமேஸ்வரம் துறைமுகம் :

ஆண்டு முழுவதும் வழக்கமான பருவ நிலை இருந்தது. பருவ நிலைக்கு அப்பாற்பட்ட விளைவு ஏதுமில்லை.

கன்னியாகுமரி துறைமுகம்

பருவநிலை பொதுவாக நல்ல நிலையில் இருந்தது.

மற்ற துறைமுகங்கள் :

பருவநிலை சாதாரணமாக பருவ காலத்தை ஒட்டியே இருந்தது.

மாநில துறைமுக அலுவலர் அரசுச் சரக்கு முகவராக இருத்தல் :

தற்போது செயற்பாட்டில் உள்ள அரசு உத்தரவின்படி மாநிலத் துறைமுக அலுவலர் அவர்கள் பல்வேறு அரசுத் துறைகள் அரசு நிறுவனங்களின் அரசுச் சரக்குகளை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் முகவராகவும் பணி புரிந்து வருகிறார். 1982-83 ஆம் ஆண்டில் 2,736 மெட்ரிக் டன் எடையுள்ள 56,011 சரக்குக் கட்டுகள் இறக்குமதியாயின. இதுவே சென்ற ஆண்டில் (1981-82) 2,848 மெட்ரிக் டன் எடையுடன் கூடிய 28,158 சரக்குக் கட்டுகளாக இருந்தன.

கடலூர் துறைமுகம் :

இந்த ஆண்டில் 39 கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு வந்தன. அதேபோல் 38 கப்பல்கள் வெளிச் சென்றன. 1,90,524.5 மெட்ரிக் டன் எடையுள்ள சரக்குகள் இறக்குமதியாயின. 42,927.5 மெட்ரிக் டன் எடையுள்ள சரக்குகள் ஏற்றுமதியாயின. இறக்குமதியான சரக்குகளில் முக்கியமானது 1,90,524.5 மெட்ரிக் டன் எடையுள்ள உரமாகும். சென்ற ஆண்டில் இது (1981-82)

141,832 மெட்ரிக்.டன் ஆக இருந்தது. ஏற்றுமதியான சரக்குகளில் முக்கியமானது 42,927.5 மெட்ரிக் டன் எடையுள்ள பொதுவகைச் சரக்குகளும் ஆகும். சென்ற ஆண்டின் போது இதுவே 27,959 மெட்ரிக் டன்களாக இருந்தது.

நாகப்பட்டினம் துறைமுகம் :

இந்த ஆண்டில் 52 கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு வந்தன. 52 கப்பல்கள் வெளிச் சென்றன. சென்ற ஆண்டில் இவை முறையே 63, 63 ஆக இருந்தன. இறக்குமதியான சரக்குகளின் எடை 28,460.4 மெட்ரிக் டன். ஏற்றுமதியான சரக்குகளின் எடை 20,411.0 மெட்ரிக் டன் இறக்குமதியான முக்கிய சரக்கு 14,696.9 மெட்ரிக் டன் எடையுள்ள கோதுமை, ஏற்றுமதியான முக்கிய சரக்கு 14,268.0 மெட்ரிக் டன் எடையுள்ள வெங்காயம் மற்றும் 1,000.0 மெட்ரிக் டன் எடையுள்ள அரிசித் தவிடும் ஆகும். மற்றவை 5,143.0 மெட்ரிக் டன் எடையுள்ள பொதுவகைச் சரக்குகளாகும்.

ராமேஸ்வரம் துறைமுகம் :

இந்தத் துறைமுகத்தில் ஸ்ரீலங்காவுக்குச் செல்லுகின்ற மற்றும் அங்கிருந்து வருகின்ற பயணிகளின் போக்குவரவு முக்கியமாக நடைபெறுகின்றது. இந்த ஆண்டில் 150 கப்பல்கள் வந்தன. அதேபோல் 149 கப்பல்கள் வெளிச் சென்றன. கப்பலில் ஏறிய பயணிகள் 97,284 பெரியவர்கள், 2,736 குழந்தைகள் (மொத்தம் 1,00,020). கப்பலில் இருந்து இறங்கியவர்கள் 1,01,735 பெரியவர்கள் 9,912 குழந்தைகள் (மொத்தம் 1,11,647) ஸ்ரீலங்காவிலிருந்து வந்து இறங்கிய அகதிகள் மொத்தம் 27,825 ஆகும். இந்த ஆண்டில் இறக்குமதியான சரக்குகளின் எடை 89.50 மெட்ரிக் டன். ஏற்றுமதியான சரக்குகளின் எடை 258.75 மெட்ரிக் டன். பயணிகள் தங்களுடன் எடுத்துவரும் மோட்டார் கார்களும், மோட்டார் சைக்கிளுமே ஏற்றுமதி, மற்றும் இறக்குமதியாகும் முக்கியச் சரக்குகள் ஆகும்.

பாம்பன் துறைமுகம் :

இந்த ஆண்டில் இத் துறைமுகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி ஏதும் இல்லை. 57 கலங்கள் பாம்பன் கால்வாயைக் கடந்துள்ளன. இங்கு (3) மூன்று வழிகாட்டிகள் உள்ளனர்.

கிழக்கரை துறைமுகம் :

இந்த ஆண்டில் இத்துறைமுகத்தில் போக்குவரத்து ஏதும் இல்லை. கிழக்கரை கால்வாய் மார்க்கமாக கலங்கள் ஏதும் செல்லவில்லை. இங்கு ஒரு வழிகாட்டி மட்டும் உள்ளார்.

குழச்சல் துறைமுகம் :

இந்த ஆண்டில் இந்தத் துறைமுகத்திற்கு 6 கப்பல்கள் வந்தன. 6 கப்பல்கள் வெளிச் சென்றன. இங்கு இவ்வாண்டில் ஏற்றுமதியான முக்கிய சரக்கு இல்லுமனைட் மணல் ஆகும். இந்த ஆண்டில் 57,337 மெட்ரிக் டன் இல்லுமனைட் மணல் ஏற்றுமதியாகியுள்ளது.

கன்னியாகுமரி துறைமுகம் :

1—10—1981-ல் தமிழக அரசு இந்தப் படகு போக்குவரத்தினை ஏற்று நடத்த எடுத்துக்கொண்ட பின்னர் 2—10—81ல் இருந்து தமிழ்நாடு துறைமுகத்துறையே இந்தப் பணியினை மேற்கொண்டு நடத்தி வருகின்றது. விவேகானந்தா கேந்திராவிலிருந்து 62 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட்டு இந்தப் பணி நடைபெற்று வருகிறது. 1—4—82 முதல் 31-3-1983 முடிய பார்வையாளர்கள் எண்ணிக்கை (சிறு குழந்தைகளையும் சேர்த்து) 10,29,198. 1-4-1982 முதல் 31—3—1983 முடிய பார்வையாளர் படகுப் போக்குவரத்துக் கட்டண வசூல் ரூ. 18,01,568.

மோட்டார் வாகனங்களின் நிருவாகம்.

1939-ஆம் ஆண்டு இயக்கு ஊர்திகள் சட்டம், 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கு ஊர்திகள் வரி விதிப்புச் சட்டம் ஆகிய சட்டங்களையும், அவற்றின் கீழ் தொகுக்கப்பட்ட விதிகளையும் செயற்படுத்துவதாகும்.

மாநிலப் போக்குவரத்து அதிகாரியான போக்குவரத்து ஆணையாளரின் நிர்வாகப் பொறுப்பில் போக்குவரத்துத் துறை செயல்படுகிறது. மாநிலத் தலைமையளவில் போக்குவரத்து ஆணையாளருக்கு உதவியாக ஒரு இணைப் போக்குவரத்து ஆணையாளர் ஒரு கூடுதல் இணைப் போக்குவரத்து ஆணையாளர் மற்றும்

மூன்று துணைப் போக்குவரத்து ஆணையாளர்கள் உள்ளனர். தலைமையகத்தில் மூன்று உதவிச் செயலாளர்கள், ஒரு துறைப் பிரதிநிதி, ஒரு கணக்கு அலுவலர், ஒரு இயக்கு ஊர்தி உதவிப் பொறியாளர் மற்றும் ஒரு உதவிப் புள்ளியியல் இயக்குநர் ஆகியோர் செயல்படுகின்றனர்.

இத்துறையின் அமைப்பு வசதிக்காக, மாநிலம் ஆறு கோட்டங்களாகப் பகுக்கப்பட்டு, கோட்டம் ஒவ்வொன்றும், ஒரு துணைப் போக்குவரத்து ஆணையாளரின் கீழ் இயங்குகிறது.

சோதனைச் சாவடிகள் :

இந்த அறிக்கை ஆண்டில் சோதனைச் சாவடிகளின் ஊர்திகளை ஆய்ந்து வசூலித்த வரி மற்றும் கட்டணத் தொகை ரூபாய் 47,08,968.

மாநில போக்குவரத்து மேல் முறையீடு நடுவர் மன்றம் :

மொத்தமுள்ள 1,621 மறு ஆய்வு மனுக்கள் மற்றும், 3,011 மேல் முறையீடுகளில் 1,003 மறு ஆய்வு மனுக்களையும் 1,734 மேல் முறையீடுகளையும் பைசல் செய்தது போக ஆண்டு இறுதியில் நிலுவையில் உள்ளவை 618 மறு ஆய்வு மனுக்களும் 1,277 மேல் முறையீடுகளும் ஆகும்.

உயர்நீதி மன்றத்தில் இவ்வாண்டு பதிவு செய்யப்பட்ட நீதிப் பேராணை மனுக்களும் அவற்றில் தீர்க்கப்பட்டவைகளின் எண்ணிக்கையும் வருமாறு :—

ஆண்டுத் துவக்கத்தில் நிலுவையிலிருந்த நீதிப் பேராணை மனுக்கள்.	389
அறிக்கையாண்டில் வரப்பெற்றவை	248
அறிக்கையாண்டில் தீர்ப்பானவை	201
ஆண்டு முடிவில் நிலுவையிலுள்ளவை	436

ஈர்ப்புப் பேருந்துகள் :

விதிக்கப்பட்டுள்ள வரி வீதத்தில் முக்கால் பங்கு மட்டுமே செலுத்தும் வரிச் சலுகையுடன் 15-க்குக் குறைந்த மொத்த இருக்கைகள் கொண்ட ஈர்ப்புப் . பேருந்துகள் ஓட்டப்படுகின்றன. தமிழ் நாட்டில் 31—3—1983 தேதியன்று உள்ள மொத்த ஈர்ப்புப்பேருந்துகள் 29.

சிறு பேருந்துகள் :

இதுவரை போக்குவரத்து வசதிகள் பெறாத தூரத் தொலைவில் உள்ள ஊரகப் பகுதிகளுக்கு அவ்வசதியை மாற்று வழியில் செய்துத் தரும் திட்டமாக சிறு பேருந்துகளை ஓட்டுகின்றனர். தற்போது தமிழ்நாட்டில் 96 சிறு பேருந்துகள் ஓடுகின்றன. சிறு பேருந்துகளுக்கு வரிச் சலுகை காட்டி இருக்கை ஒன்றுக்கு காலாண்டுக்கு ரூபாய் 50 (வரி 40-ம் உபரி வரி 10-ம்) ஆக வரி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பேருந்துகள்—உரிமையாளர்கள்—வழித்தடங்கள் :

தனியார் துறையின் உரிமையாளர்களை, அவர்கள் வைத்துள்ள பேருந்து (உபரிகளுடன் சேர்த்து) எண்ணிக்கையின் அடிப்படையில் பகுக்கப்பட்ட 31—3—1983 நாளன்றைய பட்டியல் பின் வருமாறு :—

உரிமையாளரின் வகை.	31-3-1983 அன்று தனியார் துறையாளரின் எண்ணிக்கை.
ஒரு பேருந்துகள்	1,792
2 பேருந்துகள்	667
3 பேருந்துகள்	343
4 பேருந்துகள்	131
5 பேருந்துகள்	48
6 பேருந்துகள்	19
7 பேருந்துகள்	2
8 பேருந்துகள்	
9 பேருந்துகள்	
14 பேருந்துகள்	

31—3—1983 அன்று பல்வேறுபட்ட போக்குவரத்துக் கழகங்களிடம் இருக்கும் பேருந்துகளின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது :—

வரிசை எண்ணும், போக்குவரத்துக்கழகத்தின் பெயர்.	கொண்டுள்ள பேருந்துகள்.
1 அண்ணா போக்குவரத்துக் கழகம், சேலம் ..	642
2 சேரன் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர்	1,077
3 சோழன் போக்குவரத்துக் கழகம், கும்பக் கோணம்.	767
4 கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், நாகர்கோயில்.	763
5 பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை	1,117
6 பல்லவன் போக்குவரத்துக் கழகம் (புறநகர்) சென்னை.	550
7 பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்) சென்னை.	2,076
8 திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், சென்னை.	540
9 தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம்,	527

31—3—1983 அன்று உள்ள மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை 13,123.

தமிழ்நாட்டிலுள்ள மொத்தப் பேருந்து வழித்தடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

பணிகள்.	31-3-1983 தேதிய வழித்தடங்கள்.
பெருநகர்ப் பணி 3 ..	381
நகர் மற்றும் சிறுநகரப் பணி	2,714
சாதாரண வெளியூர்ப்பணி	4,910
வெளியூர் விரைவுப் பணி	163
மொத்தம்	8,168

சுற்றுலாப் பயணிகளை ஊக்கமூட்டும் வகையில் இந்தியா முழுவதும் ஓடும்படியான ஒப்பந்த வண்டிகளுக்குத் தேசிய அனுமதிகள் கீழ்க்கண்டபடி அளிக்கப்பட்டுள்ளன :—

வகையறா.	ஒதுக்கீடு.	வழங்கப்பட்ட அனுமதிகள்.
1 அனைத்திந்திய சுற்றுலாச் சிருந்துகள்.	200	200
2 சுற்றுலா ஆம்னி ஊர்திகள் (35 பயணிகளுக்கு மேற்படாமல்).	50+1	50+1*

(* உச்ச நீதிமன்ற ஆணைப்படி ஒடுகிறது).

மாநிலத்தில் ஓடும் ஒப்பந்த ஊர்திகளின் விவரம் பின்வருமாறு:

வகையறா.	31-3-1982-ல்	31-3-1983ல்
ஆட்டோ ரிக்ஷாக்கள்	11,471	12,154
சாதாரண வாடகைச் சிருந்துகள்	4,068	3,768
மாநிலச் சுற்றுலா வாடகைச் சிருந்துகள்	4,765	6,226
ஆம்னிப் பேருந்துகள் . .	50	51
சொகுசுப் பேருந்துகள்	25	28
அகில இந்திய சுற்றுலாச் சீருந்துகள் . .	184	194
சுற்றுலா ஆம்னிப் பேருந்துகள் (35 பயணிகளுக்கு மிகாமல்).	50+1	50+1*

* உச்ச நீதி மன்ற ஆணைப்படி ஒடுகிறது.

ஊர்திகளின் வளர்ச்சி :

ஊர்திகளின் வளர்ச்சி தமிழ்நாட்டில் சீராக உயர்ந்துள்ளது. 1982, 1983 ஆகிய இரண்டாண்டுகட்கு ஒப்பிட்டு நோக்கிய ஊர்தி விவரங்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறாகும் :

வகையறா.	31-3-82 அன்று.	31-3-83 அன்று.
1 பேருந்துகள்	12,594	13,123
2 ஒப்பந்த ஊர்திகள்	20,614	22,473
3 தனியார் போக்குவரத்து ஊர்திகள்	611	636
4. சரக்கு ஊர்திகள் :—		
(அ) வாடகைச் சரக்கு ஊர்திகள்	31,811	35,824
(ஆ) தனியார் சரக்கு ஊர்திகள் ..	3,462	3,440
(இ) அனுமதி வேண்டா சரக்கு ஊர்திகள்.	4,605	4,539
(ஈ) சரக்கு ஊர்தியின் இணைப்பூர்திகள்	63	65
(உ) அனுமதி பெற்ற இழுப்பான்கள்	9,065	9,451
(ஊ) அனுமதி பெற்ற இழுப்பானின் இணைப்பு ஊர்திகள்.	9,362	9,732
(எ) தொடர் ஊர்திகள்..	716	754
5. அனுமதி வேண்டா பிற ஊர்திகள்..	2,97,162	3,26,977

செயலாக்கம் :

இத்துறையின் செயற்பணியாளர்கள் அறிக்கையாண்டில் ஆய்வு செய்து கண்டுபிடித்த சாலைக் குற்றங்களின் புள்ளி விவரங்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறாகும் :—

மிகையாகப் புகைவிடும் போக்குவரத்து ஊர்திகளைப்பற்றிய ஆய்வு :—

காலம்.	சாலைச் சோதனையில் சிக்கிய ஊர்திகள்.	மிகுபுகை காரணமாக தகுதிச் சான்று நீக்கப் பெற்றவை.
1—4—1982 முதல் 31—3—1983 முடிய.	2,14,241	2,265

கொடுக்கப்பட்ட ஆய்வறிக்கைகளும் பெறப்பட்ட வருமானமும் :

காலம்.	ஆய்வில் காணப் பட்ட தவறு களின் எண்ணிக்கை.	வசூல் ஆன இணக்கக் கட்டணம்.
1-4-1982 முதல் 31-3-1983 முடிய	30,695	21,81,079

தவறிழைத்தோர்க்கு துறை நடவடிக்கை மூலம் வழங்கப்பட்ட தண்டனை.

(அ) அனுமதி உரிமையாளர்க்கு எதிராக தற்காலிக நீக்கம்.	19,362
ரத்து செய்தல்	114
(ஆ) ஓட்டுநர்க்கு எதிராக..	207
(இ) நடத்துநர்க்கு எதிராக ...	85

அரசுத்துறைகளுக்கு இயக்கு ஊர்திகள் வாங்குதல்—கட்டுப்பாடு ஆணை

காவல்துறை, வருவாய் நிர்வாகத்துறை மற்றும் வனத்துறை ஆகியவை தவிர்த்த பிற அரசுத் துறைகளுக்குத் தேவையான இயக்கு ஊர்திகளை வாங்கி வழங்கும் முகவராகப் போக்குவரத்து ஆணையாளர் தொடர்ந்து இருக்கிறார். 1982-83 ஆம் ஆண்டில் ஏறத்தாழ ரூபாய் 2,75,04,066 மதிப்புக்கு 392 ஊர்திகள் வாங்கி வழங்கப்பட்டன. இதற்கு முந்தைய ஆண்டில் 513 ஊர்திகளை ரூபாய் 2,90,30,496 மதிப்புக்கு வாங்கப்பட்டன.

11—6—1981-ல் நடைமுறைக்கு வந்த வணிக ஊர்திகள் (மறு விற்பனைக் கட்டுப்பாடு) ஆணை 1981, 9—12—1982 முதல் திரும்பப் பெறப்பட்டது. 20—1—1982 முதல் நடைமுறைக்குக் கொணரப்பட்ட ஈருருளிக் கட்டுப்பாடு (மறு விற்பனை கட்டுப்பாடு) ஆணை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. கட்டுப்பாட்டு அதிகாரியான போக்குவரத்து ஆணையாளரால் அறிக்கை

யாண்டில் பெறப்பட்ட மாற்றல் விண்ணப்பங்களும் அவற்றில் பைசலான விவரங்களும் பின்வருமாறு :—

வரிசை எண்ணும் விவரமும்.	வணிக ஊர்திகள். 1-4-82 முதல் 9-12-82 வரை.	ஈருருளிகள்.
1 பெறப்பட்ட விண்ணப்பங்கள்	98	72
2 அனுமதி மறுக்கப்பட்டவை	33	17
3 அனுமதி அளிக்கப்பட்டவை	65	55
4 மேல்முறையீட்டுக்குச் சென்றவை	22	2

ஓட்டுநர்—நடத்துநர்—உரிமங்கள் :

புதிய ஓட்டுநர் உரிமங்கள் வேண்டும் விண்ணப்பதாரர்களை கடுமையான ஆய்வு செய்து ஓட்டும் திறமையைக் கணிக்கின்றனர். நடப்பு ஆண்டிலும், கடந்த ஆண்டிலும் புதிதாக வழங்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட ஓட்டுநர் உரிமங்களின் விவரம் பின் வருமாறு :—

	1981-82.	1982-83.
வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமங்கள்	94,196	1,14,874
புதுப்பிக்கப்பட்ட ஓட்டுநர் உரிமங்கள்	1,58,564	1,43,160

தேவைக்கேற்றபடி நடத்துநர் சான்றுகள் வழங்கப்படுகின்றன. 1982-83ல் புதிய நடத்துநர் சான்றுகள் 11,896-ம் புதுப்பித்த சான்றுகள் 28,245-ம் வழங்கப்பட்டன.

வருவாயும் செலவும் :

போக்குவரத்துத்துறையின் வருவாய், இயக்கு ஊர்திகளின் மீது விதிக்கப்படும் வரியினாலும் கட்டணங்களினாலும் பெறப்படுகிறது. பெரும்பகுதி வரிவிதிப்பின் மூலமே கிட்டுகிறது.

பல்வேறுபட்ட தலைப்பின் கீழ் பெறப்படும் வருவாய் குறித்த வவரங்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறாகும்.

வரிசை எண்ணும், இனமும்.	1982-83-ன் கணக்கு.	1983-84-ன் திட்ட மதிப்பீடு.
1 இயக்கு ஊர்திச் சட்டத்தின் கீழ் கட்டணம்	5,14,37,854.36	4,99,64,000.00
2 இயக்கு ஊர்திகள் மூலம் வசூலான வரி.	72,74,08,567.12	77,67,61,000.00
3 ஏனைய வருவாய் ..	4,86,486.75	3,27,000.00
மொத்தம்.	77,93,32,908.23	82,70,52,000.00

போக்குவரத்துத் துறையின் 1982-83-ஆம் ஆண்டுக்குரிய நிர்வாகச் செலவு ரூபாய் 1,80,11,446.00.

மோட்டார் வாகன பராமரிப்பு நிறுவனம்.

நில வருவாய் வாரியத்தின் 15—8—1955 முதல் ஓர் அங்கமா இயங்கி வந்த மோட்டார் வாகனப் பராமரிப்பு துறை 1—4—1964 முதல் தமிழ்நாடு போக்குவரத்து துறை இயக்குநரின் தலைமையில் வாணிப முறையில் இயங்க ஆரம்பித்து பின்பு 10—6—1977 முதல் கொண்டு இது ஒரு தனி அரசு துறையாக்கப்பட்டு தனிப்பட்ட ஒரு இயக்குநர் மூலம் இயங்கி வருகிறது. அதன் பிறகு 1—4—1981 முதல் இந்த நிறுவனமானது பணித்துறையாக (வாணிப ரீதியிலிருந்து விடுபட்டு) மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. இந்த மோட்டார் வாகனம் பராமரிப்பு அரசு துறையானது. தமிழ்நாடு அரசில் உள்ள 700 மோட்டார் வண்டிகளின் பராமரிப்பு பணியில் ஈடுபட்டு அமைச்சர்கள் ஊர்திகளையும், சென்னை கோட்டையில் உள்ள உயர்தர அதிகாரிகள், விருந்தினர் மாளிகையில் உள்ள ஊர்திகளையும் இதர தமிழ்நாடு அரசு துறையின் கீழ் உள்ள வண்டிகளின் பராமரிப்புக்கான பொறுப்பு ஏற்றுள்ளது

மேலும் மோட்டாரின் உதிரி பாகங்கள் சேகரித்தல், பெட்ரோல், டீசல் எண்ணெய்கள் கிடைக்க செய்தல், மின்கலப் பெட்டி, டயர்கள் முதலிய அத்தியாவசியமான பொருட்களை, பெரிய நிறுவனங்கள் மூலம் தொடர்பு கொண்டு, அரசு சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு சேகரித்து கொடுத்து செவ்வனே பணி யாற்றுகிறது.

1982—83-க்கான ஆண்டில் அரசு துறையில் உள்ள மோட்டார் வண்டிகளின் பராமரிப்பு செய்து மேற்கொண்ட இத்துறையின் தனிப்பட்ட செயல்பாட்டை கொண்டு கணக்கிடப்பட்ட புள்ளி விவரங்கள் கீழ் கண்டவாறு பதிக்கப்பட்டுள்ளது.

பெரிய பழுதுகள்	352
இரண்டாம் படிவ பழுதுகள்	5,009
சாதாரண பழுதுகள்	10,101
சுத்திகரிப்பு செய்தல்	1,981
இதர பழுதுகள்	34
மொத்தம்	17,477

மேலும் 1982—83ஆம் ஆண்டில் இந்த துறையின் கீழ் 400 மோட்டார் வண்டிகள் ''இனி பயனற்றது'' என்று கருதப் பட்டவை பகிரங்க ஏல விளம்பரம் மூலம் விற்கப்பட்டு அதன் மூலம் அரசுக்கு ரூ. 40,95,461.55 ஈட்டித் தந்துள்ளது.

அரசு தொழிற்பயிற்சி சட்டம் 1961 கீழ் இத்துறையின் கீழ் 22 தொழிற்பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களில் 6 நபருக்கு இந்த துறையிலேயே பணி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1982—83ஆம் ஆண்டில் இத் துறையைச் சார்ந்த அலுவலர்கள், பணி அமைச்சர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகிய 24 பேர்களுக்கு வெவ்வேறான நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டனர்.

தேசிய நெடுஞ்சாலை.

தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு 1971ஆம் ஆண்டு செப்டம்பரில் ஏற்படுத்தப்பட்டு தனித் தலைமைப் பொறியாளர் ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. தேசிய நெடுஞ் சாலைப் பிரிவு, தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களையும், மத்திய சாலை நிதித் திட்டங்களையும் கவனித்து வருகிறது. தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் மத்திய அரசுத்துறைத் திட்டங்களாகும். இவற்றிற்கு மத்திய அரசு முழு நிதி உதவி அளிக்கிறது.

மத்திய சாலை நிதித் திட்டம் :

''மத்திய சாலை நிதி'' காலம் கடந்து போகாத நிதியாகும். மோட்டார் எண்ணெய்க்கு விதிக்கப்படும் சுங்க ஆயத்தீர்வை யில் லிட்டர் 1க்கு 3.5 காசு வீதம் இந்த நிதிக்கு வருவாய் கிடைக்கிறது. இம்மாதிரி கிடைக்கும் மொத்த வசூலில் 80 சத விகிதம் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணி களுக்காகும் செலவுகளை சரிக்கட்டுவதற்மாக மாநில அரசுக்கு ஒதுக்கப்படுகிறது. 20 சதவிகிதத்தை 'சேமத் தொகையாக'' மத்திய அரசு வைத்துவருகிறது. இத்திட்டத்தின் தற் போதைய நோக்கத்தின்படி, சாலைகள்/பாலங்கள் அமைக்கும் பணிகளுக்குக் குறைந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆராய்ச்சித் திட்டங்கள் போக்குவரத்து ஆய்வுகள், பொருளா தார ஆய்வுகள், இளம் பொறியாளர்கள் பயிற்சித் திட்டம் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கும், வாகனங்களில் வருவோர் தங்குவதற்கான விடுதிகள் போன்ற வழியோர வசதிகள் செய்து கொடுப்பதற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

நான்காவது திட்டம் (1969--74)

நான்காவது திட்டக் காலத்தில் 16 பணிகள் ரூபாய் 470.79 இலட்சத்திற்கு மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் 14 பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுவிட்டன. பின் வரும் இரண்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. நான்கா வது திட்ட காலத்தில் மத்திய சாலை நிதிப் பணிகளுக்கு ரூபாய் 224.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஐந்தாவது திட்டக்காலத்தில் 13 பணிகளுக்கு ரூபாய் 314.51 இலட்சம் மதிப்பீட்டிற்கு மத்திய அரசு அனுமதி அளித்தது. ஐந்தாவது திட்ட காலத்தில் ரூபாய் 266.31 இலட்சம் செலவிடப்பட்டது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் :

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் 1957இல் நிறுவப்பட்டு கடந்த 25 ஆண்டுகளாக சாலைகள், பாலங்களின் ஆய்வு, கட்டுமானம், பராமரிப்பு ஆகியவைகளைப் பற்றிய செயல்முறை ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறது. இவ்வாராய்ச்சி நிலையம் 1982 நவம்பரில் 25 ஆண்டுகள் நிறைவு பெற்று விரைவில் வெள்ளி விழாக் கொண்டாட உள்ளது. நடைமுறையில் காணப் படும் பலவிதப் பிரச்சினைகளைத் தக்க முறையில் தீர்வுகாண இந்நிலையம் ஆலோசனைகள் அளித்து வருகின்றது. இந்த ஆராய்ச்சி நிலையம் தமிழக நெடுஞ்சாலைத் துறையின் பிரச்சினை களை மட்டுமல்லாது அண்டை மாநிலங்களின் தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றது. இத்துறையின் பணிகள் அதிகரித்து வருவதால் வட்டார ஆய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டு அந்தந்த வட்டாரங்களில் ஏற்படும் சிக்கல்களுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. இந்நிலையம் நெடுஞ்சாலைத்துறையிலுள்ள அதிகாரிகளுக்கு தொழில் நுட்ப முன்னேற்றத்திலும் தரக் கட்டுப்பாட்டிலும் பயிற்சி அளிக்கிறது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 1974 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தற்போது இக்கழகம் ஆறு வாடகைக் கப்பல்களை இயக்கி வருகிறது. தமிழ்நாடு மின் வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியை இந்த ஆறு வாடகைக் கப்பல்கள் தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு கொண்டு வருகின்றன. வாடகை கப்பல்களின் மூலம் நிலக்கரி கொண்டு வரும் செலவு குறைவாக இருக்கிறது.

கழகத்தில் செலுத்தப்பட்ட மூலதனப் பங்குத் தொகை ரூ. 6.30 இலட்சமாகும். கழகத்தின் அடிப்படைப் பங்குத் தொகையை அதிகரிக்கவும், கப்பல் வாங்கும் திட்டத்திற்கு நிதியளிக்கவும் ரூ. 5.00 இலட்சம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்கழகத்தின் சொந்த கலன்கள் மூலமும் வாடகைக் கலன்கள் மூலமும் எற்றிச் செல்லப்பட்ட சரக்கு, ஆதாயம் மற்றும் இழப்பு ஆகிய விவரங்கள் ஆண்டு வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கப்பல் ஏற்றிச் சென்ற சரக்குகள் (இலட்சம் டன்களில்).

ஆண்டு.	நிலக்கரி.	ஏனைய பொருட்கள்.	மொத்தம்.	ஆதாயம்/இழப்பு (ரூபாய் இலட்சத்தில்).	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1974—75	0.13		0.13		21.90
1975—76	1.23	0.26	1.49	5.29	—
1976—77	0.41	0.09	0.50	—	60.37
1977—78	0.77	0.07	0.84	—	44.08
1978—79	1.03	0.19	1.22	—	52.42
1979—80	1.41	0.12	1.53	—	38.10
1980—81	4.44	0.07	4.51	22.51	—
1981—82	6.39	—	6.39	31.88	—
1982—83	12.41	—	12.41	30.00	—

வரும் 1983–84ஆம் ஆண்டில் இக்கழகம் 25 இலட்சம் டன்னுக்கு மேல் நிலக்கரி ஏற்றிச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எழுதுபொருள்—அச்சுத்துறை.

1978 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட எழுதுபொருள்-அச்சகத்துறை இயக்ககம் 227 பணியாளர்களைக் கொண்டு

816, அண்ணா சாலை, சென்னையில் தொடர்ந்து இயங்கி வருகின்றது :—

இதன் இயக்ககம் பின்வரும் பிரிவுகளுக்கு நிருவாகப் பொறுப்பு வகிக்கின்றது.

1 அரசு எழுதுபொருள் கிடங்கு, இராஜாஜி சாலை, சென்னை-600 001.

2 அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை-79.

3 அரசுக்கிளை அச்சகம், உயர்நீதி மன்றக்கட்டிடம், சென்னை-600 104.

4 அரசுக்கிளை அச்சகம், ஆனைக்காரன் எஸ்டேட், சூளை, சென்னை-600 112.

5 அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.

6 அரசு வட்டார அச்சகம், சேலம்.

7 அரசு வட்டார அச்சகம், திருச்சி.

8 அரசு வட்டார அச்சகம், விருத்தாசலம்.

9 அரசு வட்டார அச்சகம், மதுரை.

10 அரசு வெளியீடு விற்பனை நிலையம், அண்ணா சாலை, சென்னை.

11 அரசு வெளியீடு விற்பனை நிலையம், உயர்நீதி மன்றக் கட்டிடம், சென்னை.

குறிக்கோள்களின் அடிப்படையிலான நிருவாக முறை :

குறிக்கோள்களின் அடிப்படையிலான நிருவாக முறை, 1974 ஆம் ஆண்டிலிருந்து இத்துறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இதுவரை 9 சுற்றுக்கள் முடிவடைந்துள்ளன. இத்துறையில் பணியாற்றும் 64 அலுவலர்கள் குறிக்கோள்களின் அடிப்படையிலான நிருவாக முறையில் செயல்பட்டு வருகின்றனர். இம்முறையைப் பின்பற்றியதால், மைய அச்சகத்தின் பல்வேறு துறைகளில் உற்பத்தி அதிகரித்ததன் மூலம் நல்ல பயன் தெரிகின்றது. அச்சுத்துறைக்கு வருகின்ற பணிகள் ஒவ்வொன்றும் நன்கு பரிசீலிக்கப்பட்டு, முன் கூட்டியே திட்டமிடப்பட்டு அச்சிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது. பெரும்பாலான பணிகள் திட்டமிடப்பட்ட கால வரையறைக்குள் முடித்து அனுப்பப்பட்டன. இம்முறையினைப்

பின்பற்றியதால், பயன்படுத்தும் பொருள், தொழிலாளர் ஊதியம், ஆகியவற்றில் சிக்கனம் ஏற்பட்டுள்ளதோடு, உற்பத்தியும் உற்பத்தி மணிநேரம் பயன்பாடும் அதிகரித்துள்ளன:—

பின்வரும் விவரப்படி 301 தொழில் பழகுவோர், அச்சகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர்.

1.	அரசு மைய அச்சகம், சென்னை	186
2.	அரசு கிளை அச்சகம், ஆனைக்காரன் எஸ்டேட், சூளை.	47
3.	அரசுக்கிளை அச்சகம், உயர்நீதிமன்றக் கட்டிடம், சென்னை.	4
4.	அரசுக்கிளை அச்சகம், புதுக்கோட்டை	17
5.	அரசு வட்டார அச்சகம், திருச்சி	12
6.	அரசு வட்டார அச்சகம், சேலம்	11
7.	அரசு வட்டார அச்சகம், விருத்தாசலம்	11
8.	அரசு வட்டார அச்சகம், மதுரை	13
		301

மேற்சொன்னவை தவிர, தகுதிப்பட்டயம் பெற்றவர்கள், பணியிடப் பயிற்சி மாணவர்களுக்கென தொழில் பழகுவோர் பதவிகள் 45 உள்ளன. இதற்காகும் செலவில் 50 சதவீதத்தை இந்திய அரசு ஏற்றுக் கொள்கிறது.

அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை :

சென்னையிலுள்ள அரசு மைய அச்சகம் 1831 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதுவே அத்துறையிலுள்ள பெரிய அச்சகப் பிரிவாகும். இதில் 3,565 பணியாளர்கள் பணி புரிகின்றனர். சூயஸுக்கு கிழக்கே உள்ள நாடுகளில் இதுவே மிகப் பெரிய அச்சகப் பிரிவு என்று கருதப்படுகிறது. இந்த அச்சகம் பணி மேலாளர் ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றது. இவருக்கு உதவியாக 3 துணைப்பணி மேலாளர்களும், 11 உதவிப்பணி மேலாளர்களும், 2 உதவி இயக்குநர்களும், 5 உதவிப் பொறியியலாளர்களும், 1 கணக்கு உதவி அலுவலரும், 1 மருத்துவ அதிகாரியும், 1 பாதுகாவல் அலுவலரும் பணியாற்றுகின்றனர்,

நாள்காட்டிகள், நாள் குறிப்பேடுகள், வரவு-செலவுத் திட்டம் ஆவணங்கள், முக்கியமான ரகசிய குறிப்புகள், பரிசுச் சீட்டுகள், போக்குவரத்து உரிமங்கள், சட்டமன்றப் பேரவை, சட்ட மன்ற மேலவை விவாதங்கள், மேல்நிலைக் கல்விப் படிவங்கள், உறைகள், விடைத்தாள்கள், உணவுப் பங்கீட்டு அட்டைகள், பல்லவன் போக்குவரத்துக்கழகம் மாணவர்களுக்கு வழங்கும் சலுகைப் பயணச்சீட்டுகள், குறித்த காலச் சலுகைப் பயணச்சீட்டுகள் முதலியவை உட்பட அரசு அச்சுப் பணிகளை இந்த அச்சகம் தொடர்ந்து செய்து வருகிறது.

இந்த ஆண்டில் கீழ்க்கண்ட இனத்தைச் சேர்ந்த பணிகளையும் செய்துள்ளது : அவையாவன :

	விவரங்கள்.	அச்சிடப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை.
1	அமைச்சர்களுக்கான நாள் குறிப்பேடு	180
2	மூன்று மாத நாள்காட்டி ..	400
3	சிறப்பு நாள் குறிப்பேடு	7,500
4	மாத நாள் காட்டி	76,000
5	சாதாரண நாள் குறிப்பேடுகள் ..	71,000
6	முதலமைச்சரின் சத்துணவுத் திட்ட குறிப்புகள்.	3,000 புத்தகங்கள்
7	முதலமைச்சரின் மதிய சத்துணவுத்திட்டம் தொடர்பான குழந்தைகளுக்கான உடல் நல அட்டைகள் ..	28,00,000
8	முதலமைச்சரின் மதிய உணவுத்திட்டம் தொடர்பான விரிவான உத்தரவுகள ..	5,000 புத்தகங்கள்
9	முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத் திற்கான வழிகாட்டி	50,000 புத்தகங்கள்
10	முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற் கான கையேடுகள்	40,000 புத்தகங்கள்
11	முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற் கான ஆய்வு அட்டைகள்	3,00,000
12	முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற் கான உணவு செய்முறை கையேடு ..	36,000 புத்தகங்கள்
13	அண்ணா கலை அரங்கம் நுழைவுச் சீட்டு கள்	3,50,000

	விவரங்கள்.	அச்சிடப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை.
14	கலைவாணர் அரங்கம் நுழைவுச் சீட்டுகள்	3,00,000
15	பூம்புகார் சுற்றுலா மைய நுழைவுச் சீட்டுகள்	11,00,000
16	மதிய உணவுத் திட்டம் கையேடு	35,000 புத்தகங்கள்
17	மாநில நிருவாக அறிக்கை (ஆங்கிலம்) ..	855 (440 பக்கங்கள்)
18	மாநில நிருவாக அறிக்கை (தமிழ்) ..	855 (550 பக்கங்கள்)
19	முதலமைச்சரின் இலவச பல்பொடி வழங்கும் திட்டம்-சிறு வெளியீடு	65,00,000
20	5 ஆம் உலகத்தமிழ் மாநாட்டுக் கணக்குகள்	600 (புத்தகங்கள்)
21	இ. ஆ. ப. அதிகாரிகளின் சிவில் பட்டியல்கள்.	500 (புத்தகங்கள்)
22	மோட்டார் வண்டிகள்-நிவாரணத் தொகை வழங்குவது குறித்த படிவங்கள் (7 இனங்கள்)	2,80,000
23	முதியோர் உதவித் தொகை வழங்குவதற்கான அடையாள அட்டைகள் ..	2,20.000
24	கள், சாராயக் கடைகளை ஏலம் விடுவதற்கான படிவங்கள்	11,40,000
25	அயல்நாட்டு மதுவகைகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் பயன்படுத்துவதற்கான அனுமதி புத்தகங்கள்	1,00,000 புத்தகங்கள்
26	கள், சாராயம் அனுமதிச் சீட்டு	9,25,000
27	ஆதிதிராவிடர்/பழங்குடியினர் குழந்தைகளுக்குப் பாட நூல்கள் வழங்கப்படிவங்கள்	2,44,500
28	ஆசிரியர் தினக் கொடி (4 வகைகள்) ..	23,77,500
29	எஸ். எஸ். எல். சி. எச், எஸ். இ. விண்ணப்பங்களும்—தகவல் குறிப்புகளும் ..	6,50,000
30	எச். எஸ். இ. தனிக்கூடுதல் விடைத்தாள் புத்தகங்கள்	10,00,000
31	எச். எஸ். இ. தனி உறைகள்	2,00,000
32	எஸ். எஸ். எல். சி. மடங்கு எண், எதிர் அடுக்கு மூல அட்டவணைகள்	3,50,000

	விவரங்கள்.	அச்சிடப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை.
33	புள்ளி விவர இயல்துறை தகவல் ஆய்வு வெற்று விவர அட்டவணை	8,52,000
34	தேர்தல் படிவங்கள் (20 இனங்கள்) ..	52,000
35	வாக்குச் சீட்டுகள்-பெரியகுளம் நாடாளு மன்றத் தொகுதி	7,88,000
36	வாக்குச் சீட்டுகள்-திருச்செந்தூர் சட்ட மன்றப் பேரவைத் தொகுதி	1,35,500
37	தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விவாதங் கள் 33 இனங்கள்	ஒவ்வொன்றிற் கும் 525 புத்த கங்கள்
38	தமிழ்நாடு சட்டமன்ற மேலவை தமிழ் நாடு சட்டமன்றப் பேரவைக் குழு அறிக்கை.	ஒவ்வொன் றும் 500 புத்தகங்கள்
39	தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விவா தங்கள்.	ஒவ்வொன் றும் 525 புத்தகங்கள்
40	மத்தியச் சட்டங்களை-தமிழ் மொழி பெயர்ப்பு 10 இனங்கள்.	3,000 புத்தகங்கள்
41	தீர்ப்புத்திரட்டு 8 வெளியீடுகள்	1,500 புத்தகங்கள்
42	அரசு வழக்கு நடத்துநர்களின் முகவரி யிட்ட கடிதத்தாள்கள்.	84,000
43	மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் வருங் கால வைப்பு நிதிப்படிவங்கள் ..	16,22,000
44	மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் அறிக்கை (4 இனங்கள்) ..	ஒவ்வொன்றுக் கும் 1,400 நகல்கள்
45	சிறுசேமிப்புப் படிவங்கள் ..	3,00,000
46	பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் குறித்த கால பயணச்சலுகைச் சீட்டு ..	24,00,450
47	பல்லவன் போக்குவரத்துக் கழக அனைத்து வழித்தடப் பயண அடையாளச் சீட்டுகள்	1,34,60,000
48	பரிசுச் சீட்டுகள் (86 வரிசைகள்) ..	86,00,000
49	உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்கு வதற்கான படிவங்கள்	24,78,000
50	கிராம அதிகாரிகள், உழவர்கள் குறித்த நடைமுறை நூல் (ஆங்கிலம்)	25,000 புத்தகங்கள்

விவரங்கள்.	அச்சிடப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை.
51 கிராம அதிகாரிகள், உழவர்கள் குறித்த நடைமுறை நூல் (தமிழ்)	25,000 புத்தகங்கள்
52 கிராமக் கணக்குகள் குறித்த நடைமுறை நூல்	25,700 புத்தகங்கள்
53 தொழில்-வணிகத்துறை இயக்ககச் சான்றிதழ் படிவங்கள்	6,50,000
54 மதிய உணவுத்திட்ட வழிகாட்டி நூல்.	50,000 புத்தகங்கள்
55 1981 ஆம் ஆண்டு புள்ளிவிவர இயல் கையேடு.	1,000 புத்தகங்கள்

அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை.

சென்னை, அண்ணா சாலையிலுள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் அனுமதிக்கப்பட்ட 58 பணியாளர்களைக்கொண்டு செயல் பட்டு வருகிறது. சட்டங்கள், விதிகள், சட்டத் தொகுப்புகள், நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிக்கைகள், பணிப்பதிவேடுகள் முதலியவற்றை இப்பிரிவு விற்பனை செய்கிறது. இது மத்திய அரசு வெளியீடுகளுக்கு ஓர் முகவராகவும் செயல்படுகிறது. மாநிலம் முழுவதும் அங்கீகாரம் பெற்ற முகவர்கள் மூலம் அரசு வெளியீடுகள் தரகு அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றன.

1982-83 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டவை குறித்த விவரங்கள் வருமாறு.

		ரூ.	காசு
1	1-4-82-லிருந்து 31—3—83 வரையில் அரசு அலுவலகங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட வெளியீடுகளின் மதிப்பு	1,17,408	14
2	வெளியீடுகளை விற்றவகையில் கிடைத்த மொத்தத் தொகை.		
	மத்திய அரசு வெளியீடுகள்	15,130	90
	மாநில அரசு வெளியீடுகள்	5,01,636	15
		5,16,767	05

3	சென்னை உயர்நீதிமன்றக் கட்டிடவளாகம், துணை விற்பனை நிலையம் வாயிலாக விற்பனை செய்யப்பட்ட வெளியீடுகளின் மொத்த மதிப்பு ..	60,470	80

இக்கால அளவில் புதிய முகவர் ஒருவர் நியமிக்கப்பட்டார்; மூன்று முகவர்கள் நீக்கப்பட்டனர். பொது மக்கள் நலனைக் கருதி மாலை நேரங்களில் இந்த விற்பனை நிலையத்தில் அதிக நேரம் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும் பயன்படுத்த முடியாத தட்டச்சுப் பொறிகள், நகலெடுக்கும் பொறிகள் முதலியவற்றை விற்பனை செய்ய 1982 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் பொது ஏலம் விடப்பட்டது. தட்டச்சுப் பொறிகள், நகலெடுக்கும் பொறிகள், பல்வகைப் பொருள்களை விற்பனை செய்த வகையில் ரூ. 1,45,160 பெறப்பட்டது. 1983 பிப்ரவரியில் மீண்டும் ஏலம் விடப்பட்டது. அதன் மூலம் தட்டச்சுப பொறிகள் நகலெடுக்கும் பொறிகள் பல்வகைப் பொருள்கள் விற்பனை செய்த வகையில் ரூ. 1,33,791வசூலிக்கப்பட்டது.

முன்னதாக தொகை வழங்கல் :

1982–83 ஆம் ஆண்டில், எழுது பொருள்களைப் பெருமளவும் பயன்படுத்தி, தேவைக் குறிப்புகளை வைக்கும் அதிகாரிகளிடமிருந்து (தொகை முன்னதாகச் செலுத்துவதன் அடிப்படையில் தங்கள் தேவைகளைப் பெற உரிமையுள்ளவர்கள்) எழுது பொருள்களுக்காக ஆண்டு தேவைக் குறிப்புகள் ஒட்டு மொத்தமாக 135 வரப்பெற்றன. இக்காலஅளவில், எழுதுபொருள்கள் தட்டச்சுப் பொறிகள் நகலெடுக்கும் பொறிகள் கணக்கிட்டு பொறிகள் முதலியவற்றை வழங்கிய வகையில் அலுவலகங்களிடமிருந்து வசூலிக்கத்தக்க தொகையிலிருந்து தோராயமாக ரூ. 36,16,391·01 வசூலிக்கப்பட்டது.

போக்குவரத்துக் கழகங்கள்

மக்கள் பயணம் செய்வதற்காக நடப்பாண்டில் அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்கள் ஒன்பதை தமிழ்நாடு அரசு நடத்தி வந்தது. பல்லவன் போக்குவரத்துக் கழக (புறநகர்

பிரிவு 1–12–82 முதல் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என தனித்து இயக்கப்படுகிறது. ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் முழு நேர நிர்வாக இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. பல்லவன் போக்குவரத்து கழகம் முழு நேர தலைவரைப் பெற்றிருந்தது. போக்குவரத்துத் துறையின் அரசுச் செயலாளர் ஏனைய கழகங்களின் தலைவர் ஆவார்.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் : (பெருநகர் பிரிவு) :

இக்கழகம் 1–1–1972 அன்று தொடங்கப்பட்டது. அப்போது இக்கழகத்திடம் 1029 பேருந்துகள் இருந்தன. இக்கழகம் சென்னை பெருநகர் பகுதியில் பேருந்துகளை இயக்கி வந்தது. 31–3–83 ஆம் நாள் நிலவரப்படி 2103 பேருந்துகள் இயங்கின. இதனில் திருத்தி அமைக்கப் பெற்ற 43 சிறு பேருந்துகளும் அடங்கும். 31–3–83 அன்றுள்ளபடி கழகத்தில் 18,405 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். நாளொன்றுக்கு சராசரி 25.73 இலட்சம் பேர் இப்பேருந்துகளில் பயணம் செய்துள்ளனர். உலக வங்கியின் அபிவிருத்தித் திட்டம் 11-ன் கீழ் 555 பேருந்துகள் இவ்வாண்டு வாங்கப்பட்டுள்ளன.

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் :

30–11–82 முடிய பல்லவன் போக்குவரத்துக் கழகம் புறநகர் பிரிவை இயக்கி வந்தது. 1–12–82 முதல் வேலூரை தலைமையகமாகக் கொண்டு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் வட ஆற்காடு, வடக்கு செங்கல்பட்டு மாவட்டங்களில் தனது பேருந்துகளை இயக்கி வருகிறது. 31–3–83 ஆம் நாள் நிலவரப்படி 539 பேருந்துகள் இயங்கின. மேற் குறிப்பட்ட நாளில் 3,634 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். நாளொன்றுக்கு சராசரி 2.59 இலட்சம் பேர் இப்பேருந்துகளில் பயணம் செய்துள்ளனர்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் :

இம்மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டத் தலைமையிடங்களையும் இணைக்கும் வகையில் 15–1–80 வரை நெடுந்தொலைவு விரைவுப் பேருந்துகள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் (விரைவு பேருந்து) பெயரில் இயக்கப்பட்டன. இச்

கழகம் 16—1—1980 ஆம் நாளிலிருந்து திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகம் என்ற பெயரில் அமைக்கப்பட்டது. இக்கழகத் தின் பேருந்துகள் மாநிலம் முழுவதும் இயங்கி வந்தன். 31—3—1983 ஆம் நாள் நிலவரப்படி 518 பேருந்துகள் இயங்கின. மேற் சொன்ன நாளில் இக்கழகத்தில் 5,195 தொழிலாளர்கள் பணி புரிந்தனர். நாளொன்றுக்கு சராசரி 0.47 இலட்சம் பயணிகள் விரைவுப் பேருந்துகளைப் பயன்படுத்தி வந்தனர். இக்கழகம் சென்னையிலிருந்து ஈரோட்டிற்கு குளிர் சாதனம் பொருத்தப் பட்ட இரு தூங்கும் வசதி கொண்ட பேருந்துகளையும் குளிர் சாதனமும், தொலைக் காட்சி வசதியும் கொண்ட 10 பேருந்து களை திருவனந்தபுரம், பெங்களூர், கன்னியாகுமரி, பாண்டிச்சேரி ஆகிய இடங்களுக்கும் ஓட விட்டுள்ளது.

பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் :

இக்கழகம்; 17—1—1972 முதற்கொண்டு செயல்படத் தொடங் கியது. 31—3—1983 ஆம் நாள் நிலவரப்படி இக்கழகத்தில் 1,283 பேருந்துகள் இயங்கின. இக்கழகத்தின் பேருந்துகள் மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில்இயங்கின இக்கழகத்தில் சுமார் 9,559 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். நாளொன்றுக்கு சராசரி 12.20 இலட்சம் பேர் இப்பேருந்துகளில் பயணம் செய்தனர். இக்கழகம் 5 சிறு பேருந்துகளையும் 38 சிறுசக் கர பேருந்துகளையும் 3 சந்தைப் பேருந்துகளையும் இயக்கி வந்துள்ளது.

சேரன் போக்குவரத்துக் கழகம் :

சேரன் போக்குவரத்துக் கழகம் 1—3—1972 அன்று தொடங்கப்பட்டது. 31—3—1983 அன்றுள்ளபடி இக்கழகத்தில் 1,128 பேருந்துகள் இயங்கின. இக்கழகம் கோயம்புத்தூர் பெரியார், நீலகிரி மாவட்டங்களில் பேருந்துகளை இயக்கி வந்தது. மேற் சொன்ன நாளில் இக்கழகத்தில் 8096 தொழிலாளர் கள் பணிபுரிந்தனர். இப்பேருந்துகளில் தினசரி சராசரி 9.93 இலட்சம் பேர் பயணம் செய்தனர்.

சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம் :

இக்கழகம் 1—3—1972 அன்று செயல்படத் தொடங்கியது. 31—3—83 அன்றுள்ளபடி இக்கழகத்திடம் 802 பேருந்துகள்

இருந்தன. 5,805 தொழிலாளர்கள் இக்கழகத்தில் பணியாற்றினர். இக்கழகப் பேருந்துகளில் நாளொன்றுக்கு 6.52 இலட்சம் பேர் பயணம் செய்தனர். இக்கழகம் நடப்பு ஆண்டில் சிக்கன முறையிம் டீசல் எண்ணை பயன்படுத்தியதற்காக சிறப்பு பரிசு ஒன்று பெற்றுள்ளது.

அண்ணா போக்குவரத்துக் கழகம் :

அண்ணா போக்குவரத்துக் கழகம் 15–2–1973 அன்று தொடங்கப்பட்டது. 31–3–1983 ஆம் நாள் நிலவரப்படி இக் கழகத்திடம் 653 பேருந்துகள் இருந்தன. 31–3–83 ஆம் நாளில் இக் கழகத்தில் 4,461 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். இக்கழகப் பேருந்துகளில் நாளொன்றுக்கு 5.02 இலட்சம் பேர் பயணம் செய்தனர்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் :

இக்கழகம் 1–1–1974 அன்று செயல்படத் தொடங்கியது இக்கழகம் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பேருந்துகளை இயக்கி வந்தது. தொடக்கக் காலத்தில் 458 பேருந்துகள் இருந்தன. பின்னர் 31–3–1983 நாள் நிலவரப்படி 770 பேருந்துகள் இருந்தன. 31–3–1983 அன்று நிலவரப்படி 5,375 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். இக்கழகப் பேருந்துகளில் நாள்தோறும் சராசரி 6.72 இலட்சம் பேர் பயணம் செய்தனர்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் :

இக்கழகம் 16–1–1975 அன்று தொடங்கப்பட்டது. இக் கழகத்தின் பேருந்துகள் தென் ஆற்காடு வட ஆற்காடு மாவட்டங் களில் இயங்கின. இக்கழகத்தின் தலைமையிடம் விழுப்புரம். 31–3-1983 ஆம் நாள் நிலவரப்படி இக்கழகத்திடம் 499 பேருந்துகள் இருந்தன. 31க3க83 ஆம் நாளில் இக்கழகத்தில் 3,433 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். இக்கழகப் பேருந்துகளில் நாளொன்றுக்கு சுமார் 3.27 இலட்சம் பேர் பயணம் செய்தனர். இக்கழகத்தின் பேருந்துகளை இயக்கும் பகுதியை தென்னாற்காடு தெற்கு செங்கல்பட்டு மாவட்டம் என திருத்தி அமைக்கப்பட உள்ளது.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
Acc No. ......
Date ......
MADRAS-8.